
# ஈழத்து இந்துக் கோயில்கள்

## ஆய்வரங்கச் சிறப்பு மலர் - 2019



**இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும்
இந்து சமய அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து இந்துக் கோயில்கள்

## ஆய்வரங்கச் சிறப்பு மலர் - 2019




தொகுப்பாசிரியர்கள்:

**சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்**

**திருமதி தேவகுமாரி ஹரன்**



இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும்

இந்து சமய அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | ஈழத்து இந்துக் கோயில்கள் - ஆய்வரங்கச் சிறப்பு மலர் 2019 |
| தொகுப்பாசிரியர்கள் | : | சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்<br>திருமதி தேவகுமாரி ஹரன் |
| பதிப்பு | : | 2019 |
| பக்கம் | : | |
| விலை | : | |
| வெளியீடு | : | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்<br>248, 1/1, காலி வீதி, கொழும்பு 04, இலங்கை. |
| வெளியீடு | : | குமரன் அச்சகம்<br>இல. 39, 36வது ஒழுங்கை, கொழும்பு - 06.<br>தொலைபேசி: 011 2364550 |
| Title | : | Elaththu Hindu Kovilgal |
| Compiled by | : | A. Anushanthan<br>Ms. Devakumar Haran |
| First Edition | : | 2019 |
| Published by | : | Dept. of Hindu Religious & Cultural Affairs<br>248, 1/1, Galle Road, Colombo 4, Sri Lanka. |
| Printed by | : | Kumaran Press (Pvt) Ltd.<br>39, 36th Lane, Colombo 06.<br>E-mail: kumbhlk@gmail.com |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள்,
சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு

## மாண்புமிகு அமைச்சர் மனோ கணேசன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

அனைத்து மதத்தினருக்கும் அவரவருக்கான வழிபாட்டுத் தலங்கள் என்பது மிகவும் புனிதமான இடமாகவும் முக்கியமானதொரு ஆன்மிக நிலையமாகவுங் கொள்ளப்படுவது பொதுவானதே. இந்து சமயத்தைப் பொறுத்தவரையில், கோயில்கள் வரலாற்றுக் காலந்தொட்டே வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலாசார மற்றும் ஆன்மிக நிலையங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

கடந்த கால அரசியற் போக்காக இருந்தாலுஞ் சரி, சமகால அரசியல் நிலவரமாயினுஞ் சரி இந்து சமய ஆலயங்களின் இருப்பியல் என்பது பெருங் கேள்விக்குள்ளாகி உள்ளது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இந்த நிலைதான் அழிந்தனவும் அழியாதனவுமாய் விளங்குங் கோயில்கள் பற்றித் தொல்பொருட்கள் மற்றும் இலக்கிய மரபுகளின் அடிப்படையிற் செம்மையானதொரு ஆய்வு நடாத்தவேண்டியதன் அவசியத்தைக் காலத்தின் கட்டாய கடமை ஆக்கியுள்ளது.

இம் முயற்சியைக் கருப்பொருளாக்கி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் இவ் வருடத்திற்கான ஆய்வு மாநாட்டினை,"ஈழத்து இந்துக் கோயில்கள் – தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்" எனும் விடயப் பரப்பில் முன்னெடுப்பது பாராட்டுக்குரியது. இம்மாநாட்டில் கட்டுரை சமர்ப்பிப்போர் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டி, நிகழ்வு சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**மனோ கணேசன்**

அமைச்சர்,

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும்

இந்து சமய விவகார அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள்,
சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு

## வாழ்த்துச் செய்தி

இலங்கையின் பூர்வீகக் காலந்தொட்டே இந்துசமயம் ஆதிக் குடிகளாற் பின்பற்றப்பட்டு இன்றுவரை நின்று நிலவுகிறது. இந்துக்களின் நம்பிக்கையில் அம்மதம் நின்றுநிலைப்பதற்கு நிலைக்களனாய் அமைபவை ஆலயங்கள். இறைவன் உறையும் கோயில்களை மையமாகக் கொண்டே பக்தி விதைக்கப்பட்டது என்பதற்குக் கடல் கடந்தும் நாயன்மார்களால் நம் நாட்டு ஆலயங்கள் பாடப்பட்டமை தக்கசான்றாய் அமைகிறது.

தொல்பொருட் சின்னங்கள், சாசனங்கள், தமிழ், சிங்கள, சமஸ்கிருத, பாளி இலக்கியமரபுகள், வெளிநாட்டவர் எழுதிவைத் தகுறிப்புகள் என்பவற்றினை ஆய்வு மூலாதாரங்களாக்கி, ஈழத்து இந்துக் கோயில்களின் தொன்மம் பற்றிநாம் இன்றைய சமூகத்திற்கு ஆதாரப்படுத்தி அதன் உண்மைத் தன்மைகளை வெளிக்காட்டத் தவறுவோமாயின், எதிர்காலச் சந்ததிக்குநாம் இழைத்த வரலாற்றுத் தவறாகவே அது அமையும். இலக்கியச் சிறப்பு, பழமைமிகு வரலாறு கொண்ட இந்து ஆலயங்கள் பல இன்று தடம் மாற்றப்பட்டு, உரிமம் இல்லாத உறவுகள் உரிமை கொண்டாடும் அவலத்தையும் நாம் சந்தித்து வருகிறோம்.

இந்த நிலையில் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் நடாத்துகின்ற ஆய்வு மாநாட்டின் வரிசையிலே, “இருபதாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட, ஈழத்து இந்துக் கோயில்கள் – தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்” எனுந் தொனிப்பொருளில் இவ்வாண்டுக்கான ஆய்வுமாநாட்டினை முன்னெடுப்பது காலத்தின் தேவை அறிந்து இந்துச் சமூகத்துக்கு ஆற்றுங் கைங்கரியம் என்றே கருதுகிறேன். இம் மாநாட்டு நிகழ்வுகள் இனிதே நிகழ வாழ்த்துகின்றேன்.

**திரு. இ.இரவீந்திரன்**
மேலதிகசெயலாளர்,
தேசியஒருமைப்பாடு,அரசகருமமொழிகள்,சமூகமேம்பாடுமற்றும்
இந்துசமயஅலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்**

## வெளியீட்டுரை

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆற்றிவரும் பணிகளுள் அறிவுத்துறை சார்ந்தவர்களால் விதந்துரைக்கப்படுவதாய் அமைவது, எமது திணைக்களத்தின் ஆய்வுப் பிரிவினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் ஆய்வரங்குகளும் வெளியிடப்படும் நூல்கள் மற்றும் மலர்களுமாகும்.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வருடாந்த ஆய்வரங்குகளை வெவ்வேறு கருப்பொருள்களை மையப்படுத்தி நடாத்திவருகின்றது. அவ்வகையில் இவ்வருட ஆய்வரங்கு'ஈழத்து இந்துக் கோயில்கள் - தொல்பொருள்களும் இலக்கிய மரபுகளும்' எனுந் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கையில், தொன்மைவாய்ந்தனவும் மக்களால் நம்பிக்கையோடு வழிபடப்பட்டு வருவனவுமானபல இந்துக் கோவில்கள் பிறமதத்தவர், சக இனத்தவர்களால் வலுக்கட்டாயமாக உரிமைகோரப்படுகின்ற இன்றைய சூழ்நிலையில் இந்த ஆய்வுப் பொருள் அர்த்தமுள்ளதாகவுந் தேவைப்பாடுடையதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

ஆய்வுப் பொருளின் அர்த்தம் உணர்ந்த ஆய்வாளர்கள் பலர் ஆர்வத்தோடு பங்குபற்றி இவ் ஆய்வரங்கைச் சிறப்பிக்கிறார்கள். இளம் ஆய்வாளர்களும் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றமை இந்தஆண்டுஆய்வரங்கின் முக்கியஅம்சமாகும்.

வழக்கம் போலவே ஆய்வரங்கையொட்டி ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்படுகின்றது. அம்மலரைச் சிறப்புற அமைத்துதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றியும், பாராட்டுக்களும்.

**அ. உமாமகேஸ்வரன்**
பணிப்பாளர்
இந்துசமய,கலாசாரஅலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. திருக்கோணேஸ்வரம்
**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –** 01

2. திருக்கேதீஸ்வரம்
**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –** 12

3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில்
**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –** 15

4. ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயில்
**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –** 18

5. வண்ணை வைத்தீசுவரன் கோயில்-யாழ்ப்பாணம்
**– வித்துவான் வசந்தா வைத்தியநாதன் –** 20

6. வல்வெட்டித்துறை சிவன் கோயில்
**– திருமதி இந்திராதேவி சதானந்தன் –** 25

7. தேசத்துக் கோயில் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்
**– வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் –** 28

8. கீரிமலைச் சிவன் கோயில் நகுலேஸ்வரம்
**– சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் –** 35

9. வானவன் மாதேவீஸ்வரம்
**– பேராசிரியர் சி. பத்மநாதன் –** 38

10. முன்னேஸ்வரம்
**– பேராசிரியர் வி. சிவசாமி –** 39




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முகத்துவாரம் ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம்
**– திருமதி இந்திரா சதானந்தன் –** 43

12. திருக்கரைசையம்பதி திருமங்கலாய் சிவன்கோவில்
**– பண்டிதர் இ. வடிவேல் –** 44

13. அனலைதீவு - புளியந்தீவு ஸ்ரீ நாகேஸ்வரன் கோயில்
**– நயினை ஆ. தியாகராசா –** 45

14. மட்டுவில் கல்வம் சிவ சந்திர மௌலீசர் ஆலயம்
**– திரு. ஆர். வி. கந்தசுவாமி –** 47

15. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்
கோயில்குளம். வவுனியா.
**– திரு. ஆறுமுகம் நவரத்தினராசா –** 48

16. நல்லூர் கைலாசநாதர் கோயில்
**– பேராசிரியர் வி. சிவசாமி –** 51

17. திருநந்தீஸ்வரம் - இரத்மலானை
**– திரு. த. மனோகரன் –** 56

18. ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

19. நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோவிலின் தோற்றம்
ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்
**– பேராசிரியர் செ. கிருஷ்ணராசா –** 59

20. நாகர் கோயில்
**– பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை –** 62



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மண்டூர் முருகன் கோயில்
**– கலாநிதி சி. சந்திரசேகரம் –** 67

22. திருக்கோயில் ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம்
**– செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர் –** 75

23. நல்லூர்க் கந்தசுவாமி கோயில்
**– பேராசிரியர் சி. பத்மநாதன் –** 89

24. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி
**– கலாபூசணம் வல்வை.ந. அனந்தராஜ் –** 94

25. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்
**– திரு. எஸ். சுதாகரன் –** 108

26. உகந்தை ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில் 112

27. கதிர்காமம்
**– பேராசிரியர் சி. பத்மநாதன் –** 114

28. சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில்
**– கலாநிதி வ. குணபாலசிங்கம் –** 119

29. திருகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி கோவில்
**– திரு. அ. ஆ. ஜெயரட்ணம் –** 125

30. வெருகலம்பதி சித்திர வேலாயுதர் கோயில்
**– திரு. ந. சுபராஜ் –** 129

31. இணுவில் கந்தசுவாமி கோயில் 132

32. திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம் 141
**– பண்டிதர் இ. வடிவேல் –**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில்
**– திரு. சு. துஷ்யந் –** 145

34. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம்
**– திரு. ஆ. சசிநாத் –** 149

35. மானிப்பாய், மருதடிப் பிள்ளையார் ஆலயம்
**– திருமதி இந்திரா சதானந்தன் –** 156

36. வாழைச்சேனை (மருங்கையடிப்பூவல்) கைலாய பிள்ளையார் கோயில்
**– வித்துவான் வி. சி. கந்தையா –** 158

37. கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம்
**– திரு. இராசையா மகேஸ்வரன் –** 161

38. இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் 165

39. மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்
**– திரு. நா. வாமன் –** 171

40. வந்தாறுமூலை மகா விஷ்ணு கோவில்
**– வித்துவான் வி. சி. கந்தையா –** 174

41. வல்லிபுர ஆழ்வார் கோயில்
**– திருமதி இந்திராதேவி சதானந்தன் –** 175

42. பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்
**– திரு. ந. சுபராஜ் –** 178

43. மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்
**– திரு. மாத்தளை வடிவேலன் –** 181



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்

– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –



இலங்கையின் கிழக்குக் கரையிலே திரிகூடகிரி எனவும் கோணபர்வதம் எனவும் வழங்கும் குன்றிலே கோணேஸ்வரம் அமைந்துள்ளது. வானளாவிய கோபுரங்களும் மணி மண்டபங்களும் அமையப்பெற்ற திருக்கோணேஸ்வரம் அளவிலே, கலைவனப்பிலே, செல்வவளத்திலே இலங்கையின் ஈடிணையற்ற சைவக் கோயிலாக விளங்கியது. ஈழத்துக் கோயில்களிலே தக்ஷிண கைலாசமாகிய திருக்கோணேஸ்வரத்தைப் பற்றி மட்டுமே ஒரு மரபு வழியான இலக்கியம் வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நூல்கள்

கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாசபுராணம், திருக்கோணாசல புராணம் முதலியன திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிய புராணக் கதைகளையும், மரபுவழிக் கதைகளையும் வரலாற்றமிசங்களையுந் தொகுத்துக் கூறுகின்றன. இவற்றுட் கோணேசர் கல்வெட்டு என்பதே மிக முக்கியமானதாகும். அதனைக் கவிராசர் என்ற புலவர் எழுதியுள்ளார். அந்நூலின் அமைப்பு காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்றது. அத்துடன் பிற்சேர்க்கைகளும் நூலுடன் பிற்காலத்திலே இணைத்துக் கொள்ளப்பட்டன. அதனாற் கோணேசர் கல்வெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை உருவிலே சிறிது சிறிதாக மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து வந்தது.

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம் கோணேசர் கோயில் பற்றிய மிகப்பழைய தலபுராணமாகும். புண்ணிய தலங்களுக்குப் பக்தர்கள் பெருமளவிலே யாத்திரை போகின்ற வழக்கம் ஏற்பட்ட காலத்திலே தலச்சிறப்பினை உணர்த்துவதற்கெனவே தலபுராணங்கள் எழுதப்பட்டன. பன்னிரண்டாம் நூற்றாண்டிலேயே தலயாத்திரைகள் தமிழகத்து இந்துக்களின் சமய வாழ்க்கையிற் பிரதான அம்சமாகின. கைலாச புராணம் பதினாலாம் நூற்றாண்டில் ஆரியச் சக்கரவர்த்தியான செகராசசேகரனாற் பாடப் பெற்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட திருக்கோணாசல புராணம் அதனிலும் விரிவான முறையிலே எழுதப்பெற்றது. அதனை யார் பாடினார் என்பது தெரியவில்லை.

## கோயிலின் பெயர்கள்

தக்ஷிண கைலாசம், மச்சகேஸ்வரம் என்பன கோணேஸ்வரத்தின் மறுபெயர்களாகும். அப்பெயர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்பத்தியினை விளக்கும் வகையிலான புராணக் கதைகளுள்ளன. 'ஆதிசேடனும் வாயுபகவானும் தம்முள் மாறுபட்டு இகலிய நாளில், இருவரும் தத்தம் வலிமையைக் காட்ட முயன்று மகாமேருவின் கொடுமுடிகளை ஆதிசேடன் தன் பணாமுடிகளால் மூடிக் கொள்ள, வாயு பகவான் தன்வலி மேம்பாடுறமேருவின் சிகரங்களில் மூன்றைப் பிடுங்கிக் கடலில் வீசிவிட, அவைகளில் ஒன்று இலங்கையில் வீழ்ந்து திருகோணமலையாக அமைந்தது' என்பது ஒரு புராணக்கதை. இமயத்திலுள்ள கைலாய மலையின் ஒரு கூறே கோணபர்வதம் என்ற நம்பிக்கையின் காரணமாக அது தக்ஷிணகைலாசம் என்ற பெயரைப் பெற்றது.

திருமால் மச்சாவதாரத்திலே தென் கயிலாயத்தை அடைந்து அங்கு மீன்வடிவிலிருந்து நீங்கித் தனது சுயரூபத்தில் மகேசுரனை வணங்கியதனாலே தக்ஷிண கைலாசமானது மச்சகேஸ்வரம் என்ற பெயரைப் பெற்றது. அக்கதை தக்ஷிண கைலாச புராணத்திலே மேல்வருமாறு கூறப்பெற்றுள்ளது.

*'ஆய தென்கயிலாயத்தின் றென்புற மணுகி*
*மாயமச்சமா முடலையக் கடல்வழி வைத்துத்*
*தூயதன்னுருக் கொண்டரன் சந்நிதி துன்னிச்*
*சேயகங்கணம் முன்வைத்து வணங்கினன் திருமால்.*
*மல்கு மச்சமாம் கேசவன் பெயரினை மலையும் புல்கு*
*மச்சகேசுரமெனத் திருப்பெயர் புகன்றார்.'*

கோணேஸ்வரம் என்பது இத்தலத்தின் பெயர்களுட் பிரசித்தி பெற்றதாகும்; பழங்காலத்திலிருந்து இன்றுவரை நிலைபெற்று வருவதோடு அதுவே பொது வழக்கிலுமுள்ள தலப்பெயராகும். கோணேஸ்வரம் என்ற கோயிற் பெயருக்கும் திருகோணமலை என்ற இடப் பெயருக்கும் இடையிலான தொடர்புகளை ஆராய்வதன் மூலம் திருகோணமலை பற்றிய சில வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளலாம். கோகர்ணம் என்பது திருகோணமலையின் புராதன பெயராகும். பிராகிருதமொழி வழக்கிலே கோகர்ணம் என்ற சொல் கோகண்ண என்ற உருவில் வரும்.

பாளிமொழி நூல்களிலே திருகோணமலை கோகண்ண என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. சிங்கள நூல்கள் சில திருகோணமலையினை கோணாகம எனக் குறிப்பிடுகின்றன. கோகண்ண என்பது மருவிக் கோண ஆகியதென்று சிந்திக்க இடமுண்டு. பதின்மூன்றாம் நூற்றாண்டிலே எழுதப்பெற்ற சோடகங்கனுடைய சமஸ்கிருத மொழிக் கல்வெட்டிலே திருகோணமலை கோகர்ண்ண என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.

கோகர்ணம் என்ற பெயரைக் கொண்ட மூன்று தலங்கள் பாரத நாட்டிலிருந்தன. அவையனைத்தும் சைவசமய வரலாற்றிலே மிகப் பிரசித்திபெற்ற தலங்களாகும். கலிங்க தேசத்தில் மகேந்திரமலைத் தொடரிலே கோகர்ணம் என்றொரு சிவஸ்தலமிருந்தது. அங்கு எழுந்தருளியிருந்த சிவனின் மூர்த்தத்தைக் கோகர்ண சுவாமி என்று அழைத்தார்கள். கலிங்கத்திலாண்ட கீழ்த்திசைக் கங்கர்கள் கோகர்ண சுவாமியைத் தங் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள். அவர்களுடைய சாசனங்களிலே அவர்களுக்கும் கோகர்ண சுவாமிக்கும் இடையிலான தொடர்பு சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

நேபாள தேசத்திற் கிராதர் எனப்படுவோர் வாழுகின்ற பகுதி என்ற பிரதேசத்திற் கோகர்ண என்னும் சிவஸ்தலம் ஒன்றுள்ளது. வங்காளத்துப் பாலவமிசத்தைச் சேர்ந்த தர்மபாலனுடைய படைகள் வட இந்தியாவிலே திக்குவிசயம் மேற்கொண்ட பொழுது அவை கேதார(ம்), கோகர்ண(ம்) என்ற புண்ணிய தலங்களையுந் தரிசித்துச் சென்றதாகச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அக்கோகர்ண(ம்) நேபாளத்திலுள்ள தலம் என்று கருதப்படுகின்றது. கோகர்ணம் என்ற பெயரையுடைய இன்னுமொரு சிவஸ்தலம் இந்தியாவின் மேற்குக் கரையிலே தனுவ நாட்டில் உள்ளது. அதனைப்பற்றி ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர். அங்குள்ள சிவனின் பெயர் மஹாபலிநாதர்; அம்மையின் பெயர் கோகர்ணநாயகி.

இலங்கையின் கிழக்குக்கரையிலுள்ள கோகர்ணத்துச் சிவனைக் கோணைநாதர், கோணேஸ்வரர் (கோகர்ணேஸ்வரர்), கோகர்ணநாதர் எனப்பலவாறு குறிப்பிடுவது வழக்கம். இந்தியாவில் கோகர்ணம் என்ற பெயரைக் கொண்ட மூன்று சிவஸ்தலங்கள் இருப்பினும் கலிங்கத்து மகேந்திரமலையிலுள்ள சிவனாரின் மூர்த்தமே கோகர்ண ஈஸ்வரர் என்ற பெயரைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. திருகோணமலையிலும் மகேந்திர மலையிலும் வீற்றிருக்கும் சிவனின் தோற்றம் ஒரே பெயரினைக் கொண்டிருந்தமை தற்செயலாக ஏற்பட்டவொன்றாகாது. இரு தலங்களும் அமைந்துள்ள பகுதிகளுக்கிடையிலே நெருங்கிய வாணிப–கலாசாரத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகள் ஏற்பட்டிருந்தன என்றும் அவற்றின் விளைவாக ஒரே பெயரைக் கொண்ட சிவபெருமானுடைய உருவத்தைக் கோயிலிலே தாபித்து வணங்கும் முறையினைச் சைவர்கள் ஏற்படுத்தினார்கள் என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள பகுதிகளோடு ஏற்பட்டிருந்த வாணிபத் தொடர்பின் காரணமாகத் திருகோணமலையில் இந்து சமுதாயமும் இந்துக்கோயில்களும் புராதன காலத்தில் வளர்ச்சி பெற்றன என்று கருதலாம். மகாசேனனுடைய ஆட்சியிலே (276–302) கோகர்ணத்திலும் கிழக்குக் கரையிலுள்ள வேறு சிலவிடங்களிலும் இந்துக் கோயில்கள் காணப்பட்டன. அவற்றையெல்லாம் அழித்து விட்டு அவற்றினிடங்களிலே பௌத்த விகாரங்களை மகாசேனன் அமைப்பித்தான். 'தேவாலயங்களை அழித்துக் கோகர்ணம், ஏரகாவில், கலந்த என்ற பிராமணனுடைய கிராமம் ஆகியவற்றிலே மூன்று விகாரங்களை' அரசன் கட்டுவித்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. மகாவம்சத்தின் உரைநூலான வம்சத்தப்பகாசினி, கிழக்கிலுள்ள கடற்கரையிலே, கோகண்ணகாமத்திற்கு அண்மையிலே, கோகண்ண விகாரம் கட்டப்பட்டதென்றும் குறிப்பிடுகின்றது. மேலும், இம்மூன்றிடங்களிலுந் தேவாலயங்கள் அமைந்திருந்தன வென்றும் அவை பௌத்த சாசனத்திற்குத் தடையாகவிருந்தன என்றும் அந்நூல் குறிப்பிடுவதுடன், சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து மகாசேனன் இலங்கையெங்கும் பௌத்தத்தினை நிலைபெறச் செய்தான் எனவும் கூறுகின்றது. மகாசேனனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியிலே திருகோணமலையிலும் வேறிடங்களிலும் சைவாலயங்கள் நிலைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க வொன்றாகும்.

கிழக்கிலங்கையில் அக்காலகட்டமளவில் வாழ்ந்த மக்களிடையே குறிப்பிடத்தக்களவு தொகையினர் சைவர்களாயிருந்திருப்பர். அநுராதபுர காலத்துக்குரிய தொல்பொருட் சின்னங்கள் இலங்கையின் வரட்சி வலயத்திற் சைவ வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியவர்கள் ஆங்காங்கு வாழ்ந்தமைக்குச் சான்றாகின்றன.

### வாயுபுராணத்துக் கோகர்ணம்

இந்தியாவிலே குப்தராட்சிக் காலத்திலெழுந்த புராணங்களுள் ஒன்றாகிய வாயுபுராணம் மலயதீவு என்ற நாட்டின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ண என்ற சிவனுடைய பெயரைக்கொண்ட சிவாலயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. வாயுபுராணத்திலே வர்ணிக்கப்பட்டுள்ள மலயதீவு பலவகையான மணிகளும் இரத்தினங்களும் பொன்னும் கடல்படு திரவியங்களும் கிடைக்கின்ற நாடு; அது மிலேச்சர், ராக்ஷஸர்கள் முதலியோரை மிகுதியாகக் கொண்டுள்ளது; அங்கே அகஸ்திய பவனமும் திரிகூடநிலையமும் அமைந்திருக்கின்றன. இவ்விபரங் களெல்லாம் இலக்கியங்களிலுள்ள, இலங்கையைப் பற்றிய மரபுவழியான வர்ணனைகளைப் பெரிதும் ஒத்துள்ளதால் வாயுபுராணத்திலே குறிப்பிடப்பட்டுள்ள 'பெருஞ் சிவாலயம்' இலங்கையிலுள்ள கோணேஸ்வரம் என்று கொள்வது எவ்வகையிலும் பொருந்தும். வாயுபுராணம் எழுதப்பட்ட காலத்தில் வடஇந்தியச் சைவர்களினாலே பாராட்டுதற்குரிய முறையிலே கோணேஸ்வரத்தின் புகழ் பரந்துள்ளதென்று கருதவேண்டியுள்ளது. வாயுபுராணக் குறிப்பானது திருகோணமலையின் பழைய பெயரான கோகண்ண என்பதை விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரிகின்றது. கோகர்ண சுவாமியின் திருத்தலம் அங்கு அமைந்திருந்தமையினாலே கோகர்ணம் என்ற தலப்பெயர் உற்பத்தியாகியது என்று கருதலாம். கோகர்ணம் என்பது பாளிமொழியிலுள்ள நூல்களிலே கோகண்ண எனக் குறிப்பிடப்பெற்றது.

### தேவார காலம்

வாயுபுராணத்திற் குறிப்பிடப்படுமளவிற்குப் புகழ்பெற்றிருந்த கோணேஸ்வரத்தின் மீது ஏழாம் நூற்றாண்டிலே ஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ளமை வியப்பிற்குரியதன்று. ஞானசம்பந்தரின் காலத்திற் கோணேஸ்வரம் கடலோரமாகவுள்ள கோணவரைதனிலே அமைந்திருந்தது. 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே' என்ற தேவார வாக்கியத்தினாலே இது உறுதியாகின்றது. ஞான சம்பந்தர் கோணேஸ்வரத்தைப் பற்றிய பாடல்களிலே அக்கோயிலின் பெயரைக் குறிப்பிடாது அது அமைந்திருந்த தலத்தினையே ஒவ்வொரு பாடலிலும் சிறப்பித்துக் கூறுகிறார். திருகோணமலை 'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்' பதியெனத் தேவாரத்திலே வர்ணிக்கப் பட்டுள்ளது. அருகிலே அமைந்த கடலும் சுற்றாடல்களிலே காணப்பட்ட பொழில்களும் தலத்திற்குச் சிறப்பைக் கொடுத்தன. சந்தனமும் அகிலும் மணியும் முத்தும் அங்கு காணப்பட்டதாக ஞானசம்பந்தர் பாடியுள்ளார். வாணிபத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு இப்பொருள்கள் அங்கு கொண்டு வரப்பட்டமையினை அடிப்படையாகக் கொண்டும் அவர் இவ்விதமாகப் பாடியிருந்ததால் கூடும். தேவார காலத்துத் திருக்கோணேஸ்வரம் காவும் பொழிலும் சூழப்பெற்றிருந்தது. அங்கு கனிமரச் சோலைகளன்றி நிழல்தரு மரச்சோலைகளும் பூம்பொழில்களுமே காணப்பட்டன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருத்தி, செண்பகம், குருந்து, முல்லை முதலியன வளர்ந்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. ஞானசம்பந்தரின் காலத்திற்குப் பின்பு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் கழிந்த பின்னரே இலக்கிய வழக்கிலும் சாசன வழக்கிலும் கோணேஸ்வரத்தைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

## சோழராட்சியிற் கோணேஸ்வரம்

இலங்கையிலே சோழராட்சி ஏற்பட்டிருந்த காலத்திலே திருக்கோணேஸ்வரம் சோழர்களின் ஆதரவைப் பெற்றிருந்தமைக்குச் சில சான்றுகளுள்ளன. கோணேசர் கோயிலின் சுற்றுப்புறத்திலே முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியின் வாசகத்தைக் கொண்ட சாசனத்தின் உடைந்த பகுதியொன்று இப்பொழுது காணப்படுகின்றது. சோழவதிகாரிகள் கோயிலுக்குக் கொடுத்த தான மொன்றினைப் பதிவுசெய்தற் பொருட்டு இச்சாசனம் எழுதப்பட்டதென்று கருதலாம். மானாங்கேணியிலே சிதைந்த நிலையிலுள்ள சோழ – இலங்கேஸ்வரதேவனின் கல்வெட்டில் மச்சகேஸ்வரம் பற்றிய குறிப்புள்ளது. அது மச்சகேஸ்வரம் பற்றிக் குறிப்பிடுவதாற் சோழ – இலங்கேஸ்வரனோ அவனுடைய அதிகாரிகளோ கோணேசர் கோயிலை முன்னிட்டு மேற்கொண்டவோர் ஏற்பாட்டைக் குறிப்பிடுவதற்கே அது எழுதப்பட்டதெனச் சிந்திக்கலாம்.

சோழர் காலத்திற்குரியதான நிலாவெளிக் கல்வெட்டிற் கோணேஸ்வரம் பற்றிய சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புகள் வருகின்றன. அக்கல்வெட்டின் வாசகம் கீழ் வருமாறு அமைந்துள்ளது :

*ஸ்ரீ கோணபர்பதம் திருக்கோணமலை ம(த்)ஸ்ய கேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு நிச்சலழி(வு)க்கு நிவந்தமாக சந்திராதித்தவற் செய்த உராகிரிகாம கிரிகண்ட கிரிகாம(த்து) நீர் நிலமும் புன்செய்யும் (இடங்களும்)... தேவாலயமும் மேனோக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் உட்பட இன்னிலத்துக் கெல்லை கிழக்குக் கழி எல்லை தெற்கெல்லை கல்லு குடக்கு எத்தகம்பெ எல்லை வடக்கெல்லை சூலக்கல்லாகும். சுடர்கோணமாமலை த(னி)ல் நீலகண்டற்கு நிலம் இவ்விசைத்த பெருநான் கெல்லையிலகப்பட்ட நிலம் இருநூற்று ஐம்பத்தாறு வேலி. இது பன்மயேசுரரகைஷ.*

இக்கல்வெட்டு மச்சகேஸ்வரம் என்னுங் கோயிலுக்கு நித்திய செலவிற்கென 250 வேலிநிலம் கொடுக்கப்பட்டமையினைக் குறிப்பிடுகின்றது. மச்சகேஸ்வரம் என்பது கோணேஸ்வரத்தின் மறுபெயராகும். பரந்த அளவிலான நிலம் தானமாகக் கொடுக்கப் பட்டுள்ளமையால் அரசனொருவனோ அல்லது உயர் தரப்பிலுள்ள அரசியலதிகாரியொருவனோ இத்தேவ தானத்தைக் கோயிலுக்குக் கொடுத்திருக்க வேண்டும். இத்தானம் கோயிலுக்கு வழக்கப்பட்ட காலப்பகுதியிலே பெருமளவிலான சொத்துடைமைகளைப் பரிபாலிக்கத் தக்க முறையிலே கோணேசர் கோயில் நிர்வாக அமைப்புக்களைக் கொண்டிருந்தது என ஊகிக்கலாம்.

கோணேசர் கோயிலின் பெருவளர்ச்சி சோழராட்சிக் காலத்திலே ஆரம்பமாகிப் பதின்மூன்றாம் நூற்றாண்டிலே நிறைவெய்தியமைக்குச் சில சான்றுகள் காணப்படுகின்றன. இக்காலத்திலே திருகோணமலைத் துறைமுகம் மிக முக்கியத்துவம் பெற்றது. இலங்கையின் பிரதான துறைமுகப் பட்டினமாக விளங்கிய மாதோட்டம் பதினோராம் நூற்றாண்டிலே வீழ்ச்சியடையத் தொடங்கியது. பாலாவியின் கழிமுகத்திலே நீரோட்டம் மருவி மணல்மேடுகள் ஏற்படலாயின. அதனாலே ஆழ்கடல் வாணிபத்தின் தொடர்பு நிலையம் என்ற நிலையினை மாதோட்டம் இழந்தது. அதற்குப் பின்பு சீனா, அராபியா, பாரசீகம் முதலான தூர தேசங்களிலிருந்து வர்த்தகக் கப்பல்கள் மாதோட்டத்திற்குச் செல்லவில்லை. மாதோட்டத்தின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து திருகோணமலைத் துறைமுகம் பெருஞ்சிறப்பினைப் பெற்றது. வார்த்தகப் பெருக்கத்தின் விளைவாகக் குடிசனப் பெருக்கமும் செல்வவளமும் ஏற்பட்டுத் திருகோணமலை நகரம் வளர்ச்சியுற்றது. தமிழகம், கலிங்கம் போன்ற தேசங்களுடன் நெருங்கிய அரசியல், கலாசாரத் தொடர்புகளுடன் வலுப்பெற்றிருந் தமையினாலே இந்து சமுதாய, கலாசார வளர்ச்சிகள் குறிப்பிடத்தக்களவிலே அங்கு ஏற்பட்டன. வளர்ச்சியுற்ற தென்னிந்திய கலைப்பாணியிலே பெரும் மண்டபங்களையுங் கோபுரங்களையும் அமைத்துக் கோணேசர் கோயிலைக் காலாகாலம் புனரமைத்துப் பெருப்பித்துக் கொள்ள முடிந்தது. அதனாலே கோணேஸ்வரம் தமிழகத்திலுள்ள பெருங்கோயில்களைப் போன்ற பேரமைப்பாகியது. ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடுகளைக் குறித்துப் பரந்த அளவிலான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இலங்கையின் வடகிழக்குப் பகுதியிலுள்ள தமிழூர்கள் எல்லாம் ஆலய சேவைகளின் மூலமாகக் கோணேஸ்வரத்தோடு தொடர்புபடுத்தப்பட்டன. கோயிற் சேவைகளைப் புரிவதற்கெனப் பல சமுதாயப் பிரிவுகளைச் சேர்ந்தோர் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு குடியிருப்பதற்கு காணிகளும் ஊதியத்திற்கென நிலமானியங்களும் ஆங்காங்கு கொடுக்கப்பட்டன. அத்தகைய வளர்ச்சிகளையும் சமுதாய மாற்றங்களையும் பற்றிய வரலாற்றமிசங்களும் மரபுவழிக்கதைகளும் கஜபாகு, குளக்கோட்டன் ஆகியோரைப் பற்றிய கதைத் தொகுப்புக்களிலே சேர்க்கப் பெற்றுள்ளன.

## குளக்கோட்டன் திருப்பணிகள்

கோணேசர் கோயிலைப்பற்றிய மரபுவழிக் கதைகளிலே குளக்கோட்டனைப் பற்றியனவே மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். கோணேசர் கோயிலைப் புனரமைத்துப் பெருப்பித்த பெருந்தகையோரிற் குளக்கோட்டன் முதன்மை பெற்றிருந்தான். ஆலய ஏற்பாடுகள் அவனாலே வகுத்துத் திட்டம் பண்ணப்பட்டிருந்தன. தனது சிறப்புமிக்க திருப்பணிகளினாலே கோணேஸ்வரம் பற்றி மரபுவழிக் கதைகளிலே ஒரு பிரதானமான இடத்தை அவன் பெற்றுக்கொண்டான். குளக்கோட்டனின் திருப்பணிகளே கோணேசர் கல்வெட்டிற்குக் கருவாய் அமைந்தன. குளக்கோட்டனைப் பற்றிய கதைகள் ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம், திருக்கோணாசல புராணம் ஆகிய தலபுராணங்களிலே மிக விரிவடைந்தன. கோணேசர் கல்வெட்டிலே காணப்படும் குளக்கோட்டன் கதை மரபுகள் கோணேசர் கோயிலைப் பற்றி மட்டும் அமையாது சமுதாய வளர்ச்சியினையும், அதைப் பிரதிபலிக்கின்ற அரசியலமைப்பினையும், அதனாலே அவை கோயிலமைப்பிற்கும் சமுதாயவமைப்பிற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கான மூலமாக விளங்குகின்றன.

திருகோணமலைத் தமிழர்களின் வரலாற்றமிசங்கள் குளக்கோட்டன் கதைத் தொகுதியிலே செறிந்துள்ளன. ஆதாரபூர்வமான காலவரையறைபற்றிய குறிப்புக்கள் எதுவுமின்றி ஜனரஞ்சகமான முறையிலே பல்வேறு காலப்பகுதிகளிலும் கட்டங்களிலும் நிறைவு பெற்ற சமுதாய வளர்ச்சிகளும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளும் குளக்கோட்டன் திருப்பணிகளோடு தொடர்புபடுத்தப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. சோழராட்சிக் காலத்தை உள்ளடக்கிய மூன்று நூற்றாண்டுகளுக்குரிய வளர்ச்சிகளை இக்கதை மரபுகள் பிரதிபலிக்கின்றன எனக் கருதலாம். குளக்கோட்டனுடைய ஆலய ஏற்பாடுகளும் பிற நடவடிக்கைகளும் திருகோணமலைச் சைவர்களின் வரலாற்றிலே மிக முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்துள்ளதனாலே குளக்கோட்டன் அவர்களின் அபிமானத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். கோணேசர் கோயிலின் வரலாறு, திருகோணமலையில் ஏற்பட்ட தமிழர் குடியேற்றம், வன்னிமை என்ற சிற்றரசுகளின் வளர்ச்சி ஆகிய மூன்று விடயங்களையும் பற்றிய விபரங்கள் குளக்கோட்டன் கதை மரபுகளோடு இணைக்கப்பட்டுள்ளன.

குளக்கோட்டன் கோணேசர் கோயிலைப் புனரமைத்துக் கோபுரங்கள் கட்டியமை, கோயிற் சேவைகளுக்கெனப் பெருந்தொகையானோரை வரவழைத்து அவர்களைக் குடிகளாக்கி ஆலயத் தொழும்புகளை வகுத்தமை, தகைமை வாய்ந்த தலைவர்களுக்கு வன்னியம் என்னும் பட்டத்தைக் கொடுத்து ஆலய தருமங்களையும் சமுதாயத்தையும் பரிபாலிக்குமாறு சிற்றரசுகளை உறுதிப்படுத்தியமை ஆகியனவே குளக்கோட்டன் கதையின் பிரதான அமிசங்களாகும். இலங்கையிற் சைவர்கள் செறிந்து வாழ்ந்த பகுதிகளிலெல்லாம் அவற்றின் செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. முன்னேஸ்வரம், திருக்கோயில், கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம் முதலிய கோயில்களின் உற்பத்திகளை விளக்கிக் கொள்வதற்கும் குளக்கோட்டன் கதை மரபுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## கோணேஸ்வரம் புனரமைக்கப்பட்டமை

குளக்கோட்டன் கோணேசர் கோயிலைப் புதுப்பித்து அங்கு பெருங் கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டியிருந்தான் என்ற நம்பிக்கை சைவர்கள் மத்தியிலே பெரிதும் வலுப்பெற்றிருந்தது. அது கர்ண பரம்பரைக் கதைகளிலும் இலக்கிய மரபிலும் சிறப்பிடம் பெற்றிருந்தது. இவற்றைக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு குறிப்பிடுகின்றது.

*திருந்து திரிகயிலை வெற்பிற் சிவாலயமுங் கோபுரமுஞ் சிறக்க நாட்டிப்,*
*பரிந்துலகோர் பவமறுக்கும் பாவநாசச் சுனையும் பரிவாய்ச் செய்து*
*தெரிந்த புகழ் திருக்குளமும் வயல் வெளியுந் திருத்தி யரற்கெனவீந்து,*
*பரிந்தவரன் றொழும்பு செய்வான் வேண்டுமென நடந்தான் பரிதி வேந்தன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கைலாசமாகிய கோணவரையிலே சிவாலயமுங் கோபுரமும் அமைத்து அவற்றோடு பாவநாசச்சுனை என்பதனையும் ஏற்படுத்திவிட்டுக் குளக்கோட்டன் குளத்தினையும் வயல்வெளிகளையுந் திருத்திக் கோயிலுக்குக் கொடுத்தான் என்பதே இச் செய்யுளின் பொருளாகும். கோணேசர் கோயிலைக் குளக்கோட்டன் புனருத்தாரணம் செய்திருந்தான் என்பதை உணர்த்தும் வகையிலே திருகோணமலைக் கோட்டையில் அமைந்திருக்கும் தூணொன்றிலே வரையப்பெற்றுள்ள குளக்கோட்டன் கல்வெட்டின் வாசகம் அமைந்துள்ளது.

*முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்*
*பின்னே பறங்கி பிரிக்கவே – மன்னவ பின்*
*பொண்ணாததனை யியற்றவழித்தே வைத்து*
*எண்ணார் வருவேந்தர்கள்.*

என்பதே அதுவாகும். இதனைப் பெரிதும் ஒத்துள்ள மேல்வரும் கர்ண பரம்பரைச் செய்யுளொன்றும் உள்ளது.

*முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்*
*பின்னே பறங்கி பிடிக்கவே – மன்னாகேள்*
*பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் போனபின்*
*மானே வடுகாய் விடும்.*

பல நூற்றாண்டுகளாக இவ்வாறு மரபுவழியாகப் பாராட்டப்பட்டு வந்த குளக்கோட்டன் ஏதோவொரு வகையிலே கோணேசர் கோயிலோடும் திருகோணமலைப் பகுதியோடும் தொடர்புகொண்டிருந்தான் என்பது மறுக்க முடியாத வொன்றாகும். அவனைப் பற்றிய ஐதிகங்களெல்லாம் முற்றிலும் புனை கதைகளாகவும் கற்பனைக் கதைகளாகவும் புறக்கணிக்க முடியாதவை. அவற்றிலே வரலாற்றமிசங்கள் பல பொதிந்துள்ளன. கோணேசர் கோயிலைப் புனரமைத்து ஆலய ஏற்பாடுகளைத் திட்டம் பண்ணியிருந்த குளக்கோட்டன் சோழகங்கன் என்ற பெயரினைக் கொண்டிருந்தான் என்பது மேல்வரும் ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணத்துச் செய்யுளினால் அறியப்படுகின்றது.

*பார்தாங்கு கோயிலும் பொன்மண்டபமும்*
*கோபுரமும் பரற்குநாட்டி*
*யேர்தாங்கு மாயனுக்கு மலங்கார வாலய*
*மொன்றியற்றி முற்றுங்*
*கார்தாங்கு திருக்குளமும் பாவநாசச்சுனையுங்*
*கண்ட கண்டன்*
*சீர்தாங்கு குளக்கோட னெனுஞ் சோழ கங்கனைநாஞ்*
*சிந்தை செய்வாம்.*

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்தின் ஆசிரியரான செகராசசேகரன் மிகுந்த அபிமானத்தோடும் மதிப்புடனும் குளக்கோட்டனாகிய சோழகங்கனைப் பற்றிக் குறிப்பிடுகின்றார். நூலின் பாயிரத்திலே அவர் கடவுள் வாழ்த்துப் பாடியபின், சமய குரவர்களாகிய நால்வரைப் பற்றியும் பாடிவிட்டு, அதற்கடுத்துக் குளக்கோட்டனைப் புகழ்ந்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சோழகங்கன் என்பது தமிழ்நாட்டிலுங் கலிங்க தேசத்திலும் வாழ்ந்த அரச குடும்பத்தவர் பலரின் பெயராக வழங்கி வந்தது. கீழ்த்திசைக் கங்கர்களிற் சிலரும் சோழரதும் பாண்டியரதும் சாமந்தரிற் பலரும் அப்பெயரைக் கொண்டிருந்தனர். முதலாவது இராசேந்திர சோழனுடைய காலத்திற்குப் (1016–1044) பின்பே சோழகங்கன் என்ற பெயர் சாசனங்களிலே குறிப்பிடப்படுகின்றது.

முதலாம் இராஜேந்திர சோழனுடைய மகனொருவன் சோழகங்கன் என்னும் பட்டத்தினைப் பெற்றிருந்தான். அவன் முடிகொண்ட சோழமண்டலம் என்னுங் கங்கபாடிக்குரிய அரசனாக முடிசூட்டப் பெற்றிருந்தான். சோழகங்கம் என்னும் ஏரியினை அமைத்த காரணத்தாற் சோழகங்கன் என்னுஞ் சிறப்புப் பெயர் இராஜேந்திர சோழனுக்கு உரியதாயிருந்தது என்றுங் கருதலாம்.

எனவே கோணேஸ்வரத்தினைப் புனரமைத்த சோழகங்கன் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்திருத்தல் வேண்டும். சோழகங்கன் என்ற பெயரையுடைய நால்வரைப் பற்றி இலங்கை வரலாறு பற்றிய மூலங்களிலே குறிப்புகள் கிடைக்கின்றன. இரண்டாம் கஜவாகுவின் ஆட்சியிலே சோடகங்க குமாரன் என்ற இளவரசனொருவன் பொலநறுவையிலிருந்தானென்று சொல்லப்படுகின்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே சோடகங்கன் என்போனொருவன் தென்னிந்தியப் படைகளின் துணையுடன் பொலநறுவையிலே சிறிது காலத்திற்கு அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்தான். சோடகங்கன் என்ற பிரதானியொருவன் கோகர்ண தரிசனஞ் செய்தான் என்பதைப் பிரெடெரிக் கோட்டையிலுள்ள உடைந்த நிலையிலுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டினால் அறிய முடிகின்றது. முதலாம் புவனேகபாகுவின் ஆட்சியிலே (1217–1282) சோழகங்கன் என்ற தமிழ்ப் பிரதானியொருவன் எதிர்க்கரையிலிருந்து படையெடுத்து வந்தானென்று சூளவம்சம் குறிப்பிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளக்கோட்டன் என்னும் சோழகங்கன் சோழர்குலத்தவனென்றும் வரராமதேவன் என்னும் மன்னனின் மகன் என்றும் கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாசபுராணம் முதலிய நூல்கள் குறிப்பிடுகின்றன. அத்துடன் சோழ இராசகுமாரனொருவனைப் பற்றிய விபரங்கள் குளக்கோட்டனைப் பற்றியவற்றோடு கலப்புற்றதன் விளைவாகவும் பிற்காலத்திலே இத்தகைய கருத்து ஏற்பட்டிருத்தல் வேண்டும். குளக்கோட்டன் திருகோணமலைப் பகுதியிலே பல்வேறிடங்களிற் குடிகளை இருத்துவதற்கும் குளங்களையும் மிகப் பெருமளவிலான நிலங்களையுந் திருத்தித் தானஞ் செய்வதற்கும் வன்னியர் என்ற சிற்றரசரை நியமித்ததற்கும் அதிகாரம் பெற்றிருந்தான் என்று மரபுவழியாகக் கொள்ளப்பட்டு வருவதனாலே அவன் வடகிழக்கிலங்கையிலே சுதந்திரமாகவோ, துணையரசனாகவோ அல்லது வேறொரு அரசனின் பிரதிநிதியாகவோ ஆதிக்கஞ் செலுத்தினான் எனக் கருதலாம். குளக்கோட்டன் கதையிலுள்ள பல அம்சங்கள் இலங்கையில் அரசனாகப் பதவி பெற்றிருந்த சோழ இலங்கேஸ்வரன் காலத்தவை என்ற கருத்திற்கு அண்மைக் காலத்திலே திருகோணமலை மாவட்டத்திலே கண்டெடுக்கப் பெற்ற சில சாசனங்களிலுள்ள குறிப்புகளும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற ஆராய்ச்சிகளும் ஆதாரமாய் உள்ளன.

கோணேசர் கல்வெட்டில் இடம்பெற்றுள்ள குளக்கோட்டன் கதை மரபுகளை மேல்வருமாறு சுருக்கிக் கூறலாம்: திருகோணமலையின் குன்றிலே குளக்கோட்டன் சிவாலயமுங் கோபுரமுஞ் சிறப்பாக அமைத்து வயல்வெளிகளையும் குளத்தினையுந் திருத்திக் கோயிலுக்குக் கொடுத்தான். திருப்பணி வேலைகளை நடாத்துவதற்கெனப் பல குடிகளைத் தமிழ் நாட்டிலிருந்து வரவழைத்துத் திருகோணமலையிலே குடியிருக்கச் செய்தான். தானத்தார் என்னும் ஆறு குடிகளைச் சோழ நாட்டு மருங்கூரிலிருந்து அழைப்பித்து வந்து திருகோணமலையிலே குடியிருக்கச் செய்தான். பரவணியாட்சியாக அவர்களுக்கு நிலங் கொடுத்தான்; தானத்தாரின் கடமைகளை வரையறுத்து அவர்களுக்கு இராயபட்டத்தைக் குளக்கோட்டன் கொடுத்தான். கோயிலிலே கடமை புரிவதற்கென வரிப்பத்தார் 27 குடிகளைக் காரைவள நாட்டால் வரவழைத்தான்.

பட்டாடை கொய்தல், தூர்த்தல், விளக்கேற்றல், 'தட்டு முட்டு'க்களை விளக்குதல், கொடி, குடை போன்றவற்றை நாள்தோறும் பிடித்தல், நெல்குற்றுதல், சாணியொழுக்குதல், கரும்பு வெட்டிக் கொடுத்தல், நடனப் பெண்களுக்கு முட்டுவகை கொட்டுதல், பாடுதல், நற்பலிக்குப் பாவாடையிடுதல், கொடியேற்றுதல், இறக்குதல், சந்தரைத்தல் முதலியன வரிப்பத்தாரின் தொழும்புகளாகக் குளக்கோட்டனாற் திட்டஞ் செய்யப்பட்டன. வரிப்பத்தார் பண்டாரத்தார் என்ற சிறப்புப் பட்டத்தைப் பெற்றார்கள். அவர்களுக்குப் பள்ளவெளியிலே நிலங்கள் கிடைத்தன. அவர்களோடு சிற்பாசாரிகளும் அக்கசாலைத் தலைவர்களும் வேறும் பலரும் கோயிற்கடமைகளைச் செய்வதற்கெனச் சோழ நாட்டிலிருந்து குளக்கோட்டனாலே வரவழைக்கப்பட்டனர். தானம், வரிப்பத்து முதலிய குடிகள்மேல் அதிகாரஞ் செலுத்துவதற்கெனத் தனியுண்ணாப் பூபாலனை மதுரையிலிருந்து, அழைத்து வந்து திருகோணமலை நகருக்கு அதிபனாக்கி அவனுக்கு வன்னிபம் என்ற பட்டத்தையுங் குளக்கோட்டன் வழங்கினான். திருநெல்வேலியிலிருந்து காராளனொருவனைக் கூட்டிவந்து அவனைக் கட்டுக் குளம்பற்றுக்கு அதிபனாக்கி அவனுக்கு வன்னிபம் என்ற பட்டத்தைக் கொடுத்தான். இவர்களின் வழிமுறைச் சந்ததியினரே சில நூற்றாண்டுகளாகத் திருகோணமலைப் பகுதியிலே வன்னிபங்களாயிருந்து ஆட்சி செலுத்தினார்கள். கோணேசர் கோயிலின் ஆலய ஏற்பாடுகளையும் ஆலய தருமங்களையும் மேற்பார்வை செய்வதும் கோயிற்சேவையிலிருந்த குடியானவர்களின் கடமைகளை வழிநடத்துவதும் வன்னியனாரின் பொறுப்பாகவிருந்தன.

## கஜபாகு மகாராசன் திருப்பணிகள்

கஜபாகு என்ற பெயரைக் கொண்ட அரசனொருவன் கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினைப்பற்றிக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு எடுத்துரைக்கின்றது:

'இரவிகுலமதனில் வரு கயவாகு மகாராசன் சோழவள நாட்டாலழைப்பித்தது கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன் இவர்களிலைந்து குடி. இவர்களுக்குக் குடிநிலம், விளைபுலம் முதலான சர்வ காரியங்களுங் கொடுத்துக் குடிமையென்று திட்டம் பண்ணி அவர்க்கடுத்த வஸ்திர பூஷணங்களும் கொடுத்து அரசனுரைத்த கட்டளை :- வன்னியம், இருபாகை முதன்மை, தானம் வரிப்பத்து, இவர்கள் சொன்ன கட்டளைப்படி நீங்கள் நடக்க வேண்டியது. இந்தக் குடிமைகள் இது கனக சுந்தரப்பெருமாள் பத்ததியிற் பதிப்பித்த முறைமைபாக நடக்கவேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருமருவு கயவாகு மகாராசனும், தனது படை மனுஷரும், மாவலிகங்கையருகாக வெகுவிசாலமான வெளியுந்திருத்தி, அதற்கடுத்த அணைகளுங் கட்டுவித்து 1650 அவண நெல்விதைப்புத் தறையும் திட்டம் பண்ணிப் பத்துக்கொன்று அடையுமிடுப்பித்து, அதற்கருகாக தென்னை 1200 புன்னை 1200, பகவினம் 1200, மேதியினம் 1200 ம் சகல விதமான புஷ்பஞ் சோலைகளுஞ் செய்வித்து ஆதியாகிய கோணநாயகரே! இகபரமிரண்டு மறியாமல் நரசென்மமாகப் பிறந்த அடியேன் எனது சிற்றறிவினால் தேவரீருடைய தபனியவாலயத்தை அழித்து வேரங்கட்டுவேனென்று சொன்ன பிழையைப் பொறுத்துக் கொள்ள வேணுமென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி இதுவெல்லாம் கோணேசருக்கென்று தாரைவார்த்துக் கொடுத்துக் குளக்கோ்டு மகாராசா இரு நாளைக்கு இரண்டவண அரிசி த்'ட்டம் பண்ணினது. இப்போ அதிகமாக நாளொல்றுக்கு ஓரவண அரிசியும் அதற்கடுத்த செலவு கட்டளை பண்ணி, நாளொன்றுக்கு மூன்றவண அரிசி நைவேத்தியம் வைத்துப் பூசை நடக்கும்படி திட்டம் பண்ணிக் கனகசுந்தரப் பெருமாள் கணக்கிலும் பதிப்பித்துச் செப்பேடு வரைந்து கொடுத்து, வன்னியம், இருபாகை முதன்மை முதலாகச் சகலரையும் அழைப்பித்து.... எங்கள் குலத்துக் கயவாகு மகாராசாவென்பவர் முனீச்சுரப் பகுதியில் ஆலயமுந் திட்டம் பண்ணி, திருக்காளேசர் சிவாலயமுமுண்டு பண்ணி, அநவரதகாலமும் பூசை நடப்பித்து வருகிற நாளையில், திரிகைலாயநாதர் பெருமை கேட்டு வந்து, பாவநாசச் சுனையிற்றீர்த்தமும் படிந்து சிவாலயத்தைப் பிரதக்ஷிணம் பண்ணிக் கோணநாயகர் திருப்பாத தரிசனமுங் கண்டு தங்கக் கட்டியாற் றுலாவாரமுமேற்றி மாணிக்கம் பதித்த பூரணசந்திரப் பதக்கமுஞ் சாத்துவித்து 1800 பொன் கொடுத்து அபிஷேகமும் பண்ணுவித்துச் சிறிது திரவியமும் அறைமுதலிருப்பாக வைத்து இருபாகை முதன்மைக்கும் கோயிறொழும்பு செய்ப வர்களுக்கும் மனப்பூர்வமாக வெகு நகைகளுங் கொடுத்துக் குருகுலக் கணக்கிலும் பதிப்பித்து, தென்னை, புன்னை, மா, இருப்பை, பூகம் ஆயிரமாயிரம் நிரைத்த பூங்காவனங்களு முண்டுபண்ணிக் கொடுத்துப் போட்டுத் தன் நகருக்குப் போய் நெடுநாளிராச்சியம் பண்ணியிருக்கிற நாளையில் ஆதியாகிய கோணநாயகரருளினால் மனுநேய கஜவாகென்றொரு புத்திரன் பிறப்பான்.*

வசன ரூபமாகவுள்ள இக்கதையிலே (1) கஜபாகு மகாராசன் கோணேசர் கோயிலைத் தரிசித்து வழிபட்டமை, (2)அங்கு துலாபாரஞ் செய்து பொன்னும் ஆபரணங்களுங் கோயிலுக்குக் கொடுத்தமை, (3) குடிகளை வரவழைத்துக் கோயிற் சேவைகளைத் திட்டம் பண்ணியமை, (4) நிலங்களைத் திருத்தி அவற்றைத் தானம் பண்ணியமை ஆகிய நான்கு விடயங்களும் விரித்துரைக்கப்பட்டுள்ளன. கஜபாகுவின் திருப்பணிபற்றிய வரலாற்றுச் செய்திகள் இக்கதையிலே ஒழுங்கற்ற வகையிலும் சில திரிபுகளோடும் ஜனரஞ்சகமான முறையிலே கூறப்பட்டுள்ளன.

சிங்கள வரலாற்று மரபுகளிலுஞ் சாசனங்களிலுங் காணப்படுங் குறிப்புகள் பொலநறுவையிலே பன்னிரண்டாம் நூற்றாண்டிலே (1132 – 1154) ஆட்சி செலுத்திய கஜபாகு இந்துமத நிறுவனங்களுக்குப் பெரிதும் ஆதரவளித்தான் என்பதற்கு ஆதாரமாயுள்ளன. அவனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'பொய்ச் சமயவாதிப் பிரபுக்களை அந்நியநாட்டால் வரவழைத்து இராச்சியத்தை நிரப்பினான்' எனச் சூழவம்சம் கூறுகின்றது. எனவே பௌத்த சங்கத்தவர்களின் அபிமானத்துக்கும் நலனுக்கு ஒவ்வாத சமயக் கொள்கைகளை கஜபாகு கடைப்பிடித்துள்ளான் என்பது தெளிவாகின்றது. அரசன் லக்ஷபூசை செய்வதற்குக் கந்தக் கடவுளின் படிமமொன்றை அமைத்துக் கொடுத்தமைக்காக ஹினாபி என்ற சிற்பாசாரியனுக்கு நிலம் தானமாகக் கிடைத்தமைபற்றி கஜபாகுவின் கபுறவது ஓயாக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. மேலும் கந்தளாயிலுள்ள பிரமதேயம் ஒன்றுக்கும் கஜபாகு ஆதரவு கொடுத்தமைக்கு இரு கல்வெட்டுகள் சான்றளிக்கின்றன. கஜபாகு மன்னன் தனது ஆட்சிக் காலத்தின் முடிவிலே கந்தளாயில் ஒரு அரண்மனை அமைத்து அங்கு தங்கியிருந்தான். அவன் இந்து நிறுவனங்களுக்கு ஆதரவளித்திருந்தமையாலும் வடகிழக்குப் பகுதிகளிலே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையாலும் கோணேசர் கல்வெட்டிலே அவனுடைய திருப்பணிகளைப் பற்றியுள்ள கதைகள் வரலாற்றுமிசங்கள் பொருந்தியனவென்று கொள்ளக்கூடியனவாய் அமைந்துள்ளன.

**வீரபாண்டியன் கோணவரையிற் கயல் பொறித்தமை**

பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே இலங்கையிலே பாண்டியப் படையெடுப்புகள் நடைபெற்றன. அவற்றின் விளைவாகவே வட இலங்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சி ஏற்பட்டு யாழ்ப்பாண இராச்சியம் எழுச்சி பெற்றது. சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1251–1268) ஆட்சியிலே தமிழகமெங்கும் பாண்டியரின் ஆட்சி ஏற்படலாயிற்று. தெலுங்கு தேசத்தின் தென்பகுதியும் மலையாளமும் பாண்டியரின் மேலாட்சியின் கீழ் வந்தன.

வட இலங்கை மீது படையெடுத்து அதன்மேலும் கி. பி. 1258ஆம் ஆண்டளவிலே பாண்டியர் தங்கள் மேலாதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். மலாய நாட்டிலிருந்து வந்து இலங்கையின் வடபகுதியினைக் கைப்பற்றி ஒரு இராச்சியத்தை உருவாக்கியிருந்த சந்திரபானு என்போன் பாண்டியருக்குச் திறைசெலுத்த நேர்ந்தது. திருகோணமலைப்பகுதியும் சந்திர பானுவின் ஆட்சியின் கீழமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரபானு பாண்டியருக்குத் திறைசெலுத்துவதை நிறுத்தி அவர்களுக்கு மாறான செயல்களைப் புரிந்தமையினாலே அவனுக்கெதிராகப் பாண்டியர்கள் படையொன்றை அனுப்பிவைத்தனர். சுந்தரப் பாண்டியனின் துணையரசருள் ஒருவனும் பெருவீரனுமாகிய வீரபாண்டியனின் தலைமையில் அப்படையெடுப்பு நிகழ்ந்தது. வீரபாண்டியன் சந்திரபானுவைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு, அவனுடைய செல்வங்களையெல்லாங் கவர்ந்தபின், இராச்சியத்தை சந்திரபானுவின் மகனிடம் கொடுத்ததாகக் குடுமியாமலைச் சாசனங் குறிப்பிடுகின்றது. வீரபாண்டியன் கோணவரையிலும் திரிகூடகிரியிலும் பாண்டியரின் இலச்சினையாகிய இணைக்கயல்களின் வடிவத்தைப் பொறித்தமையினை அச்சாசனம் மேல்வருமாறு குறிப்பிடுகின்றது :

*"காணாமன்னவர் கண்டு கண்டொடுங்க*
*கோணாமலையினுந் திரிகூட கிரியினும்*
*உருகெழு கொடிமிசை இரு கயலெழுதி....."*

வீரபாண்டியன் தானடைந்த பெரு வெற்றியினை உணர்த்துமுகமாகப் புனித தலங்களாகிய கோணவரையிலும் திரிகூடகிரியிலும் இணைக்கயல்களின் உருவத்தைப் பொறித்தமை குறிப்பிடத்தக்கதாகும். திருகோணமலைக் கோட்டையின் முன்புறத்திலுள்ளதும் 'குளக்கோட்டன்' கல்வெட்டு பொறிக்கப்பட்டதுமான தூணிற் காணப்படும் கயலினுருவம் வீரபாண்டியனாலே பொறிப்பிக்கப்பட்டதாதல் வேண்டும். அத்தூணிலே முன்பு சிறிய உருவிலான வரிவடிவங்களுடன் பொறிக்கப்பட்ட சாசனமொன்றின் மேற் குளக்கோட்டன் கல்வெட்டு வரையப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கான காரணமுண்டு. கோணவரையிலும் திருகூடகிரியிலும் கயல்வடிவங்களைப் பொறித்த பாண்டியமன்னனும் அவன் படைகளும் கோணேசர் கோயிலுக்குச் சென்று தரிசித்திருக்க வேண்டும். '.... திருக்கோண அலைவரப் பாடன் கழித்து' என்ற சொற்றொடர்கள் வீரபாண்டியனைப் பற்றிக் குடுமியாமலைச் சாசனத்திலே வருவதால் கடல்வாணிபத்தால் வரும் வருவாயின் ஒரு பகுதியைக் கொண்டு கோயில் அலுவல்கள் நடைபெறுவதற்கு வீரபாண்டியன் ஏற்பாடு செய்தான் என்றும் கொள்ளப்படுகின்றது.

## யாழ்ப்பாண மன்னர் திருப்பணிகள்

பரராசசேகரன், செகராசசேகரன், ஆரியச்சக்கரவர்த்தி என்ற யாழ்ப்பாண மன்னர் மூவர் புரிந்த திருப்பணிகள் பற்றிக் கோணேசர் கல்வெட்டிலே மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது :

'பரராசசேகரன், செகராசசேகரன் என்றிருவர் திருகோணமலைக்கு வடமேல்பால் இராச்சியம் பண்ணியிருப்பார்கள். அவர்கள் திருகோணமலைப் பெருமை கேட்டு வந்து பாவநசத் தீர்த்தம் படிந்து இரவிகுலதிலகராகிய தேவராச குளக்கோட்டு மகாராசனுக்கு இத்தனை ஐசுவரியங்களைக் கொடுத்து தடுத்தடிமை கொண்ட கோணநாயகரேயென்று விழுந்தழுது நமஸ்காரம் பண்ணி, அறுபத்து நாலு சிவாலயமுந் தரிசனை பண்ணி, ஏழுபட்டு முத்துமாலையும் வயிரரத்தினமும் பதிப்பித்த தங்கப் பதக்கமுஞ் சாத்துவித்து, முத்துக்குடை, பவளக்குடை கொடுத்து வெகுதிரவியமும் அறையிருப்பாக வைத்துக் குருகுலக்கணக்கிலும் பதிப்பித்து நாட்டில் நூல் வாங்கிக் கோயிலுக் கொப்புவிக்கிறதற்கு ஒரு இறை கடமையில்லாத திரியாயூரும், அதற்கு ஏழு குளமும் ஏழு வெளியுங் கொடுத்து எந்தெந்தக் காலமும் திரிக்கு நூல் வாங்கிச் சொல்லித் திட்டமும் பண்ணி ஆதியாகிய கோணநாயகர் பாதாரவிந்தந் துதி செய்து விடையும் பெற்றுத் தங்கள் நகரஞ் சென்று வெகுநாளிராச்சிய பரிபாலனம் பண்ணிச் சிவபதம் சேர்வார்கள்.

'ஆரியகுலராசன், பரராசசேகரன், செகராச சேகரனாண்ட நாட்டை இராச்சியம் பண்ணி வருகிற நாளியிலே திரிகைலை நாதர் பெருமைகேட்டு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவநாசச்சுனையிற்றீர்த்தமும் படிந்து ஆலய மடங்கலும் பிரதக்ஷிணஞ் செய்து திருமுன்னே வந்து அலரிகுலதிலகராகிய குளக்கோட்டு மகாராசனைத் தடுத்தாட் கொண்டமை ஸ்ரீ கமலபாதமிதுவோ வென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி, எழுந்து கனகாபரணமும், நவரத்தினமாலையுஞ் சாத்தித் தங்கக் குடை பொன் குடையுங் கொடுத்து, வெகுதிரவியமுமறை முதலிருப்பாக வைத்துக் குருகுலக் கணக்கிலும் பதிப்பித்து, கோணநாயகரிடம் விடையும் பெற்றுத் தன்னகரத்துக்குப் போவான்.

*யாழ்ப்பாண மன்னர்களைப் பொறுத்தவரையிலே கோணேசர் கல்வெட்டு எதுவித தெளிவின்றியும், காலவரையின்றியும், வரன்முறையினைத் திரித்துங் கூறுகின்றது. பரராசசேகரன், செகராசசேகரன் என்பன யாழ்ப்பாண அரசர்களின் மாறிவரும் சிங்காசனப் பெயர்களாகும். அவை இயற்பெயர்களல்ல. அதேபோல ஆரியகுலராசன் என்பதும் ஒரு இயற்பெயராகவன்றிக் குலப்பெயராகவே வழங்கிவந்தது. பரராசசேகரன், செகராசசேகரன் என்ற பட்டப்பெயரைக் கொண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் இருவர் செய்த திருப்பணிகள் பற்றிய குறிப்புகளும் அரசபதவிக்குரிய பட்டப் பெயர்களைச் சூடிக்கொள்ளாத, அவர்களுக்கு முற்பட்ட காலத்து ஆரியச்சக்கரவர்த்தி ஒருவன் புரிந்த செயல்களும் யாழ்ப்பாண மன்னரைப் பற்றிக் கோணேசர் கல்வெட்டிலே வருங் கதைகளுக்கு ஆதாரமாயிருந்திருத்தல் வேண்டும். அந்நூல் குறிப்பிடும் ஆரிய குலராசன் அதிலே கூறப்பட்டமை போலன்றி 'பரராசசேகரன்', 'செகராசசேகரன்' என்னுமிருவருக்கும் முற்பட்டவனாதல் வேண்டும். பதின்மூன்றாம் நூற்றாண்டின் முடிவிலே இலங்கைமீது படையெடுத்து வந்து பின்பு யாழ்ப்பாணத்திலே அதிகாரஞ் செலுத்திய ஆரியச்சக்கரவர்த்தியாக அவனைக் கொள்ளலாம்.*

*செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பட்டங்களைக் கொண்ட அரசர் கோணேஸ்வரத்திலே ஆலய தரிசனம் பண்ணித் திருப்பணிகளைப் புரிந்தனர் என்பது வரலாற்று அடிப்படையிலே ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டுகளிலே திருகோணமலைப் பிரதேசம் யாழ்ப்பாணத்து அரசரின் மேலாதிக்கத்தின் கீழிருந்தமையாலே திருக்கோணேஸ்வரம் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதரவைப் பெற்றமை இயல்பானவொன்றாகும். செகராசசேகரன், பரராசசேகரன் என்ற பட்டங்களைக் கொண்ட மன்னர்கள் அக்கோயிலுக்கு ஆதரவு வழங்கியமைக்குப் பிற சான்றுகளுள்ளன.*

*பதினான்காம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஆட்சிபுரிந்த வரோதய சிங்கையாரியன் என்பவன் பெருவலி படைத்தவனாகவும் பாண்டித்தியம் மிகுந்தவனாகவும் விளங்கினான். அவனுடைய ஆட்சியிலே கல்வி வளர்ச்சி ஏற்பட்டது. கவிவாணர்கள் அரண்மனையின் ஆதரவைப் பெற்றார்கள். அவனுடைய ஆதரவிலே எழுதப்பட்டதால் தொகுப்பு நூலாகிய மருத்துவ நூல் செகராசசேகரம் என்ற பெயரைப் பெற்றது. அதேபோல அரசனுடைய உறவினனாகிய சோமசர்மன் எழுதிய சோதிடநூலும் அரசனுடைய பட்டப்பெயரைக் கண்டு செகராசசேகரமாலை என வழங்கலாயிற்று. செகராசசேகரன் சைவசமயத்திற்குப் பேராதரவளித்தான் என்பதை மேல்வரும் ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணத்துப் சிறப்புப்பாயிரச் செய்யுள் வாயிலாக அறியலாம்.*

*அம்புயத்துதரத்தண்ணல் அமைத்தவாரியர் தங்கோமான்*
*உம்பர் வந்திறைஞ்சுஞ் சேது உயர்கரைக்காவல் வேந்தன்*
*செம்பொன்மா மவுலிச் சென்னிச் செகராசசேகரன்*
*தும்பையஞ் சடையான் சைவந்தோன்றிடத் தோன்றினானால்.*

யாழ்ப்பாண அரச குலத்தைச் சேர்ந்த இளவரசனொருவனுக்குப் நூலாசிரியர் தான் எழுதிய புராணத்தைச் சமர்ப்பணஞ் செய்துள்ளார் என்பது மேல்வருஞ் செய்யுளினாலே புலனாகின்றது:

*தேவையின் மன் செகராச சேகரக்*
*கோவையின் உதித்தசீர்க் குமார சூரியன்*
*ஆவியும் உடலுமொத் தளித்த கல்வியின்*
*மேவிய காப்பியம் விமலற் காயதே.*

தேவையர்கோன் என்ற பட்டத்தையுடைய ஆரியச்சக்கரவர்த்தி செகராச சேகரனொருவனின் வழித்தோன்றலாகிய குமாரசூரியன் என்பவன் ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம் பாடிய ஆசிரியரின் குருவாயிருந் தானென்றும் அதனாலே புராணமானது அவனுக்குச் சமர்ப்பணஞ் செய்யப்பெற்றது என்பதும் இப்பாடலினாலே தெளிவாகின்றது. ஆதலினாலே யாழ்ப்பாண அரசர்களின் ஆதரவினாலும் நடவடிக்கைகளினாலும் ஏற்பட்ட சைவசமய வளர்ச்சியினதும் கல்விவளர்ச்சியினதும் பிரதி பலிப்பாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம் உருவாகியது எனக் கொள்ளலாம்.

பரராசசேகரன் என்ற பட்டத்தையுடைய அரசனொருவன் திருக்கோணேஸ்வரத்திற்குப் போய் சுவாமி தரிசனம் பண்ணி விட்டு பெருமளவிலான பொன்னையும் பொருட்களையும் தானம்பண்ணியிருந்தான் என்பதைத் திருகோணாசல புராணம் மிகைப்படுத்தி மேல்வருமாறு கூறுகின்றது.

*அன்ன நாளிடை யாழி சூழகன்புவி முழுதுந்*
*தன்னதாகவே தனிக்குடை நீழலிற் றாங்கும்*
*மன்னனாம் பரராச சேகரனெனும் வள்ளல்*
*பொன்னுலாந் திரிகோணமால் வரைதனிற் பொருந்தி*

*சிந்தையன் பினோடரனுமை தனைத் தரிசித்தாங்*
*கந்தமின் னிதி பூண்மணி நிபந்தங்கள் அமைத்து*
*முந்துசீர் விழாத் தேர்த்திரு நாண்முறை போற்றிச்*
*சொந்தமாநகர் சார்ந்தனன் தொல்குலத்தரசன்*

கோணேசர் கல்வெட்டு, திருகோணாசல புராணம் என்பவற்றிலே குறிப்பிடப்பெற்ற பரராசசேகரன் பதினைந்தாம் நூற்றாண்டிற்குரியவனாதல் கூடும். கனகசூரிய சிங்கையாரியன் என்பவன் தனது நாட்டை மீட்டுக்கொள்வதற்கெனத் தென்னிந்தியாவிலிருந்து திரும்பி வந்தபொழுது சில காலம் தனது புதல்வர்களான பரராசசேகரன், செகராசசேகரன் என்போருடன் திருகோணமலையிலே தங்கியிருந்தான் என யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுவது இங்கே கவனிக்க வேண்டியதாகும். அந்நூலின் ஆசிரியரான பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த மயில்வாகனப் புலவரும் பரராசசேகரன், செகராசசேகரன் என்பனவற்றை இயற்பெயர்களெனக் கருதியமையினாலே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எனினும் பரராசசேகரன் என்ற அரசனொருவன் திருகோணமலைக்குச் சென்றிருந்தான் என்ற ஐதிகம் அவரின் குறிப்பிற்கு ஆதாரமாயிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

பதினைந்தாம் நூற்றாண்டிலே ஆறு கோபுரங்கள் கோணேஸ்வரத்தில் இருந்தமைக்கு 'நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர் திருக்கோணாதமலை தலத்தாறு கோபுரம், என்ற அருணகிரிநாதரின் கூற்று சான்றாகக் கொள்ளப்படுகின்றது. பதினேழாம் நூற்றாண்டிலே கோணேஸ்வரம் அதியுன்னத நிலையிலே காணப்பட்டது. அதனைபற்றிப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான கேறோஸ் பாதிரியார் மேல்வருமாறு கூறுவர்:

*"அந்தப்பெரிய துறைமுகத்தின் மேலே , நிலத்திலிருந்து கடலினுட் பரந்துள்ள குன்றின் சிகரத்திலே, இலங்கை வேந்தர்கள் மூன்று கோபுரங்களை அமைத்திருந்தார்கள். அவற்றுளொன்று மலையின் உச்சியிலும் ஏனையவை அதன் இருமருங்குகளிலும் அமைந்திருந்தன. அங்கு பெருந்திரளான விக்கிரக ஆராதனைக்காரர்கள் கடல்வழியாக வந்து மிகுந்த பக்தியோடு வழிபடுவார்கள். அவர்களின் உரோமபுரியான அத்தலத்திற்கு காஞ்சிபுரம், திருப்பதி, திருமலை, ஜகன்னாத் ஆகிய தலங்களிற் காட்டிலும் கூடுதலான யாத்திரிகர்கள் வருவார்கள்"*

பறங்கியர்கள் திருகோணமலையினை அடைந்த பொழுது கோணேஸ்வரம் மகத்தானவொரு அமைப்பாக விளங்கியது. அதனையுற்று அவர்கள் வியப்புற்றார்கள். இந்தியாவிலுள்ள பெருங்கோயில்களை ஒத்தவொரு அமைப்பாக அது விளங்கியது. போர்த்துக்கேயரின் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்துக் கோணேசர் கல்வெட்டு ஸ்ரீ தக்ஷிண கைலாசபுராணம் ஆகியவற்றிலே காணப்படும் விபரங்கள் பெருமளவிற்கு வரலாற்றுச் சார்புடையன என்று கொள்ளத் தக்கனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரம்

– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –

## தலச்சிறப்பு

**தி**ருக்கேதீஸ்வரம் மன்னார்த் தீவிலிருந்து தெற்கே ஆறரைக் கல் தொலைவில் வடகடல் ஓரமாகடத் தென்பால் திகழ்கிறது. ஆதியில் இப்பகுதி மாதோட்ட நன்னகர், மாந்தை நகர் என வழங்கியது. மாதோட்டம் என்பது ஊரின் பெயர். திருக்கேதீஸ்வரம் என்பது மாதோட்ட ஊரின் கண் விளங்கிய சிவாலயத்தின் பெயர். தற்போது மாதோட்டம் என்ற பெயர் அருகிச் சிவாலயத்தின் பெயராகிய திருக்கேதீஸ்வரம் என்ற திருப்பெயரே பெருவழக்காக வழங்கி வருகிறது.

இத் தலத்துச் சிவலிங்கப் பெருமானை நவக்கிரகங்களில் ஒருவனான கேது என்பவன் பூசித்துப் பேறு பெற்றான். அதனால் இத் திருக்கோயில் திருக்கேதீஸ்வரம் எனப் பெயர் வழங்கியது. இங்கு கேது பகவான் பூசித்த பின்பு அக் கேது நாதனைச் சூரபன்மனின் மனைவியான பதுமகோமளையின் பாட்டனும் விசுவகர்மா என்பவனின் தந்தையுமான மாதுவட்டா என்ற தேவதச்சன் வந்து பூசித்து வழிபட்டான். பின்பு அவன் திருக்கேதீஸ்வரத் திருக்கோயிலைச் சிறப்பு முறைப்படி திருப்பணி புரிந்தான். ஊரையும் நன்முறையில் அமைத்தான். ஊர் மகாதுவட்டாபுரம் எனப் பெயர் பெற்றதென்று வடமொழித் தக்ஷிணகயிலாய மான்மியம் கூறுகிறது. இம் மகாதுவட்டாபுரம் என்ற பெயரே காலப் போக்கில் மாதோட்டம் என்று மருவி வழங்கியது என்பர் சிலர். இம் மாதோட்ட நன்னகர் பௌத்த இலக்கியங்களில் மூன்றாம் நூற்றாண்டிலிருந்து மகாதீர்த்தம் என்ற பெயரைப் பெற்று வருகிறது. மகாதீர்த்தம் – இது மிகப் புனிதமான ஒரு புண்ணியத் தலம் என்பதாகும். தீர்த்தம் – பரிசுத்தம், புனிதமாக்குவது. அதாவது தன்னிடம் வந்து முழுகுவோரின், தரிசிப்போரின் பாவங்களைப் போக்கித் தூய்மை செய்வதாகும். இறைவனுக்குத் தீர்த்தன் என்ற ஒரு திருப்பெயரும் உள்ளது. 'ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்' என்பது திருவாசகக் கூற்று.

### பாலாவித் தீர்த்தத்தின் மகிமை

மாதோட்டத் திருக்கேதீச்சரத்திலே திகழும் புண்ணிய தீர்த்தம் பாலாவித் தீர்த்தமாகும். இதனை, 'மாதோட்டத்துள் மன்னு பாலாவியின் கரையில் கேதிச்சரம்' எனச் சம்பந்தர் தேவாரமும் "......... மாதோட்ட நன்னகரில்.................... பாலாவின் கரைமேல் செய்ய சடை முடியான் திருக்கேதீச்சரத்தானே" எனச் சுந்தரர் தேவாரமும் கூறுகின்றன.

இப் பாலாவித் தீர்த்தம் சிவ வடிவாகும். இத் தலம் தோன்றிய போதே தோன்றியது. இதனை "பரம பரன் உருவாய் உற்ற பாலாவி" என்றும் 'பலவினைக் குறும்பு போக்கும் பாலாவி' என்றும் திருக்கேதீச்சரப் புராணம் புகழ்கிறது.

இப் பாலாவிச் சிவதீர்த்தம், திருக்கேதீஸ்வர ஆலயத்தின் அம்மன் சந்நிதிக்கு நேர் எதிரே தென்பால், சிறிது தூரத்தில் உள்ளது. இது கி. பி. 9 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியான சுந்தரமூர்த்தி சுவாமிகள் காலத்தினும் பெரு நதியாக இருந்து மேலைக் கடலுடன் கலந்து நின்றதாக ஆய்வாளர் கருதுவர். தற்போது பாலாவியானது அணை கட்டித் தேக்கிய நீர்நிலை போற் காணப்படுகிறது. ஒருவர் இப் பாலாவித் தீர்த்தத்தில் நாடோறும் ஸ்நானம் செய்து கேது நாதனைத் தரிசிக்கின் இஷ்ட சித்திகளைப் றெுவர். அவ்வாறு இயலாதவர் விசேட புண்ணிய காலத்திலேனும் வந்து ஸ்நானம் செய்து இறைவனைத் தரிசிக்கின் இஷ்ட காமியங்களைப் பெற்று உய்வர் என்பது திண்ணம். ஒருவர் பிதிர் தினத்திலே இப் பாலாவியில் வந்து நீராடி நியமம் முடித்து தர்ப்பணம் செய்து கேது நாதனைத் தரிசித்து நெய்விளக்கு இட்டு வழிபடின் காசியில் சிவதர்ப்பணம் அல்லது சிவசிரார்த்தம் செய்த பெரும் பயனை அடைவர். தென் புலத்தாரும் மிக மகிழ்ந்து அவர்க்கு ஆசி கூறுவர் என்று தலபுராணம் கூறும்.

### மாதோட்டம் - துறைமுகப் பட்டினம்

பண்டைக் காலம் தொட்டே இம் மாதோட்ட நகர் இலங்கை – வடகடல் துறைமுகமாக இருந்து வந்ததாகும். இம் மாதோட்டத் துறைமுகம் போக்குவரத்துத் துறைமுகமாகவும் விளங்கி வந்தது. இத் துறைமுகத்தில் தங்கி நின்ற பெருங் கப்பல்களையும் அங்கு அமைந்து விளங்கிய பல அடுக்கு மாளிகைகளையும், மலர்ச் சோலைகளையும், பழத் தோட்டங்களையும் தம் தேவாரங்களில் சம்பந்தரும், சுந்தரரும் கவின் பெற எடுத்துக் காட்டி உள்ளனர். பாலாவியின் தென் கரையில் களஞ்சியக் கட்டிடங்களும், பாலத்துறையும் அமைந்து விளங்கின. அவ்விடம் இன்றும் வங்காலை (வங்கம் – கப்பல், காலை – தங்கும் நிலையம்) என்ற பெயருடன் நிலவக் காணலாம். இங்கு வாணிபத்தின் பொருட்டுப் பற்பல நாட்டு மக்கள் வந்து கூடி இருப்பர். இதனை 'வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' எனவும் 'வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர்' எனவும் சுந்தரர் தேவாரத்தால் அறியலாம். இங்கு நடைபெற்ற கடல் வாணிபம் வெகுகாலம் வரை பண்டமாற்றாகவும், பின்பு சிலகாலம் வரையில் பண்டமாற்றும், நாணய மாற்றும் கொண்டதாகவும் இருந்து வந்தனவாம்.

யாழ்ப்பாண வைபவமாலை விஜயன் இலங்கைக் கரையைச் சேர்ந்ததும் நெடுங்காலமாகப் பாழடைந்து கிடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீச்சர ஆலயத்தைப் புதுப்பித்துக் கட்டினான் என்று எடுத்துரைக்கின்றது. இத் தலத்திலே தேவர்கள் அர்த்தசாமப் பூசை செய்வதாக மரபு உண்டு. புரட்டாதி மாத பூர்வபட்ச சதுர்தசித் திதியே தேவர்கள் அர்த்தசாம பூசை செய்யும் நாளாகக் கூறப்படுகின்றது.

### வரலாற்று ஆதாரங்கள்

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை, அனுராதபுரம் இலங்கைத் தலைநகராக இருந்த காலத்தில் பிரதான துறைமுகமாய் விளங்கிற்று. இதனைச் சிங்களத்தில் மகாதித்த என்றழைப்பர். இலங்கைச் சரித்திரத்தைக் கூறும் மகாவம்சம் என்னும் நூலில் மகாதித்த சரித்திர காலம் தொடங்கிப் பிரசித்தி பெற்ற துறைமுகமாக விளங்கியமை பற்றி பலவிடங்களிற் கூறுகிறது. அந் நகரமிருந்த இடத்தில் இப்பொழுதும் நகரின் சுற்று மதில்களையும் இரட்டை அகழிகளையும் காணக்கூடியதாக உள்ளது.

மாந்தையெனும் நகரமிருந்த இடத்திற் புதைபொருள் ஆராய்ச்சி 1887இல் போக் என்பவராலும் 1925 28 இல் ஏ. எம். கொகாட் என்பவராலும் நடத்தப்பட்டது. கொகாட் என்பவரின் ஆராய்ச்சி முடிவுகள் அவர், சுகவீனங் காரணமாக 1929இல் இளைப்பாற நேர்ந்தபடியால் தக்க முறையில் வெளிவரவில்லை. திருக்கேதீஸ்வரம், மாதோட்டம் அல்லது மாதோட்டை என்ற தலைப்பில் 1887 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 7 ஆம் நாள் திரு W. J. S. போக் என்பவரால் படிக்கப்பெற்ற அறிக்கையில் இருந்து புராதன ஆலயமான திருக்கேதீஸ்வரத்தின் நிலையைப் பற்றி திட்டவட்டமான சில உண்மைகளை நாம் அறிய முடிகிறது.

இப் பழைய நகரில் உடைந்த சில சிற்பங்களின் பகுதிகளையும், ஓடுகளையும், செங்கட்டிகளையும், மட்பாண்டங் களையும் தவிர வேறு எதுவும் நிலத்தின் மேல் இல்லை. பழைய வீதிகளின் அறிகுறிகளும் இரண்டொரு கிணறுகளும், செங்கட்டிடங்கள், கோயில்கள் என்பவற்றின் அத்திவாரங்கள் என்பனவும் காணப்படுகின்றன. குன்று ஒன்றின் மத்தியில் செங்கட்டியால் அமைந்த பழைய அத்திவாரம் ஒன்று இருக்கின்றது. இவ்விடத்திலேயே முக்கிய நகரம் பெரும் பகுதி இருந்திருக்க வேண்டும். பழைய கிணற்றிற்கு அண்மையில் ஆலயத்தின் வாயில் இருந்திருக்கலாம் என்று அவர் கூறினார்.

ஆனால் அந்தக் கூட்டத்திலிருந்த சேர் பொன் இராமநாதன் அவர்கள் குறித்த அறிக்கையின் ஒரு பகுதிக் கருத்தை மறுத்துரைத்து விரிவான விளக்கத்தோடு இந்து சமய அடிப்படையில் அந்த இடத்தின் அமைவைத் தெளிவு படுத்தினார். மேலும் அவர் பழைய கட்டிடங்கள் இருந்தவிடம் நகருக்குப் புறம்பானது என்றும் எடுத்துக் காட்டினார். அங்கு ஆலயத்தின் ஆட்சிக் குழுவினர் அடியார்கள் வேலையாட்கள் என்பவர்கள் வாழ்ந்தனர். அன்று திருக்கேதீச்சரத்து ஆலயத்தைச் சூழ்ந்து இருந்த அகழியின் அமைவு முக்கியமானதொன்றெனலாம். அங்கே இரண்டு அகழிகள் அமைந்திருந்தன. ஓர் அகழி கடல் நீரையும் மற்றையது நன்னீரையும் உடையனவாய் இருந்தன.

கோயிற் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காகவே அகழிகள் அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன போலும். பிரதான ஆலயத்தின் பாழடைந்த மூலப்பகுதி 1894 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. அவ்வாறு கண்டு அறிவதற்குக் கோயில் நிலத்தில் அமைந்திருந்த சோழர் காலக் கிணறு ஒன்றும், போர்த்துக்கேயர் காலத்திற்கு முன் வழிபட்ட சிவலிங்கம் ஒன்றும், நந்தி ஒன்றும் கணேசரின் உருவம் ஒன்றும் உதவியாயின.

1950 ஆம் ஆண்டு, நகரின் கிழக்கு வாசலில் இருந்துபோகும் நாற்பதடி அகலமுள்ள ஒரு வீதி கண்டுபிடிக்கப் பட்ட இந்த வீதிக்கு சமாந்தரமாகப் போகும் அகலம் குறைந்த இன்னொரு வீதியும் காணப்பட்டது. இந்த வீதியின் இரு மருங்கிலும் கட்டிடங்களின் அழிவுகள் காணப்படுகின்றன. கிழக்கு வாசலிலிருந்து போகும் வீதி பிற்காலத்தில் கட்டப்பட்ட கோயிலுக்குப் போவதாக காணப்பட்டது. இந்தக் கோயில் எக்காலத்தது என்று இப்போது கூறமுடியாமலிருக்கிறது. நாற்பது வருடங்களுக்கு முன் இந்த இடத்தில், பின்னப்பட்டதும், இலங்கையிலுள்ள சிவலிங்கங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியதுமான சிவலிங்கமொன்று கண்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது இருக்கும் கோயிலுக்கருகில் காணப்படும் கற்களைப் போன்ற ஒரு தீர்த்தக்கல் இந்த இடத்தில் காணப்படுகிறது. இந்த இடத்தில் இன்னும் ஆராய்ச்சி செய்தால் இக் கட்டடத்தைப் பற்றிய விபரங்களை அறியக் கூடும்.

சுட்ட மண்ணினால் கட்டப்பட்ட ஒரு கிணறு அல்லது கழிவு நீர்க்குழியும், கல்லினால் கட்டப்பட்ட இரு கிணறுகளும் காணப்பட்டுள்ளன. 32 அடி தோண்டப்பெற்ற பின் மூன்றடி விட்டமுள்ள கல்லினால் கட்டப்பட்ட கிணற்றின் நீர்மட்டம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்படி தோண்டிக் கொண்டு போகும்பொழுது விசித்திரமான பானை சட்டிகளும், மிருகங்களின் எலும்புக் கூடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. உரோமாபுரி, அரேபியா, சீனா முதலிய இடங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பலவித பீங்கான்களும் காணப்பட்டுள்ளன. இவற்றுள் சிலவற்றைக் கொண்டு இவற்றின் காலத்தை நிர்ணயிக்க முடியும்.

மாந்தை நகர மதில்களுக்குப் புறத்தே இடுகாடு கண்டுபிடிக்கப்பட்டுத் தோண்டிய பொழுது ஒரு கிடங்கில் ஒரு மனிதனின் முழு எலும்புக் கூடும் அதோடு சம்பந்தப்பட்ட சட்டி பானைகளுட் கண்டெடுக்கப்பட்டன. பேராசிரியர் டாக்டர் பி. கே. சண்முகம் இந்த இடத்திற்கு விஜயம் செய்து இந்த எலும்புக் கூட்டை ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்றுள்ளார் வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தலையோடுகளு் எலும்புகளும் ஆராய்ச்சிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### போர்த்துக்கேயரும் திருக்கேதீச்சரமும்

போர்த்துக்கேயர் இலங்கையின் வட கரையில் இறங்கியபோது திருக்கேதீச்சரம் இந்துக்களின் முக்கிய வழிபாட்டு ஆலயமாகத் திகழ்ந்தது என்பது திண்ணம். எமேர்சன் ரெனந்து (Emmerson Tennent) என்பவர் வெளிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிகள் அமைத்ததும் பரிவாரக் கோயில்களை அமைக்கத் தொடங்கினார். 1960 ஆம் ஆண்டில் விநாயகர், வைரவர், சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கம், மகாலிங்கம், சுப்பிரமணியர், நடராசர் முதலியோருக்குரிய கோயில்களைப் பூர்த்தி செய்து திருவருள் துணைக்கொண்டு கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். இப் பரிவாரக் கோயில்களுள் மகாலிங்கத்துக்கு அமைக்கப்பட்ட மண்டபத்தை விசேடமாகக் குறிப்பிட வேண்டும். இம் மண்டபம் அழகான தூண்களைக் கொண்டது. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் மிகவும் பழமையானது. சிறிது சேதம் இருந்தபடியால் புதிதாக அமைக்கப்பட்ட கோயிலுக்குள் பிரதிஷ்டை செய்யவில்லை. இதனையே தமது செலவில் அமைக்கப்பட்ட மண்டபத்தில் எழுந்தருளச் செய்வித்தார்கள். அதனோடு அதற்குச் சகல அடியார்களும் பாலாவியில் இருந்து தீர்த்தக்காவடி எடுத்து வந்து தாமே அபிஷேகம் செய்வதற்கு ஏற்பாடு செய்து வைத்தார்கள். திருக்கேதீச்சரத்திற்கு இது ஒரு சிறப்பான அம்சமாக இருக்கின்றது. இப்படி அபிஷேகம் செய்யும்போது மக்களுக்கு எழும் ஆனந்தம் சொல்லில் அடங்கா. மேலும் தீர்த்தக் காவடியால் கோயில் திருப்பணிக்கும் பணம் சேர்ந்தது.

சேர் கந்தையா வைத்தியநாதன் தினசரி பூசையில் திருமுறைகளுக்கு சிறந்த இடத்தை ஏற்படுத்தியது இன்னுமொரு சிறந்த அம்சமாகும். குன்றக்குடி அடிகளாரின் வேண்டுகோளுக் கிணங்கி வழமையான பூசையோடு தமிழ்மறையோதுதலையும் சேர்க்கத் தீர்மானித்தார். அதை நடைமுறைப்படுத்தினார். இவரது காலத்திலேதான் மாந்தைச் சந்தியில் இருந்து திருக்கேதீச்சரத்திற்கு தார் வீதியும், மின்சார வசதியும், பாலாவிக் கட்டு வேலையும், மணியும், மணிக்கோபுரமும், தபால் நிலையம் முதலியனவும் அமைக்கப்பட்டன.

திருக்கேதீச்சரத்தில் பிராமணப் பிள்ளைகளைப் பயிற்று விப்பதற்கு ஒரு குரு குலத்தை அகில இலங்கை இந்து மா மன்றத்தின் ஆதரவில் நிறுவியது சேர் கந்தையா வைத்தியநாதனின் மற்றுமொரு பணியாகும். பிராமணப் பிள்ளைகளை ஆலயச் சூழலில் பழைய குருகுல முறைப்படி பயிற்றுவிப்பதற்கு அச்சுவேலி குமாரசாமிக் குருக்களதும் கொக்குவில் குமாரசாமிப் புலவரதும் உதவியைப் பெற்றார்கள். தற்போது இக் குருகுலம் திருக்கேதீச்சரத்தில் நடைபெறாது இருப்பது பெருங் குறையாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற பழம் பெருமை வாய்ந்த இத்தலம் களம் பல கண்டு சிலகாலம் பொலிவிழந்து, நலிந்து கிடக்கினும் மீண்டும் தழைத்தெழுந்து தன் மாட்சியை பொறித்துக் கொள்ளும் என்பது திண்ணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில்

**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –**



**தா**ன்தோன்றியான சுயம்புலிங்கங்களை உடைய கோயில்களே தான்தோன்றீஸ்வரர் கோயில்களாகும். தான்தோன்றீஸ்வரம் என்னும் பெயரால் விளங்கும் கோயில்கள் பலவற்றை மத்தியகாலத் தமிழகத்துச் சாசனங்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது. இலங்கையில் வடமாகாணத்தில் மருதடி தான்தோன்றீஸ்வரர், சாவகச்சேரி வாரியவனபதி தான்தோன்றீஸ்வரர், முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் தான்தோன்றீஸ்வரர், கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரரும் கொக்கட்டிச்சோலை தான் தோன்றீஸ்வரர் ஆலயமும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை.

மட்டக்களப்பில் இருந்து கல்முனை செல்லும் பிரதான வீதியில் இருந்து ஐந்து மைல் தொலைவில் அமைந்துள்ள மண்முனைத்துறையில் அமைந்துள்ள பதியே கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலாகும். காடும் வயலும் சார்ந்த இயற்கை வனப்புமிகுந்த ஓர் இடத்திலே இக் கோயில் அமைந்துள்ளது.

## கோயில் வரலாறு

தல வரலாறு பற்றிய செய்திகள், வரலாற்றம்சங்களோடு புனை கதைகளும் இணைந்து கர்ண பரம்பரைக் கதையாகவே உள்ளன. மகாவம்சக் குறிப்புகளும் இடையிடையே இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளோடு சேர்ந்துள்ளன. உலகநாயகி, விமலதருமன், மாகோன், தர்மசிங்கன் ஆகியோரின் செயற்பாடுகளோடு இவை இனங்காணப்படுகின்றன. ஆலய தோற்றம் பற்றி இருவேறு ஐதீகங்கள் தெரிவிக்கப்படுகின்றது.

திருவேட்டைக் காவியம் கோயிலின் தொடக்கத்தினை கொக்கட்டியார் என்பவரோடு தொடர்புபடுத்துகின்றது. பண்டைக் காலத்தில் முத்துலிங்கம், கொக்கட்டியார் என்னும் இரு தபசியார் கதிரை மலையைத் தரிசிக்கச் சென்ற வேளை கொக்கட்டியார் சமாதி அடையவே, அவரைச் சமாதியிலிருத்தி முத்துலிங்கம் கதிரை மலையைத் தரிசிக்கச் சென்றார். அச் சமாதியிலிருந்து சிவலிங்கமொன்று தோன்றி கொக்குநெட்டி மரத்தால் மறைக்கப்பட்டிருந்தது. வேடன் ஒருவன் தேன் பெறும் நோக்கில் மரத்தை வெட்டவே இரத்தம் சிந்தியது. இதனைச் சொப்பனத்திலறிந்த கதிர்காம யாத்திரை சென்ற செட்டியார் கோயிற் திருப்பணிகளைப் பூர்த்தி செய்தார். ஆரம்பத்தில் இங்கு வேடர் பூசையே நிகழ்ந்தது. பெரும்பாலான கிழக்கிலங்கைக் கோயில் பற்றிய ஐதீகங்கள் கதிர்காம யாத்திரீகர்களையும் வேடர்களையும் தொடர்புபடுத்துகின்றன. இது ஒரு மரபு வழிச் சம்பிரதாயமே அன்றி வரலாறு அல்ல. ஆயினும் செட்டியார் கோயிற் திருப்பணி செய்தார் என்ற குறிப்பு, செட்டிப்போடி குடியைச் சார்ந்தவர்கள் கோயிற் பணியில் ஈடுபட்டிருந்தமையைக் குறித்தல் கூடும்.

தான்தோன்றீஸ்வரத்தின் தோற்றம் பற்றிய மற்றொரு ஐதீகம் உலக நாயகிபற்றிய கதையில் அடங்கியுள்ளது. கலிங்க தேசத்து இளவரசியான உலக நாயகி கௌதமபுத்தரின் தசனத்தையும் சிவலிங்கமொன்றையும் தன்னோடு எடுத்துக் கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் இலங்கைக்கு வந்தாள். இலங்கை அரசனான மேகவர்ணனிடம் புத்த சாசனத்தைக் கொடுத்து, தனக்குக் குடிகளில்லாத காட்டுப் பகுதியைத் தரவேண்டும் என்று கேட்டாள். அரசன் மட்டக்களப்பு அதிபதியாகிய குணசிங்கனுக்கு ஒரு திருமுகம் அனுப்ப அவனும் அவளுக்கு மண்முனையை நிவந்தமாகக் கொடுத்து அவள் வாழ்வதற்கென்று மாளிகை ஒன்றும் அமைத்துக் கொடுத்து காடழித்து குடிகளமர்த்திக் கொடுத்தான் என்று கூறப்படுகின்றது.

மேலும் உலகநாயகி தனது சகோதரன் உலகநாதன் மூலமாக 106 குகக் குடும்பங்களையும் 30 சிறைக் குடும்பங்களையும் குடியமர்த்தினாள். அத்துடன் மண்முனையில் சிவலிங்கதாபனம் செய்து ஆலயமொன்றினை அமைத்து வழிபாடு செய்தாள் என்ற செய்தியும் அறியக் கிடக்கின்றது. இக் காலத்தில் திடகன் என்னும் வேடுவர் தலைவன் காடு வெட்டும்போது கொக்குநெட்டி மரத்தையும் வெட்டினான். அப்போ அம் மரத்தினின்று உதிரம் பெருகவே வெட்டுவாயிலே துணியை வைத்து, இரத்தப் பெருக்கைத் தடுத்து, அவ்வற்புதத்தை உலகநாயகியிடம் தெரிவித்தான். உலகநாயகி அங்கு சென்று பார்க்கும்பொழுது சிவலிங்கம் ஒன்று காணப்பட்டதாகவும் அங்கு கோயிலொன்று அமைத்து, அவ்விடத்தை வெளியாக்கிக் குடிகளையும் அமர்த்தினாள் என்ற செய்தியும் கூறப்படுகின்றது. கோயில் கைங்கரியங்களுக்காகப் பட்டர்கள் மூவரையும், ஆரம் கட்டும் குடிகள் பதின்மரையும் வட தேசத்திலிருந்து குடியேற்றினாள். பூசகர்களாக நியமனம் பெற்ற பட்டர்களின் சொற்படியே ஆரங்க கட்டுவோர் செயலாற்ற வேண்டும் என்றும் கட்டளையிட்டாள். உலகநாயகி குணசிங்கனது சகோதரனான கிரசாசன் என்பவனை மணந்து இரு பிள்ளைகளைப் பெற்றாள். அவர்களின் சந்ததியினரே உலகிப்போடி என அழைக்கப்படுகின்றனர். மண்முனைப்பற்று என்பது ஒரு தனி நிர்வாகப் பிரிவாக அமைந்தமை பல சான்றுகளால் அறியக் கூடியதாக உள்ளது. அங்கு முக்குவர், வேளாளர், செட்டிகள் ஆகியோர் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்துள்ளனர். உலகநாயகி பற்றிய ஐதீகம் மண்முனைப் பற்றின் தனித்துவத்தையும் சமூகப் பிரிவுகளின் தோற்றத்தையும் விளக்கும் முகமாக எழுந்ததாகவும் கொள்ள இடமுண்டு. உலகநாயகி பற்றிய ஐதீகத்தில் மேகவண்ணன் (302-332) பற்றிய மகாவம்சக் குறிப்புகளும் சேர்ந்துள்ளன. ஆகவே மேகவண்ணன் காலத்தில் கொக்கட்டிச்சோலையில் சிவன் ஆலயமொன்றமைந்திருத்தல் வேண்டும் எனக் கொள்ள இடமுண்டு. உலகிப்போடி குடியினர் மண்முனைப் பற்றில் அதிகாரம் செலுத்திய காலத்தில் அவர்கள் ஆலயத்திற்குச் சில மானியங்களைக் கொடுத்தும் சேவைகள் புரிந்தும் கோயிலை அபிவிருத்தி செய்திருக்க வேண்டும் என்று கருதுவது பொருத்தமானது.

தான்தோன்றீஸ்வரம் கோயிலுடன் குளக்கோட்ட மன்னனும் தொடர்புபடுத்தப்படுகின்றான். களு தேவாலயக் கல்வெட்டு, திருக்கோயிற் திருப்படைப் பத்ததி ஆகியவற்றில் கூறப்படும் செய்திகள் குளக்கோட்டனின் கோயிற் திருப்பணிகளைக் கூறுகின்றன. இச் செய்திகள் எந்த அளவிற்கு ஆதார பூர்வமானவை என்பது தெளிவில்லை. ஆயினும் சோழரின் ஆட்சி இலங்கையில் நடைபெற்ற காலத்தில் குளக்கோட்டன் சோழனொருவனாக இருந்திருப்பின் கோயில்களிலே திருப்பணி செய்திருத்தல் கூடும்.

தான்தோன்றீஸ்வரத்தோடு தொடர்புடைய மற்றொரு மன்னன் மாகோன். இவன் கலிங்கதேசத்தைச் சார்ந்தவன். இவனுடைய ஆட்சிக் காலத்தில் மட்டக்களப்பில் வீரசைவர்களான சங்கமரின் செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்டது. பழைய சிவாலயமான தான்தோன்றீஸ்வரம் அவர்களின் வசமாக இருந்தது என்றும் அறியக் கூடியதாக உள்ளது. அவனது ஆட்சிக்காலத்தில் சமூக அமைப்பிலும் சமயாசாரங்களிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மன்னனால் வழங்கப்பட்ட சாசனங்களோ, முத்திரைகளோ எவையும் இதுவரை கிடைக்கவில்லை.

## கோயில் அமைப்பு

தான்தோன்றீஸ்வரர் ஆலயம் காலத்துக்குக் காலம் புனர் நிர்மாணம் பெற்று வந்துள்ளது. இதனால் அதன் பழைய தோற்றம் பற்றி எதுவும் அறிய முடியாதுள்ளது. அத்துடன் இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிட அழிபாடுகளோ அதுபற்றிய குறிப்புகளோ கிடைக்கப் பெறவில்லை.

இக்கோயில் 1946ஆம் ஆண்டு புனர் நிர்மாணிக்கப்பட்டபோது கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், அலங்கார மண்டபங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டது. பரிவாரத் தெய்வங்களான பிள்ளையார், முருகன், வள்ளி, தெய்வானை, விஷ்ணு, நாகதம்பிரான், நவக்கிரகங்கள் ஆகியோருக்கு ஆலயங்கள் புதிதாக அமைக்கப்பட்டதோடு கர்ப்பக்கிருகத்தின் மேல் விமானமும் ராஜகோபுரமும், மகா மண்டபம், சபா மண்டபம் ஆகியனவும் நிர்மாணிக்கப்பட்டன. 1946 ஆம் ஆண்டு இக் கோயில் புனர் நிர்மாணம் பெற்றபோதும் அது பழைமை மிக்க கட்டிடமாகவே காட்சியளிக்கின்றது. கட்டிட அமைப்பில் திராவிட பாணியையும் மலையாளக் கலை அம்சங்களையும் பொருந்திய ஓர் அமைப்பாக இது விளங்குகின்றது.

## கோயில் நிர்வாகம்

ஆலய நிர்வாகப் பதவிகள் தாய்வழிப் பரம்பரையாகவே நிர்வகிக்கப்பட்டது. தேசத்து வன்னிமையின் தலைமையிலேயே நிர்வாகம் நடத்தப்பட்டது. தான்தோன்றீஸ்வரம் பற்றிய கல்வெட்டுப் பாடல்களிற் கோயிலுடன் தொடர்பு கொண்டிருந்த குகன் இராச வன்னிமை, பூபால கோத்திர வன்னிமை என்னுமிரு வன்னிமை வம்சங்களைச் சேர்ந்தவர்களின் பெயர்கள் காணப்படுகின்றன. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் வன்னியர்கள் தங்கள் தேச நிர்வாகப்பொறுப்புகளையும் அதிகாரங்களையும் இழந்தபோதும் கோயில்கள் தொடர்பான அவர்களின் மரபுவழி உரிமைகள் பேணப்பட்டது. ஆயினும் பின்னர் பொதுமக்களின் செல்வாக்கு கோயில் நிர்வாகத்தில் அதிகம் ஏற்பட்டு வருகின்றது. ஆலயக் கூட்டங்களுக்கு தேசத்து வன்னிமைகள் தலைமை தாங்குவது வழக்கம்.

மட்டக்களப்பில் உள்ள ஏனைய கோயில்களைப் போலவே தான்தோன்றீஸ்வரர் கோயிற் கருமங்களை நடத்தும் பொறுப்பு வண்ணக்கருக்கு உரியது. வண்ணக்கர் என்னும் சொல் கோயிற் கருமங்களைச் செம்மையாக, ஒழுங்காக நடத்துவோரைக் குறிப்பதாகும். இந்நாட்களில் நிர்வாக சபை என்ற அமைப்பொன்றும் செயற்பட்டு வருகின்றது. திருப்படைப் பத்ததிப் பாடல்களில் ஆலயத்தொழும்புகள் வகுப்பட்ட ஏற்பாடுகள் பற்றிய செய்திகள் காணப்படுகின்றது. கோயிலில் தொண்டுகள் செய்வோர் ஊழியக்காரர் என்று குறிப்பிடப்பட்டனர். வெவ்வேறு குடிகளைச் சார்ந்தவர்கள் வெவ்வேறு ஊழியங்களைச் செய்தார்கள். அதற்கென அவர்கள் நிலங்களைப் பெற்றிருந்தனர்.

## பூசைகளும் திருவிழாக்களும்

தினமும் மூன்று காலப் பூசை இங்கு இடம்பெறுகின்றது. ஒவ்வொரு மாதமும் வரும் சிறப்பான நாட்களில் விசேட பூஜைகள் இடம் பெறும். தைப்பொங்கல், தைப் பூசம், பங்குனி உத்தரம், வருடப் பிறப்பு, சித்திரை மாதத்து சித்திரை, திருக்கார்த்திகை, மார்கழித் திருவாதிரை, சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி ஆகிய தினங்களில் விசேட பூசை ஆராதனைகள் நிகழ்கின்றன.

இக் கோயிலில் நடைபெறும் ஆண்டுத் திருவிழாவை தேரோட்டம் என்பர். தேரோட்டத்திற்கு மறுநாள் சூகர வேட்டையும் குடுக்கை கூறுஞ் சடங்கும் இடம்பெறும். வேட்டைத் திருவிழாவின் பின் தீர்த்தோற்சவம் இடம்பெறும். இங்கு கடலோ, ஆறோ, குளமோ இல்லாதபடியால் தீர்த்தோற்சவம் சிறப்புப் பெறுவதில்லை.

திருவிழாக் கொண்டாட்டங்களில் தேரோட்டமே சிறப்பானது. மிகப்பழமையும் அற்புத வேலைப்பாடுகள் நிரம்பப் பெற்றதுமான இக் கோயில் தேர்களை 4060 இல் மட்டக்களப்புக்கு அதிபனாக விளங்கிய தருமசிங்கன் சோழநாட்டிலிருந்து சிற்பிகளை வரவழைத்துச் செய்வித்தான் என்பது ஐதீகம். அவ்வாறு செய்யப்பட்ட தேர்களில் இரண்டு மட்டுமே தற்போதுள்ளன. ஒன்று சிவன்தேர். மற்றையது பிள்ளையார் தேர். தேரோட்டத்தில் உமாமகேஸ்வரர் கோலத்தில் சிவபெருமான் எழுந்தருளுவார். பிள்ளையாரும் முருகனும் மற்றைய தேரில் எழுந்தருளி வலம் வருவர்.

கொக்கட்டிச் சோலையில் பிராமணர்கள் பூசை செய்வதில்லை. இலிங்கதாரிகளான சங்கமரே பூசை செய்வர். இத் தலத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பில் உள்ள அனேக சைவக் கோயில்களிற் சங்கமரே (வீர சைவத் தொடர்புடையவர்கள்) பூசை செய்கின்றனர்.

## திருப்படைப் பத்ததி

கோணேசர் கோயிலை அடிப்படையாகக் கொண்டு ஒரு இலக்கிய மரபு உருவானது போன்று தான்தோன்றீஸ்வரத்தை ஆதாரமாகக் கொண்டு பல பாடற் தொகுதிகள் உருவாகியுள்ளன. நெடுங்காலமாக ஏட்டுவடிவில் நிலைபெற்று வந்த இப் பாடல்கள் கல்வெட்டு வகையினைச் சார்ந்தவை. குளிக்கல் கல்வெட்டு,பெரிய கல்வெட்டு, பங்கு கூறுங் கல்வெட்டு, ஆசாரிகள் கல்வெட்டு, நாதன் கல்வெட்டு, திருப்படைக் களஞ்சியம் என்பவை அவற்றுட் பிரதானமானவை. இவை மட்டக்களப்பு மான்மியம் என்னும் பெயரால் வெளிவந்த நூலிலே சேர்க்கப்பட்டுள்ளன.

இப் பத்ததியில் ஆதிகாலம் முதல் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலம் வரை ஏற்பட்ட வளர்ச்சிகள் பற்றிய வரலாறுகளும், ஐதீகங்களும், புனைகதைகளும் கலந்துள்ளன. அரசர், பிரதேசப் பிரதானிகளான வன்னியர், சமுதாயப் பிரிவுகள், சமுதாய வழமைகள், குடிகள் ஆகிய விவரங்கள் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தையும் அதன் சேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு இவ் விவரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டிசுட்டான்
# தான்தோன்றீஸ்வரர் கோயில்

**– திருமதி நித்தியவதி நித்தியானந்தன் –**

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம், முல்லைத்தீவு பிரதான வீதியில் அமைந்துள்ளது. இவ்வாலயம் தோன்றிய காலம் பற்றித திட்டவட்டமாக அறிவதற்கு அகழ்வுச் சான்றுகளோ, சாசனங்களோ கிடைத்தில. ஆயினும் கர்ணபரம்பரைக் கதைகளையும், வரலாற்றாதாரங்களையும் நோக்கும்போது இலங்கையில் சோழர் ஆட்சிக்காலம் நிலவிய 12ஆம் 13 ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியிருக்கலாம் எனக் கருத இடமுண்டு.

### ஆலயத் தோற்றம் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள்

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன் சித்தர்கள் வன்னிப் பிரதேசத்திற்கு வந்து ஒட்டுசுட்டான் என்னுமிடத்திற் பிரிந்து சென்றார்கள். அவர்களில் ஒருவர் ஒட்டுசுட்டானுக்குத் தென்மேற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள வாலெட்டி என்னுமிடத்திலே தியானத்தில் இருந்து சமாதியடைந்தார் என்றும் மற்றையவர் ஒட்டுசுட்டானுக்கு தெற்கே இரண்டு மைல் தொலைவில் உள்ள காதலியார் சம்மாங்குளத்தில் சமாதியடைந்தார் என்றும் மூன்றாவது சித்தர் ஒட்டுசுட்டானிலே ஒரு கொன்றை மரத்தடியில் நிஷ்டையில் இருந்து சமாதியடைந்தார் என்றும் அவர் பூஜித்த சிவலிங்கமும் இவருடனே சமாதியடைந்திருக்க வேண்டும். பிற்காலத்தில் இவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்று தோன்றியது என்னும் ஐதிகம் நிலவுகின்றது.

யாழ்ப்பாணம் இடைக்காட்டைச் சேர்ந்த வீரபுத்திரர் என்பாரும் அவரது இரண்டு புதல்வர்களும் வன்னிக்குச் சென்று குடியேறினர். அவர்களும் அவரது பரம்பரையினரும் வாழ்ந்த இடம் தற்போதும் ஒட்டுசுட்டானில் இடைக்காடு என அழைக்கப்படுகின்றது. காடுவெட்டிக் குரக்கன் பயிரிட்ட வீரபுத்திரர் குரக்கனை வெட்டி எடுத்தபின் ஒட்டுகளை தீயிட்டு எரித்தார். அவ்வாறு எரித்தபோது ஒரு கொன்றை மரத்தடியில் ஒட்டுக்கள் எரியாது இருப்பதைக் கண்டு அவற்றை அகற்றுவதற்காக மண்வெட்டி கொண்டு வெட்டினார். அப்போ அவ்விடத்தில் இருந்து இரத்தம் கசிந்ததாகவும், இச் செய்தியைக் கேள்வியுற்ற வன்னியன் அவ்விடத்தைப் பார்வையிட்டு கோயிலமைத்து வழிபடுமாறு கூறினான் என்றும் ஆரம்பத்தில் கொன்றலடிப் பிள்ளையார் என்ற பெயரில் வழிபாடுகள் நடைபெற்றுப் பின் சிவலிங்கம் சுயமாகத் தோன்றியதைக் கண்ட மக்கள் அத் தான்தோன்றீஸ்வரருக்கு வேகாவனேஸ்வரர் என்றும் வேகாவனப் பெருமான் என்றும் பெயர்கள் இட்டார்கள் என்றொரு ஐதீகமும் கூறப்படுகின்றது.

### பெருமானின் அற்புதச் செயல்கள்

கோயில் திருப்பணிக்காக கொண்டுவரப்பட்ட சீமெந்துப் பீப்பாக்கள் ஒரு அரசமரத்தடியில் இறக்கி வைக்கப்பட்டிருந்தது. அன்றிரவு பெய்த மழையில் அப் பீப்பாக்கள் நனையா வண்ணம் பாதுகாப்பாக நகர்த்தப்பட்டிருந்தது. இச் செயலைச் செய்தவர் யார் எனத் தெரியாது மக்கள் திகைத்து நின்றபோது கோயில் அர்ச்சகர் தான் இரவு கண்ட கனவில் ஈசன் சீமெந்துப் பீப்பாக்களை உருட்டியதால் உடல் முழுவதும் வலிப்பதாகவும் வெந்நீர் அபிஷேகம் செய்யுமபடி கேட்டதாகவும் இறைவனுக்குத் தாம் அவ்வாறே அபிஷேகம் செய்ததாகவும் கூறினார்.

போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கையில் நடைபெற்ற போது அவர்களின் அராஜகத்தினால் தப்பிப் பிழைத்த கோயில்கள் மிகச் சிலவே. அவற்றுள் ஒட்டுசுட்டான் கோயிலும் ஒன்றாகும். ஒரு முறை தன் பரிவாரங்களுடன் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் வந்த போர்த்துக்கேய அதிகாரி ஒருவர் நந்தியம்பெருமான் முன்வைக்கப்பட்டிருந்த அறுகம்புல்லைப் பார்த்து இந்தக் கல்மாடு புல் தின்னுமா என ஏளனமாகக் கேட்டதுடன் இக் கல்மாடு புல்லுத்தின்னாவிட்டால் உங்கள் சமயம் பொய்ச்சமயம் எனக் கூறி கோயிலைத் தரைமட்டமாக்குவதுடன் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றையும் கட்டி சகலரையும் அதை வழிபடும்படி செய்வேன் என அகங்காரமாகக் கூறிவிட்டுச் சென்றான். மறுநாட் காலை கோவிலுக்கு அவ் அதிகாரி வந்தபோது கோயிற் பூசகர் அறுகம்புல்லைப் பாலில் நனைத்து நந்தியின் வாயில் வைத்தார். உடனே நந்தி தன் நாக்கை நீட்டி வாய்க்குள் இழுத்துத் தின்றது. பின் எழுந்து நின்று சாணியும் போட்டது. இவ்வற்புதத்தைக் கண்டு மனம் பதைபதைப்புற்ற போர்த்துக்கேய அதிகாரி பூசகரிடம் மன்னிப்புக் கோரியதுடன் கோயில் திருப்பணிக்குப் பெரும் தொகைப் பொன்னும் பொருளும் கொடுத்தான் என்றும் கூறப்படுகின்றது.

### ஆலயத் திருப்பணி

மேலே கூறியது போன்று இக் கோயில் எக் காலத்தில் கட்டப்பட்டது என்பது திட்டவட்டமாக கூறமுடியாது இருக்கின்றது. ஆயினும் இக் கோயில் இடைக் காலத்துக்குரிய கோயிலாக இருக்க வேண்டும் என்றே அறியக் கிடக்கின்றது. இடைக்காலம் என்பது சோழர் ஆட்சிக் காலமாகும். இவ் வாலயத்தைக் குளக்கோட்டன் கட்டியதாகவும் ஒரு கதையுண்டு. ஒட்டுசுட்டானுக்கு அண்மையில் உள்ள முத்தரையன் கட்டுக் குளத்தையும் குளக்கோட்டன் கட்டியதாகக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. குளக்கோட்டன் கதையில் இருந்து நாம் அறிந்து கொள்ளக் கூடியது சோழர் காலத்தில் தான்தோன்றீஸ்வரம் புனருத்தாரணம் செய்யப்பட்டது என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிற் திருப்பணி சம்பந்தமாக மற்றொரு கதையும் கூறப்படுகின்றது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின் வன்னி மீதும் தமது ஆணையைச் செலுத்தினர். வன்னியரும் திறை தருவதாக ஒப்புக்கொண்டு ஆண்டுதோறும் யானைகள் அனுப்பும் வழக்கம் இருந்தது. காட்டில் யானை பிடிக்கும் பணிக்கருக்கு குறிப்பிட்ட தினத்திற்குள் யானை பிடித்துத் தரவேண்டும் என வன்னியர் கட்டளையிட்டனர். எங்கு தேடியும் யானைகள் கிடைக்கவில்லை. யானைப் பணிக்கன் தான்தோன்றீஸ்வரரிடம் யானைகள் கிடைக்கும் பட்சத்தில் கோயிலைப் பெருப்பித்துக் கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்தான். இறைவன் பணிக்கனின் கனவில் தோன்றிப் பெரிய இத்திமடுவிலுள்ள கிளிமடு என்னுமிடத்தில் பௌர்ணமி தினத்திலே ஏராளமான யானைகளைக் காண்பாய் எனக் கூறினார். அதன்படி தேவையான யானைகள் கிடைத்தன. பணிக்கன் கோயிலைப் பெருப்பித்துக் கட்டுவித்தான்.

## கோயிற் காணிகள்

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான காணிகள் ஏராளம் இருந்தது. ஆலயத்துக்கென கரைத்துறைப்பற்று, மேற்பற்றுப் பகுதிகளில் நெல்வயல்களும், தென்னந்தோட்டங்களும் இருக்கின்றன. இவை வன்னி மன்னராலும் பொதுமக்களாலும் ஆலய பரிபாலனத்துக்கென தானமாக வழங்கப்பட்டவையாகும். ஆனால் தற்போது பெரும்பாலான காணிகளைப் பொதுமக்கள் தமது உடமையாக்கியுள்ளனர்.

## ஆவுடையார் கவசம்

சுயம்புலிங்கமாகக் காட்சியளிக்கும் மூலஸ்தான மூர்த்திக்கு ஆவுடையார் பகுதி இல்லை. கோயில் தர்மகர்த்தாக்கள் இந்தியச் சிற்பிகளை அழைத்து ஆவுடையார் பகுதியை பொழிவித்து இணைக்க முற்பட்டபோது இறைவன் விருப்பம் மாறாக இருந்தது. தனக்கு ஆவுடையார் தேவையில்லை எனக் கூறிவிட்டார். லிங்கத்தை மூடுவதற்கு ஒரு பொற்கவசம் ஒன்று செய்யப்பட்டது. ஆனால் அதையும் ஈஸ்வரர் ஏற்றுக் கொள்ளவில்லை. அது இப்போ பெட்டியில் வைத்துப் பூட்டப்பட்டு உள்ளது.

## பூசையும் திருவிழாவும்

தான்தோன்றீஸ்வரருக்கு மூன்று காலப் பூசையும் விசேட தினங்களில் அபிடேக ஆராதனைகளும் நிகழ்கின்றது. ஆனிமாத அமாவாசையில் கொடியேற்றம் பௌர்ணமியில் தீர்த்த வைபவம். பதின்மூன்றாம் நாள் நடைபெறும் வேட்டைத் திருவிழா அன்று ஐந்நூறுக்கு மேற்பட்டோர் உடம்பெங்கும் கரிபூசி வாகந் தளிர்களால் உடையணிந்து காணப்படுவர். ஒவ்வொருவரும் வாகங்குழை நுனியில் கட்டப்பட்ட தடி ஒன்றையும் வைத்திருப்பர். வேடுவத் தலைவன் சுரக் குடுவையினுள் தேன் வைத்திருப்பார். இத் தலைமைப் பதவி பரம்பரை பரம்பரையானது. வேட்டுவத் தலைவனின் ஆணைப்படியே ஏனைய வேடுவர் நடக்க வேண்டும். இறைவன் வேட்டை முடித்து வந்ததும் அம்மனுக்கும், இறைவனுக்கும் வாக்குவாதம் இடம்பெறும். இப் பிணக்கினை கோயில் மணியகாரரே தீர்த்து வைப்பார். இறைவன் ஆலயத்தினுட் சென்றதும் வேடுவர்கள் அனைவரும் விழுந்து வணங்கி கோயிலை வலம் வந்து ஒட்டுசுட்டான் குளத்திற்குச் சென்று தம் வேடுவ உடைகளை நீக்கிப் பின் நீராடுவர். தீராத நோயினால் பீடிக்கப்பட்டோர் தாம் வேட்டைத் திருவிழாவின்போது வேடனாக வருவதாக நேர்த்திக் கடன் வைப்பார்கள். வேடுவராக வருவோர் விரதமிருந்தே இந் நேர்த்திக் கடனைச் செய்வர். பதினைந்தாம் நாள் நடைபெறும் தீர்த்தத் திருவிழாவிலும் யாழ்குடா நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மக்கள் பங்கு கொள்வர்.

## இலக்கியம்

தான்தோன்றீஸ்வரர் மீது கொக்குவில் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் பாடிய ஒட்டுசுட்டான் சிவபெருமான் ஆசிரிய விருத்தமும் ஓர் ஊஞ்சற் பதிகமும் வேட்டைத் திருவிழாவின் போது படிக்கப்படும் வசன கவிதையும் உள. இவ்வூஞ்சற் பதிகத்தைத் தவிர பெயர் தெரியாத வேறொருவர் பாடிய ஊஞ்சற் பதிகத்தின் மூன்று பாடல்களும் கிடைத்துள்ளன. ஊஞ்சற் பதிகத்தின் காப்புச் செய்யுளில் ஒட்டுசுட்டான் தேவர் பதி என அழைக்கப்படுகின்றது.

தான்தோன்றீஸ்வரர் வேட்டைக்குச் சென்று திரும்பியபோது ஊடல் கொண்ட பூலோக நாயகியார் கதவை அடைக்க இருவருக்குமிடையில் நடக்கும் தர்க்கம் போல் அமைந்துள்ள ஒரு வசன கவிதை வேட்டைத் திருவிழாவின்போது படிக்கப்படும். பாடல் அமைந்திருக்கும் விதம் ஈஸ்வரன் நேரடியாகத் தேவிக்குக் கூறுவதுபோல் அமையாது வேறு ஒருவருக்குக் கூறுவது போன்றுள்ளது. அவ்வாறே உமையின் பதிலும் வேறொருவரை நோக்கிக் கூறுவதுபோல் அமைந்துள்ளது. கோயில் மணியகாரரே இருவருக்குமிடையில் உள்ள ஊடலைத் தீர்த்து வைப்பார். அவரே இவ் வசனநடைக் கவிதையையும் படிப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணை வைத்தீசுவரன் கோயில்
# யாழ்ப்பாணம்

**– வித்துவான் வசந்தா வைத்தியநாதன் –**



ஈழத்திருநாட்டின் வதனமென விளங்கும் யாழ்ப்பாண நன்நகரின் சிறு நுதலென விளங்குவது வண்ணார்பண்ணை. அந்நுதலில் நறுந்திலகமென மிளிர்வது அங்கேயிருக்கும் வைத்தீசுவரன் கோயில். அத்திலகத்தின் இனிய வாசனை அக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் தையல் நாயகியோடு உடனுறையும் வைத்தீசுவரப் பெருமானின் இனிய பெருங்கருணை. இப் பெருங்கருணையின் விளைவாகத் தமிழும் சைவமும் தழைத்தினிதோங்க நிலைக்களனாக விளங்குவன நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சைவபரிபாலனசபை, சைவப்பிரகாச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரசாலை, இந்துசாதன அலுவலகம், வைத்தீசுவர வித்தியாலயம், சாந்தையர்மடப் பிள்ளையார், பன்றிக் கோட்டுப்பிள்ளையார், நீராவிப்பிள்ளையார், பெரியகடைப் பிள்ளையார் கோயில், கதிரேசன் கோயில், காளிகோயில், கடையிற் சுவாமி சமாதி கோயில், நடேசர் கோயில், சிவயோக சுவாமி சிவதொண்டன் நிலையம் முதலிய பலவாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது முதற்பிரசங்கத்தைச்செய்ததும்,தமது முதல் வித்தியாசாலையைத் தாபித்ததும் கடையிற்சுவாமி பல காலம் நடமாடிப் பக்தர்களைச் சந்தித்ததும், சிவயோக சுவாமியின் திருவடி தரிசனம் பெற்ற பல அடியார்கள் சேர்ந்து தியானம் செய்வதும் இவ் வண்ணை நகரிலே ஆகும். இவற்றின் நடுவே தாரகை நடுவண் தண்மதி போல் விளங்குவதுதான் 'செட்டியார் சிவன் கோயில்' என்றும் 'பட்டணத்துச் சிவன்' என்றும் வழங்கப்படும் தையல்நாயகி உடனுறையும் வைத்தீசுவர சுவாமியின் பெருங் கோயிலாகும். இது ஈழநாட்டிலேயுள்ள பிற்காலச் சிவாலயங்களுள்ளே சிறந்த ஒன்றாகும்.

**கோயில் வரலாறு**

ஒல்லாந்தர்காலத்திலே தென்னிந்தியாவில்பாடல்பெற்ற தலங்களுள் சிறந்ததாக விளங்கும் திருவாரூரிலிருந்து கோபாலச் செட்டியார் என்ற வணிகர்குல திலகம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். கல்வி, அறிவு, ஒழுக்கங்களிலே சிறந்து விளங்கிய அவரை அக்காலத்தில் ஒல்லாந்த அரசிடத்தில் இரு மொழி வல்லுநராகக் (மொழிபெயர்ப்பாளராக) கடமை செய்து வந்த கொச்சிக்கணேசையர் என்னும் சீமான் தம்மோடு வேலைக்கு அமர்த்திக் கொண்டார். சில காலஞ் செல்லக் கோபாலச் செட்டியார் அவ்வேலையினின்றும் நீங்கி வியாபாரஞ் செய்யத் தொடங்கினார். அக்காலத்தில் ஒல்லாந்த தேசாதிபதியின் வீட்டுக்குத் தேவைப்படும் அரிசி, பருப்பு, பலசரக்கு முதலிய பொருள்களை வழங்கும் உரிமையையும் பெற்றிருந்தார். செட்டியார் வணிகருள்ளே சிறந்தவராய் இருந்தமையால் தேசாதிபதியின் துணைவியார் விரும்பியபடி நல்ல சரக்குகளை நிதான விலையில் கண்ணியமாக வழங்கி வந்தாராதலின் அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

இங்ஙனம் கோபாலச் செட்டியார் செல்வம் செல்வாக்கோடு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருங்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து கூழங்கைத் தம்பிரான் என்றொரு பெரும் புலவர் வந்து அவரில்லத்திற் தங்கியிருந்தார். அவர் தமிழ் இலக்கண இலக்கியங்களும், சித்தாந்த சாத்திரங்களும், தேவாரமாதியாம் அருட்பாடல்களும் கற்றுத் துறைபோனவர். அவரைக் குலகுருவாகக் கொண்டு இல்லறம் வழுவாது வாழுங்காலத்தில் செட்டியாருக்கு நலமெல்லாம் ஒருங்கே பொருந்திய ஓராண் மகவு நல்லோரையிற் பிறந்தது. குழந்தையைப் பார்த்துச் சாதகத்தைக் கணித்து மகிழ்ந்த தம்பிரான் சுவாமிகள் "இவன் பெரிய காரியங்களைச் செய்யப் பிறந்திருக்கிறான். இவனுக்கு வைத்திலிங்கன் என்று பெயரிடுக" என்றார். அங்ஙனமே பெற்றோரும் மகிழ்ந்து பெயரிட்டனர்.

சிறுவனாகிய வைத்திலிங்கன் குமரப் பருவமடையத் தந்தையார் அவனைத் தம்முடைய கடையில் தமக்குத் துணையாக நியமித்தார். தந்தைக்கு வாய்த்த தனயனாகத் தம் குலத்தொழிலைச் செவ்வனே செய்துவரும் நாளிலே ஒரு நாள் தேசாதிபதியின் மனைவி செட்டியார் கடைக்குச் சென்றார். அப்போது வைத்திலிங்கன் அவ்வம்மையாருக்குக் கையுறையாக ஒரு சிறந்த மாதுளம் பழத்தைக் கொடுத்து வரவேற்றான். ஆச்சரியமும் மகிழ்ச்சியுமடைந்த அம்மையார், சிறுவன் செட்டியாரின் அன்புக்கனி என்றறிந்ததும் அவனைத் தம்மோடு அழைத்துச் சென்றார். அவர்களுக்குக் குழந்தைச் செல்வமில்லாதபடியால் கோபாலச் செட்டியாரின் இசைவினைப் பெற்றுப் பையனை அழைத்துச் சென்று தம் அரண்மனையிலேயே தம்பிள்ளைபோல் வளர்த்து வரலாயினர்.

இவ்வாறு நிகழும் வேளையில் வழக்கம் போல, மன்னார்க்கடலில் முத்துக்குளிக்கும் உரிமைக் குத்தகையை ஏலத்தில் விற்கும் காலம் வந்தது. பரபரப்பையூட்டும் இவ்விடயத்தைக் கவனித்த வைத்திலிங்கன் தான் அக்குத்தகையைப் பெறவேண்டுமென்று ஆசைப்பட்டுத் தன் வளர்ப்புத் தாயாகிய அம்மையாரிடம் மெதுவாகக் கூறினான். அம்மையாரும் செட்டிக் குட்டியின் மட்டற்ற ஆசையைக் கண்டு மகிழ்ந்து அதனைத் தேசாதிபதிக்கு எடுத்துரைத்தார். தந்தையன்பே உருவான தேசாதிபதியும் வளரும் பிள்ளையின் வளமான ஆற்றல்களை வளர்க்க விரும்பித் தாமே பிணையாக நின்று குத்தகைச் சீட்டை வைத்திலிங்கனுக்கு வழங்கினார். அவரும் பெரும் பொருள் சம்பாதித்தார்.

வைத்திலிங்கச் செட்டியாரான பெரிய தனவந்தருக்கு இளமை தொட்டே நல்லாசிரியனாய் அமைந்து அவரை நன்னெறிப்படுத்திய கூழங்கைத் தம்பிரான் செட்டியார் திரட்டி வைத்திருந்த பெருஞ் செல்வத்தைச் சிவப்பணியில் செலவிடக் கருதினார். அக்காலத்தில் தெய்வத் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலுள்ளது போல ஈழத்தமிழ் நாட்டில் கோயில் இல்லாத பெருங்குறையைச் செட்டியாருக்கு சுட்டிக்காட்டி, எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் சிவபெருமான் சாந்நித்தியமாய் எழுந்தருளித் தம்மை மெய்யன்போடு வணங்கும் அடியார்களுக்குத் திருவருள் பாலிக்க ஒரு கோயில் அமைக்க வேண்டும் என்ற கருத்தினை ஊட்டினார். திருவருள் கூட்டி வைக்கச் செட்டியாரும் குருவருள் துணை கொண்டு அவ்வாறே செய்வதென உளங்கொண்டார்.

தேசாதிபதியின் உத்தியோக காலம் முடிவடையும் எல்லையும் அண்மித்துக் கொண்டிருந்தது. அவரும் மனைவியாரும் தந் தாய்நாடு திரும்பும் எண்ணங் கொண்டிருந்தபோது, இலங்கையிலே ஒல்லாந்தராட்சியும் ஊசலாடத்தொடங்கும் அறிகுறிகள் தோன்றின. அந்நிலையில் செட்டியார் தம்மை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தாய்தந்தையரை அணுகி, தம் சமயத்தவர் சென்று கூடி வணங்குவதற்கு ஒரு சிவன் கோயில் எடுக்க இருக்கும் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். தனயனின் விருப்பம் எதுவாயினும் அது அவன் மனம் மகிழ நிறைவேற வேண்டுமென்ற ஆசை கொண்ட அன்பின் அன்னையும் பிதாவும், தம் இசைவையும் ஒரு நிலத்தையும் மகிழ்ச்சியோடு வழங்கினர்.

1787 ஆம் ஆண்டிலே பெற்ற நிலத்திலே செட்டியாரின் விருப்பப்படி கூழங்கைத் தம்பிரான் நல்லோரையில் அடிக்கல் நாட்டினார். செட்டியாரின் பிறப்பிடமாகிய திருவாரூருக்கு அண்மையிலே புள்ளிருக்கு வேளூர் என்னும் பாடல் பெற்ற தலம் ஒன்றுள்ளது. அது வைத்தீஸ்வரன் கோயில் என முற்காலத்தில் வழங்கப்படுகின்றது. தம் குல முன்னோர் அதன்பால் பெரிதும் பத்தி கொண்டிருந்தனர் என்பதனை உணர்ந்த செட்டியார் தாம் ஈழத்தில் எடுக்கும் கோயில், புள்ளிருக்கு வேளூர்க் கோயிலைப் போல அதனினும் சிறிய அளவிலே அமைய வேண்டும் என்று விரும்பினார். அங்ஙனம் நிர்மாணிக்கப்பட்ட கோயில் (1790) சாதாரண ஆண்டு சித்திரைத் திங்கள் வளர் பிறைப் புனர் பூசத் திருநாளிலே திருப்பெரும் குடமுழுக்குப் பெற்றது.

## கோயிலமைப்பு

கூழங்கைத்தம்பிரான் முதலாய சான்றோர்கள் உடனிருந்து துணையாற்ற கட்டப்பட்டதாதலின் இக் கோயில் ஆகம முறைப்படி அமையும் பெருஞ் சிறப்பைக் கொண்டிருக்கின்றது. எல்லாம் வல்லவரும் ஆன்ம கோடிகளின் இன்னல்களை எல்லாம் தீர்த்து வைக்கும் மகா வைத்தியநாதனுமாகிய வைத்தீசுவரப் பெருமானுக்கு கிழக்கு நோக்கிய கருவறையும் சிவசக்தியும் உலக மாதாவுமாகிய தையல்நாயகித் தாய்க்குத் தெற்கு நோக்கிய கருவறையும் அழகிய சிற்பங்கள் நிறைந்த விமானங்களோடு விளங்குகின்றன.

இறைவனின் கருவறையின் புறச்சுவர்களிலே உள்ள கோட்ட மாடங்களிலே தெற்கில் தென்முகக் கடவுளும் மேற்கில் இலிங்கோற்பவரும், வடக்கில் நான்முகக் கடவுளும் எழுந்தருளியுள்ளனர். கல்லாலின் புடை, வலக்கையில் சின் முத்திரையோடு சனகன் முதலாய நால்வர் புடை சூழ ஞான மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் தென் முகக் கடவுளுக்கு நான்கு தூண்கள் கொண்ட சிறு மண்டபமுண்டு. மேற்கிலுள்ள கோட்டமாடத்திலுள்ள இலிங்கோற்பவ மூர்த்தி சிற்ப நுட்பங்கள் பல செறிந்து விளங்குகின்றது. சிவராத்திரி தினத்திலே அதற்கு சந்தனாங்கி சார்த்தியிருக்கும் போது, மேலே பறந்து செல்லும் அன்னப்புள்ளையும் கீழே குடைந்து செல்லும் பன்றியையும் இரண்டினிடையே இருவராலுங் காணமுடியாது சோதிலிங்கமாக நிற்கும் சிவனையும் கண்குளிரக் கண்டு களிக்கலாம்.

இறைவன் இறைவியின் கருவறைகளோடு சேர்ந்துள்ள அர்த்த மண்டபங்களுக்கு முன் மகாமண்டபமும் அதனை அடுத்துக் கிழக்கே நிருத்த மண்டபமும் முன் மகா மண்டபமும் கொடி மரமண்டபமும் உள்ளன. கிழக்கு நோக்கிய சந்நிதியோடு அமைந்த இவ்வாலயம் மூன்று பிரகாரங்களைக் கொண்டிருக்கிறது. இரண்டாம் பிரகாரத்தின் வடகிழக்குக் கோடியிலமைந்துள்ள வசந்த மண்டபம் திருவிழாக் காலங்களில் இறைவன் இறைவியர் திருக்குமாரர்களோடும் சண்டேசுவரரோடும் எழுந்தருளித் தம்மடியார்களுக்குக் காட்சி கொடுக்குமிடமாய் அமைந்துள்ளது.

புள்ளிருக்கு வேளூரிற்போலவே இங்கும் அம்பாள் சந்நிதியில் இரண்டாம் பிரகாரத்தின் வெளியே சித்தாமிர்த புட்கரணி என்னும் புண்ணிய தீர்த்தம் உண்டு. இக்கலியுகத்திலே சித்தர்கள் இறைவர் திரு முடியில் தேவாமிர்தத்தால் திருமுழுக்குச் செய்த போது, அவ்வமிர்தம் இதிற் கலந்தமையால் இது இப்பெயர் பெற்றது. இதனையடுத்துப் பெரிய திருநந்தவனம் உளது. அது புட்பவிதியிற் கூறியபடி கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ ஆகிய நால்வகை நாண்மலர்களும் பச்சிலைகளும் பெறக்கூடியதாய் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குச் சந்நிதியிலே மூன்றாம் பிரகாரமாகிய தெருவீதியின் புறத்தே பதினாறு கால் மண்டபம் ஒன்று தமிழ் நாட்டுப் பாணியிலே கட்டப்பட்டுக் கோயிலுக்கும் நகரத்துக்கும் அழகு தந்து கொண்டிருக்கிறது. இம் மண்டபத்திலேயே பூங்காவனத் திருவிழாவில் அன்று பார்வதியம்மையார் பரமேசுவரனை நோக்கித் தவஞ்செய்ய எழுந்தருளுவார்.

இம்மண்டபத்திலிருந்து கிழக்கே சுமார் 150 யார் தூரத்திலே, இத் திருக்கோயிலை நிர்மாணஞ் செய்ய கலைநாடாகிய காவிரி நாட்டிலிருந்து போந்த கலை வல்லுனராகிய விசுவகன்மா குலத்தினர் திருக்கோயிலின் திருப்பணிகளைச் செய்யுங் காலத்தில் தாம் வழிபடுவதற்கு எனத் தங்குல தெய்வமாகிய மகாகாளிக்கு அமைத்த திருக்கோயில் உள்ளது. இவ்விடம் கன்னாதிட்டி என வழங்குகின்றது.

## சிறப்பொடு பூசனை

தினந்தோறும் திருவனந்தல், காலைச்சந்தி, உச்சிக்காலம், சாயுங்காலம், இரண்டாங்காலம், அர்த்த சாமம் எனக் காலப்பூசைகள் ஒழுங்காக பத்தி சிரத்தையோடு நடைபெற்று வருகின்றன. வெள்ளிக்கிழமைகளில் இராஜராஜேஸ்வரி அம்பாள் இரண்டாங்காலப்பூசையின் பின் சிறப்புப் பூசையினையேற்று அழகிய மஞ்சத்தில் அமர்ந்து உள்வீதி வலம் வரும்போது பக்தர்கள் சிவநாமம், தேவி ஸ்தோத்திரமோதி வணங்குவார்கள். பிரதோஷ தினங்களில் மாலை இடபதேவருக்கு விசேட அபிஷேகமாகி வெள்ளியிலான அங்கி சார்த்தப்பட்டு வழிபாடு நிகழும். பின் பிரதோஷ நாயகர் வெள்ளி இடப வாகனத்திலிருந்து திருவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பர். இக்கோயிலிலே ஒவ்வோர் ஆண்டும் நிகழும் பெருவிழாக்கள், பங்குனித் திங்களிலே உத்தரத் திருநாளிலே நடைபெறும் தீர்த்த விழாவோடு முடிவடையும் மகோற்சவமாகிய சிவன் திருவிழாவும், ஆடி மாதத்திலே பூர நட்சத்திரத்திலே நிகழும் தீர்த்த விழாவோடு முடிவடையும் அம்மன் திருவிழாவுமாகிய இரண்டுமாம்.

சிவன் திருவிழாவில் ஒன்பதாம் திருநாளிலன்று தமது வலப்பாகத்திலே கருணாகடாட்சியாகிய அம்பாளைக் கொண்ட கலியாணசுந்தரர் சமயகுரவர் நால்வர்க்குக் காட்சி கொடுக்கும் நிகழ்ச்சி பக்தர்களைப் பரவசப்படுத்தும் தகையது.

ஆடித்திங்களில் நிகழும் அம்மன் திருவிழாக் காலத்தைச் சிறப்பாக மங்கையர் தம்முடைய உபாசனா காலமாகக் கொண்டு அம்பிகையை நோக்கி தங்குறைகளை நீங்கக் கடுமையான நோன்புகளை மேற்கொள்வர். இத்திருவிழாவின் ஏழாந்திருநாளிலே அம்பிகை நாக வாகனத்தில் அமர்ந்து சிவனுக்குப் பூசை பண்ணும் காட்சி மிக அருமையானதாகும். தீர்த்தோற்சவத்துக்கு அடுத்த நாள் நிகழும் திருவூஞ்சல் திருவிழா தவறாது பார்த்து மகிழ வேண்டியது ஒன்றாகும். அப்போது பாடப்படும் தையல்நாயகி திருவூஞ்சல் பத்திச் சுவை மிக்கதாகும்.

இக்கோயிலிலே புரட்டாதி மாதத்தில் நிகழும் நவராத்திரியில் இராஜராஜேஸ்வரி அம்பாள் கொலு வீற்றிருந்து அருள்பாலிக்கும் செவ்வியைப்பார்த்துக் கொண்டு மணித்தியாலக் கணக்கில் இருக்கலாம்.

மார்கழி மாதத்திலே சாயுங்காலப் பூசையின் பின் மணிவாசகரை எழுந்தருளச் செய்து நடேசர் சந்நிதியில் திருவாதவூரர் புராணம் படித்துப் பயன்சொல்லுதலும் அதிகாலையிலே பக்தர் பலர் கூடித் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை மெய்யன்போடு பஜனை செய்வதும், திருவாதிரைத் திருநாளன்று அபிஷேக தரிசனத்தின் பின் சிவனுக்கும் உமையம்மைக்கும் இடையே ஊடல் நிகழ்ந்ததாக அதனைத் தீர்த்து வைக்க ஆலால சுந்தரர் தூது செல்வதாக நிகழும்போது 'திருவூடல்' பாடப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பு நிகழ்ச்சிகளாம்.

## சமயப்பணி

ஈழநாட்டிலே தமிழையும் சைவத்தையும் பாதுகாத்து வளர்த்து வந்த பெருமை இவ்வைத்தீசுவரர் கோயிலுக்கு உரியதாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது முதற் பிரசங்கத்தை இக்கோயிலின் வசந்த மண்டபத்திலேயே செய்தார். அதனைத் தொடர்ந்து பல பிரசாரக் கூட்டங்களையும் கண்டனச் சொற்பொழிவுகளையும் இங்கேயே நடத்தி வைத்தார். நாவலர் பெருமானின் மருகரும் மாணாக்கரும் யாழ்ப்பாண சைவ பரிபாலன சபையின் முதல் தலைவருமாகிய வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் தம்முடைய கம்பராமாயண, பெரியபுராண, கந்தபுராண விரிவுரைகளை நடத்திப் புகழடைந்ததும் இம் மண்டபத்திலேயே. இவ் விரிவுரைகளைக் கேட்பதற்குத் தமிழ் நாட்டிலிருந்தும் அறிஞர்கள் இங்கு வந்திருந்தார்கள் என்பர். திருஞானசம்பந்தரின் அடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவட்டில் நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஸ்ரீ சங்கர சுப்பிரமணிய சச்சிதானந்த ராஜயோகிகள் இங்கே தம்மரிய கானமழையைச் சொரிந்து தமிழையும் சைவத்தையும் வளர்த்தார். இவர்கள்தம் வழியிலே இக்காலத்திலும் பலர் இப்பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகின்றனர்.

### திருப்பணி

இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன் இக் கோயிற் புனருத்தாரண கும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இராஜ கோபுரத்தைப் பெரிதாகக் கருங்கற்களால் அமைக்க வேண்டும் என்று விருப்பங் கொண்ட அறங்காவலர் அத்துறையில் முயற்சி எடுத்து வருகின்றார். இவ்வாலயத்துக்குப் புதிதாக ஐந்து தேர்கள் நிர்மாணிக்கத் திருவருள் பாலித்து அதற்காக ஒரு திருச்சபையும் செயற்பட்டு வருகின்றது. அறுபத்து மூன்று சிவனடியார்களின் திருமேனிகள் கடவுண்மங்கலஞ் செய்யப்பட்டுள்ளன.

### நிர்வாகம்

இத்திருக்கோயிலை ஆதியிற்றொடக்கம் வைத்திலிங்கச் செட்டியாரின் மரபில் தோன்றியவர்களே அருளாட்சி செய்து வந்துள்ளனர். இந்நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து கந்தப்பச் செட்டியார், அவர் மகன் பொன்னுச்சாமிச் செட்டியார், அவர் தம்பி வைத்திலிங்கச் செட்டியார், அவர் மனைவி கண்ணம்மை ஆச்சி முதலாயினோர் கோயிலை முட்டின்றி நடாத்திவந்த பின் வைத்திலிங்கச் செட்டியார் மகன் கந்தப்பச் செட்டியார் இளம் வயதிலே நிர்வாகப் பொறுப்பை ஏற்றுப் புனருத்தாரண கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

### பிரபந்தங்கள்

வைத்தீசுவரப் பெருமான் மீது கூழங்கைத்தம்பிரான் பாடிய தனிக்கவியொன்றுண்டு. தையல்நாயகி கலி வெண்பாவும், முத்துக்குமாரசுவாமி திருவூஞ்சலும் யாழ் சைவ பரிபாலன சபை வெளியீடாக வந்துள்ளன. கொச்சிக் கணேசையர் தையல் நாயகி திருவூஞ்சலும், அராலி விசுவநாத சாத்திரியார் வண்ணைக் குறவஞ்சியும் பாடியுள்ளனர். வைத்தீசுவரசுவாமி கோயிலிலே மார்கழி மாதத் திருவாதிரையில் சந்நிதானத்தில் ஓதப் பெறும் 'திருவூடல்' 1972 ஆம் ஆண்டில் அச்சிடப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை சிவன் கோயில்


– திருமதி இந்திராதேவி சதானந்தன் –

யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் சைவப் பாரம்பரியத்துடன் விளங்கும் நிலப்பகுதியில் இரண்டு சிவன் கோயில்கள் மாத்திரமே உள்ளன. இவை இரண்டும் ஓரளவு கடற்கரையையண்டியே அமைந்துள்ளன. இதில் ஒன்று பருத்தித்துறை சிவன்கோயில்; அடுத்தது வல்வெட்டித்துறை சிவன் கோயில். இந்தக் கோயில் இருக்கும் இடத்தினை இராசிந்தான் கலட்டி என அழைப்பர்.

பருத்தித்துறை சிவன்கோயில்; அடுத்தது வல்வெட்டித்துறை சிவன் கோயில். இந்தக் கோயில் இருக்கும் இடத்தினை இராசிந்தான் கலட்டி என அழைப்பர்.

## கோயில் வரலாறு

யாழ்ப்பாணப் பகுதியில் அக்காலத்தில் வாழ்ந்த குறிப்பிடத்தக்க பிரமுகர்களில் வல்வை ஐயம்பிள்ளை வேலாயுதம் என்பவரும் ஒருவர். இவரது மகன் திருமேனியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது புதல்வரான பெரியதம்பியார் அல்லது பெரியவர் என அழைக்கப்படும் வெங்கடாசலம் பிள்ளை என்பவரே இக்கோயிலை ஸ்தாபித்தவர் ஆவர். கடலில் மூழ்கிய அத்திலாந்திக் கிங் என்னும் கப்பலை மூழ்கிய நிலையிலேயே விலைகொடுத்து வாங்கி அதனை மீட்டெடுத்து வேண்டிய திருத்தங்களைச் செய்து அதன்மூலம் கடல் வணிகம் செய்து கிடைத்த வருமானத்தில் ஒரு பகுதியைக் கொண்டு இக் கோயிலைக் கட்டினார். இக்கோயிலுக்கு அறுபது பரப்புக் காணி வாங்கி 1867ஆம் ஆண்டு அத்திவாரம் இடுதலாகிய சங்குத்தாபனத்தைச் செய்வித்தார். இக்கோயிலைக் கட்டுவதற்கு இவரது தம்பிகளும் உதவியாக இருந்தனர். அக்கால கட்டத்தில் இலங்கையில் கோயில்கள் கட்டுவதற்கு சிற்பிகள் இந்தியாவில் இருந்தே வரவழைக்கப்படுவர். இக்கோயிலுக்கு கோயில் கட்டுமான வேலைகளைத் திறம் படச் செய்யக்கூடிய சிற்பிகள் வரவழைக்கப்பட்டனர். இக்கோயிலுக்கான இலிங்கத்தையும் ஆவுடையாரையும் காசியிலிருந்து ஆ. விஸ்வநாதப்பிள்ளையவர்கள் கொண்டு வந்தார். 08.06.1883 இல் நூதனப்பிரதிட்டா கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. வல்லை இயற்றமிழ்ப் போதகாசிரியர் வைத்திலிங்கப்பிள்ளை குழந்தைவேற்பிள்ளை முதலியோர் பக்கபலமாக இருந்தனர்.

இக்கோயில் ஆரம்பித்தமைக்கு ஒரு வரலாறு உண்டு. வெங்கடாசலம் பிள்ளையவர்கள் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு தர்மகர்த்தாவாக இருக்கும் காலத்தில் கம்பர் மலையைச் சார்ந்த நண்பனுடன் உலா வருவது வழக்கம். அவ்வாறு வரும் நாளில் ஒரு நாள் அம்மன் கோயில் பக்கமாக தெற்கு நோக்கிவரும்போது நெருப்பு எரிவது போன்று ஒரு ஒளி காணப்பட்டதாகவும் அங்கு சென்று பார்த்த போது மாட்டுச்சாணம் மட்டும்தான் அவ்விடத்திற் காணப்பட்டதாகவும் மறுநாள் இவரின் தந்தையாரான திருமேனியார் கனவில் தோன்றி அவ்விடத்தில் சிவனுக்கு ஆலயம் எடுக்கும்படி பணிந்தார் எனவும் கூறப்படுகின்றது. இதன் பயனாக எழுந்த இந்தச் சிவன்கோயில் இன்றும் பிரசித்து பெற்று விளங்குகின்றது. இவ்வாலயத்து லிங்கம் பாணலிங்கம் எனப்படும். விஸ்வநாதப்பிள்ளையவர்கள் லிங்கத்துடன் நடேசர், சந்திரசேகர் ஆகிய தெய்வச் சிலைகளை கொடுத்தார். கும்பாபிஷேகத்தை அடுத்து முறையாக ஆறுகாலப்பூஜைகள் நடைபெறலாயின. முதன் முறையாக புலோலியைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் பூஜைகளைச் செய்து வந்தார். இக்கோயிலின் மகோற்சவங்களை வல்வெட்டித்துறை வாழ் மக்களும் அவ்வூர் சாரா மக்களும் செய்து வந்தனர். வே. வைரமுத்துப்பிள்ளை என்னும் வர்த்தகர் மகமைப் பொருட்களை கொடுத்து வந்தார். அத்துடன் மட்டக்களப்பில் நெல்லுக்கிள்ளலாகிய ஏற்பாட்டைத் தாமே உண்டு பண்ணி அதில் கிடைக்கும் வருவாயை கோயிலுக்கு வழங்கி வந்துள்ளார். நெல்லுக்கிள்ளும் ஏற்பாட்டைத் தவிர பிடி அரிசி கிள்ளுதல், உண்டிகைப் பெட்டி, மகமை, வியாபார மகமை, கூலிமகமை, சம்பளமகமை ஆகியவற்றையும் செய்து வந்தார்.

24.10.1892 இல் வெங்கடாசலம் பிள்ளையவர்கள் சிவபதம் அடைய அவரின் சகோதரர் குழந்தைவேற்பிள்ளையவர்கள் கோயில் எசமான் பொறுப்பை எடுத்துக் கொண்டார். 1905 வரை எஜமானாக இருந்தார். 1901 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த காசிநாதர் வைத்திலிங்கம் என்பவர் வசந்த மண்டபத்தைக் கட்டினார். 1912ஆம் ஆண்டுவரை வெங்கடாசலம் பிள்ளையின் சகோதர் ஏற்றார். அவருக்குப்பின் திருமேனிப் பிள்ளையவர்களும் கோயில் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். இவரது காலத்தில் பல திருப்பணி வேலைகள் இடம்பெற்றன. இந்தியாவைச் சேர்ந்த தெலுங்குதேச வர்த்தகரான காரஞ்சேடு ஏர்லக்கட்டர் அரங்கநாயுடுகாரு என்னும் பிரபு முன்வாயில் மண்டபத்தையும் கோபுர அடிப்பாகத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இந்த வர்த்தகர் பல கப்பல்களுக்கு அதிபதியாக இருந்ததுடன் தனது கப்பல்களுக்கெல்லாம் வல்வை வாசிகளையே தண்டயல்களாகவும் இதர மாலுமிகளாகவும் பணிக் கமர்த்தினார். விஸ்வநாதர் சரவணமுத்துப்பிள்ளை என்பவர் நடராஜர் மண்டபத்தைக் கட்டிக் கொடுத்தார். கம்பர் மலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தம்பதிகள் வேறுபல திருப்பணிகளைச் செய்தனர். இவ்வாறாக பரம்பரை பரம்பரையாக ஒரு குடும்பம் இக்கோயிலை நிர்வகித்து வந்தாலும் பல ஊரைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கு கொண்டு திருவிழாக்களை நடாத்தி வந்தனர்.

இவ்வாலயத்திற்கென ஒரு யாப்பு உருவாக்கப் பட்டுள்ளது. நொத்தாரிசு சபாரத்தினம் அவர்கள் முகதாவில் 8.3.1921 இல் 4889 இலக்கம் கொண்ட கோயிலின் பொறுப்பாளி நியமிப்புச் சாசனத்தில் சுவாமியின் பெயர் வைதீஸ்வரர் என்றும் அம்பிகையின் பெயர் தையல் நாயகி என்றும் இக்கோயிலுக்கான அசைவுள்ள சொத்துக்கள் அசைவற்ற ஆதனங்கள் யாவற்றையும் திருமேனிப்பிள்ளையவர்களுடன் சேர்ந்து பராமரிப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர்களாக தனது மூத்த சகோதரன் மகன் வேலுப்பிள்ளையின் மகன் திருவேங்கடத்தையும் இளைய சகோதரரின் மகன்களான அருணாசலம் வெங்கடாசலம் அருணாசலம் சபாரத்தினம் ஆகிய மூவரையும் நியமித்திருந்தனர். அவர்களின் ஆண் சந்ததியினரே தொடர்ந்தும் எஜமானாக இருக்க முடியும். ஆண் சந்ததியினர் இல்லாவிடத்து பெண்களின் சந்ததியினர் கோயில் பொறுப்பை வகிக்கலாம் என இச்சாசனம் குறிப்பிட்டு நிற்கின்றது. கோயிலைப் பராமரிப்பதற்காக ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இதில் மகோற்சவம் செய்பவர்கள் இடம்பெறுவர்.

1919ஆம் ஆண்டு திருமேனிப்பிள்ளையவர்கள் காலத்தில் அமிர்தானந்தசுவாமிகள் புனராவர்த்தனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் செய்தார். இக்கோயிலில் கார்த்திகேயக் குருக்கள் பூஜைசெய்து வந்தார். அவரது காலத்திலேயே மாப்பிள்ளைக் குருக்கள் என அழைக்கப்படும் இராமலிங்க குருக்கள் பிரதான குருக்களாகவும் தொடர்ந்து இவரது சந்ததியினரும் பூஜை செய்து வந்தனர்.

1966 இல் திரும்பவும் கோயில் பாலஸ்தானம் செய்யப்பட்டு பிலவங்க வருடம் வைகாசி 28 ஆம் திகதி (11.06.1967) பிரம்மஸ்ரீ பரமேஸ்வரக்குருக்களால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. நாட்டில் எற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இவ்வாலயம் பெரிதும் பாதிப்படைந்தது. 1977இல் சித்திரத்தேர் செய்தனர் பின் 2003 இல் இக்கோயில் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகள் பூர்த்தியாக்கப்பட்டு தைமாதமம் 21ம் நாள் 04.02.2004 அன்று பூர்வபட்சமும் திரயோதசி திதியும் புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் வைத்தீஸ்வரப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் சிவஸ்ரீ மனோகரக்குருக்கள் அவர்களினால் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்துக் கோயில்
# தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்

– வைத்திய கலாநிதி த. ஜீவராஜ் –

தேசம், நாடு தொடர்பாகப் பல்வேறுபட்ட விவாதங்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தேசம் எனும் கோட்பாடு என்றென்றும் நிரந்தரமாக இருந்தது இல்லை. அது காலத்துக்கு ஏற்றவாறு தன்னை மாற்றிக்கொண்டே வந்திருக்கிறது. இத்தகைய சூழலில் அரசியல், புவியியல், பண்பாட்டியல் சார்பாக நாடு, தேசம் என்பனவற்றை நாம் இன்று பிரித்தறிய முயன்று வருகிறோம்.

தேசம் என்பது பெரும்பாலும் ஒரே மொழிமரபு, இனக்குழு, குடிவழக்குப் போன்ற ஒன்றித்த இனக்குழுக்கள் வாழும் பகுதிகளைக் குறிக்கிறது. அத்தோடு தொடர்ந்து வரும் வரலாறு, பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற பூமி போன்ற கூறுகளையும் இது உள்ளடக்கியதாக இருக்கிறது.

வடமொழிச் சொல்லான தேஷம் என்பதன் தமிழ் வடிவம் தேஎம் ஆகும். அதன் திரிபடைந்த வடிவமே இன்று நாம் பயன்படுத்தும் தேசம். வடசொல்லைத் தமிழில் எழுதும்போது வடசொல்லிற்கே உரிய எழுத்தை நீக்கி விட்டு அவ்விடத்தில் இருமொழிக்கும் பொதுவான எழுத்தைச் சேர்த்து வழங்கவேண்டும் என்பது தொல்காப்பிய எச்சவியல் விதியினால் அறியப்படுகிறது. "வட சொற்கிளவி வடவெழுத் தொரீஇ-எழுத் தொடு புணர்ந்த சொல்லாகுமே" என்கிறது தொல்காப்பியம். தேஷம் என்ற வடசொல்லில் உள்ள ஷ வடவெழுத்தாகும். இதை நீக்கி விட்டு அதற்கு மாற்றாக இரு மொழிக்கும் பொதுவான உயிரெழுத்தான எகரத்தைச் சேர்த்து தேஎம் என்றெழுத வேண்டுமென்கிறார் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை விளக்கம் எழுதிய சேனாவரையர் .

சங்க இலக்கியங்களிற் தேஎம் என்ற சொல்லின் பயன்பாடு தொடர்பில் விரிவாக ஆராய்ந்த புலவர் சு. முருகேசன் அவர்கள் 'தேசம்' வடசொல்லே என்ற தனது ஆய்வுக் கட்டுரையில் தேஎம் என்னும் சொல் பத்துப்பாட்டில் பதினைந்திடங்களிலும், எட்டுத்தொகையில் நாற்பத்திநான்கிடங்களிலும், பதினெண்கீழ்க்கணக்கில் மூன்றிடங்களிலுமாக அறுபத்தியிரண்டிடங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறார். இவற்றில் முப்பதிடங்களில் திசை, திக்கு, வழி, இடம் என்று இடப்பொருளில் வருவதையும். மூன்றிடங்களிற் தேயம் என்று இடையினயகரம் பெற்று அழிவு, கலக்கம் என்னும் பொருளில் வருவதையும் பதிவுசெய்கிறார்.

அத்துடன் சங்க இலக்கியங்களிற் தேஎம் என்னும் சொல் நாடு என்னும் பொருளில் முப்பத்தியிரண்டிடங்களிற் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றில் ஆறிடங்களில் தன்னாட்சி செல்லாத வேறு பல, அகன்ற இடத்தையுடைய, பணிந்தவருள்ள தேசமென்று வருகிறது. ஒன்பதிடங்களில் பகைவர் தேசமென்றும், ஆறிடங்களில் முன்பின் அறியாத தேசமென்றும் பதினைந்திடங்களில் மொழி வேறாகிய தேசமென்றும், ஓரிடத்தில் வடுகர் தேசமென்றும் வருகிறதென்று புலவர் சு. முருகேசன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு சங்க இலக்கியங்களில் தேஎம் என்று வழங்கிவந்த சொல் பின்னர் திரிபடைந்து இன்று நாம் பயன்படுத்தும் தேசம் என்றானது. இன்றைய நிலையில் தேசம் என்பது தமக்கே உரிய புவியியற் பரிமாணங்களைக் கொண்டது. எல்லைகள் குறித்து அடையாளங் காணக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டவை. இவை தனித்துவமான வரலாற்று அனுபவங்களால் உருவான சமுதாய அமைப்பினைப் பிரதிபலிப்பவை. மொழி வழியாகவும், சமூக வழமைகள், பண்பாட்டு அம்சங்கள் என்பவற்றின் வழியாகவும் உருவாகிய பொதுமையினை உணர்ச்சிபூர்வமாகப் பிரதிபலிப்பது தேசம் என்றழைக்கப்படுகிறது. தமிழரின் அரசியல் நோக்கில் அமைந்த சிந்தனை வளர்ச்சியின் ஒரு பிரதான கட்டமெனப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தேசந் தொடர்பில் தனது கருத்துக்களைப் பதிவு செய்வது இங்கு கூர்ந்து கவனிக்கத்தக்கது.

திருகோணமலையைப் பொறுத்தமட்டில் அது நான்கு வன்னிப் பிரிவுகளாக நிர்வாக ரீதியில் இயங்கி வந்ததினை ஐரோப்பியர் ஆவணங்கள் மூலம் அறியமுடிகிறது. இந்நான்கு வன்னிப் பிரிவுகளும் திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடையவை. திருக்கோணேச்சரம் திருகோணமலைப் பிராந்தியத்தின் நிலவுடமை மீது கொண்டிருந்த அதிகாரத்தினைப் பிரதிபலிப்பவை. இந்நான்கு பிரிவுகளும் பற்றுக்கள், தேசங்கள் என அழைக்கப்பட்டு வந்தது.. அவையாவன திருகோணமலைப் பற்று (தேசம்), கட்டுக்குளப் பற்று (தேசம்) , கொட்டியாரப் பற்று (தேசம்), தம்பலகாமப் பற்று (தேசம்) என்பனவாகும். இங்கு குறிப்பிடப்படும் சுயாட்சி நிறைந்த இந்நான்கு வன்னிப் பிரிவுகளையும் ஐரோப்பியரின் ஆவணங்கள் 'இராட்சியங்கள்' என்றே வரையறுக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றினை நான்கு வன்னிமைகள் ஆட்சி செய்தனர். இந்நான்கு தேசத்தினதும் அதிகார மையமாக திருக்கோணேச்சரம் இருந்தது.

திருகோணமலைத் தமிழர்களிடையே தேசம் என்ற சொல் வழங்கப்பட்டது தொடர்பில் நமக்குக் கிடைக்கும் முதல் ஆவணம் வெருகல் 'ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்' எனும் நூல். தம்பலகாமத்தினைச் சேர்ந்த ஐ. வீரக்கோன் முதலியார் என்பவரால் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வெருகலில் அமைந்திருக்கும் சித்திரவேலாயுதர் சுவாமி மீது பாடப்பட்ட இந்நூல் கொட்டியாரப்பற்று இருமரபுந்துய்ய இளஞ்சிங்கம் எனும் வன்னிபத்தின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டிருக்கிறது.

*துன்னு மிருமரபுந் துய்யவிளஞ் சிங்கமெனும்*
*வன்னிமை பொற் பாதம் வணங்கையினீ சொல்லாதை*
*வன்னிமை தேசத்தார் மகாநாடு தான் கூடி*
*மின்னுமெழில் மண்டபத்தில் வீற்றிருக்கும் வேளையிலே*

எனும் பாடல் வரிகள் தேசத்தார் மகாநாடு பற்றிக் குறிப்பிடுகிறது.

இந்நூல் அரங்கேற்றம் ஒரு பெருவிழாவினை ஒத்த வைபவமாக இருந்தது. இது வெருகல் சித்திரவேலாயுதர் ஆலய மண்டபத்திற் தேசத்தோர் சபையோராக இருக்க அரங்கேறியது. இங்கு தேசத்தோர் என விழிக்கப்படுவது கொட்டியாரப் பற்று தேசத்தவரை எனக்கருதப்படுகிறது. இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய அம்சம் தேசத்தவராற் கூட்டப்பட்ட இக்கூட்டம் மகாநாடு என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இது வன்னிபத்தின் தலைமையில் நடைபெற்றதையும் இப்பாடல் குறிக்கிறது. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் திருகோணமலைப் பிராந்தியங்களை தேசம் எனக் குறிப்பிடும் சமூக வழக்கினையே இந்நூல் ஆவணப்படுத்தியிருக்கிறது.

மட்டக்களப்பு தேசம், முக்குவதேசம், யாழ்ப்பாண தேசம் எனும் சொற்றொடர்கள் இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் முற்காலங்களில் வழங்கிவந்ததினைப் பண்டைய நூல்களிலும், ஆவணங்கள் மூலமாகவும் அறிய முடிகிறது. இவற்றுடன் கிழக்கிலங்கையின் பல ஆலயங்கள் தேசத்துக்கோயில் என இன்றும் வழங்கிவருவதனைக் காணக்கூடியதாக உள்ளது. வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயம். திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் போன்றன தற்போதும் அப்பிரதேச மக்களாற் தேசத்துக் கோயிலாகக் கொண்டாடப்படுவதனை இன்றுங் காணலாம்.

போர்த்துக்கேசரினாற் திருக்கோணேச்சரம் முற்றாக இடிந்தழிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்த புராதன விக்கிரகங்களிற் சில தம்பலகாமத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஆதிகோணநாயகர் ஆலயம் உருவாது. இவ்வாலயம் உருவான பின்னர் திருகோணமலையில் இருந்த நான்கு பற்றுக்களின்மீதும் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் செல்வாக்குச் செலுத்தியது. திருக்கோணேச்சரம் எவ்வாறு திருகோணமலை முழுவதும் நிலமானிய முறையினை நடைமுறைப்படுத்திச் செயற்பட்டு வந்ததோ அதே நடைமுறை திருக்கோணேச்சரம் அழிக்கப்பட்டதன் பின்னர் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தம்பசிட்டி, வியாபாரிமூலையிற் கிடைக்கப்பெற்ற ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோம்புகளின் அடிப்படையில் (திருக்கோணேச்சரம் போர்த்துக்கீசரினால் முற்றாக அழிக்கப்பட்டதன் பின்னர்) தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் திருகோணமலைப் பற்று, ,கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று ஆகிய நான்கு பிரதேசத்தினைச் சேர்ந்த 33 ஊரவர்கள் கொண்டாடி மகிழும் கோயிலாக இருந்ததினை அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே இவ்வாலயம் பழமையிற் தேசத்துக் கோயிலாகப் போற்றப்பட்டிருக்கும் என்பதனை புரிந்து கொள்ளமுடியும்.

தேசத்துக் கோயில்களின் ஆலய வழமைகள், திருவிழாக்கள் என்பன பல்வேறு தேசங்களைச் சேர்ந்த ஊரவர்களால் மேற்கொள்ளப்படுவது வழமை. உதாரணமாக இன்றும் தேசத்துக் கோயிலாகப் போற்றப்படும் வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி ஆலயத் திருவிழாக்கள் வல்வெட்டித்துறை முதல் செங்கலடி வரையான ஊர்மக்களாற் கொண்டாடி மகிழப்படுவதைக் காணலாம்.

வெருகலம்பதியில் நடைபெறும் மகோற்சவகால விழாக்களின் விபரம்

| விழா | விழாவுக்கு உரித்தான கிராமம் / நகரம் |
|---|---|
| 1.ம் திருவிழா | வல்வெட்டித்துறை |
| 2.ம் திருவிழா | பட்டித்திடல் |
| 3.ம் திருவிழா | சம்பூர் |
| 4.ம் திருவிழா | மணற்சேனை / பெரியவெளி |
| 5.ம் திருவிழா | பள்ளிக்குடியிருப்பு |
| 6.ம் திருவிழா | பாலத்தடிச்சேனை |
| 7.ம் திருவிழா | கூனித்தீவு |
| 8.ம் திருவிழா | மூதூர் நகரம் (கல்விப்பகுதி) |
| 9.ம் திருவிழா | வெருகல் / முகத்துவாரம் |
| 10.ம் திருவிழா | கிளிவெட்டி |
| 11.ம் திருவிழா | மேன்காமம் / கங்குவேலி |
| 12.ம் திருவிழா | மல்லிகைத்தீவு |
| 13.ம் திருவிழா | ஈச்சிலம்பற்று / ஆநெய்த்தீவு / முத்துச்சேனை |
| 14.ம் திருவிழா | கதிரவெளி |
| 15.ம் திருவிழா | சேனையூர் / கட்டைபறிச்சான் |
| 16.ம் திருவிழா மாம்பழத்திருவிழா | பூநகர் / பூமரத்தடிச்சேனை |
| 17.ம் திருவிழா | வாழைச்சேனை |
| 18.ம் திருவிழா | செங்கலடி செட்டிகுடி |
| 19.ம் திருவிழா பூங்காவனத்திருவிழா | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது முன்னோர்கள் உருவாக்கிய இந்நடைமுறை பல்வேறு சமூகநல அனுகூலங்களை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மிகக் காரணங்களுக்கு அப்பால் நீண்ட தொலைவிலுள்ள மக்களை ஒன்றிணைக்கும் மையமாகவும், கலை கலாசாரப் பண்பாட்டு அம்சங்களைப் பாதுகாக்கும் அமைப்பாகவும் வர்த்தகம், அரசியல் என்பனவற்றிற் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை உருவாக்கவல்ல நிறுவனமாகவும் இத்தேசத்துக் கோயில்கள் நீண்டகாலமாகச் செயற்பட்டு வந்திருக்கிறமை தொடர்பில் வரலாற்றிற் பல பதிவுகளைக் காணக் கூடியதாக உள்ளது.

தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் திருகோணமலை தேசம், கட்டுக்குள தேசம், கொட்டியார தேசம், தம்பலகாம தேசம் ஆகிய நான்கு பிரதேசத்தினைச் சேர்ந்த பல்வேறு ஊரவர்களைக் கொண்ட பலநூற்றுக்கணக்கான ஆலய பரிபாலன உறுப்பினர்களின் விபரங்களை இன்றும் இவ்வாலயத்திற் காணக்கூடியதாக இருக்கிறது. எனவே தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் பல ஊரவர்கள் கொண்டாடி மகிழுந் தேசத்துக் கோயிலாகப் பழமையில் போற்றப்பட்டிருக்கும் என்பதனை நாம் இன்று புரிந்துகொள்ளமுடியும். எனினும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களால் தேசத்துக் கோயிலுக்குரிய திருவிழா வழமைகள் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இன்று வழக்கொழிந்து போயிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மிக அண்மைக்காலத்தில் நீண்ட தேடலின் பின்னர் கிடைக்கப்பெற்ற நான்கு ஆவணங்கள் தேசம் தொடர்பிலான மிக முக்கிய ஆவணப்படுத்தலாக அமைகின்றது. அவை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடையவை. அவ்வாலயத்தில் தொன்றுதொட்டு நடைபெற்றுவரும் வழமைகளைப் பிரதிபலிப்பவை. ஆதிகோணநாயகர் ஆலயம் பழமையில் தேசத்துக் கோயிலாக விளங்கிவந்ததை ஞாபகமூட்டுபவை.

முதலாவது ஆவணம் இன்றைக்கு சுமார் 120 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது. அது தம்பலகாமம் ஆதிகோணநாயகர் கோயில் தொழும்புகள் பற்றி ஒரு நியமன உறுதி முடித்துக் கொடுக்கப்பட்டதைச் சொல்கிறது. தம்பலகாமம் தொடர்பான வரலாற்றுத் தேடலில் ஈடுபட்டிருந்தபொழுது எனது முன்னைநாள் ஆங்கில ஆசான் திரு.இந்திரசூரியன் அவர்களிடம் இருந்து இவ்வரிய பொக்கிசம் கிடைக்கப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

திரு. வேதபுராண காவியங்களின் பிரகாரம் தெக்ஷிணகயிலாய, திருகயிலம்பதியாகிய திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் எங்கடவுளாகிய சிவபெருமான் கோணைநாயகனை வணங்கி. தற்காலம் திரு.கொட்டியாபுரப்பற்று மேங்காமத்தில் வசிக்கும் இருமரபுந் துய்ய எதிர்வீரசிங்க நல்ல பூபால வன்னிபமாகிய நான் திரு. தம்பலகாமம் கோணைநாயகர் கோவிற் கருமங்களைப்பற்றி பாராபரிப்புத் தத்துவ நியமன உறுதி முடித்துக் கொடுந்த விபரம் (1) என்று தொடர்கிறது 1893 ஆம் ஆண்டு ஆனி மாதம் 14 ஆம் திகதி எழுதப்பட்ட இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம்.

திருகோணமலையில் இருந்த நான்கு பிராந்தியங்களும் நான்கு தேசங்களாகக் கருதப்பட்ட அதேவேளை இங்கு பரம்பரை பரம்பரையாக நடைமுறையில் இருந்துவந்த வழமைகள் தேசவழமைகள் அல்லது தேசவழக்கு எனக் கருதப் பட்டதையும் இவ்வாவணம் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்தினை பராமரிப்பது தொடர்பிற் கட்டளை களை எழுத முனைந்த வன்னிபம் இந்தப்பிரகாரம் நான் பூர்வீகம் தொடக்கம் பாரம்பரியமாக நடந்துவந்த இந்தத் தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்தைக் கொண்டும் மேற்சொல்லிய கோவிற் கூட்டத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டும் அக்கட்டளைகளை வழங்குவதாகப் பதிவுசெய்திருக்கிறார். இங்கு குறிப்பிடப்படும் பூர்வீகம் தொடக்கம் பாரம்பரியமாக நடந்துவந்த இந்தத் தேசவழக்கப்படி எனக்குள்ள சொந்த உரித்து என்பது திருகோணமலையின் நான்கு வன்னிப் பிரிவுகளும் நான்கு தேசங்களாக நிர்வகிக்கப்பட்டதையும், அந்நான்கு தேசங்களின் அதிபதியாக வன்னிபங்கள் செயற்பட்டதையும், இந்நான்கு தேசங்களினதும் சொத்தாக இருந்த இவ்வாலய நடைமுறைகளைப் (தேசவழக்கு ) பேணுவதில் அவர்கள் சிறப்பதிகாரம் பெற்றிருந்தமையையுங் குறிப்பால் உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றோடு இத்தேசங்களில் ஒவ்வொரு விடயங்களும் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதிற் தெளிவான ஒழுங்குகள் பின்பற்றப்பட்டன என்பதனை இவ்வாவணத்திலுள்ள பின்வரும் வாக்கியங்கள் நமக்கு உணர்த்துவதாக உள்ளது.

சொல்லிய கோவிலாதனங்களால் வரும் சகலவருமானங்களாகிய பணம் நெல்லு முதலான சகல இருப்பும் பூர்வீககாலந் தொடக்கமாகத் தேச வழக்கப்படி ஆருடைய பொறுப்பிலிருந்துவந்ததோ அந்தப்பிரகாரம் அவைகளை இருக்கும்படி செய்துவைக்கவும்.

என்று வன்னிபம் குறிப்பிடும் தேசவழக்கம் கோணேசர் கல்வெட்டு என்ற நூல் குறிப்பிடும் வழமைகளை ஞாபகப்படுத்துகிறது. திருக்கோணேச் சரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட நில புலங்கள், கிராமங்கள், அங்கங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள், கோவிற் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள் கோவிலுக் குரிய திரவியங்கள். தானியங்கள். எண்ணெய் வகைகள், களஞ்சியப் பொருட்கள் முதலிய சேமிப்புகள் என்பனவற்றைச் செப்பேடுகளாகப் பொறித்து (பெரியவளமைப் பத்ததி) குளக்கோட்ட மன்னனால் வகுக்கப்பட்ட திட்டத்துக்கு அமைய செயற்படுத்தும் பணிகளைக் கனகசுந்தரப் பெருமாள் என்பவர் செய்துவந்ததைக் கோணேசர் கல்வெட்டு ஆவணப்படுத்துகிறது.

திருக்கோணேச்சரம் முற்றாக அழிக்கப்பட்டு அதன் பின்னாற் தம்பலகாமத்தில் ஆதிகோணைநாயகர் ஆலயம் உருவாகி அங்கு திருக்கோணேச்சரத்தின் வழமைகள் முறையாகப் பின்பற்றப்பட்டதை பூர்வீககாலந் தொடக்கமாகத் தேச வழக்கப்படி ஆருடைய பொறுப்பிலிருந்து வந்ததோ அந்தப்பிரகாரம் அவைகளை இருக்கும்படி செய்துவைக்கவும் என்ற வரிகள் ஆதாரப்படுத்துகிறது.

தம்பலகாமம் ஆதிகோணைநாயகர் ஆலய தேசவழமைகள் தொடர்பாக ஆவணப்படுத்தி இருக்கும் இவ்வுயில் திருகோணமலை வரலாற்றுப் பதிவுகளில் பல்வேறு முக்கிய தரவுகளைக் கொண்டிருப்பதனால் அதன் முழுமையான வடிவம் பின்னிணைப்பாக இக்கட்டுரையிற் சேர்க்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது.

இரண்டாவது ஆவணம் 1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது. தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திற் பரம்பரை பரம்பரையாகத் தொண்டு செய்யும் தொழும்பாளர்களுள் ஒருவர் தான் செய்துவந்த தொழும்பினைத் தனது மகனுக்கு பாரங் கொடுப்பது பற்றித் தேசத்தவருக்கும் மற்றும் ஆலயத்துடன் தொடர்புடையோருக்கும் அறியத்தரும் கடிதம் (2) இது. அதனைக் கீழே காணலாம்.

1928 ஆம் ஆண்டு தை மாதம் எழுதப்பட்டது.

சிவமயம்.

திருகோணமலையைச் சேர்ந்த தம்பல கமப்பற்றில் தம்பலகமம் கோயிற் குடியிருப்பிற் சைவசமய பிரபல்யமாய் விளங்கும் கோணை நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு தேவராசாவென்னும் குளக்கோட்டு மகாராசா, கயவாகு மகாராசாவால் எழுதி கல்வெட்டு என வழங்கி வரும் சாசனத்தை 1831 ஆம் ஆ(ஆண்டு) கார்த்திகை மீ(மாதம்) 26 ஆம் தேதி கெசற்றில் பிரசித்தப்படுத்தியிருக்கிறது. அக்கல்வெட்டுச் சாசனத்திற் சொல்லிய பிரகாரமே இருபாகை முதன்மைக் குருக்கள், தானத்தார், வரிப்பற்றார் என்றும் தொழும்புகாரரும் மற்றும் தொழும்புகாரரும் இதிற் சொல்லிய தானத்தார் என்னும் தொழும்பை கோணாமலை வேலுப்பிள்ளை என்பவர் 30 முப்பது வருடகாலமாக பார்த்து எனது தகப்பனார் மரணிக்கு முன்னமே வேலுப்பிள்ளை வயிரமுத்து ஆகிய நானும் 27 இருபத்தேழு வருடம் பார்த்து எனது மகன் கோபாலுப்பிள்ளை என்பவரை 1928 ம் ஆ(ஆண்டு) தை மீ(மாதம்) துவக்கமாக பார்த்து அதிலுள்ள சுதந்திரங்களையும், அதிலுள்ள வருமானங்களையும் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு சம்மதித்து ஒப்புவித்துப் போட்டேன் நான் என்பதை நிலமை, தலமை, தேசத்தவர்களுக்கும் மற்றுமுள்ள கொட்டியாபுரம் பற்று, கட்டுக்குளப் பற்றுக்கும், அரசாங்கத்தார் அவர்களுக்கும் அறியத்தருகிறேன்.

(இவ்வண்ணம்)

தம்பலகமம்

கள்ளிமேடு – காரியப்பர்

வேலுப்பிள்ளை வயிரமுத்து

சாட்சி - வே.கதிரவேலு ,க.கோணாமலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் தொழும்பாளர்களின் உரிமை, கடமை என்பன விபரமாகக் கோணேசர் கல்வெட்டு எனும் நூலிற் பதிவு செய்யப்பட்டு இருப்பதையும், அதனை அங்கீகரித்து 1831.11.26 ஆம் திகதி அரச வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டிருப்பதையும் குறிப்பிடும் வேலுப்பிள்ளை வைரமுத்து அவர்கள் 27 ஆண்டுகளாக தானத்தார் என்ற தொழும்பினைச் செய்து வந்திருக்கிறார். அவரது மகன் கோபாலுப்பிள்ளை என்பவரை 1928 ஆம் ஆண்டு முதல் அத்தொழும்பைச் செய்யும் பணிக்கு நியமிக்கும் அதேவேளை, தானத்தாருக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளையும், வருமானங்களையும் அவருக்கே ஒப்புவித்து அதனைத் தேசத்தவருக்கு இக்கடிதம் மூலம் அறிவிக்கிறார்.

இங்கு தேசத்தவர் என்று தம்பலகாமப்பற்றைச் சேர்ந்தவர்களையே வயிரமுத்து அவர்கள் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. அத்துடன் கொட்டியாபுரம்பற்று, கட்டுக்குளப்பற்று என்பனவற்றைப் பெயர் குறிப்பிடுவதன் மூலம் அவற்றை வெவ்வேறான தேசங்கள் என்பதையே அவர் குறிப்பால் உணர்த்துகிறார் என்று கொள்ளவேண்டி இருக்கிறது.

மூன்றாவது ஆவணம் கந்தளாயில் உள்ள பிள்ளையார் ஆலயச் சிவராத்திரி விழா (3) ஒழுங்குகள் தொடர்பானது. 11.02.1934 ஆண்டு தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயத்திடம் மேளக்கச்சேரிக்கான ஒழுங்குகள் தொடர்பில் உதவி கேட்பதாக அமைகிறது. இக்கடிதம் சிவராத்திரியினை முன்னிட்டு கந்தளாய் பிள்ளையார் ஆலயத்தில் அபிசேகம் செய்வதற்கு தேசத்தவர் விரும்பி இருப்பதினை தெரிவிக்கிறது. இது சாதாரண மக்களின் பாவனையில் இயல்பாக இப்பிரதேச மக்களினைத் தேசத்தவர் எனக் குறிப்பிடும் வழக்கம் நிலவிவந்ததினை ஆதாரப்படுத்துகிறது. அக்கடிதம் கீழ்வருமாறு அமைந்திருக்கிறது.

11.2.34 திரு. தம்பலகமம் ஆதியாகிய கோணேஸ்வர சுவாமிக்குரிய கந்தளாய் பிள்ளையார் கோவிலுக்குச் சிவன்ராத்திரி அவிசேகம் தேசத்தவர்கள் செய்ய விரும்பியிருப்பதால் காரியப்பர்,, வயிராபியார் அவர்கட்குத் தாழ்மையுடன் அறியத்தருவது எங்களுக்கு ஒரு கூட்டுமேளம் (12ல்) திங்கள் கிழமை அனுப்பி வைக்கும்படி தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

கோயில் மனேச்சர் பொ.நடராசா - பொ. சரவணப்பெருமாளுக்காக

ஊரவர்களுக்காக. மா.இராசையா

இக்கடிதம் மூலம் தேசத்தவர் என்ற ஆவண மாக்கலுக்கு அப்பால் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயம்மீது கொண்டிருந்த உரிமை, கந்தளாய்ப் பிள்ளையார் ஆலயத் திருவிழா நடைமுறைகள் போன்றவை தொடர்பிலும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

தேசம் பற்றிய நான்காவது ஆவணம் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயத்துடன் தொடர்புடைய மகாசபைக் கூட்டம் பற்றியது. இது ஒரு முறைப்பாட்டுக் கடிதம் (4). இது திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசங்களைத் தெளிவாக ஆதாரப்படுத்துகிறது.

மகாமேன்மை தங்கிய திரு.டிஸ்திரிக்கோட்டு நீதிபதி அவர்களுக்குத் தாண்மையாய் திரு.தம்பலகமம் கோணநாயகர் கோயில் பராபரிப்புக்காரரான ஏரம்பு கணபதிப்பிள்ளை ஆகியன நான் தரும் மண்டாட்டப் புட்டீசமாவது.

ஐயாவே திரு.தம்பலகமம் கோணைநாயகர் கோயிற் காரியங்களைக் குறித்து கூட்டங் கூட வேண்டிய காலங்களிற் புராதன ஒழுங்கின்படி திரு.தம்பலகமம், திருக்கோணமலை, திரு கொடியாபுரப்பற்று. திரு கட்டுக்குளப்பகுதி ஆகிய இந்நான்கு தேசத்தில் உள்ள கோயில் உருமையாளராகிய நிலமை, தலைமை, தொளும்பு காறர், தேசத்தவர்களால் மகாசபை கூடி கூட்டம் நடப்பிப்பது வழக்கம். இதற்கு மாறாய்த் தம்பலகமத்தவர் சிலர் மாத்திரமே கூடி 1934ம் ஆண்டு பங்குனி மாதம் 19ந் திகதி கூடிய கூட்டம் கோயில் புராதன ஏற்பாடுகளுக்குப் பொருத்தமாய் நடைபெற வில்லை என்பதைப் பற்றி தகுந்த சாட்சிகளைக் கொண்டும், சாதனங்களைக் கொண்டும், வாய் மூலமாயும் அத்தாட்சி செய்யக் கூடும்.

இதை நீதிபதியவர்களின் தயவான கவனத்துக்கு அறியத்தருகின்றேன்.

3270ம் - 3271ம் இலக்கம் கொண்ட இரு உறுதி சாதனங்களாலும்

1169 இலக்க டிஸ்ரிக் கோட்டு தீர்ப்பினாலும் இன்னும் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தேசாதிபதியால் கிடைக்கப்பட்ட சேட்டுபிக்கற் கொப்பி இத்துடன் இணைக்கப் பட்டிருக்கிறது.

என்று முடிகிறது இக்கடிதம். இதுவொரு முழுமைபெறாத முறைப்பாட்டுக் கடிதம் என்பதனை வாசிக்கும்போதே நாம் புரிந்து கொள்ள முடியும். இக்கடிதம் பலமுறை திருத்தப்பட்டு பின்னர் ஆங்கில அல்லது தமிழ் மொழியில் நீதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் என்பதை ஊகிக்கலாம்.

முறைப்பாட்டுக்காரரான ஏரம்பு கணபதிப் பிள்ளை தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலய பராமரிப்புக்காரர். ஆலயத்தின் புராதன நடைமுறைகள் தொடர்பில் நன்கறிந்தவர். அவை தொடர்பான பல ஆலய ஆவணங்கள், உறுதிகள், அரச ஆவணங்கள் என்பவற்றை தனது சேகரிப்பில் வைத்திருந்தவர். எனவேதான் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக மேற்படி ஆவணங்களை ஆலய புராதன நடைமுறைகளை உறுதிப்படுத்தும் பொருட்டு பிற்குறிப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கடிதத்தின் முக்கிய பகுதி தேசத்தவர் இணைந்து மகாசபை கூடுவது தொடர்பானது. இவ்வாலயத்திற் தொன்றுதொட்டு பின்பற்றப்பட்டுவந்த நடைமுறைக்கு அமைவாக ஆலயந் தொடர்பான முக்கிய முடிவுகளை எடுப்பதற்கு திருகோணமலைப் பிராந்தியத்தில் இருந்த நான்கு தேசத்தவர்கள் மகாசபை கூடுவதை இக்கடிதம் ஆவணப்படுத்துகிறது. அத்துடன் இவ்வாலயம் இந்நான்கு தேசத்தையும் சேர்ந்த நிலைமை, தலைமை, தொழும்பாளர் ,தேசத்தவர் (பொதுமக்கள்) அனைவருக்கும் உரித்துடையது என்பதையும் இது ஆதாரப்படுத்துகிறது.

இங்கு குறிப்பிடப்படும் தேசத்தவர், மகாசபை என்ற சொற்கள் நம்மை 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் நூற்பாவுடன் தொடர்புபடுத்துகிறது. தேசம், தேசத்தவர் என்ற சிந்தனை இப்பிராந்திய மக்களிடையே நீண்டகாலமாக நிலைபெற்றிருந்ததையே இவ்வாவணங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மேற்கூறிய ஆதாரங்கள் அனைத்தும் பழமையில் திருகோணமலைப் பிராந்தியம் திருகோணமலைப் பற்று, கட்டுக்குளப் பற்று, கொட்டியாரப் பற்று, தம்பலகாமப் பற்று என்று நான்கு தேசங்களாக வழங்கி வந்ததினை ஆதாரப் படுத்துவதாக அமைந்திருக்கிறது. அத்துடன் தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம் நான்கு தேசத்தவர் கொண்டாடி மகிழும் தேசத்துக் கோயிலாக பழமையில் போற்றப்பட்டதை ஆதாரப்படுத்துபவை.

தேசத்துக் கோயில், தேசவழமைகள் என்பன பற்றி அறியத்தரும் இவ்வாவணங்கள் எதிர்காலத்தில் பல்வேறு தேவைகளுக்காக பல்வேறு கோணங்களில் ஆராயப்படவேண்டியவை என்பதனைக் கருத்திற் கொண்டு இங்கு அதன் முழுமையான வடிவத்திற் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பண்டைய நாட்களில் வெருகல் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயம் வடகிழக்கினைப் பண்பாட்டுரீதியில் (வல்வெட்டித்துறை முதல் செங்கலடி வரையான ஊர்களை) தேசத்துக் கோயில் நடைமுறைக்கூடாக இணைத்ததை விரிவாகப் பார்த்திருந்தோம். இன்று சமூகவலைத்தளங்களின் மூலம் ஒன்றிணைந்து பல்வேறு பிரதேசத்தினைச் சேர்ந்த அன்பர்கள் இருப்புக் கேள்விக்குறியாகும் ஆலய வளாகங்களில் (முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயம், கன்னியா சிவன் கோயில்) ஒன்றுகூடி தமது பண்பாட்டு வழிமுறைகளுக்கூடாக அவற்றினைப் பாதுகாக்க முனைவதைக் காணும்போது எமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட தேசத்துக் கோயில் நடைமுறைகள் தொடர்பில் மீளச் சிந்திக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம் என்பதனைப் புரிந்துகொள்ளமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலைச் சிவன் கோயில் நகுலேஸ்வரம்

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் -

**கீரிமலைத் தீர்த்தத்தின் சிறப்பும் நகுலேஸ்வரம் ஆலயத்தின் தொன்மையும்**

கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேயன்துறை ஆகிய மூன்று கிராமங்களும் உள்ளடங்கிய பிரதேசம் கோயிற் கடவை என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. சிவபூமி என்று தவயோகி திருமூலநாயனாரால் அழைக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டின் வடக்கே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற சிறப்புமிக்க திருத்தலமாக நகுலேஸ்வரம் திகழ்கிறது. புராதன காலத்தில் இவ்வாலயம் திருத்தம்பலேஸ்வரம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. நகுலேஸ்வரம் அமைந்துள்ள கீரிமலைத் தீர்த்தம், சாகர சங்கம தீர்த்தம், கண்டகி தீர்த்தம், கங்கா சமுத்திர சங்கமம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. நகுலகிரிக்கு மேற்குப் பக்கத்திலே தெற்கிலூறுகின்ற சுத்த நீரும், வடக்கிலுள்ள உப்பு நீரும் கலந்து கிழக்கு நோக்கிய சிவ ரூபமும் சக்தி ரூபமும் ஆக இருக்கின்ற இயப்பினாலே கங்கா சமுத்திர சங்கமம் என்றும், கண்டகி தீர்த்தம் என்றும் அழைக்கப்படுகின்றது.

கீரிமலையை நகுலகிரி என்றும் கூறுவர். நகுலமுனிவர் அங்கு தவம் செய்து தமது கீரிமுகம் மாறப் பெற்றமையினால் கீரிமலைக்கு நகுலமலை என்ற பெயரும் இறைவனுக்கு நகுலேஸ்வரர் என்ற நாமமும் இறைவிக்கு நகுலாம்பிகை என்ற நாமமும் ஏற்படலாயிற்று. யாழ்ப்பாணக் குடாநாட்டில் எழுச்சி பெற்ற சிவாலயங்களில் கீரிமலைச் சிவன் கோயில் மிகவும் தொன்மை வாய்ந்த ஆலயமாகும். கீரிமலைக் கடற்கரைப் பிரதேசத்தில் மக்கள் குடியேற்றமும் மற்றும் வேளாண்மை போன்ற தொழில்களும் வர்த்தகமும் ஆரம்பமாகிய காலம் முதலாகவே நகுலேஸ்வர ஆலயம் சிறப்பிடம் பெற்று வந்துள்ளது என்ற குறிப்பினைத் தக்ஷிண கைலாச புராணத்தில் காணலாம்.

சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி குதிரை முகத்துடனும் குன்மவலி நோயுடனும் இருந்து அவஸ்தைப்பட்டாள். சந்நியாசி ஒருவரால் வழிப்படுத்தப்பட்ட மாருதப்புரவீகவல்லி கீரிமலைச் சாரலில் வந்திறங்கி நகுலமுனிவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கீரிமலைத் தலத்தின் விஷேடத்தையும் தீர்த்தத்தின் மகிமையையும் முனிவர் வாயிலாக அறிந்து கொண்டாள். கீரிமலைப் புனித தீர்த்தத்தில் நீராடி சிவாலய தரிசனமும் செய்து வந்த மாருதப்புரவீக வல்லியின் குன்மவலியுந் தீர்ந்து குதிரை முகமும் மாறியது.

மாருதப்புரவீகவல்லி எழில்மிகு இளமை வடிவத்தை மீண்டும் பெற்றுக் கொண்டாள். மகளின் குதிரை முகம் மாறப்பெற்றமையால் மகிழ்ச்சி அடைந்த சோழஅரசனால் கட்டப்பட்ட ஆலயமே மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் ஆகும்.. மாவிட்டபுரத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட முருகப்பெருமானின் விக்கிரகங்கள் வந்து இறங்கிய இடம் ஆகையால் காங்கேயன்துறை என்ற பெயர் ஏற்பட்டது.

இலங்கையை ஆட்சி செய்த முதல் சிங்கள அரசனாகிய விஜயன் இந்து சமயத்தவன் என்றே வரலாற்று நூல்கள் குறிப்பிடுகின்றன. இவன் தனது நாட்டையும் ஆட்சியையும் பாதுகாப்பதற்காக இலங்கையின் நான்கு எல்லைகளிலும் நான்கு ஈஸ்வரங்களைக் கட்டுவித்தான் என்றும் இவனால் வடக்கே கீரிமலையில் கட்டப்பட்ட ஆலயம்தான் திருத்தம்பலேஸ்வரம் என்றும் யாழ்ப்பாண வைபவ மாலை என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கீரிமலைக்கு காந்தருவநகர் வீணாகானபுரம் என்ற பெயர்களும் வழங்கப்பட்டு இருந்ததாக யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற நூலில் கல்லடி வேலுப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**நகுலேஸ்வரம் ஆலயத்தின் வரலாறு பற்றி ஆலயத்தின் பிரதமகுரு அவருடைய பவளவிழா மலருக்கு வழங்கிய செவ்வி**

நகுலேஸ்வரத்தின் மிக அநாதியான முதற்கோயில் கடலில் அமிழ்ந்துவிட்டது. இரண்டாவது கோயில் போர்த்துக்கேயரால் தரைமட்டமாக்கப்பட்டது. மூன்றாவது கோயில் ஈழப்போரில் சிதைவடைந்தது. இதுவே புதுப்பிக்கப்படுகிறது.

முதற்கோயில் கடற்கரையில் உள்ள மலையின் மீதிருந்தது. கடல்கோள் ஒன்று ஏற்பட்டபோது அக்கோயில் கடலுள் அமிழ்ந்துவிட்டது. அதன் கரையில் எஞ்சியிருந்த மலையின் மேல் பிற்காலத்தில் வைத்து வணங்கப்பட்ட சிவலிங்கம் இப்போதும் இருக்கிறது. இப்போதைய கேணிக்குப் பக்கத்தே சடையம்மா மடப்பக்கத்தில் அச்சிவலிங்கம் வைக்கப்பட்டுள்ளது. அதன் அருகே நன்னீர்ச் சுனை ஒன்றும் இருக்கிறது. இரண்டாவது கோயில் கி.பி. 1621ஆம் ஆண்டு அளவில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போது சைவாலயங்கள் எல்லாவற்றையும் தரைமட்டமாக அழித்தவேளை நகுலேஸ்வரர் ஆலயமும் அழிந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1878ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் வழிகாட்டலால் எம்மவர்கள் மூன்றாவது கோயிலைக் கட்டி எழுப்பினார்கள். மூன்றாவது கோயில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் திகதி கேதார கௌரி விரத விழாவின் போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கௌரிநூல் பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கோயிலின் மேல் பல விமானக் குண்டுகள் வீசப்பட்டுக் கோயில் அழிவுக்குள்ளானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலரும் கீரிமலைச் சிவன் கோயிலும்

1878ஆம் ஆண்டு வைகாசித் திங்கள் 24ஆம் நாள் கீரிமலைச் சிவன் கோயில் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றை நாவலர் வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரத்திற்கு வடமேற்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ள கீரிமலையிலே ஆதியில் ஒரு பெரிய சிவன் கோயில் இருந்தது. அது போர்த்துக்கீசரால் இடிபட்டது. கீரிமலையின் அடியினின்றும் சுத்தசலம் ஊற்றெடுத்துக் கடலினுள்ளே பாய்கின்றது.அந்தச் சங்கமம் புண்ணிய தீர்த்தம் என்று விசுவாசித்தன்றோ யாழ்ப்பாணம் எங்கும் உள்ள சைவசமய சனங்கள் விசேஷ தினங்களில் அங்கே போய் ஸ்நானம் செய்கிறார்கள். அநேகர் அங்கே சங்கற்பஞ் செய்து ஒரு மண்டலம் அரை மண்டலம் ஸ்நானம் செய்து கொண்டிருக்கிறார்கள். அநேகர் அந்தியேஷ்டி, சிரார்த்தம் முதலிய கிரியைகளை அங்கே போய்ச் செய்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஸ்நானம் செய்த உடனே சுவாமி தரிசனம் செய்யும் பொருட்டு அங்கே ஒரு கோயில் இல்லையே. யாழ்ப்பாணத்தில் எத்தனையோ இடங்களிலே கோயில் சமீபத்தில் இருக்கவும் புதிது புதிதாக கோயில் கட்டுகின்ற நம்மவர்கள் எல்லாச் சனங்களுக்கும் பொதுத் தலமாகிய கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவிக்க இது வரையும் நினையாததென்னையோ?

கீரிமலையிலே ஒரு கோயில் கட்டுவித்துச் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசை நடாத்துவிப்பது மேலாகிய சிவ தருமம். தல விஷேட தீர்த்த விஷேடத்தோடு மூர்த்தி விசேடமும் கூடுமாயின் மிக நலமாமே. யாழ்ப்பாணத்துச் சனங்கள் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்வார்களானால் இந்தச் சிவ தருமத்தை தொடங்கி நிறைவேற்றலாம்.

கீரிமலைச் சிவன் கோயிலை மீண்டும் கட்டுவதற்குரிய காலமும் இடமும் பற்றிச் சோதிட வல்லுனரான இரகுநாதையருடனும் அராலிச் சிற்பாசாரியார் சு.சுவாமிநாதருடனும் நாவலர் கலந்து ஆலோசித்தார். அவ்வுத்தமோத்தம சிவதருமத்தின் பொருட்டுப் பொதுமக்களின் பொருளுதவியை நாவலர் நாடினார். நாவலர் கீரிமலையில் சிவாலயம் அமைக்க எடுத்த முயற்சி நிறைவேற முன்பு அவர் சிவபதம் அடைந்துவிட்டார். இவருடைய வேண்டுகோளை ஏற்ற சைவப் பெருமக்கள் விழிப்புற்று இவ்வாலயப் பணியினை நிறைவேற்றினர்.

## நகுலேஸ்வரர் வரலாறு கூறும் நூல்கள்

வடமொழியில் உள்ள சூத சம்ஹிதை, மகாபாரதம், மதஸ்ய புராணம், தக்ஷண கைலாய மான்மியம் முதலான நூல்களில் நகுலேஸ்வரர் ஆலயத்தின் வரலாறு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இத்தலத்தின் மேன்மையைக் கூறும் நூல்களாகத் தமிழ் மொழியில் யாழ்ப்பாண வைபவமாலை, ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் சரித்திரம், நகுலாசபுராணம், நகுலேஸ்வரமான்மியம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலேஸ்வர பூங்கொத்து நகுலேஸ்வரர் சதகம், நகுலேஸ்வரர் ஊஞ்சல் ஆகிய நூல்கள் காணப்படுகின்றன.

## நகுலேஸ்வரம் பற்றி வெளிவந்த நூல்களும் அதன் ஆசிரியர்களும்.

| | | |
|---|---|---|
| 1. | யாழ்ப்பாண வைபவமாலை | - மயில்வாகனப் புலவர் |
| 2. | நகுலாசல புராணம் | - அப்பாசாமி ஐயர் |
| 3. | நகுலேஸ்வர மான்மியம் (சமஸ்கிருத மொழி) | - நீர்வேலிப் பண்டிதர் ச. சிவப்பிரகாசம் |
| | தமிழ் மொழி பெயர்ப்பு | - குமாரசுவாமிப் புலவர் |
| 4. | நகுலமலைக் குறவஞ்சி | - அராலி விசுவநாத சிவாசாரியார் |
| 5. | நகுலேசர் ஊஞ்சல் | - குமாரசுவாமிப் புலவர் |
| 6. | நகுலேசர் சதகம் | - பண்டிதர் நமசிவாயம் |
| 7. | நகுலேஸ்வரர் விநோத விசித்திர கவிப்பூங்கொத்து | - மயில்வாகனப்புலவர் |

## போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட நகுலேசர் ஆலயம்

போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்ட நகுலேஸ்வரர் ஆலயம் மூன்று பிரகாரங்களும் ஐந்து கோபுரங்களும் உடைய பெரிய ஆலயமாக இருந்தது. கி.பி. 1621 இல் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் நகுலேச்சரம், நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முதலிய ஆலயங்களை இடித்தழித்தனர். பரராசசிங்க முதலி இறந்த பின்பு பறங்கிக்காரர் தாங்கள் இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாம் இடிப்பித்தார்கள். அப்பொழுது பரசுபாணி ஐயரெனும் பிராமணர் கீரிமலைச் சாரலிலுள்ள தேவாலயங்களின் தட்டு முட்டுக்களையும் விக்கிரகங்களையும் கிணறுகளிற் போட்டு மூடி வைத்தார் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது.

## திருத்தி அமைக்கப்பட்ட நகுலேஸ்வரர் ஆலயத்தின் வளர்ச்சி

சிவஸ்ரீ கா.தியாகராஜக் குருக்கள் 1882ஆம் ஆண்டு சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் அச்சிட்டு வெளியிட்ட பிரசுரத்தில் கீரிமலைச் சிவன் கோயிலின் புனருத்தாரணம் பற்றி நாவலர் பெருமான் மேற்கொண்ட முயற்சிகளை விபரித்துள்ளார். திருப்பணி வேலைகள் நிறைவேறி 1895ஆம் ஆண்டு மன்மத வருடம் ஆனிமாதம் மகாகும்பாபிஷேகம் நிறைவேறியது. 1918ஆம் ஆண்டு கோயில் தற்செயலாகத் தீப்பற்றியது. இதனைத் தொடர்ந்து பல்வேறு காலங்களில் திருப்பணி வேலைகள் நடைபெற்றுள்ளன. 1953ஆம் ஆண்டு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிவாகம விற்பன்னர்களாகிய சிவாசாரியார்கள் கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தினார்கள். 1955ஆம் ஆண்டு முதல் வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. சிவராத்திரி தினத்தை இறுதியாகவுடைய மாசி மகோற்சவம் பதினைந்து நாட்களுக்கு நடைபெற்று வந்தது. இதேபோல அம்மனுக்குரிய மகோற்சவம் பங்குனி மாதத்தில் தொடங்கி சித்திரை வருடப் பிறப்பன்று தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெற்றது.

சிவாகம, சிற்ப சாஸ்திர விதிமுறைக்கு ஏற்பவே ஆலயத்தின் சகல அம்சங்களும் அமைக்கப்பட்டன. இச்சிவாலயம் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், கோபுரவாயில், பரிவார தெய்வங்களின் கோயில்கள், திருச்சுற்று, ஆகிய அமைப்புக்களுடன் சிறப்புற நிர்மாணிக்கப்பட்டது. கோயிலின் அடித்தளம் தூண்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக் கற்களால் அமைக்கப்பட்டன. தட்சணாமூர்த்தி, இலிங்கோற்பவர் விக்கிரகங்கள் சிறப்பாக அமைக்கப் பெற்றுள்ளன. விநாயகர், ஷண்முகர், சோமாஸ்கந்தர், மகாவிஷ்ணு, மகாலட்சுமி, பஞ்சலிங்கங்கள், ஆகிய பரிவார தெய்வங்களுக்கு சிறுகோயில்கள் உள்ளன. நிருத்த மண்டபத்தில் நடராஜருக்கு கோயில் உள்ளது. சிவனின் திருவிளையாடல்கள் கோயில் சுவரில் அழகான சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன.

இங்கு சிவாகம மரபில் நித்திய நைமித்திக கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. திருவனந்தல் முதலாக அர்த்த சாமப்பூசைவரை ஆறு காலப் பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன. ஆடி அமாவாசை தீர்த்தத் தினத்தன்றும், புரட்டாதி சனிக்கிழமைகளிலும் பெருந்தொகையான அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவார்கள். புராணபடன மரபு இவ்வாலயத்தில் சிறப்பாக நடைபெற்று வந்தது. புராணபடனத்தினைப் பிரதம சிவாசாரியார் தொடக்கிவைக்க அடியார்கள் ஆசார சீலர்களாகக் கலந்து கொண்டு அருள் பெறுவார்கள். கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், நகுலாசல புராணம், ஏகாதசி புராணம் ஆகிய புராணங்கள் படித்துப் பயன் சொல்லப்பட்டுவந்தன.

## கீரிமலை சிவநெறிக்கழகம்

நகுலேஸ்வரர் ஆலயத்தின் தர்மகர்த்தா சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களைத் தலைவராகக் கொண்டு 1976இல் கீரிமலைச் சிவன் கோயிலில் சிவநெறிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் இருமுறை யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலிமிருந்து சைவச் சான்றோர்கள் பலரும் வந்து ஆலயத்தின் சபா மண்டபத்தில் கூடுவர். குருக்கள் ஐயா ஆசீர்வாதம் வழங்கிக் கூட்டத்தினை ஆரம்பித்து வைப்பார். இலக்கண வித்தகர் பண்டிதர் இ.நமசிவாயம் ஐயாவின் நெறிப்படுத்தலில் சான்றோர் சங்கமம் நடைபெறும். இந்தச் சங்கமம் ஒரு சங்கப் பலகை போலவே காணப்படும். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் சைவசித்தாந்த வகுப்பும் மாலையில் இலக்கண இலக்கிய வகுப்புகளும் நடைபெறும். யாழ் மாவட்ட மாணவர்களிடையே பேச்சுப் போட்டி, பண்ணிசைப்போட்டி, நீதிச் செய்யுள் மனனப் போட்டி, புராணபடனம் போட்டி, கதாப்பிரசங்கப் போட்டி, மாலைகட்டுதல், கோலம் போடுதல் போன்ற செயல்முறைப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டு வந்தன. மிகச் சிறந்த முறையில் திருமுறை மாநாடு இவ்வாலய முன்றலில் சிறப்பாக நடாத்தப்பட்டது. மகாஜனாக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் சிவநெறிக் கழகத்தின் செயலாளராக இருந்து அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிகள் பல புரிந்து வந்தார்.

## உள்நாட்டு யுத்தத்தினால் ஆலயத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள்

1990ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் திகதி கேதார கௌரி விரத விழாவின் போது கோயிலின் மேல் விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்பட்டன. மூலஸ்தானம் தவிர்ந்த ஏனைய பகுதிகள் யாவும் பெரும் அழிவுக்குள்ளாகியது. எட்டு வருட இடைவெளிக்குப் பின்பு 1998ஆம் ஆண்டு மகாசிவராத்திரி தினத்தன்று இங்கு வழிபாடு இடம்பெற்றது. இச் சிவராத்திரி வழிபாட்டில் நாலாயிரத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். 1998ஆம் ஆண்டு ஆடி அமாவாசை தினத்தன்றும் பத்தாயிரத்திற்கும் அதிகமான பக்த கோடிகள் கலந்து கொண்டார்கள். உயர் பாதுகாப்பு வலயம் எனக்கூறி குடிமக்கள் வசிப்பதற்கு இன்று வரை அரசு அனுமதி அளிக்கவில்லை. சில விசேட தினங்களில் அடியார்கள் பாதுகாப்புப் படையினரின் அனுமதியுடன் சென்று வழிபட்டு வருகிறார்கள்.

இங்கே இருந்த பல விக்கிரகங்கள் உடைக்கப்பட்டும் களவாடப்பட்டும் விட்டன. பூசைப்பொருட்கள் தீபவிளக்குகள் ஆகிய எவையுமே இல்லாதிருந்தன. சில விக்கிரகங்கள் பற்றைக்குள் வீசப்பட்ட நிலையில் காணப்பட்டன. மூல மூர்த்தியைத் தவிர வேறு விக்கிரகங்கள் எதுவுமே இருக்கவில்லை. அரசாங்கத்தின் உதவியுடனும், அடியார்களின் உதவியுடனும் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

நகுலேஸ்வரப் பெருமானின் பெருஞ்சாந்தி விழா (மகா கும்பாபிஷேகம்) மிக விரைவில் நடைபெற்று நித்திய நைமித்திக கிரியைகள் அனைத்தும் ஒழுங்காக இடம்பெற்று நமது மக்கள் அனைவரும் சாந்தியும் சமாதானமும் பெற்று வாழும் காலம் மிக விரைவில் கிடைக்க வேண்டுமென்று நாம் அனைவரும் இறையருளைப் பிரார்த்திப்போமாக.

**நன்றி : ஈழத்து சிவாலயங்கள்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானவன் மாதேவீஸ்வரம்

– பேராசிரியர் சி. பத்மநாதன் –

வானவன் மாதேவீஸ்வரம் என்னும் இரண்டாம் சிவாலயம் பொலநறுவை நகரின் அரணமைந்த பகுதியினுள், வடகிழக்கு மூலையின் சமீபத்திலே காணப்படுகின்றது. பொலநறுவையிலே அகழ்வாராய்ச்சிகளை ஆரம்பித்த காலத்தில், சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு, அங்குள்ள கோயில்களில் அதுவே நன்கு பேணப்பட்ட நிலையிலே காணப்பட்டது. ஆயினும், அண்மைக்காலங்களிலே கவனக் குறைவினால் அதிலே சில சேதங்கள் ஏற்பட்டுள்ளன. கலாசார முக்கோணம் உருவாக்கப்பட்ட பின்பு இக்கோயிலும் ஏனைய இந்துக்கோயில்களின் இடிபாடுகளும் உரிய கவனத்தைப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

இக்கோயில் கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்த மண்டபம், மண்டபம், நந்திபீடம், கோபுரவாசல் ஆகிய பகுதிகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. அதன் நீளம் 66' 4''. கோயில் வளாகத்தைச் சூழ்ந்த சுவர் 96' நீளமும் 84' அகலமுங் கொண்டதாகும். மதிற்சுவர்கள் செங்கட்டிகளால் அமைக்கப்பட்டன. வடக்கிலும் கிழக்கிலும் மதிற் சுவர்கள் நகரின் அரண்களை ஒட்டியிருந்தன.

கோயில் கற்றளியாக அமைந்த கட்டடமாகும். அது கருங்கல், சுண்ணக்கல் ஆகிய இரு வகையான கற்களையுங் கலந்து கட்டப்பட்டுள்ளது. கர்ப்பக்கிருகமானது அதன் பக்கங்களில் 20'6'' அளவு கொண்ட சதுரமாகும். அதன் அதிஷ்டானம் 4'1'' உயரங் கொண்டுள்ளது. கர்ப்பக்கிரகத்தின் சுவர்கள் 12' உயரமானவை. அவற்றிலே 5'8'' உயரமும் 1'8'' அகலமும் 1' ஆழமுங் கொண்ட தேவகோஷ்டங்கள் உள்ளன. சுவர்களிலுள்ள அரைத்தூண்களில் தடி, குமுதம், கண்டம், பலகை, பத்ம இதழ், போதிகை என்னும் உறுப்புகளுள்ளன.

கர்ப்பக்கிருகத்தின் மேலமைந்த திரிதள விமானம் 31' 9'' உயரங் கொண்டது. சம காலத்திலே தென்னிந்தியாவில் அமைக்கப் பெற்ற கோயில்களின் விமானங்களோடு ஒப்பிடுமிடத்து இது சாதாரணமான அளவினைக் கொண்டதாகும். கர்ப்பக்கிருகத்தின்மேல், அகன்ற வளைவுகளையுடைய கொடுங்கையும் யாளி வரியும் அமைந்துள்ளன. முதலாவது தளத்தின் நான்கு மூலைகளிலும் கூடங்கள் உள்ளன. அவை அடியில் 3' நீளமும் 2' 8'' உயரமுங் கொண்டவை. அவற்றினிடையே சாலைகளும் நாசிகைகளும் அமைந்துள்ளன.

இரண்டாம் தளம் 13'6'' அளவுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். அதன் பீடம் குமுதம், கண்டம், பத்ம பட்டிகை என்னும் படைகளைக் கொண்டுள்ளது. சுவர்களிலே அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு பக்கங்களிலும் எல்லாமாக 12 அரைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளது. மூன்றாந் தளம் பக்கங்களில் 4'6'' அளவு கொண்ட சதுரமான பிரஸ்தரத்தில் அமைந்துள்ளது. இத்தளமானது எண்கோண வடிவமானது. அதன் சுவர்களில் இரண்டாந் தளத்தில் உள்ளவற்றைப் போன்ற அரைத்தூண்கள் உள்ளன. இரண்டு அடி ஒன்பது அங்குலம் உயரமான இத்தளத்தின் மேலுள்ள பத்ம பட்டிகையில் அமைந்திருக்கும் சிகரமும் எண் கோணமான அமைப்பாகும்.

அந்தராளத்தின் உள்ளே அதன் தளம் நில மட்டத்திலிருந்து 3'1'' உயரமானது. அது வெளியிலுள்ள அதிஷ்டானத்தின் உயரத்திலிருந்து ஒரு அடி உயரங் குறைந்ததாகும். அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியன முற்றாகவே மறைந்துவிட்டன. கிழக்கு நோக்கிய ஆலயத்தின் முன்புறத்தில் நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் ஆகியன அமைந்திருந்தன. கோயில் வளாகத்தின் வடகிழக்கு மூலையில் பிள்ளையார் கோயில் செங்கல்லினால் அமைக்கப்பட்டிருந்தது. கிழக்கு நோக்கிய வாசலையுடைய அக்கோயில் 8' சதுரமான இறையகம், 6' நீளமும் 5' அகலமுங் கொண்ட அந்தராளம் என்பவற்றைப் பகுதிகளாகக் கொண்டிருந்தது. அது அதிஷ்டானத்தின் மேல் அமைக்கப்பட்டிருந்தது. வடமேற்கு மூலையில் இதனை ஒத்த தேவகோட்டம் ஒன்று அமைந்திருந்தது. குமாரக் கடவுளின் படிமமும் மயிலின் உருவமும் அதன் சுற்றாடலில் வேறு சிற்பங்களோடு காணப்பெற்றமையால் அது குமாரக் கோட்டமாய் இருந்ததென்று உணர்ந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேஸ்வரம்

– பேராசிரியர் வி. சிவசாமி –

இலங்கையின் புகழ்பெற்ற தொன்மைவாய்ந்த சிவத்தலங்களிலொன்றான முன்னேஸ்வரம் வடமேற்கு மாகாணத்தினைச் சேர்ந்த புத்தளம் மாவட்டத்தில் நீர்வளம், நிலவளம், இயற்கை எழில் மிக்க சிலாபம் என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இதற்கு அயலிலே 'மாயவனாறு' எனப்படும் தெதுறு ஓயா ஆறு பாய்கின்றது. முன்னேஸ்வரத்திலும், இதற்கு வடக்கே சில மைல்தொலைவிலுள்ள பொம்பரிப்பு, தம்பபன்னி முதலிய இடங்களிலும் திராவிடர் குறிப்பாகத் தமிழர் வாழ்ந்தமை பற்றிப் பொம்பரிப்பு முதலிய இடங்களிலே நடைபெற்ற அகழ்வாராய்ச்சி சான்று பகருகின்றது. முன்னேஸ்வரத் தல வரலாற்றினை, அது தோன்றிய காலம் தொட்டு வரன்முறைப்படி கூறமுடியாதெனினும் ஓரளவுக்குச் சில சான்றுகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். இலங்கையில் பல்வேறு சமயத்தவர்களும் போற்றும் புனித தலமாகக் கதிர்காமம் போல இத்தலமும் திகழ்கின்றது; பிரபல்யமாக உள்ளது.

இதிஹாஸ, புராண மரபுகளின் படி வியாசர், இராமர் முதலியோர் வழிபட்ட தலமாக இது போற்றப்படுகின்றது. தக்ஷிணகைலாச மாஹாத்மியம் என்னும் பிற்காலத்திய நூலில் இலங்கையிலுள்ள பிரதான சைவ, வைணவத் தலங்களின் சிறப்பும், இவையிருப்பதால் இலங்கை மூவுலகங்களிலும் சிறந்த இடம் என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளன. முன்னேஸ்வரச் சிறப்புப் பற்றிப் பதினாறாம், பதினேழாம் படலங்களிலே கூறப்படுகின்றது. இங்கு முனிவர்கள் சிவபிரானை வழிபட்டதால் இது முனீஸ்வரம் என அழைக்கப்படுவதாகவும், இது, வழிபடுவோர்க்கு விரும்பியவற்றைத் தருவதெனவும், இறைவனை நினைப்பவர் பாவங்களை அழிப்பதெனவும், ஜீவன் முத்தி தருவதெனவும் பலவாறு இந்நூலிலே இதன் சிறப்புக் கூறப்படுகின்றது. இராமபிரான் இத்தலத்திலே சிவபிரானை வழிபட்டுத் தம்மைப் பீடித்த பிரமஹத்தியினின்று விடுதலை பெற்றார் எனக் கூறப்படுகின்றது.

இத்தலம், முன்னேஸ்வரம் என அழைக்கப்படுவதில் இவ் ஆலயத் தொன்மை விளங்குவதாகக் கருதப்படுகின்றது. முன் – முற்காலம் தொட்டு நிலவும், ஈஸ்வரம் சிவாலயம் என விளக்கப்படுகின்றது. தொன்மைக்கு ஏற்ப இறைவன் முன்னைநாதசுவாமி என அழைக்கப்படுகின்றார். அம்பாள் தலை சிறந்த அழகியாக வடிவாம்பிகை என அழைக்கப்படுகிறாள். 51 சக்தி பீடங்களில் இது மிகச்சிறந்த ஒன்றாகப் போற்றப்படுகின்றது. வடிவாம்பிகா ஸமேத முன்னைநாத சுவாமி என மூலமூர்த்தி போற்றப்படுகிறார்.

வரலாறு:

கர்ணபரம்பரை, பௌராணிக ரீதியிலே நோக்கும் போது, குளக்கோட்ட மன்னன் திருக்கோணேஸ்வர, ஆலயத்திற்குப் போல, இதற்கும் பெரிய திருப்பணிகள் செய்தான் எனக் கூறப்படுகின்றது. பிற்பட்டகால முன்னேஸ்வர மான்மியத்திலும், சில ஏட்டுப்பிரதிகளிலும் இவன் செய்த திருப்பணிகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவன் சிதைந்த நிலையிலிருந்த பழைய ஆலயத்தினை மீள அமைத்து மகாகும்பாபிஷேகத்தினைச் செய்து முடித்தான். இவ் ஆலயத்திலே பணிபுரிதற்காகச் சோழ நாட்டிலிருந்து பிரா–மணர், சைவர், செட்டி, வேளாளர், கொல்லர், கன்னார், தட்டார், சிற்பிகள், தச்சர், கைக்கோளர் எனும் பலதிறப்பட்டவர்களைக் கொணர்வித்து, ஆலயத்திற்குரிய பல்வேறு பணிகளிலும் ஈடுபடுத்தினான். மேலும் இவ்வரசனுடைய கட்டளைப்படி முன்னேஸ்வரத்தினைச் சேர்ந்த நிலங்கள் 64 கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றிற்கும் அவ்வவ்விடங்களிலும் வாழும் தொழிலாளர்களின் தொழில்களுக்கேற்பப் பெயர்களிட்டப் பட்டன. எடுத்துக்காட்டுகளாக அந்தணர் வாழ்ந்த இடம் "பிராஹ்மணயாகம்" எனப்பட்டது. கோவிலுக்கு தேவையான தேர், சகடை, வாகனம், கதவு முதலியன செய்வோர் வாழுமிடம் "வங்காதனி கிராமம்" எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 15 ஆம் 16 ஆம் நூற்றாண்டுகளிலே முன்னேஸ்வரம் மிகச் சிறப்புடன் விளங்கிற்று. குறிப்பாகச் சமகால இலங்கையிலே கோட்டையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சிங்கள மன்னர் சிலர் இவ்வாலயத்திற்குப் பல நன்கொடைகளை வழங்கி வழிபாடு செய்தனர். கோட்டை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு (1412 – 1467) பௌத்த சமயத்தவனாயினும் இந்துசமயத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தான். இவன் முன்னேஸ்வரம் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தான். இவனுடைய காலத்திய தமிழ்க்கல்வெட்டொன்று இக்கோவிலின் கர்ப்பக்கிருஹகச் சுவரிலே பொறிக்கப்பட்டுள்ளது. இம்மன்னன் முன்னேஸ்வரம் நம்பிமார்களை (பிரதான பிரா–மணக் குருக்கள்மாரை) ஜயவர்த்தனபுரமென அழைக்கப்பட்ட கோட்டைக்கு அழைப்பித்து முன்னேஸ்வரம் ஆலய நிலைமைகளைக் கேட்டறிய விரும்பினான். விஜசாமகவ பண்டிதர் எனும் புரோஹிதர் இவை பற்றி அவனுக்கு எடுத்துக் கூறினார். இதன்பின் அரசன் கோவிலுக்கும், பூசகர்களுக்கும் முக்கியமான நன்கொடைகளை வழங்கினான் என அறியப்படுகிறது. இக்கல்வெட்டு மூலம் சமகால கோட்டை அரசசபைக்கும் முன்னேஸ்வரத்திற்கு மிடையிலே நிலவிய நெருங்கிய தொடர்பு தெளிவாகும். இக்கோயிலிலே பேணப்பட்டு வந்த பழைய ஏட்டுச்சுவடியொன்றின்படி, இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட காலத்திலே நீலகண்டர் என்பவர் இக்கோயிலின் பிரதான சிவாச்சாரியாராக விளங்கினார் எனவும், அவரின் சகோதரர் ஒருவர் கோயிலின் பரிபாலனத்தைக் கவனித்தார் எனவும் அறியப்படுகின்றது.

அடுத்தபடியாக கலிகால சர்வக்ஞ பண்டிதன் எனும் விருதுப் பெயரையுடைய ஒன்பதாம் பராக்கிரமபாகு (கி.பி. 1509 – 1528) முன்னேஸ்வரத்திற்கு வந்து வழிபாடு செய்து கோவிலுக்குப் பல கிராமங்களை கி.பி 1517இலே சர்வ மானியமாகத் தாமிரசாசனம் செய்தான். இவ்வாறு வழங்கப்பட்ட நிலப்பரப்பின் எல்லைகள் வரையறுக்கப் பட்டிருந்தன. கி.பி. 16ஆம் நூற்றாண்டிலே இலங்கையின் கரையோரப் பிரதேசங்களிலே போர்த்துக்கேசர் ஆதிக்கம் ஏற்பட்டது. அவர்கள் பிறமதங்களைச் சேர்ந்த வழிபாட்டிடங்களை அழித்துவந்தனர். இந்த வகையிலே கி.பி. 1578 இலே முன்னேஸ்வர ஆலயம் தரைமட்டமாக்கப்பட்டது.

இவ்வாறு முன்னேஸ்வரம் ஆலயம் அழிக்கப்பட்ட போதிலும் வடிவாம்பிகா சமேத முன்னைநாதர் திருவருளால் மீண்டும் அது புதுப்பொலிவுடன், சிறப்புப் பெற வாய்ப்பு ஏற்பட்டது. கண்டியரசனும், நாயக்கவமிசத்தவனுமாகிய கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி 1747 – 1782) போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட கோவிலை மீள அமைக்கும் முகமாக இந்தியாவிலிருந்து சிற்பாச்சாரியர்களை வரவழைத்துத் திருப்பணிகளைக் குறைவற நிறைவேற்றி 1757இலே மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்துவித்தான்.

மேலும், இவன் இவ் ஆலயத்தின் நித்திய, நைமித்தியப் பூசைகள் செவ்வனே நடைபெற ஏற்பாடுகளைச் செய்து, கோயில் சிவாச்சாரியர்களுக்கு (நம்பிமாருக்கு) 32 அவண நெல்விளைநிலங்களைச் செப்புப்பட்டயத்தில் எழுதுவித்து வழங்கினான்.

இக்கோயிலின் கடந்த இரண்டு நூற்றாண்டுக்கால வரலாற்றினை சோழ நாட்டினைச் சேர்ந்த சிவநேச குமார சுவாமிக்குருக்கள் (1816 – 1912) குறிப்பிட்டுள்ளார். இவர் இக்கோயிலின் கர்ப்பக்கிருகம், மகாமண்டபம், அர்த்தமண்டபம் ஆகியனவற்றைச் சீர்திருத்தி 1875ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தார். இதற்கு முன் நடைபெற்ற மகா கும்பாபிஷேகங்கள் பற்றிக் காலவரன் முறைப்படி கூறமுடியாதெனினும் இதன் பின்னர் நடந்துள்ளவற்றை அறியக் கூடியதாக உள்ளது.

இவர் பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் காலத்திற்கு முன், இக்கோயிற் குருக்கள்மார் முன்பிருந்ததைப் போன்று நிலவருவாய் கிடைக்காததால், அவர்கள் 1804ஆம் ஆண்டு இலங்கைத் தேசாதிபதிக்கு விண்ணப்பிக்க, அவர் கோயிலுக்கருகில் சில நிலங்களை வழங்கினார்.

மூன்று வீதிகளைக் கொண்ட இக்கோயிலின் முன்புறமாக உள்ள திருக்குளத்தின் கரையில் அமைந்த அரச மரம் ஸ்தலவிருட்சமாகப் போற்றப்படுகின்றது. மேலும் இங்குள்ள ஆலமரமும் தலவிருட்சமாகக் கருதப்படுகின்றது. ஏனைய சிவத்தலங்களுக்குப் போலவே இதற்கும் மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்புகள் உள்ளன.

சுற்று மதிலைக் கொண்டுள்ள பிரதான கட்டிடம் சுமார் 120 அடி நீளம் 110 அடி அகலம் கொண்டதாகும். பிரதான கோவில் கர்ப்பகிருகம், அர்த்தமண்டபம் மகாமண்டப மாகியவற்றைக் கொண்டுள்ளது. கல்லினால் அமைக்கப்பட்டது. கர்ப்பகிருகமும் ஸ்தூபியும் இலங்கை யிலுள்ள கோயில்களில் மிகப் பெரியவை. இங்குள்ள விமானம் 46 அடி உயரமுள்ளதாகும். செங்கல்லினால் அமைக்கப் பட்டதாகும். மூன்று தளம் கொண்ட விமானம் கண்டியரசர் காலத்தில் அமைக்கப்பட்டது. பின்னர் இவ்விமானத்திலே சில திருத்தங்கள் செய்தமையால் முன்னைய வடிவத்திலே சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்குள்ள பெரிய கர்ப்பகிருகத்திலே சுயம்புலிங்க வடிவி-லே மூலமூர்த்தியாகிய முன்னை நாதரும், அருகிலே அவரின் சக்தியாகிய வடிவாம்பிகையும் நன்கு விளங்கு கின்றனர்.

பிள்ளையார், சுப்பிரமணியசுவாமி சந்நிதானங்களிலே இன்றும் கற்குத்துவிளக்குகள் நாடோறும் பயன்படுத்தப் படுகின்றன.

இக்கோயிலிலே பூசிக்கப்படும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், நடராஜர் முதலிய கலையழகு மிக்க விக்கிரகங்கள் இங்கிருந்ததொரு பழைய தூர்ந்துபோன கிணற்றிலிருந்து பன்னெடுங்காலத்திற்கு முன் கண்டெடுக்கப்பட்டன என அறியப்படுகின்றது. சிறப்பான நிலையிலிருந்த இவ்ஆலயம் பிற நாட்டவரின் தாக்குதல்களுக்கு இலக்காகியது என்பதை உறுதிப்படுத்தும் வகையிலே, கொழும்பு தொல்பொருட்காட்சிச் சாலையில் சிதைந்த நிலையிலுள்ள கோயிற் பொருட்களும் சான்று பகருகின்றன.

சைவசமய மரபிற்கேற்பக் கோயிலில் நடைபெற வேண்டிய பூசைகள், கிரியைகள், உற்சவங்கள் அனைத்தும் பெருமளவு இவ் ஆலயத்திலே ஒழுங்காக நடைபெற்றுவருகின்றன. நாடோறும் ஆறுகாலப்பூசைகள் ஒழுங்காக நடைபெறும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் விசேட ஸ்ரீ சக்கர பூசை பர்வயந்திர பூசை எனப்படும். சிவசக்தி ஐக்கிய ரூபமாக உள்ள ஸ்ரீ சக்கரத்தினை (மேருயந்திரத்தினை) இலங்கையிலே முதன்முதலிலே வழிபாடு செய்யும் முறையினைத் தொடக்கிய தனிச்சிறப்பு இத்திருத்தலத்திற்குரியதாகும். இது தொடர்ந்து சிறப்பாக நடைபெறுகின்றது.

ஆண்டு தோறும் நடைபெறும் பெருந்திருவிழா (மகோற்சவம்) 28 நாட்களுக்கு நடைபெற்று ஆவணி பௌர்ணமியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். இத்திருவிழாக்களிலே பக்தோற்சவம், பிக்ஷாடணோற்சவம், நடராஜ உற்சவம், வேட்டைத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா நன்கு குறிப்பிடற்பாலன.

திருவிழாவின்போது நாடோறும் விநாயகர், சுப்பிரமணியர், ஆறுமுகர், சோமாஸ்கந்தர் ஆகியோருடைய திருவுலாக்காட்சி இடம் பெறும். பக்தோற்சவ தினத்தன்று 63 நாயன்மார்களுடைய திருவுருவங்கள், வழக்கமாக இடம்பெறும் தெய்வத் திருவுருவங்களுடன் ஒன்று சேர்ந்து வலம் வரும் திருவுலாக்காட்சி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இத்தகைய உற்சவம் முன்னேஸ்வரத்திற்கே தனிச்சிறப்பானதாகும்.

பிரதோஷம், வெள்ளிக்கிழமை, தைப்பொங்கல், தைப்பூசம், சிவராத்திரி, பங்குனிஉத்தரம், சித்திரைவருஷம், நடேசருக்குரிய ஆறு அபிஷேகங்கள், நவராத்திரிகள், கந்த சஷ்டி, தீபாவளி, திருக்கார்த்திகை, திருவெம்பாவை முதலியனவற்றிற்கான விசேட பூஜை, அபிஷேகங்கள் ஏனைய சிவாலயங்களிற் போலச் சிறப்பாக நடைபெறும்.

குறிப்பாகத் தைமாதப்பூச நட்சத்திரத்தினை இறுதி நா-ளாகக் கொண்டு பதினாறு நாட்களுக்கு இலட்சார்ச்சனை நன்கு நடத்தப்படும். இங்கு சரத் நவராத்திரி மட்டுமன்றி வசந்த நவராத்திரி சண்டீஹோமம், ஸ்ரீ சக்கரபூசை, முதலியவற்றுடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதனை முறைப்படி தொடக்கிப் பல ஆண்டுகளாகச் செய்தவர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் ஆவர். 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற இவ்விழாவின்போது இவர் வடிவாம்பிகை பற்றித் தாம் இயற்றிய பஞ்சரத்தினத்திற்கு அம்பாளுக்கான நடன அஞ்சலியாகச் சமகால யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகச் சிரேஷ்ட இசை, நடன ஆசிரியர்களின் வழிகாட்டல்கள் மூலம் மாணவர்களின் நேர்த்தியான கோலாட்டமொன்றினை ஒழுங்குபடுத்தினார். சைவாலயங்களிலே இசையஞ்சலி போல, நடன அஞ்சலியும் முறைப்படி மீண்டும் இடம் பெறவேண்டுமெனப் பேராசிரியர் விரும்பினார். அதற்கு ஒரு முன்மாதிரியாக இந்நிகழ்வினை ஒழுங்கு செய்தார். அன்றைய விழாவிலே அம்பாளுக்கு ராஜோபசாரமும் நன்கு நடைபெற்றது.

பல கிரகங்கள் ஒரே இராசியில் ஒன்று சேரும் போது நாட்டிற்கு ஏற்படக் கூடிய பெருந்தீமைகளை விலக்கவும், நன்மையேற்படவும் முன்னேஸ்வரத்திலே விரோதி வருடம் (1889) கார்த்திகை மாதம் முதலாம்நாள் தொடக்கம் ஒரு மண்டலத்திற்கு ஏகாதசருத்திரஸ்நபனாபிஷேகமும், மிருத்தியுஞ்ஜய பூசையும் நடைபெற்றன. விகாரி வருடம் (1900) தைமாதம் பத்தாம் நாள்முதல் நாளொன்றுக்கு பதினாயிரம் தீபமாகப் பத்துத் திங்களுக்கு இலட்சதீபங்கள் ஏற்றப்பட்டு மகாருத்திரஜபங்களும், ஸ்நபனாபிஷேகங்களும் பிறவும் நடைபெற்றன.

பிலவ வருடம் தைமாதம் (1962 ஆண்டு பிப்ரவரி 3, 4, 5 ம் திகதிகளிலே) இராகுதவிர்ந்த ஏனைய எட்டுக்கிரகங்களும் மகரராசியிலே ஒன்று கூடுவதாலும் பிப்ரவரி ஐந்தாம் திகதி சூரிய கிரகணம் ஏற்படுவதாலும் உலகில் நிகழக் கூடிய மிகப் பெரிய துன்பங்களை நீக்குமுகமாகவும், நன்மை ஏற்படுமுகமாகவும் 23.10.1961 தொடக்கம் 5.2.1962 வரை 108 நாட்களாக நாடோறும் இலட்சார்ச்சனையும் பரசுராம கல்ப சூத்திரம் கூறும் முறைப்படி ஸ்ரீசக்கர பூசைகளும் நடைபெற்றன. இவ்வாறு சிறப்பாக நடைபெற்ற கோடி அர்ச்சனை நன்கு குறிப்பிடற்பாலது. அதனையொட்டி ஒரு மலரும் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்ஆலயத்திலே 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் வேதாகமங்கள், இதிஹாஸ புராணங்கள் சோதிடம் முதலியனவற்றிலே விற்பன்னரான சிவாச்சாரியர்கள் பிரதம குருமாராக விளங்கி வந்துள்ளனர். ஏற்கனவே குறிப்பிட்ட குமாரசுவாமிக்குருக்கள், அவரைத் தொடர்ந்து எம். சோமஸ்கந்தக்குருக்கள், பாலசுப்பிரமணியக்குருக்கள், கா. இரத்தின கைலாசநாதக் குருக்கள் முதலியோர் பிரதம குருக்கள்மாராகவும், தர்மகர்த்தாக்களாகவும் விளங்கி வந்துள்ளனர்.

இக்கோயிலின் மகிமையைப் பற்றிப் பல பிரசுரங்கள் வெளிவந்துள்ளன. ஸ்ரீமுன்னேஸ்வர மான்மியம், ஸ்ரீ முன்னைநாத சுவாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல், முனீசுரர் நவமணிமாலை, முனீஸ்வரரூஞ்சல், முன்னைநாதேஸ்வரர் திருவூஞ்சல், முனீஸ்வரரந்தாதி, முனீஸ்வர வடிவழகி பதிகம், முனீஸ்வரன் கப்பல், முனீசுரக்கும்மி, ஸ்ரீ முன்னேஸ்வரம் வடிவழகியம்மன் திருவிருத்தம், ஸ்ரீ வடிவாம்பிகை பஞ்சரத்தினம் முதலியனவற்றுடன் முன்னேஸ்வரம் கும்பாபிஷேகமலர் (1963) முன்னேஸ்வரம் கோடி அர்ச்சனை மலர் (1961) போன்றனவும் குறிப்பிடற்பாலன.

இதன் வரலாற்றினை நோக்கும் போது பழைய காலம் தொட்டு திருவருட் சிறப்புள்ள திருத்தலமாகவும், சமயம் சமூக, இனம், அந்தஸ்து முதலியனவற்றாலான வேறுபாடுகளைப் பேணாது அனைத்து மக்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மையுடையதாகவும் விளங்கி வந்துள்ளமை குறிப்பிடற்பாலது. கதிர்காமம் போல இதுவும் இலங்கையில் மிகப்பிரபல்யமான புனித தலங்களில் ஒன்றாகும். போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தினால் சிறிது காலம் பாதிப்புற்றிருந்தாலும், மீண்டும் இது பழைய சிறப்பினை அடைந்துள்ளது. இவ் ஆலயச் சுற்றாடலில் உள்ள மக்கள் மட்டுமன்றி தொலைவிலுள்ள பொதுமக்களும், பிரமுகர்களும், வணிகரும், பிறரும் இங்கு உபயங்கள், விசேட அபிஷேகங்கள் வழிபாடுகள் செய்வதோடு தானங்களும் வழங்கிச் சென்றனர், செல்கின்றனர். தென்னிந்தியக் கோயில்கள்போன்று முற்பட்டகால மன்னர்கள் வழங்கிய நிலமானியங்களும் இதற்கு உள்ளன. குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமன்றி உலகத்தின் நன்மைக்காக நிகழும் அர்ச்சனை முதலியன குறிப்பிடற்பாலன. சிவாலயங்களிலே நடைபெறும் நித்திய நைமித்திய பூசைகள் குறிப்பிட்ட பூசைகளைச் செய்பவர், செய்விப்பார்களுக்கு மட்டுமன்றி குறிப்பிட்ட இடம், தேசம் மட்டுமன்றி உலகத்திற்கே நன்மையளிப்பன எனும் சைவசமயத்தின் பெருஞ்சிறப்பிற்கு இவ்வாலயச் செயற்பாடுகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்துவாரம்
# ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத
# ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம்

– திருமதி இந்திரா சதானந்தன் –

இலங்கையின் தலைநகரான கொழும்பில் முகத்துவாரம் எனும் இடத்தில் கடலோடு கூடிய சாரலில் அமைந்துள்ள ஆலயம்தான் முகத்துவாரம் ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வர சுவாமி ஆலயம்.

திரு. திருமதி பொன்னம்பலம் தம்பதியினர்க்கு பிறந்த தவப்புதல்வர்களுள் ஒருவரான பொன். அருணாசலம் அவர்களால் இவ்வாலயம் உருவாக்கப்பட்டது.

பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இந்தியாவிலிருந்து கலை, மதம், தொழில்களின் நிமித்தம் பலர் இலங்கைக்கு வந்தனர். பல சித்தர்கள் இக்காலகட்டத்தில் வந்து ஆலயங்கள் பல உருவாவதற்கு உறுதுணையாயிருந்துள்ளனர். அவர்களுள் ஒருவர்தான் இக்கோயில் உருவாவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த ஆனைக்குட்டிச் சாமியார். இவர் தன்னை இன்னாரென்று காட்டிக் கொள்ளாது கொழும்பு கப்பித்தாவத்தை எனும் இடத்தில் வாழ்ந்த ஈனமுத்து என்பாரோடு வாழ்ந்து வந்தார்.

இந்தச் சுவாமிகளை தரிசிக்க சேர் பொன். அருணாசலம் அவர்களும் வந்துபோவார். இவர்மேல் கொண்ட அபார பக்தியினால் சுவாமிகள் இறந்தபின் அவரை அடக்கம் செய்த சமாதியில் கோயிலொன்றைக் கட்ட விரும்பிய சேர் பொன். அருணாசலமும் அவரது துணைவியார் சுவர்ணாம்பிகையும் இணைந்து எடுத்த பெருமுயற்சியால் எழுந்ததே இவ்வாலயமாகும். இவர்கள் இந்தியாவிலுள்ள பிரயாகையிலிருந்து மகரிஷி ஒருவர் பூஜித்து வந்த பாணலிங்கத்தையும் நந்தியம் பெருமானையும் இங்கு எடுத்து வந்து எழுந்தருளப் பண்ணிக் கும்பாபிஷேகம் செய்தனர்.

இக்கோயிலின் மூலமூர்த்தியாக ஸ்ரீ அருணாசலேஸ்வரர் விளங்குகின்றார். மகாமண்டபத்தில் வலது புறத்தில் வல்லபகணபதியும் இடதுபுறமாக பால முருகனும் சுவர்ணாம்பிகையும் எழுந்தருளியுள்ளனர். ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ பத்மநாத சுவாமி, ஸ்ரீசாகம்பரிதேவி நவக்கிரகங்கள் நர்த்தனவிநாயகர் தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, வைரவர், சண்டேசுவரர் பரிவாரத் தெய்வங்களாக அமைந்துள்ளனர். அரசமரத்தடியில் கணபதி அமர்ந்துள்ளார். மேற்கு வாசலில் 36 அடி உயரமாக கோபுரம் அமைந்துள்ளது.

இக்கோயிலின் முதலாவது கும்பாபிஷேகத்தை 1913 ஜனவரி 26 ஆம் திகதி நல்லூர் தியாகராஜக் குருக்கள் செய்து வைத்தார். 1926இல் பொன். அருணாசலத்தின் மகன் மகாதேவாவால் கோயில் திருத்தி அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. 1968, 1992, 1997ஆம் ஆண்டுகளில் இக்கோயிலில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இக்கோயிலின் பக்கத்தில் அம்மன் ஆலயம் ஒன்றும் உள்ளது. இவ்விடத்திலேயே இறந்தவர்களின் அந்தியேஷ்டிக் கிரியைகள் (பிதிர்க் கடன்) நீண்டகாலமாகச் செய்யப்பெற்று வருகின்றன. அஸ்திகரைக்கும் இடமாக இக்கோயின் முன் இருக்கும் கடற்கரை விளங்குகின்றது. எனவே இந்துக்களில் முக்கிய இடமாக இவ்வாலயம் அமைந்துள்ள முகத்துவாரம் எனும் பகுதி காணப்பட்டுவருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கரைசையம்பதி
# திருமங்கலாய் சிவன் கோவில்

**– பண்டிதர் இ. வடிவேல் –**

**இ**து மிகப் பழமைவாய்ந்த சிவன்கோவில், கிளிவெட்டியிலிருந்து ஒன்பது கில்லோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது. திருக்கோணமலை மாவட்டத்தில் கொட்டியாரப் பற்றிலுள்ள சைவக்கிராமம் கிளிவெட்டி, இவ்விடத்திற்குச் செல்வதற்குரிய மார்க்கம் கங்குவேலிச் சிவன்கோவில் வரலாற்றில் கூறப்பட்டிருக்கின்றது. கிளிவெட்டியிருந்து திருமங்கலாய்க்குப்போகும் மார்க்கத்தில் நாலு கில்லோமீற்றர் தூரம் காட்டுப்பாதையினூடாகச் செல்ல வேண்டும். தற்போது இந்த ஆலயம் பெரும்பாலும் அழிந்த நிலையில் இருக்கின்றது. கர்ப்பக்கிருகம் சிதைந்துவிட்டது. அர்த்தமண்டபம் சிதைந்த நிலையில் பாதுகாக்கப் பட்டிருக்கின்றது. மகாமண்டபமும், மற்றும் ஆலயக் கட்டிடங்களும் அத்திவாரமட்டத்தில் சிதைந்து மண்ணில் மறைந்து கிடக்கின்றன. அத்திவாரம் பெரும் கருங்கற்களால் அமைக்கப்பட்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது இங்கு ஒரு பெருங்கோவில் இருந்ததற்குரிய அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆலயங்களுக்குத் தலபுராணம் பாடப் பட்டிருக்குமானால் அந்த ஆலயம் பிரசித்தியும், மகத்துவமும் வாய்ந்ததாக இருக்க வேண்டும். என்ன காரணத்தினால் இவ்வாலயம் அழிந்ததென்பது தெரியவில்லை. ஆனால் ஆலயத்திற்குரிய தலபுராணம் உயிரோடிருக்கின்றது. கொட்டியாபுரப்பற்றிலுள்ள பல ஆலயங்களில் திருக்கரைசைப் புராணம் இன்றும் படிக்கப்பட்டு வருகின்றது. திருமங்கலாய் சுவாமி பெயர் கந்தலிங்கேஸ்வரர். திருமங்கலாய் சிவன் கோவிலில் இருந்து சுவாமி எழுந்தருளிச் சென்று மகாவலிகங்கையில் ஆடியமாவாசையன்றும், மகரமாதத்திலும் தீர்த்தமாடுவார். ஆலயம் அழிந்த பின்னர் இந்த வழமையின்படி கங்குவேலிச் சிவனும், தம்பலகாமம் கோணேசரும் மகாவலிகங்கையில் தீர்த்தமாடி வருகின்றனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் முறையே பொருந்திச் சிறந்து விளங்கியது திருமங்கலாய்ச் சிவன் கோவில். மகாவலிகங்கையின் பெரு வெள்ளப் பெருக்கினால் இந்த ஆலயம் அழிந்திருக்கலாம். ஆலயமழிந்து காடுவளர்ந்து மூடியிருந்த காலத்தில் இங்குள்ள சைவ மக்களின் உதவியோடு ஸ்ரீ தியாகராசாக் குருக்கள் என்பவர் ஆலயத்திலிருந்து லிங்கத்தையும், அம்பாளையும் எடுத்து வந்து வெருகலம்பதியில் ஒரு சிறுகோவில் கட்டி வைத்திருந்தார்கள். அந்தக் கோவிலும் பராமரிப் பிழந்ததினால் இப்போது இந்தத் திருவுருவங்கள் மூதூரிலுள்ள பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்டிருக்கின்றன. சுமார் மூன்றடி உயரமான லிங்கமும், அம்பாளும் சிறிது பின்னப்பட்டிருந்த போதிலும் மிக அழகிய திருவுருவங்களாகக் காணப்படுகின்றன. திருமங்கலாய் ஆலயத்திலிருந்த மணியொன்று கங்குவேலிச் சிவன்கோவிலில் இருக்கின்றது.

திருமங்கலாய் சிவன் கோவிலுக்குரிய திருக்கரைசைப் புராணம் இவ்வாலயத்தின் தொன்மையையும் சிறப்பையும் எடுத்துக்கூறுகின்றன. இலங்கையின் கிழக்குப்பிரதேசங்களில் தமிழ் மன்னர்கள் பன்னெடுங் காலத்திற்கு முன்பே ஆண்டுவந்துள்ளார்கள் என்பதை திருக்கரைசைப்புராணம் கூறுகின்றது. இந்திய மன்னர் பரம்பரையைச் சேர்ந்த சிங்கபூதரன் என்பவன் அயோத்தியிலிருந்து இலங்கைக்கு வந்தான். தற்போது இலங்கைத்துறை என்று சொல்லப்படு மிடத்தில் கப்பலில் வந்திறங்கினான். அப்போது இப்பிரதேசத்தை ஆண்டுகொண்டிருந்தவன் எழில்வேந்தன். இவனுடைய மகள் திருமங்கை. திருமங்கையைச் சிங்கபூதரன் திருமணம் செய்து திருக்கரைசையம்பதியில் அரண்மனையமைத்து நாட்டையாண்டு வந்தான். அரண்மனை அமைத்த இடத்திற்கு இரணியன்குன்று என்று பெயர். இப்பெயர் இன்று திரிபுபட்டு இரணியன்கொட்டு என்று வழங்கிவருகின்றது. இந்தச் சிங்கபூதரனும், மனைவி திருமங்கையும் அமைத்த கோவில்தான் திருமங்கலாய் சிவன் கோவில். இப்போது மிகவும்ள பழுதடைந்த நிலையிலிருக்கின்றது. ஆலயச் சிதைவுகளைத் தேடியெடுத்து ஒழுங்குபடுத்திப் பாதுகாத்தவர் திரு. க. செல்லத்துரைச் சுவாமியார். அன்னாருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு - புளியந்தீவு
# ஸ்ரீ நாகேஸ்வரன் கோயில்

- நயினை ஆ. தியாகராசா -

### அமைவிடம்

அனலைதீவின் தெற்குப்பகுதியில் உப்பு நீர் சதுப்பு நிலத்தால் பிரிக்கப்பட்டு இருக்கும் சிறிய பரப்பளவு கொண்ட இடமே புளியந்தீவாகும். சிறிய தீவாக இருந்தபோதும் பயன்தரும் தென்னை, பனை மரங்களும் படர்ந்த ஆலமரங்களும், வானுயர் அரசு, வேம்பு போன்ற மரங்களும் மருத்து மூலிகைச்செடிகளும் பற்றைக்காடும் நிறைந்த ஒரு சூழலில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

### நிர்வாக அலகு

தீவுப்பகுதி வடக்குப் பிரதேச செயலாளர் ஊர்காவற் துறைப்பகுதிக்குள் அடங்குகின்றது.

### மூலவர்

ஸ்ரீ நாகராஜேஸ்வரி சமேத நாகேஸ்வரன் என போற்றப்படுகின்றார்.

### ஆலயத்தின் தோற்றம்

350 ஆண்டுக்கு முற்பட்டதாக கூறப்பட்டாலும் போர்த்துக்கேயர் நைனாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில் தகர்த்தபோது அங்கிருந்த சிவலிங்கத்தையே இங்கு கொண்டு வந்து வைத்து வழிபாடு செய்த வரலாற்றை மறுப்பதற்கில்லை. எனவே இந்த விடயமாக பல ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும், வரலாற்று ஆசிரியர்களும் இங்கு பிரதிஸ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் நைனாதீவில் இருந்துதான் கொண்டு வரப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றார்கள்.

### ஆதியில் கோவிலின் அமைப்பு

எருக்கலம் பற்றைக்காட்டின் நடுவே நின்ற அரசமரத்தின் கீழ் சிறிய கொட்டிலை அமைத்து நைனாதீவைச்சேர்ந்த நாகப்பனும், இராமு உடையானும் ஆரம்பத்தில் வழிபட்டதாகவும், இவர்களுடன் நைனாதீவு கதிரவேலு கணபதியும் இணைந்து சிறிதாக இருந்த ஆலயத்தை படிப்படியாக புனரமைத்தனர் என்றும் அறிய முடிந்தது. 1950ல் நடந்த கும்பாபிஷேகத்தின் போது ஆலயம் காரைச்சுண்ணாம்பினாலும் காட்டுக்கற்களாலும் கட்டப்பட்டு, மூலவராக நாகதம்பிரானும், மகாமண்டபத்தில் தெற்குப்பக்கம் பார்த்த நிலையில் நடராசப்பெருமானும், சிவகாமி அம்மையாரும் எழுந்தருளி இருந்தார்கள். என்றும் அறிய முடிகின்றது.

### நிர்வாகசபை

கோவிலின் அபிவிருத்தியில் அக்கறை கொண்ட அனலைதீவு மக்கள் ஒன்று கூடி ஓர் நிர்வாகசபையை ஏற்படுத்தினார்கள். இச்சபை மீண்டும் கோவிலை புனரமைத்து 1960ல் ஒரு கும்பாபிஷேகத்தைச் செய்தார்கள். இதனைத்தொடர்ந்து வந்த சபையினரும் பல திருப்பணிகளைச்செய்து இரட்டைப்பஞ்சாங்க அமைப்பிலான தூபியையும், மண்டபங்களையும், அம்மன் சந்நிதியையும், மற்றும் பல திருப்பணிகளையும் செய்து சிறந்த ஒரு சிவாலயமாக அமைத்து 1998ல் குடமுழுக்கு விழாவும் செய்தார்கள்.

### பரிவாரமூர்த்திகள்

பிள்ளையார், முருகன், நவக்கிரகங்கள், பைரவர், சண்டேசுவரர் நந்தி, பலிபீடங்கள் என்பன அமையப்பெற்றுள்ளன.

### இறங்குதுறை

இப்போது அனலைதீவு வடக்கு துறையில் இறங்கித்தான் தெற்கு நோக்கி வரவேண்டும். இப்போது கோவிலுக்கு முன்பாக வந்து படகுகளை அணைத்து இறங்கிவரக்கூடிய வகையில் ஓர் பாலம் ஒன்று அமைக்கும் பணி தொடங்கியுள்ளது.

### குடிமனை இல்லை

கோவிலின் சூழலில் மக்கள் குடிமனை இல்லை. இங்கு அதிகமாக சர்ப்பங்களின் நடமாட்டம் கூடுதலாக உள்ளதென்றும் கூறுகின்றார்கள். ஆலயமும் அதன் சொத்துக்களும் இந்த பயத்தால் பாதுகாப்பாக இருப்பதாக மக்கள் கூறுகின்றார்கள். பூசகரும், வழிபடுவோரும் தூர இடங்களில் இருந்தே வந்து செல்கின்றார்கள். சிறப்புவிழா காலங்களில் மட்டும் தங்கி இருந்து கருமங்களைச் செய்வதாக அறிய முடிகின்றது. இன்னுமோர் காரணம் நாட்டின் போர் சூழலாலும் படைமுகாங்களும் தீவைச் சுற்றி இருப்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழாக்கள் அபிஷேகங்கள்

மார்கழித்திருவெம்பாவையும், ஆருத்ராதரிசனமும் இந்த ஆலயத்தில் பெருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. சிறப்பாக பிட்டுப்பூசையும் மண்சுமந்த விழாவும் கொண்டாடப்படுகின்றது. சிவனுக்குரிய சிவன் இராத்திரியன்று நான்கு கால விஷேட அபிஷேகமும் காலையில் சமுத்திர தீர்த்தமும் நடைபெறுகின்றது. மற்றும் நடேசப்பெருமானுக்குரிய விசேட ஆறு அபிஷேகங்களும் உரிய மாதங்களில் நடைபெறுகின்றன. தினமும் மூன்று காலப்பூசை நடைபெறுகின்றது.

## தலவிருட்சம்

அரசு (சூரியன் இறங்கி வழிபட்டதாகவும் ஒரு ஐதீகம்)

## தீர்த்தம்

நாகபுஸ்கரணி திருமஞ்சனக்கிணறு இன்னும் ஓர் கிணறும் நன்நீராக இருக்கின்றன.

கோவிலின் மேற்குப்புறமாக உள்ள மேட்டுநிலப்பாறையிலும் அனலைதீவு மேற்குக் கடற்கரையில் உள்ள பாறையிலும் 18" அங்குல நீளம் 9" அங்குல அகலத்தில் பாதங்கள் பதியப்பட்டிருப்பதாகவும் இவை அனுமாரின் காலடிகள் என்றும் ஊர் மக்கள் கூறுகின்றார்கள்.

## கடலுக்குள் மண்டபம்

இந்த ஆலயத்தின் தென்புறமாக நயினை நாகபூஷனி அம்பாள் கோவிலுக்கு நேராக 15 x 5 அடி அளவிலான படிக்கட்டுகளுடனான ஒரு கட்டுமானம் கடலுக்குள் இருக்கின்றது என்றும் அறியமுடிகின்றது.


சந்திரனொடு சூரியன் தாமுடன்
வந்து சீர் வழிபாடுகள் செய்தபின்
ஐந்தலை அரவின் பணிகொண்டருள்
மைந்தர் போலும் மணி நாகேச்சரமே

- அப்பர் குறுந்தொகை -

**உசா நூல்கள்:**


நயினை நாகபூஷனி தேர்த்திருப்பணி மலர் - 1957
பூர்வீக நயினை சோதிட கலாநிதி ஐயாத்துரை 1949
புளியந்தீவுகும்பாபிஷேக மலர் - 1998
சிவராத்திரி மலர் - 1982


*நயினை ஆ. தியாகராசா*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுவில் கல்வம்
# சிவ சந்திர மௌலீசர் ஆலயம்

**– திரு. ஆர். வி. கந்தசுவாமி –**

ஸ்ரீதக்ஷிண கைலாயமெனப் பெயர் பெற்று விளங்கும் இலங்கையின் வடபாகமாகிய தென்மராட்சி பகுதியில் மட்டுவில் என்னும் கிராமத்தில் கல்வம், சிவ மந்திர மௌலீசர் சமேத சாந்தநாயகியுடன் அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஆலய வரலாறு.

இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் சோழ நாட்டை ஆண்டு வந்த சோழ அரசனுடைய குமாரன் ஒருவன் வடநாட்டிலுள்ள திருக்கேதாரம் என்னும் தலத்திற்கு வடமொழி பயிலச் சென்றிருந்தான். சிவபக்தன் ஆகிய அவன் நாள்தோறும் திருக்கேதாரநாதரை வழிபடுவது வழக்கம். கேதாரப் பெருமான் சந்நிதியில் மன்மதனால் பூசிக்கப்பட்ட ஒரு தெய்வீக சிவலிங்கம் இருந்தது. அச்சிவலிங்கத்தில் மனதைப் பறிகொடுத்த இளவரசன் அங்குள்ளார் அனுமதியோடு எடுத்து வந்து தன் அரண்மனையில் ஓர் சிறு ஆலயம் அமைத்து பூசித்து வந்தான்.

அதன் பின்பு அவ்வரசிளங்குமரன் பாண்டிய இராசாவினுடைய இராசதானியாகிய மதுராபுரியில் வில்வித்தை முதலியவைகளை அதிதீவிரமாக கற்றுக் கொண்டிருந்தனர். அது சமயத்தில் யாழ்ப்பாணம் பரிபாலிக்க அரசன் இல்லாமல் இடர்ப்பட்டது. அதனால் இங்கு வாழ்ந்த சைவ வேளாண் பிரபு ஒருவர் சோழ நாடு சென்று சோழ மகாராசாவைக் கண்டு யாழ்ப்பாணம் அரசன் இல்லாமல் சீரழிவதைக் கூறி அரசை ஏற்கும்படி விண்ணப்பித்தார். சோழ மகாராசனும் பாண்டிய இராசனுக்கு தன் மைந்தனை அனுப்பும்படி தெரிவித்தான். பாண்டிய இராசாவும் அவ் இராசகுமாரனை அழைத்து விடயத்தைக்கூறி சோழ நாட்டிற்கு அனுப்பி வைத்தான். அவனும் அங்கு சென்று தந்தையார் கொடுத்த பல வரிசைகளோடும், அச் சிவலிங்கப் பெருமானுடனும் யாழ்ப்பாணம் வந்து நல்லூரிலே ஓர் அரண்மனை கட்டுவித்து சிவலிங்கப் பெருமானுக்கும் ஓர் ஆலயம் அமைத்து கைலாயநாதர் என்னும் திருநாமம் சூட்டி பிரதிட்டை செய்து வழிபட்டு அரசியற்றி வரலானான். இவனுக்கு ''சிங்கை ஆரிய சக்கரவர்த்தி'' என்னும் பட்டமும் சூட்டப்பட்டது. பல ஆண்டுகளின் பின் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசு அழிந்து இற்றைக்கு முன்னூற்றைம்பது வருடங்களுக்கு முன் போர்த்துக்கீசர் ஆட்சி ஆரம்பமாகியது. அவர்கள் சைவ சமயத்தையும் சைவ ஆலயங்களையும் அழிக்கத் தொடங்கினர். அந்நேரத்தில் பல சைவ ஆலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. கைலாயநாதர் கோவிலும் அழிக்கப்படுவதற்கு முதல் நாள் அதனை அறிந்த கோவில், குருக்கள் கைலாய நாதராகிய சிவலிங்கப் பெருமானையும் கைலாயநாயகியாகிய தேவியையும் ஓர் சிறு உருளை பூட்டிய வண்டியில் வைத்து தம்முடைய ஊராகிய மட்டுவிலுக்குக் கொண்டு வருவதற்காக இழுத்துவரமுற்பட்டார். பாரம் அதிகமாக இருந்தமையால் அவரால் இழுத்து வரமுடியவில்லை. அக்காலத்தில் பாதைகளும் சீரானதாக இருக்கவில்லை. எனவே தேவி விக்கிரகத்தைக் கோவில் திருமஞ்சனக் கிணற்றுள் இறக்கிவிட்டு சிவலிங்கப்பெருமானை மாத்திரம் இரவோடிரவாக மட்டுவிலுக்குக் கொண்டு வந்தார். அக்காலத்தில் மட்டுவிலில் செங்கல் திருப்பணியாக புதுக்குவாரின்றி இருந்த சிவாலயத்தின் திருமஞ்சனம் கிணற்றுள் இறக்கிவிட்டார். இரண்டொரு தினத்திற்குப்பின் அந்த ஆலயமும் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டது. திருமஞ்சனக் கிணறும் தூர்ந்துவிட்டது. அத்திருக்கோவில் கட்டிடம் இப்போதும் சிதைவுபட்டு இருப்பதைக் காணலாம்.

பல ஆண்டுகளின் பின்பு அக்காலத்தில் சைவப் பிரபுவாக இருந்த மட்டுவில் வன்னியசிங்க முதலியாருடைய கனவில் சிவலிங்கப் பெருமான் தான் இருக்கும் இடத்தைக் காண்பித்து தம்மை பிரதிட்டை செய்து வழிபடும்படி ஆஞ்ஞாபித்தருளினார். முதலியாரும் மகிழ்ச்சியுற்று விடிந்தவுடன் வேலைக்காரரை உடன் கொண்டு சென்று தூர்ந்து நிலமாய்க் கிடந்த அத்திருக்கிணற்றை மெதுவாகக் கல்லுவித்து அவ்விடத்தில் பெருமானைக் கண்டு ஆனந்த பரவசமாகி அவரை எடுத்து பாலாவயத்தில் வைத்து வழிபட்டார். பின்னர் இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களை வரவழைத்து சிவாகம விதிப்பிரகாரம் சிவலிங்கப் பெருமானுக்கும் தேவிக்கும் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், நிர்த்த மண்டபம் ஆகியன வகுத்து பிரதிட்டை செய்து மகாகும்பாபிஷேகம் செய்தார். அப்பிரதிட்டையில் சிவலிங்கப் பெருமானுக்கு சிவசந்திர மௌலீசர் என்றும் தேவியாருக்கு சாந்தநாயகி என்றும் திருநாமம் சூட்டி வழிபட்டனர். அக்காலம் தொடக்கம் சிவசந்திர மௌலீசர் எழுந்தருளியிருக்கும் காரணத்தால் மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்று பெயர் உண்டாயிற்று. சந்நிதானத்தில் இருக்கும் தீர்த்தம் சந்திரபுஷ்பகரணி தலவிருட்சம் பலா, திருமஞ்சனக் கிணறு இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுரர் திருக்கோவில்
## கோயில்குளம், வவுனியா.

– திரு. ஆறுமுகம் நவரத்தினராசா –

### தலத்தின் இருப்பிடம்

கோவில்குளம் சிவாலயம் என்னும் தலம் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ளது. வவுனியா நகரில் இருந்து நகரப்பேருந்து சிதம்பரபுரம் வழிசெல்லும் பாதையில் சாலையோரமாக அமைந்துள்ளது. நகரத்தில் இருந்து 3 கிலோ மீற்றர் தூரமும் புகையிரத நிலையத்தில் இருந்து ஆட்டோ வசதிகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| சுவாமி | - அகிலாண்டேசுரர் | அம்பாள் | - அகிலாண்டேஸ்வரி |
| தீர்த்தம் | - அமிர்தவர்ஷினி | விருட்சம் | - கொன்றை மரம் |

### திருக்கோவில் அமைப்பு

தலம் அமையப்பெற்ற இட விஸ்தீரணம் 4 ஏக்கர். சாலையில் இருந்து இறங்கியவுடன் ஆலய முகப்பில் இருப்பவர் தலவிநாயகர் ''மூத்த விநாயகர்'' என்ற காரணப்பெயரை உடையவர். ஆலயம் கோபுரம் அற்ற மண்டபம் முகப்பில் காட்சி தருகின்றது. படியைத் தாண்டி உட் சென்றால் யாவர் உடம்பும் ஒருமுறை மயிர் சிலிர்க்கும். நான்கு பக்கமும் கொங்கிறீற்றாலான மண்டபங்கள். தென் இந்தியத் தலங்களில் பாரிய கற்களைக் கொண்டு மண்டபம் இணைத்திருப்பது போல் இவை காட்சி அளிக்கின்றது. உயர்ந்த கொடிக் கம்பம், நந்தி, பலிபீடம் அழகாக அமைக்கப்பட்டுள்ளது. உள் பிரகாரம் கிழக்கு மேற்காக 150 அடியும் வடக்குத் தெற்காக 90 அடிகளும் விஸ்தீரணம் உண்டு. நிலங்கள் யாவும் சாணம் போட்டு மெழுகப்பட்டுள்ளது. வலமாக வரும் போது தம்ப மண்டபம் முடிந்தவுடன் நடராசர் சபை தெற்கு நோக்கி அமைந்துள்ளது. அதை அடுத்து அம்பாள் சந்நிதியும் முகப்பில் தம்பம், பலிபீடம், நந்தியும் அமைந்துள்ளன. அவற்றைக் கடந்து வந்தால் மூலவர் கோஷ்டானத்தில் நிருத்த விநாயகர், தட்சணாமூர்த்தி தென்மேற்கு மூலையில் பிரகாரவிநாயகர் தரிசனம் முடிந்தால் லிங்கோற்பவர், வடமேற்கு மூலையில் பிரகாரத்தில் வள்ளி தேவசேன சமேத சுப்பிரமணியர், கோஷ்டானத்தில் பிரம்மா, துர்க்கை மூர்த்திகளும், ஈசான மூலையில் தெற்கை நோக்கியபடி வசந்த மண்டபமும், மேற்கை நோக்கியபடி யாகசாலையும் அமையப் பெற்றுள்ளது.

இரண்டாம் பிரகாரத்தில் வலமாக வருகின்ற போது அம்பாள் சந்நிதியின் முகப்பில் அமிர்தவர்ஷினி என்னும் புண்ணிய தீர்த்தம் உள்ளது. வெண்சுண்ணாம்புக் கற்களால் அழகுறக் கட்டப்பட் படிக்கட்டுக்களுடன் சிறப்பாகத் தோற்றம் தந்து கொண்டிருக்கின்றது. வடமேற்கு மூலையில் திருக்கோவிலின் மூன்று வாசல் சப்பறம் அழகான மண்டபத்தில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

வடக்கு வீதியில் திருக்கோவிலின் அன்னதான மண்டபம், ஆதரவு அற்ற குழந்தைகளின் வதிவிடம் அமையப் பெற்றுள்ளது. ஈசானமூலையில் திருத்தலத்தின் தேர்க்கொட்டகை அமையப் பெற்றுள்ளது. அத்துடன் திருக்கிணறும் வெட்டப்பட்டுள்ளது.

### தலப்பெருமை

இலங்கையில் உள்ள சிவஸ்தலங்களுக்குள்ளே நடுநாட்டில் இருக்கும் வவுனியா அகிலாண்டேசுரர் திருத்தலம் பல வகையிலும் சிறப்புடையது. கோவில்குளம் சிவாலயம் என்ற காரணப்பெயருடன் அருள்பாலித்து வருகின்றது.

### சிறப்புடைமூர்த்தி - மூத்தவிநாயகர்

இவ்வாலயத்தின் முகப்பில் வீற்றிருந்து அருள்பாலிப்பவர் மூத்தவிநாயகர். இச்சிவாலயப் பணி ஆரம்பிப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே இவ்விநாயகர் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டு இக்கிராம மக்களால் விழாக்கள் எடுக்கப்பட்டு வந்துள்ளது. அந்த விநாயகனின் திருவருளால்தான் சிவப்பணி மேற்கொள்ளப்பட்டு இன்று ஆறாவது ஈஸ்வர தலமாகப் போற்றப்பட்டு வருகின்றது. மூத்த விநாயகரின் பெருங்கருணையை நினைத்து வியப்புறுகின்றனர் மக்கள்.

### திருக்கோவிலின் விழாக்கள்

ஓராண்டில் பன்னிரண்டு மாதங்களிலும் பல்வேறு விழாக்கள் நடைபெறுகின்றன. அகிலாண்டேசுரர் ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் தனிச் சிறப்புடையனவாகும். மாதம்தோறும் நடைபெறும் விழாக்கள் பௌர்ணமி, பிரதோஷம், சுக்கிரவாரம், சோமவாரம் என்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை - சங்கராந்தித் தீர்த்தம், மணவாளக் கோலம் சித்திரைச் சதயம் அப்பர் குருபூசை

வைகாசி - சங்கராந்தித் தீர்த்தம், வைகாசி விசாகம் முருகப் பெருமான் திரு அவதாரவிழா மூல நட்சத்திரம் திருஞானசம்மந்தர் குருபூசை

ஆனி - சங்கராந்தித் தீர்த்தம், உத்தர நட்சத்திரம் நடேசர் அபிஷேகம், மகநட்சத்திரம் மாணிக்கவாசகர் குருபூசை

ஆடி - சங்கராந்தித் தீர்த்தம், ஆடிப்பூரத்தை அந்தமாகக் கொண்டு அம்பாளுக்கு பத்து நாள் உற்சவம், சுவாதி நட்சத்திரம் சுந்தரர் குருபூசை

ஆவணி - சங்கராந்தித் தீர்த்தம், ஆவணி சதுர்த்தி விநாயகர்விழா, மூலநட்சத்திரம் சிவன் பிட்டுக்கு மண் சுமந்த விழா, ஆவணி ஓணம் அம்பாள் உற்சவம்

புரட்டாதி - சங்கராந்தித் தீர்த்தம், நவராத்திரி விழா 10 நாட்கள்

ஐப்பசி - சங்கராந்தித் தீர்த்தம், கந்தசஷ்டி விழா


கார்த்திகை - சங்கராந்தித் தீர்த்தம், திருக்கார்த்திகை, பிள்ளையார் பெருங்கதை

மார்கழி - சங்கராந்தித் தீர்த்தம், திருவெம்பாவை, திருவாதிரை ஆருத்திரா தரிசனம்

தை - சங்கராந்தித் தீர்த்தம், தைப்பொங்கல், தைப்பூசம், தை அமாவாசை அபிராமிப்பட்டர் விழா

மாசி - சங்கராந்தித் தீர்த்தம், சிவராத்திரி விழா, மாசி மகம்

பங்குனி - சங்கராந்தித் தீர்த்தம், பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்டு 15 நாட்கள் சுவாமி உற்சவம்



கோவில்குளம் சிவன் கோயில் - வவுனியா

## திருக்கோவிலின் சமயப்பணி

திருக்கோவில்கள் நித்தியபூசை, நைமித்திய பூசைகளுடனும், விழாக்களுடனும் மட்டும் நின்று விடாமல் நம் முன்னோர்களால் வழிகாட்டப்பட்டுப் பெற்று வந்த புராண படலங்கள், திருமுறை முற்றோதல்கள் ஆலயங்கள் தோறும் காலத்துக்குக் காலம் நடைபெற்று வரவேண்டும். இந்த வகையில் எமது திருக்கோவிலில் 1996ம் ஆண்டு நடைபெற்ற பெருஞ்சாந்தி விழாவைத் தொடர்ந்து வருடந்தோறும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நாள்முதல் (12) பன்னிரு திருமுறைகளும் முற்றோதல் செய்யப்பட்டு தைப்பூசத்தினத்தில் பூர்த்தி விழா எடுத்து வருகின்றோம்.

மாதந்தோறும் வருகின்ற மகநட்சத்திர தினத்தன்று திருவாசகம் முற்றோதல் செய்து வருவதுடன் மார்கழி மாதம் (30) முப்பது தினங்களும் வவுனியா நகரைச் சூழ்ந்துள்ள கிராமங்கள் தோறும் சென்று ஆலயங்களில் திருவாசக முற்றோதலைச் செய்து வருகின்றோம்.

விநாயகர்சஷ்டி, கந்தசஷ்டி, திருவெம்பாவைக் காலங்களில் முறையே விநாயகர் புராணம், கந்தபுராணம், திருவாதவூரர் புராணம் படிக்கப்பட்டு பயன் சொல்லப்பட்டும் வருகின்றது.

மகோற்சவ காலங்களில் எமது திருக்கோவிலில் (12) பன்னிரு திருமுறைகள் ஓதப்படுவது வழக்கமாக உள்ளது. இவை யாவும் நாங்கள் திருமுறைகளுக்கும் புராணங்களுக்கும் எடுக்கப்பட்டு வருகின்ற எழுச்சி விழாவாகும்.

## சமூகப்பணி

திருக்கோவில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமன்றி அவை சமூக நோக்கத்துடனும் செயல்படவேண்டும். அப்போதுதான் சமூகத்தின் பங்கு ஆலயங்களைச் சிறப்பாக நிர்வகிக்கப் பெருந்துணையாக அமையும். எமது திருக்கோவிலில் இதனைக் கருத்தில் கொண்டு ஆதரவு அற்ற சிறுவர்களுக்காக ஒரு இல்லம் அமைத்து இன்றுவரை எண்பதுக்கு (80) மேற்பட்ட சிறார்களை உள்வாங்கி அவர்கள் நலனைச் சிறப்பாகப் பேணி வருகின்றோம்.

சமய ஆசார வழிமுறைகளைப் பேணிக் காக்கவேண்டும் என்ற வகையில் மாதம் தோறும் மாணவர்களுக்கு சமய தீட்சைகள் செய்து வருவதுடன் அது பற்றிய விளக்கங்களை பதிப்பித்து இலவச வெளியீடாக வழங்கி வருகின்றோம்.

சிறப்பான திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு சைவ சமய அடிப்படையில் திருமணங்களைச் செய்வதற்கான வசதிகள் செய்துள்ளோம். பெண் குழந்தைகளுக்கு தொழில் கல்விகள் வழங்க அதற்கான ஒரு மண்டபமும் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது. இத்துடன் மாணவர்களுக்கு சரியைத் தொண்டை நினைவுபடுத்த ஆலயத்தின் உள்பிரகாரம் முழுவதும் சாணங் கொண்டு மெழுகும் வழக்கத்தை இன்று வரை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவு எய்தியுள்ள புதியதிருப்பணி
## தீர்த்தம் அமிர்தவர்ஷினி

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பது ஒரு ஆலயத்தின் பூரண அமைப்பாகும். இதற்கமைய எமது திருக்கோவிலின் தென் பாகத்தில் அம்பாள் சன்னிதிக்கு முன்பாக ஒரு அழகான திருக்குளம் வெட்டப்பட்டு வெள்ளைக் கருங்கல் - சுண்ணாம்புக்கல் கொண்டு அழகான படிக்கட்டுக்கள் பொலிவுற திருப்பணி நிறைவு செய்துள்ளோம்.

## நிறைவு செய்யப்பட வேண்டிய திருப்பணி
## இராஜகோபுரம் - 108 அடி

''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பதற்கமைய ஒரு சிறந்த இராஜகோபுரத்தை அமைக்க திருவருள் கூடி வருகின்றது. காலக்கிரமத்தில் இதற்கான திருப்பணியையும் அவன் அருள்கொண்டு நிறைவு செய்ய எண்ணங் கொண்டுள்ளோம்.


## முகாமைக்கட்டமைப்பு
## அறங்காவலர்கள் - 04 நிர்வாகசபை உறுப்பினர்கள் - 11
## பொதுச்சபை (மகாசபை)

திருக்கோவிலின் உற்சவத்துக்கு உரிய உபயகாரர்கள். மகாசபை உறுப்பினர்கள் ஆவர்.

## ஆலய வரலாறு

கோவில்குள கிராம மக்களின் மனதில் என்றும் நிலைத்து நிற்பவர் மூத்த விநாயகர். அவரின் பெருங்கருணை தான் இன்று மிகப் பெரிய சிவாலயம் உருவாகுவதற்கு வழி சமைத்தது.

அவ்வாலயத்தைப் பராமரிப்பதற்காக ஒரு சபையை 1987ம் ஆண்டு அமைத்துக் கொண்டோம். ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சைவ மகா சபை என 11 பெயரை உள்ளடக்கி ஆலயத்தைப் பரிபாலனம் செய்து வந்த கால கட்டத்தில் ஆலயத்துக்கான விஸ்தீரமான காணி ஆலயத்தின் பின்புறத்தில் இருந்து வந்தது. இவை அன்றைய அரசாங்க அதிபராக இருந்து வந்தவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் எமது நாட்டில் பாடல் பெற்ற தலங்களான திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், ஏனைய சிவாலயங்களான கீரிமலைச் சிவவாலயம், ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் போன்ற ஆலயங்கள் வழிபாட்டுக்குப் போக முடியாத நிலை. சிவ வழிபாடு செய்வதற்கு ஆலயம் இல்லாத சூழ்நிலை. இருக்கும் ஆலயங்களுக்குச் சென்று வழிபட முடியாத கஷ்டம். இதைக் கருத்திற் கொண்டு ஒரு சிறிய சிவாலயம் ஒன்றை நாம் ஸ்தாபிக்க வேண்டும் என்ற கருத்தை எங்கள் நிர்வாக சபையிடம் முன் வைத்தோம். அவர்கள் இப்பணியை நாம் எப்படிச் செய்வது சிவ ஆலயத் திருப்பணி மிக கஷ்டமான பணி என யோசித்தார்கள்.



இந்நிலையில் எமது நிர்வாகத்தில் பொருளாளராகப் பணி புரிந்த திரு.நா.இராமநாதன் அவர்கள் தனது சொந்த விடயமாக இந்தியா போய் இருந்தார். அவருக்கு காஞ்சிபுரம் போகும் வாய்ப்புக்கிடைத்தது. அங்கு சென்றவருக்கு காஞ்சிப் பெரியவரைத் தரிசிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது. ஆசீர்வாதம் வழங்கிய பெரியவர் நீர் வந்த காரணம் என்ன என்று வினவிய போது எதைச் சொல்வது என்று தடுமாற்றம் அடைந்த அன்பர் உடனே சிவாலயம் கட்டப் போகின்றோம் என்று கூறிவிட்டார். மிகச் சந்தோசம் அடைந்த பெரியவர் அதற்கான வரைபடங்கள் எதுவும் கொண்டு வந்துள்ளீர்களா என்று வினவ அன்பர் அப்படி ஒன்றும் கொண்டு வரவில்லை என்று சொன்னவுடன் காணியின் விஸ்தீரணத்தை கேட்டறிந்து அதற்குள் அமைக்கப்பட வேண்டியுள்ள ஆலயத்தின் வரைபடத்தையும் அங்கு உள்ளவர்கள் மூலம் வரைந்து இவ்வாலயத்தின் அங்குரார்ப்பண நாளையும் நிர்ணயித்து அதற்கான திரவியங்களையும் நல்கி குறிப்பிட்ட திகதியில் அத்திவாரத்தைப் போடும் படியும் சிவாலயம் வெகு விரைவில் திருப்பணி நிறைவடையும். இதற்கான மூல விக்கிரகத்தை தாங்களே தருவதாகவும் கூறி ஆசி வழங்கினார்.

அன்பர் இராமநாதன் மட்டில்லா மகிழ்வுடன் இந்தியாவில் இருந்து தொடர்பு கொண்டார். தான் ஆலயம் கட்டுவதற்காக இந்தியாவில் இருந்தே சிற்பிகளை அழைத்து வருவதாகவும் இவ்விடம் மேற் கொள்ளப்பட வேண்டிய அலுவல்களை உடனே செய்யும் படியும் பணித்தார். ஆனால் எம்முடன் இணைந்து இருந்தவர்கள் இப்பணியை நிறைவு செய்வது முடியாத காரியம். நாங்கள் உதவியாக இருக்கின்றோம். உங்கள் எண்ணப்படி திருப்பணியைச் செய்யுங்கள் என்று கூறிவிட்டார்கள். அன்பர் இராமநாதனும் அடியேனும் திரு.இ.சண்முகம் அவர்களும் திரு.ஆ.உமாதேவன் அவர்களுமாக இப்பணிக்கான பூர்வாங்கப் பணியைச் செய்வதற்கு முன் வந்தோம். குறிப்பிட்ட காலத்தில் அன்பர் இராமநாதன் இரண்டு சிற்பாசாரிகளையும் அமைக்கக் கொண்டு இலங்கை வந்துவிட்டார்.

சங்கராச்சாரிய சுவாமிகளின் வாக்கின்படி 18.01.1989 தைத்திங்கள் 5ம் நாள் அதிகாலை 4 மணிக்கு சங்குஸ்தாபனத்தை நிறைவு செய்தோம். தொடர்ந்து ஆலயத் திருப்பணி நாளுக்கு நாள் புதுப்பொலிவு பெற்றது. வள்ளல்கள் வாரி வழங்கிக் கொண்டே இருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் 1993ம் ஆண்டு காஞ்சிப் பெரியவரிடம் இருந்து மூல விக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டு வருவதாக திருவாளர் இராமநாதன் சென்று இருந்தார். காஞ்சி சென்றவருக்குப் பெரியவர் அதற்கான மூலலிங்கம் பாணலிங்கம் காசியில் தங்கள் மடத்தில் இருப்பதாகவும் அங்கு சென்று அதைப் பெற்று வருமாறும் பணித்தார். இதன் பிரகாரம் அன்பர் இராமநாதன் காசி சென்று உரிய இடத்தில் லிங்கத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பும் போது அன்பர் காசியிலேயே அமரத்துவம் அடைந்துவிட்டார். லிங்கம் தமிழ் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டது. ஏனைய சில விக்கிரகங்கள் தமிழ்நாடு சமய புரத்திலும், தாமிர விக்கிரகங்கள் கும்பகோணம் சுவாமி மலையிலும் உருவாக்கப்பட்டு வரவழைத்து ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கைலாசநாதர் கோயில்

– பேராசிரியர் வி. சிவசாமி –

இலங்கையிலே தொன்றுதொட்டு நிலவிவரும் இந்து சமயமரபிலே சிவாலயங்கள் முக்கியமான ஓரிடத்தை வகித்து வருகின்றன. இங்கு பிரபல்யமாக விளங்கிவரும் புராதன ஈஸ்வரங்களிலே (சிவன் கோவில்களிலே) கிழக்கிலே திருக்கோணேஸ்வரம், மேற்கிலே திருக்கேதீஸ்வரம் முன்னேஸ்வரம், வடக்கிலே திருத்தம்பலேஸ்வரம் (அல்லது நகுலேஸ்வரம்), தெற்கிலே சந்திரசேகரேஸ்வரம் நன்கு குறிப்பிடத்தக்கவை. இவை இலங்கையின் நான்கு கரையோரங்களில் அமைந்துள்ளன. இவற்றுள் திருத்தம்பலேஸ்வரமும் நகுலேஸ்வரமும் ஒன்றன்று. இருகோவில்கள் என்றகருத்தும் உள்ளது. சந்திரசேகரேஸ்வரம் எது என்பது உறுதியாகக் கூறமுடியாதாயினும் அது இலங்கையின் தெற்கே மாத்தறையிலிருந்த சிவாலயமெனக்கருதப்படுகின்றது. இவற்றைவிட வேறு பல கோவில்களும் இருந்தன.

மக்கள் வாழும் தேசங்களையும், நகரங்களையும், கிராமங்களையும், தெய்வங்கள் பாதுகாக்கின்றனர் என்ற கருத்து இலங்கை இந்து பௌத்த மரபுகளிலே நன்கு நிலவி வந்துள்ளது.

வட இலங்கையிலே யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு சுமார் கி.பி. 1250 - 1619 வரை நிலவிய யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக நல்லூர் விளங்கி வந்துள்ளது. இங்கு அமைக்கப்பட்டிருந்த அரசமாளிகை அதன் அருகிலும், சுற்றுவட்டத்திலும் கோவில்கள் பற்றிக் குறிப்பாக கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்கள் குறிப்பிடுகின்றன. இவற்றுள்ளே கைலாயமாலை ஏறக்குறையச் சமகாலத்திலேயெழுதப்பட்டதாகும். யாழ்ப்பாணவைபவமாலை மக்ரா எனும் தேசாதிபதியின் வேண்டுகோளின்படி மாதகல் மயில்வாகனப் புலவரால் எழுதப்பட்டது என அறியப்படுகிறது. ஆனால் ஒரு சாரார் இது சற்றுபிற்பட்டதெனக் கூறினும் இன்றுகிடைத்துள்ள கைலாயமாலை, வையாபாடல் ஆகியனவற்றையும் இன்று கிடைக்காத இராச முறை, பரராசசேகரன் உலா ஆகியனவற்றையும் அடிப்படையாகக்கொண்டு தாம் எழுதியதாக நூலாசிரியரான மயில்வாகனப்புலவர் நூலின் முன்னுரையிலே குறிப்பிட்டுள்ளார். மேலும் கி.பி. 1619ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண இராச்சியத்ததைக் கைப்பற்றியதனைத் தம் ஆட்சிக்குட்படுத்திய போர்த்துக்கீசர் தமது செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடும்போது இங்கு இருந்த பல கோவில்கள் பற்றியும், மக்களின் சமயப்பற்றுப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இவர்கள் கோவில்களை அழித்துத் தரைமட்டமாக்கித்தமது கோவில்கள், கோட்டைகளை கட்டினர். ஒரு போர்த்துக்கீச அறிஞருடைய கூற்றின்படி ஒரு போர்த்துக்கீசத்தளபதி யாழ்ப்பாணத்திலே 50 இந்துக் கோவில்களை அழித்தான் எனப்போற்றப்படுகின்றான். இந்தத் தொகையை ஏற்காவிடினும் பல கோவில்கள் இருந்தமை உண்மை எனக் கொள்ளுதல் தவறு அன்று.

மரபு வழிச் சான்றுகளின்படி யாழ்ப்பாண அரசை நிறுவியவனாகிய சிங்கையாரியன் தலைநகரான நல்லூரிலே அரண்மனையையும் அதன் அயலிலே முருகன் ஆலயத்தினையும் கிழக்கிலே வெயிலுகந்தர் பிள்ளையார் ஆலயம், வடக்கிலே சட்டநாதர் ஆலயம், மேற்கிலே வீரமாகாளி அம்மன் ஆலயம், தெற்கிலே கைலைவிநாயகர், கைலாசநாதர், கைலைநாயகி ஆலயங்களையும் கட்டினார் என அறியப்படுகின்றது. இவற்றுடன் மேற்கிலுள்ள தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தையும் ஒரு சாரார் சேர்த்துக் கொள்ளுவர். பழைய தலைநகரான நல்லூர் இன்றைய யமுனாரியை அடுத்தபகுதிகள், முத்திரைச் சந்தைப்பகுதியில் அமைந்திருந்தது. கந்தன் ஆலயம், யமுனாரிக்கு அருகிலேதான் இருந்ததாக அறியப்படுகின்றது. இன்றைய கந்தன் ஆலயம் இருக்குமிடம் குருக்கள் அல்லது பிராமணவளவு எனக் கூறப்படுகின்றது. போர்த்துக்கீசரின் சுதேசக்கலை, சமய அழிவுக் கொள்கையால் முன்னர் இருந்த கட்டிடங்களும் பிறவும் முற்றாக அழிவுற்றன.

எனினும் மேற்குறிப்பிட்டவாறு அரசமாளிகை அயலில் உள்ள கோவில் ஆகியனவற்றை மையமாகக் கொண்டு மற்றைய பிரதான ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளனவாகத் தென்படுகின்றது. தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து குடியேறியோரும், அரசு அமைத்தோரும் தமிழ்நாட்டிலுள்ள கோவில்களைப் பின்பற்றியுமிவற்றை அமைத்தனர் எனலாம். எடுத்துக்காட்டுகளாக வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம் தென் தமிழ்நாட்டிலுள்ளது. சீர்காழியிலுள்ள சிவாலயத்திற்குச் சட்டநாதர் கோவில் பெயருண்டு. கைலாசநாதர் பெயரிலும் தமிழ் நாட்டிலே கோயில்கள் உள்ளன. நல்லூர் என்ற பெயரிலே தமிழகத்திலே பல ஊர்கள் உள்ளன.

முன்னர் குறிப்பிட்டவாறு, தலைநகருக்குத் தெய்வங்களின் திருவருளும் பாதுகாப்பும் வேண்டுமெனக் கருதி இவ்வாலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைக்கப்பட்டிருக்கலாம். மேலும் திரு.க.ந.கிரிதரன் என்பவர் குறிப்பாக இங்குள்ள பிரதான அரண்மனை கோயில் முதலியனவற்றை மையமாகக் கொண்டு நகர அமைப்பும் கோயில்களும் அமைக்கப்பட்டிருக்கலாம் என நலலூர் ராஜதானிநகர அமைப்பு (1996) எனும் ஆய்வுநூலிலே குறிப்பிட்டுள்ளார். எனவே இது தமிழகத்திலுள்ள கோயில் நகர அமைப்புப் போன்றதாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு போர்த்துக்கீசரின் சுதேசச் சமய, பண்பாட்டு அழிவுக் கொள்கையினாலே இங்கிருந்த கோவில்கள் அனைத்தும் அழிவுற்றன. எஞ்சியவற்றை இங்கு வாழ்ந்த தமிழ் மக்களும் பிறரும் செவ்வனே கவனித்திலர். அவற்றின் பெறுமானத்தையும் சிறப்பையும் உணராது அவர்களிற் சிலரும் சூறையாடினர். மேலும் இந்துக் கோவில்களின் வரலாறு தக்கவாறு பேணப்பட்டில, பேணப்பட்டவை பல வேற்று நாட்டவர்களின் ஆட்சியாலும் மக்களின் புறக்கணிப்பினாலும் இன்று கிடைத்தில. இக்குறிப்புகளுடன் நல்லூர் கைலாசநாதர் ஆலய வரலாறு பற்றிய சில கருத்துக்களை எடுத்துக் கூறலாம்.

கைலாசநாதர் பற்றிக் கூறும் முன் சைவசமய மரபிலே கைலாசம் பற்றிச் சிறிது கூறுதல் அவசியமாகின்றது. மிகமிகப்பழைய காலம் தொட்டுத்தூய வெண்ணிறமான பனிப்படலமுள்ள கைலாச அல்லது கைலாய மலை முழுமுதற்கடவுளாகிய சிவபிரான் அவரது சக்தியான பார்வதியின் இருப்பிடமாக சைவசமயத்தவர்களின் உள்ளங்களை நன்கு கவர்ந்துள்ளது. உண்மையில் குறியீடாக இறைவனின் இருப்பிடமாகிய உள்ளங்களையே இம்மலை குறிக்கின்றது. ஒவ்வொருவரின் உள்ளத்தினை இறைவன் இருப்பிடமாகக் கொண்டுள்ளார் என்பதாகும். மேற்குறிப்பிட்டமலையின் ஒரு பக்கத்திலே சிவன் பார்வதியின் மூத்த திருக்குமாரனும், இடையூறுகளை நீக்கி அருள்பாலிப்பவருமாகிய விநாயகர் பெற்றோரைத் தியானித்துக் கொண்டிருக்கிறார். ஆன்மா இறைவனை நோக்கித் தியானித்துக் கொண்டிருப்பதை இது சுட்டுகின்றது எனக் கருதப்படும். எனவே உலகின் பெற்றோராகிய சிவன் பார்வதி அவர்களின் செல்லப்பிள்ளையாகிய விநாயகர் ஆகியோர் வீற்றிருக்கும் கைலாசமலை கோடிக்கணக்கான சிவபக்கதர்களின் ஆன்மீக வெளிச்சத்திற்கான மூலமாகவிளங்குவதில் வியப்பில்லை.

இக்கைலாசமலையின் சிறப்புகளைக்கூறும் புராணக் கதைகள் பல உள்ளன. அவற்றுள் இலங்கை மன்னனான இராவணன் பற்றியதாகும். சிவபக்தனாகிய அம் மன்னன் அம்மலையைப் புரட்டிக் கொண்டு வந்து அதனை இலங்கையிலே வைத்தால் தானும் மற்றவர்களும் இங்கே எளிதிலே சிவபிரானை வழிபடலாமென நினைத்து அம்முயற்சியிலீடுபட்டான். ஆனால் அவனால் முடியவில்லை. தான்செய்த பிழைக்காக மனம்வருந்தி மன்னிக்குமாறு இறைவனை வேண்டி அருள்பெற்றான். இங்கும் செய்த பிழைகளுக்காக மனம் வருந்தினால் இறைவன் திருவருள் பாலிப்பான் என்ற உயர்ந்த கருத்தும் உள்ளது.

கைலாசம் என்றபெயரிலே பல சிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டுகளாக ராஷ்டிரகூட அரசனான முதலாம் கிருஷ்ணன் எல்லோராதரவிலே அமைத்துள்ள தனிச்சிறப்பு வாய்ந்த கைலாசக் கோவில், பல்லவ அரசனான ராஜசிம்மன் காஞ்சியில் அமைத்த கைலாசநாதர் கோவில் போன்றவற்றைக் குறிப்பிடலாம். கைலாசமலை வட இந்தியாவில் வட எல்லையில் உள்ளதால் அது உத்தர (வடக்கிலுள்ள) கைலாசம் எனப்படும். இதுபோலத் தெற்கே தமிழகத்திலும் இலங்கையிலும் அமைக்கப்பட்டுள்ள கைலாசநாத கோவில்கள் சில தக்ஷிண கைலாசம் எனப்படும். இலங்கையிலே புராதன புகழ்பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயம் தக்ஷிண கைலாசம் எனப்படும். இதன் சிறப்புகளைத் தமிழிலும் வடமொழியிலுமுள்ள தக்ஷிணகைலாச புராணங்கள் விபரிக்கின்றன. இது போலவே நல்லூரிலுள்ள கைலாசநாதர் ஆலயம் தக்ஷிணகைலாசம் மூன்றாவது கைலாசம் எனவிளங்குகிறதெனக் கைலாய மாலை குறிப்பிடுகின்றது.

இலங்கைப் பௌத்த சமய மரபினை அடிப்படையாகக் கொண்டு பாளிமொழியில் எழுதப்பட்ட தீபவம்சம் மகாவம்சம், சூளவம்சம் எனும் வரலாற்று நூல்கள் இலங்கையைப் புத்தசமய நாடாகச் சித்திரிக்கின்றன. ஆனால் வடமொழியிலுள்ள தக்ஷிண கைலாசமாஹாம்யம் இலங்கையை ஒப்பற்ற இந்து சமய நாடாகப் புகழ்ந்துரைக்கின்றது. ஏற்கனவே குறிப்பிட்டவாறு நல்லூர் கைலாசநாதர் ஆலயத்தின் தோற்றம் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. இது பற்றி அறிவதற்குக் குறிப்பாகத் தமிழகத்திலுள்ள உறையூரைச் சேர்ந்த சாந்தியப்பன் முத்துராச கவிராசர் எழுதியுள்ள கைலாய மாலையே பிரதான மூலமாக உள்ளது இப்புலவரோ அல்லது தந்தையாரோ அல்லது இருவருமோ யாழ்ப்பாண அரசு தோற்றம்பெற்ற போது அல்லது சற்றுப்பின்னர் யாழ்ப்பாணத்திற்குப் புலம்பெயர்ந்திருப்பர் எனலாம். கைலாயமாலை எனில் தமிழிலே கைலாயநாதர் பற்றிய(பா)மாலை அல்லது ஒரு இலக்கிய வடிவம் எனப் பொருள்படும். யாழ்ப்பாணத்தில் அக்காலப்பகுதியிலே தமிழகத்தின் பல இடங்களிலிருந்தும் வந்து யாழ்ப்பாணத்திலே குடியேறி இதைத் தொடர்ந்து ஏற்பட்ட யாழ்ப்பாண அரசு சிறப்பாகக் கைலாயநாதர் ஆலயம் அமைக்கப்படுதல் அதற்கான மகா கும்பாபிஷேகம் முதலியன பற்றி இந்நூல் விரிவாக விபரிக்கின்றது. இது நல்லூர் எனும் மூதூரிலமைக்கப்பட்ட மூன்றாவது கைலாசம் என இதைக் குறிப்பிடுகின்றது. இந்நூல் கி.பி. 14 - 15ம் நூற்றாண்டளவுக் காலத்தியது எனலாம். இது இக்காலத்திற்குச் சற்றுப்பிந்தியதெனக் கொண்டாலும், நம்பகமான தகவல்களை இஃது உள்ளடக்கியிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். வரலாற்று மூலமாக இதிலே குறைபாடுகள் இருப்பினும் இதன் வரலாற்றுத் தன்மையை முற்றாக நிராகரிக்க முடியாது.

மதுரையிலிருந்து கி.பி.13ம் நூற்றாண்டளவில் இங்கு வந்து யாழ்ப்பாண அரசை உருவாக்கிய சிங்கையாரியனே இக்கோவிலைக்கட்டுவித்தான் என இந்நூல் கூறுகின்றது. இவ்வரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சிவ பக்தன். தமிழிலும், வடமொழியிலுமுள்ள சமய நூல்கள், இலக்கிய இலக்கண நூல்கள், நுண்கலைகள் முதலியனவற்றிலே நன்கு தேர்ச்சி பெற்றவன். இவன் தனது சொந்த இடமான மதுரையிலே கோயில் கொண்டெழுந்து குடியிருக்கும் சொக்க நாத (சிவ) பெருமானுக்காக கோயில் ஒன்றை அமைக்க விரும்பிச் சிந்தித்துக் கோயில் கொண்டிருக்கும்போது, சிவபெருமான் ஒருநாள் இரவு கனவிலே தோன்றித்தாம் கைலாசநாதன் எனவும், அப்பெயரிலே கோவில் அமைக்குமாறும் அறிவுறுத்தினார் எனக் கூறப்படுகின்றது. இதைத் தொடர்ந்து அரசன் புதிய ஆலயம் முதலியன பற்றி இந்நூலிலுள்ள 224-231 வரையுள்ள செய்யுட்கள் கூறுகின்றன. இதற்கான சிவலிங்கம் கேதாரத்திலிருந்து கொண்டுவரப்பட்டுப் பிரதிஷ்டை செய்தல் 232 - 266 வரையுள்ள செய்யுட்களிலும் கைலாயநாதன் புகழ் 267 - 287 வரையுள்ள செய்யுட்களிலும் இறைவன் எழுந்தருளுதல் 288 - 210 வரையுள்ள செய்யுட்களிலும் மிகச்சிறப்பாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள பிரதிஷ்டை (மகாகும்பாபிஷேகம்) பற்றிய வருணனை போன்ற ஒன்றினைப் பிறிதொருநூலிலே காண்பதரிது. மிகச்சிறந்த அலங்கார கோலத்துடன் கைலாயநாதர் ''முக்கைலையாக நல்லை மூதூரின் நன்றமைந்த(து) அக்கைலையிலமர்ந்துறைய (290) ''தேவர்கள்'' முனிவர்கள் முதலியோர் பலவாறு போற்றி வணங்க

''...................... திட்டமுடன்
நந்திகணஞ் சூழ்ந்துவர நாதர்பதி மேவுபல
துந்திபிகளார்த்துத் தொனியெழுப்ப - எந்தைபிரான்
எல்லாரும்போற்ற எழிலுனுடனேயமைந்த

நல்லூர்க் கைலைதனில் நாடிவந்து - சொல்லரிய
கர்ப்பூர தீபங்கனகமடல் மீதெடுப்பச்
சிற்பரன் ஈதெல்லாஞ் சிறந்(து) உவந்து - பொற்பினோடு
செப்புமலங்காரமிட்ட தேரில் எழுந்தருளி
அப்பரிசே யாரும் அணிந்துவர - ஒப்பரிய
வீதிவலமாக வந்து மேவுமணி ஆலயம் புக்(கு)
ஆதிபரனங்கே யமர்ந்துறைந்து - நீதியுறு
மன்னவருஞ் சீரும் மனிதர்களும் வாழ்ந்திருக்க
உன்னியருள் செய்து உகந்தான்'' (305 - 310)

எனக் கைலாயநாதர் இத்திருக்கோயிலிலே அனைவருடைய நன்மைக்காகத் தம்முடைய சாந்நியத்தினை ஏற்படுத்தினார் எனக் கைலாயமாலை கவிதை வடிவிலே பிரமாதமாகக் கூறுகின்றது. இவ்வாறு கைலாயநாதர் கோவில் பற்றி ஓரளவாவது வரலாற்று ரீதியிலே கூறும் நூல் அல்லது பிறமூலம் ஒன்று ஏனைய சமகாலகோவில்கள் பற்றி இல்லை என்பதும் குறிப்பிடற்பாலது கைலாசநாதர் கோவில் பற்றி மாலை கூறியிருப்பனவற்றிலே புனைந்துரைகள், பௌராணிக அம்சங்களிடம் பெற்றிருப்பினும் அதன் வரலாற்றியல்பும் குறிப்பிடற்பாலதே. கைலாயநாதர் கைலைநாயகி ஆகியோருக்கும் கைலைவிநாயகருக்கும் தனித்தனி கோவில்கள் இருந்தனவாக யாழ்ப்பாண வைபவமாலை கூறுகின்றது. போர்த்துக்கீசர் யாழ்ப்பாணத்தைத் தமது ஆட்சிக்குட்படுத்த முன் கைலாயநாதர் ஆலயமே பிரதான ஆலயமாக விளங்கிற்று எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. சிவாலயத்தில் அம்மன் சந்நிதி இருப்பதால் கைலைநாயகி ஆலயமும் அதனோடு சேர்ந்ததாகும். சிவாலயத்திலே பிள்ளையாருக்குரிய கோவில், பரிவாரக் கோவிலாக தென்மேற்குத்திசையிலே அமைக்கப்படும். வைபவமாலையின்படி பிள்ளையார் ஆலயம் தனித்தே கைலை விநாயகர் எனக் கூறப்படுகின்றது. எனவே விநாயகர் கைலாசநாதர் ஆலயத்திற்கு அண்மையில் இருந்திருக்கலாம் எனவும் கொள்ளப்படுகின்றது. மேலும் நல்லூர் நகரின் நாற்றிசையிலும் நான்கு பிள்ளையார் கோவில்கள் - அவையாவன கிழக்கே வெயிலுந்தபிள்ளையார், தெற்கே கைலாசபிள்ளையார், மேற்கே தலங்காவல் பிள்ளையார் வடக்கே சாலைவிநாயகர் கோவில்கள் உள்ளமை கவனித்தற்பாலது. எவ்வாறாயினும், முன்னர் பிரதான கோவிலாக இருந்த கைலாயநாதர் கோவில் வரலாறு போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட நிகழ்வுகளால் மாறுபட்டுள்ளது. எனக்கருதப்படுகின்றது.

போர்த்துக்கீசர் யாழ்ப்பாண அரசைவென்று தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தற்குச் சற்றுமுன் வரப்போகும் பேராபத்தையுணர்ந்த கோவிலின் பிரதம சிவாச்சாரியர் கைலாசநாதர் கைலைநாயகி திருவுருவங்களை ஒரு தள்ளு வண்டியிலேற்றிப் பாதுகாப்பிற்காகத்தனது சொந்த ஊரான மட்டுவிலுக்குக் கொண்டு சென்றார். இவை மிகவும் பாரமாயிருந்தபடியால் அம்மன் திருவுருவத்தை வழியிலுள்ள கிணற்றிலே போட்டுவிட்டுச் சிவலிங்கத்தை மட்டும் மட்டுவிலுக்குக் கொண்டு சென்று அதனை ஒரு கோவில் கிணற்றுள்ளே போட்டுவிட்டார். பல ஆண்டுகளின் பின் மட்டுவிலில் அங்குள்ள ஒரு சிவாலயத்திலே சந்திரமௌலீஸ்வரர் எனும் திருநாமத்துடன் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இவருக்குச் சக்தியாக சாந்தநாயகி எனும் பெயருடன் புதியஅம்மன் திருவுருவம் அமைக்கப்பட்டு இன்றும் வழிபடப்படுகின்றது. மேலும் முன்னைய கைலை நாயகியின் திருவுருவம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள பிறிதொரு சிவாலயத்திலே வணங்கப்படுகின்றது. என அறியப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏறக்குறைய 140 நூற்று நாற்பது ஆண்டுகளிலே போத்துக்கீசர் ஆட்சி (1619 - 1658)யும் தொடர்ந்து ஒல்லாந்தர் ஆட்சி (1658-1796)யும் ஏற்பட்டன அவர்களும் போர்த்துக்கீசரைப்போல தமது சமயம் தவிர்த்த பிறமத அனுஷ்டானங்களைத் தடுத்து வந்தனர். எனினும் கி.பி.18ம் நூற்றாண்டிலே ஐரோப்பாவிலேற்பட்ட தாராண்மைவாதம், மதசுதந்திரம் முதலியன பற்றிய கருத்துக்களின் விளைவாகக் கீழ் நாடுகளிலுள்ள தமது ஆட்புலங்களிலும் மதசுதந்தரம் அளித்தனர். இதைத்தொடர்ந்து முன்னர் போர்த்துக் கீசரால் அழிக்கப்பட்டசில கோவில்கள் படிப்படியாக மீள அமைக்கப்பட்டன. ஒல்லாந்தரைத் தொடர்ந்து ஆதிக்கம் பெற்ற பிரித்தானியரும் (1796-1948) மதசுதந்திரம் அளித்தனர். இதைத் தொடர்ந்து பல கோவில்கள் மீண்டும் அமைக்கப்பட்டன. புதியனவும் அமைக்கப்படலாயின.

போர்த்துக்கீசரும் ஒல்லாந்தரும் நல்லூர்ப்பகுதியிலும் வேறு சில இடங்களிலும் அழிக்கப்பட்ட கோவில்களிலிருந்த கற்களைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டையையும் வேறுசிலவற்றையும் கட்டினர். இவ்வாறு கற்களை மக்கள் புதிய ஆட்சியாளரின் ஆணைப்படி எடுத்துச் செல்லும் முயற்சியிலீடுபட்டபோது பழைய கைலாசநாத ஆலயப்பகுதியிலே பிள்ளையார்சிலையொன்றைக் கண்டெடுத்து மிக மகிழ்ச்சியடைந்து பக்தியுடன் அதனை ஒரு வில்வமரத்தடியில் வைத்து வணங்கினர். பின்னர் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவரும் சைவசமய மறுமலர்ச்சியின் தந்தையும் விநாயகபக்தருமான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கிடுகினால் வேயப்பட்ட ஒருகோவிலை அமைத்து அதிலே பிள்ளையாரை 1850ம் ஆண்டளவிலே பிரதிஷ்டை செய்தார். முன்னைய கைலாசநாதர் ஆலயம் அமைந்திருந்த பகுதியையும் உள்ளடக்கிய நூறு லட்சம் நிலத்தை நாவலர் விலைக்குவாங்கினார். இதைவிடமேலும் செம்மணி, சரசாலை முதலிய இடங்களிலே பல நெல்வயல்களைக் கொள்வனவு செய்து, பிள்ளையார் கோவிலைப் பராமரிப்பதற்காக மானியமாக வழங்கினார். மேலும் பிள்ளையார் மீது பக்தி மேலீட்டால் அவர் இயற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சீர்பூத்த மறைமுதற்கட் பிரணவத்தி
னரும் பொருளைச் சிவனார்தந்த
பேர்பூத்த திருமல சின்மயவடிவை
யானந்தப் பெருக்கையென்றுங்
கார்பூத்த திருநெடுமா லயன் முதற்புங்
கவர் வணங்கும் கருணை வாழ்வைப்
பார்பூத்த வடியர்வினை கெடுத்தருளுங்
கற்பகத்தைப் பணிந்து வாழ்வாம்"

எனும் பாடல் குறிப்பிடற்பாலது.

ஆறுமுகநாவலரின் மூத்த சகோதரர்களில் ஒருவரான திரு.தம்பு என்பவரின் மகன் கைலாசபிள்ளை, கைலாசபிள்ளையாருக்கு மண்டபம் முதலியனவற்றை அமைத்துள்ளார். இவ்வாறு ''கைலாயப் பிள்ளையாரை மூலமூர்த்தியாக ஸ்தாபித்து அமைக்கப்பட்டுள்ளதே இன்றைய கைலாயப் பிள்ளையார் கோவில். எனவேதான் இந்த இடம் கைலாச பிள்ளையார் கோவிலடி எனப்பெயர் பெறலாயிற்று. காலந்தோறும் அழகுபெறக் கட்டடங்கள், மண்டபங்கள் எழுந்தபோது பழையபடி கைலாய நாதரையும் கைலாய நாயகியையும் இங்கே எழுந்தருளச் செய்தல் வேண்டும் என்னும் விருப்பங்கொண்டனர். ஒரு சிலர்" எனச் சைவப்பெரியார் திரு.க.சி.குலரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.

சிவபிரான் அம்பிகை ஆகியோரின் திருவுருவங்கள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டன. சிவலிங்கம் முன்னைய பெயராலே கைலாய நாதர் எனவும், அம்பிகை அபீதகுசலாம்பிகை (உண்ணா முலையாள் எனவும் அழைக்கப்பட்டனர். 1988ம் ஆண்டு மீண்டும் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின்போது அம்பிகையின் பெயர் பழையபடி கைலாயநாயகி என மீண்டும் மாற்றப்பட்டது.

மதுரை அப்பாசுந்தரம் என்பவர் கோவில் நிலத்திற்குக் கருங்கல் பதித்து அதனை மேலும்சில வகையில் அழகுறச் செய்தார். அவருக்குப்பின் அவரின் சகோதரி மாணிக்க அம்மையார் (திருமதி.சபாபதி முதலியார்) கோவிலுக்கான கட்டிடப்பணிகளை 1944லே தொடங்கி 1946ம் ஆண்டு மகாகும்பாபி ஷேகத்தினை முறைப்படி மூலமூர்த்திகளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் செய்வித்தார். இதன் பின்னரே இவ்வாலயம் கைலாயநாதர் பிள்ளையார் ஆலயம் என மறுபெயர் பெற்றது. மேலும் பழைய கைலாசநாதர் கோவிலைச் சேர்ந்த சந்திர சேகரர், அம்பாள் வள்ளி தேவசேனாசமேத சுப்பிரமணியர் ஆகியோரின் தாமிர விக்கிரகங்களும் பைரவரின் கற்சிலையும் மீளப்பெற்றுப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மரபுவழிப்பிரதான சிவாச்சாரியரான திரு.குமாரசுவாமிக் குருக்களும், அக்காலகட்டத்திலே முகாமையாளராக இருந்த திரு.பொன்னம்பலமும் மேற் குறிப்பிட்ட செயற்பாடுகளிலே மற்றவர்களுக்கு உதவிசெய்தனர்.

கோவிலுக்காக சிற்பத்தேர் அமைத்தற்கான செயற்பாடுகள் இவ் அம்மையார் காலத்திலே தொடங்கப்பட்டு இவரின் சகோதரர் திரு.சோமசுந்தரம் மற்றைய பக்தர்கள் ஆகியோராலே முற்றுப்படுத்தப்பட்டன. இத்தேருக்கான தேர் முட்டியை அமைத்தலிலே முன்னாள் கணிதப் பேராசிரியரும் சிவபக்தரும் அரசியல்வாதியுமான திரு.சி.சுந்தரலிங்கமும் வேறு சிலரும் ஈடுபாடு காட்டினார். மேலும் அப்பேராசிரியர், பிரதமசிவாச்சாரியார் மற்றும் அன்பர்களின் உதவியுடன் கல்லினாலான பஞ்சமுகப்பிள்ளையார் திருவுருவம் செய்வித்துக் கோவிலின் தென்மேற்கு மூலையிலே பிரதிஷ்டைசெய்வித்தார். இவ்விக்கிரகம் தஞ்சாவூரிலே சிறப்பாகச் செய்யப்பட்டது. இத்தகைய விக்கிரகம் இலங்கையிலே இங்குதான் முதன் முதலாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. வெளியே இருந்து இப்பெருமானை வழிபடுதற்குக்கூடுதலான ஒருவாசல் அமைக்கப்பட்டது.

இதன் விளைவாகக் கைலாசநாதர் பிள்ளையார் ஆலயத்திலே பக்தர்கள் வழிபாடுசெய்வதற்கு கோவிலின் முன்புறமாக மூன்றுவாசல்கள் பஞ்சமுகவிநாயகர் கைலாசபிள்ளையார் கைலாயநாதர் ஆகியோருக்கு அமைக்கப்பட்டுள்ளன. இது இக்கோவிலுக்குரிய ஒரு தனிச்சிறப்பாகும். மீண்டும் 1970லே மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் கைலாயநாதருக்கு 1971லே கொடியேற்றத் திருவிழா தொடங்கிற்று. இதற்கு முன்பிள்ளையாருக்கு மட்டுமே மஹோத்சவம் நடைபெற்றது. இவ்வாறு இக்கோவில் முன்னைய சிறப்பினைப் படிப்படியாகத்திரும்பவும் பெற்றுள்ளது. 1987ம் ஆண்டு ஏற்பட்ட குழப்பங்களாலே மீண்டும் ஒரு பேராபத்தை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. குண்டுத்தாக்குதல்களாலே பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுத் திருத்தப்பட்டு 1988லே மீண்டும் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

இக்கோவிலுக்கு விநாயகர், சிவபிரான், பார்வதியாகியோருக்கான மூன்று கர்ப்பக்கிருகங்கள் உள்ளன. இவற்றிலே மேலுள்ள விமானங்களைப் பல சிற்பங்கள் அணி செய்கின்றன. எடுத்துக்காட்டுக்களாக கைலாசநாதருக்குரிய விமானத்திலே தக்ஷிணாமூர்த்தி, லிங்கோத்பவர், பிரமா முதலியோரின் திருவுருவங்கள் உள்ளன. இக்கோவிலமைப்பிலே அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தம்பமண்டபம், நடராஜசபை முதலியன இடம் பெற்றுள்ளன. இங்கு மூன்று பலி பீடங்களும், இரண்டு கொடித்தம்பங்களும் உள்ளன. நவக்கிரகங்கள், பைரவர் முதலியோர் முறைப்படி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர்.

இடபம், கைலாசம், மூஷிகம், காராம்பசு, மயில், யானை முதலிய பல வாகனங்களும் உள்ளன. கோவில் உட்பகுதியிலும், திரைச்சீலைகளிலும் பல ஓவியங்கள் உள்ளன.

வேதாகம முறைப்படி நித்திய, நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. நாடோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறுகின்றன. மகோத்சவங்கள் பிள்ளையாருக்கு சித்திரையினதும் சிவனுக்கு ஆனியிலும் நடத்தப்படுகின்றன

இக்கோவிலிலே வழிவழியாக வேதாகமப்புலமை, சமயானுஷ்டானங்கள் வாய்ந்த சிவாச்சாரியர்கள் இருந்து வந்துள்ளனர். ஏற்கனவே குறிப்பிட்ட குமாரசுவாமிக் குருக்களுக்குப் பின் அவரின் மகன் குருசாமிக் குருக்களும், அவருக்குப் பின் மகன் மணிக்குருக்களும் தொடர்ந்து கோவில் பூசைகள் முதலியனவற்றை நன்கு கவனித்து வந்துள்ளனர். இக்கோவில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட பின் இதனைத் திரும்பவும் அமைப்பதிலே ஏற்கனவே குறிப்பிட்டவாறு நாவலர் பெருமானும் அவருடைய சகோதரர்களின் வழித்தோன்றல்களும் கோவிலைப் பராமரித்து வந்தனர். அதே வேளையிலே பொது மக்களாலே தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குழுவும் அவர்களுக்கு உதவிசெய்து வந்தது. தற்போது பிரதமசிவாச்சாரியாரே பொதுவாக நிருவாகத்தைக் கவனித்துவருகிறார்.

இக்கோவில் பற்றிய இலக்கிய ஆக்கங்கள் சில உள்ளன. நாவலர் இயற்றியபாடல் பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. கைலாசபிள்ளையார் மான்மியமும் ஞானாஞ்சலியும் குறிப்பிடற்பாலது. இம்மான்மியம் தசாங்கதலபுராணம் எனவும் அழைக்கப்படும். இதிலே முதலில் ஐந்துபாடல்கள் கடவுள் வணக்கமாகவும், தொடர்ந்து வரும் பத்துச் செய்யுட்களிலே கைலாசநாதர் பிள்ளையார் ஆலயவரலாறு மிகச் சுருக்கமாகக் கூறப்படுகின்றது. கோவிலுக்குரிய ஊஞ்சற்பாடல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. திருவிழாக்காலங்களிலே கூறபபடும் கட்டியத்திலே கோவிலை முதலிலே நிறுவிய சிங்கையாரியன் பற்றியும் இறைவனின் மகிமை பற்றியும் கூறப்படுகின்றன.

ஏற்கனவே குறிப்பிட்டவாறும், மரபுவழிச் செய்திகளின்படியும் கைலாய பிள்ளையாருக்கு முதலமைக்கப்பட்ட ஆலயம் தற்போதைய ஆலயத்திற்கு அண்மையிலே தனியாக இருந்ததாக அறியப்படுகின்றது. இந்த இடம் எது என்பது ஆராய்தற்குரியதாகும். பிறிதொருகருத்தின்படி, பரிவார தெய்வமாக விளங்கிய பிள்ளையாரே முன்னர் மூல மூர்த்தியாக விளங்கிய கைலாசநாதர் கோவிலின் பிரதமமூர்த்தியாக அல்லது சமமான மூலமூர்த்தியாக விளங்குகின்றார். சைவப்பெரியார் க.சி.குலரத்தினம் இக்கருத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு கைலாசநாதர் கோவில் யாழ்ப்பாணத் தமிழரசர் நிறுவிய சிவாலயங்களில் ஒன்றாகும். நல்லூரிலே உள்ள சட்டநாதர் ஆலயமும், இதுவும் அவர்கள் தலைநகரிலே நிறுவிய சிவன் கோவில்களாகும். இவ் அரசர்கள் சிறந்த தலை சிறந்த சிவபக்தர்கள் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரத்திலும் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தனர். தமிழிலுள்ள தக்ஷிணகைலாசபுராணம் இது பற்றிக் குறிப்பிடுகின்றது. அவர்கள் தங்களின் கொடியிலும், நாணயத்திலும் நந்திஇலச்சினையையும் கொண்டிருந்தனர் என்பதும் நன்கு குறிப்பிடற்பாலது.

இலங்கையிலுள்ள பிரதான சிவாலயங்களில் ஒன்றாக கைலாசநாதர் பிள்ளையார் ஆலயம் விளங்குகின்றது. இங்கு கைலாச மலையிற்போன்று அம்மையப்பருடன், பிள்ளையாரும் ஒரிடத்திலே கோயில் கொண்டுள்ளனர். தற்போது கைலாச பிள்ளையார். கைலாசநாதர் ஆலயங்கள் ஒன்றாக இருப்பதால் அதற்கேற்பவே கட்டுரை எழுதப்பட்டுள்ளது.



நல்லூர் கைலாசநாதர் கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநந்தீஸ்வரம் - இரத்மலானை

– திரு. த. மனோகரன் –

இலங்கையின் மேற்குப்பகுதியிலிருந்த பண்டைய இராசதானிகளில் கோட்டை இராசதானியும் ஒன்றாகும். கோட்டை இராசதானிக்குள்ளிட்ட இரத்மலானையில் பழம்பெரும் சிவாலயம் இருந்தமைக்கான சான்றுகள் வெளிவந்துள்ளன. தற்போது இரத்மலானை கொனாகோயில் என்று கூறப்படும் கிராமத்திலேயே இச்சிவாலயம் இருந்துள்ளது.

1517இல் போர்த்துக்கேயரால் சிதைத்தழிக்கப்பட்ட இவ்வாலயம் பற்றி 1454 இல் ராகுலதேரர் என்ற பௌத்த துறவி தனது "சலவிஹினி சந்தேசய" என்ற சிங்கள மொழிக் காவியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இச்சிவாலயத்தின் அமைவிடம் கொழும்பு மாவட்டத்தின் தெற்கில் இரத்மலானையின் மேற்குப் பகுதியில் ரயில் நிலையத்திற்கண்மித்த ஜயசுமணா ராமவீதியின் மருங்காகும். 550 ஆண்டுகளுக்கு முன் ராகுலதேரரால் சிங்கள மொழியில் பாடப் பெற்ற பாடலின் ஒருவரி பின்வருமாறு அமைகின்றது.

"மக்கள் மிகவும் விருப்புடன் தமிழ் மொழியில் பாடும் தோத்திரங்களால் மனதைக் கவரும் ஈஸ்வரன் கோயில்" என்றுள்ளது.

ஐரோப்பியர் இந்நாட்டில் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே இலங்கையின் மேற்குக்கரையில் இந்துக்களும், தமிழர்களும் தமது பாரம்பரிய சிறப்புக்களுடன் செறிந்து வாழ்ந்தமையைப் பௌத்ததுறவி தனது சிங்கள காவியத்தின் பாடல் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்று முருகனாலயமாக விளங்கும் முன்னைய சிவாலயம் மீளவும் சிவாலயமாக நிலைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1984இல் இவ்வாலய வளவில் அகழ்ந்தபோது பெரிய அளவிலான ஆவுடையாரொன்றும் உடைந்த நிலையில் நந்தியொன்றும் கிடைக்கப்பெற்றன. அத்துடன் மேற்கூறப்பட்ட ஆவுடையாருக்கும் பொருந்தாத சிறிய சிவலிங்கத்தின் மேற்பகுதியும் பல கருங்கல் படிவங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன. கருங்கல்லினால் மிகவும் அழகிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வாவுடையாரைத் தட்டினால் எழும் வெண்கல ஓசை அற்புதமானது.

ஆவுடையாரையும், நந்தியையும் நோக்கும் போது மிகப்பெரிய சிவாலயம் இருந்ததற்கான ஆதாரமாக அவை விளங்குகின்றன. இவ்வாலயத்தின் தல விருட்சமான ஆலமரம் பல நூறு ஆண்டுகள் வயதைக் கொண்டதாகக் காட்சியளிக்கின்றது.

பலநூறு ஆண்டுகள் பழமைவாய்ந்த இச்சிவாலய அமைவிடம் பழமை என்பவற்றை நோக்குமிடத்து இலங்கையின் மேற்குப்பகுதியில் முன்னேஸ்வரத்திற்கு நிகராக இவ்வாலயம் இருந்திருக்கக்கூடும்.

இந்து சமயநிகழ்வுகள் யாவும் படிப்படியாக இவ்வாலயத்தில் இடம் பெற்று வருகின்றன. தமிழ் மொழியில் மீண்டும் தோத்திரங்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளமை மறைந்த பெருமையை மீள உயிர்ப்பிப்பதாகவுள்ளது.

மண்ணுள் மறைந்திருந்த எம்பெருமான் மாநிலம் நலம் பெற மீளெழுந்தான் என்று நம்பிக்கையுடன் பண்டைப் பெருமை மேலோங்க திருநந்தீஸ்வரத்தில் வீற்றிருந்து அருளொளிபரப்பும் பரமேஸ்வரி சமேத பரமேஸ்வரனைத் தொழுது நிற்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

-

கொழும்பு மாநகரில் சரித்திரப்பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாகத் திகழ்வது ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயமாகும். இது கொழும்புக் கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ள சிவத்தலமாகும். தென்னிந்தியாவிலுள்ள பிரமாண்டமான கருங்கல் ஆலயங்கள் யாவும் மூவேந்தராலும், நாயக்க, பல்லவ மன்னர்களாலுமே கட்டப்பட்டது. அதே மாதிரியான அமைப்பில் இலங்கையில் முற்றிலும் கருங்கற்களிற் பொளிந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த அழகிய கலைக் கோவிலைத் தம் சொந்தப் பணத்தில் கட்டிய பெருமை ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் குடும்பத்தையே சாரும். இத்தகைய ஆலயம் இலங்கையில் இதுவே ஒன்றெனக் கூறினால் அது மிகையாகாது. இவ் ஆலயம் மானிப்பாயில் பிறந்து கொழும்பு, செட்டியார் தெருவில் வசித்து வந்த கொடை வள்ளலும், தேசாபிமானியுமான ஸ்ரீமான் அருணாசலம் பொன்னம்பலம் முதலியார் என்ற சைவப்பெரியாரால் 1856 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. அக்காலகட்டத்தில் வாழ்ந்த கொழும்புச் சைவமக்கள் சிறு தெய்வங்களுக்குக் கோவில்கள் அமைத்து வழிபட்டு வந்தனர். இதை அவதானித்த பொன்னம்பல முதலியார் மனம் வருந்தினார். சிவாகம முறைப்படி பூசித்து வழிபடக்கூடிய ஓர் சிவாலயத்தை நிர்மாணிக்கத் திருவுளம் கொண்டார். அதற்காக கொழும்புக் கொச்சிக்கடைப் பகுதியில் ஐந்து ஏக்கர் காணியை கப்ரின் யோன் பவுல் ஸ்ரோன் என்ற ஆங்கிலேயரிடம் விலைக்கு வாங்கித் தென் இந்தியாவிலிருந்து கோயிற் கட்டடக் கலைஞர்களை வரவழைத்து இரண்டு வருடங்கள் இரவு பகலாக உழைத்துத் திருப்பணி வேலைகளை நிறைவு செய்து 1857ம் ஆண்டு மார்கழி மாதம் மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்தினார். மூல மூர்த்தியாக 22அங்குல உயரங் கொண்ட சிவலிங்கத்தையும், போகசக்தியையும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்வித்தார். தன் வீட்டில் வைத்துப் பூசித்து வந்த பாலயந்திரத்தை 32 அங்குல உயரங் கொண்ட சிவகாமி அம்பாளின் பீடத்திற்கு அடியில் வைத்தும் ஸ்ரீசக்கரத்தை அதன் அருகில் வைத்தும் பிரதிஷ்டை செய்வித்து பொது மக்கள் வழிபடுவதற்கு வழி சமைத்தார். இத்திருத்தலத்தைக் காலாகாலமாகப் பராமரித்து நித்திய நைமித்திய பூசைகளையும் விழாக்களையும் எதுவித தடங்கலுமின்றித் தொடர்ந்து சிறப்புடன் தன் சந்ததியினர் நடாத்துவதற்கு ஏற்ற முறையில் நாத்தாண்டியாவில் ஒரு ஆயிரம் ஏக்கர் தென்னந் தோட்டத்தையும் கொழும்பு மாநகரில் தொடர் கடைகளையும் கட்டி ஆலயப்பராமரிப்புக்கு அவற்றிலிருந்து பணத்தைப் பெற வழிவகுத்தார். இந்தியாவிலிருந்து வரும் யாத்திரிகர்களும், ரிஷிகளும் உணவுண்டு தங்குவதற்கேற்ற முறையில் அன்னதான மடத்தையும் கட்டினார். தினமும் அங்கு வரும் ஏழைகளுக்கும் யாத்திரிகர்களுக்கும் உணவும், உடையும் அளித்தார். வறுமை காரணமாக விவாகமாகாத கன்னிப் பெண்களுக்குத் தன் செலவில் விவாகம் செய்து வைத்தார். அக்காலத்தில் இந்துக்கள் பூதவுடலைத் தகனம் செய்ய அதற்குரிய மயானம் இன்மையால் மண்ணில் புதைத்து வந்தனர். இவ்வவல நிலையிலிருந்து மீட்கும் பொருட்டு ஒரு காணியை விலைக்கு வாங்கித் தகனம் செய்வதற்குரிய மயானத்தையும், மடத்தையும் நிறுவி அந்திமக் கிரியைகளைப் பிராமணர் மூலம் தம் செலவிற் செய்வித்து உடலைவிட்டுப் பிரிந்த ஆத்மாக்கள் ஈடேறுவதற்கும் வழிசமைத்தார். இவ்விதமான கைங்கரியங்களைத் தொடர்ந்து நடாத்துவதற்கு தன் சந்ததியில் வரும் மூத்த ஆண் வம்சத்திற்கு அதிகாரத்தைச் சாசன மூலம் வழங்கினார் 1887 ஆம் ஆண்டு இவர் சிவபதமடைந்ததும் இவரின் மூத்த மகன் பொன். குமாரசுவாமி 1905ம் ஆண்டு வரை ஆலயத்தை நிர்வகித்து வந்தார். அவர் காலமானதும் இரண்டாம் மகனான சேர். பொன். இராமநாதன் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். தந்தையாரால் கல்லாலும், செங்கட்டியாலும் சுண்ணாம்புச் சாந்தாலும் கட்டிய கோவிலுக்குப் பதிலாக தற்போது உள்ள நிலையிலிருக்கும் கருங்கற் கோவிலை புதிதாகக்கட்ட 1907ஆம் ஆண்டு ஆரம்பித்தார். தென் இந்தியாவிலிருந்து சிறந்த கோயிற் கட்டட ஸ்தபதியையும், சிற்பிகளையும் வரவழைத்தார். வியாங் கொடையிலிருந்து கருங்கற்களை வருவித்தார். ஆலயத்திருப்பணி வேலைகளைத் தாமே நேரில் நின்று மேற் பார்வை செய்து சிற்பிகளுக்கு அருகிற் சென்று சிவதோத்திரங்களை பண்ணிசையுடன் மனமுருகப் பாடி அவர்களுக்குத் தெய்வீக உணர்வையூட்டி, அழகும், எழிலும், தெய்வீகமும் நிறைந்த திருவுருவங்களை வடிவமைக்க உந்து சக்தியாக இருந்தார். இச் செயல் தஞ்சைப் பெரிய கோவில் திருப்பணி வேலைகள் நடைபெறும் காலத்தில் இராஜ இராஜ சோழ மன்னன் தலைமைச் சிற்பிக்கு அருகில் நின்று அவருக்குத் துப்பற்படிக்கம் ஏந்திய செயலுக்கு ஒப்பாகும்.

சகல திருப்பணி வேலைகளும் நிறைவு செய்து 21.11.1912ம் ஆண்டு முதற் கும்பாபிஷேகத்தை வெகு விமரிசையாக நடாத்தினார். சேர். பொன். இராமனாதன் அவர்களுக்கு இத்திருப்பணி வேலைகள் செய்ய அக்காலத்தில் இருபது இலட்சம் ரூபா செலவாகியது. அதன் தற் சமயப் பெறுமதி இருநூறு கோடி ரூபா என கணிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் கற்பக்கிரகத்தில் சிவலிங்கப் பெருமானும் போக சக்தியும் தென்முகமாக சிவகாமி அம்பாளும் இருந்து அருள் பாலிக்கின்றனர். மகா மண்டபத்தில் மிக அழகிய 30 அங்குல உயரங் கொண்ட நடராஜப் பெருமானும் 28 அங்குல உயரங் கொண்ட சிவகாமி அம்பாளும் உள்ளனர். முதற் பிரகாரத்தில் கோஷ்ட தெய்வங்களாக நர்த்தன விநாயகர், சனீஸ்வரர், சந்தான கோபாலர், தட்க்ஷிணாமூர்த்தி, நாகதம்பிரான், இலிங்கோற்பவர், பிரமதேவர், துர்க்கை அம்பாளும் அமைந்துள்ளனர். இரண்டாம் பிரகாரத்தில் பரிவார மூர்த்திகளாக விநாயகர், சோமஸ்கந்தர்(செம்பு), பஞ்சலிங்கங்கள், மகாவிஷ்ணு, வள்ளி தேவசேனாசுப்பிரமணியர், வள்ளி தேவசேனா ஆறுமுகர் (செம்பு), பிள்ளையார் வள்ளிதேவசேனா சுப்பிரமணியர் (செம்பு), இராஜ இராஜேஸ்வரி - அஸ்திரதேவர் - சந்திரசேகரர் - காத்தவராயர் (செம்பு), மகாவிஷ்ணு - இராமர் - சீதை - இலக்குமணர் - ஆஞ்சநேயர் (செம்பு), நால்வர் (செம்பு), ஞானபைரவர், சுவர்ண பைரவர், நவக்கிரக நாயகர்கள், சந்திரர், சூரியர் ஆகியோர் அவரவர் சந்நிதியில் அமைந்துள்ளனர். இங்குள்ள இலிங்கோற்பவ மூர்த்தி தென்னிந்திய கலைக்கோவிற் சிற்பங்களை விஞ்சுமளவிற்கு அழகும், எழிலும் கெம்பீரமும் நிறைந்த திருவுருவமாகும்.

மூன்றாம் வீதியில் (வெளி வீதியில்) காரியாலயம், சிவாச்சாரியார்கள் விடுதி, பூ மண்டபம், ஆஞ்சநேயர், மாரியம்பாள், முனியாண்டி சுவாமி, கோசாலை தேர் முட்டி, சொர்ண புஷ்கரணி தீர்த்தத் தடாகம், அரசடிப் பிள்ளையார் போன்றவை அமைந்துள்ளன.


ஆலயக் கிழக்கு வாசலில் 65 அடி உயரங் கொண்ட அழகிய தெய்வச் சிற்பங்கள் நிறைந்த ஐந்து தளங்களைக் கொண்ட இராச கோபுரமும், அம்பாளின் தெற்கு வாசலில் 35 அடி உயரங் கொண்ட மூன்று தளங்களையுடைய கோபுரமும், ஆலயவளாகத்தின் கிழக்கு, மேற்கு நுழைவாசல்களில் இரு சிறிய கோபுரங்களும் அமைந்துள்ளன. உள் மண்டபக் கற்றூண்களிலும், சுவர்களிலும் கண்ணப்பநாயனார் தனது இடது கண்ணையும் தோண்டி இலிங்கத்தில் அப்ப ஆயத்தமாகும் காட்சி, சிவனின் ஊர்த்தவதாண்டவம், அம்பாளின் தாண்டவம், இடபத்தில் உமையும், சிவனும், அர்த்த நாரீஸ்வரர், பைரவர், பழனிஆண்டவர், இலக்குமி, பிருங்கி முனிவர், சமயகுரவர், பதஞ்சலி முனிவர், வியாக்கிரபாதர், பிச்சாடனர், இராமர், நான்முகன், தட்சணாமூர்த்தி, நந்திதேவர் மத்தளத்துடன், நாரதர், இருதலை ஒரு உடல் உள்ள மிருகம், பசு இலிங்கத்திற்குப் பால் சுரத்தல், பாயும் சிங்கம், அன்னப் பறவைகள், கலைமான், ஐந்து தலைநாகம், யானை மரத்தை முறித்துக்குழை தின்னல், எருது மரத்தை எட்டிக் குழை தின்னல், ஐந்து தலை நாகலிங்கம், மந்தி, யானையின் காலடியில் மனிதன், மீனைவிழுங்கும் கொக்கு, இரட்டைத்தலைக்கிளி, இரட்டைத்தலை மயில், யானை மேற் பாயும் சிங்கம், ஆடும் மயில், இருதலை ஒரு உடற் சிங்கம், மூன்று தலை ஒரு உடற் கழுகு போன்ற சிற்பங்கள் மிகவும் கற்சிலைநுணுக்கத்துடன் தத்ருபமாக அமைந்துள்ளன. தரிசன மண்டபத்தின் மேற்புறத்தில் 12 இராசிகளும் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. நவக்கிரகத்திற்குத் தென்மேற்கிலுள்ள கற்றூணில் சேர். பொன். இராமநாதனதும் லேடி. இராமநாதனதும் உருவங்கள் இரு வட்ட வடிவத்துள் அமைந்துள்ளன. நவக்கிரகத்தின் வடமேற்கு கற்றூணில் 18 தமிழ் எழுத்துக்களைக் கொண்ட சிற்பக்கவி சக்கரவடிவத்துக்குள் அமைந்துள்ளது.

நித்திய, நைமித்திய பூசைகளும், ஆறு காலப் பூசைகளும், விரதங்களும், அபிஷேகங்களும், பொங்கல்களும் குளிர்ச்சி போன்றவைகளும் சிவாகம முறைப்படி நடைபெற்று வருகின்றன. ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து பத்தாம் நாள் பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறும். தேர்த்திருவிழாவன்று சோமஸ்கந்தர், அம்பாள், சண்டேஸ்வரர் தம் தம், அழகிய சிற்பத் தேர்களிலும், விநாயகர், முருகர் தம் வாகனங்களிலும் ஆரோகணித்து வீதி வலம் வருவர். அம்பாளின் தேரைப் பெண்களே வடம் பிடித்து இழுப்பது வழக்கம். சுவாமி வெளி வீதி வரும் பொழுதில் நவசந்தித் திருமுறைகள் ஓதப்படுகின்றன. அதிகாலை திருப்பள்ளியெழுச்சிப் பாராயணத்துடன் பூசைகள் ஆரம்பமாகின்றன. தினமும் சுவாமி பள்ளியறையிலிருந்து பல்லக்கிற் புறப்பட்டுத் திரும்புவது வழக்கம். காலையில் கோமாதாவுக்கும் பூசை நடைபெறும். காலை 7.00 மணிக்கும் மாலை 7.00 மணிக்கும் நடைபெறும் பூசையில் நித்தியாக்கினி வளர்க்கப்படும். ஆலயத்தின் கோசாலையிலுள்ள பசுக்களிலிருந்து பெறப்பட்ட பால் தயிர், நெய், கோசலம், கோமயம் போன்றவையே அபிஷேகங்களுக்குப் பாவிக்கப்படுகின்றன.

ஸ்ரீ சிவதர்ம சம்வர்தன வேதப் பாடசாலையும், அறநெறிப் பாடசாலையும் ஆலய நிர்வாக மேற் பார்வையில் நடைபெற்று வருகின்றன. பன்னிரு திருமுறைகளோதல் ஆலயு மண்டபத்துள் வருடா வருடம் நடைபெற்று வருகின்றது. இவ்வாலயத்தில் ஒரு முகாமையாளரும், ஆறு சிவாச்சாரியர்களும், நான்கு உதவி ஐயர்களும், ஒரு மடப்பள்ளி ஐயரும், ஒரு ஓதுவார் மூர்த்தியும், மூன்று மாலை கட்டும் பண்டாரங்களும், மேள வாத்தியக்காரர்களும், சுவாமி காவுவோரும் (சீர்பாதம்), கோசாலைப் பராமரிப்பாளர்களும், மூன்று பாதுகாப்பாளர்களும், பல சிற்றூழியர்களும் உள்ளனர். பிரதம சிவாச்சாரியராக சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் 1949 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு தை மாதம் வரை சிவப்பணி புரிந்து இறையடி சேர்ந்தார். அவரைத் தொடர்ந்து சிவஸ்ரீ வை. பாலசுந்தரக் குருக்கள் பிரதம சிவாச்சாரியராகச் சிவப்பணி ஆற்றுகின்றார். ஸ்ரீமான் அ.பொன்னம்பல முதலியார் வமிசத்தின் வழிவந்த முகாமைத்துவ தர்மகர்த்தா ஸ்ரீமான் தே.ம.சுவாமிநாதன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட உறுப்பினர்களால் திறம்பட பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலய பராமரிப்புச் செலவுக்கு உண்டியற் பணத்தை எதிர் பாராத ஆலயம் இது ஒன்றே என்று கூறலாம்.

இவ் ஆலயம் சிற்ப சாத்திரகட்டிடக்கலையமைந்த அமைப்பையும், சிவாகம விதிக்கமைந்த கிரியை நெறிகளையும் கொண்ட சைவக் கலைக்களஞ்சியமாகத் திகழ்வது சைவ உலகுக்கு பெருமை தரும் விடயமாகும்.

(பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயக் கருங்கற் தூண் ஒன்றில் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பக்கவி)




இச்சக்கரத்திற்குள் இருக்கும் 18 எழுத்துக்களை மட்டும் வைத்துப் புனைந்து எமக்கு அனுப்பவும் சிறந்த முதற் கவிமாலைக்குச் சன்மானம் வழங்கப்படும்.

*இடைக்காடு*
*கயிலைமணி. வேல். சுவாமிநாதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் சட்டநாத ஈஸ்வரர் கோவிலின் தோற்றம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

- பேராசிரியர் செ. கிருஷ்ணராசா -

## அறிமுகம்

தலவரலாறு பற்றிய ஆய்வுகளானவை ஒருநாட்டினுடைய அல்லது ஒரு பிரதேசத்தினுடைய கலாசார மரபுகளை வெளிக்கொணருவதாக அமையும். ஏனெனில் தென்னாசியவாழ்வு முறையானது வரலாற்றுக்காலம் தொட்டு இன்றுவரை தலங்களையே மையமாகக்கொண்டு உருவாக்கம் பெற்றும், வளர்ச்சியடைந்து கொண்டமையுமே அதன் அடிப்படைக் காரணியாக அமைந்தது. இப்பிரதேசத்திலே மதமும், மனிதவாழ்வும் ஒன்றிலிருந்து ஒன்றினைப் பிரித்துப்பார்க்க முடியாதளவுக்கு முறையே மணமும் மலரும் போன்று இணைந்து விளங்குவதனை அப்பிரதேசமக்களது கலையையும் வாழ்வினையும் பற்றி ஆராயப்புகும் ஒருவர் நன்கு தெரிந்து கொள்வர். அவ்வகையில் கோவில்கள் அல்லது தலங்கள் தென்னாசிய மனிதவாழ்வின் உயிரோட்டமான மையங்களாக, அப்பிரதேச மக்களுடைய வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாக விளங்கின என்றால் அது மிகையாகாது.

தென்னாசியாவிலே மனிதநாகரிக வாழ்வு முறையின் ஆரம்பம் எந்தளவுக்குப் பழமை வாய்ந்ததாக விளங்குகின்றதோ அதேகால எல்லைவரைக்கும் தலங்களில் தோற்றமும் மிகப்பழமை வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. தென்னாசியாவின் தென் அந்தத்திலே இந்துசமுத்திரத்திலே ஒரு மிதிகல்லாக விளங்குகின்ற இலங்கைத்தீவின் நாகரிகத்தினைப் பொறுத்தவரையிற்கூட வைதீக மரபினைச் சேர்ந்த தலங்களினது தோற்றமானது அத்தீவினது வரலாற்றின் முன்னுரையாக அமைந்துள்ளமையைக் காணமுடிகிறது. இதனைநன்கு அவதானித்த போல் இ.பீரிஸ் என்ற சிங்கள ஆய்வாளர்கூட விஜயனது வருகைக்கு முன்பிருந்தே இலங்கையில் ஐந்து ஈஸ்வரன் ஆலயங்கள் இருந்துவந்தன எனவும் இந்தச்சிவாலயங்கட்கு இந்தியாவிலிருந்தும் மக்கள் வந்து வழிபட்டுச்சென்றனர் எனவும் குறிப்பிட்டுவிட்டு, அவ்வைந்து ஈஸ்வரங்களின் பெயர்ப்பட்டியலை பின்வருமாறு கொடுத்துள்ளார்.

(அ) மகாதீர்த்தத்திற்கு அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம்
(ஆ) முன்னேஸ்வரம்,
(இ) தொண்டேஸ்வரம்
(ஈ) திருக்கோணேஸ்வரம்
(உ) காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரம் என்பவையே அவையாகும். (கிருஷ்ணராசா செ. 1980)

இவ்வகையிலே இலங்கைத்தீவினது நாகரிக வாழ்வுக்கட்டுமானப் பணியிலே இச் சிவ-ஈஸ்வரக்கலாசாரம் முன்னுரையாகவும், ஆதாரமாகவும் அமைந்திருந்தபோது, இந்தியாவிலே பௌத்தமதத்தினது தோற்றத்துடன் அது உபகண்டத்திற்கு வெளியே தென்னாசிய, தென்கிழக்காசிய, தூர கிழக்காசிய நாடுகளுக்கும் பரவி (அம்மத மானது) வெளிநாட்டு ஆட்சியாளர்களையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சமகாலச் சர்வதேசமதமாகவும் மாற்றம் பெற்றுக்கொண்டது. அதன் விளைவாக அவ்வப்பிரதேசங்களிலே மக்களுடைய வாழ்வுமுறைகளில் கலந்து, அவர்களை நாகரிகப்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் தொழிற்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலே, இலங்கையிலே, இந்த ஈஸ்வரக் கலாச்சாரமையங்கள் அவை மக்களுடன் கொண்டிருக்கக்கூடிய பிணைப்புக்களையெல்லாம் மெல்ல மெல்ல இழந்து, காலவோட்டத்திலே பௌத்தமதத்தினது செல்வாக்கின் பின்னணியிலே தமது சிறப்புக்களையெல்லாம் மறைத்த நிகழ்வினைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு இடம்பெற்றவோர் நிகழ்விற்குச் சிறந்தவோர் உதாரணமாக அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய விகாரையை எடுத்துக்காட்டுவது மிகப் பொருத்தமாக அமையும். உண்மையிலே முனிஈஸ்வரம் (முன்னீஸ்வரம்?) என வழங்கப்பட்டு வந்திருக்கக்கூடிய இத்தலமானது பௌத்தத்தினது மேற்குறிப்பிட்டது போன்ற நிகழ்வினால் அதன் பெயரானது பின்முன்னாகத்திரிபடைந்து (ஈஸ்வரம் + முனி → ஈஸ்வரமுனி → ) இசுறுமுனிய என இன்று ஒரு பௌத்தவிகாரைக்குரிய பெயராக வழங்கிவருவதனைக் காணலாம். (Reghavan, M.D) இன்றும் இவ்விடத்திலே கஜலக்ஷ்மியினது சிற்பம், மாமல்லபுரத்தினையொத்த யானைகளது புடைப்புச் சிற்பங்கள், தீர்த்தக்கேணி, போன்ற வைதீக சமயக்குறியீடுகள் எஞ்சிக்காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் இவ்வாறு எத்தனை ஈஸ்வரங்கள் இன்று இசுருவாக உருச்சிதைந்துள்ளனவோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) மகாதீர்த்தத்திற்கு (மாதோட்டம்) அருகிலுள்ள திருக்கேதீஸ்வரம்
(ஆ) முன்னேஸ்வரம்,
(இ) தொண்டேஸ்வரம்
(ஈ) திருக்கோணேஸ்வரம்
(உ) காங்கேசன்துறைக்கு அருகிலுள்ள நகுலேஸ்வரம் என்பவையே அவையாகும். (கிருஷ்ணராசா செ. 1980)

இவ்வகையிலே இலங்கைத்தீவினது நாகரிக வாழ்வுக்கட்டுமானப் பணியிலே இச் சிவ-ஈஸ்வரக்கலாசாரம் முன்னுரையாகவும், ஆதாரமாகவும் அமைந்திருந்தபோது, இந்தியாவிலே பௌத்தமதத்தினது தோற்றத்துடன் அது உபகண்டத்திற்கு வெளியே தென்னாசிய, தென்கிழக்காசிய, தூர கிழக்காசிய நாடுகளுக்கும் பரவி (அம்மதமானது) வெளிநாட்டு ஆட்சியாளர்களையும் கவர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சமகாலச் சர்வதேசமதமாகவும் மாற்றம் பெற்றுக்கொண்டது. அதன் விளைவாக அவ்வப்பிரதேசங்களிலே மக்களுடைய வாழ்வுமுறைகளில் கலந்து, அவர்களை நாகரிகப்படுத்தும் ஒரு நிறுவனமாகவும் தொழிற்பட்டுக் கொண்டிருந்த நேரத்திலே, இலங்கையிலே, இந்த ஈஸ்வரக் கலாச்சாரமையங்கள் அவை மக்களுடன் கொண்டிருக்கக்கூடிய பிணைப்புக்களையெல்லாம் மெல்ல மெல்ல இழந்து, காலவோட்டத்திலே பௌத்தமதத்தினது செல்வாக்கின் பின்னணியிலே தமது சிறப்புக்களையெல்லாம் மறைத்த நிகழ்வினைக் காணக் கூடியதாகவுள்ளது. இவ்வாறு இடம்பெற்றவோர் நிகழ்விற்குச் சிறந்தவோர் உதாரணமாக அநுராதபுரத்திலுள்ள இசுறுமுனிய விகாரையை எடுத்துக்காட்டுவது மிகப் பொருத்தமாக அமையும். உண்மையிலே முனிசுஸ்வரம் (முன்னீஸ்வரம்?) என வழங்கப்பட்டு வந்திருக்கக்கூடிய இத்தலமானது பௌத்தத்தினது மேற்குறிப்பிட்டது போன்ற நிகழ்வினால் அதன் பெயரானது பின்முன்னாகத்திரிபடைந்து (ஈஸ்வரம் + முனி → ஈஸ்வரமுனி → ) இசுறுமுனிய என இன்று ஒரு பௌத்தவிகாரைக்குரிய பெயராக வழங்கிவருவதனைக் காணலாம். (Reghavan, M.D) இன்றும் இவ்விடத்திலே கஜலஷ்மியினது சிற்பம், மாமல்லபுரத்தினையொத்த யானைகளது புடைப்புச் சிற்பங்கள், தீர்த்தக்கேணி, போன்ற வைதீக சமயக்குறியீடுகள் எஞ்சிக்காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும் இவ்வாறு எத்தனை ஈஸ்வரங்கள் இன்று இசுருவாக உருச்சிதைந்துள்ளனவோ?

**பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு**

யாழ்ப்பாணத்திலே, நல்லூரின் கண் அமைந்து காணப்படுகின்ற சட்டநாதர் என இன்று வணங்கப்பட்டுக்கொண்டு வருகின்ற கோவிலின் தோற்றம் பற்றிய நோக்கிலே, அதன் பெயர்க்காரணம் பற்றிய ஆய்வு முதற்படியாக அமைவதனைக் காணலாம். அவ்வகையில் இந்த ஈஸ்வரன் கோவிலின் திட்டவட்டமான பெயரினை அதாவது இன்று வழக்கிலிருந்து கொண்டிருக்கின்ற பெயர்தான் அக்கோவிலின் தோற்றகாலத்திலேயும் வழங்கப்பட்டதா அல்லது உண்மையான அப்பெயர் மருவிச் சென்று இன்று வழக்கிலிருக்கும் நிலையை அடைந்து கொண்டதா என்பதனையிட்டுச் சற்றுச் சிந்திக்க வேண்டியுள்ளது. இது தொடர்பான அடிப்படையான ஆதாரங்களைத் தேடிப் பெற்றுக்கொள்வதில் இன்றுமிகவும் கஷ்டமான ஒருநிலை காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், யாழ்ப்பாண இராச்சியத்து ஆரியச்சக்கரவர்த்திகளின் வரலாற்றைக்கூறும் இலக்கிய நூலான யாழ்ப்பாண வைபவமாலையில் ஓரிடத்திலே முதன் முதலாக இக்கோவிலைப்பற்றிய குறிப்பொன்று இடம்பெறுவதனைக் காணமுடிகிறது.

“.............. நாலு மதிலும் எழுப்பி வாசலும் ஒழுங்காய் விடுத்து மாடமாளிகைகளும் கோபுரங்களும் பூங்காவும், பூங்கா நடுவிலே ஸ்நான மண்டபமும், மூப்புடைக்கூபமும் உண்டாக்கி அக்கூபத்திலே யமுனாநதித் தீர்த்தமும் அழைப்பித்துக் கலந்துவிட்டு நீதி மண்டபம் யானைப்பந்தி குதிரைப்பந்தி, சேனாவீரரிருப்பிடம் முதலிய அனைத்தும் கட்டுவித்து கீழ்த்திசைப்பாதுகாப்பாக வெயிலுவந்த பிள்ளையார் கோவிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையும் வடதிசைக்குச்சட்டநாதேஸ்வரர் கோவில், தையல்நாயகியம்மன் கோவில் சாலைவிநாயகர் கோவிலையும் கட்டுவித்து.................. வாழ்ந்திருந்தான்” யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்ட இக்கோவிலின் பெயரினை உறுதிப்படுத்தும் பொருட்டு யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிட்ட இக்கோவிலின் பெயரினை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறு ஏதாவது சாசனச் சான்றுகள் அகப்படுமா என்று தேடியலைந்த பொழுது, எமக்கு முக்கியமானவொரு தாமிரசாசனம் கிடைத்தமையானது அக்கோவிலின் தோற்றம்பற்றிய ஆய்விலே புதியதொரு உத்வேகத்தினைக் கொடுத்து. இக் கோவிலினது மணிக்கோபுரத்திலே இன்றுவரை பாவனையிலிருந்து வரும் ஆலயமணியிலே பொறிக்கப்பட்டுள்ள சாசனமானது யாழ்ப்பாண வைபவமாலையிலே கொடுக்கப்பட்டிருந்த பெயரை நன்கு உறுதிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. அச்சானத்தின் வாசகம் வருமாறு:

| மூலம் | வாசிப்பு |
|---|---|
| சாலிவாகன சகாப | சாலிவாகன சகாப் |
| உ | உ |
| தம களஅது | தம் 1784 |
| கலியபதம நுகூசுங | கலியப்தம் 4963 |
| தநதுபி வருஷம் | தந்தபி வருஷம் |
| யாழ்ப்பானத்தைச் சரர்ந்த | யாழ்ப்பாணத்தைச் சார்ந்த |
| நல்லூர் சட்டநாதன கொ | நல்லூர்சட்டநாதன் கோ |
| யிலுக்கு சிவசம்பு - ம | யிலுக்கு சிவசம்பு - ம |

யாழ்ப்பாண வைபவமாலையைப் பொறுத்தவரையிலே அதில் குறிப்பிடுகின்ற சட்டநாதேஸ்வரர் என்ற பெயரானது கி.பி. 18ம் நூற்றாண்டுக்காலத்திலும் அதற்கு முன்பும் வழக்கிலிருந்து வந்திருக்கின்றது என்பதற்கு ஆதாரமாகின்றது. தொடர்ந்தும் அடுத்துவந்த நூற்றாண்டிலே சட்டநாதன் என்றபெயர் வழக்கிலிருந்து வந்துள்ளது. என்பதற்கு மேலே குறிப்பிட்ட அத்தாமிரசாசனம் ஆதாரமாக அமைகின்றது. அதே வழக்கு முறையே இன்றும் தொடர்ந்து வழங்கிவருவதனை நாம் காண்கின்றோம் இருந்த போதிலும் இக்கோவிலினது தோற்றம் தொடர்பாக பல ஐதீகங்கள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதனை வெளிக்கள ஆய்வின் போது நன்கு அறிந்து கொள்ளமுடிந்தது. அந்தவோர் அடிப்படையே சட்டநாதர் கோவிலினது தோற்றம் தொடர்பாக மேலும் தொடர்ந்து ஆராய்வதற்கு உந்துசக்தியாக அமைந்தது.

**சட்டைமுனியும் சட்டைநாதரும்**

இக்கோவிலினது தோற்றம் தொடர்பான ஐதீகங்களுள் சட்டைமுனி என்றழைக்கப்பட்ட ஒரு சித்தருடைய சமாதியே இக்கோவிலின் தோற்றத்திற்குக் கருவாக அமைந்தது என்பதும் நோக்கத்தக்கதாகும். பொதுவாகத் தென்னாசியக் கட்டிட கலைவரலாற்றிலே, பல்வேறுவகையான கோயில்களைக், குறிப்பாகத் தென்னாட்டில் காணமுடிகிறது. அவற்றின் பெயர்கள் அக்கோவில்களின் அமைப்புக்கேற்றவாறு வழங்கப்படுவதனையும் காணலாம். ஆலக்கோயில், இளங்கோயில், ஈஸ்வரம், கரக்கோயில், கொகுடிக்கோயில், ஞாலற்கோயில், துங்கானை மடம், பெருங்கோயில், மணிக்கோயில், பள்ளிப்படை என்பன அவற்றுள் சிலபெயர் வடிவங்களாகும். (ஸ்ரீனிவாசன் E.R. 1968) இவ்வகையான கோயில்களுள் சமாதிக்கோயில்கள் அல்லது பள்ளிப்படைக் கோயில்கள் பெருமளவுக்கு ஈஸ்வரன் கோயில்களாகவே அமைக்கப்பட்டு வந்தன. என்பதற்கும் சான்றுகள் உள. இக்கோவில்களின் அமைப்புவழக்கானது கி.பி.9ம் நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ்நாட்டிலேயோ அல்லது தென்னிந்தியா இலங்கையிலே நடைமுறையில் இருந்தது என்பதற்குச் சான்றுகள் ஏதுமில்லை (ஸ்ரீனிவாசன் C.R. 1968)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலநறுவையிலே கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே ஆழ்ந்து வெளிப்படுத்தப்பட்ட சிவாலயங்களுள் ஐந்தாவது சிவாலயம் ஒரு பள்ளிப்படைக்கோவிலாக அமைக்கப்பட்டிருந்தது என்பது அதனுட்புறத்திலிருந்து வெளிக்கொணரப்பட்ட ஈமத்தாழிகளினாலும் சின்னங்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையிலே சட்டநாதர்கோவில் தொடர்பான இச் சட்டைமுனி பற்றிய ஐதீகமானது எந்தளவிற்கு அக்கோவிலின் தோற்றத்துடன் தொடர்புபடுத்திப்பார்க்கலாம் என்பது அடிப்படைப்பிரச்சனையாக அமைகின்றது. ஏனெனில் ஐதீகமளவிலே சட்டைமுனியின் சமாதியுடன் தொடர்புடைய அச்சட்டைநாதஈஸ்வரர் கோவில் தொடர்ந்தும் அது ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலேயே இன்றுவரை இருந்து கொண்டிருக்கின்றதா என்பதையிட்டு ஏற்படும் சந்தேகமே அதற்குக் காரணமாகும்.

எவ்வாறாயினும் இலக்கியங்களிலே சட்டைமுனி என்று குறிப்பிடப்படுபவர், 10ம், 11ம், 12ம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்திருந்தனர் எனக்கொள்ளப்படும் சித்தர் பரம்பரையிலே ஒருவரான பாம்பாட்டிச்சித்தருடைய குருவாக இவர் குறிப்பிடப்படுகின்றார். (கலைக்களஞ்சியம், பாகம் 10, பக்கம் 371) பாம்பாட்டிச்சித்தருடைய பலபாடல்கள் நாத ஈஸ்வரனைத்துதித்துப் பாடப்பட்டவையாகவுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது. இவ்வடிப்படையிலே பார்க்கும்போது இக்கோவிலின் தோற்ற வரலாற்றினை சட்டைமுனியுடன் தொடர்பு படுத்திப்பார்க்கலாமா என்றும் எண்ணத்தோன்றும். அக்கருதுகோளின் அடிப்படையிலே இத்தலத்தின் பெயர் சட்டைநாத ஈஸ்வரர் என்றோ அல்லது சட்டைநாதன் என்றோ வழங்கப்பட்டிருக்கவேண்டு மென்றும் கொள்ளலாம். இவ்வாறான ஒருமரபு இருக்குமாயின் அது நிச்சயமாக 18ம் நூற்றாண்டின் முன்னரேயே வழக்கிலிருந்திருக்கவேண்டும் ஏனெனில் யாழ்ப்பாண வைபவமாலையிலே அது சட்டநாதேஸ்வரர் என்ற அதன் மருவுப்பெயராகவே கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே சட்டைநாதவீஸ்வரம் என்ற பெயர் இத்தலத்திற்கு வழங்கப்பட்டிருக்குமாயின் அது தொடர்பான சான்றுகள் ஏதாவது அப்பெயரினை உறுதிப்படுத்துகின்றனவா என்று நோக்குவது மிக மிக அவசியமானது. சட்டநாதர் என்ற பெயர்வடிவிலே இந்து விக்ரஹவியல் கோட்பாடுகளில் எந்தவிதமான குறிப்புக்களும் இடம்பெறாத ஒருநிலையில் சட்டநாதர் என்ற வடிவமானது மதுரைத் தமிழ்பேரகராதியில் (பாகம் 1, பக் 02) சிவன், வயிரவன், இறைவன் என்ற பொருள் கொள்ளும் எனக்குறிக்கப்பட்டுள்ளது. அவ்வகையிலே சட்டைநாதர் என்பது சிவனுடைய பைரவ மூர்த்தங்களுள் ஒன்று: "இரணியனைக் கொன்றதால் தருக்கித்திரிந்த நரசிங்கத்தை அடக்கி அதன் எலும்பைக் கதையாகவும் தோலைச்சட்டையாகவும் தரித்தவரே" சட்டைநாதர் என புராணரீதியான ஒருவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ள போதிலும், (வளவர்கோன் 1974) அதனை உறுதிப்படுத்தக்கூடியவகையில் எவ்விதமான சமய இலக்கிய வாதாரங்களோ அல்லது விக்கிரஹவியல் சான்றுகளோ கிடைப்பது அரிதாகவுள்ளது. இவ்வாறான ஒருநிலையில் யாழ்ப்பாண வைபவமாலையில் குறிப்பிடப்பட்ட அப்பாகத்திலே, தையல்நாயகியம்மன் கோவில் பற்றிய குறிப்பானது அங்கே தவறுதலாக சட்டநாதேஸ்வரர் என்று மருவுப்பெயராக இடம்பெற்றுள்ள தன்மையினையும் பதிலாக சட்டைநாத ஈஸ்வரர் எனத் தையல்நாயகி என்ற பெயருக்கேற்ப இடம்பெற்றிருக்கலாம் எனவும் ஊகமாகக் குறிப்பிடலாம். இவ்வாறு இக்கோவிலினது பெயர்த் தோற்றம் தொடர்பாக எழுந்த பிரச்சனைகளின் அடியாக உதித்த ஒருகருதுகோளானது சோழப் பேரரசர்களுடைய காலத்துடன் இக்கோவிலினது தோற்றத்தினை எடுத்துக் காட்டுவதற்கு வழிகோலியது.

## சோழரும் சிவாலயங்களும்

தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டிலே கி.பி. 9ம் நூற்றாண்டுடன் சோழப் பேரரசின் ஆதிக்கம் வளர்ச்சியடைந்தமையினை தென்னிந்திய வரலாறு கற்றோர்நன்கறிவர். அப்பேரரசின் விஸ்தரிப்புக்கும் திராவிடக்கலைகளின் வளர்ச்சிக்கும் அடிப்படையாகவிளங்கிய இருமாமன்னர்களான முதலாம் இராசராசன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் பேரரச ஆழ்புலத்திலே பல சிவன் கோவில்களையும் அமைத்தனர். தஞ்சைப்பெருவுடையார் கோவில் இவற்றுக்கெல்லாம் ஓர் உரைகல்லாக திராவிட சிற்பக்கலைகளின் உச்சமான ஓர் உறைவிடமாக விளங்குவதனைக் காணலாம். அவ்வகையிலே இலங்கையும் சோழப்பெரும் பேரரசின் மாகாணங்களுள் மும்முடிச் சோழ மண்டலமாக கி.பி. 993 க்கும் 1070 க்குமிடைப்பட்ட காலத்திலே ஆளப்பட்டதன் விளைவாக இங்கும் பல சிவன்கோவில்கள் அம்மன்னர்களால் கட்டுவிக்கப்பட்டன. அவ்வாறான சிவன் கோவில்கள் முக்கியமான நிர்வாகமையங்களாக விளங்கியிருந்திருக்கக்கூடிய நகரங்களிலே நிறுவப்பெற்று அம்மன்னர்களுடைய பெயர்களினாலோ அல்லது விருதுப்பெயர்களினாலோ பெயரிடப்பெற்று பலதானங்களும் வழங்கப்பட்டமைக்கு இதுவரையில் இங்கு கண்டெடுக்கப்பட்ட சோழர்காலத் தமிழ்க்கல்வெட்டுகள் சான்றுகளாகின்றன. அவ்வகையில் முதலாம் இராசராசனது விருதுப் பெயர்களிலேயும் அழைக்கப்பட்ட பல சிவன் கோவில்களை தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் அறியமுடிவது இங்கு குறிப்பிடத்தக்கது. இரவிகுலமாணிக்கஈஸ்வரம், இராசராச ஈஸ்வரம், வானவன் மாதேவி ஈஸ்வரம் என்பன இலங்கையிலே சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான கோவில்களாகும். இதில் வானவன் மாதேவி ஈஸ்வரம் என்ற பெயருடைய 2வது சிவாலயம் முதலாம் இராசராசனுடைய தாயாரினது பெயரில் பொலநறுவையிலே முழுமையான கருங்கற்களினால் கட்டப்பெற்றகோவிலாக இன்றுவரை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிந்தியாவிலே முதலாம் இராசராசனுடைய விருதுப்பெயர்களிலே அமைந்த சிவாலயங்களாக அருமொழிஈஸ்வரம், இராசராசஈஸ்வரம், சோழேந்திரஈஸ்வரம் ஜெயங்கொண்ட சோழஈஸ்வரம் என்பவை காணப்படுகின்றன. இவ்வகையிலே இலங்கையில் இச்சட்டைநாதஈஸ்வரர் கோயிலின் தோற்றம் தொடர்பாக முதலாம் இராசராசனின் விருதுகளில் ஒன்றான ஜனநாதன் என்பதனையும் இணைத்துப்பார்க்கக் கூடியதொன்றாக இருப்பது இங்கே நோக்கற்பாலதாகும்.

ஜனநாதஈஸ்வரம் என்ற நாமமே ஜடாநாதஈஸ்வரம் என்றாகிப் பின் ஜடை நாதவீஸ்வரம் எனத்திரிந்து நட்டநாதஈஸ்வரம் என இன்று வழங்கி வருகின்றது. எனக்காணலாம். இக்கருதுகோளினை உறுதிப்படுத்துவதாயின் சாசன, இலக்கிய மூலாதாரங்களை எதிர்காலத்தில் தேடிப்பெறவேண்டிய ஓர் அவசியம் ஏற்படும். முதலாம் இராசராசனது விருதுப்பெயர் என்ற வகையில், ஜனநாதபுரம் என்றபெயர் அவர்களுடைய மும்முடிச்சோழ மண்டலத்தின் தலைநகரான பொலநறுவைக்குச் சூட்டப்பட்டிருந்தது என்பதனையும் சாசனச்சான்றுகள் மூலம் அறிகின்றோம். ஆனால் தென்னிந்தியாவிலே இவ்விருதுப்பெயரினையுடைய சோழர்கோவில்கள் எவையும் காணப்படுபவையாக இதுவரை தெரியவில்லை அல்லது தென்னிந்தியாவிலே ஜனநாதபுரம் என்ற பெயரில் ஏதாவது நகரங்கள் காணப்பட்டிருந்தமைபற்றியும் இன்னும் தெளிவு ஏற்படவில்லை. ஜனநாதஈஸ்வரம் என்ற பெயரைக்கொண்டு விளக்கியிருக்கக்கூடிய சட்டசநாதேஸ்வரர் கோயிலின் தலவரலாறானது தெளிவுறும் என்பது எமது நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகர் கோயில்
# (நாகதம்பிரான்)

– பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை –

யாழ்ப்பாணத்துப் பருத்தித்துறைக்குக் கிழக்கே பத்துக் கட்டை தொலைவில் நாகர் கோயில் என்னும் பெயருள்ள ஒரு சிற்றூர் உண்டு. இவ்வூரின் தெற்கெல்லை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொண்டைமானாற்றிலிருந்து பரவி இருக்கும் உப்பாறு ஆகும். இவ்வாற்றினருகேயிருக்கும் நிலம் உப்பங்கழியாகையின் இங்கு கண்டல் மரம் பெரும்பாலும் வளரும். இக்கழிநிலத்தருகே வடபுறமாக மருத நிலமுள்ளது. இந்நிலத்தில் அவ்வூர் வாழ் உழவர் நெல் விளைப்பர். புன்செய்கை நிலமாகையின் ஆண்டுக்கொரு முறையே உழுது பயிரிடுவர். ஏனைய காலங்களில் வயல்கள் வெற்றெனக் கிடக்கும். இம்மருதநிலமும் ஒரு சிறிதளவே அங்குள்ளது. இது முடியும் எல்லையிலிருந்து வடபால் நோக்கி நெய்தல் நிலம் தொடங்கும். இம்மருதநில எல்லையிலிருந்து சற்றேறக் குறைய இரண்டு கட்டை தொலைவிலுள்ள கடல் மட்டும் நெய்தல் நிலமே பரந்துள்ளது.

இந்நெய்தல் நிலப்பரப்பு பருத்தித்துறைக்கு அடுத்துள்ள நெய்தல் நிலத்தூராகிய கற்கோவளத்திலிருந்து தொடங்கும். இது கிழக்குப் பாகத்தே கரையோரமாகப் பரந்து பச்சிலைப் பள்ளிக்கு அடுத்துள்ள கோவில்வயற் குடாநாடு வரைக்கும் செல்லும் யாழ்ப்பாணத்தில் இப்பகுதி மிகச் சரித்திரப் பெருமை வாய்ந்தது. பெரிய குடியிருப்புக்களைப் பழங்காலத்திற் கொண்டிருந்தது என்று சரித்திர நூல் வல்லோர் கருதுவர். வல்லிபுரக் கோயிலும் குடத்தனையும் இந்நிலப்பரப்பிலேயே உள்ளன. வல்லிபுரக் கோயிலிற் கண்டெடுத்த சாசனத்தின்படி கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் அநுராதபுரத்திலிருந்து இலங்கையை அரசாண்ட வசபன் என்னும் அரசன் காலத்திலே நாக தீவத்தை அவன் அமைச்சருள் ஒருவனாகிய இசிகிரயன் என்பவன் மாகாண அதிகாரியாய் இருந்து பரிசீலித்து வந்த காலத்தில் பியகுசதீசன் என்பவன் கட்டியெழுப்பிய புத்தப் பள்ளியிருந்த இடத்திலேயே பிற்காலத்தில் வல்லிபுரக் கோயில் தோன்றியிருக்கின்றதெனத் தெரிகின்றது. மேலும் புத்த பள்ளிகளை அமைக்கும்பொழுது அதன் அத்திவாரத்தின் கீழ் மக்கள் கண்ணுக்கு எட்டாது பொற்றகட்டில் அப்பள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளியை ஆக்குவோனின் பெயர் பொறித்து வைத்தல் அக்கால மரபு. அவ்வாறெனின் அத்திவாரத்துக்குக் கீழ் புதைக்கப்பட்ட பொற்றகடு மேலுக்குக் கிளம்பியதன் காரணம் யாது என்ற கேள்வி எழும். அதற்கு விடை என்னவெனின் அப்பள்ளி கட்டிய காலத்தும் அந்நிலம் மணலாகவே இருந்ததென்க. ஆகையால் இந்நிலப்பரப்பு சரித்திர எல்லைக்கு முற்பட்ட காலத்திலிருந்தே மணல் நிலமாக இருந்திருக்கிறது. 1952ஆம் ஆண்டில் நடந்த கடல்கோள்போல முன்பும் எத்தனையோ கடல்கோள்கள் இப்பகுதிக்குள் நடந்தனவென்று பழைய நூல்கள் வாயிலாக அறிகிறோம். அன்றியும் இப்பகுதி பழங்காலந்தொட்டே இலங்கைச் சரித்திரத்தில் கீர்த்தி வாய்ந்ததாய் இருந்து வருகின்றதென அறிகின்றோம். இப்பொழுது சிறுகாடு அடர்ந்து இடையிடையே மக்கள் வாழும் சிறுசிறு ஊர்கள் உடையதாய் இருக்கின்றது. இக்காட்டுப் பக்கங்களில் உள்ள மணற்பரப்பில் செங்கல்லுத் துண்டுகளும், கலவோடுகளும் மலிந்து காணப்படுகின்றன. அதனோடு பொற்காசுகளையும் சில வேளைகளில் திரவியங்களையும் மக்கள் கண்டெடுக்கின்றனர். இப்பகுதி நிலத்தைத் தொல்பொருட்கலை ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து பார்த்தால் பழைய உண்மைகள் ஒருவாறு வெளியாகும்.

நிற்க. இந்நாகர்கோயிலுள்ள நெய்தல் நிலப்பரப்பும் இப்பெரும் பகுதியின் ஒரு கூறே. ஆகையின் இவ்வூருள்ள பகுதியும் சரித்திரப் பெருமை வாய்ந்திருந்தது என்பது போதரும். இங்கிருக்கும் காட்டுமணல் நிலங்களிலும் கலவோடுகளும், செங்கற்றுண்டுகளும் மலிந்திருப்பதை எங்கும் காணலாம்.

இவ்வூரிலே கீர்த்தி வாய்ந்த கோயில் ஒன்று இருக்கின்றது. இக்கோயிலின் பெயர் நாகதம்பிரான் கோயில். இது இங்குள்ள மருத நிலமும் நெய்தல் நிலமும் சந்திக்கும் இடத்தில் உள்ளது. மிகப்பெரிய கோயிலன்று. எனினும் எவராலும் நன்கு போற்றப்படுவது. இக்கோயிலிலுள்ள நாகதம்பிரானையே இவ்வூரிலுள்ளார் முக்கிய கடவுளாக வணங்குவர். இக்கோயிலின் மூலமூர்த்தி சிவலிங்கத்தைத் தனது படத்துள் அமைத்து வைத்திருக்கும் ஐந்து தலை நாகம். இத்திருவுருவம் பழைய உண்மையை எடுத்துக்காட்டுமாயின் 'நாகதம்பிரான்' என்னும் சொற்றொடர் சிவபெருமானுக்கே உள்ள வேறொரு பெயராகும். 'தம்பிரான்' என்ற சொல் சிவபெருமானுக்குப் பெயராய்ப் பெரியபுராணம் வழங்கும் 'தம்பிரான் சோழர்' என்னும் சொற்றொடர். சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் குறிக்கும் - 'சிவபெருமானுக்குத் தோழர்' என்னும் பொருள் படுதலால். ஆனால் மலையாளத்தில் 'தம்பிரான்' என்னும் சொல் அரசனைக் குறிக்கும். திருவனந்தபுரத்து அரசரை இன்றும் தம்பிரான் என்றே அழைப்பர். அதனால் இது 'நாகமாகியதம்பிரான்' என்ற பொருளைத் தருகிறது. அதாவது நாகமாகிய கடவுள் என்று பொருள்படும். இப்பொருளே மக்கள் மனதில் இன்று ஊன்றி இருக்கின்றது. இப்பொருளையொட்டி அவ்வூரில் பல கதைகளும் எழுந்துள்ளன.

பறங்கியர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆண்ட காலத்திலே ஒரு முறை நாகர் கோயில் கடற்கரையில் பறங்கியரின் போர்க்கப்பல் ஒன்று வந்து நங்கூரமிட்டது. அவர் படையிற் போர் வீரராக்கும் எண்ணத்தோடு அவ்வூரிலிருந்த ஆயிரம் வாலிபரைக் கைப்பற்றினர். இச்செய்கை அவர்களுக்கும் அவர்கள் பெற்றோர்க்கும் இசையவில்லை. பறங்கியர் ஆட்சிக் காலத்தில் தன்னரசு முறையைக் கைக் கொண்ட கொடுங்கோலாட்சி ஆயினமையின் அவ்வூர் மக் கள் அரசினரின் இவ்வடாத செய்கையை எடுத்து மொழி யப் பெரிதும் அஞ்சினர். அதனால் தாம் வழிபடும் கடவுளா கிய நாகதம்பிரானுக்கே இவ் அநியாயத்தை முறையிட்டுப் பழிகிடந்தனர். தம்மக்களின் இடரைக் கண்ட தம்பிரான் அவரைக் காக்கத் திருவுளங்கொண்டார்.

இது இவ்வாறாக, பறங்கியர் இளைஞர் ஆயிரவரையும் ஒரு குறித்த நாளில் கோவைக்குக் (Goa) கொண்டு செல்லக் கப்பலேற்றுவரென்று அவ்விளைஞர்களின் பெற்றோர் யாவரும் அறிந்தனர். ஊரவர் கப்பல் நங்கூரமிட்டு நிற்கும் கடற்கரையிலே திரள் திரளாய் வந்து சேர்ந்தனர். எங்கும் அழுகையும் ஓலமுமாக இருந்தது. இவர்கள் இப்படியிருக்கப் பறங்கிக் கப்பற் தலைவனும் கடற்படை வீரரும் கப்பலுக்கு வந்து சேர்ந்தனர்.அவரோடு அவ்விளைஞர் ஆயிரவரும் அக்கப்பலிலேற்றப்பட்டனர். சிறிது நேரத்தில் கப்பல் பாயெடுப்பதற்காகிய முன்னேற்பாடுகள் யாவும் அங்கு நடந்துகொண்டிருந்தன. கப்பல் மாலுமிகள் அங்கு மிங்கும் ஓடிஓடித் தத்தமக்கிட்ட வேலைகளைக் கவனித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தனர். இவ்வாறு வேலைகள் நடந்துகொண்டிருக்கும் போது மாலுமி ஒருவன் கப்பற்பாய்களை ஒழுங்குபடுத்துவ தற்காகக் கப்பலின் நடுப்பாய் மரத்தில் ஏறினான். அப்பொழுது அங்கு ஒரு நாகபாம்பு படுத்திருப்பதைக் கண்டான். உடனே அதற்கு அஞ்சி கீழுறங்கி ஓடிச் சென்று கப்பற்றலைவனுக்குக் கூறினான். மாலுமிகள் யாவரும் தலைவனோடு பாய்மரத்தருகே வந்து பாம்பு படுத்திருப்பதைப் பார்த்தனர். பின்னர் ஒரு துப்பாக்கி எடுத்து அதற்குள் வெடிமருந்தும் குண்டும் போட்டு அப்பாம்பிற்கு இலக்குவைத்துச் சுட்டனர். பாம்பு ஆயிரத்துக்கு மேலான துண்டுகளாகிக் கப்பற்றளத்தில் வீழ்ந்தது. இதைக்கண்டு கப்பற்றலைவனும் மாலுமிகளும் மிகுந்த ஆனந்தம் கொண்டனர்.

இவ்வாறு அவர் ஆனந்தமுற்றிருக்கையில் ஒவ்வொரு துண்டும் ஒவ்வொரு பாம்பாகிப் படமெடுத்துச் சீறி நின்றாடியது. இக்காட்சியைக் கண்டதும் பறங்கியர் அஞ்சினர். ஒன்றோ, இரண்டோ அல்ல. ஆயிரத்துக்கு மேலான பாம்புகள் அடியெடுத்து வைக்கவும் இடமில்லாது கப்பலெங்கும் பாம்புகளாகக் காட்சியளித்தன. இதற்கிடையில் புயலொன்றும் எழுந்தடித்தது. அப்புயலின் ஆவேசத்தால் கப்பல் பக்கத்துக்குப் பக்கம் ஆடி அசைந்து நீர்கோலி ஆழும் நிலையில் இருந்தது. தலைவன் இவ்வாபத்தான நிலையைக் கண்டான். உடனே பாரத்தைக் குறைப்பதற்காக அங்கு ஏற்றிய இளைஞர்கள் யாவரையும் இறங்கும்படி கட்டளையிட்டான்.

அவ்வாறு அவர்கள் ஒவ்வொருவரும் இறங்கும்போது ஒவ்வொரு பாம்பும் அவருடன் இறங்கியது. கப்பலின் பாரம் குறைந்தபடியால் கப்பலின் அபாயமும் நீங்கிற்று என எண்ணிக் கப்பற் தலைவன் உவகையெய்தினான். ஆனால், ஒரு பாம்பு மட்டும் இறங்காது நின்று பெரும் நாதமிட்டுச் சீறும் பயங்கரமான ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. இன்னும் ஒரு பாம்பு கப்பலின் உட்புறத்தில் நிற்பதை அறிந்தனர். அப்பொழுது கப்பலின் உட்புறத்தை ஆராய்ந்து பார்த்த போது அங்கு ஒரு சிறுவன் இருக்கக் கண்டனர். அவனைக் கப்பலின் சமையற்காரன் தன் அட்டற்றொழிலுக்கு உதவி புரிவதற்குப் பிடித்து வைத்திருந்தமை ஒருவருக்கும் தெரியாது. கப்பலுக்குள்ளே கொண்டு வந்து அட்டல் அறைக்குள் ஒளித்து வைத்திருந்தான். அதை அறிந்து மாலுமிகள் அச்சிறுவனையும் வெளியே கொண்டு வந்தனர். பாம்பும் அவனைப் பின்தொடர்ந்து வந்தது. உடனே அவனையும் கரையில் இறக்கினர். அவனோடு பாம்பும் சென்றது. புயலும் ஓய்ந்தது. இதை அறிந்து மாலுமிகள் மூச்சுவிட்டு மனம் ஆறினர். அதன்பின் கப்பல் பாய் எடுத்து அவ்வூரை விட்டு நீங்கியது. ஊரவர்கள் நாகதம்பிரான் கோயிலுக்குச் சென்று பெரிய வழிபாடாற்றி நாகதம்பிரானை வாழ்த்தி நின்றனர்.

இக்கோயிலிலே திருவிழா ஆண்டுதோறும் புரட்டாதி மாதம் நடக்கும்.அங்கு நடக்கும் திருவிழாக்களில் ஒன்று கப்பற்றிருவிழா. அப்பொழுது ஒரு கப்பல் கட்டி, பறங்கியர் போல் உடையணிந்து, பறங்கியர் அவ்வூர் இளைஞரைப் பிடித்துத் தம் கப்பலில் ஏற்றிப் பின் நாகதம்பிரானின் அருளால் இறக்கிவிட்ட வைபவத்தை மக்கள் முன்னிலையில் பாட்டுப்பாடி நடித்துக் காட்டுவர். அன்றியும் கடைசித் திருவிழாவாகிய கடற் தீர்த்தத்தன்று சுவாமியை அலங்கரித்து மிக்க ஆடம்பரத்துடன் அங்குள்ள கடற்கரைக்கு எடுத்துச் சென்று தீர்த்தமாடுவர். தீர்த்தமாடும் இடமே பறங்கியரின் கப்பல் வந்து நங்கூரமிட்டு நின்ற இடம் என்று அங்குள்ளார் இன்றும் கூறுவர்.

நாகதம்பிரானின் திருவிளையாடல்களைப் பற்றிய இன்னும் பல கதைகள் அவ்வூராரக்குள் வழங்குகின்றன. ஒரு முறை கடற்திருவிழாவன்று தீர்த்தமாட்டுதற்குச் சுவாமியைக் கொண்டு செல்ல ஏதோ பிணக்கால் சிறிது நேரம் சென்றுவிட்டது. மக்களும் கடற்கரையிற் தீர்த்த மாடும் இடத்திற் கூடிவிட்டனர். சுவாமியை இன்னும் கொண்டு வரவில்லை. அப்பொழுது எவரும் பார்க்கக்கூடிய வண்ணம் நாகமொன்று அங்கு வந்து கடலில் தீர்த்தமாடியது. அவ்வற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தித்து மக்கள் நாகதம்பிரானைப் பரவி நின்றனர்.

அவ்வூரிலே இரு பகுதி மக்கள் வாழுகின்றனர். தரைப் பகுதியில் வேளாண் மக்கள். கரைப்பகுதியில் நெய்தல் நில மக்கள். இரு பகுதியாருக்கும் உரியது நாகதம்பிரான் கோயிலாகையினால், வழக்கமாக ஒற்றுமையாகவே இங்கு திருவிழாக்கள், பொங்கல் பூசைகள் முதலியன நடைபெறும். ஊடுதலும் உவத்தலும் மனித இயற்கையாகையின் சிற்சிலவேளைகளில் இரு பகுதியாருக்கும் சண்டை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சச்சரவுகள் வருதலும் உண்டு. திருவிழாக்காலத்தில் ஒரு நாள் அவ்வகையான சண்டையொன்று எழுந்தது. முதலில் வாய்ப்போராய் எழுந்தது, கைப்போர் பொல்லுப் போராய் மாறுதற்கு ஆயத்தமாயிற்று. எங்கும் ஒரே குழப்பமும் கொந்தளிப்புமாகவிருந்தது. திருவிழாவும் நிறுத்தப்பட வேண்டிய நிலையில் இருந்தது. இவ்வாறான கலவரத்துக் கிடையில் ஒருவன் அங்குள்ள பலிபீடத்தில் ஒரு பாம்பு வந்திருக்கக் கண்டு, யாவருக்கும் உரக்கக் கூவி அச்செய் தியைச் சொன்னான். உடனே சண்டை நின்றது. யாவரும் நாகதம்பிரானை வீழ்ந்து வணங்கித் தாம் செய்த இத்தீய செயலை மன்னிக்குமாறு இரந்து வேண்டினர். அதன்பின் திருவிழா முன்னரிலும் பெரும் அன்போடு மிகவிமரிசை யாக நடந்து முடிந்தது.

அங்கு நாகபாம்புகள் பல வாழுகின்றன. அவை எவருக் கும் தீங்கு செய்வதில்லை. பூசை செய்யும் பூசாரியார் அவற்றிற்குப் பாலும் பழமும் வைக்கும் வழக்கம் உண் டென்று கூறுவர். கோயிலில் ஏதாவது குற்றம் நடந்து விட்டால் பாம்பு அங்கு மக்களுக்கு வெளிப்பட்டு நிற்கும் என விளம்புவர். மறுநேரங்களிலும் அவ்விடத்தில் பாம்பு உலாவ மக்கள் காண்பதும் உண்டு.

ஒருநாள் அங்கு வழக்கமாகப் பூசை செய்யும் பூசாரியார் ஏதோ வேலையாய் எங்கோ சென்றுவிட்டார். அவர் போகும் போது மறுநாள் பூசையைப் போய்ச் செய்து விடுமாறு சிறுவனாகிய தன் மகனிடம் கூறி இருந்தனர். சிறுவன் பூசை செய்ய அங்கு சென்று கோவில் கதவைத் திறந்தான். கதவு சிறிது திறந்ததும் அங்கு ஒரு பாம்பு வாயிற்படிக்கருகில் கிடப்பதைக் கண்டான். கோயிற் பாம்பாகையின் அதற்கு அவன் அவ்வளவு பயப்படவில்லை. பாம்பைக் கடந்து கோயிலுக்குள் போதல் முறையன்றென எண்ணி சிறிது நேரம் அங்கு வெளியே நின்றான். பாம்போ நகர்ந்த பாடில்லை. பின்னர் சிறு தடி ஒன்றினை எடுத்து அதனால் பாம்பைச் சிறிது தள்ளினான். பாம்புக்குக் கோபம் வந்து விட்டது. கோயிலுக்குள் ஒரே இரைச்சலாக இருந்தது. சிறுவன் பயந்து நடுங்கினான். பாம்பின் இரைச்சலைக் கேட்டு அங்கு பலர் வந்து கூடினர். அங்கு நின்றோருள் ஒருவன் ஓடோடியும் பூசாரியார் வீட்டுக்கு வந்து நடந்தவற் றைக் கூறினான். அத்தறுவாயில் பூசாரியாரும் வீடு வந்து சேர்ந்தனர். அவர் நிகழ்ந்தவற்றை அறிந்து விரைவில் நீராடி விட்டுக் கோயிலையடைந்தார். பாம்பு நாதமிட்டுக் கொண்டு கிடப்பதைக் கண்டார். உடனே கதவைத் திறந்து "எம்பெரு மானே! என் மகனோ சிறு குழந்தை. அவன் செய்ததை இவ்வாறு கோபமாய் எடுக்கலாமா? நகர்ந்து வழிவிடுங்கள், பூசைக்கு நேரமாகிறது" என்று தம் கைகளைக் கூப்பி வணங்கிக் கூறினார். நாத ஒலி நின்றது. பாம்பும் ஒரு பக்கம் நகர்ந்தது. பூசையும் செவ்வனே முடிவுற்றது.

இவ்வூரிலே விடந்தீண்டி மக்கள் இறப்பது குறைவு. யாருக்காவது விடந்தீண்டிவிட்டால் விடந்தீண்டியவரைக் கோயிலுக்குக் கொண்டுவந்து அங்குள்ள புற்று மண்ணை எடுத்து கோயிலுக்கு அருகிலிருக்கும் நீர்நிலையிலுள்ள தண்ணீருடன் கலந்து குடிக்கக் கொடுப்பர். சிறிது நாழிகை யில் விடம் தீர்ந்துபோகும். இந்நீர்நிலைக்குள் "குடவாழை" என்ற ஒருவகைச் செடி அடர்ந்து வளர்ந்துள்ளது. இச்செடி யின் சத்து விடத்தைப் போக்கவல்லதோ என்றும் ஆராயத் தக்கது.

இன்று இவ்வளவில் நிற்க, இதுவரையில் "நாகதம்பிரான்" என்ற சொற்றொடரை நாகமாகிய தம்பிரான் எனப்பொருள் கொண்டு ஆராய்ந்தோம். "நாகர்தம்பிரான்" என்னும் தொட ரும், "நாகதம்பிரான்" என்று உருவங்கொண்டு வழங்கும். 'வணிகர் தெரு, வணிக தெரு' என்று மருவி வழங்குதல் போல, நாகர் என்னும் சொல்லும் தம்பிரான் என்னும் வேற்றுமை வழியாகப் புணர்ந்து இப்பொழுது வழக்கிலிருக் கும் நாகதம்பிரான் எனும் தொடர் வந்திருக்கலாம் எனக் கொள்ளின் இச்சொற்றொடர் நாகர் என்னும் சாதியாரின் அரசன் என்று பொருள்படும். வல்லிபுரக் கோயிலில் கண்டெ டுத்த சாசனத்தினாலும் மற்றும் வேறு ஏதுக்களினாலும் இப்பொழுது "யாழ்ப்பாணம்" என வழங்கும் நிலப்பரப்புக்கு நாகதபும் என்ற பெயர் பண்டைக்காலத்தில் இருந்ததென அறிகிறோம். ஆகையினால் யாழ்ப்பாணம் நாகசாதியாரின் குடியிருப்பாய் இருந்த அக்காலத்தில் "நாகர்கோயில்" எனப்படும் அவ்வூர், நாகர் தம் அரசன் வதியும் ஊராக இருந்திருக்கலாம். அதாவது நாகர் கோயிலின் கோட்டை அங்கேயே இருந்தது. அங்கிருந்தே நாகர் தலைவர் அப்பகு தியை அரசாண்டான் என்று போதரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இராசநாயக முதலியாரவர்கள் தமது "பண்டை யாழ்ப்பாணம்" என்னும் சரித்திர நூலில் "கந்தரோடை" என்னும் ஊரே யாழ்ப்பாணத்தில் நாகர் காலத்துத் தலை நகராயிருந்ததெனக் கூறும் காலத்தில் அங்கு நாகர் மட்டு மேயன்றி வேறு சாதியாரும் வந்து கூடிவிட்டனர் எனத் தெரிகிறது. ஆனால், "நாகர் கோயில்" என்னும் ஊர் தலைநகராயிருந்த காலத்தில் நாகரேயன்றிப் பிறமக்கள் அங்கு இருக்கவில்லையென ஊகித்தற்கிடமுண்டு. ஆகை யால் நாகர் கோயிலே யாழ்ப்பாணம் நாகர் குடியிருப்பாயி ருந்த காலத்து முதற்றலை நகரமாயிருக்கலாம்.

இதுபோலவே தென்னிந்தியாவிலும் "நாகர்கோயில்" என்னும் பெயருடைய ஓர் ஊர் இருக்கிறது. மிகப்பழங்-காலத்து நாகர் சாதியார் இந்தியாவின் தென்கோடியில் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. நாகபட்டினம், நாகர்கோயில் போன்ற ஊர்ப்பெயர்கள் இதற்குச் சான்றாகும். அன்றியும் மலையாளத்தில், ஈழத்தில் இருப்பது போலவே, "நாக" வழிபாடு இன்றும் இருந்து வருகிறது. இங்குள்ள ஒவ்வொரு நம்பூதிரிப்பார்ப்பனர் இல்லத்திலும் அதன் தெற்குப் பக்கத்தில் "நாக" வழிபாட்டிற்குரிய இடங்கள் காணப்படு கின்றன. இதனால் நாகவழிபாடு இங்கு பண்டைக்காலந் தொட்டே இருந்து வருகிறதெனத் தெரிகிறது. எனவே, இப்பகுதிக்கும் நாகர்காலத்தில் இங்குள்ள நாகர் கோயிலே அரசன் இருப்பிடமாயிருந்திருக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் முருகன் கோயில்

– கலாநிதி சி. சந்திரசேகரம் –

**அறிமுகம்**

மட்டக்களப்பு படுவான்கரையின் தென்புறத்தில் வாவிக்கரை ஓரமாக அமைந்துள்ள ஒரு பாரம்பரிய விவசாயக் கிராமம் மண்டூராகும். இங்கு அமைந்திருக்கின்ற பழமை மிக்க முருகன் ஆலயம் 'சின்னக் கதிர்காமம்' என்று சிறப்புப் பெற்றது. கிழக்கிலங்கைத் திருப்படைக் கோயில்களில் ஒன்றாகக் கொள்ளப்படும் இந்த ஆலயம் பண்டைய மன்னர்களின் மதிப்பும் மானியங்களும் நிர்வாக அமைப்பும் பெற்றதாகக் கொள்ளப்படுகின்றது. முற்காலத்திலே வகுக்கப்பட்ட நிர்வாக அமைப்பு முறைகளும் பழைய வழிபாட்டு பூசை மரபுகளும் இன்றுவரை மாற்றமின்றி பேணப்பட்டு வருவதே இவ்வால யத்தின் சிறப்பாகும்.

**ஆய்வு மூலங்கள்**

வாய்மொழி மரபுகளுக்கு அதிகம் உட்பட்ட சமூகங்களின் சமூக, சமய, பண்பாட்டு வரலாறுகளை எழுதுவதில் எழுத்துநிலைப்பட்ட ஆவணங்கள் இல்லாமையும் வாய்மொழிநிலைப்பட்ட மூலங்களை வரலாற்று ஆவணங்களாகக் கொள்வதில் காட்டப்படும் தயக்கமும் பெரும் தடைகளாக உள்ளன.

எனினும் அண்மைக் காலமாக வாய்மொழி வழக்கியல் கூறுகளை வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுத்தும் முறை கோட்பாடாகவும் முறையியலாகவும் வளர்ந்து வருகின்றது. இது வரலாற்று ஆவணப்படுத்தலில் நவீன யுக்தியாக அமைந்துள்ளது.

அந்தவகையில் மண்டூர் முருகன் கோயிலதும் அப்பிரதேச மக்களதும் வரலாற்றைக் கூறுவ தற்கான முதன்மை வரலாற்று ஆவணங்களாக வாய்மொழி ஆவணங்கள் இருந்து வருகின்ற நிலையில் அத்தகைய ஆவணங்களே இந்த ஆய்வுக்கு முதன்நிலை ஆதாரங்களாகக் கொள்ளப் படுகின்றன. இவை பெரும்பாலும் கள ஆய்வின் ஊடாகத் திரட்டப்பட்டவை.

**வரலாறு**

மண்டூர் முருகன் ஆலயத்தின் வரலாற்றைப் புரிந்துகொள்வதன் ஊடாகவே அவ்வாலயத்தின் நிர்வாக ஒழுங்குமுறைகளையும் வழிபாட்டு முறைகளையும் புரிந்துகொள்ள முடியும்.

மண்டூர் முருகன் கோயிலின் வரலாறு தில்லை மரமொன்றில் தங்க வேலொன்று வந்திருந்த தோடு தொடங்குகின்றது. சூரனைக் கொல்வதற்காக முருகனால் ஏவப்பட்ட வேலின் ஒரு கிளையே தில்லை மரத்தில் தங்கியிருந்ததாக ஐதீகக் கதை கூறுகின்றது. ஆனால், துறைநீலாவணைச் செப்பேடு சீர்பாத குலத் தலைவன் சிந்தன் வீரமுனையிலிருந்து எடுத்து வந்த வேலினை தில்லை மரத்தில் மறைத்து வைத்ததாக கூறுகின்றது.

எவ்வாறாயினும் ஆரம்பத்தில் தில்லை மரத்தில் இருந்த வேலினை வேடுவர் கண்டு கொத்துப் பந்தலிட்டு வணங்கி வந்தனர் என்பது பொதுவான கதையாக உள்ளது. அதேவேளை மட்டக்களப் பிலுள்ள பழமைமிக்க ஆலயங்கள் பலவற்றின் ஆரம்ப நிலைகளும் இவ்வாறு வேடர் கொத்துப் பந்தல் அமைத்து வழிபட்டமை பற்றிய வாய்மொழிக் கதைகளுடன் தொடர்புபட்டதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில், திருக்கோயில் ஆகியவற்றில் முன்பு வேடர்கள் வேலை வைத்து வணங்கினர் என்ற கதையும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் முன்னர் வேடர்கள் கொத்துப் பந்தலிட்டு வணங்கினர் என்ற கதையும் நிலவுவது மனங் கொள்ளத்தக்கது. இத்தகைய ஒத்த கதைகள் பல்வேறு பாரம்பரிய கிராமங்களிலும் நிலவுவது அப்பிரதேசங்களில் ஆரம்ப காலங்களில் வேடர்கள் வாழ்ந்தமையைச் சுட்டுவனவாகவே கொள்ள வேண்டி உள்ளது. இதற்குச் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வாளர்களின் கருத்துக்களும் வலுச் சேர்க்கின்றன.

4000 ஆண்டுகள் அல்லது அதற்கு முன்பிருந்தே புளுட்டோ அவுஸ்ரேலிய வகையைச் சேர்ந்தவர்களான வேடர்கள் இலங்கையில் வாழ்ந்துவந்துள்ளனர் என Chandra Richard De Silva குறிப்பிடுவார் (மேற்கோள்: குகபாலன், 2000: 25). குறிப்பாக கிழக்கு, ஊவா, மத்திய பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற இந்த வேடர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் சிங்களவர்களாகவும் தமிழர்களாகவும் காணப்படுவதாக பேராசிரியர் குகபாலன் கூறுவார் (2000:25). மேலும் இலங்கையில் ஆதிக்குடிகள் பிற்பட்ட காலத்தில் வேடர் என அழைக்கப்பட்டதாகவும் இவர்களுள் ஒரு பகுதியினர் மட்டக்களப்பு மாநிலத்தின் உட்பகுதிகளில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்தனர் என்றும் க. மகேஸ்வரலிங்கம் குறிப்பிடுவார் (2005:61).

எனவே மண்டூரில் ஆரம்பத்தில் வேடுவர் கொத்துப் பந்தலிட்டு வேலை வணங்கிவந்தனர் என்ற வாய்மொழிக் கதை பண்டைக் காலத்தில் இங்கு வேடுவ இனத்தவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்ற ஊகத்தை ஏற்படுத்துகின்றது. இதனை மேலும் பல அம்சங்கள் உறுதி செய்வனவாக உள்ளன. இதில் முக்கியமானது இச்சந்ததி மரபில் வருபவர்கள் இன்றும் (வேடக்குடி) மண்டூரில் வாழ்ந்து வருவதையும் அவர்கள் தமக்கு இவ்வாலயத்தில் வகுக்கப்பட்ட ஊழியங்களையும் உரிமைகளையும் ஆற்றுவதையும் குறிப்பிட முடியும். ஒன்பதாம் நாள் திருவிழா, சுவாமி ஊர்வலத்தில் சுவாமிக்கு முன்னே இச்சாதிப் பிரதிநிதி ஒருவர் வில், அம்பு ஏந்திச் செல்லுதல் என்பன இவர்களுக்கு வழங்கப் பட்டுள்ள உரிமைகள் / ஊழியங்களாகும். அத்துடன் கொடியேற்றத்தின் போது கொத்துப் பந்தலிடுவதும் ஆரம்ப வழிபாட்டின் அடையாளமாகவே அமைகின்றது. தீர்த்தம் முடிந்து மூன்றாம் நாள் நிகழ்த்தப்படும் வேடர் சடங்குகளும் வேடரின் வணக்க முறையின் தொடர்ச்சியைக் காட்டுகின்றன.

அடுத்து சீர்பாத குலத்தவர் என்னும் சாதிக் குழுமத்தினரின் வரவு இவ்வாலய வரலாற்றில் முக்கியப்படுத்தப்படுகின்றது. வேடரின் வழிபாடு நிலவிய சூழலிலேயே சீர்பாதக் காரரின் வருகை இப்பிரதேசத்திற்கு நிகழ்ந்திருக்க வேண்டும். மட்டக்களப்பு வாவியில் தொழில் நிமிர்த்தம் வந்து இளைப்பாறுவதற்காக கரைசேர்ந்த துறைநீலாவணைச் சீர்பாத குலத்தார் சிலரும் அவ்வேடருடன் சேர்ந்து வழிபாட்டுக் கடமைகளில் முன்னின்றனர் என வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன (கந்தையா,வி.சீ., 2002: 66).

மாறாக சீர்பாதகுலம் பற்றிய துறைநீலாவணைச் செப்பேடு அவர்களது வரவினைச் சீர்பாத குலத் தலைவன் சிந்தன் வழியானதாகக் கூறுகின்றது. எவ்வாறாயினும் இவ்விரு தகவல்களும் சீர்பாத குலத்தவர் இவ்வாலய வணக்கத்தின் நிமிர்த்தம் வந்திணைந்தவர்களாகக் கூறுகின்றன.

சீர்பாத குலத்தவரின் ஆரம்பகால குடியேற்ற மையங்களாக வீரமுனை, துறைநீலாவணை ஆகிய இடங்கள் இருந்தமையை சீர்பாதகுல செப்பேடுகள் காட்டுகின்றன. இவர்களது குடிப்பரம்பல்கள் துறைநீலாவணையில் இருந்தோ, வீரமுனையில் இருந்தோ மண்டூருக்கு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஏனெனில் மண்டூர் முருகன் கோயிலுக்கு முன்பாக உள்ள மட்டக்களப்பு வாவிக்கு மறுகரையிலேயே இந்த ஊர்கள் அமைந்துள்ளன. மிக அண்மைக் காலம் வரை துறைநீலா வணைக்கும் மண்டூருக்கும் இடையே தோணிப் போக்குவரத்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சீர்பாத குலத்தவர் அவ்வாலய பூசனைக்குப் பொறுப்பான பெரியகப்புகர் பதவிக்கு உரித்துடைய வர்களாகத் திட்டம் செய்யப்பட்டுள்ளமைக்குக் காரணம் இக்கோயிலின் ஆரம்பகாலப் பூசைச் செயற்பாட்டில் இவர்கள் பெற்றிருந்த வகிபங்கின் பொருட்டாகவே இருக்க வேண்டும். இது அரசின் அரனூழியப் பகுப்பிற்கு முற்பட்ட காலமாக இருக்க வேண்டும்.

மண்டூர் முருகன் கோயிலின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் சீர்பாதர் பெற்றிருந்த இடத்தையும் இவ்வாலய நிர்வாக ஒழுங்கமைப்பின் முக்கியமானதொரு கட்டமாக அமைகின்ற வேளாளரின் மண்டூர்க் குடியேற்றம் பற்றியும் ஏகாம்பரபிள்ளை வண்ணக்கரின் மகன் சிதம்பரப்பிள்ளை என்பவரால் தனது மாமனார் தம்பிமுத்து விதானை முதலானோரிடம் கேட்டறிந்த விடயங்கள் என 1932ஆம் ஆண்டு எழுதி வைக்கப்பட்டுள்ள ஆவணமொன்று எடுத்துக்காட்டுகின்றது.

"மேற்படி கோயிலைக் கட்டுவிப்பதற்கு முயற்சி பண்ணிப் பல பகுதிகளுக்கும் சென்று பணம் சம்பாதித்து வந்து கோயிலை உண்டாக்கியவர் தற்போது இக்கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியகப்புக வம்சத்தவர். அந்தக் காலத்தில் இக்கிராமம் காடடர்ந்த பகுதியாகவும் ஒரு சில வேடுவர்களுக்கு உறைவிடமாகவுமே இருந்ததாம். அக்காலம் இப்பகுதி நாதனைப் பகுதி என்னும் பேருடன் வேலப்பு வன்னிமை என்பவரினதும் முக்குவச் சாதியாரதும் ஆதிக்கத்தில் இருந்தது" (சிதம்பரப்பிள்ளை, 24.09.1932)

இங்கு கூறப்பட்டுள்ள குறிப்புகள் சீர்பாத குழுமத்தவர் இவ்வாலய பரிபாலனத்தில் முன்னுரிமை பெற்றிருந்த சூழலில் இக்கோயில் சிறுகோயில் நிலையில் இருந்து பெருங்கோயிலாக வளர்ச்சி கண்டமையைச் சுட்டுகின்றன. இது நிகழ்ந்தது முக்குவ வன்னிமைக் காலத்தில் என்பதையும் அது குறிப்பிடுகின்றது. இவ்வாவணத்தினை எழுதியவரும் அதற்கான தகவல்களை வழங்கியவரும் வேளாள வம்சத்தின் முக்கிய நபர்களாக உள்ளமை அதன் சாதியச் சார்பற்ற தன்மையைக் காட்டுகின்றது.

சிதம்பரப்பிள்ளையால் எழுதப்பட்ட மேற்படி ஆவணமும் மக்கள் மத்தியில் சமூக நினைவுகளாகப் பேணப்பட்டுவரும் அதையொத்த பல்வேறு வாய்மொழிக் கதைகளும் இந்த ஆலயத்தின் நிர்வாகத் தினைத் திறம்பட செய்யும் பொருட்டு வேளாளர்கள் கோரைக்களப்பு என்ற பகுதியிலிருந்து குடியேற்றப் பட்டதாகக் கூறுகின்றன. இது சீர்பாதரின் குடிப் பரம்பலை அடுத்து ஏற்பட்ட முக்கிய குடியேற்றமாக அமைகின்றது. அதாவது மண்டூர் ஆலய பணிப்பகுப்பிற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்ட கட்டத்தில் இவ்வாலயத்தினை மையப்படுத்திய, வேளாளர் குடியேற்றமொன்று அப்போதய ஆட்சியாளர் களின் அனுசரனையோடு இடம்பெற்றுள்ளது. இவ்வரலாற்றுத் தகவலை சிதம்பரப்பிள்ளையினால் எழுதப்பட்ட மேற்கூறிய ஆவணம் பின்வருமாறு எடுத்துக் காட்டுகின்றது

"கப்புக வம்சத்தவர் கோயிலைக் கட்டி முடித்ததும், வழிபடு தெய்வம் கதிர்காமத் தெய்வம் போல் காட்சியளிக்கத் தொடங்கியதும் ஏராளமானோர் வழிபாட்டுக்கு வரத்தொடங்கினர். இது கண்ட கப்புகனார் இக்கோயிலை கொக்கட்டிச்சோலை, கோயில் போரதீவு, களுவாஞ்சிகுடி முதலிய கிராமங்களிலுள்ள கோயில்களைப் போல் கவுத்தன்குடி வேளாளரை முன்னவராய் வைத்து நடத்தவேண்டு மென நினைத்து வேலப்பு வன்னிமையிடம் ஆலோசித்தார். அப்போ களுவாஞ்சிகுடியில்தான் கவுத்தன்குடி வேளாளர் இருக்கிறார்கள். அவர்களைக் கேட்போமெனத் தீர்ந்து போய்க்கேட்டபோது அவர்கள் மேற்காட்டிய ஊர்களிலுள்ள தான்தோன்றியீசுரர் கோயில், சித்திரவேலாயுத கோயில் முதலியவற்றுக்கே பணியாற்ற ஆட்கள் போதாதிருப்பதால், இக்கோயில் பொறுப்பையும் ஏற்கமுடியா தெனக் கூறினர்

அதன் பின் வன்னிமையவர்களும், முக்குவகப் போடிமாரும் யோசித்து திருக்கோயிலுக்குப் பக்கலாய் கோரைக்களப்பு என்னும் ஊரில், கவுத்தன்குடி வேளாளர் இருப்பதாயறிந்து, அப்பகுதியிலுள்ள முக்குவப் போடிமாருக்கு ஒரு கடிதம் எழுதி, சில வேளாளக் குடும்பத்தை மண்டூர்க் கோயில் பொறுப்பேற்று நடத்துவதற்கு அனுப்பக் கூடுமோவெனக் கேட்டார்கள். அக்கடிதத்துக்கு அப்பகுதி யிலுள்ள ஏழு முக்குவப் போடிமார் சேர்ந்து எழுதிய பதில் எப்படியெனில், நாதனையிலிருக்கும், வேலப்பு வன்னிமையவர்கட்கும் அப்பகுதி முக்குவப் போடிமார்களுக்கும் அறியத்தருவது நீங்கள் கேட்டுக்கொண்டபடி மண்டூர்க் கோயிலுக்காக ஒரு வேளாளக் குடும்பத்தை மாத்திரமே அனுப்பலாம், அவர்களுக்குப் பல வசதிகளெல்லாம் செய்துகொடுத்து, வீடுவாசல் காணிபூமிகள் யாவும் கொடுத்து கோயில் கருமங்களை நடத்தும்படி ஒழுங்கு செய்யவும் எழுதப்பட்டிருந்தது. இதன்பிரகாரம் அனுப்பப்பட்ட குடும்பத்துக்கு முற்குகப் போடிமாரே, தங்களுக்குடைய புங்கடிவெளி என்னும் நாற்பது ஏக்கர் விசாலமான காணியையும், வேளாளர் குடியிருப்புவளவு எனத்தற்போது பெயர் விளங்கும் வளவையும் கொடுத்து நிலைப்படுத்தி வைத்தார்கள். கோரைக்களப்பால் வந்த மனுஷியின் பெயர் குஞ்சிநாச்சி. இவரின் புருஷன் ஒரு செட்டி வேளாளன் (பெயர் தெரியாது). இவர்களுக்குப் பிள்ளைகள் ஆண் 3, பெண்3... பெண்கள் 1. கண்ணாத்தை, 2. உமையாத்தை, 3. பாலாத்தை. கண்ணாத்தையை விவாகம் செய்தவர் களுவாஞ்சி குடியிலுள்ள சிங்களக்குடி வேளாளன் பரசிராமன் என்பவர். 2ம் பிள்ளை உமையாத்தையை விவாகஞ் செய்தவர் பழுகாமத்திலுள்ள வைத்தினா குடி வேளாளன் தம்பிப்போடி நொத்தாரிஸ். பரசிராமருக்குப் பிறந்த பிள்ளைகள், நாலு ஆண், நாலு பெண் (8) நொத்தாரிஸ் தம்பிப்போடியின் பிள்ளைகள் ஐந்து பெண், இரண்டு ஆண் (7) இந்த ஐந்து பெண்களில் ஒரு பெண் சின்னாத்தை என்பவாவின் மகளின் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாம்பரபிள்ளை வண்ணக்கர். கண்ணாத்தையின் மகன் - ஆறுமுக வண்ணக்கர், சிதம்பரப்பிள்ளை வண்ணக்கர். இவர்களின் மருமகன் வீரக்குட்டி வண்ணக்கர்.

அக்காலந்தொட்டு புங்கடி வெளி, செம்பர் பள்ளம் என்னும் காணிகளில் வரும் ஊதியத்தை 5ம் திருவிழாச் செலவு நீக்கி மிகுதியை கண்ணாத்தையின் மக்கள் எட்டுப் பேரும் உமையாத்தையின் மக்கள் ஏழு பேரும் பதினைந்து பங்காய்ப் பிரித்துக் கொள்வது. பாலாத்தை என்பவ சந்தானமில்லாமல் இறந்து போனா" (மேற்படி ஆவணம்).

இன்று அக்காவின் (கண்ணாத்தை) வழியில் வந்தவர்கள் மண்டூர் கவுத்தன் குடி என்றும் தங்கை (உமையாத்தை) வழி வந்தவர்கள் பழுகாமத்துக் கவுத்தன் குடி என்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்களில் கண்ணாத்தைக்கு எட்டுப் பிள்ளைகளும் உமையாத்தைக்கு ஏழு பிள்ளைகளும் பிறந்ததாக மேற்படி ஆவணம் கூறுகின்றது. மொத்தம் 15 பிள்ளைகள். இவர்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் (புங்கையடிவெளி, குளம், செம்பர்பள்ளம்) பதினைந்து பங்குகளாகப் பிரிக்கப்பட்டு எட்டிலொன்று, ஏழிலொன்று என்ற அடிப்படையில் இன்றும் அவ்வம்சவழியினரால் சுழற்சி முறை அடிப்படையில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. (தகவல்: விமலநாதன்.மு., ஞானதேசிகன்.சோ., மண்டூர்)

கலிங்க வேளாளர் என்ற சாதியினர் திருக்கோயில் பணிக்கென்றே முதலில் கொண்டுவரப் பெற்று அப்பகுதியில் குடியேற்றப்பட்டனர். அவர்கள் குடியேற்றப்பட்டிருந்த இடம் கோரைக்களப்பாகும் என வி.சீ. கந்தையா கூறுவார் (1983: 435).

எனவே திருக்கோயிலை மையப்படுத்திய சோழ குடியேற்ற மையப்பகுதியில் இருந்து மண்டூர் கோயிலை மையப்படுத்திய குடியேற்றமொன்று மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது.

மேலே கூறிய ஆவணமும் வாய்மொழிக் கதைகளும் இக்குடியேற்றம் முக்குவ வன்னிமைக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறுகின்றன. இக்குடியேற்றம் பற்றி வி.சீ. கந்தையா கூறுமிடத்து,

"அக்காலத்தில் மட்டக்களப்பின் கிழக்குப் பகுதிகளில் முக்குவ வன்னிமைகள் சிற்றரசாக இருந்தனரென்பது சரித்திரக் கூற்று. அன்னாருடைய அங்கீகாரமும் அதிகாரமும் பெற்றுக் கொள்ளுதல் பொதுத் தலங்களுக்கெல்லாம் நியதியும் சிறப்புமாக இருந்தமையால் அதன்படி தேசத் தலைவரான முக்குவ வன்னிமையின் தலைமையில் கோயிலமைப்பும் நிருவாக ஒழுங்குகளும் வகுக்கப் பெற்றன என்பர். அன்னாரால் பல மானியங்களும் கோயிற் பரிபாலனத்துக்காக வழங்கப் பெற்றிருக்கின்றன. அவர்களின் திட்டப்படி பெரிய கவுத்தன்குடி வேளாளர் குலத்தினர் கோயிற் பரிபாலனத்துக்காக மண்டூரில் குடியேற்றப்பட்டனர்" (2002: 66)

எனக் கூறுகின்றார். ஆகவே கண்டி ராச்சியத்தின் கீழ் மட்டக்களப்பு இருந்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கோயிலை மையப்படுத்தியதும் சாதி ஒழுங்கமைவை உட்கொண்டதுமான இந்தக் குடியேற்ற மரபானது முன்பு கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சோழரின் குடியேற்ற மரபைப் பின்பற்றியதாகும். வேளாளர் கோயில் நிர்வாகத்தினைத் திறம்பட நடத்தக் கூடியவர்கள், புனிதமானவர்கள் என்ற வேளாள உயர் கருத்தியல் நிலவிய பின்புலத்திலேயே இக்குடியேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதையே மேற்கூறிய ஆவணம் எடுத்துக்காட்டுகின்றது.

வேளாளர் கொண்டுவரப்பட்டதை அடுத்து கோயில் ஊழியச் சாதியான கோயிலாரினதும் அடிமை குடிமைகளில் அடங்கும் நாவிதரினதும் வரவு பற்றி வாய்மொழித் தகவல்கள் கூறுகின்றன. மேற்கூறிய வேளாள குடியேற்றத்துடன் இவர்களின் வரவும் நிகழ்ந்ததாக தகவல்கள் இல்லை. ஆனால் அடுத்த கட்டமாக கோயில் பணியின் பொருட்டான கோயிலாரின் குடியேற்றமானது மூன்று கட்டங்களில் நிகழ்ந்ததாக வாய்மொழித் தகவல்கள் கூறுகின்றன. முதலாவது கட்டமாக வன்னிமையிடம் 'பூவிராகம்' கொடுத்து கோயிலாரைப் பெற்றுவந்து குடியமர்த்தியதாகக் கூறுவர். ஆனால் கோயில் ஊழியங்களைச் செய்வதற்கு இவர்கள் போதாத நிலையில் இரண்டாம் கட்டமாக போரதீவு சித்திர வேலாயுதர் கோயிலில் இருந்து கோயிலார் குடும்பமொன்றைக் கொணர்ந்து குடியமர்த்தியதாகவும் இவ்விரு பகுதியினரின் வம்சவழியினரே கங்காணித் தத்தியினர் எனவும் கூறுவர். பின்னர் இதுவும் போதாத நிலையில் நாதனை வன்னிமையிடம் ஊழியம் செய்த கோயிலார் சிலரைக் கொணர்ந்து குடியேற்றியதாகவும் அவர்கள் 'வன்னியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊட்டு அடியார்' எனப்படுவர் எனவும் இவ்வம்சத்தினரே கவுடாத் தத்தியினராகக் கொள்ளப்படுவதாகவும் கூறுவர் (தகவல்: சபாநாயகம். இ., மண்டூர்)

இக்கோயிலின் பல்வேறு தொண்டூழியங்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ள கோயிலார் மண்டூரில் கணிசமான தொகையினராக உள்ளனர். இவர்கள் கோயிலை அண்மித்த பகுதியிலேயே செறிந்து வாழ்கின்றனர். மட்டக்களப்பு மான்மியம் கூறும் 17 சிறைக் குடிகளினுள்ளே கோயிலாரும் நாவிதரும் அடக்கப்படுவதுடன் இவர்களின் ஊழியங்கள் வேளாளர், முக்குவருக்கு உரித்துடையதாகக் கூறுகின்றது (நடராசா. F.X.C., 1998: 103).

சந்தனம் அரைப்பதைக் கோயிலாரின் தொழிலாக மான்மியம் கூறும். எனவே கோயில் பணிக்காக வேளாளரைக் கொணர்ந்த போது அக்கோயில் பணிக்கு உதவியாக இவர்கள் மண்டூரை அண்டிய பகுதிகளில் இருந்து வன்னிமையின் தொடர்பினூடாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறே அடுத்த கட்டமாக வேளாளருக்கு தொண்டூழியம் செய்வதற்காக நாவிதர் வேளாளர் களினால் கொண்டுவரப்பட்டு தமது குடியிருப்பின் மத்தியிலுள்ள குறித்த வளவில் (சங்குபதிப் போடியார், கந்தன் விதானை ஆகியோரின் பெயரில் உள்ள வளவு) குடியமர்த்தியதாகக் கூறுவர் (தகவல்: சபாநாயகம்.இ., விமலநாதன்.மு). வேளாளரின் குடியிருப்பின் மத்தியில் அமைந்துள்ள இவ்வளவில் இன்றுவரை இவர்களின் சந்ததியினர் வாழ்ந்து வருவது இதனை உறுதி செய்கின்றது.

எனவே அரசின் அதிகாரி, பிராமணர், வணிகர், வேளாளர், கோயில் ஊழியச் சாதிகள், அடிமை குடிமைகள் என்ற படிமுறைச் சமூக அமைப்பைக் கொண்ட நீர்ப்பாசனக் குடியேற்றமும் அதன் சாதியமைப்பின் ஒழுங்கை மீழுறுதி செய்யும் மையமாகப் பெருங்கோயிலும் அக்கோயிலின் முதல் மரியாதைக்குரியவனாகவும் அரசின் பிரதிநிதியான வன்னியனும் என்ற வகையில் சோழப் பேரரசின் குடியேற்ற வடிவம் (சிவராம். டீ., 2004: 60-61) மண்டூரை மையப்படுத்திய சனவேற்றத்திலும் பின்பற்றப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவ்வாறு கோயில் பணிக்காகக் குடியேற்றப் பட்டவர்களையும் ஏலவே கோயிலுடன் தொடர்புற்றிருந் தவர்களையும் மட்டுமன்றி அவ்வூரை அண்டியுள்ள பல கிராமங்களைச் சேர்ந்த சாதிக் குழுமங் களையும் ஒன்றிணைத்து இந்த ஆலயத்தின் தொண்டூழியங்களும் வழிபாட்டு - பூசைக் கடமை களும் வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த இணைப்பு சமூக ஒருமைப் பாட்டையும் இலக்காகக் கொண்டதாகவே தெரிகின்றது.

இவ்வாலய ஊழியப் பகுப்பு ஒழுங்குகளை நோக்குமிடத்து, பெரியகப்புகன் உரித்து சீர்பாதர் குலத்தில் ஒரு குடியான சிந்தாத்திர குடியினருக்கும், பூசைக்கப்புகன் உரித்து சிங்களக் குடியினருக்கும், வண்ணக்கர் பதவியும் சுவாமிதூக்குதல் பொறுப்பும் வேளாளருக்கும், கவுடாக்காரன், கங்காணி பதவிகளும் தரை கூட்டுதல், கழுவுதல், பொருட்களைக் கழுவுதல், சந்தனம் அரைத்தல், நெல்குற்றுதல், மாவிடித்தல், அமுது செய்தல் என உள், வெளிப் பணிகளும் கோயிலாருக்கும், குருமண்வெளி, துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக் கல்லாறு ஆகிய நான்கு ஊர்களுக்கு தலா ஒரு கணக்கப்பிள்ளையும் என்று வலுவான திட்டம் செய்யப்பட்டிருக்கின்றது.

**வழிபாட்டு - பூசை மரபுகள்**

மண்டூர் முருகன் கோயில் மட்டக்களப்புத் தேசத்துக் கோயிலாகவும் பண்டைய மன்னர்களின் கவனத்திற்குட்பட்ட கோயிலாகவும் இருந்தபோதும் அது இன்றுவரை பிராமணிய முறைக்கு உட்படாத கோயிலாகவும் கப்புகனார் வாய்ச்சீலை கட்டி மௌன பூசை செய்து வருகின்றதும் பல்வேறு பாரம்பரியமான வழிபாட்டு முறைகளைப் பேணி வருகின்றதுமான கோயிலாக இருந்துவருவது அதன் சிறப்பம்சமாகும். இந்த வழிபாட்டில் மந்திரமோ, யந்திரமோ இடம்பெறுவதில்லை. இத்தகைய வழிபாட்டு முறைகள் கதிர்காம முருகன் ஆயைத்தின் வழிபாட்டு முறைகளுடன் பெரிதும் ஒன்றுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆலயத்தின் கருவறையில் உள்ள தங்க வேலே வழிபடு மூலப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது. இவ்வேலே ஆதியில் வேடர்கள் வைத்து வழிபட்டதாகக் கருதப்படுகின்றது. இந்தக் கருவறை முடப்பட்டதாகவே இருக்கும். யாரும் புகமுடியாத புனித இடமாக அது கருதப்படுகின்றது. இதனுள் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் தூண்டாமணி விளக்கு இருப்பதாகக் கூறப்படுவதும் இவ்வால யத்தின் சிறப்புக்குரிய அம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலத்தில் தீர்த்தோற்சவ தின நண்பகல் பூசையும், மார்கழி மாத திருவாதிரைக் காலைப் பூசையும் தவிர மூன்றுகாலப் பூசை தவறாமல் செய்யப்பட்டு வருகின்றது. வெள்ளிக் கிழமைகளில் பிள்ளையாருக்கு மதியப் பூசையும் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் இரவில் வைரவ பூசையும், வெள்ளி இறுதிச்சாமப் பூசை காவலர்களுக்கும் விசேட பூசைகளாக நடைபெறும். முருகனுக்குப் படைக்கப்படும் பிரதான பிரசாதம் அமுதாகும். ஆலய உள்வீதியில் அமைந்துள்ள புனிதக் கிணறாகிய தீர்த்தக் கிணற்றில் இருந்து எடுத்த நீரையும் (இக்கிணற்று நீர் பூசைக் காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்) பச்சரிசியையும் மட்டும் கொண்டு இந்த அமுது மடப்பள்ளியினுள் செய்யப்படுகின்றது.

பூசை வேளையில் இசைக்கப்படும் பாரம்பரிய வாத்தியக் கருவிகளில் தவில் தனித்துவமானது. பூசையின்போதும் விழாக்காலத்தின்போதும் தவில் வாத்திய ஓசையை எழுப்புவதிலே தனித்தவமான மரபுகள் இங்கு பின்பற்றப்படுகின்றன. இந்த மரபுகளை செவிவழியாக பாரம்பரியமாக நன்கு கற்றுக்கொண்ட இரு கோயிலார் பூசை முறைகளுக்கு ஏற்ப இசை நுணுக்கங்களை எழுப்புவது சிறப்பானது. இதில் ஒன்று 'அரட்டு மேளம்' எனப்படுவது. அதாவது பூசை தொடங்க முன்னர் பூசை ஆரம்பிக்கப் போவதற்கான முன்னறிவிப்பைக் காட்டும் உச்ச தொனியில் அமைந்த தவிலிசையாக அது அமையும். பூசைக்கு முன் மடை வைக்கும் நேரத்தில் இத்தவிலிசை இசைக்கப்படும். இதைவிட திருவிழாக் காலங்களில் சுவாமி வீதியுலா வரும் போது தரித்து நிற்கும் இடங்களுக்கு ஏற்ப நுணுக்கமான இசை வேறுபாடுகளுடன் தவிலிசை அமையும். இந்த இசைக்குப் பரிச்சயமான இவ்வூர் மக்கள் தம் வீட்டில் இருந்தவாறே தவிலிசையை வைத்துக்கொண்டே சுவாமி வீதியுலா வரும் இடத்தைக் கூறுவர்.

மண்டூர் முருகன் ஆலய உற்சவம் கதிர்காமத் தீர்த்தோற்சவம் முடிந்து பத்தாம் நாள் அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 21 ஆம் நாள் ஆவணி மாத பூரணைத் தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். ஆலயப் பொறுப்பிலே நடைபெறுகின்ற முதல் நான்கு நாள் திருவிழாவிலும் சுவாமி ஏடகத்தில் உள்வீதியில் வலம் வருவார். ஐந்தாம் நாள் முதல் திருவிழாக்கள் மண்டூரையும் அதனை அண்டியுள்ள கிராமங்களையும் சேர்ந்த பல்வேறு சாதிக் குழுமங்களின் அடிப்படையிலே பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் ஐந்தாம் திருவிழா மண்டூர் வேளாளர் பெரியகவுத்தன் குடியினருக்கும், 6ஆம் திருவிழா பெரிய நீலாவணை கண்டன்குடி வேளாளருக்கும், 7ஆம் திருவிழா மண்டூர் நாவிதருக்கும், 8ஆம் திருவிழா மண்டூர், எருவில், கோடைமேடு, மகிழூர் முக்குவருக்கும், 9ஆம் திருவிழா மண்டூர் வேடருக்கும், 10 ஆம் திருவிழா மண்டூர், குருக்கள்மடம் செட்டிவேளாள ருக்கும், 11 ஆம் திருவிழா மகிழடித்தீவு எருவில் முக்குவருக்கும், 12 ஆம் திருவிழா வீரமுனை, மண்டூர், குறுமண்வெளி சீர்பாதருக்கும், 13ஆம், 15ஆம் திருவிழாக்கள் துறைநீலாவணைச் சீர்பாதருக்கும், 14ஆம், 16ஆம் திருவிழாக்கள் குறுமண்வெளி சீர்பாதருக்கும், 17ஆம், 19ஆம் தீருவிழாக்கள் பெரிய கல்லாறு கௌரவருக்கும், 18 ஆம் திருவிழா கோட்டைக் கல்லாறு கௌர வருக்கும், 20 ஆம் திருவிழா நாவிதன்வெளி சீர்பாதருக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பகுப்பு முறையினுள் ஒரு கூட்டுணர்வு செயற்பட்டுள்ளமை தெரிகின்றது.

ஐந்தாம் நாளில் இருந்து சுவாமிகள் பல்வேறு வாகனங்களிலே வீதியுலா வருவர். இந்நாள் முதல் வெளிவீதியுலாவும் இடம்பெறும். 5ஆம் நாள் முதல் முருகன் மயில் வாகனத்திலும் பிள்ளையார் மூஷிக வாகனத்திலும், 11 ஆம் நாளில் இருந்து முருகன் புஸ்ப விமானத்தில் உலா வருவார். 11 ஆம் நாளில் இருந்து காலைத் திருவிழாவும் ஆரம்பமாகும். 13 ஆம் நாள் முதல் முருகனோடும் (புஸ்பவிமானம்) பிள்ளையாருடனும் (யாளி வாகனம்) தெய்வானை அம்மன் காலைத் திருவிழாவில் சப்பிரத்தில் வீதியுலா வருவது சிறப்பு நிகழ்வாக இடம்பெறும். அதற்கு முதல் நாள் தெய்வானை அம்மனுக்கு சப்பிரக் கால் நடுதல், சப்பிர அலங்காரம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

சுவாமி தூக்கும் கடமையைப் பெரியகவுத்தன்குடி, செட்டிகுடி வேளாளரே மேற்கொள்வர். அவர்கள் வாய்ச்சீலை கட்டி சுவாமியைச் சுமந்து செல்வது மரபாகும். சுவாமி வீதியுலா வருவதற்கு முன்னர் அன்றைய திருவிழா உரிமையுடையவர்களுக்கு பெரிய கப்புகனாரால் தலையில் 'மாலை கட்டுதல்' நிகழ்வு இடம்பெறும். இது அவர்களைக் கௌரவப்படுத்தும் நிகழ்வாகும். சுவாமி வெளிவீதிக்கு வந்ததும் முதலில் வெளிவீதியில் வலப்புறமாக அமைந்துள்ள வள்ளியம்மன் ஆலயத்தினுள் முருகனைக் கொண்டு சென்று அங்கு பூசை நடைபெற்ற பின்னரே வீதியுலாவைத் தொடர்வது மரபாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதியுலா செல்லும் போது சுவாமியின் முன்னே தீவட்டி, பாதுகை, பந்த விளக்கு, ஆலவட்டங்கள், கொடி முதலானவற்றை ஏந்திய வண்ணம் பலர் பின்னோக்கிச் செல்ல, இருவர் தவிலிசையை ஒருங்கிசைவுடன் இசைத்துக் கொண்டு செல்வர். இப்பணிகளைக் கோயிலார் சமூகத்தவர் புரிவர். அவ்வாறே முருகனுக்கு முன்னால் வேட பரம்பரைப் பிரதிநிதி ஒருவர் வாய்ச்சீலை கட்டியவாறு வில், அம்பை ஏந்திக்கொண்டும், சலவைத் தொழிலாளப் பிரதிநிதி ஒருவர் வெள்ளைச் சீலையை முருகனுக்குக் காட்டியவாறும் பின்நோக்கிச் செல்வர்.

தீர்த்தோற்சவம் மூங்கிலாறு எனப்படுகின்ற ஆறு பேராற்றுடன் கலக்கும் இடத்தில் இடம்பெறும். முருகன் தீர்த்தமாடச் சென்றதும் ஆலய வெளிவீதியில் அமைந்துள்ள தெய்வானை அம்மன் கோயிலில் பொங்கலிட்டு விசேட பூசையொன்று இடம்பெறும். தீர்த்தோற்சவம் முடிந்து சுவாமி முதலில் தெய்வானை அம்மன் கோயிலுக்கு முன்னே வரும்போது ஆலாத்தி எடுக்கும் பிள்ளைகளும் வில்லம்பு ஏந்தி வருபவரும் மயக்கமுறுவர். பின்னர் அவர்களைத் தூக்கிச் சென்று வள்ளியம்மன் கோயிலுக்குப் பின்னால் சீலையில் கிடத்துவர். அதன்பின் முருகன் உலாவரும் புஸ்ப வாகனத்தை வள்ளியம்மன் கோயிலின் முன்னால் உள்ள மேடையில் கொண்டு சென்று வைக்கவும் முருகனை வள்ளியம்மன் கோயிலுக்குள் கொண்டு சென்று பூசை நிகழ்த்துவர். அப்போது புஸ்ப வாகனத்தைச் சுமந்து வந்த வேளாள குலத்தார் அதனை ஓட்டமாகத் தூக்கிச் சென்று முருகன் ஆலயத்தினுள் வைத்துவிட்டு விரைந்து வெளியேற கோயில் கதவு அடைக்கப்படும். வள்ளியம்மன் ஆலயப் பூசை முடிந்ததும் கப்புகர் மயக்கமுற்றவர்களுக்குத் தீர்த்தம், திருநீறு தெளித்ததும் அவர்கள் மயக்கம் தெளிந்து எழும்புவர். இத்தகைய நிகழ்வுகள் ஆலயத்தோடு தொடர்புடைய நிகழ்வுகளோடும் மக்களின் நம்பிக்கைகளோடும் தொடர்புபட்டவையாகும்.

தீர்த்தம் முடிந்து மூன்றாம் நாள் மதியம் குமாரதம்பிரான் கோயிலுக்குப்பக்கத்தில்வேடர்பூசைநடைபெறுவதும்அன்றிரவு வேடக்குடிப் பூசாரி வில் அம்பு எடுத்து தெய்வமாடி நிகழ்த்தும் அடுக்குச் சடங்கும் இவ்வாலயத்திலே நடைபெறுகின்ற பாரம்பரியமான சடங்குகளில் பிரதானமானவை. இதுபற்றி ஆய்வாளர் கூறும்போது,

"ஆரம்பத்தில் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் இச்சடங்கே பிரதானமான சடங்காக இருந்திருக்க வேண்டும். இதனை வேடுவரே நிகழ்த்தியிருக்க வேண்டும். பின்னாளில் இது உப சடங்குகளில் ஒன்றாகிவிட்டிருக்க வேண்டும்" (மௌனகுரு.சி., 1998:141).

எனக் கூறுவது குறிப்பிடத்தக்கது. வேட பூசையின்போது படையலாக மான் இறைச்சிக் கறியும் சோறும் படைக்கப்பட்டு வந்தபோதும் தற்போது மரக்கறியும் சோறும் படைக்கப்பட்டு பூசை நிகழ்த்தப் படுகின்றது. அடுக்குச் சடங்கின்போது பொங்கலும் பலகாரங்களும் படைக்கப்பட்டு வேறுபட்ட ஓசையுடனான தவிலிசையுடன் சடங்கு நடாத்தப்படும். பூசையை நிகழ்த்தும் வேடப் பூசாரியார் உருக்கொண்டு தெய்வமாடி இறுதியில் கட்டுக் கூறுவார். திருவிழாவின் குற்றம் குறைகளையும் அதற்கான பரிகாரங்களையும் கூறி ஆசி வழங்குவதாக அவரது கட்டு அமையும்.

தேசத்துக் கோயிலான மண்டூர் முருகன் ஆலயத்தின் திருவிழா நிறைவு பாரம்பரியச் சடங்கு வழிபாட்டுடன் முடிவுறுவது அவ்வாலய வழிபாட்டின் பிரதானமான அம்சமாகும்.

நாளாந்த, திருவிழா வழிபாடுகளைத் தவிர கந்தசஷ்டி, விநாயகர் சஷ்டி, திருக்கார்த்திகை முதலான விரத காலங்களிலும் வருடப் பிறப்பு நாட்களிலும் இவ்வாலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன. இதில் கந்தசஷ்டி விரதம் முக்கியமானது. இவ்விரதகாலத்தில் இங்கு கந்தபுராண படனம் இடம்பெறாது திருச்செந்தூர்ப் புராணம் பாடப்படுவது சிறப்பானதொரு விடயமாக நோக்கப் படுகின்றது. மூன்றாம் நாள் இரவு வள்ளி – முருகன் திருக்கல்யாண நிகழ்வு சந்தன மண்டபத்தில் போடப்படும் கலியாண மண்டபத்தில் தமிழர்களின் பாரம்பரிய திருமண மரபுகளுக்கு அமைய நிகழ்த்தப்படும்.


விசேட நாள் பூசை நிகழ்வில் மடப்பள்ளியில் முருகனுக்காகச் செய்த அமுதை கப்புகனார் காவிலே எடுத்துக்கொண்டு நடபாவாடை வழியாக தீவட்டி பிடிக்க நடந்து முருகன் ஆலயத்தினுள் செல்வதும் பூசை முடிந்த பின் அவர் அக்காவை மடப்பள்ளிக்குள் கொண்டு செல்வதுமான நிகழ்வும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இதனை 'அமுதுக்கா கொண்டு செல்வது' என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முடிவுரை

பெருங்கோயில்களின் தொண்டூழியங்களையும் வழிபாட்டு மரபுகளையும் சாதியமைப்பின் அடிப்படை யிலே திட்டம் செய்தல் என்பது ஒரு பொது வடிவமாக எமது சமய – அரசியல் வரலாற்றிலே இருந்து வந்திருக்கின்றது. இதனுடைய தொடர்ச்சியையே மண்டூர் முருகன் ஆலய தொண்டூழிய, வழிபாட்டு மரபுகளிலும் காண்கின்றோம். ஒவ்வொரு குழுமத்தவரும் தத்தமக்கு வழங்கப்பட்டுள்ள ஆலயக் கடமைகள், பொறுப்புக்களைத் தம் அடிப்படை மத உரிமையாகவும் அடையாளங்களாகவும் மதிக்கின்றனர். இதுவே பழைய மரபுகள் தொடர்ந்து பேணப்படவும் சமஸ்கிருத மயமாக்கத்தை ஏற்காமைக்குமான காரணமாகும். திருவிழா முறையினுள் மௌன பூசை முறையினையும் பாரம்பரிய சடங்கு வழிபாட்டு முறையினையும் உள்வாங்கி இருப்பது இவ்வாலய வழிபாட்டு முறையிலே முதன்மையான அம்சங்களாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில்
# ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம்

– செல்வி தங்கேஸ்வரி கதிர்காமர் –

அமைவிடம்: மட்டக்களப்பிற்குத் தெற்கே சுமார் 50 மைல் தொலைவில் உள்ள தொன்மையான பதி இதுவாகும். பண்டு வெள்ளை நாவற்பதி. நாகர்முனை உன்னரசுகிரி என்ற பெயர்களால் அழைக்கப்பட்ட இத்தலம் பின்னர் திருக்கோவில் என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்பட லாயிற்று.

சமுத்திரக் கரையிலே திருச்செந்தூரை நினைவூட்டும் வகையில் இவ்வாலயம் பரந்த வெண் மணற் பரப்பிலே அமைந்துள்ளது. இது காவும் சோலையும் நிறைந்த தனி அழகுடன் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன அமையப் பெற்ற தலமாகும். கதிர்காமத்திற்கு கால்நடையாகச் செல்லும் யாத்திரிகர் இங்கும் தங்கிச் செல்வது வழக்கமாகும்.

பாரம்பரியம்: உகந்தை போலவே இவ் வாலயத்துடனும் முருகன் விட்ட வேலின் கதையே தொடர்புபடுத்தப்படுகிறது. வாசூர மலையைப் பிளந்த வேலின் ஒரு பொறி உகந்தையில் தங்க ஒரு பொறி இங்கும் வெள்ளை நாவலில் தங்கியதென்பர். அதனை வேடர்கள் கண்டு கொத்துப் பந்தலிட்டு வழிபட்டனர் என்பது ஐதீகம்.

திருக்கோவிலுக்கு அருகாமையில் இராவணன் கோட்டை இருந்ததாகவும், அது இன்றும் கடலின் அடியிற் காணப் படுகின்றது என்பதும் அதன் மேலே தான் போர்த்துக்கேயர் கலங்கரை விளக்கம் அமைத்தனர் என்பதும், ஐதீகம். கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் என்பவற்றுடன் தொடர்பு படுத்தப்படும் இராவணன் ஈழத்தில் ஆண்ட இயக்கர் குல மன்னன் என்பது இன்றைய ஆவுகளின் விளக்கமாகும்.

இவன் தெட்சணாபதி எனப்பட்ட தென் இலங்கையான இப்பகுதியினையே ஆட்சி செதான் என உணரமுடிகின்றது.

வரலாறு: மட்டக்களப்பை, பிரசன்ன சித்து என்னும் மன்னன் ஆட்சி செத போது கலிங்க இளவரசனான புவ–னேககயவாகுவும் அவனது மனைவி தம்பதி நல்லாளும் இராமேஸ்வரம், கோணேஸ்வரம் தரிசனம் செது இங்கு வந்து, சோழ நாட்டிலிருந்து சிற்பிகளைத் தருவித்து நாகர்முனை சுப்பிரமணியர் ஆலயத்தைப் புதுப்பித்தனர் என மட்டக்களப்பு மான்மியம் கூறும்.

கோணேசர் கல்வெட்டு எனப்படும் ஏட்டுப் பிரதியும் இவ்விடயம்பற்றிக் கூறும். புவனேக கயபாகுவின் மகன் மனு–நேயகயவாகு, குளக் கோட்டன் திருகோணமலையில் கோயில் கட்டுவதை அறிந்து தன்படைகளை அனுப்பினான். குளக் கோட்டன் அவற்றைத் தோற்கடித்து மட்டக்களப்பு அரசி ஆடகசவுந்தரியைத் திருமணம் செதான் எனக் கூறும்.

திருக்கோணேஸ்வர வரலாறு கூறும் மற்றொரு ஏட்டுப் பிரதியான தெட்சணகைலாய புராணத்திலும் இதே வரலாறு கூறப்படுகின்றது. குளக் கோட்டன் ஆடக சவுந்தரியினது மகன் சிங்கபாகு மட்டக்களப்பை ஆட்சி செதான் என்பதும் மேற்படி தெட்சணகைலாய புராணம், கோணேசர் கல்வெட்டு என்பன கூறும் தகவலாகும்.

கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட காலங்களிலும் இக்கோயில் புகழ் பெற்று விளங்கியதென்பதைக் கல்வெட்டுக்கள், திருப்படைக் கோயில் பத்ததி என்பன கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகன் பொலநறுவையைத் தலைநகரமாகக் கொண்டு முழு இலங்கையையுமே ஆட்சி செத போது குளக்கோட்டன் திருகோணமலையில் கந்தளாக் குளத்தைக்கட்டி குடிகளைக் குடியேற்றி தொண்டு செதான் என்ற விடயம் கோணேசர் கல்வெட்டு மட்டக்களப்பு மான்மியம், தெட்சண கைலாய புராணம் முதலியவற்றின் மூலம் அறிகின்றோம்.

ஏர் பெருகு பருதிகுல ராச குளக்கோட்டன் என்ற திருக்கோயில் திருப்படைக் கல்வெட்டு வாக்கியத்திலும் பருதி குலத்துதித்த குளக்கோட்டி ராமன் என்ற கோணேசர் கல்வெட்டு வாக்கியத் திலுமுள்ள ஒற்றுமை இருவரது சமகால தொண்டைக் காட்டுவதாகும். இவ்வாறே இவர்கள் வெருகல், மண்டூர், கொக்கட்டிச்சோலை, போரதீவு போன்ற திருப்படைக் கோவில்களிலும் நிவந்தங்கள் வழங்கி கோயிற் பணிகளை ஒழுங்கமைத்தமையையும் திருப்படைப் பத்ததி கூறும்.

மாகோன் 'காலிங்க விஜயபாகு' என்ற பெயருடனும் குளக்கோட்டன் 'ஜயபாகு' என்ற பெயருடனும் பல்வேறு பணிகளை ஆற்றியமை திருக்கோவில் தூண் கல்வெட்டுக் கள் மூலம் அறிய முடிகின்றது.

இக்கல்வெட்டில் கலிங்க விஜயபாகு எனப்பட்ட கலிங்க மாகோனுக்குப் பூரண விளக்கமும் கூறப்படுகின்றது. மாகோன் வகுத்த வன்னிமைப்படியே இன்றும் இங்கு ஆலய நிர்வாக நடைமுறைகள் இடம்பெறுவதைக் கண்டனொடு சநத பில்லி கட்டப் பத்தன்... என்ற திருப்படைப் பத்ததிப் பாடல்கள் கூறும்.

**பூசை நடை முறைகள்:** கதிர்காமத் தீர்த்தம் ஆடிப் பௌர்ணமியில் நடைபெற, இக்கோயிலின் தீர்த்தம் ஆடி அமாவாசையில் நடைபெறும். இக்கோயில் வரலாறு பற்றி மேலும் பல கோயில் திருப்பதிகங்கள் உள்ளன. குறிப்பாக சில வருமாறு. வேல் வந்த வரலாறு (ஆசிரியர் பெயர் தெரியாது), சித்திரவேல் முருகன் வருக்கமாலை (த. குஞ்சித்தம்பி), திருக்கோவில் ஊஞ்சல் முதலியன அவற்றுட் சிலவாகும்.

**லிங்கக் கோயில்:** மட்டக்களப்பு மாவட்டத்திலே சில கோயில்கள் லிங்கக் கோயிலாக இருந்து பின்னர் பிள்ளையார், முருகன் கோயிலாக மாறியுள்ளன. உ+ம்: மாமாங்கேஸ்வரம். களுதாவளை – சுயம்புலிங்கப் பிள்ளையார் கோயில் போன்றன. திருக்கோயில் ஆலயமும் ஆதியில் லிங்கக் கோயிலாக இருந்து பின்னர் சித்திரவேலாயுதர் கோயிலாக மாறியதென்பர். அதற்கு ஆதாரமாக இராவணன் இக்கோயிலை வழிபட்டமையும், அவனது ஆட்சி தெட்சணாபதி எனப்பட்ட இப்பிரதேசத்தில் நிலைத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கன.

இராவணன் கி. மு. 6000 இல் ஈழத்தை ஆட்சி செத இயக்கர் குல மன்னன் என்பது ஆவுகள் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிற்காலத்தில் மநுநேயகயபாகு, புவ–னேககயபாகு போன்றோர் திருப்பணி செதபோது இவ்வாலயம் சுப்ரமணியர் ஆலயமாக மாறியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

வேடர்கள் பூசையாலும், கதிர்காமத் தொடர்பாலும் இம்மாற்றம் ஏற்பட்டிருக்கலாம்.

இலங்கையில் உள்ள தேசத்துக் கோயில்களில் நிறைந்த வரலாற்றுத் தகவலைக் கொண்ட இடம் திருக்கோவிலாகும். இக்கோயில் தொடர்பான செப்பேடுகள் என்பன இவ்வாலயத்தின் திருமுகம் உள்ள பரம்பரையினரிடமிருந்து காலக்கிரமத்தில் மறைந்துவிட்டன என்பர். இங்குள்ள தூண் கல்வெட்டு, துண்டுக் கல்வெட்டுக்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

இவ்வாலய முகப்பு வேடர்முகப்பு, சாமி முகப்பு என பெயர் பெற்றிருந்தது. ஆலயத்தைச் சுற்றி மூன்று வீதிகள் இருந்தன எனப்படுகின்றது. அதன் அடையாளமாக அடித்தளக் கற்கள் இன்றும் உள்ளன. இவ்வாலயம் போர்த்துக்கேயர் காலத்தில் முற்றாக அழிந்தது எனலாம்.

குயரோஸ் அடிகள் குறிப்பிட்டுள்ள இடிபாடுகள் இன்றும் பூமியில் புதைந்து காணப்படுகின்றன என்பர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வரம்



# திருக்கேதீஸ்வரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணை
## வைத்தீஸ்வரன் கோயில்



## வல்வெட்டித்துறை
## சிவன் கோயில்



## தம்பலகாமம் ஆதிகோணநாயகர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலைச் சிவன் கோயில் நகுலேஸ்வரம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேஸ்வரம்



# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்டூர் முருகன் கோயில்



## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி




## மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதிர்காமம்



## திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம்




## மாமாங்கப்பிள்ளையார் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர ஆழ்வார் கோயில்




## மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி ஸ்ரீ சித்திர வேலாயுதர் ஆலயம்



# பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணுவில் கந்தசுவாமி கோயில்



## கண்டி கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானவன் மாதேவீஸ்வரம்



## நாகர் கோயில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

**– பேராசிரியர் சி. பத்மநாதன் –**

*விண்ணள வோங்கும் சித்திரம் விளங்கு கோபுரங்கள் பாரீர்*
*கண்ணகன் ஞாலம் போற்றும் கடி மதில்களைப் பாரீர்*
*பண்ணமர் வண்டு பாடும் பன்மலர்ச் சோலை பாரீர்*
*எண்ணரும் நல்லை வேலனிருக்கும் கோயிலைப் பாரீர்*

இது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் சிறப்புகளைப் பற்றிய பாடல்; பரமானந்தப் புலவர் பாடிய கவர்ச்சி மிக்க பாடல். இக்கோயிலின் ஓங்கியெழுந்த கோபுரங்கள், அவற்றிலமைந்த சிற்பங்கள், மிக்குயர்ந்த திண்மதில்கள், விசாலமான, நறுமணம் பரப்பும் மலர் வனம் என்பன புலவரைப் பெரிதுங் கவர்ந்தன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு மேலும் பல சிறப்புகளுண்டு. இது யாழ்ப்பாணத்துக் கோயில்களில் மிகப் பெரியது, முதன்மையானது. இந்நாட்களில் இலங்கையில் அமைந்துள்ள கோயில்களில் இதுவே தலையானது. இது ஆதியில் இராசதானிக் கோயிலாக அமைந்திருந்தது. ஆனால் இப்பொழுது இது இலங்கைச் சைவர்களின் உணர்ச்சி பூர்வமான அபிமானத்துக் [illegible]ரிய கோயிலாகி விட்டது. அதன் ஆலய பரிபாலனம் எல்லாக் கோயில்களுக்கும் முன்னுதாரணமாக விளங்கும் சிறப்பைப் பெற்றுள்ளது. அடியார்கள் வழங்கும் காணிக்கைகளை எல்லாம் கோயிலை வளம்படுத்துவதற்கும் அதன் சிறப்புகளை மேம்படுத்துவதற்கும் அதன் முகாமைத்துவம் சென்ற ஒரு நூற்றாண்டு காலமாகப் பயன்படுத்தியுள்ளது.

இன்னும் சொல்வதானால் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணச் சைவர்களின் சமய வழி பாட்டு முறைகளையும் சமயாசாரங்களையும் பிரதிபலிக்கும் முதன்மைத் தலமாக விளங்குகின்றது. நேரம் தவறாமை நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குரிய சிறப்பு. அங்கு வேதாகம முறைப்படி வழிபாடுகள் நடைபெறுகின்றன. தினமும் ஆறு காலப் பூசை நடைபெறுகின்றது. பல நூற்றுக்கணக் கான அடியார்கள் தினமும் அங்கு சென்று மிகுந்த பக்தியோடு முருகப்பெருமானின் அருள் வேண்டி வழிபடுகின்றனர். அர்ச்சனைக்கு இன்றும் ஒரு ரூபாவே அறவிடப்படுகிறது. பஞ்சாங்க முறைப்படி, விசேடமான தினங்களிற் சிறப்பான வழிபாடுகள் நடைபெறுகின்றன. வருடாந்த விழாக்களின் சிறப்புகளைச் சொற்களில் வர்ணிக்க முடியாது. இன்றுவரை சிறப்பு நாட்களிலே கந்தபுராண படனம் இங்குதான் சிறப்பாக நடைபெறுகின்றது. ஆட்சியாளரும் சுற்றுலாப் பயணிகளும் யாழ்ப்பாணத்திலே தரிசிக்கின்ற முதன்மைத் தலம் நல்லூர்க் கோயில். வருடாந்த மகோற்சவ காலத்திலே இலட்சக் கணக்கான மக்கள் இங்கு சென்று வழிபாடாற்றுகின்றனர். இலங்கையின் வேறு பல பகுதிகளி லிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானோர் இங்கு வருகின்றனர். ஆலய வளாகத்திலும் அதன் சுற்றுப்புறச் சூழலிலும் பரிசுத்தம் பேணப்படுகின்றமை எல்லோரையுங் கவரக் கூடியது.

### செண்பகப் பெருமாள் அமைத்த கோயில்

'கைலாயமாலை' என்னும் நூல் தமிழரசர் காலத்தில் நல்லூரில் அமைந்திருந்த கைலாயநாதர் கோயிலைப் பற்றியது. அதனை இராசதானிக் கோயிலாகச் சிங்கையாரியன் குலத்து முதலரசன் நிர்மாணித்தான். கைலாயமாலையிற் பின்னிணைப்பாக ஒரு செய்யுளை அமைத்துள்ளனர். அது நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் உற்பத்தி பற்றியது. அது பின்வருமாறு அமைந்துள்ளது:

*இலகிய சகாப்த மெண்ணூற்றெழுபதா மாண்டதெல்லை*
*அலர்பொலி மாலை மார்பனாம் புவனேக வாகு*
*நலமிகு யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து நல்லைக்*
*குலவிய கந்த வேட்குக் கோயிலும் புரிவித் தானே.*

புவனேகபாகு என்பது, செண்பகப் பெருமாள் என்பான் கோட்டை இராசதானியில் அரசனாக அதிகாரம் பெற்றபொழுது சூடிக்கொண்ட பெயர். இலங்கை வரலாற்றில் அவனை ஆறாம் புவனேகபாகு என்று கொள்வர். அவனது தந்தை மலையாள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்சாவளியினன்: படைவீரன். அவன் ஒரு சிங்களப் பெண்ணை மணம் முடித்தான். ஏதோவகையில் அவர்களுக்குக் கோட்டை இராசதானியில் அரண்மனைத் தொடர்பு ஏற்பட்டது. அவர்களுக்குச் சபுமல் குமார(ன்), அம்புலாகல குமார(ன்) என்ற ஆண்மக்கள் இருவர் இருந்தனர். தந்தையார் இறந்த பின் தாயாரும் மக்களும் ஆறாம் பராக்கிரமபாகு மகாராசனின் அரவணைப்பில் அரண்மனையில் வாழ்ந்தனர். சப்புமல் குமாரன் பருவம் அடைந்ததும் பயிற்சி பெற்றுப் பெருவீரனாக விளங்கினான். அவனை அரசன் சேனாதிபதியாக நியமித்தான். ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்திற் கோட்டை இராச தானியின் வளமும் வலிமையும் பெருகியது. இலங்கையில் அதியரசனாக வேண்டும் என்பது ஆறாம் பராக்கிரமபாகுவின் குறிக்கோளாகும். கண்டி இராச்சியத்தையும் வன்னி என்னும் சிற்றரசுகள் பலவற்றையும் அதிக சிரமமின்றி அவனால் அடிப்படுத்திக் கொள்ள முடிந்தது.

யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்குப் பெரும் படையொன்றைச் சபுமல் குமாரனின் தலைமையில் அரசன் அனுப்பி வைத்தான். அந்தப் படையெடுப்புத் தோல்வியில் முடிந்தது. எனவே படையினை மேலும் வலிதாக்கி மீண்டும் சபுமல்குமாரன் யாழ்ப்பாணத்திற்குப் படையெடுத்துச் சென்றான். அவனது படைகள் மேற்குக் கரையோரம் வழியாக முன்னேறிச் சென்று, யாழ்ப்பாணத்தை அடைந்து, இராசதானியை முற்றுகையிட்டுக் கடுஞ் சமர் புரிந்தன. அதனை எதிர்கொள்ள முடியாத கனகசூரியன் என்னும் பெயர் கொண்ட சிங்கையாரியன் தனது மனைவி மக்களுடன் பகைவர் களுக்கு அகப்படாது, நாட்டைவிட்டு வெளியேறி, தென்னிந்தியாவிற் புகலிடம் தேடினான்.

1450ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய சபுமல்குமாரன் கோட்டை அரசனின் இராசப் பிரதிநிதியாக யாழ்ப்பாணத்திலே தங்கியிருந்தான். அவனது ஆட்சி 17 வருடங்கள், அதாவது 1467 வரை, நிலைபெற்றது. அவனது காலத்திலே யாழ்ப்பாண இராச்சியம் கோட்டை இராச்சியத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்படவில்லை. அதன் தனித்துவம் பேணப்பட்டது. அங்கு வழமை போல, முன்னைய அரசர்களுக்குச் சேவைபுரிந்த பிரதானிகளும் அவர்களின் வழிமுறை யினரும் அதிகாரஞ் செலுத்தினார்கள். சபுமல்குமாரன் அங்கு பௌத்த சமயத்தைப் பரப்பும் அதிகாரியாக வன்றிச் சைவசமயத்தின் ஆதரவாளனாகவும், பாதுகாவலனாகவும் விளங்கினான்.

சபுமல் குமாரனைச் செண்பகப் பெருமாள் என்று குறிப்பிடுவது வழக்கம். சமகாலத்துக் கோட்டை இராசதானியிலிருந்து வெளியான ஆவணங்கள் சிலவற்றிலே செண்பகப் பெருமாள் என்னும் பெயர் காணப்படுகின்றது. (ஆயினும் அப்பெயர் கொண்டவர்கள் வேறு பலரும் உண்டு.)

நல்லூரிலே கந்தசுவாமி கோயிலைச் செண்பகப் பெருமாள் என்று சொல்லப்படும் ஆறாம் புவனேகபாகு அமைத்தான் என்ற கருத்து நல்லூர்க் கந்தசுவாமி கோயில் கட்டியத்தின் மூலமாக ஆதாரம் பெறுகின்றது. கட்டியம் கோயில் மண்டபத்திலிருந்து சுவாமி புறப்பட்டுக் கோபுரவாசலை நோக்கி எழுந்தருளுமிடத்து ஆராதனை பண்ணும் அந்தணர்களாற் படிக்கப்படுவது. இக் கட்டியம் ஆதியான கோயிலைத் தாபித்த புவனேகபாகுவையும் நெடுங்காலத்தின் பின்பு கந்தசுவாமி கோயிலைப் புனருத்தாரணம் பண்ணிய இரகுநாத மாப்பாண முதலியாரையும் புகழ்ந்துரைக்கின்றது. புவனேகபாகுவைப் பற்றி அதிலுள்ள பகுதி பின்வருமாறு:

*ஸ்ரீ கஜவல்லி மஹாவல்லி சமேத*
*சுப்ரமண்ய பாதாரவிந்த ஜனாதிரூட*
*சோடஸ மஹாதான சூர்யவம்சோத் பவஹ*
*ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு.*

"ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு சூர்யவம்சத்தவன்; பதினாறு மகாதானங்களைச் செய்தவன்; வள்ளி, தெய்வானை என்னும் சக்திகளையுடைய சுப்பிரமணியக் கடவுளின் பாதங்களை வணங்குபவன்"

என்பது சமஸ்கிருத மொழியில் அமைந்த இக்கட்டியத்தின் பொருளாகும். கட்டியம் புவனேகபாகுவை ஓரிடத்தில் 'சர்ப்பமால்' என்றுங் குறிப்பிடுகின்றது. அது 'சபுமல்' என்ற சிங்களம் திரிந்த சமஸ்கிருதமய மாக்கப் பெற்ற பெயர் வடிவமாகும். எனவே, யாழ்ப்பாணத்தின் மீது படையெடுத்துச் சென்று, அதனைக் கைப்பற்றிய பின், அங்கு கோட்டை அரசனின் பிரதிநிதியாகவிருந்த சேனாதிபதியான செண்பகப் பெருமாளையே (சபுமல்குமாரன்) 'சங்கபோதி புவனேகபாகு' என்று கட்டியத்தில் வர்ணித்துள்ளனர் என்பது ஐயத்திற்கு இடமற்றதாகும்.

அரச பிரதிநிதியாக இருந்த ஒருவனை எவ்வாறு 'சங்கபோதி புவனேகபாகு' என்று கட்டியத்திலே குறிப்பிட்டுள்ளனர் என்பது தெளிவுபடுத்த வேண்டியதாகும். செண்பகப் பெருமாளான சபுமல்குமாரன் 17 வருடங்கள் வரையான காலப்பகுதியில் கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (1412 - 1467) அவனுடைய இராசப்பிரதிநிதியாக யாழ்ப்பாணத்தில் அதிகாரம் செலுத்தினான். கோட்டை இராசதானியில் அரசன் இறந்ததும், அவன் அங்கு சென்று முன்னைய அரசனின் மகள்வழிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். அவன் அரசனாக முடிசூடியதும் 'புவனேகபாகு' என்னும் நாமத்தையும் 'ஸ்ரீ சங்கபோதி' என்னும் பட்டப் பெயரையும் சூடிக்கொண்டான்.

அந்நாட்களில் நெடுங்காலமாக தென்னிந்தியாவிலே புகலிடம் பெற்றிருந்த கனகசூரிய சிங்கை யாரியன், அங்குள்ள பிரதானிகள் சிலரின் உதவியோடு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பிவந்து ஆட்சி யதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொண்டான். அக்காலம் முதலாகக் கந்தசுவாமி கோயிலையும் இராசதானிக் கோயிலாக யாழ்ப்பாணத்து அரசர்கள் பரிபாலனஞ் செய்தனர்.

சங்கிலி மன்னனைப் போரில் வென்று, இராச்சியத்தை 1619ஆம் ஆண்டு கைப்பற்றிய போர்த்துக்கேயர் நல்லூரிலுள்ள இராசதானிக் கோயில்களை இடித்தனர். அதனைத் தொடர்ந்து, இராச்சியத்திலுள்ள 500க்கும் மேலான கோயில்களை இடித்தழித்தனர். அக்காலம் வரை நெடுந்தீவு முதலான இடங்களில் எஞ்சியிருந்த தமிழரின் பௌத்தப் பள்ளிகளும் போர்த்துக்கேயரால் இடிக்கப் பட்டன.

கந்தசுவாமி கோயிலைப் பற்றி, பேரணாஓ.த. கேறோஸ் இலங்கை வரலாறு பற்றிய தனது நூலில் பின்வருமாறு கூறுவார்:

பிலிப்த ஒலிவேய்றா பெப்பிரவரி இரண்டாம் திகதி நல்லூரை அடைந்தான். அங்கு சென்றதும், அங்கிருந்த பெரிய கோயிலை இடித்துத் தரைமட்டமாக்குமாறு கட்டளையிட்டான். அதனாற் பெரிதும் விசனமடைந்த (புறச் சமயிகளான) அஞ்ஞானிகள், போர்த்துக்கேயர் கோயிலை விட்டு வெளியேறினால் வசிப்பதற்குத் தேவையான வீடுகளைக் கட்டித் தருவதாகவும் வேண்டிய வேறு எல்லாவற்றையும் செய்து கொடுப்பதாகவும் உத்தரவாதம் அளித்தனர். ஆயினும், அவன் பெருங் கிறிஸ்தவன் என்பதால், அவர்களின் வேண்டுகோளின் காரணமாக ஆலயத்தை அழிக்க வேண்டும் என்ற அவனது எண்ணம் மேலும் வலுப்பெற்றது.

போர்த்துக்கேயரின் சமயவெறியின் காரணமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனர்த்தங்களையும் பேரழிவுகளையும் யாழ்ப்பாண வைபவமாலை பின்வருமாறு வர்ணிக்கின்றது:

பரராசசிங்க முதலி இறந்தபின் பறங்கிக்காரர் தாங்கள் இடியாமல் விட்டிருந்த ஆலயமெல்லாம் இடிப்பித்தார்கள். அப்பொழுது பரசுபாணி ஐயரென்னும் பிராமணன் கீரிமலைச் சாரலிலுள்ள தேவாலயங்களின் தட்டுமுட்டுகளையும் விக்கிரகங்களையும் கிணறுகளிற் போட்டு மூடிவைத்தான். கந்தசாமி கோவிற் பணிவிடைக்காரனாயிருந்த (சங்கிலி என்னும்) பண்டாரம் அத்திசையில் ஆலயங்களைக் குறித்த (பூதபவுஷக) சம்பவங்களும் ஒழுங்கு திட்டங்களும் அடங்கிய செப்புப் பட்டயத்தைக் கொண்டு மட்டக்களப்புக் கோடிப் போனான். பரராசசிங்க முதலி, மரணமடைந்த பின் கெங்காதர ஐயர் வமிசத்துப் பிராமணக் குடிகள் நல்லூரை விட்டு நீர்வேலியிலும் வடமராட்சியிலும் போய்க் குடியிருந்தார்கள்.

ஐரோப்பாவிலே தமது கொள்கைகளையும் மரபுகளையும் ஒப்புக்கொள்ளாத பிற கிறிஸ்தவர் களைக் கழுவிலேற்றியும் வேறு பல கொடுமைகளைப் புரிந்தும் அடக்கி ஒடுக்குவது சமகாலத்து ஐரோப்பிய கத்தோலிக்க திருச்சபையின் பிரதாபமாக இருந்தது. மனித உரிமைகள் பற்றிய சிந்தனைகள் இருளில் மூழ்கியிருந்த அக்காலத்தில் போர்த்துக்கேய நாட்டு அரசனின் பணிமகனாகிய பிலிப்த ஒலிவேய்ரா யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றிய பின் அங்குள்ள ஆலயங்களை இடித்தழித்தமை வியப்பிற் குரியதன்று. நல்லூர்க் கந்தசுவாமி கோயில், கைலாயநாதர் கோயில் முதலானவற்றின் கட்டடங்களை, அவற்றின் அத்திபாரங்களேனும் தெரியாத வகையிலே போர்த்துக்கேயர் அழித்தனர்.

**கோயிலின் புனர்நிர்மாணம்**

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில், 1734 ஆம் ஆண்டில் இரகுநாத மாப்பாண முதலியார் கந்த சுவாமி கோயிலைப் புனர்நிர்மாணஞ் செய்தார். அவர் ஒல்லாந்தரின் நிர்வாகத்திற் சிறாப்பர் பதவியில் இருந்தவர். அவர் பனங்காம வன்னிபம் நல்ல மாப்பாணரின் வம்சாவளியினர். யாழ்ப்பாணப் பட்டினத்து வன்னிபங்களிற் பனங்காமத்து வன்னியனாரே முதன்மையானவர்.

இரகுநாத மாப்பாண முதலியாரின் பணிகளுக்கு கிருஷ்ணையர் சுப்பையர் என்ற பிராமணக் குருக்கள் உதவியாக இருந்தார். இவரே கோயிலின் முதற் பூசகருமாவார்.

நல்லூரிலே இரகுநாத மாப்பாணர் கட்டிய கோயில் அளவிற் சிறியது. ஆனால் அவரது பிற்சந்ததியினர் முன்னைய இராசதானிக் கோயிலைப் போன்றளவு பெரிதாக, கட்டங் கட்டமாக அதனை விசாலப்படுத்தியுள்ளனர். ஏறக்குறைய 250 வருடங்களாக ஏற்பட்ட மாற்றங்கள், புதிய கட்டுமானங்கள், அலங்கார வேலைப்பாடுகள், சந்நிதானங்கள் என்பவற்றால் ஆலயம் பிரமாண்டமானதும் வனப்புமிக்கதுமான தோற்றத்துடன் விளங்குகின்றது.

ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்த இரகுநாத மாப்பாணரின் நாமம் கட்டியத்தின் மூலம் விளங்குகின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை முன்னர் கவனித்தோம். அவரதும் மனைவியாரதும் படிமங்கள் மகா மண்டபத்தின் கிழக்குச் சுவரிலுள்ள கோட்டமொன்றிலே தாபனம் பண்ணப்பட்டுள்ளன. வருடந்தோறும், தைப்பூசத்திற்கு முதல்நாள் கடவுளருக்கு வைக்கப்படும் நிவேதனம் இரகுநாதரதும் மனைவியாரதும் படிமங்களுக்கு முன் படையலாக வைத்து அவர்களுக்கு வழிபாடு செய்வது வழக்கம்.

**கோயிலின் பகுதிகள்**

இந்தியாவிலுள்ள பழம் பெருங்கோயில்களோடு ஒப்பிடுமிடத்து நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மிதமான அளவுடைய ஒரு கோயிலாகும்.

இதன் கிழக்குப்புறம் நோக்கிய வாயிற் கோபுரமே அதன் சிறப்பான, வனப்பான கட்டுமானப் பகுதியாகும். இது ஐந்து தளங்களைக் கொண்டது. இதன் இரு பக்கங்களில் மிதமான உயரங்கொண்ட மணிக்கோபுரங்கள் உள்ளன. முருக வழிபாட்டோடு தொடர்புடைய புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் கோபுர தளங்களிற் செம்மையாக அமைக்கப்பட்டுள்ளன.

மூலஸ்தானத்திற்கும் கோபுரத்துக்கும் இடையில் அர்த்த மண்டபம், ஆறுமுகசுவாமி கோயில் மண்டபம், முத்துக்குமாரசுவாமி மண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பன அமைந்துள்ளன. ஆறுமுகசுவாமி, முத்துக்குமார சுவாமி ஆகியோரின் படிமங்களை முறையே அவர்களின் பெயர்களால் வழங்கும் மண்டபங்களிலே தாபனஞ் செய்துள்ளனர். பிள்ளையார், வைரவர், சந்தான கோபாலர், தெய்வயானை, வள்ளியம்மன், அம்மன் ஆகியோரின் கோட்டங்கள் உட்பிரகாரத்தினுள் அமைக்கப் பட்டுள்ளன. அவற்றோடு ஆலயசேவைகளுக்குத் தேவையான வேறு பல கட்டடங்களும் உள்ளன. தென்புறத்தில் ஆறுமுகசுவாமி மண்டபத்து வாசலுக்கு எதிர்ப்புறமாக தீர்த்தக்கேணி அமைந்துள்ளது. வருடாந்த மகோற்சவத்தின் முடிவில் அதிலே சுவாமியை நீராட்டுவர். அண்மைக்காலத்திலே தீர்த்தக்கேணி செம்மைப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கண்மையிலே முருகனின் மூர்த்தங்களில் ஒன்றான தண்டாயுத பாணிக்கு சந்நிதானம் உண்டு. கேணியின் மேற்குப்புறத்தில் அமைந்திருக்கும் திருப்புகழ் மண்டபம் மிகவும் வனப்புடையது. அங்கு அடியார்கள் குழுமியிருந்து பக்திப்பாடல்களைப் பாடுவர், சமயச் சொற்பொழிவுகளும் உபன்னியாசங்களும் அங்கு நடைபெறும். தேர் மண்டபம் கோயிலுக்கு முன்பாக கிழக்கு வீதியில் உள்ளது.

அண்மைக் காலத்தில் நடைபெற்ற திருப்பணிகளின் விளைவாக கோயிற் கட்டுமானங்களின் தோற்றத்திற் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 2011ஆம் ஆண்டு கோயிலின் தெற்குவாசலில் 108 அடி உயரமான ஒன்பது தளங்களையுடைய இராசகோபுரம் கட்டி முடிக்கப்பட்டது. அக்கோபுரத்துக்கு எதிரே, கோயிலைப் பார்த்த வண்ணமாக தெற்கு வீதியில் சிறிய அளவிலான அருணகிரிநாதர் சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டு வடக்குத் திசையில் குபேரவாசல் இராஜகோபுரம் 108 அடி உயரமும் ஒன்பது அடுக்குமாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் தெற்கு உள்வீதியில், திருக்குளத்துக்கு நேராக, ஆறுமுகசுவாமியைப் பார்த்த வண்ணமாக இருந்த பழனியாண்டவர் கோயிலான தண்டாயுதபாணி சந்நிதி, சற்றே நகர்த்தப்பட்டு, தென்மேற்கு மூலையிற் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பரிவாரக் கோயில்களில் ஒன்றான சூரியனார் கோயில் மூலஸ்தானத்தில் மூல மூர்த்தியாகவிருந்த கற்சிற்பத்தை நீக்கி விட்டு அதனிடத்தில் இருதேவியர் சமேத சூரியனாரின் உலோக வார்ப்பான படிமத்தைத் தாபனம் பண்ணியுள்ளனர்.

**விழாக்களும் நாள் வழிபாடுகளும்**

யாழ்ப்பாணச் சைவர்களால் பஞ்சாங்க முறைப்படி அனுஷ்டிக்கப்படும் வழிபாடுகளும் விழாக்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிற் சிறப்பாக நடைபெறும். யாழ்ப்பாணத்துக் கோயில்களில் இங்கு மட்டுமே தினமும் ஆறு காலப் பூசை நடைபெறுகிறது. அவை காலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகி மாலை ஆறு மணி வரை நடைபெறுகின்றன. நாள் வழிபாடுகள் விழாக்கோலமாக நடைபெறுவது இக்கோயிலின் சிறப்பம்சமாகும்.

ஐப்பசி வெள்ளி: வெள்ளிக்கிழமையினைப் புனித நாளாகக் கொள்வது இந்து சமய மரபாகும். ஐப்பசி வெள்ளி அதிவிஷேடமான நாள். அத்தினத்திலே ஆயிரக்கணக்கான அடியார்கள் விரதமிருந்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபடுவார்கள்.

கந்தசஷ்டி: ஐப்பசி மாத அமாவாசையன்று தொடங்கும் கந்த சஷ்டியின் ஆறு நாட்களும் இங்கு விசேஷமான ஆராதனைகள் நடைபெறும். இக்காலம் முழுவதும் அன்னம் புசிக்காது விரதமிருப்போர் பல்லாயிரவர். அவர்களிற் பெரும்பான்மையானோர் நடந்து நல்லூருக்குச் சென்று முருகப்பெருமானை வழிபடுவது நெடுங்கால வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தசஷ்டி காலத்திலே திருச்செந்தூர் புராணத்தின் பகுதிகளை இங்கு அந்தணர்கள் ஓதுவது வழக்கம். ஏழாம் நாளிற் சூரன் போர் நடைபெறும்.

திருக்கார்த்திகை நாள்: கார்த்திகை, குமாரக் கடவுளின் ஜன்மநட்சத்திரம் என்பது புராணமரபு. எனவே கார்த்திகை நாள் முருக வழிபாட்டில் அதிவிசேடமான திருநாளாகும். திருக்கார்த்திகை நாளன்று அலங்கார உற்சவம் நடைபெறும். அன்று முத்துக்குமாரசுவாமி, தெய்வயானை, வள்ளியம்மன் சமேதராய் கைலாய வாகனத்திலே எழுந்தருளி வலம்வரும் காட்சி நடைபெறும். அன்றைய தினம் பகலும் இரவும் இவ்விதமான உற்சவம் இடம்பெறும்.

இவற்றோடு வேறு பல திருநாட்களிலும் விசேடமான உற்சவங்கள் நடைபெறும். ஒவ்வொரு மாதப்பிறப்பிலும் திருநந்தவனத்துத் தீர்த்தக்கிணற்றுக்கு சுவாமியை எழுந்தருளப் பண்ணிஅபிஷேகம் செய்வது வழமை. வைகாசி விசாக நாளில் ஆறுமுகசுவாமிக்கு விசேடமானஅபிஷேகம் செய்யப்படும்.

தைப்பொங்கல், தைப்பூசம், வருடப்பிறப்பு, நவராத்திரி, திருவெம்பாவை ஆகிய தினங்களில் நடைபெறும் ஆராதனைகள் இங்கு விழாக்கோலம் பெறும். தைப்பூசத்தன்று வேலும் வள்ளி, தெய்வயானை ஆகியோரின் படிமங்களும் மூன்று கூடங்கள் பொருந்திய அலங்காரமான மஞ்சத்தில் வைத்து வீதிவலமாக எடுத்துச் செல்லப்படும். திருவெம்பாவைக் காலத்தில் மாணிக்க வாசகரின் திருவெம்பாவைப் பாடல்கள் காலையில் ஓதப்படும். திருவாதவூரடிகள் புராணமும் வாசிக்கப்படும்.

மகோற்சவம்: ஆடி அமாவாசை முடிந்த பின்னர் வரும் சஷ்டியில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி 25 நாட்கள் தொடர்ந்து நடைபெறும். அதாவது ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு 25 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெறும். ஒவ்வொரு நாளும் வெவ்வேறான வாகனங் களில் பகலும் இரவும் கடவுளர் திருமேனிகளை வீதிவலமாக எழுந்தருளச் செய்வர். உற்சவத் திருமேனிகளின் அலங்காரம் மிகுந்த கவர்ச்சியுடையதாக விளங்கும்.

பத்தாம் நாள் திருவிழா அதிவிசேடமானது. சுவாமியை இரவில் மஞ்சத்தில் எழுந்தருளப் பண்ணுவர். தேர்த்திருவிழா, தீர்த்தம் ஆகியன நடைபெறும் நாட்களில் இலட்சக்கணக்கான அடியார்கள் ஆலய தரிசனஞ் செய்வதற்கு வருவார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பெருந்தெருக்களூடாகப் பல்லாயிரக் கணக்கில் அடியார்கள் நிரை நிரையாக வருவார்கள். அவ்விதமாகவே, நேர்த்திக் கடனாக பல நூற்றுக்கணக்கானவர்கள் மேளதாள வாத்தியம், உருக்கமான தோத்திரப் பாடல்கள் சகிதமாக காவடியாட்டம், கரகாட்டம் என்பன புரிந்து வரும் காட்சி உள்ளங்களைப் பெரிதும் கவரும் காட்சியாகும். இது வேறெங்கும் காணமுடியாத இணையிலாக் காட்சியாகும். அவை பழந்தமிழ் நூல்களிலே வர்ணிக்கப்படும் வேலனாடல், வெறியாட்டு என்பனவற்றை நினைவுபடுத்தும்.

முன்னொரு காலத்தில் இராசதானிக் கோயிலாக விளங்கி வரலாற்றுச் சிறப்புப் பெற்றநல்லூர்க் கந்தசுவாமி கோயில் இந்நாட்களில் இலங்கைச் சைவர்களது குறிப்பாக யாழ்ப்பாணத் தவர்களது சமயாசாரம், சமயாபிமானம், பண்பாடு, கலைகள் என்பவற்றின் இணையிலாத நிறுவனமாக விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டைமானாறு செல்வச்சந்நிதி

- கலாபூசணம் வல்வை.ந. அனந்தராஜ் -

**அறிமுகம்**

ஈழத்தில் அமைந்துள்ள பெரும்பாலான முருகன் ஆலயங்களில், ஆகமம் சார்ந்த வழிபாட்டு மரபுகளே பேணப்படுவதுடன், பிராமணர்கள் அல்லது சைவக் குருக்கள் பரம்பரையில் வந்த சிவாசாரியார்களினால் பூசைகள் மற்றும் கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஆகமம் சாராத முருகவழிபாட்டு மரபுகளும் மிக நீண்டகாலமாகவே நிலவிவருகின்றன. இந்தவகையிலேயே முதன்மையான ஆகமம் சாராத வழிபாட்டைக் கொண்ட ஒரு ஆலயமாக தொண்டைமானாறு செல்வச் சந்நிதி விளங்குகின்றது.

இவ்வாறான கிராமிய வழிபாடு சார்ந்தவையும் ஆகமம் சாராதவையுமான முருகன் ஆலயங் களில். அடியவர்கள் பக்தி பூர்வமாக வழிபாட்டிலே கலந்துகொள்வதை இன்றும் காணலாம். செல்வச்சந்நிதி ஆலய வழிபாடுகள், ஆகமம் சாராததாக இருந்தபோதும், காலப்போக்கில் ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறைகளோடு இசைவான முறையிலே நடைபெறுவதையும் அண்மைக்காலமாக அவதனிக்க முடிகின்றது. இங்கும் ஆகமம் சார்ந்த ஆலயங்களில் இடம் பெறுவது போன்று கொடி யேற்றம், பூங்காவனம் தேர், தீர்த்தம்,அபிசேக முறைகள், சண்முகா அர்ச்சனை போன்ற உற்சவங்கள் மற்றும் கிரிகைகள் நடைபெறுகின்றன. சிவாசாரியாரல்லாத ஜீவனோபாயத் தொழில் புரிபவர்களே இவற்றை நடத்தி வைப்பர். இவர்களை ஐயர் என்று அழைப்பதே வழக்கம். அந்த வகையில் செல்வச்சந்நிதியின் வரலாறு, அங்கு நடைபெறுகின்ற கிரிகை முறைகள், நேர்த்திக் கடன்கள் உற்சவகால முறைகள் எல்லாமே ஏனைய ஆலயங்களை விட வித்தியாசமானவையாகவும்,உணர்வு பூர்வமாகவும் இருப்பதால் ஈழத்தில் இவ்வாலயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் சாதாரண பாமர மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவும் இருக்கின்றது. முருகவழிபாடு யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பல்வேறு கிராமங்களிலும் நடைபெறுகின்ற போதிலும் வழிபாட்டு முறையிற் அவற்றிற்கிடையே சிற்சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. அந்த வகையிலேயே செல்வச் சந்நிதி ஆலயத்தின் ஜனரஞ்சக மயப்படுத்தப்பட்ட வழிபாட்டு முறை நோக்கப்படுகின்றது.

**சந்நிதியின் அமைவிடம்**

இலங்கையின் சென்னி என்று அழைக்கப்படுகின்ற யாழ்ப்பாணக் குடாநாட்டின், மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த ஒரு பிரதேசமாக விளங்குவது. சோழர் காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து ஊர்காவலர்களாகக் கொண்டு வரப்பட்ட வீர மறவர்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக யாழ் குடாநாட்டின் வடக்குப் பிரதேசமான வடமராட்சி அமைந்துள்ளதால், இது வடமறவர் ஆட்சி என்று அழைக்கப்பட்டுப் பின்னர் "வடமராட்சி" என மருவியிருந்தது.

வடமராட்சி பின்வரும் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு முக்கியத்துவம்மிக்கதாக விளங்குகின்றமையால் வடமராட்சியின் தனித்துவம் இன்றும் பேணப்பட்டு வருகின்றது. மேற்கே தொண்டைமானாறு தொடக்கம் கிழக்கே முள்ளியான், வடக்கே வளம் நிறைந்த கடலும்,தெற்காக விவசாய பிரதேசமும் உள்ளடக்கியதால் ஒரே பார்வையில் விவசாய பிரதேசம்,கடல் சார்ந்த பிரதேசம் ஆகிய இரு வெவ்வேறு பொருளாதார சூழல்களை அவதானிக்கும் வகையில் வடமராட்சி பிரதேசம் அமைந்துள்ளது.

வடமராட்சியில் பருத்தித்துறை,வல்வெட்டித்துறை நகர சபைகளையும்,பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை ஆகியவற்றையும் உள்ளடக்கிய நான்கு உள்ளூராட்சி மன்றப் பிரிவுகள் காணப்படுகின்றன.

மூன்று வெவ்வேறு பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக வடமராட்சி விளங்குகின்ற காரணத்தினால் கடல் உணவுகளின் மூலமும்,விவசாய உற்பத்திப் பொருட்களின் மூலமும்,பனம் பொருட்களின் உற்பத்திகள் மூலமும், இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான பங்களிப்பைச் செய்யும் ஒரு பிரதேசமாக விளங்குகின்றது.

கல்சைட் போன்ற கனியவளங்களை அதிகளவில் கொண்டிருப்பதும், அரிய பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பவளப்பாறைகள் வடமராட்சியின் கரையோரங்களில் கொண்டிருப்பதும் வட மராட்சியின் இயற்கை அழகுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது.

இலங்கையின் பிரபல்யமானதும் அரசாங்கத்தினால் வர்த்தமானிப்படுத்தப்பட்டதுமான முக்கியத்துவம் வாய்ந்த இரு ஆலயங்களைக் கொண்டிருப்பது ஏனைய பிரதேசங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பியல் பாகும். வடமராட்சியின் மேற்காக தொண்டைமானாற்றங்கரையுடன் அமைந்துள்ள செல்வச்சந்நிதி ஆலயமும், கிழக்காக ஆரப்பரிக்கும் கடலுடன் சார்ந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் அமைந்துள்ளன. இவ்விரு ஆலயங்களையும் தரிசிப்பதற்காக நாடளாவிய ரீதியில் வருடாந்தம் பலஇலட்சக் கணக்கான மக்கள் வருகை தருவதால் இப்பிரதேசம் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

இவ்வாறான ஒரு இயற்கை எழில் நிறைந்த ஆற்றங்கரையும், மருதமரங்களும் நிறைந்த ஒரு இரம்மியமான சூழலில் வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில், வல்வெட்டித்துறை நகர சபை எல்லையின் மேற்காகவும், தொண்டைமான் ஆற்றங்கரைக்குக் கிழக்காகவும் செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது.

**தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**

12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் குலோத்துங்கன் என்ற சோழ அரசனின் ஆட்சியில் கருணாகரத் தொண்டைமான் என்ற சிற்றரசனால் வரலாற்றுப் புகழ் பெற்ற தொண்டமான் ஆறு உருவாக்கப்பட்டது. தொண்டைமானால் வெட்டப்பட்ட தொண்டைமானாறு வல்லி நதியுடன் இணைந்த பகுதியாகக் காணப்படுகின்றது. இந்த வல்லி நதியின் தொடுவாயிலையே கருணாகரத் தொண்டமான் வெட்டி ஆழப்படுத்தி கடலுடன் இணைத்ததால் அது தொண்டைமானாறு என்று அழைக்கப்படுகிறது.

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும் அதன் பின்பு ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் முற்றாக அழிவடைந்திருந்ததால், எவ்விதமான பூசை வழிபாடுகளும் இடம் பெறாமலேயே போய் விட்டன. ஒல்லாந்தர் காலத்தின் பிற்பகுதியில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தன்மீது அளவு கடந்த பக்தி கொண்டு தன்னை இடைவிடாது வழிபடும் மருதர் கதிர்காமர் என்பவரிடம் தனக்கு பூஜை செய்யும் உரிமையைக் கொடுக்க சந்நிதி முருகன் விரும்பினார்.

இவ்வாலயம் தொண்டைமானாறு என்னும் கடலோரக் கிராமத்தில் ஆற்றங்கரையின் ஓரமாக அமைந்துள்ளது இதன் தோற்றம், அமைப்பு, நடைமுறை என்பன தனித்துவமானதும், உலகில் எவ்விடத்திலும் காணப்படாத ஒரு வழிபாட்டு முறையாக விளங்குகின்றது. இங்கே குடிகொண்டுள்ள கந்தசுவாமியார் என்ற முருகன் திருவருளானது இந்தக் கிராமத்து மக்களுக்கு மட்டுமல்லாது,உலகத் தமிழர்களுக்கெல்லாம் குலதெய்வமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றமானது, 16 ஆம் நூற்றாண்டில் இருந்தே ஆரம்பமாகியுள்ளது என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்வாலயத் திற்கு மேற்குப் புறமாக ஓடிக்கொண்டிருக்கும் தொண்டைமான் ஆறு "வல்லிநதி" என்ற பெயருடன் விளங்கியதாகவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்..

ஆகம விதிகட்கு அப்பாற்பட்ட அன்பு,தோழமை, பக்தி, தனிமனித உறவு, ஞானம் ஆகிய வணக்க முறைகளைக் கொண்டுள்ள ஒரு தனித்துவம் வாய்ந்த தலமாகக் காணப்படும் இவ் வாலயத்தில் கந்தப்பெருமானது அருளாட்சி நடைபெறுகிறது. இங்கே முருகன் 'பூரணம்" என்று கூறும் வகையில் அமர்ந்திருக்கிறார். இதனால், முருகப் பெருமானின் தோற்றத்தைக் கண்ணுற்ற வேதநாயகம்பிள்ளை அவர்கள், 'செல்வச் சந்நிதி மேவிய பூரணனே" என்றும், 'செல்வச் சந்நிதி போற்றிய பூரணனே" என்றும், 'பூரணமாஞ் செல்வச் சந்நிதி மேனிப்புவனமுய்யும்" என்றும் வாய்விட்டு மனம் கசிந்துருகிப் பாடியுள்ளார்.

இவ்வாலயத்தின் வரலாற்றை நோக்கினால் இது அரசியலுக்கும் அப்பால், சமூக, பொருளாதார, வரலாற்றுடன் மிகுந்த நெருங்கிய தொடர்புடையதாகவும் பக்தி வரலாற்றுடன் தொடர்புடையதாகவும் உள்ளது. இதைப்பற்றிய வரலாறுகள், சான்றுகள் இன்று முழுமையாகக் கிடைக்காதபோதும் கர்ண பரம்பரையான வரலாற்றுக் கதைகள் மூலமாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இங்கு ஓடும் ஆறும் இதன் அருகமைந்த ஆலயமும் வரலாற்றுடன் பக்தி இளையோடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மையான பெருமை வாய்ந்ததாக விளங்குகின்றது. தொண்டைமானாறு என்னும் இவ் ஆறானது முன்பு கடலுடன் சங்கமிக்காது 'வல்லிநதி" என்னும் பெயருடன் மிளிர்ந்தது.

இதற்குச்சான்றாக வல்லிநதிக்கு மேலாகப் போடப்பட்ட பாலமானது வல்லைப் பாலம் என்றும் அழைக்கப் பட்டது அது இன்றும் இப் பெயரையே கொண்டுள்ளது. இதையொட்டியே 'வல்லை வெளி' என்றும் இப் பாலத்தின் அருகில் உள்ள காணிகளை 'வல்லியப் பெருவெளி' என்று இன்றும் கூறப்படுகின்றது. இந்நதியின் தொடுவாயிலை தொண்டைமான் என்ற ஓர் அரசன் வெட்டி கடலிடம் சங்கமிக்க விட்டான். அன்று முதல் இந் நதியின் பெயர் (ஆறு) தொண்டைமானாறு என்றும் அழைக்கப்பட்டது. இப் பெயரே இக் கிராமத்திற்கும் மருவி வந்துள்ளது அரசன் நதியின் வாயிலை வெட்டியதன் காரணமாக கடலின் உப்பு நீரானது உட்புகத் தொடங்கியது நன்நீராய் இருந்த வல்லிநதி நீர் மாற்றம் பெற்றது போல நன் நீரான வல்லிநதி உவர் நீராக மாறியது. இவ் உவர் நீர் உள் நாடு சென்றதன் காரணமாக கரணவாய் போன்ற பகுதிகளில் உப்பு பெரு வாரியாக இயற்கையாக விளையத் தொடங்கியது. இவ் உப்பானது பிற்காலங்களில் இவ் ஆற்றினூடாக கொண்டு வரப்பட்டு தொடுவாயிலில் அமைந்திருந்த சேகரிப்பு நிலையத்தில் நிரப்பப்பட்டது. அதன் காரணமாக அந் நிலையத்தை உள்ளடக்கிய நிலம் 'உப்பு மால்' என்று இன்றும் அழைக்கப்படுகிறது. இலங்கையின் கரையோரத்தை ஆட்சி புரிந்த அந்நிய ஆட்சியரான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் அதன் பின் ஆண்ட ஆங்கிலேயரும் இவற்றுடன் வணிக முறையில் தொடர்பு கொண்டிருந்தனர்.

**சந்நிதியின் உரிமம்**

மருதர் கதிர்காமர் முதலில் ஆலயம் அமைத்து பூஜைசெய்தபின் மற்றைய பங்காளரது காணிகள் யாவற்றையும் விலைக்குப் பெற்றுக் கொண்டார். இது தொடர்பான சான்றுகளாக தோம்பு மற்றும் உறுதி என்பன உள்ளன. கதிர்காமரும் அவர் மகனான வேலுப்பிள்ளை ஐயரும் மற்றும் பிள்ளைகள் எல்லோருமாக இக்கோயிலை முதன்முதலில் பராமரித்து வந்தனர். இவ்வாலயம் தொடர்பான பதிவேடுகள் ஒல்லாந்தர்கால நடைமுறைகளுக்கமைவாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

ஒல்லாந்தர் காலத்துடனேயே இலங்கையின் காணிகளுக்கான பதிவேடுகள் எனக் கூறப்படும் 'தோம்பு' எனும் காணி உறுதிகள் பிறந்தன இக்காலத்தில் பதியப்பட்ட தோம்புகள் செல்வச்சந்நிதி ஆலயத்தின் தோற்றத்திற்குரிய முதல் எழுத்து வடிவமான சாதனமாகும். அதன் பின்னர் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர் இலங்கையில் காணப்படும் ஆலயங்கள் எல்லாவற்றையும் சிறந்த முறையில் பதிந்து 'ஆலயப் பதிவேடு' என்னும் பதிவேட்டின் மூலம் பதிந்தனர். இதில் பெருமைமிக்க செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றம் தொடக்கம் அமைப்பு நடைமுறைகள் என்பவற்றை குறித்து வைத்தனர். இவர்களின் பதிவேட்டின் துணையைக் கொண்டு செல்வச் சந்நிதி ஆலயத்தின் ஆரம்ப வரலாறானது, குருகுல பரதவம்சத்தைச் சேர்ந்த மருதர் கதிர்காமருடன் தொடங்கி மிளிர்ந்ததை அறியக்கூடியதாக உள்ளது. இவ்ஆற்றங்கரையிலும் ஆற்றங்கரையை அடுத்தும் பரத வம்சம் என்று கூறப்படும் குருகுலத்தவரே குடியிருந்தனர். இன்றும் இவர்களே வாழ்ந்து வருகின்றனர்.

இப் பரத குலத்தவரின் குல தெய்வமாகிய முருகக் கடவுளே 'வேல்" ரூபத்தில் செல்வச் சந்நிதி ஆலயத்தில் கோயில் கொண்டுள்ளார். இங்கு கோயில் கொண்டுள்ள முருகனைக் கந்தசுவாமியார் என்றும் கூறி வந்துள்ளனர். இப் பெயரினைக் கொண்டிருந்த காரணத்தாலும் இங்கே ஒளி விட்டு பிரகாசிக்கும் கருணை பக்தி அருள் ஆகியவற்றாலும் முருகன் அடியார்கள் குடிகொண்டிருக்கும் பெருமானை 'ஆற்றங்கரையான்" 'ஆற்றங்கரை வேலவன்" கல்லோடையான்(இதன் அருகில் கல்லோடை உள்ளது.) 'கல்லோடைக் கந்தன்" 'அன்னக்கந்தன்" (அன்னம் தினந்தோறும் கிடைப் பதால்) 'அன்னதானக் கந்தன்", 'சின்னக்கதிர்காமம்", 'செல்லக்கதிர்காமக் கந்தன்" என்றும் அழைத்துப் பாடிப் பணிந்து பரவி நின்றனர். .இன்றும் இத்திருப்பெயர்களைக் கூறி அடியார்கள் வணங்குவதை இவ்வாலயத்தில் கண்ணால் காணக்கூடியாதாகவும், காதால் கேட்கக்கூடியதாகவும் உள்ளது.

**வீரபாகுதேவர் காலடி பதித்த இடம்**

இவ் ஆலயத்திற்கு பக்தி மணம் கமழும் தெய்வீக வரலாறு உண்டு அறுபடை வீடுகளில் ஒன்றான திருச்செந்தூரில் இருந்த முருகன் வீரவாகு தேவரை சூரபத்மனிடம் தூதாகச் செல்வதற்கு மகேந்திர புரிக்கு அனுப்பினார். தூதுவனான வீரவாகு தேவர் முதன் முதலாக வட இலங்கையின் தொண்டைமானாற்றுப் பகுதியில் உள்ள வல்லி நதிக் கரையில் உள்ள கல்லோடையில் காலடி எடுத்து வைத்தார் இவரது பாதங்கள் பூமியின் கண் பதிந்த போது கல்லோடையாக காணப்படும் இடத்தில் பாதச் சுவடுகள் தோன்றின. இவ்வாறு வீரவாகு தேவரது பாதச் சுவடுகளை இன்றும் ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் காணலாம். வீரவாகு தேவர் முருகப் பெருமானின் கட்டளைப்படி மகேந்திரபுரியில் தங்கி நின்ற சூரபத்மனிடம் சென்று விட்டுத் திரும்பி, திருச்செந்தூர் செல்லும் வழியில் மீண்டும் இந் நதிக் கரைக்கு வந்த பொழுது சந்திக் காலமாகி விட்டது எனவே கந்தப் பெருமானுக்குரிய சந்திக்கால பூசை செய்ய வேண்டிய பணி வீரவாகு தேவரின் மனதில் எழுந்ததால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வல்லி நதிக்கரையில் முருகப் பெருமானுக்குரிய சந்திப் பூசையை செய்து வழிபட்டார். இவ்வாறு வீரவாகு தேவரால் சந்திக்கடன் செய்யப்பட்ட இடமாதலால், இந்த இடம் சந்நிதியாக மருவி செல்வச்சந்நிதி என்னும் பெயரைப் பெற்றது. அன்று முதல் இவ்வாலயம், எந்நிதியும் தரும் சந்நிதியான் என்னும் பெயரைப் பெற்று விளங்கியதால், சகல செல்வங்களையும் வழங்கும் கந்தப் பெருமான் வீற்றிருக்கும் பதியாக தோற்றியது. இதனால்,இந்தத் தலம் மகத்துவம் வாய்ந்த முருகன் சந்நிதியாக விளங்குகின்றது. செல்வச்சந்நிதி ஆலயத்தின் அன்றைய தோற்றம் தமிழ் மக்களின் பாரம்பரிய கிராமிய வழிபாட்டு முறையை வெளிப்படுத்தக்கூடிய வகையில் மடாலய அமைப்பில் அமைந்திருந்தது. அப்பொழுது இருந்த எளிமையான தோற்றம் இன்று, மாற்றப்பட்டு கால ஓட்டத்தில் படிப்படியாக ஆகமம் சார்ந்த தோற்றத்தை ஏற்படுத்தும் வகையில், சிற்ப முறைகளைக் கொண்டதாக விளங்குகின்றது.

**ஐராவசுவின் சாபவிமோசனம்**

இச் செல்வச்சந்நிதி ஆலயத்தில் கோயில் கொண்ட கந்தப் பெருமானை தேவலோக காந்தருவர் ஒருவர் மனக் கோயில் சமைத்து இடை விடாத மௌன தியானத்தின் மூலம் முத்தியடைந்து இறைவனது பாதார விந்தத்ததை போய்ச் சேர்ந்ததாக வரலாறு கூறுகின்றது. அந்த வரலாற்றை நோக்கினால் 'ஐராவசு' என்ற தேவலோக காந்தருவர் வியாழபகவானது கட்டளைப்படி ஒழுகாது தவறியமைக்காக வியாழ பகவான் 'நீ பூமியின் கண் பிறக்கக்கடவாய்" என்று சாபமிட்டார் இச் சாபத்திற்கு ஆளாகிய ஐராவசு தேவலோகத்தில் இருந்து பூமியில் பிறந்து பூமியில் வாழும் ஜீவராசிகளைப் போன்று தானும் அல்லலுற வேண்டியதன் நிலையை உணர்ந்து தனக்கு சாப விமோசனம் தரும்படியும் தன்னை இரட்சிக்கும்படியும் பகவானை வேண்டி வணங்கினார்.. அதற்கு வியாழபகவான் "தனது சாபத்தை மாற்ற முடியாதென்றும் நீ பூலோகம் சென்று அங்கே உள்ள முருகன் தலமான கதிர்காமத்திற்குப் பக்கத்தில் உள்ள காட்டில் யானையாக அவதரித்து வரும்போது கதிர்காமக் கந்தனை வணங்கவரும் சிகண்டி முனிவரால் சாப விமோசனம் பெற்று சந்நிதி சென்று தியான வழிபாடு செய்து சமாதி அடைவதன் மூலம் இறைவனது பாதார விந்தத்தைப் பற்றுவாய்" என்று கூறினார். அவரது சாபத்தினால் கதிர்காமத்திற்கு அயலில் உள்ள காட்டில் ஐராவசு யானையாக அவதரித்து வாழ்ந்து வந்தார். அக்காலத்தில் இந்த யானைக்கு 'யானைத்தீ' என்ற நோய் பீடிக்கலாயிற்று இதன் காரணமாக யானையானது மதம் பிடித்து அங்குள்ள காடுகள் மரங்கள் விலங்குகள் எனப் பலவற்றையும் அழித்துக் கொண்டிருந்தது.

இதேவேளை தேவலோகத்தில் உள்ள இசைப் பிரியராகிய சிகண்டி என்னும் முனிவர், சுப்பிரமணியப் பெருமானை அனுகி, இசை நுணுக்கங்களைத் தான் மென்மேலும் அறிய விரும்பு வதால், அவற்றை அறியத் தருமாறு வேண்டினார். அதற்கு எம் பெருமான் "இது பற்றி முத்தமிழ் வித்தகரான அகத்திய முனிவருக்கு ஏற்கனவே உபதேசித்துள்ளோம். அவர் தற்பொழுது தென் பொதிகை மலையில் இருப்பதால் அவரிடம் சென்று கேட்டு அறியும்படி கூறினார். முருகப் பெருமானின் கட்டளைப்படி, சிகண்டி முனிவரும் பொதிகை மலை சென்று அகத்தியரிடம் இசை நுணுக்கங்களை கேட்டறிந்தார். அதன் பின்னர் கந்தப் பெருமானைத் தரிசிப்பதற்காகக் கதிர்காமம் நோக்கிப் புறப்பட்டார். சிகண்டி முனிவரும் அவரது சீடர்களும் கதிர்காமம் நோக்கி காட்டுப் பாதையினூடாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது, யானைத்தீ நோயால் பீடிக்கப்பட்ட ஐராவசு யானையானது காடுகள் மரங்கள் முதலியவற்றை அழித்துப் பெரும் சத்தமிட்டபடி நின்று கொண்டி ருப்பதைக் கண்டார் அந்த யானையானது சிகண்டி முனிவரையும் அவரது சீடர்களையும் கொல்வதற்கு பிளிறிக் கொண்டு காட்டு விருட்சங்களை அழித்தபடி வந்துகொண்டிருந்தது

மதம் கொண்ட யானையின் கோபாவேசத்தைக் கண்ட முனிவர் தனது ஞான சிருஸ்டியினால் அந்த யானையின் பூர்வீகத்தை அறிந்து கொண்டார். அதில் வியாழபகவானின் சாபத்தையும்,அதற்கான சாபவிமோசனத்தையும் அறிந்து கொண்டார். அந்த யானையின் பூர்வீகத்தை அறிந்த சிகண்டி முனிவர் கதிர்காமக் கந்தனை தியானித்துக் கொண்டு 'சடாச்சர" மந்திரத்தை உச்சரித்து அருகில் இருந்த வெற்றிலையை தன் கையினால் நுள்ளி எடுத்து "இவ் வெற்றிலையானது வேலாகச் சென்று அழிக்குக" என்று கூறி அந்த மதம் கொண்ட யானையை நோக்கி எறிந்தார். அவ் வெற்றிலையானது சுப்பிரமணிய கடவுளின் திருவருளினால் கதிர்வேலாக மாறிச் சென்று யானையினது உடலைக் கிழித்ததும், அந்த யானையானது அவ்விடத்தில் வீழ்ந்தது. அவ்வாறு வீழ்ந்த இடத்தில் ஒரு தேவகுமாரன் தோன்றி "ஐயனே நான் முன்பு தேவலோகத்தில் ஐராவசு எனும் கந்தர்வனாக இருந்தேன் வியாழ பகவானது சாபத்தின் காரணமாக இவ்வாறு யானை உருவில் இப் பூமியில் பிறந்து நீண்ட காலமாக அலைந்து திரிந்தேன். தாங்கள் என்னை நோக்கி வீசிய வெற்றிலையானது கதிர்வேலாயுத கடவுளின் திருவருள் வேலாக மாறி எனது உடலை ஊடுருவிச் சென்றதால் எனது சாபம் நீங்கிவிட்டது." என்று கூறி பணிந்து வணங்கி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்பின்னர் ஐராவசுவையும் அழைத்துச் சென்று தமது சீடர்களுடன் கதிர்காமக் கந்தப் பெருமானை நோக்கிச் செல்லலானார்கள். அவ்வாறு கந்தப் பெருமானை வழிபட்டதும், தாம் வந்த வேலை முடிந்தது என்று கூறி, சிகண்டி முனிவர் கதிர்காமக் கந்தப் பெருமானிடத்தும் ஐராவசுவிடம் இருந்தும் விடைபெற்று சீடர்களுடன் கோயிலை நோக்கி செல்லலானார். அவ்வேளையில் ஐராவசு தன்னையும் இரட்சிக்கும்படி கேட்டபோது கந்தப் பெருமான் "நமது வீரவாகுதேவர் ஈழத்தின் வட கரையின் வல்லி நதிக்கரை ஓரத்தில் எனக்குத் சந்திக்கடன் செய்து வழிபாடு செய்தார்... அவ்விடத்தில் சென்று மௌன வழிபாட்டின் மூலம் பூசைகள் செய்து தியானத்தின் மூலமாக எனது பாதார விந்தத்தை வந்தடைவாய்" என்று கூறி திருவாய் மலர்ந்தருளினார் இதன் பிரகாரம் ஐராவசு வடக்கே உள்ள வல்லி நதிக்கரைக்கு வந்து எம்பெருமான் கூறியவாறு வீரவாகு தேவர் சந்திக்கடன் செய்த இடத்தில் இருந்துகொண்டு மனக்கோயில் செய்து மௌன பூசை செய்து வரும் வேளையில்,அவரது வினைகளை அறுத்துக் கந்தக் கடவுள் முத்தியை கொடுத்தருளினார்.

### மருதர் கதிர்காமரின் பக்தி வைராக்கியம்

செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்த வரலாற்றினை நோக்கின் இன்றைய தோற்றத்திற்கும் ஆரம்பத் திற்கும் காரணகர்த்தாவாக சாதாரண கடற்றொழில் செய்து இடைவிடாத முருக வழிபாட்டின் மூலம் எம்பெருமானது. பாதார விந்தத்தைப் பற்றிய மருதர் கதிர்காமர் என்ற கந்தப் பெருமானது அடியவராகிய பூசகருடன் ஆரம்பமாகி உள்ளதை அறியமுடிகின்றது. இன்று உள்ள அவர்வழித் தோன்றிய சந்ததியினருக்குப் பரம்பரை பரம்பரையாக வழிபாடு செய்வதற்கான உரிமத்தை விட்டுச்சென்றுள்ள ஒரு பக்தி மணம் கமழும் பொக்கிசமாகவே செல்வச் சந்நிதி ஆலயம் திகழுகின்றது.

செல்வச் சந்நிதி ஆலயத்தின் தோற்றமானது அற்புதமான வரலாற்றைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 19ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஆற்றங்கரை ஓரத்தில் வாழ்ந்து வந்த பரதகுலத்தவர்களுள் மூத்தவரும் பக்திமானுமாகிய மருதர் கதிர்காமர் என்பவர் நாள்தோறும் இவ்வாற்றில் மீன்பிடித்து தனது அன்றாட வாழ்க்கையை நடாத்தி வந்தார். இவர் மீன்பிடிக்கச் செல்லும் முன்னர் ஐராவசு முனிவர் தியான வழிபாடு செய்து தவம் இயற்றிய இடமாகிய பூவரச மரத்தின் சமாதியில் வணங்கியே மீன்பிடிப்பது வழக்கம். தனக்குப் பூஜை செய்வதற்கு கதிர்காமரே ஏற்றவர் என எண்ணிய முருகப் பெருமான், மருதர் கதிர்காமரைத் தனது தொண்டனாக்கிக்கொள்ள விரும்பினார். அதனால் தன்னை நாள்தோறும் வணங்கியபின்னர், ஆற்றங்கரையில் மீன்பிடிக்கும் கதிர்காமர் முன்பாக ஒரு சிறுவன் உருவில் தோன்றிய முருகன், "கதிர்காமா என்னிடம் இக்கரைக்கு வா" என்று அழைத்தார். இதனைக் கேட்ட கதிர்காமர் ஆற்றின் மேல் இருந்து கரைக்கு வந்தார். இவ்வாறு வந்து சேர்ந்தவரை அந்தச் சிறுவன் கூட்டிச்சென்று பூவரசமரத்தின் அடியையும் அதன் அருகில் வீரவாகுதேவர் சந்தி கடன் செய்த இடத்தையும் சுட்டிக் காட்டி "இதில் பூஜை வழிபாடு செய்ய எல்லா வகையிலும் நீயே ஏற்றவன்" என்று கூறி மறைந்தருளினார்.

இதைக்கண்ட கதிர்காமர் கலக்கமுற்று "கந்தா என்ன சோதனை... என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? நானோ பரதகுலத்தவன் கடற்தொழில் செய்து கொண்டிருப்பவன்... எனது தொழிலுக்கும் உனது பூஜை வழிபாட்டிற்கும் இடையில் எவ்வளவு தூரம் வித்தியாசம் உள்ளது. எங்களுக்கு இது ஒவ்வாது எனக் கண்ணீர் மல்க கதறியழுது மறுத்து நின்றார். இதைக் கண்ட கந்தப்பெருமான் "யாம் இருக்கப் பயமேன்" எனக் கூறி பூஜை வழிபாடு செய்யும்படி கூறிய போதும் வழிபாட்டு முறை தெரியாது எனக் கூறி மறுத்தார். அப்போது எம்பெருமான் "நீ புனித வல்லிநதியில் மூழ்கி நான் அழைத்த போது இக்கரைக்கு வந்தவுடன் உனது பாவங்கள் எல்லாமே கழுவப்பட்டு விட்டன என்னுடன் வா. நான் காட்டும் பூசை முறையில் வாய் கட்டி மௌன பூஜை செய்வாய்" எனக் கூறி கதிர்காமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளையெல்லாம் காண்பித்து, வழிபாட்டுக்கு வேல் ஒன்றையும் வழங்கியதாக நூல்கள் கூறுகின்றன.சில கிராமிய ஆலயங்களில் வாய்கட்டி மந்திரம் ஓதாமல் பூசிப்பது வழமையில் உள்ள தமிழர்களின் முருக வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது.

### மூக்குத் துண்டும், கண்டயமாலையும், பட்டு வேட்டியும்

கதிர்காமம் சென்று பூசை வழிபாடுகளைப் பார்த்துவிட்டு வந்த அன்று தொடக்கம் முருக ஆசாரசீலராகிய கதிர்காமர் தொண்டைமனாற்றங்கரையிலே பச்சைப் பசேலென்று செழித்து வளர்ந்துள்ள பூவரச மரத்தடியில் வேலை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தார். இங்கு மந்திர உச்சாடனங்கள் எதுவும் செய்யும் வழிபாட்டு முறைகள் இடம் பெறாததால், மூக்கில் வாயை மறைத்தவாறு ஒரு வெள்ளைத் துண்டினைக் கட்டிப் பூசைகளை மேற்கொள்வார்கள். இவ்வாறு மூக்கின் மேலாகக் கட்டப்படும் வெள்ளைச் சீலைத் துண்டு, "மூக்குத் துண்டு" என அழைக்கப்படும். இந்தத் துண்டை ஆலயத்திற்குள் வைத்தே கட்டுவார்கள். பூஜை முடிந்தபின்பு திருநீற்றை கொடுக்கும் முறை தெரியாமல் கதிர்காமர் தடுமாறியபோது, "கதிர்காமா நீ திருநீற்றை எடு நான் போடுகிறேன்" என்று அசரீரி வாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டதாகக் கூறப்படுகின்றது. அன்று முதல் தட்டில் இருந்து திருநீற்றை எடுப்பது கதிர்காமராகவும் அதைப்போடுபவர் சந்நிதி முருகனாகவும் இருப்பதாகக் கருதிய பக்தர்கள் அந்த நேரங்களில் அவரை முருகனாகவே மனதுக்குள் எண்ணி அவரின் காலில் விழுந்து வணங்கி திருநீற்றைப் பெறுகின்றார்கள். காலில் விழுந்து திருநீற்றைப் பெறும் பொழுது தலையிலும் திருநீறு இடப்படும். பூசகரின் காலில் விழுந்து வணங்கும் மரபு வேறு எந்த ஆலயங்களிலும் இல்லை.

சந்நிதி வேலவனுக்குப் பூசைகளைச் செய்யும் ஐயர் பரம்பரையைச் சேர்ந்த இளைஞர்கள் திருமணம் முடித்த பின்னர் கெருடாவிலில் உள்ள சைவக் குருக்களிடம் சென்று கிரிகை முறைகளைக் கற்ற பின்னர் பூசைகளைச் செய்வதற்குரிய தகைமைகளை அடைந்து கொள்வர்.அதன் பின்னரே வாயில் மூக்குத் துண்டு, தலையில் உருத்திராட்சத்தினால் ஆன கண்டயமாலை,பட்டு வேட்டி ஆகியவற்றை அணிந்து பூசகருக்குரிய தோற்றத்தை அடைந்து கொள்வர்.

பூஜை முடிந்ததும் சந்நிதி முருகப்பெருமானும், கதிர்காமரும் இரவு நேரங்களில் ஆலய முன்பாக உள்ள இரு பக்கமும் பார்த்துக் கொண்டிருக்கும் திண்ணையில் எதிரும் புதிருமாக இருந்து இன்றும் கதைப்பதாகக் கூறப்படுகின்றது.இதனால் இன்றும் அந்த இரு திண்ணைகளுக்கும் குறுக்காக எவரும் செல்லக்கூடாது என்று கூறப்படுவதால், ஆலயத்தின் வாசலின் ஊடாக எவரும் உட்செல்வதோ அல்லது வெளியேறுவதோ இல்லை. அதற்கு அருகாமையில் உள்ள வாசலின் ஊடாகவே சென்று வருவார்கள்.உற்சவகாலங்களில். எழுந்தருளி முருகனையும் இவ்வழியாகவே எடுத்துச் செல்வார்கள்.

மாலை வேளைகளில் எம்பெருமான் கதிர்காமருடன் உறவாடிய காலம் 1824ம் ஆண்டு என கோயில் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மருதர் கதிர்காமரும் வேலுப்பிள்ளை ஐயரும் மற்றும் கதிர்காமரது பிள்ளைகளும் பனையோலையால் வேயப்பட்ட சிறு கொட்டில் அமைத்து அதில் முருகப் பெருமானை வழிபட்டுப் பூஜைசெய்து வந்தார்கள். இதன் பின் இவ் ஆலயத்தை எம்பெருமான் கூறியபிரகாரம் "கட்டி நிற்குண பிரமமாக" வைத்து வழிபடத் தொடங்கினார் கந்தப் பெருமான் கூறும் கட்டளைகளை சிரமேற் கொண்டு செய்வதே தம் பெரும்பணி என்றுகூறி கதிர்காமர் பூஜைசெய்து வந்தார். அதன்பின்னர் தனது வழித்தோன்றல்களான பிள்ளைகளுக்கு இங்கு கைக்கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் பூசைமுறைகளையும் உற்சவ முறைகளையும் உபதேச முறையில் கூறினார்.

இவர்களும் தமது பிள்ளைகளுக்கு கூறி சந்ததி சந்ததியாக உபதேச முறை கூறப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரமே கர்ணபரம்பரையாக கூறப்பட்ட தொண்டுகளை மற்றைய பரம்பரையினரும் கைக் கொண்டு வருகின்றனர் இவர்கள் இக்கோயிலின் சுற்றாடலிலும் சுற்றி உள்ள ஊர்களிலும் ஆசார மாகவும், புனிதமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களது பூசை முறையானது பக்தி மார்க்கத்தின் உச்ச நிலையாகும். செல்வச் சந்நிதி ஆலயத்தில் அமைர்ந்திருக்கும் ஆற்றங்கரை வேலவனை நாடி வரும் அடியார்க்கு அனைத்துச் செல்வங்களையும் வழங்கி அவர்களது பிறவிப்பிணியை அறுக்கும் மருந்தை நாள்தோறும் கொடுத்த வண்ணம் இருப்பதைக் காணலாம். செல்வச்சந்நிதிக்குப் போய் செல்வம் எல்லாம் பெறுவீர் என ஒரு சித்தர் கூறினார். அருட்செல்வம், பொருட்செல்வம், கல்விச் செல்வம், பிள்ளைச் செல்வம் என இவ்வாறு எண்ணிறைந்த செல்வங்களை வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் வண்ணம் இருக்கிறார்.

**சந்நிதியின் வேல் வடிவ வழிபாடு**

முருகனின் திருக்கோலங்களுள் வேல்வடிவமே மிகவும் தொன்மையானதாகும். வேல்தான் முருகனின் உண்மையான உருவமாகும். முருகனின் அருவுருவத் திருக்கோலமே வேல் எனலாம். வேல் இலை வடிவம் போன்றதென்பதை "இலைகுலாம் அயில்"எனக் கந்தபுராணம் கூறும். முருகனாகிய கந்தனும் வேலனும் ஒன்றே என்பதை விளக்கிக் கூறும் முதற்றமிழ் நூல் கந்தபுராணமாகும். இதனைக் கச்சியப்ப சிவாச்சாரியாரின்,

*"அந்தமில் ஒளியின் சீரால் அறுமுகம் படைத்தபண்பால்*

*எந்தை கண்நின்றும் வந்த இயற்கை யாற்சக்தி யாம்பேர்*

*தந்திடும் பனுவல் பெற்ற தன்மையால் தனிவேற் பெம்மான்*

*கந்தனே என்ன நின்னைக் கண்டுளக் கவலை நீத்தோம்'*

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. வேலினை இறைவனாகவும், கடவுளாகவும், தெய்வமாகவும் காட்டும் தனிச்சிறப்பு தமிழ் நூலான கந்தபுராணத்திற்கேயுண்டு. இதனையே "எண்ணரும் படைகட்கெல்லாம் இறைவ" "வேற்கடவுள்" "கடவுட் செவ்வேல்""தெய்வச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வேல்""உடம்பிடித் தெய்வம்"என்ற கந்தபுராணக் குறிப்புக்கள் உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறான பெருமைகள் கொண்ட வேல் வழிபாடே சந்நிதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வணக்க முறையாகும். செல்வச் சந்நிதியில் மூலமூர்த்தியாகவும், எழுந்தருளி மூர்த்தியாகவும் காணப்படுவதே சந்நிதியின் சிறப்பு வழிபாடாகக் காணப்படுகின்றது.

**வேல் வடிவிலான இலங்கையின் தொன்மையான முருக வழிபாடு**

இலங்கையின் வடிவமும், ஒரு வேல் வடிவிலான ஒரு அமைப்பாகக் காணப்படுவதற்கு இங்கு காணப்படுகின்ற வேல் வழிபாட்டு முறையே காரணமாகவும் இருக்கின்றது. அந்த வகையில் கிராமிய வழிபாட்டு முறையில் வாய் கட்டி மந்திர உச்சாடனங்கள் எதுவுமின்றி ஜீவனோபாயத் தொழில் புரிகின்ற பிராமணர் அல்லாதவர்களால் பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற ஆலயங்களே இலங்கையில் மிகவும் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களாகவும் விளங்குகின்றன. அந்த வகையில் தென்னிலங்கையில் கதிர்காமம், கிழக்கிலங்கையில் "மண்டூர் முருகன் ஆலயம்" வடக்கிலங்கையில் "செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்" ஆகிய மூன்று ஆலயங்கள் உள்ள பிரதேசங்களை நேர்க் கோடுகளின் வழியாக இணைக்கும்பொழுது, இலங்கையின் வடிவம் ஒரு வேலின் வடிவில் அமைந்திருப்பதைக் காணலாம்.

**எழுந்தருளி வேலின் வெற்றிலை நுனி**

திருவிழாக் காலங்களில் எழுந்தருளி வேலின் மத்தியில் வெற்றிலையின் முக்கோண வடிவமுள்ளதாக அதன் நுனி வெட்டப்பட்டுக் காட்சி அளிக்கின்றது. சிகண்டி முனிவர் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையைக் கிள்ளி வீசியபோது, அது வேலாக மாறி ஐராவசுவுக்கு சாபவிமோசனம் கொடுத்த காரணத்தினால் அதனை எடுத்துக் காட்டுமுகமாக எழுந்தருளி வேலில் வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

செல்வச் சந்நிதியில் நடைபெறும் முகூர்த்தத்தை "பக்திரசக்தி முகூர்த்தம்" என்றும் வழிபாடு "மானசீக மௌன அன்பு வழிபாடு" என்றும் சொல்லப்படுகிறது இதன்காரணமாகவே, இத்திருத்தலம் "ஞானலய திருத்தலமாக" மிளிர்கிறது.

**ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு**

மருதர் கதிர்காமர் நாள்தோறும் வாழையிலையில் உணவு படைத்து உண்பது வழக்கம். ஒரு நாள் இவர் அமுது செய்து உண்பதற்கு உட்கார்ந்தபோது முதியவர் ஒருவர் கதிர்காமரை நோக்கி, "நான் களைப்பாக இருக்கின்றேன். எனக்கு ஒரு ஆலம் இலையில் கொஞ்சம் பச்சரிசிப் பொங்கலும் பயற்றங்கறியும் வைத்துத் தந்தால் போதும்" என்றார்.

அவர் இவ்வாறு கூறியதும், பூரிப்பு அடைந்த கதிர்காமர் விரைவாக பொங்கல் பொங்கி, பயற்றங்காய் குழம்பையும் வைத்து பொங்கல் பானையுடனேயே கோயிலுக்குள் கொண்டு சென்று அங்கு வைத்தே, அவற்றை எடுத்து வைத்து ஆலம் இலையில் கொடுக்க, முதியவர் அற்புதமான பொங்கல் என்று பெருமிதமடைந்து கொண்டே அங்கே அறுபத்துமூன்று பேர் இருக்கிறார்கள் அவர்களுக்கும், உனக்கும்,எனக்கும் சேர்த்து அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது தரவேண்டும் என்று சொல்லி மறைந்து, முருகனாகக் காட்சி கொடுத்தார். கதிர்காமர் சந்நிதியை நோக்கி ஓடினார். ஆங்கே 'வேல்" வழமைக்கு மாறாக பிரகாசித்துக் கொண்டிருந்தது. சந்நிதி முருகன் ஆலம் இலையில் வைக்கப்பட்ட பச்சரிசிப் பொங்கலும் பயற்றங்காய் குழம்பும் உண்டதாக வரலாறு சான்று பகர்கிறது.

முருகனின் விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில், பூஜை நேரங்களின்போது அறுபத்தைந்து ஆலம் இலைகளில் அமுது படைக்கும் மரபு காணப்படுகிறது. அன்று பயற்றங்கறியும் பச்சரிசி அமுதும்,பொங்கப்பட்டு கோயிலுக்குள் பொங்கும் பானையுடன் கொண்டு சென்று படைப்பதற்குப் பின்பற்றப்பட்ட அந்த நடைமுறையே, இன்றும் 65 ஆலம் இலைகளில் பச்சை அரிசி பொங்கலும், பயற்றங்கறியும் படைக்கின்ற மரபு இருந்து வருகின்றது.இதனை யாரும் "பிரசாதம்" என்றோ அல்லது "பொங்கல்" என்றோ அழைப்பதில்லை.மாறாக "மருந்து" என்றே அதனை அழைத்து பயபக்தியோடு உட்கொள்வார்கள்.

**மூர்த்தி, தலம், தீர்த்தம் கொண்ட ஆலயம்**

சந்நிதி ஆலயத்தின் தோற்றம், அமைப்பு, வழிபாட்டு முறை எல்லாமே வித்தியாசமான முறையில் காணப்படுகின்றன. இங்கு மூல மூர்த்தியாகவும் எழுந்தருளி மூர்த்தியாகவும் வேல் வழிபாடே விளங்குகின்றது. சந்நிதி ஆலயமானது பரந்த நிலப்பரப்பைக் கொண்ட ஒரு மடாலய வடிவில் அமைந்த ஆலயமாகவே காணப்படுகின்றது. இங்கு பெரிய இராஜகோபுரங்களோ, தூபிகளோ, கட்டடங்களோ, விமானங்களோ இல்லை. ஆலயமுகப்பில் நந்தியும், ஆலயத்தைச் சுற்றிவர, மருத மரங்களும், மேற்கே புனித தீர்த்தம் எனக் கூறப்படும் தொண்டைமான் ஆறும் ஆலயத்திற்கு அழகூட்டிக் கொண்டிருக்கின்றன. ஆலயத்தின் எந்தத் திசையில் இருந்து பார்த்தாலும், முருகனையும், தீபாராதனையையும் பார்க்கக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவுக்கு, ஆலயச்சுவர்கள் தொண்டைமானாறு குறுகியதாக அமைந்துள்ளன. செல்வச்சந்நிதியின் மேற்குப்புறமாகச் செல்லும் வல்லியத்தேவன் என்பவனால் வெட்டப்பட்ட ஆறு, புனிதம் நிறைந்ததாகக் கருதப்படுகின்றது. ஆலயத்திற்கு வருபவர்கள் முதலில் இங்கு நீராடிய பின்னர், அதற்கு எதிர்ப்புறமாக ஆலயத்துடன் உள்ள மாணிக்க கங்கை என்னும் நன்னீர்க் கேணியில் நீராடிய பின்னரே ஆலயத்திற்குச் செல்வார்கள்...

**சந்நிதியின் தல விருட்சம்**

சைவத் திருக்கோவில்கள் ஒவ்வொன்றிலும் தல விருட்சங்கள் உண்டு.இவை அந்த ஆலய மூர்த்தியின் வரலாறுடன் தொடர்பு கொண்டவையாகவே இருப்பதால், அந்தத் தலத்திற்கே உரிய விருட்சமாக இவை பூசித்து வணங்கப்படுகின்றது. அந்த வகையில் செல்வச்சந்நிதி ஆலயத்தின் தல விருட்சமாக பூவரச மரம் அமைந்துள்ளது. முருகப்பெருமானும் கதிர்காமருக்கு முதலில் காட்சி கொடுத்தது இந்தப் பூவரச மரத்தின் கீழேயே என்றும் கூறப்படுகிறது. 65 ஆலமர இலையில் முருகனுக்கு பிரசாதம் படைத்து பின்பு பக்தர்களுக்கு வழங்கப்படும் முறை இன்றும் இருக்கின்றது.

ஐராவசு முத்தி அடைந்த ஆலயத்தின் மேற்குப் புறமாக வள்ளி அம்மன் வாசலுக்கு முன்புறமாக நாக தம்பிரான் ஆலய தூபியின் கீழ், வளர்ந்து செழிப்புற்றிருக்கும் பூவரச மரத்தில் இருந்து பழுத்துத் தானாகவே விழுந்த இலையை எடுத்துத் தமது பணப் பெட்டிகளில் வைப்பதால் செல்வம் பெருகும் என்ற ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. ஐராவசு முத்தியடைந்த இந்த இடம்தான் வல்லிநதிக்கரையில் உள்ள பூவரச மரத்தின் அடியாகும் ஐராவசு சமாதி அடைந்த இடத்தில் காணப்பட்ட பூவரச மரமானது பெரியவிருட்சமாகி தொழும் அடியார்களது துன்பத்தை அகற்றும் தெய்வத்தன்மை பெற்றது. அம் மரத்தின் அடியிலே தோன்றிய பூவரசு மரமானது இன்றும் இக்கோவில் நடுவில் காணப்படுகிறது இதைப்பற்றி வேதநாயகம்பிள்ளை அவர்கள்,

"செல்வச்சந்நிதி பூவரசைத் தொழும் அடியார்கள் பல்லாயிரத்துன்பம் எல்லாம் அகல பரிவுடனே...." என்று பாடினார். ஐராவசு முனிவர் முத்தியடைந்து சமாதி அடைந்த பூவரசமரத்துக்கு அருகில் வீரவாகு தேவர் சந்திக்கடன் செய்த இடத்திலேயே இன்று "பக்திரச்சக்தி முகூர்த்தத்தில்" கந்தப்பெருமான் வேல் வடிவில் கோயில் கொண்டுள்ளார்.

**கணீரென்று ஒலி எழுப்பும் சந்நிதியான் கண்டாமணி**

ஒரு ஆலயத்தின் கண்டாமணி என்பது அந்த ஆலயத்தின் பூசை நேரங்களை அறிவிக்கும் மணி அல்ல.... காண்டாமணி என்பது.

"ஓர் ஆலயத்தின் 'கண்டாமணி' என்பது, ஆன்மாக்களில் ஞான ஒடுக்கத்தை ஏற்படுத்தி, ஐம்புலன் களையும், ஒரு முகப்படுத்தி இறைவனுடன் சங்கமிக்கச் செய்யும் சக்தி வாய்ந்த 'ஞான ஒலி'. அது அந்த ஆலயத்தின் நாத பிரம்ம சுவரூபத்தைத் தெரிவிப்பது. அது வெண்கலத்தினால் ஆனதாகவும், நல்ல கணீரென்ற ஓசை உடையதாகவும் இருத்தல் வேண்டும். அந்த மணியின் நாத ஒலி எவ்வளவு தூரத்திற்குக் கேட்கின்றதோ அவ்வளவு தூரம் வரைக்கும் வாழ்பவரின் பாவங்கள் நீங்குவதாக வேதங்கள் கூறுகின்றன. நம்மையும் நாம் வாழும் சூழலையும், சுற்றி நிற்கும் பூத பிசாசுகள் அனைத்தும் கண்டாமணியின் நாத ஒலியினால் நீங்கி விடும் என்று சுப்பிர பேதம் கூறுகின்றது." ('மாமணி சிறப்பு மலர்' – வல்வை.ந. அனந்தராஜ்)

இத்தகைய பெருமைக்குரிய காண்டாமணி பொருத்தப்பட்டுள்ள செல்வச் சந்நிதி ஆலயமணியின் கோபுரம் 54 அடி உயரமுள்ளது. சந்நிதியானின் ஆலய கண்டாமணிதான் உலகிலுள்ள இந்து ஆலயங்களில் அதிக உயர் கோபுரத்தில் அமைந்ததாகக் கூறப்படுகின்றது. இதைச்செய்து கொடுத்தவர் மானிப்பாய் அதிகார் செல்லமுத்துவின் மகனான சோமசுந்தரம். இந்த மணியின் நாதஓசை தொண்டமானாறு சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து மானிப்பாய்க்குக்கூடக் கேட்கும் அளவுக்கு மிக நீண்ட ஒலிவீச்சைக் கொண்டிருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் 1986 ஆம் ஆண்டு பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட எறிகணைபட்டு கோபுரமும் மணியும் சேதமடைந்தன. இத்தகைய பெருமைக்குரிய காண்டாமணி சந்நிதியில் 16 ஆண்டுகள் வரை ஒலிக்காது இருந்தமை சந்நிதியான் அடியார்களுக்கு மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தி யிருந்தது. இந்த நிலையில் சிலகாலம் சென்ற பின்பு வெளிநாடுகளில் உள்ள சந்நிதி அடியவர்களின் விடாமுயற்சியால் உடைக்கப் பட்ட முன்னைய காண்டா மணியின் சில உலோகத் துண்டுகளைக் கொண்டு சென்று அந்தப் பழைய காண்டாமணியின் ஒலியைத் தரக் கூடிய வகையில் இலண்டனில் மாமணி செய்யப்பட்டு 2002 ஆம் ஆண்டு ஆவணி மாதம் சந்நிதியான் ஆலயத்தில் மீண்டும் பொருத்தப்பட்டது. இந்த புதிய மாமணியின் நிறை 1250 கிலோ கிராமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வருடாந்த மகோற்சவம்

அன்னதானக்கந்தன் என்று அழைக்கப்படும் முருகப்பெருமானுக்குரிய வருடாந்த மகோற்சவம், ஆவணி மாதத்தில் வரும் அமாவாசையில் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது. கோவில் கிணற்றுக்கு அருகே வள்ளிக்கொடி முளைக்கும்பொழுது கொடியேறி திருவிழா ஆரம்பமாகி பதினைந்து நாட்கள் அல்லது சிலவேளைகளில் பூரணை நாட்களைக் கருத்தில் எடுத்து பதினாறு நாட்கள் நடைபெறும். கொடியேற்றத் திருவிழாவுக்கான கிரிகைகள் யாவும்,ஆலய முன்வாசலில் உள்ள நந்தி தேவரின் முன்னால் வைக்கப்பட்டுள்ள அரத்தினால் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டுள்ள 'கேடகத்தின்' கிரீடம் என்று அழைக்கப்படும் முடியில் இடம் பெற்று அதற்கு மலர் மாலைகள், பட்டுத் துண்டு என்பன கட்டப்பட்டுத் தீப ஆராதனை காட்டப்படுவதுடன் உற்சவ நிகழ்வுகள் ஆரம்பமாகும். இங்கு ஆகம வழிபாடு சார்ந்த கொடித் தம்பம் இல்லாததால்,கொடியேற்றும் கிரிகைகள் யாவும் கேடகத்திலேயே இடம் பெறுகின்றன. இச்சடங்கு முடிந்ததும், கண்டாமணி ஒலிக்க, மணிக் கோபுரத்தில் கொடி ஏற்றப்படும். அதனைத் தொடர்ந்து வேற்பெருமான் இக்கேடகத்திலேயே வீதி உலா வருவார்.

பத்தாம் திருவிழாவாக பூங்காவனம் நடைபெற்று, பதினான்காவது நாள் தேர் உற்சவமும், ஆவணிப் பூரணையில் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

தினமும் காலையும் மாலையும் உற்சவ நேரங்களின் பொழுது,வேற்பெருமான் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு உள்வீதி வலம் வரும்பொழுது, சிறிது நேரம் வள்ளி அம்மனுடன் அமரவைத்துப் பூசைகள் இடம் பெற்றபின்னரே வெளிவீதி வலம் வருவது வழக்கமாகும். இது மனித வாழ்வில் இரண்டு மனைவியர்களை வைத்திருப்பவர்களின் அவலங்களை உணர்த்தும் குறியீடாகவும் உள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழாவில் தற்பொழுது மூன்று சித்திரத் தேர்கள் வீதி வலம் வருகின்றன. இவற்றில் பெரியதேரில், வேல்வடிவில் வீற்றிருக்கும் ஆலய மூலவரான செல்வச் சந்நிதி வேலவனும், அடுத்து ஆறுமுக சுவாமி, மற்றும் விநாயகப் பெருமான் ஆகியோர் தனித் தனியான சித்திரத் தேர்களிலும் உலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். தேர் வீதியுலா வரும்போது, சந்நிதி முருகனுக்கு முன்பாக காவடி, கரகாட்டம், பாற்காவடி, கற்பூரச்சட்டி, தூக்குக் காவடி என்றும், தேரின் பின்னால் அங்கப்பிரதட்சணை மற்றும் அடியழித்துவரும் பல நூற்றுக் கணக்கான அடியார்கள்,மற்றும் இவற்றின் பின்னால் வரும் பஜனைக் குழுக்கள், உருக்கொண்டு தம்மை மறந்து ஆடும் பக்தர்களின் காட்சிகள் என மனதை நெகிழ வைத்துவிடும் விழாவாக அவை அமைந்து விடும்...

யாழ். குடாநாட்டில் இருந்து மட்டுமன்றி, இலங்கைத் தீவின் பல பாகங்களில் இருந்தும், புலம் பெயர்ந்த வெளிநாடுகளில் இருந்தும் கூட பல்லாயிரக்கணக்கான அடியார்கள் இந்த தேர்த் திருவிழாவில் பங்கேற்பதும் குறிப்பிடத்தக்கது.

பதினைந்தாம் நாள்தீர்த்த உற்சவத்தின்பொழுது,மூடிய பல்லக்கில் தளப்பத்து ஓலைகள் நான்கு புறத்திலும் பிடிக்கப்பட, வேற்பெருமான் அழைத்துச் செல்லப்பட்டு, ஆலய உள் வீதியில் பிள்ளையார் வாயிலின் முன் அமைந்த தீர்த்தக் குளத்தில் தீர்த்தமாடி முடிந்ததுடன் வேற்பெருமான் வள்ளி அம்மன் வாசலுக்குக் கொண்டு செல்லப்பட்டு அன்றைய நாள் முழுவதும் வள்ளி அம்மனுடனேயே தங்கியிருந்து பிற்பகல் பல்லக்கில் வைத்து மீண்டும் மூலஸ்தான மண்டபத்தில் கோயில் கொண்ட தெய்வயானை அம்மன் சந்நிதிக்குக் கொண்டு செல்லப்படும்பொழுது, கோபமுற்ற தெய்வானை அம்மன் முருகப் பெருமானை ஏற்க மறுத்த வரலாற்றை விளக்கும் வகையில் அன்றைய மாலை மௌனத் திருவிழா என்று அழைக்கப் படும் ஊடற் திருவிழா நடைபெறும். இதில் ஐயரின் தூதுடன் அந்த ஊடல் உற்சவம் நிறைவுக்கு வந்து மீண்டும் வேற்பெருமான் தெய்வானை அம்மன் கோயில் கொண்ட மூலஸ்தான மண்டபத்தில் சேர்க்கப்படுவார். அதனைத் தொடர்ந்து சந்நிதியின் வருடாந்த மகோற்சவம் நிறைவுக்கு வரும்.

### பூக்காரரின் தொண்டு

திருவிழாக்காலங்களில் சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்து வரும் ஆண்கள் கங்கையில் நீராடி தோய்த்து உலர்ந்த வேட்டி அணிந்து, ஆசார சீலராக ஆலயத்திற்கு வருகை தந்து ஐயரிடம் இருந்து விசேட தீர்த்தம் அருந்தி ஆலயத்திலேயே தங்கியிருந்து தொண்டு செய்யும் மரபு காலம் காலமாக இருந்து வருகின்றது. உற்சவகாலத்தின் பதினைந்து நாட்களும் ஆசார சீலராக இருந்து தொண்டுகளைப் புரிந்து வருவர். இவ்வாறான பூத்தொண்டு புரிந்து வருவது வேறு எந்த ஒரு ஆலயத்திலும் இல்லாத ஒரு மரபாகும். இப்பூக்காரர்கள் மருதர் கதிர்காமரின் பரம்பரையில் வந்த தொண்டர்களே. உற்சவத்தின் போது சுவாமியை மலர்மாலைகளால் அலங்காரம் செய்வதும் இத்தொண்டர்களே. இவர்கள் இத்திருவிழாக்காலங்களில் விரதமிருந்து சந்நிதியானுக்கு வேண்டிய சகல தொண்டுகளும் செய்வார்கள். ஆலயத்தில் கொடுக்கப்படும் உணவுகளை விட வேறெந்த உணவுகளையும் திருவிழாக் காலங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணமாட்டார்கள். இவர்களுக்கும் ஏனைய விளக்கெடுத்துத் தொண்டு செய்யும் பெண்களுக்குமாகவே தீர்த்த உற்சவத்திற்கு மறுநாள் "பூத் திருவிழா" என அழைக்கப்படும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

**சந்நிதியின் நேர்த்திக்கடன்கள்**

தமிழர் பண்பாட்டில் நேர்த்திக் கடன்கள் வைப்பதும், அதனை நிறைவேற்றி வைப்பதும் தொன்று தொட்டு இருந்துவரும் மரபாகும். அந்த வகையில் இந்து ஆலயங்களில் இவ்வாறான நேர்த்திக் கடன்கள் இருந்த போதிலும், அதிக அளவில் முருகன் சந்நிதிகளிலேயே நேர்த்திக் கடன்கள் அதிகளவில் இடம் பெறுவதைக் காணலாம். அந்த வகையில் செல்வச் சந்நிதி ஆலயத்தில் பல்வேறு வகையான நேர்த்திக் கடன்களை முருக பக்தர்கள் நிறைவேற்றி வந்தாலும், சில நேர்த்திக் கடன்கள் மெய் சிலிர்க்க வைக்கும் வகையில் இருப்பதையும் காணமுடிகின்றது. பொதுவாக செல்வச் சந்நிதியில் பல்வேறு முறைகளில் நேர்த்திக்கடனை செய்து வருகின்றனர்.

1. காவடி எடுத்தல் - மயில் இறகுக் காவடி, தூக்குக் காவடி, துலா காவடி, பாற்காவடி, பறவைக் காவடி கரும்புக் காவடி போன்ற பல வகையான காவடிகளை எடுத்து தமது நேர்த்திகளை நிறைவேற்றுகின்றனர். காவடி முருக வழிபாட்டோடு தொன்றுதொட்டு இடம்பெற்று வரும் ஒரு நேர்த்திக் கடனாகும். முருகன் குறிஞ்சிக் கடவுளாக மலைகளிலேயே கோயில் கொண்டு அருள் பாலிப்பதனால், தோளில் காவுதடி வைத்து இரு பக்க நுனியிலும் பாற்குடத்தைக் கட்டி காவிச் சென்று வழிபட்டதால், காவுதடி பின்னர் காவடியாக மருவியதாகப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடுவார்.
2. அன்னப்பால் பருக்குதல் - குழந்தைகளுக்கு முதன் முதலில் அன்னம் கொடுக்கத் தொடங்கு முன் ஆலய வாசலில் ஐயர் மூலம் அமுதை பிள்ளையின் வாயில் ஊட்டுவிப்பார்கள்.
3. பால் குடம் எடுத்தல்
4. முடிக் காணிக்கை என்று கூறப்படும் முடி இறக்குதல் (மொட்டை அடித்தல்) சந்நிதி ஆலயச் சூழலில் தொன்று தொட்டு மேற்கொள்ளப்படும் ஒரு நேர்த்திக் கடனாகக் காணப்படுகின்றது. இது சிறுவர், சிறுமிகளில் மட்டுமல்லாது வளர்ந்தவர்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. முடியை வெட்டி மொட்டை அடித்தபின்னர் சந்நிதியின் ஆற்றங்கரையில் நீராடிய பின்னர், வள்ளி அம்மன் வாயிலில் உள்ள மாணிக்க கங்கைக் குளத்தில் நீரில் நீராடிய பின்னர் கோயிலுக்குள் சென்று தமது காணிக்கையைச் செலுத்துவார்கள்.
5. அன்னதானம் வழங்குதல்.
6. வேலவனின் சந்நிதானத்தில் பிள்ளையை விற்று வாங்குதல்
7. தாக சாந்திக்கு தண்ணீர்ப் பந்தல் அமைத்து மோர்த் தண்ணீர், சர்க்கரைத் தண்ணீர், தேசிக்காய் நீர், சர்பத் போன்றவற்றை கோயில் வாசலிலும் கோயிலுக்கு அண்மித்த இடங்களிலும் நடந்து வரும் வரும் அடியார்களுக்கும் ஏனைய மக்களுக்கும் வழங்குகின்றனர்
8. காவடி மற்றும் பால் குடம் எடுத்து நேர்த்திக் கடன்களைச் செய்பவர்கள் கன்னத்திலும், முதுகிலும், நாக்கிலும் வேலும் செடில்களும் குத்தி தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.
9. வேலவனுக்குப் பிடித்த உணவாக வள்ளியினால் வழங்கப்பட்ட தேனும் தினைமாவும், நெய்யும் கலந்து எரிக்கப்பட்ட மாவிளக்குகளை வள்ளி அம்மன் வாயிலில் நெய்வேத்தியமாகப் படைப்பர்.
10. தீச்சட்டி எடுத்து வீதிவலம் வருதல். காலில் முள்மிதியடியடன் வீதி வலம் வருதல்.
11. தமது உடலில் இரும்புக் கம்பிகளினால் அடித்து முருகனின் மீது தமது பக்தி வைராக்கியத் தைக் காட்டுபவர்களையும் சந்நிதிச் சூழலில் காணலாம்.
12. உற்சவ காலங்களில் பருவமடையாத பெண்கள் பதினைந்து நாட்களிலும் ஆலயச் சூழலிலேயே தங்கி இருந்து விளக்கெடுத்தும், ஆலயச் சூழலைக் கூட்டித் துப்பரவு செய்தும் புரியும் தொண்டுகள்.
13. அங்கப்பிரதட்சணையும், அடி அழிதலும் - ஆண்கள் சந்நிதியின் உள்வீதியையும், வெளிவீதியை யும் சுற்றி உருண்டு வரும் பொழுது, முருகனின் திரு நாமத்தைக் கூறிய படி உருண்டு கொண்டு வருவார்கள். பெண்கள் அடி அழிப்பார்கள். ஏனைய ஆலயங்களில் இந்த நேர்த்திக் கடன்கள் உற்சவ காலங்களில் மட்டும் இடம் பெற்றபோதும், சந்நிதியில் இந்த நேர்த்திக் கடன்களை சாதாரண பூசை நாட்களிலும் காணலாம்.

**முருகனின் பிரசாதங்களும் நைவேத்தியங்களும்**

சைவஆசாரத்தோடு ஆலம் இலையில் பச்சரிசிப் பொங்கலும் பயற்றங்கறியும் படைக்கும் வழக்கம் செல்வச்சந்நிதி கோயிலில் நித்திய பூசைகள் மற்றும் திருவிழாக் காலங்களில் நடைபெறுகின்றது. இதனையே மருந்து என அடியவர்கள் அழைப்பர். அதேவேளை பூசை முடிந்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்களுக்கு திருநீறு, தீர்த்தம், மருந்து என மூவகைப் பிரசாதங்கள் பூசகரால் வழங்கப்படுகின்றன.

கதிர்காமத் திருவிழா ஆரம்பமாவதற்கு முன்னர் கதிர்காமக் கொடியேற்றத்திற்கு செல்வச் சந்நிதியில் இருந்து வேல் அனுப்பும் வைபவம் இடம் பெறும். அப்பொழுது முருகப் பெருமானுக்கு நைவேத்தியமாகப் படைக்கப்பட்ட உளுத்தம் பிட்டு. அந்தப் பூசைகளில் கலந்து கொண்ட அடியவர்கள் அனைவருக்கும் பிரசாதமாக வழங்கப்படும்.

அதேபோன்று கதிர்காம உற்சவத்தின் இறுதி நாளான தீர்த்தம் முடிவடைந்ததும் மீண்டும் அந்த வேல் சந்நிதிக்கே திரும்ப வருவதாக ஒரு ஐதீகம் நிலவுகின்றது. அன்றைய தினம் கதிர்காமத்தில் இருந்து களைப்புற்று வருகின்ற வேலவனுக்கு, அவரை வரவேற்கும் வகையில், பயற்றம் துவைய லும் இளநீரும் படைத்து, அங்கே கலந்து கொண்ட அடியவர்களுக்கும் இவை வழங்கப்படுகின்றது.

அதேபோன்று ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் செல்வச் சந்நிதியில் கோயில் கொண்டிருக்கும் அத்தனை மூலஸ்தான வேற்பெருமான் உட்பட அனைத்துப் பரிவார மூர்த்திகளுக்கும் சுத்தமான எள்ளில் இருந்து பெறப்பட்ட நல்லெண்ணெய் கொண்டு திருமுழுக்குப் பூசை இடம்பெற்று பிட்டு நெய்வேத்தியமாகப் படைக்கப்பட்டு அதனைப் பக்தர்களுக்கும் வழங்குகின்றனர்.

**அன்னதான மடங்கள்:**

இவ்வாலயச் சூழலில் யுத்தகாலத்திற்கு முன்னர் 55 வரையான அன்னதான மடங்கள் இருந்திருக் கின்றன. பின்னர் அவற்றில் பெரும்பாலானவை யுத்தத்தினால் அழிக்கப்பட்ட நிலையில் தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ள சுமார் பதினைந்து மடங்கள் மூலம் தினமும் அன்னதானம் வழங்கப்படுவதால், "அன்னதானக் கந்தன்" என்றும், காவடிகளை எடுத்து நேர்த்திக் கடன்களைச் செய்து வருவதால், "காவடிக் கந்தன்" என்றும், கல்லோடைக் கந்தன் என்றும், ஆற்றங்கரையான் என்றும் பல்வேறு நாமங்களால் சந்நிதி முருகன் அழைக்கப்படுகின்றார். இவற்றில் அடியவர்கள் தம் நேர்த்தி மூலம் அன்னத்தை தானமாக கொடுக்கின்றனர் தீராத நோய்களை தீர்ப்பதில் கல்லோடைக் கந்தன் பெரும் வைத்தியராக காட்சியளிக் கின்றார். நோயுற்றவர்கள் இங்கு வந்து தொண்டைமானாற்றில் மூழ்கி பிறவிப்பிணியை அவன் கழல் பற்றி கசிந்துருகிக் கேட்க அவர்களது தீராத்துன்பங்களை தீர்த்து வைக்கின்றார். வைத்தியர்களால் கைவிட்டு மருந்தால் மாற்றமுடியாத நோயை தன்திருவருளினால் மாற்றியதை கண்ணுற்ற பக்தி சிரோன் மணி வேதநாயகம் பிள்ளை ஆயுள் வைத்தியர் எல்லாம் கைவிட்டு மாறாத வருநோய்கள் நினதருளாம் மருந்தாற் போக்கி ஆனந்தமுறுகின்றன என்பார். இன்று இயங்கும் அன்னதான மடங்களில் அன்னதானப் பணிகளுக்கு மேலதிகமாக கல்விச் சேவை, மருத்துவச் சேவை, சஞ்சிகை வெளியீடு, ஆன்மீகப் பேருரைகள், குருபூசைகள் போன்ற பல பயனுள்ள பணிகளை மேற் கொண்டுவருகின்ற நிறுவனமாக சந்நிதியான் ஆச்சிரமம் விளங்குகின்றது.

இவ்வாலயத்தைச் சூழ தற்போது 15க்கும் குறைவான மடங்கள் மூலம் ஆயைத்திற்கு வருகை தரும் அடியார்க்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது. இவற்றுள் குறிப்பாகப் பின்வரும் மடங்களைக் குறிப்பிடலாம்:

1. தகர மடம். (ஆலயத்தின் வடக்கு பக்கத்தில் உள்ளது)
2. வைத்திலிங்கம் மடம் (ஆலயத்தின் வடக்கு பக்கத்தில்)
3. செல்லையா ஐயர் மடம் (ஆலயத்தின் கிழக்கு பக்கத்தில்) தற்பொழுது திருமண மண்டபமும் சேர்த்து அழகிய முறையில் அமைக்கப்பட்டுளளது.
4. கந்தசாமி ஐயர் மடம் (ஆலயத்தின் தெற்கு பக்கத்தில்)
5. சந்நிதியான் ஆச்சிரமம். (ஆலயத்தின் கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ளது.)
6. அடியார் மடம். (ஆலயத்தின் கிழக்கு பக்கத்தில்)
7. அரசம்மா மடம். (ஆலயத்தின் கிழக்கு பக்கத்தில்)
8. வள்ளி தெய்வானை மணிமண்டபம் - மணியம் மடம். (ஆலயத்தின் தெற்கு பக்கத்தில்)
9. வல்லிபுரம் மடம். (ஆலயத்தின் தென்கிழக்கு பக்கத்தில்)
10. அமுதசுரபி (ஆலயத்தின் தென்கிழக்கு பக்கத்தில்)
11. சிவானந்த ஐயர் மடம்
12. கந்தன் கருணை மடம்
13. சந்நிதியான் வேதாந்த ஆச்சிரம மடம்

**சந்நிதியின் சித்தர்கள் பரம்பரை**

சிவபூமி என்று திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட இலங்கையிலே சித்தர் பரம்பரை ஒன்று இருந்திருக் கின்றது. சித்தர்கள் எனப்படுவோர் உலகவாழ்வின்போதே சித்தி கைவரப்பெற்றவர்கள். சீவன் முத்தர்கள். கடவுளைக் காண முனைவோர் என்றும் கண்டு தெளிந்தோர் சித்தர்கள் என்றும் தேவாரம் பிரித்துக் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆன்மீக நெறியாளர்கள் சித்தர்கள் என்று கலைக்களஞ்சியம் கூறுகின்றது.

இலங்கையிலே இத்தகைய சீடர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதை வரலாற்று ரீதியாகவும், சில வாய் வழி அற்புதங்கள் மூலமாகவும்,பாடல்கள் மூலமாகவும் அறியமுடிகின்றது. கி.பி.18ம் 19ம் 20ஆம் நூற்றாண்டுகளிலே கிடைக்கப்பெற்ற சித்தர் பரம்பரை பற்றிப் பார்க்கும்போது இலங்கையையும் தமிழகத்தையும் இணைத்த ஒரு தொடர்பு காணப்படுவதை அறிய முடிகின்றது. சித்தர் மரபும் தமிழ் மக்களிடையே அகம் பற்றிய ஒரு பார்வையை ஏற்படுத்தக் காரணமாயமைந்தது.

அவ்வாறான ஒரு சித்தர் பரம்பரை தொண்டைமானாறு செல்வச் சந்நிதியில் இருந்து வந்திரு கின்றது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் யுத்தத்திற்கு முன்னர்,ஆற்றங்கரை ஓரமாக இருந்து அன்னதானப் பணிகளை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வந்த ஆனந்தா ஆச்சிரமத்தில் வாழ்ந்த மயில்வாகனம் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் பல சித்தர்களும், சுவாமிகளும் வாழ்ந்திருக் கின்றார்கள். அவர்களில் ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்தவர்களும் சந்நிதிச் சூழலில் வாழ்ந்து பல சித்துக்களைக் கொண்டிருந்த அவரைத் தனது அருகில் வைத்தே பல சித்துக்களைப் புரிய வைத்தமை சந்நிதிச் செல்வத்தின் மகிமையைக் காட்டு கின்றது.

இலங்கையின் முதலாவது அரசியல் யாப்பைத் தயாரித்த, முன்னாள் பிரித்தானிய ஆளுநராக இருந்த சோல்பரிப் பிரபுவின் மகனான ஜே.எச்.இராம்ஸ்பொதம் (James Ramsbotham) என்ற இயற்பெயரைக் கொண்ட ஆனைக்குட்டிச் சுவாமிகள் அல்லது சாந்தசுவாமி என அழைக்கப்பட்ட பிரித்தானியர், தந்தை இலங்கையில் இருந்தகாலத்தில், இலங்கையிலேயே பிறந்து,சந்நிதி முருகன் மீது கொண்ட ஆழமான பக்தியின் காரணமாக இங்கேயே நீண்ட காலமாக வாழ்ந்திருக்கின்றார்.

ஜேர்மன் நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட பீற்றர் யேச்சிம் ஸ்கொன்பெலட் என்னும் இயற் பெயரைக் கொண்ட கௌரிபாலாவை பல்லாயிரம் மைல்களில் இருந்து அழைத்து வந்த முருகன் அவரைத் தனக்கு அருகில் வைத்திருந்து, தியானமூலம் வழிபாடு செய்யவைத்துப் பல சித்துக்களை மேற்கொள்ள வைத்தார். இவ்வாறு சந்நிதி வேலவனின் சக்தியால் கவரப்பட்ட கௌரிபாலா சுவாமிகள் ஆனந்தா ஆச்சிரமத்திற்கு அருகாமையில் பர்ணசாலை அமைத்து அங்கேயே வாழ்ந்து வந்தார்.

அதேபோன்று கொழும்புத்துறையில் வாழ்ந்த யோகர் சுவாமிகள் ஒரு தடவை சந்நிதியானைத் தரிசிப்ப தற்காகக் காரில் வந்து,அதில் இருந்தும் இறங்க முயற்சித்த போது, உடனடியாகக் கால்களை மீண்டும் தூக்கிய சுவாமிகள், "என்னால் இந்த மண்ணிலே காலை வைக்க முடியவில்லை...எங்கு பார்த்தாலும் சிவலிங்கமாகவே தெரிகின்றது." என்று கூறி ஆலயச் சூழலுக்கு வெளியில் சென்று காரை விட்டுவிட்டு வந்து அந்த மண்ணைத் தொட்டு வணங்கினார்.

அண்மையில் எங்களுடைய காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாழ்ந்து பல சித்துக்களைப் புரிந்த முருகேசு சுாமிகள் 1960இல், இல்லற வாழ்வைத் துறந்து,சந்நிதி முருகனின் அடியவராகவே வாழ்ந்து, அடியவர்களை உறவு நிலையிலேயே தொடர்பு கொண்டு ஆசிகளை வழங்குவார். சந்நிதி ஆலயச் சூழலில் வாழ்ந்து பல சித்துக்களைப் புரிந்து 1997ஆம் ஆண்டிலேயே சமாதி அடைந்தார்.

இவர்களைப் போன்று மேலும் தென்னிந்தியாவைச் சேர்ந்த பன்றிக் குட்டிச் சுவாமிகள், அவுஸ்திரேலியா வைச் சேர்ந்த நரிக்குட்டிச் சுவாமிகள், வடமராட்சி அல்வாயைச் சேர்ந்த மௌனகுரு கடவுள் சுவாமிகள், சபாரத்தினம் சுவாமிகள் என அழைக்கப்பட்ட திருவாசக சுவாமிகள், மந்துவிலில் பிறந்த நடராசா சுவாமிகள், அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சடைவரத சுவாமிகள் புங்குடுதீவைச் சேர்ந்த புங்குடுதீவுச் சுவாமிகள், இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்செல்வம் என்ற இயற்பெயரைக் கொண்ட பாபா சுவாமிகள் எனப் பல சித்தர்கள் சந்நிதியான் சூழலில் வாழ்ந்து சந்நிதியின் பெருமைகளை வெளிப்படுததி வந்திருக்கின்றனர்.

**எச்சரிக்கையும், பராக்கும்**

திருவிழாக்காலங்களில் இரவு உற்சவத்தின் பொழுது, முருகப்பெருமான் வீதி வலம் வருகின்றபோது வடக்கு வீதியில் எச்சரிக்கைப் பாடல் பாடுகின்ற மரபு. தொண்டமானாறு செல்வச் சந்நிதியில் காணப்படுகின்றது. இவ்வாறான பாடல் பாடப்படுவதற்கு சிறப்பான காரணமொன்றுள்ளது. அதாவது, முன்னர் செல்வச் சந்நிதி முருகன் ஆலய வீதி அடர்ந்த காட்டுப் பகுதியாக இருந்ததாகவும் அவ்வீதி வழி முருகனை அழைத்து வருகின்றபோது முருகனுக்கு எச்சரிக்கை செய்வது போல் இப்பாடல் பாடப்பட்டதாகவும் அறியப்படுகின்றது. அதன் ஒரு பகுதி இதுவாகும்.

"கருணா கரப் பொருளே கணபதியே எச்சரிக்கை கதிராபுரி நகர் மேவிய கந்தா எச்சரீக்கை - அருள் கந்தா எச்சரீக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா செல்நகர் மேவிய கருணா எச்சரீக்கை வந்த துயர் தீர்க்குமெங்கள் வணிகா எச்சரிக்கை வணிகா செட்டிகுமரா கார்த்தி கேசா எச்சரிக்கை வருவார் வருபிணி நீக்கிய முருகா எச்சரிக்கை" என்ற வகையில் இரவுத் திருவிழாவின்பொழுது, வடக்கு வீதியில் முருகன் வருகை தரும்பொழுது, ஆண்களால் பாடப்பட்டு வருகின்றது.

அதேபோன்று சந்நிதியில் பாடப்படும், எச்சரிக்கைப் பாடலைத் தொடர்ந்து, 'பராக்கு' பாடப் படுகின்ற வழக்கமும் நிலவி வருகின்றது. வீதி வலம்வருகின்ற முருகன் இறுதியாக ஆலயத்தினுள் பிரவேசிக்கின்றபோது, முன்னைய காலங்களில் அரசரது வருகையின்போது நடைபெறுவது போன்று பராக்குப் பாடல் இடம்பெறுகின்றது. பின்வரும் பாடல் செல்வச் சந்நிதியில் பாடப்பட்டு வரும்ஒரு பராக்கு வகைப் பாடலாகக் காணப்படுகின்றது.

"தந்திமுகத் தைந்துகரன் தம்பி பராக்கு கந்தர் துணைவந்த ஒற்றைக் கொம்பா பராக்கு கதிரமலை தனில் வந்த கந்தா பராக்கு கனகமணி குஞ்சரிதன் கணவா பராக்கு போக வடிவா யமர்ந்த புலவா பராக்கு புள்ளி மயில் ஏறிவரும் புனிதா பராக்கு..." என அந்தப்பாடல் மிகவும் கம்பீரமான தொனியில் ஆண் பக்தர்களினால் பாடப்பட்டு வருகின்றது.

**சித்திரத் தேரை எரித்த அநீதிக்கு ருத்திரமூர்த்தியாகும் சந்நிதி வேலவன்**

சந்நிதி ஆலயத்திற்கான மிகவும் பிரமாண்டமான சித்தரத்தேர் 1978 இல் வீதி வலம் வர ஆயத்தமாகிய காலப் பகுதியில் இந்தத் தேருக்கான தேர்வடம் கூட கடலிலேயே வந்து சேர்ந்த அற்புதம் இன்றும் அடியார்களின் மனதிலே ஆழப்பதிந்த ஒரு அதிசயமாக உள்ளது. இவ்வளவு பெருமை பொருந்திய செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவின் போது அழகிய கம்பீரமான சித்திரத் தேரில் வேற்பெருமான் வீதி வலம் வருவதைக் கண்டு களிக்க நாட்டின் பல பாகங்களிலும் இருந்தும், புலம் பெயர் நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் ஒன்று கூடுவர். 1980களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஶ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஆலயத்தின் மேற்குப் புறமாக பலாலி இராணுவ முகாம் படைத் தளமும், கிழக்கே வல்வெட்டித்துறை இராணுவமும் அமைக்கப்பட் டிருந்ததால், ஆலயத்தின் பகுதிகளில் அடிக்கடி இராணுவத்தின் சுற்றி வளைப்புகளும், பொதுமக்கள் மீதான தாக்குதல்களும் இடம் பெற்று வந்ததுடன் ஆலயமும் சேதமாக்கப்பட்டது, இராணுவத்தினரின் அச்சுறுத்தலினால், அந்தப் பிரதேசத்தில் இருந்த ஆலயத்தின் ஐயர் பரம்பரையினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழத் தொடங்கியதால் செல்வச் சந்நிதி ஆலயம் தனித்து விடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மயான பூமியாகக் காணப்பட்ட தொண்டைமானாற்றுப் பிரதேசத்தில் பொது மக்கள் எவருமே இல்லாத நேரத்தில், 1985 ஆம் ஆண்டு பெற்றோல், மண்ணெண்ணை பரல்களுடன் செல்வச் சந்நிதியின் ஆலயப் பகுதிக்கு மதுபோதையில் வருகை தந்த ஆறு சிறலங்கா இராணுவத் தினரால் அங்கே கம்பீரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அழகிய சித்திரத்தேரின் மீது பெற்றோலை ஊற்றி தீவைத்துக் கொழுத்தினர். இந்தத் தேர் யாழ். குடாநாட்டிலேயே மிகப் பெரிய தேர் என்று பெருமையுடன் பேசப்பட்ட இந்த அழகிய சித்திரத் தேர் பெரும் தீச்சுவாலையுடன் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. 1985 இல் சந்நிதி முருகனின் சித்திரத் தேரை எரித்த பொழுது, அதில் ஆறு ஶ்ரீலங்கா இராணுவத்தினர் பங்குபற்றிய தாகச் சொல்லப்பட்டது. பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அதே ஆலயப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் அந்தத் தேர் எரிப்பில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதால் அந்த அதிர்ச்சியில் அங்கிருந்து தப்பிச் சென்ற மற்றைய இராணுவச் சிப்பாய் யாழ்ப்பாணத்தை விட்டே வெளியேறி, பின்னர் கதிர்காமம் சென்று தனது பிராயச்சித்தமாக காவடி எடுத்ததாகத் தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்று எழுதியிருந்தது.

அதன் பின்னர் பல வருடங்களின் பின்னர் பொதுமக்கள் மற்றும் முன்னாள் அமைச்சராக இருந்த திரு.தி. மகேஸ்வரன் ஆகியோரின் நிதி உதவியில் புதிதாக இரண்டு சித்திரத் தேர்கள் அமைக்கப்பட்டன. தற்பொழுது புதிதாக அமைக்கப்பட்ட இரண்டு சித்திரத் தேர்களில் ஒன்றில் மூல மூர்த்தியான வேலும், மற்றையதில் ஆறுமுகசாமியும் வீதியுலா வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

**சந்நிதியின் மீதான இலக்கியங்கள்:**

சந்நிதி முருகன் மீது எழுந்த இலக்கியங்களாகப் பின்வரும் நூல்களைக் குறிப்பிடலாம். பெரும் பாலானவை பதிகங்களாகவோ, பஜனைப் பாடல்கள் கொண்ட நூல்களாகவே காணப்படுகின்றன.

செல்வச் சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி, திருச்சந்நிதித்தோத்திரமாலை - இயற்றமிழ் போதகாசிரியர் புலவர் வல்வை.ச.வைத்தியலிங்கம் பிள்ளை (1843-1901)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச் சந்நிதி வேற்பெருமான் தோத்திரப்பாமாலை- கரவெட்டி பண்டிதர் சைவப்புலவர் த.பொ. கார்த்திகேசு

சந்நிதிக் கந்தர் சதகம்- பண்டிதர் இ.நமச்சிவாயம் என்பவராலும்.

சந்நிதிப் பதிகம் - தொண்டைமானாறு சி.ஆ.வேதநாயகம்பிள்ளை

செல்வச் சந்நிதி அகவல் - தொண்டைமானாறு வைத்தியர் ஆண்டியப்பன்

தொண்டைமானாறும்,செல்வச் சந்நிதியும் (1985) - செ. நாகலிங்கம்

ஆற்றங்கரையான்- பேராசிரியர் அ.சண்முகதாஸ்

சந்நிதிச் செல்வம் - வல்வை ந.அனந்தராஜ் (1999)-

ஆற்றங்கரை வேலவன் - வ.ஆ.அதிரூபசிங்கம் (2011)

சந்நிதியான் அற்புதங்கள் (1-6 பாகங்கள்)- ந.அரியரத்தினம்

சந்நிதியின் அன்னதான மடங்கள் - ந.அரியரத்தினம் (2016)

ஞானச்சுடர் - சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளியிடப் பட்டு வரும் மாத சஞ்சிகை.

**முடிவுரை**

ஈழத்தில் முருக வழிபாடானது பொதுவாக ஒரு கிராமிய வழிபாட்டு முறையாக இருந்த போதிலும், பெரும்பாலான கிராமங்களில் ஆகமம் சாராத ஒரு வழிபாட்டு முறையாகவே கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஈழத்து மக்களிடையே மிகப் பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ள செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் ஆகமம் சாராத ஒரு வழிபாட்டு முறைக்கு முன்னுதாரணமாகக் காணப்படுவது தமிழ் பண்பாட்டியலின் ஒரு முக்கிய அம்சமாகும். இன்றும் செல்வச்சந்நிதி ஆலயத்தின் பூசைகள் நடைபெறும்போது பறைமேளம் அடிக்கும் வழக்கமானது தமிழ்மக்களின் தொன்மையான ஆகமம் சாராத வழிபாட்டின் தொடர்ச்சியாக இதனைக் கொள்ளலாம்.

ஆனால் செல்வச் சந்நிதியில் முருக வழிபாடானது, தனிமனித உறவு கலந்த ஒரு தோழமை யடனான பக்தி மார்க்கமாகக் காணப்படுவதால், எந்த நேரத்திலும் உரிமையுடன் சென்று தமது தேவைகளை"அதட்டிக்" கேட்கின்ற ஒரு வழிபாட்டு உறவு முறையைச் செல்வச் சந்நிதியில் தான் காணலாம். அந்த வகையிலேயே இவ்வாலயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. சந்நிதி முருக வழிபாடு தொடர்பான பங்கினையும், வழிபாட்டு முறைகளையும் இக்கட்டுரை மூலம் ஆவணப்படுத்தியுள்ள போதும், செல்வச் சந்நிதி முருக வழிபாடு என்பது தனியான ஒரு ஆய்வாக மேற்கொள்ளப்படவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்

– திரு. எஸ். சுதாகரன் –

ஈழத்திரு நாட்டின் வடபால், யாழ்ப்பாணநகரத்திலிருந்து பதினைந்து கிலோமீற்றர் தொலைவில் காங்கேசந்துறை வீதியில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் அமைந்துள்ளது. ஈழத்து இந்துசமயப் பாரம்பரியத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் வரலாறும் தொன்மையும் முக்கியத்து வமுடையவை.

ஈழத்திலே சிவவழிபாடும், முருகவழிபாடும் தொன்மையுடையனவாகக் காணப்படுகின்றன. தொண்டமானாறு செல்வச்சந்நிதி, பொலிகண்டி கந்தவனக்கடவை, நல்லூர்க் கந்தசுவாமி கோயில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் போன்ற பல பழைமையான ஆலயங்கள் யாழ்ப்பாணத்தில் முருக வழிபாட்டின் தொன்மையினைப் பறைசாற்றுபவையாக விளங்குகின்றன. அவ்வகையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சோழ அரச பரம்பரையாற் கட்டி வளர்க்கப்பட்டு இன்றும் இந்துக்களால் சீரோடும் சிறப்போடும் போற்றப்படும் ஆலயமாக உள்ளது. மாவைக் கந்தனை அபிஷேகக் கந்தன் என அழைக்கும் மரபும் உண்டு.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு மாருதப்புரவீகவல்லி என்ற சோழ இளவரசிக்கும் இடையில் வரலாற்றுத் தொடர்பு உண்டென்பது ஐதீகம். இத்தொடர்பே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பிரசித்தி பெறக் காரண–மாகவும் அமைந்தது எனலாம். ஆலய வரலாற்றிலே புனை–கதைகளும், பிற்காலத்தில் சேர்க்கப்பட்ட செவிவழிக் கதைகளும் இணைக்கப் பட்டாலும் மாவிட்டபுரப் பதிக்கும் சோழர்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருந்தமை பற்றி நெடுங்கால மரபுண்டு.

ஆரம்பகாலத்தில் மாவிட்டபுரம் என்பது கோயிற்கடவை என்றே அழைக்கப்பட்டது. சோழநாட்டிலிருந்து மாருதப்புரவீக வல்லி என்னும் அரச கன்னிகை தீராத குன்ம நோயினால் பீடிக்கப்பட்டு குதிரைமுகம் பெற்றவளாகக் காணப்பட்டாள். அவளது நோயினை மருந்துகளால் குணப்படுத்த முடியாது எனவும் தீர்த்த யாத்திரை மூலமே இந்நோயைக் குணப்படுத்த முடியும் எனவும் அறிந்தாள். இதனால் அவள் தன் தோழிக–ளுடன் புனித தீர்த்தங்களில் நீராடி வரும் வேளையில் சாந்தலிங்க அடிகளார் எனும் சந்நியாசியைச் சந்தித்தாள். அவள் நிலைகண்ட சாந்தலிங்க அடிகளார் “ இலங்கையின் வடபால் மலைச்சாரலிலே சமுத்திரத்தோடு சங்கமமாகும் ‘அந்தர்வாவி’ எனப் பெயர் பெறும் உத்தம நன்னீர்த் தீர்த்தம் உள்ளது. அங்கு சென்று வழிபாடியற்றினால் நோய் நீங்கும்” எனக் கூறினார். அதன் படி தன் தோழிகளுடன் கீரிமலை வந்திறங்கினாள்.

கீரிமலையில் வந்திறங்கி குமாரத்திபள்ளம் என்னுமிடத்திற் பாளயமிட்டு இருந்து அந்தர்வாவிக்குச் சென்று தீர்த்தமாடி வரலானாள். தேகம் விகாரமடைந்தமையால் பிறர் கா–ணாது நீராடச் செல்ல நினைத்துத் தான் தங்கியிருந்த குமாரத்திபள்ளத்திலிருந்து தீர்த்தக் கரைவரை சுரங்கப்பாதை வெட்டுவித்து அதன் வழியே சென்றுவரலானாள். 1968ஆம் ஆண்டில் சீமெந்து தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக் கல் அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கப் பாதை இதுவாக இருக்கலாம். ஆயினும் இவ்விடத்தில் ஆய்வுகள் எவையும் மேற்கொள்ளப்படாமையால் சுரங்கப்பாதை தொடர்பான தகவலும் இல்லாது போய்விட்டது.

மாருதப்புரவல்லி வழிபட்டுவருங்கால் அவளது நோய் நீங்கப்பெற்றது. நோயிலிருந்து விடுபட்ட மாருதப்புரவல்லி அவ்விடத்திலேயே சில காலம் தங்கியிருந்தாள். ஒருநாள் வழக்கம் போல கோயிற்கடவைப் பகுதியைச் சுற்றிப் பார்க்கச்சென்ற வேளை ஆலமரத்தடி நிழலில் வெள்ளி வேலாயுதத்தை வைத்துச் சடையன் என்பவர் வழிபாடாற்றிக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருதப்புரவல்லி (மாருதப்புரவீகவல்லி) வேலவரை வணங்கிப் பெரியவரைப் பணிந்து இக்கோயில் எழுந்த வரலாறு யாது என வினாவினாள். அதற்குச் சடையனார் இப்பகுதி கோயிற்கடவை எனப்படுகின்றது. தொன்றுதொட்டு இவ்விடத்தில் வெள்ளி வேலாயுதத்தை வைத்துப் பரம்பரை பரம்பரையாக வழிபட்டு வருகின்றோம் எனக் கூறினார்.

மாருதப்புரவல்லி தான் வந்த காரணத்தையும் தனது நோய் நீங்கப் பெற்றமையையும் கூறி வேலவருக்குக் கோயில் அமைக்க விரும்புவதாகவும் அப்பெரியவரிடம் கூறினாள். சடையனாரும் மனமகிழ்ந்து கோயிற்கடவையில் ஆலயம் அமைக்க அனுமதியளித்தார். இளவரசி தனது தந்தையின் அனுமதியுடன் கோயில் கட்டுவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டாள். ஆலயம் அமைப்பதற்கு சோழ மன்னர் சிற்பாசாரிகளையும் ஏனைய வல்லுனர்களையும் வேண்டிய பொருட்களையும் கட்டட வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு தளபதி மகாவட்டம் என்பவனையும் அனுப்பி வைத்ததுடன் உத்தமோத்தமமான விசேடங்களைக் கொண்டதும் உரிய இலச்சினைகளைக் கொண்டதுமான விக்கிரகங்களைச் சிற்பசாத்திர விதிகளுக்கு ஏற்பச் செய்வித்து அனுப்பி வைத்தார். கோயில் நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்கும் பூஜைகள் செய்வதற்கும் தில்லை மூவாயிரவருள் ஒருவரான பெரியமனத்துளார் என்பவரையும் அனுப்பி வைத்தார்.

மூலமூர்த்தியாக கருங்கல்லினாற் செய்யப்பட்ட மயிலில் வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமான் நின்ற திருக் கோலத்திலும், பரிவார மூர்த்திகளாக கருங்கல்லினாற் செய்யப்பட்ட விநாயகரும் வைரவரும் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். உற்சவ மூர்த்தியாகப் பஞ்சலோகத்தினாற் செய்யப்பட்ட வள்ளிதேவசேனா சமேத முத்துக்குமார சுவாமி விளங்கினார். சுற்றுமதிலும் கிழக்கிலும் மேற்கிலும் கோபுரங்களும் அமைக்கப்பட்டன.

ஆலய உட்பிரகாரத்தில் திருமஞ்சனக் கிணறும் வழிபடுவோரின் வசதிக்காகக் கோபுர வாயில்களுக்கு அண்மையில் இரு கிணறுகளும் அமைக்கப்பட்டன. கோயிற் பரிபாலனத்திற்கு கோயிலின் தெற்குப் பக்கத்தில் ஒரு வீடும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது. கோயிலுக்கு வேண்டிய இசை விற்பன்னர்கள், கலைஞர்கள், மாலை கட்டுவோர், வெள்ளைகட்டுவோர் போன்றோரும் சோழ நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டனர். திருப்பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு ஆனி மாதத்து உத்தர நாளில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

ஆலயம் அமைந்துள்ள பகுதி ஆரம்ப காலத்தில் கோயிற்கடவை என்றே அழைக்கப்பட்டு வந்தது. காசாத்தறை, திருத்தம்பலேஸ்வரம், குமாரத்திபள்ளம் ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதியாகக் கோயிற்கடவை விளங்கியது. கோயிற் கடவை என்ற பெயர் மாவிட்டபுரம் என அழைக்கப்பட மாருதப்புரவல்லியின் நோய் நீக்கமே காரணமாக அமைந்துள்ளது. அதாவது மா–விட்டபுரம் என்பது குதிரைமுகம் (மா–குதிரை) நீங்கிய இடம் எனவும் பெருநோய் (மா–பெரிய) நீங்கிய இடம் எனவும் பொருள் கொள்ளலாம். "கீரிமா மலையிலாடினள் தீர்த்தம் அம்முகமகன்றது அன்னதால் மாவிட்டபுரம்" என வையாபாடல் குறிப்பிடுகின்றது. மேலும் மாருதப்புரவல்லிக்காக மகாவட்டன் என்ற தளபதி இக்கோயிலை நிர்மாணித்தான். இதனால் 'மாவிட்டன்புரம்' என்ற பெயர் மருவி மாவிட்டபுரம் என்பதானது என்றும் கூறப்படுகின்றன.

"கண்டன கண்ட மார்கடன் மாவை" என உயர்வாகக் கருதப்படும் முத்தும் மணியும் பவளமுமாகிய செல்வம் நிறைந்த கடல் சூழ்ந்தது மாவைப் பதியாகும். கண்டகி தீர்த்தம், அந்தர் வாவி தீர்த்தம், காங்கேசந்துறை துறைமுகம் போன்றவை மாவிட்டபுரத்திற்கு கடல் எல்லைகளாகக் கூறப்படுகின்றது.

பதினாறாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆட்சியில் இந்து ஆலயங்கள் இடித்தழிக்கப்பட்டன. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. இக்கோயிலும் இடிபாட்டிற்குள்ளானது. கோயில் அந்தணர்கள் மூலவர் விக்கிரகம், பிற விக்கிரகங்கள், குத்துவிளக்குகள், தீபங்கள் போன்றவற்றைக் கயிற்றிலே கட்டித் திருமஞ்சனக் கிணற்றுள் இறக்கிப் பாதுகாப்போடு மூடிவைத்தனர். இதன் அடையாளமாக கிணற்றின் வடக்குப் பக்கத்தில் காஞ்சிமாவை நாட்டி வைத்தனர். இம்மரமே கோயிலின் தலவிருட்சமாகத் திகழ்கின்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் கற்களைக் கொண்டு கத்தோலிக்கத் தேவாலயங்கள் பல கட்டப்பட்டன. ஒல்லாந்தர் காலத்திலும் இக்கோயில் அழிவுக்குள்ளானது. ஆங்கிலேயர் ஆட்சியில் சமயச் சுதந்திரம் ஓரளவு வழங்கப்பட்டது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் மீள்கட்டுமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. குமாரசாமிக்குருக்கள், சபாபதிக் குருக்கள் என்போரைப் பரிபாலகர்களாகக் கொண்டு காரைக்குடி ஸ்தபதிகளால் ஆகமவிதிப்படி கட்டப்பட்டது.

திருமஞ்சனக் கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூலமூர்த்தி, பரிவார மூர்த்திகளான விநாயகர், வைரவர், உற்சவ மூர்த்திகளான முத்துக்குமார சுவாமிகள், சண்முகன் ஆகியவை கண்டெடுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன் மகாலஷ்மி, சண்டேஸ்வரர் பரிவார மூர்த்திகளாகவும் புதிதாக அமைக்கப்பட்டனர். மயூரம், பலிபீடம், மணிக்கோபுரம், செப்புக் கொடித்தம்பமும் புதிதாக அமைக்கப்பட்டன. ஆலயம் முன்னரிலும் புதுப் பொலிவுடன் விளங்கியது. 1782ஆம் ஆண்டு ஆனி உத்தரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. (யாழ். கச்சேரி இடாப்பின் பதிவு)

1915ஆம் ஆண்டில் பரிவார மூர்த்திகளாகச் சந்தான கோபாலர், நவக்கிரகம் ஆகியன அமைக்கப்பட்டன. இவ்வருடத்திலேயே கோயிலின் மேற்கு வாசலில் இராசகோபுரத்திற்கான அத்திவாரமிடப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1927இல் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியவை கருங்கற்களால் மாற்றியமைக்கப்பட்டுக் கட்டப்பட்டன. 1934இல் மணிக்கோபுரம் கட்டப்பட்டது. 1954ஆம் ஆண்டில் மேற்கு வாசலில் ஆரம்பிக்கப்பட்ட இராஜ கோபுரத்திற்கான வேலைகள் அவ்வாண்டில் பூர்த்தியாக்கப்பட்டன. ஈழத்திலே முதன்முதலாக 74' உயரமும் 5 தளங்களும் கொண்ட இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. அத்தோடு சிதம்பரீஸ்வரி சமேத சிதம்பரேஸ்வரரும், தண்டாயுதபாணியும் பரிவாரமூர்த்திகளாக பிரதிஷ்டை பண்ணப்பட்டார்கள்.

குமாரசாமிக் குருக்கள், சொர்க்கநாதையர், சபாபதிக் குருக்கள், சுப்பிரமணிய சர்மா, துரைசாமிக் குருக்கள் ஆகியோரைத் தொடர்ந்து 1974ஆம் ஆண்டு தொடக்கம் ஏழாம் தலைமுறையாகிய சண்முகநாதக் குருக்கள் நிர்வாகத்தைக் கவனித்தார். 1927, 1934,1954 ஆம் ஆண்டுகளில் கும்பாபிஷேக நிகழ்வு நடைபெற்றுள்ளது. 06.07.1975 ஆம் ஆண்டு அன்று மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிச் சபை அமைக்கப்பட்டது. மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலின் அழகிய தேர் 1943 ஆம் ஆண்டில் செய்யப்பட்டது. 1987ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் போரினால் ஆலயத்தின் வசந்த மண்டபம், நடேசர் மண்டபம், கிழக்கு வாசல், கோயில் மடம், அன்னதான மடம் போன்றவை சேதங்களுக்கு உள்ளாயின.

வருடாந்த உற்சவம் ஆடி மாதத்தில் ஆடி அமாவாசையை 25 ஆம் நாளாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. தீர்த்தோற்சவம் கீரிமலையில் நடைபெறுகின்றது. மஞ்சனத் திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, பூஞ்சப்பறத் திருவிழா, பல்லக்குத் திருவிழா, வேட்டைத் திருவிழா, சப்பரத் திருவிழா என்பவை சிறப்பானவையாகும். 24ஆம் நாள் பஞ்சரத பவனி நடைபெறும். பஞ்ச ரதங்களில் முறையே விநாயகர், சிவபெருமான், கந்த சுவாமியார், ஆறுமுகப் பெருமான், சண்டேசுரப் பெருமான் ஆகிய ஐந்து மூர்த்திகளும் பவனிவருவர். 26 ஆம் நாள் நடைபெறுகின்ற தண்டாயுதபாணி உற்சவம் புராண வரலாற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். மகா சிவராத்திரி, ஆடி அமாவாசை, மாசி மகம் ஆகிய தினங்களில் கீரிமலைத் தீர்த்தம் முக்கியத்துவம் பெறுகின்றது.

உற்சவ மூர்த்தியாக முத்துக்குமாரசுவாமி விக்கிரகங்கள் இரண்டு உள்ளன. சிறிய விக்கிரகமாக உள்ள மூர்த்தி ஆரம்ப காலத்திற்குரியது. மற்றையது 1927 இல் கும்பாபிஷேகம் நடைபெற்ற போது பஞ்சலோகத்தினாற் செய்யப்பட்டது. இம்மூர்த்தியே மகோற்சவகால எழுந்தருளியாகும். பழைய மூர்த்தி வெள்ளிக்கிழமைகளிலும் கார்த்திகை நட்சத்திரத்திலும் எழுந்தருளப் பெறுவதாகும்.

உள்வீதியிலே கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நிருத்த மண்டபம், கொடித்தம்பம் என்பனவும் இரண்டாம் வீதியில் வசந்த மண்டபமும் மூன்றாம் வீதியில் வில்லு மண்டபம், இளைப்பாறு மண்டபம், யாகசாலை, வாகனசாலை, களஞ்சிய சாலை, காரியாலயம் என்பனவும் அமைந்துள்ளன. பல்லவர், சோழர் கால வடிவமைப்பில், சிற்பங்கள் சுவர்களிலும் தூண்களிலும் காணப்படுகின்றன. உள்வீதியில் கந்தபுராண வரலாற்றைச் சித்திரிக்கும் ஓவியங்களும் காணப்படுகின்றன. இவை சிதைவடைந் தவையாக தற்போதுள்ளன.

ஐந்து காலப் பூசைகள் நடைபெறுகின்றன. சுக்கிரவாரம், கார்த்திகை நட்சத்திரபட்ச உற்சவம் குறிப்பிடத்தக்கவை. மகோற்சவ தினங்களில் சாயங்காலத்தில் இரண்டாம் காலப்பூஜையுடன் ஆறுகாலப் பூஜையும் இங்கு நடைபெறுவது வழக்கமாக உள்ளது. மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, மூலவர் தினம் (கும்பாபிஷேக தினம்), திருக்கார்த்திகை, தைப்பூசம், நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்ற விழாக்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசகர்கள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவராக இருப்பது போல மாலை கட்டுபவர்கள், இசையாளர்கள், அலங்காரம் செய்கின்ற கட்டாடிமார் யாவரும் ஒரே பரம்பரைக் கட்டுப்பாட்டின் கீழ்த் தொழில் செய்கின்றார்கள். முத்துக்குமார கவிராயர், சபாபதி நாவலர், சோமசுந்தரப் புலவர், அ. குமாரசாமிப்புலவர், சா. குமாரசுவாமிக் குருக்கள், மு.கந்தையா முதலானோர் மாவைக் கந்தனைப் பாடியுள்ளனர்.

1996ஆம் ஆண்டிற்கு பின் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் சேதமடைந்துள்ளதுடன் ஆலயத்தைச் சூழவுள்ள பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டது. இதனால் ஆலயத்திற்கு வழிபாட்டிற்கோ வேறு தேவைகளுக்கோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. பத்து வருடங்களுக்கும் மேலாக கோயிலில் அபிவிருத்திப் பணிகள் ஏதும் இடம்பெறவில்லை.

இலங்கையிலேயே முதன் முதல் கொடித்தம்பம் அமைக்கப்பட்ட பெருமையும் உற்சவம் நடாத்தப்பட்ட பெருமையும் இத்தலத்திற்கே உரியது. மூன்று திருவீதிகளைக் கொண்டதாலும் முதன்முதல் கொடியேற்றத் திருவிழாவை ஆரம்பித்ததாலும் முதன்முதல் பஞ்சரதங்களை ஓடவிட்டதாலும் இக்கோயில் இலங்கை இந்துக்களிடையே முதன்மையான ஆலயமாக அமைந்துவிட்டது.

1976 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட மாவைக்கந்தன் ஆலயத் திருப்பணிச் சபை மலரும், 1978ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அஷ்டோத்திர சகஸ்ர மகா சங்காபிஷேக மலரும் ஆலயத்தின் வரலாற்றை அறிய உதவியாக உள்ளன. இவற்றோடு மாவை திருத்தல வரலாறு, யாழ்ப்பாண வைபவ–மாலை, வையாபாடல் போன்ற நூல்களும் உதவுகின்றன.

ஆலயத்தின் பழைமையான விக்கிரகங்களையும் கோயில் சுற்றுப் புறங்களையும் ஆய்வு செய்கின்றபோது மேலும் பல வரலாற்றுத் தகவல்கள் வெளிவரலாம். அவை ஈழத்தில் இந்துமதத்தின் புராதனத் தன்மையினை மேன்மேலும் உறுதிப்படுத்த உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகந்தை
# ஸ்ரீ சித்திரவேலாயுதர் கோவில்

**அமைவிடம்:** பொத்துவில் தாண்டி கூமுனைக்குச் செல்லும் நீண்டதொரு காட்டுப் பாதையோரம் அமையப் பெற்றுள்ள இத்தலம் தமிழகத்துக் குன்றுதோறாடல் மலைக் கோவில்களை நினைவூட்டும் வகையில் அமையப் பெற்றது. சமுத்திர அலைகள் தாலாட்ட பக்திமயமான சூழலில் உள்ள இவ்வாலயம் கிழக்கிலங்கையின் திருப்படைக் கோவில்களி லொன்றாக, தேசத்துக் கோயிலாகச் சிறப்புப் பெற்றது.

**பாரம்பரியம்:** கதிர்காமத்தோடு நெருங்கிய தொடர்புடைய இத்தலம் முருகன் மலை, வள்ளி மலை என்ற இரு பிரிவான மலைகளையுடையது. இயற்கையாகவே அமைந்த ஏழு நீர்ச் சுனைகள் இத்தலத்தை அழகு செகின்றன. கதிர்காமத்து முருகனுக்கு உகந்தமலை என்றதனால் இது உகந்தை என அழைக்கப்படலாயிற்று என்பது ஐதீகம். கதிர்காமம் செல்லும் அடியார்கள் இங்கு தங்கியே செல்வது வழக்கம்.

ஆரம்பத்தில் திறந்தவெளிக் கோயிலாக அமைந்திருந்த இவ்விடம் சூரிய வழிபாடு நடந்த இடமென்பர். மட்டக்களப்பில் உள்ள மூன்று மலைக் கோயில்களும் உகந்த மலை, .தாந்தாமலை,சங்கமன் கண்டிமலை என்பனவாகும். இவை அனைத்துமே முருகன் கோயில்களாகும். முருகன் சூரனைக் கொல்ல விட்ட வேலானது வாகூர மலையைப் பிளந்து மூன்று குளம், கல்லி, கடலில் விழுந்த போது எழுந்த தீப்பொறிகளில் ஒன்று இம்மலை உச்சியிலே தங்கியது என ஐதீகக் கதைகள் கூறும் (மட்டக்களப்பு மான்மியம்).

**வரலாறு:** யாழ்ப்பாணத்திலிருந்து வந்து மட்டக் களப்பை வாழ்விடமாகக் கொண்ட மார்க்கண்டு முதலியாரே 1885 இல் மலையடிவாரத்தில் ஒரு கோயிலைக் கட்டினார். கோ–ளாவிலைச் சேர்ந்த காளியப்பனைக் குருவாகவும், ஜெயசேகர –ஸ்ரீ வன்னிதிசாநாயக என்பவரை வண்ணக்கராகவும் நியமித்தார். பாணமையைச் சேர்ந்த இவர் சைவ பக்தியும் தமிழ்ப் பற்றும்மிக்கவர்.

இதற்கு முன்பு ஆலமரத்தடியில் மேடையில் வேல் மட்டும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்த இக்கோயில் திறந்த வெளிக் கோயிலாகவே ஆரம்பத்திற் காட்சியளித்தது. ஆலயத்தில் உள்ள வெண்நாவல் மரமே தலவிருட்சமாகும். தெவயானை வழிபாடு புதிய கற்காலத்தில் ஏற்பட்டதென ஆவாளர் கருதுவர். எனவே இது அதற்கு முற்பட்ட காலத்திலேயே வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட தலம் எனக் கருத முடியும். வேடர் சமுதாயம் புதிய கற்காலத்திற்கு முந்தியது. புதிய கற்காலத்தில் விவசாய சமுதாயமும் தோன்றி விட்டமையினால் முருகனுக்கு வள்ளி,தெவானை என இரு மனைவியர் ஏற்பட்டனர். எனவே இது இடைக்கற்கால வேடர் வழிபாட்டு இடமெனக் கொள்ள முடியும் எனப் பேராசிரியர் சிற்றம்பலம் கூறுவார்.

உகந்தையை அண்மிய பாணம, கூமுனை போன்ற இடங்கள் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர் வாழ்ந்த இடங்களாவதோடு அவர்களின் வழி வந்த வேடர் இன்றும் வாழுமிடங்களுமாகும். இவர்களுக்கேயுரிய வேல் வணக்கமே இப்பகுதியில் நிலவியது என்பதற்கு இவ்விடம் சான்றாகும். ஈழத்திற் பௌத்தம் கால்கொள்ள முன்னர் பிராமி லிபிக் கல்வெட்டுக்கள் அதிகம் காணப்பட்டுள்ளன. அவற்றிலே ஆதிப் பிராமி மறைய அசோகப் பிராமி இடம் பிடித்துக் கொண்டது. தமிழ் பௌத்தர்களும் ஆதிப்பிராமியும் நிறைந்த இவ்விடம் பின்பு சிங்கள பௌத்தர் வாழு மிடமாகி விட்டது.

**பூசை முறைகள்:** கதிர்காமத்தைப் போலவே இங்கும் ஆடிப் பௌர்ணமியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். திருவிழாக்கள் இடம்பெறும்போது சுவாமியை (வேல்) தாம்பாளத்தில் வைத்துப் பட்டுச் சேலையினால் மூடி வீதி வலம் வருவார்கள். திறந்த தேரில் முருகப் பெருமான் வேல் பவனி இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி தீர்த்தமாடுவதற்கு முன்னரே கொடி இறக்கும் வழக்கமும் இங்கன்றி வேறெங்கும் இல்லை. அக்கொடியினையும் சுவாமியுடன் தீர்த்தமாட எடுத்துச் செல்வர். தீர்த்தம் முடிவுற வள்ளி கோயிலுக்குச் சென்று விட்டே சுவாமி தமதிருப்பிடம் செல்வார்.

முதலாவது மலையில் வள்ளி கோயிலும் வேலுமே அமையப் பெற்று உள்ளமை இதன் பழமைக்குச் சான்றாகிறது. கடலில் நீராடிவரும் பக்தர்கள் சரவணப் பொகை என்னும் பொ-கையில் நீராடுவர். வள்ளி அம்மன் கோயிலில் ஒருபுறம் வேலும் மறுபுறம் பிள்ளையார் கோயிலும் அமையப் பெற்றுள்ளன. மலை அடிவாரத்தில் பிள்ளையார் கோயில் ஒன்றும் உள்ளது.

மிகத் தொன்மை வாந்த இக்கோயில் இடைக்கற்கால வேடர் வழிபட்ட இடமாகும். இதன் பழமைக்கு இப்பகுதிகளிற் காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களே சான்றாகும். இவற்றிலே வேல், வேலச போன்ற பெயர்கள் இடம் பெறுவதும் அவதானிக்கத்தக்கது.

ஆல மரத்தடியில் அமைக்கப்பட்ட மேடையில் வேல் மட்டும் நடப்பட்டு திறந்தவெளிக் கோயிலாகக் காணப்பட்டதும் இதன் பழமையைப் பறைசாற்றும் மற்றுமொரு சான்றாதாரமாகும். மேலும் தெவ யானை அம்மனுக்கு கோயில் அமையாததும் இதன் தொன்மைக்கு ஒரு ஆதாரமாக அமைகிறது எனலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமம்

– பேராசிரியர் சி. பத்மநாதன் –

கதிர்காமமும் புராண இதிகாசங்களும்

கதிர்காமம் என்பது கார்த்திகேய கிராமம் என்பதன் சிதைவு என ஸர். பொன்னம்பலம் அருணாசலம் கூறியுள்ளார்கள். "கம" "காம" என்பவை அநேக குறிச்சிகளின் பெயராகக் காணப்படுகின்றன. அவை கிராமமென்னும் சொல்லின் சிதைவு என்பதே மொழி நூல் வல்லுநர் முடிபு. ஆனால் "கதிர்" என்பது "கார்த்தி கேய" என்பதன் சிதைவு ஆகாது. "கதிர்" என்பதைச் சிதையாத சொரூபமாகக் கொண்டு "ஒளி" என்ற நேரான பொருள் கொள்வதே பொருத்தமாகும். தக்ஷிணகைலாய மான்மியத்தில் கதிர்காமகிரிக்கு "ஜோதிஷ் காமகிரி" என்னும் பெயர் காணப்படுதலும் ஒளி என்னும் கருத்தே பொருத்தமான தென்பதைக் காட்டும். நக்கீரர் அருணகிரிநாதர் முதலிய அனுபூதித் தொண்டர்களும் முருகவேள், அடியார்க்கு ஒளியாய்க் காட்சி தரும் அருட்சிறப்பை விசேடித்துக் கூறுவர். ஆகவே பண்டைக் காலந்தொட்டு முருகன்குன்றாய் விளங்கும் கதிர்காமகிரி ஜோதிஷ்காமகிரி என்னும் பேரால் பண்டை நூல்களிற் கூறப்பட்டது. இதனாலேதான் புறச்சமயத்தவரும் இக்குன்றில் முருகன் ஒளிப் பிழம்பாய் விளங்கும் காட்சியைத் தத்தம் சமயக் கடவுளர் மேல் ஏற்றிக் கூறுவர். புத்த தேவர் போதிஞானம் அடைந்தபின் இலங்கைக்கு வந்து தியானத்திலிருந்த பத்து இடங்களிற் கதிர்காமமும் ஒன்று எனச் சிங்களரது புத்த சமய நூல்கள் கூறும். இஸ்லாம் மதத்தினர் தங்கள் "நபி" காண்டற்கு இனிய பச்சை ஒளியாய்க் கதிர்காமத்திற் காட்சி கொடுப்பதாகிய ஓர் அனுபவத்தைச் சொல்லி அங்கு வணங்குவர்.

இத்தகைய மகிமை பெற்ற கதிர்காம க்ஷேத்திரம் தற்கால அரசியற் பிரிவின்படி வதுளை நகரைத் தலைப்பட்டினமாகக் கொண்ட ஊவா மாகாணத்திலுள்ளது. பண்டைக் காலத்தில் "உபநுவரை" அல்லது உபராசதானி எனப்பட்ட பிரதேசமே தற்காலத்தில் ஊவாமாகாணம் என வழங்கும். அரசன் இருக்கும் இடத்தை இராசதானி என்பதும் இளவரசன் அல்லது யுவராஜா இருக்கும் இடத்தை யுவராசதானி என்பதும் பண்டை வழக்கு. தக்ஷிண கைலாசம் எனப்படும் திரிகோணகிரி (திரிகோணமலை) குளக்கோட்டு மகாராசன் காலத்திலே இலங்கை மன்னர் இராசதானியாகவும் விசேஷமான சிவஸ்தலமாகவும் விளங்கியது போலக் கதிர்காமகிரியும் உபமன்னர் உறைவிடமாயும் சிவகுமரராகிய முருகவேளின் சிறந்த ஸ்தலமாகவும் விளங்கிற்று. அசோகன் மகள் சங்கமித்திரை புத்ததேவர் பரி நிர்வாணம் அடைந்த போதிவிருட்ச (வெள்ளரசு)க் கொம்பர் கொண்டு இலங்கைக் கரையை அடைந்த காலத்தில், அவளை எதிர்கொள்ளச் சென்றவர்களில் இலங்கை அரசன் முதலாவதாகவும், கதிர்காமத்து வதிந்த அரசகுமரரும் பரதகுமரரும் அடுத்த படியினராகவும் மகாவம்ச நூலிற் கூறப்படுகின்றனர். இன்னும் வெள்ளரசின் கிளைகளில் ஒன்று கதிர்காமத்திலும் நாட்டப்பட்டதென அந்நூல் குறிப்பிடுகின்றது. இவற்றால் ஊவா மாகாணம் அக்காலத்தில் அரசிளங் குமரர் உறைவிடமாயும், அதிலுள்ள கதிர்காமகிரி திவ்ய க்ஷேத்திரமாயும் உபராஜதானியாயும் இருந்ததென்பது விளங்கும்.

இது எவ்வாறு முருகக் கடவுள் க்ஷேத்திரமாயிற்று என்பது இதன் அருகாமையில் மேற்கேயுள்ள சப்பிரகாம மாகாணத்தின் பெயர் ஆராய்ச்சியால் விளங்கும். சப்பிரகாமம் என்பது "சபரர் கிராமம்" என்பதன் திரிபாகும். சபரர் அல்லது சவரர் என்பார் வேடசாதி வகுப்பைச் சேர்ந்த ஒரு கிளையினர்.

............மணிமலைச் சாரல்  
அடக்கருஞ் சீறூர் அரணக உறையுள்  
...................................................  
காட்டுயிர் காணார் கைப்பயில் குறியொடு  
வேட்டன செய்யும் வேட்டுவினைக் கருந்தொழிற்  
கவர்கணை வாழ்க்கைச் சவரர் புளிஞர்

என உதயணன் கதை-உஞ்சைக் காண்டம்-55 சவரர் புளிஞர் வளைந்தது வரி 44-68ல் சொல்லியவாற்றால் சபரரது இயல்பும் அவர்கள் மலைச்சாரலில் அரண்களை உறைவிடமாகக் கொண்டு ஆறலைத்தும் சூறைகொண்டும் உயிர்வாழும் வேட்டுவ சாதிக் கிளையினர் என்பதும் அறியலாகும். கதிர்காமம் தற்கால மாகாணப் பிரிவின்படி ஊவா மாகாணத்தைச் சேர்ந்ததாய் இருந்தபோதிலும் மலைத்தொடர்கள் அடர்ந்திருக்கும் பான்மையிற் சப்பிரகாமத்தைச் சேர்ந்த மலைநாட்டுப் பிரதேசம் எனலாம்.

கந்த புராணத்தில் வள்ளியம்மை திருமணப் படலத்தில், "வெள்ளியங்கிரியின் ஓர்சார் விளங்கிய கந்தவெற்பு" என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாகக் கூறப்பட்டவற்றை ஆதாரமாகக்கொண்டு தொண்டை நாட்டு வள்ளிமலையில் வள்ளிநாயகியார் பிறந்து வளர்ந்ததாக இந்திய ஐதிகங்கள் கூறுதல்போல இலங்கையிலும் கதிர்காம கிரியில் வள்ளி நாச்சியார் பிறந்து வளர்ந்ததாக ஐதிகம் உண்டு. வள்ளி நாச்சியார் தினைப்புனங் காத்த இடம் இது, வேலர் வேங்கை மரமாய் நின்ற இடம் இது எனப் பல இடங்களைச் சுற்றி ஐதிகங்கள் வளர்ந்துள்ளன. சபரகாமம் வேடர் சாதிப் பெயரொன்றால் பண்டு தொட்டு வழங்கி வருவதும் இந்த ஐதிகத்துக்கு ஆதாரம் அளிக்கின்றது. சவரர் புளிஞர் என்று உதயணன் கதையிற் சொல்லப்பட்ட வேட்டுவ சாதியார் தண்டகாரணிய மலைச்சாரல்களில் வாழுங் குழுவினராவர். இவர்கள் இப்பெயர் (Sabaras and Pulindas - Hill tribes) உடையவர்களாயே தற்காலத்திலும் வாழ்கின்றனர்.

இவர்களுக்கும் மாயையில் வல்ல அசுர இராட்சதக் குழுவினருக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய ஆராய்ச்சிகள் இன்னும் முடிபுபோகவில்லை. கந்தபுராணத்தில் அசுர் மன்னனான சூரபத்மனது இராஜதானியாகச் சொல்லப்படும் மகேந்திரபுரி இலங்கைக்குத் தெற்கே உள்ளதென்பர். அசுர கிளைகள் அழிந்தொழிந்த பின்னர் இராட்சதக் குழுவினர்க்கரசனான இராவணேசனது இலங்காபுரி நகரும், இலங்கையின் பெரும் பாகமும் கடல் கொள்ளப்பட்டன என்பர். இடப் பெயர் ஐதிகங்களிலும் இவற்றிற்குச் சான்று இல்லாமற்போகவும் இல்லை. சப்பிரகாமத்தில் ஊற்றெடுத்து மேலைக் கடலில் விழும் காலு கங்கையாற்றின் தென்கரையில் கடலோரமாக இருக்கும் கழுத்துறை என்னும் நகரம் "வேளர்புரம்" என்னும் பெயரால் புராதன காலத்தில் வழங்கப்பட்டு வந்தது. ஆற்றுக்கு வடகரையில் உள்ள பிரதேசம் "தேசேஸ்திர கழுத்துறை" என்னும் பெயரால் வழங்கியது. "தேசேஸ்திர" என்பது தேவ சத்துருக்கள் அதாவது, ஆற்றின் தென்கரையில் வசிப்பவர்களது குலதெய்வம் ஆகிய கதிரைவேலருக்குப் பகையுள்ளவர்கள் வசிக்குமிடம் என்பதாம். அசோக சக்கரவர்த்தி காலத்தில் இலங்கையில் காலுகங்கையின் வடகரை வரையும் புத்தசமயம் பரவிய காலத்திலும் அவ்வாற்றின் தென்கரையிலுள்ளோர் புத்தசமயத்தைத் தழுவாது, நாஸ்திகராய் புத்தசமயத்தை அனுசரித்தவர்களைத் தேவசத்துருக்கள் என்று குறிப்பிட்டபடியால் காலுகங்கையின் வடகரைப் பிரதேசத்துக்கு "தேசேஸ்திர" என்னும் பெயர் ஏற்பட்டது.

இது நிற்க கதிர்காம கிரியில் கோயில் உற்பத்தியான காலம் முதலியவற்றை விவரமாகக் கூறும் நூல் ஒன்றுளது. அது வடமொழிச் சுலோகத்தில் யாக்கப்பட்ட 'தக்ஷிண கைலாய மான்மியம்' என்னும் நூல் ஆகும். அது வடமொழி ஸ்காந்த புராணத்தின் ஓர் பாகமாகவும், சூதபுராணிகரால் நைமிசாரணிய முனிவர்களுக்கு எடுத்தோதப்பட்டதாகவும் இயற்றப்பட்டிருந்த போதிலும் ஸ்காந்த புராண காலத்தினதாக அல்லது ஸ்காந்த புராணத்தின் பாகமாக ஆராய்ச்சியாளர் அதனை மதிப்பதில்லை. அது எவ்வாறாயினும் அதன் மொழிபெயர்ப்பாக வதிரி வித்துவான்-திரு. சி. நாகலிங்கம் பிள்ளை அவர்கள் கி.பி. 1928ம் வருடத்தில் வெளியிட்ட பிரசுரத்தில் காணப்படுவதன் சாரத்தை ஈண்டுக் குறிப்பிடுகின்றேன்.

"முருகக் கடவுள் கிரவுஞ்ச கிரியையும், தாருகனையும் வேற்படையை ஏவி விளையாட்டாகப் பிளந்து சங்காரஞ்செய்த பின்னர்த் தேவகிரிக்குச் சென்று பின்னர்த் திருச்சேய்ஞலூர் முதலிய புண்ணிய ஸ்தலங்கள் எல்லாவற்றையும் தரிசனம் செய்துகொண்டு திருச்செந்தூரை அடைந்தார். பின் அசுரர் தேவருக்கு இடுக்கண் விளைத்தலும் சூரபன்மனும் அவன் தம்பியர்களும் விரும்பிய வரங்கள் பெற்று அரசியல் செலுத்துவதும் பிறவுமாகிய விருத்தாந்தங்களெல்லாம் வியாழ பகவான் விரிவாகச் சொல்ல அறிந்துகொண்டு, வீரவாகுதேவர் முதலிய வீரர்களும் பூத சைனிய வெள்ளமும் புடைசூழப் புறப்பட்டுக் கதிர்காம கிரியை அடைந்தார்."

"கதிர்காமத்தில் தேவசிற்பியால் அமைக்கப்பட்ட ஏமகூட ஆலயத்தில் சுப்பிரமணியப் பெருமான் வீற்றிருந்தருள, அவருடன் வந்த சைனியங்களுக்கும் பாசறை வீடு அமைக்கப்பட்டது. அப்பாடி வீட்டிலிருந்தே வீரவாகு தேவர் மகேந்திரபுரிக்குச் சூரபன்மனிடம் தூதுசென்று மீண்டார். பின் நடந்த தேவ அசுர யுத்தம் முடியும் வரை கதிர்காமமே தேவசேனாபதியாகிய குமரப் பெருமானுக்கும் அவரது படைத் தலைவர்கட்கும் பூத சைனியங்களுக்கும் பாடி வீடாய் விளங்கியது. சூரசங்காரம் முடிந்தபின் முருகவேள் மீண்டும் கதிர்காமத்துக்கு எழுந்தருளித் தேவசிற்பியாகிய விசுவகர்மாவை நோக்கி, "இங்கே நாம் வசித்தற் பொருட்டுச் சிறந்த நகரத்தையும் அழகிய கோயிலையும் அமைப்பாயாக" எனக் கட்டளையிட்டருளினார்."

"விசுவகர்மாவும் அவ்வாணையைச் சிரமேற்கொண்டு அதிவிசித்திர அலங்காரம் பொருந்திய மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் மண்டபங்கள் வாய்ந்ததும், மாடங்கள் தோறும் அழகிய கொடிகள் அசைந்தாடவும், இரத்தின தோரணங்கள் தொங்கவும், நிலவுப் பயன் கொள்ளும் சாளரங்கள் சிறப்புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கும் பல வீதிகளை உடையதும், குளிர்ந்த சோலைகள் தடாகங்கள் அமையப் பெற்றதுமான ஒரு நகரத்தைச் சிற்ப நூல் விதிப்படி இயற்றி, அந்நகரின் நடுவில் சகல சித்தியையும் அருளவல்லதும், கோடி சூரியப் பிரகாசம் உள்ளதும், நவரத்தினங்களாலே குயிற்றப் பட்டதும், மங்களம் வாய்ந்ததுமாகிய சிந்தாமணி என்னும் ஆலயத்தை அமைத்து, இந்திர நீலத்தினால் ஒரு சிங்காதனமும் ஆக்கினான். இவ்வாறு கதிர்காம மலையில் தேவகம்மியனால் அமைக்கப்பட்ட நகர் ஆலயம் முதலியவற்றின் சிறப்புகளைச் சூதபுராணிகர் நைமிசாரணியத்து முனிபுங்கவர்களுக்குப் பின் வருமாறு எடுத்து ஓதியதாகத் தக்ஷிண கைலாய மான்மியம் கூறும்."

மலைச் சிறப்பு

"பிள்ளையார் மலை, வீரவாகுமலை, தெய்வ யானையம்மை மலை, வள்ளியம்மை மலை முதலிய பல மலைகளின் நடுவிலே சோமன், சூரியன், அக்கினி என்னும் முச்சுடர்களின் சோதி பெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவது கதிர்காமமலை என்று அறிக.

தென் திசையில் அகத்தியர் வாழும் பொதிய மலை போல அக்கினி திக்கில் "ஜோதிஷ் காமகிரி" பிரகாசிக்கும். சமுத்திர நடுவில் இருந்த சுப்பிரமணியப் பெருமான் விண்ணவர் இன்னலை வீட்டுதற்கு ஆதாரமான பாசறை வீடாய் விளங்கினமை காரணமாகத் தேவர்க்கு மிக்க பயன்களை அளித்தலால் கதிர்காமகிரி மந்தர மலையை நிகர்க்கும். அசுரர் நுழைவதற்கு அரியதாயும், தேவர் வாழ்தற்குரியதாயும் பொன் போன்றிலங்குவதாயும் இருத்தலால் மேரு மலையை நிகர்க்கும்."

ஆலயச் சிறப்பு

"கதிர்காம மலைச்சிகர நடுவில், கோடி சூரியப்பிரகாசம் பொருந்தி விளங்குஞ் சிந்தாமணி ஆலயத்தில், நவரத்தினமயமான சிம்மாசனத்திலே வள்ளிநாயகி, தெய்வநாயகி சமேதராய் அநேக கோடி சூரியப் பிரகாசத்தோடு கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கிறார். அம்மலைபோல மேன்மையுள்ள மலை உலகத்தில் வேறெங்கும் இல்லை. அம்மலை சுப்பிரமணியக் கடவுள் வடிவமாய் மங்கலமாய் விளங்கா நிற்கும்."

நகரச் சிறப்பு

"கதிர்காம நகரம் முக்கோணவடிவான வீதியை உடையது. அந்நகரத்தின் நடுவிலே பவளத் தூண்கள் நிறுத்திப் பொன்னால் இயற்றி இரத்தினங்கள் இழைத்த திவ்வியமான சோதி மண்டபம் ஒன்று இருக்கிறது. அம் மண்டபத்தின் நடுவில், இந்திரநீல மணியினாற் செய்த சிம்மாசனத்தில் தெய்வயானை யம்மையார் வள்ளி நாச்சியார் என்னும் இரு சத்திமாரோடும் ஞானசக்தி வடிவாகிய வேற் படையைக் கையில் தாங்கியவராய்க் கிருபாசமுத்திரமாகிய கதிர்காமநாதர் விளங்குகிறார். அச்சோதி மண்டபத்தின் எதிரிலே எல்லா இலக்கணமும் வாய்ந்த வள்ளிநாச்சி மண்டபம் இருக்கிறது. அதனருகிலே மேன்மை பொருந்திய சமாதி யோகமண்டபம் இருக்கிறது. விநாயகருக்கும் பரமசிவனுக்கும் உரியவேறு மண்டபங்களும் அங்குள்ளன. வீரவாகு முதலான வீரர்களுக்குரிய மண்டபங்களும் இருக்கின்றன. கந்தர் ஆலயத்திற்குத் தென்திசையிலே அந்தணர்களுக்குரிய இருக்கைகள் உள்ளன. மேற்குத் திசையிலே சைவர்களுக்கு உரிய சித்திர மண்டபங்கள் இருக்கின்றன. வடதிசையிலே திருக்கல்யாண மண்டபம் ஒன்று உள்ளது. கோவிற்பணி செய்யும் அந்தணருக்கும் உருத்திர கணிகையருக்கும் ஏனைய வருணத்தாருக்கும் உரிய இருக்கைகளும் அங்குள்ளன. அடியார்களால் வீதிகள் தோறும் அமைக்கப்பட்ட பல மண்டபங்களும் உள்ளன."

மேலே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட தக்ஷிண கைலாய மான்மிய வரலாற்றில் கதிர்காமகிரி முச்சுடரின் சோதி பெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாய் விளங்குவதெனவும், ஜோதிஷ் காமகிரி என்னும் பேருடையதெனவும், கூறிய பின்னும் சிந்தாமணி ஆலயத்துக்கும் கதிரையப்பருக்கும் அநேக கோடி சூரியப் பிரகாசமுடைமை கூறப்படுதலாலும், நகரத்தில் கதிரையப்பர் வீற்றிருக்கும் மண்டபம் சோதி மண்டபம் எனப்படுதலாலும் கதிர்காமம் என்னும் பதத்தில் 'கதிர்' என்பதற்கு "ஒளி" என்பதே உண்மைப் பொருள் என்பது அறியலாகும். கதிர்காம புராணத்தைச் செய்யுள் நடையில் இயற்றியவர்,

"திங்களு மங்கித் தேவும் தினகரனோடு மூன்று
துங்கநற் சுடர்கள் வீசும் சோதியைத் தன்பாற் கொண்டு
பொங்குபே ரொளியை வீசிப் பாரினிற் சோதி யாகி
எங்கணும் புகழ்ந்து போற்ற விலகுறும் கதிரை யோங்கல்"

என ஒரு செய்யுளால் இவற்றை விளக்கினார்.

மலையின் மேல் உள்ளனவாகக் கூறப்படும் கோயில்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மேல் விவரப்படியே பெயர் உள்ளனவாக இருந்து பூசிக்கப்பட்டு வருதலும் நகரத்தில் உள்ளனவாகச் சொல்லப்படும் சோதி மண்டபம் (சுவாமி சந்நிதி), அதற்கு எதிரில் வள்ளி நாச்சியார் சந்நிதி, சுவாமி சந்நிதிக்கு வடக்கே கல்யாண மண்டபம் (தெய்வயானை அம்மன் சந்நிதி), மற்றும் சொல்லப்பட்ட மண்டபங்கள் (மடங்கள்) யாவும் அதே நிலையங்களில் பூசித்துப் போற்றப்பட்டு வருதல் கதிர்காம யாத்திரை செய்தவர்களுக்கு நன்கு புலப்படும்.

தக்ஷிணகைலாச மான்மியப்படி கதிர்காம க்ஷேத்திரம் தேவ அசுர யுத்தத்தில் தேவ சைனியங்களுக்கும் முருகவேளுக்கும் பாசறை வீடாய் இருந்தவாறும், சூரசங்காரத்தின் பின் அங்குக் கோவிலும் நகரியும் அமைக்கப்பட்டவாறும் மேலே காட்டப்பட்டன. இனி, கதிர்காமத்தில் கோயிலும் நகரும் அமைக்கப்பட்ட பின்னர் நடந்ததாக மேற்படி நூலிற் சொல்லப்பட்டனவும் கந்த புராணத்திற் சொல்லப்படாதனவாய சில சில சம்பவங்களையுங் குறிப்பிட்டு அப்பாற் செல்வாம்.

கோயிலும், நகரமும் அமைந்த பின்னர், கந்தவேள், மால், அயன், இந்திரன் முதலிய தேவர்களோடும், வீரவாகு முதலிய வீரர்களோடும், பூதர்களோடும் நகரத்தினுள்ளே புகுந்து வீதிகள்தோறும் உலாப்போந்து அவ்வீதிகளின் அழகைக் கண்டு மகிழ்ந்து சிந்தாமணி ஆலயத்தினது கோபுரவாயிலைக் கடந்து உள்ளேசென்று மண்டபங்களையும், வீதிகளையும் கண்ணுற்று, அக்கோயிலின் நடுவின் அமைந்துள்ள இந்திரநீல சிம்மாசனத்தின்மேல் ஏறி வீற்றிருந்து, பெருங் கருணையோடு ஆனந்தமான திருக்கோலங் காட்டி, தேவர்க்கும், முனிவர்க்கும் , பூதர்க்கும் அற்புத தரிசனம் கொடுத்தருளினார். அப்பொழுது இந்திரன் முதலிய தேவர்கள் அவரைத் துதித்து வணங்கி "எம்பெருமானே! தேவரீரை இங்கே பூசித்து வழிபட இம்மலையின் மேலே ஒரு சிறந்த தீர்த்தத்தை உண்டாக்கித்தரல் வேண்டும்" என வேண்டிக் கொண்டார்கள். அவரும் வீரவாகுவை அழைத்து, "எல்லா உலகங்களும் உய்யும்பொருட்டு இம்மலையின் மேலே புனிதமாகிய தீர்த்தமொன்றை உண்டாக்குவாய்" என ஆஞ்ஞாபித்தார். வீரவாகு அவ்வாணையைச் சிரமேற்கொண்டு தன் கரத்திலிருந்த கதையினால் மோதினார். அவ்வாறு மோதிய இடத்து ஒன்பது குண்டங்கள் உண்டாயின. அக்குண்டங்களினின்றும் கங்கை பிரவாகித்து எழ, அவை ஒன்பது புண்ணிய தீர்த்தங்களாயின. தேவர் முனிவர்கள் அத்தீர்த்த நீரைச் சிரசில் புரோட்சித்துப் புனிதராகி முருகவேளுக்கு மஞ்சனமாட்டிப் பொன்னாடை புனைந்து, சோடச உபசார ஆராதனை செய்து வழிபட்டுச் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்துநின்று, சிரமேற் குவித்த கையராய்க் கண்களில் ஆனந்தவருவி பொழிய, அசுரரால் வந்த இடுக்கண் களைந்த வாற்றைக் குறித்துப் பலபடச் சொல்லித் துதிப்பராயினர். முருகவேளும் அகமகிழ்ந்து "நீங்கள் விரும்பிய வரத்தைக் கேண்மின்" என, அவர்களும் "எம்பெருமானே! யாவரும் தரிசித்து வணங்குமாறு இந்த மலையின் மேல் தேவரீர் எப் பொழுதும் எழுந்தருளியிருந்து எல்லாவுயிர்கட்கும் சர்வ சம்பத்துக்களையும் ஈந்தருளல் வேண்டும்" எனப் பிரார்த்தித் தார்கள்.

கதிரை நாயகரும் பரிவுற்று, "நீங்கள் விரும்பிய வண்ணமே வரமளித்தோம். இந்த மலையை விட்டு நீங்காது என்றும் ஆனந்தமாக இங்கு எழுந்தருளி இருப்போம். எவர் இந்தக் கங்காதீரத்தில் ஸ்நானஞ் செய்து நம்மைப் பூசித்து வணங்குகிறார்களோ அவர்களுக்கு இம்மையில் வேண்டிய போகங்கள் எல்லாவற்றையும் அளித்து மறுமையிலே நித்தியானந்த வாழ்வாகிய முத்தியையும் நல்குவோம்" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வாறாகத் தேவர், முனிவர்களால் பூசிக்கப்பட்டு, கதிர்காமத்தில் சில காலம் கழிந்த பின்னர், இந்திரன், தன் னையும், தேவர்களையும் வாழ்வித்ததற்குக் கைம்மாறாக தனது மகளை முருகவேளுக்கு மணம்செய்யக் கருதியதனால், முருகவேள் சேனைகள் புடைசூழ்ந்து சேவிக்கக் கதிர்காமத்தினின்றும் புறப்பட்டுத் திருச்செந்தூரை அடைந்து, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருப்பரங்குன்றத்தை அடைந்து அங்குத் தெய்வயானை அம்மையாரைத் திருமணஞ் செய்தருளினார். பின் அங்கு நின்றும் வெளிப்போந்து செருத்தணி வெற்பில் சிலபகல் தங்கி நாரதமுனிவர் சூழ்ச்சியால் வள்ளி மலையை அடைந்து சில திருவிளையாடல்கள் புரிந்து வேடர்கள் வேண்டுகோளின்படி வள்ளிநாயகியைத் திருமணஞ் செய்து கந்தமலையில் சிலகாலம் கழித்தார்.

கந்த மலையில் எழுந்தருளியிருந்த சண்முகக் கடவுள் தெய்வயானை அம்மையார் வள்ளிநாயகியார் என்னும் தேவியர் இருவருக்கும் கதிர்காமத்தின் பெருமையை எடுத்தோதி அத்தலம் தமக்கு உவந்ததாதலையும் எடுத்தோதினார். அம்மையர் இருவரும் "சுவாமி! யாங்களும் அத்தலத்தைக் கண்டு அங்கு வசிக்க விரும்புகிறோம்; ஆதலால் தேவரீர் எங்களோடு அங்கு எழுந்தருள இசைதல் வேண்டும்" என்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிரமணியக் கடவுள் "அதுவே எமக்கும் விருப்பமாகும்" என்று மகிழ்ந்து அத்தேவிமார் இருவரோடும் தேவர், பூதர், வீரர் முதலானவர்களோடும் புறப்பட்டு வழிக்கொண்டு தேவகிரியை அடைந்து, பின் பல தலங்களையும் கடந்து சமுத்திர தீரத்தையடைந்து மரக்கலத்தில் பிரயாணஞ் செய்ய விருப்பமுடையவராய் ஒரு விளையாட்டாக விசுவகன்மனை நோக்கி, "நாம் அனைவரும் ஏறி இக்கடலைக் கடந்து செல்வதற்கு ஏற்ற ஒரு மரக்கலத்தை இயற்றக்கடவாய்" என்றனர். விசுவகன்மனும் அக்கணமே மனத்தாற் சங்கற்பித்து மிகப் பெரியதும் அழகுடையதுமான மரக்கலமொன்றை இயற்றினான். சுப்பிரமணியக் கடவுள் பிரகாசம் பொருந்திய திருமுக முடையவராய் மகிழ்வுற்று யாவரோடும் அம்மரக்கலத்தில் ஏறிச் சமுத்திரத்தைக் கடந்து சிங்கள தேசத்தை அடைபவராய் அச்சிங்கள தேசமாகிய இலங்கையின் வடபாகத்தில் இருக்கும் கடற்கரையை அடைந்து அதில் இறங்கினார். காங்கேயன் இறங்கிய காரணத்தால் அத்துறை எல்லா உலகங்களிலும் எப்பொழுதும் *காங்கேயன் துறை என்று சொல்லப்பட்டு வருகிறது.

காங்கேயப் பெருமான் விசுவகன்மனை நோக்கி "இங்கே நாம் தங்குவதற்கு இயைந்த ஓர் ஆலயத்தை இயற்றுக" என்று கூறுதலும் விசுவகன்மனும் அப்படியே ஓர் ¹ஆலயத்தை இயற்றினான். சுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளுதலும் தேவர்கள் அவரை அங்கே பூசித்து வழிபட்டனர்.

பின்பு, கந்தக்கடவுள் அங்கிருந்து மரக்கலமேறிக் கந்தவனத்தை அடைந்து அங்கே விசுவகன்மாவினால் ஆக்கப்பட்ட அழகிய கோவிலில் எழுந்தருளியிருந்து தேவர்கள் பூசிக்க ஏற்று அருள்புரிந்து, ஞானசக்தியாய வேற் படை தரித்த பெருமான் அவ்விடத்தை விட்டு மரக்கலமேறிச் சென்று, மகிமை வாய்ந்த தக்ஷிண கைலாசத்திலுள்ள, கந்தமலை, சமனாசலம், கண்டகீ வடகாந்தாரம், சம்மோதகிரி (உகந்த மலை) இவை முதலான பருவத க்ஷேத்திரங்களை அடைந்து அவைகளில் இறங்கியிருந்து அங்கங்கே உலகம் உய்யும்படி சில சில காலம் வைகித் தேவர்களால் வழிபடப்பெற்றுப் பரிவாரங்களுடன் கூடினவராய்க் கதிர்காமகிரியை அடைந்து அங்குள்ள சிந்தாமணி ஆலயத்தில், உலகம் உய்யும்படி, வள்ளி, தெய்வானை என்னும் இருவரோடும், தேவர் முனிவர் வீரர் முதலிய எல்லாரும் போற்றிசைப்ப எந்நாளும் எழுந்தருளியிருக்கின்றனர்.

கந்தப்பெருமான் ஏறிச்சென்ற மரக்கலம் உகந்த மலைக் கணித்தாய ஓரிடத்தில் நிறுத்தப்பட்டு இப்பொழுதும் சிலைவடிவமாய்க் காணப்படுகின்றது. இவை தக்ஷிண கைலாச மான்மியத்தில் கதிர்காம க்ஷேத்திரத்தைக் குறித்துக் கூறிய வைபவங்களாகும்.

## மாணிக்க கங்கை தீர்த்தம்

கதிர்காம க்ஷேத்திரத்திற்குத் தீர்த்தமாய் உள்ளது மாணிக்க கங்கை. இந்நதி நமுனகுல கந்த மலையில் உற்பத்தியாகிக் கதிர்காமத்திற்குத் தெற்குப் புறமாக ஊவா மாகாணத்தூடாகவும் பின் தென்மாகாணத்தூடாகவும் 55மைல் தூரம் கிழக்கு நோக்கிச் சென்று இந்து சமுத்திரத்தில் சங்கமமாகிறது. இந்த நதியைக் குறித்து, தக்ஷிணகைலாச மான்மியத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது.

"கதிர்காம நகரத்தருகில் புண்ணிய நதியாகிய மாணிக்ககங்கை பாய்ந்து கொண்டிருக்கும். அந்நதி கிழக்குக் கடலை நோக்கிச் செல்லா நிற்கும். தெளிந்த நீருள்ளதாயும் மனமகிழ்ச்சி அளிப்பதாயும் இருக்கும். மிகவேகமின்றி மெல்லெனச் செல்லும் இயல்பினது. பாண்டிநாடு, சேரநாடு, மாளவதேசம், சோழநாடு, கொங்கணதேசம், குடகு, பப்பரம், தெலுங்கு, வங்கம், கலிங்கம் என்னும் தேசங்களிலும் வேறு தேசங்களிலுமிருந்து நான்மறை வேதியர் முதலாயினோர் தங்கள் மனைவியரோடு வந்து கதிர்காம தலத்தில் வசித்து இப்புண்ணிய நதியில் நியமமாய் முழுகி நித்திய கன்மம் முடித்துக் காமேசன் என்னும் பெயருள்ள கந்தப்பெருமானை வணங்கித் துதித்துப் பல விரதங்களை அனுஷ்டித்து இஷ்ட சித்திகளை இப்போதும் பெற்று வருகின்றனர். சண்முகக் கடவுளின் மகிமையினால் இந்த மாணிக்க கங்கையில் முழ்கி, தலவாசமும் மூர்த்தி தரிசனமும் செய்தவர்கள் விரும்பிய

* யாழ்ப்பாணத்தில் பிற்காலத்தெழுந்த சரித்திர நூல்களாகிய கைலாயமாலை, வையாபாடல், வைபவமாலை முதலிய நூல்களில் மாவிட்டபுரம் கோவிற்கடவைக் கந்தசுவாமி கோவிலைக் கீரிமலையில் தீர்த்தமாடிக் குதிரைமுகம் நீங்கப்பெற்ற மாருதப் புரவீகவல்லி கட்டுவித்தபோது மூலவிக்கிரகம் கொண்டு வந்து இறக்கியதனால் இவ்விடம் இப்பெயர் பெற்றதாகக் கூறப்படுள்ளது.

இவ்வாலயம் கதிரை ஆண்டவர்கோயில் என வழங்குகின்றது.

இது கந்தவனக் கடவை என வழங்கும் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாண்டி
# சித்திர வேலாயுதர் கோயில்

– *கலாநிதி வ. குணபாலசிங்கம்* –

### அமைவிடம்

கிழக்கிலங்கையின் திருப்படைக் கோயில்கள் என வழங்கப்படுவனவற்றுட் சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலும் ஒன்று. இக்கோயில் மட்டக்களப்பு நகருக்கு வடக்கே இருபது கிலோ மீற்றர் தொலைவிலும், இலங்கையின் வடஅகலாங்கில் 7⁰ 49'17.52" ,லும் கிழக்கு நெட்டாங்கில் 81⁰33' 0.38''இலும், அமைந்துள்ளது.[1] சித்தாண்டி சித்திர வேலாயுதர் கோயில், ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலகத்தின் வடக்கு எல்லையிலும், கல்குடா தேர்தல் தொகுதியிலும் அமைந்துள்ளது. இக்கோயிலின் வடக்கு எல்லையாக முறக்கொட்டான் சேனையும், தெற்கு எல்லையாக வந்தாறுமூலையும், கிழக்கு எல்லையாக தேவபுரமும், மேற்கு எல்லையாக வயல் வெளிகளும் அமைந்துள்ளன. மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியில் மேற்குப் புறமாக இருநூறு மீற்றர் தொலைவில் இக்கோயில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கோயிலுக்குச் செல்லும் வீதியின் தொடக்கத்திற் சிறிய பிள்ளையார் கோயில் அமைந்துள்ளது.

### கோயில் வரலாறு

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் பழமையும், பீடும் உடையதாயினும் அதன் புராதன வரலாறு பற்றிய சான்றாதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை. கிடைக்கும் சான்றுகள் காலத்தாற் பிற்பட்டவை. ஐரோப்பியர் காலத்தில் நிலவிய கோயில் வழமைகளையும் வழக்காறுகளையும் இங்குள்ள வழக்குப் பிரதிகள், ஓலைச்சுவடியில் இருந்த சம்பவங்களின் எழுத்துப்பிரதி, கூட்டக்குறிப்புகள், வெள்ளியலான முடி, கற்றூண்கள், செப்பேடு முதலியவைகளில் கண்டுகொள்ள முடியும். அத்துடன் இக்கோயிலின் உற்பத்தியினை விளக்கும் வகையிலான பல மரபுவழிக் கதைகளும் உள்ளன.

### மரபுவழிக் கதை – 1

ஆண்டி ஒருவன் பல காதவழியைக் கடந்து காட்டு மார்க்கமாகச் சென்ற போது அவனை மத யானை ஒன்று வழி மறித்தது. அவ்வேளையில் ஆண்டி முருகனை நினைத்து அபயக்குரல் கொடுத்தான். அக்குரலைக் கேட்டதும் முருகன் அழகான வேடுவன் உருக்கொண்டு ஆண்டி முன் தோன்றி; மத யானையைக் கொன்று மறைந்தருளினார். தனக்கு வரவிருந்த கெடுதியை விலக்கி அபயமளித்த சித்திர வேலாயுதனைத் தன் உள்ளக் கோயிலிலே பூசித்து வந்த ஆண்டி வேலாயுதத்தினை வைத்து தன் வழிபாட்டையும் செய்து வந்தான். இவ்வாறு இருந்து வரும் காலத்தில் அந்தச் சித்திர வேலானது பல அற்புதங்களைச் செய்ததனால் சித்திரவேலாயுத சுவாமி என்ற காரணப் பெயர் சித்தாண்டிக் கந்தசுவாமிக்கு வழங்கப்பட்டது என்பர்.[2]

### மரபுவழிக் கதை – 2

மேற்குறித்த ஆண்டியின் வாழ்வுக்குப் பின்னர், ஆண்டி வாழ்ந்த இடத்தில் வேல் வைத்து வணங்கிய பகுதியைச் சூழ பல இடங்களில் இருந்து வந்த மக்கள் குடியிருப்புக்கள் அமைத்தனர். அவர்களுக்குத் தலைவனாக வேட வன்னியன் பேரில்லாவெளியில் இருந்தும் ஆட்சி செய்து வந்தான். அவனது ஆட்சியின் கீழ் இக்கோயில் இருந்தமை பற்றி இக்கோயிலுடன் தொடர்புடைய மரபுவழிக் கதையொன்று உள்ளது.
மேலே குறிப்பிட்ட மரபு வழிக்கதையில் சில வரலாற்றுத் துலங்கல்கள் புலப்படுகின்றன. குறித்த ஒரு காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை, அக்கால சமுதாயத்தினர் தமது பரம்பரையினருக்குக் கடத்துவது வழக்கம். இவ்வடிப்படையில் இக்கதை ஒரு மரபு வழிக்கதையென்று ஒதுக்கிவிடவும் முடியாது.

### மரபுவழிக் கதை – 3

சித்தாண்டிச் சித்திரவேலாயுதர் கோயிலுடன் தொடர்புடைய மற்றுமொரு மரபுவழிக் கதையில் போர்த்துக்கேயர் தொடர்பு படுத்தப்பட்டிருக்கின்றார்கள். மட்டக்களப்பு கண்டி அரசனின் ஆட்சியின் கீழ் பரிபாலிக்கப்பட்டு வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில், கண்டியரசன் போர்த்துக்கேயரை எதிர்த்துச் சண்டையிடுவதற்குத் தமது ஆட்சியதிகாரத்தின் கீழ் இருந்த மட்டக்களப்பிலிருந்தும் படையைத் திரட்டினான். படையிற் சித்தாண்டி ஊரவர்களையும் சேரும் படிச் சித்தாண்டி வன்னிமைக்குச் சீட்டோலை அனுப்பினான்.

இச்சம்பவத்தினை அறிந்த, கோயிற் சூழலிலே வாழ்ந்த மக்கட் கூட்டத்தினர் சித்திரவேலாயுதரிடம் சென்று, தமக்கு வரவிருக்கும் இன்னலை நீக்கித் தரும்படியும், போர்த்துக்கேயரிடம் இருந்து தம்மைப் பாதுகாக்குமாறும் நேர்த்திக்கடன் கட்டினர். தமது வேண்டுகோள் நிறைவேறினால் உனது கோயிலின் மகா மண்டபத்தினை கற்றூண்களால் அமைத்துத் தருவோம் என வேண்டினர். நேர்த்திக்கடன் நிறைவேறியதன் காரணமாக அடியார்களால் கற்றூண் மண்டபம் கட்டிக்கொடுக்கப்பட்டது.[3]

### மரபுவழிக் கதை – 4

முன்னொரு காலத்தில் இந்தியாவில் இருந்து வந்த சிகண்டி முனிவர், கொடிய விலங்குகள் கூடியிருக்கும் காட்டிலே அத்தி மரம் ஒன்றின் கீழ் தவம் புரிந்தனர். அங்கிருந்த வனவேடர்கள் அவரைக்கண்டு பணிந்து தொழுதனர். சிகண்டி முனிவர் அவர்கள் மீது இரக்கம் கொண்டு அருள் மொழிகளை வழங்கி அவ்விடத்தில் வேலாயுதம் ஒன்றை நட்டு அதனை வழிபடுமாறு அவர்களை வேண்டிக் கொண்டார். அன்று முதல் வேடுவர்கள் அவ்வேலை வழிபாடு செய்து வந்தனர். இக்கோயிலின் உற்பத்தி பற்றிய கதை மரபில் சிகண்டி முனிவரின் பெயர் குறிப்பிடப்படுவதனால் இக்கோயில் சித்தாண்டி என அழைக்கப்பட்டதாக அறியக் கிடைக்கின்றது. சொற்பிறப்பு பற்றிய இலக்கண விதிகளை நோக்குமிடத்து இது அதாரமற்ற குறிப்பு என்பது புலனாகின்றது.

மேற்குறித்த வாய்மொழி மரபுக் கதைகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டுள்ளதை அறியமுடிகின்றது. இக்கோயிலின் தோற்றம் குறித்த வாய்மொழி மரபுக்கதைகளிற் வேடுவர்கள் தொடர்பு படுத்தப் பட்டுள்ளமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். இதனை இக்கோயிலுக்கு அருகாமையிலுள்ள குமார தெய்வக் கோயில் சான்றுபகர்கின்றது.

### வழக்குப்பிரதிகள்

கிழக்கிலங்கையிலே உள்ள பிரசித்தமுடைய பல கோயில்களின் நிருவாகத் தகராறுகள் காரணமாக நீதிமன்றத்தில் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றிலே சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில் பரிபாலனம் தொடர்பாகவும் பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவ்வழக்குப் பிரதிகளை மூலங்களாகக் கொண்டு கோயில் வரலாற்றினை ஓரளவேனும் அறியமுடிகின்றது. இது தொடர்பான விபரங்கள் பின்னிணைப்பு - 05 இல் உள்ளது. கோயிற் பரிபாலனத்தில் வண்ணக்குகளினதும் வன்னிமைகளினதும் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கது. கோயிற் பரிபாலனத்திலே இவர்களுக்கிடையே உண்டான பிணக்குகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட நீதி மன்றத்தில் இல.8234/Misc, இல.2603/Misc, இல.2777/Misc, இல.2556/Misc இல.2181/Misc இலக்கங்களையுடைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.[4]

சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலின் பரிபாலனம் 1936 ஆம் ஆண்டில் ஐந்து பேரைக்கொண்ட வண்ணக்கு சபையாக இருந்துள்ளது. அவ்வண்ணக்கு சபையில் சித்தாண்டி, வந்தாறுமூலை, கிரான் ஆகிய ஊர்களிலுள்ள வன்னியனார் குடி, அத்தியா குடி, புத்தூர் குடியினரே பரம்பரை பரம்பரையாக இருந்து வந்துள்ளனர். இவர்களின் கோயில் உரிமை தொடர்பாக பல பிணக்குகள் உருவாகியுள்ளன.[5]

கோயில் 500 வருடப் பழமையானது என்னும் குறிப்பொன்று 11.10.1979 ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குப் பிரதி ஒன்றில் காணப்படுகின்றது. சித்தாண்டி, வந்தாறுமூலை, கிரான் ஆகிய ஊர்களில் வாழும் வெள்ளாளர் சாதியைச் சேர்ந்த வன்னியனார் குடி, அத்தியா குடி, புத்தூர்க் குடியினருக்குக் கோயிற் பரிபாலனம் தாய்வழி மரபில் உரித்துடையது என்றும், இந்நடைமுறை 500 வருடங்களாக நடைமுறையிலுள்ளது எனவும் இல.2603/Misc வழக்குப் பிரதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.[6]

### செப்புப் பட்டயம்

சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில் தொடர்பான செப்புப்பட்டயம் ஒன்று இருந்தமைக்கான சான்றுகள் உண்டு.(படம்:15) அது பிற்காலத்தில் மறை பொருளாக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான தகவல்களைத் தற்காலத்திற் பெற முடியவில்லை. செப்புப்பட்டயத்தின் புகைப்பட நிழற்பிரதி உண்டு. அது முழுமையாகக் கிடைக்குமாயின் கோயில் தொடர்பான அரிய பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

### வெள்ளியிலான முடி

சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலிலே தேசத்து வன்னிமைக்குச் செய்யும் சிறப்புக்களில் கோயிலின் விசேட விழாக்காலங்களில் வன்னிமைக்கு வெள்ளியிலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடி அணிவிக்கப்படுவது குறிப்பிடற்குரியது. கோயிலின் வருடாந்த திருவிழாக் காலங்களில் சித்தாண்டியிலிருந்து பெருமாவெளிக்குச் சென்று, தேசத்து வன்னிமையை மங்கல வாத்தியங்களுடன் அழைத்து வந்து, கோயிலில் வைத்துச் சிறப்புச் செய்வர். விழாக்காலங்களிலே சுவாமி வீதியுலா வரும் போது, தேசத்து வன்னிமை வெள்ளியிலான முடி அணிந்து, சுவாமியை வரவேற்பது கோயில் வழமையாக இருந்தது. தற்காலம் அவ்வழமை மருவிப்போயுள்ளது. வெள்ளியிலான முடி கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது.[7]

## குமாரர் கோயில்

வேடர்கள் வணங்கும் தெய்வங்களிலே குமார தெய்வம் பிரதானமானது. வேடர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இடங்களிலே குமார தெய்வத்திற்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்கின்றனர். சித்தாண்டிக்கும் அதன் அயற் கிராமங்களாகிய பெருமாவெளி, பேரில்லாவெளி, இலாவாணை முதலியவற்றுக்கும் இடையிலான உறவு குமார தெய்வ வழிபாட்டினால் உண்டானது. சித்தாண்டியில் பழமை மிகுந்த குமார தெய்வக் கோயிலொன்று உள்ளது. அக்கோயிலில் வேடுவர் வழமைகளின் படியே வழிபாடுகள் இடம்பெறுகின்றன.[8]

## கற்றூண் மண்டபம்

போர்த்துக்கேயர் காலத்தில் கோயிலில் கற்றூண் மண்டபம் ஒன்று இருந்தமைக்கான தொல்லியற் சின்னங்கள் அங்கு காணப்படுகின்றன. கற்றூண்களிற் சில சிதைந்து காணப்படுகின்றன. அவற்றிலே பல தூண்கள் கோயிலின் புனர்நிர்மாணப் பணிகள் நடைபெற்ற காலத்தில் கோயிலின் அத்திபாரத்தின் கீழ் இடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.[9]

## கோயிலின் அமைப்பு

இக்கோயிலின் வளாகம் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. இக்கோயிலைச் சூழ வம்மி மரங்களும், மகிழ மரங்களும் உள்ளன. இக்கோயிலின் முன்னால் முச்சந்தியை உடைய வீதியும், ஏனைய மூன்று பக்கங்களிலும் குடியிருப்புக்களும் அமைந்துள்ளன.

கோயில் அமைப்பில் கிழக்கு வாசலில் அமைந்துள்ள இராசகோபுரம் தனித்துவம் மிக்கது.(படம்:02) இக்கோபுரம் 1956ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.[10] சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் கிழக்கிலங்கையின் திருப்படைக்கோயில்களிற் கோபுரத்தைக் கொண்ட ஒரேயொரு கோயில் இதுவாகும். ஏழு தளங்களைக் கொண்ட கோபுரத்தில் நாற்புறங்களிலும் சிவ வடிவங்களும், முருக வடிவங்களும் காட்சி தருகின்றன. கோபுர வாசலில் ஓவியம் ஒன்று வரையப்பட்டுள்ளது. அவ்வோவியத்தில் கோபுரக் கட்டுமானப் பணிகளின் போது ஒருவர் மேலே இருந்து விழுவதையும், அவரை முருகன் தமது வேலைத் தாங்கிக் கொடுத்துக் காப்பாற்றுவதனையும் காணமுடிகின்றது. கோபுர வாசலில் பொருத்தப்பட்டுள்ள கதவு முதிரைப் பலகையினாலானது. கதவின் உயரம் பதினாறு அடியும், அகலம் பத்து அடியுமாகும். கோபுரத்தின் இருபக்கங்களிலும் மணிக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் வெண்கலத்தினாலான நூற்றைம்பது கிலோ கிறாம் நிறை கொண்ட காண்டா மணிகள் பொருத்தப்பட்டுள்ளன.

உள்வீதியும், வெளி வீதியும் இக்கோயிலுக்குண்டு. வெளி வீதியின் எல்லையை உயரமான மதில்கள் வரையறுக்கின்றன. இக்கோயிலின் வெளி வீதியில் நான்கு மூலைகளிலும் நான்கு கிணறுகள் மக்களின் பாவனைக்காகக் கட்டப்பட்டுள்ளன. வெளி வீதியில் கோயிலின் தெற்குத் திசையில் வடக்கு நோக்கியவாறு வள்ளியம்மன் கோயிலும், வடக்குத்திசையில் கிழக்கு நோக்கியவாறு தெய்வானையம்மன் கோயிலும், கோயிலின் தெற்கு வாசலை அண்மித்தாற் போல் குமார தெய்வக்கோயிலும் அமையப் பெற்றுள்ளன.(படம்:08)

## தினப்பூசையும் வருடாந்த விழாக்களும்

கருவறையில் மூல மூர்த்தியான முருகனின் படைக்கலமாகிய வேல் தாபனம் பண்ணப்பட்டுள்ளது. கோயிலில் ஆகம முறைப்படி பூசைகள் இடம்பெறுகின்றன. இங்கு அந்தணர்கள் பூசை புரிவது வழக்கமாகவுள்ளது. காலை, மதியம், இரவு என்ற அடிப்படையில் பூசைகள் இடம்பெறுகின்றன. தினப்பூசை நிவேதனத்துக்கு அமுது வைக்கப்படும்.

இக்கோயிலிலே தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, ஆடி அமாவாசை, தீபாவளி, திருக்கார்த்திகை விளக்கீடு முதலிய விசேட காலங்களில் விசேட பூசைகள் இடம்பெறும். இக்கோயிலின் விழாக்களுள் சிறப்பானது இங்கு அனுட்டிக்கப்படும் கந்தசட்டி விரதமாகும். விரத இறுதி நாளன்று இடம்பெறும் சூரன் போர் அனைவரது கருத்தையும் கவரும் ஒன்றாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயிலின் வருடாந்த திருவிழா ஆடி மாதப் பிரதமையிலே கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, பௌர்ணமி நாளிலே தீர்த்தத்துடன் பதினான்கு நாட்கள் நடைபெறும். இக்காலத் திருவிழாக்களைக் கோயில் நிருவாகத்தினரும், குடியினரும், ஏனையோரும் பொறுப்பேற்று நடத்துகின்றனர். முதலாம் இரண்டாம் நாள் திருவிழாக்கள் கோயில் நிருவாகத்தினரால் செய்யப்படுகின்றன. மூன்றாம் திருவிழா வன்னிமையினாலும், நான்காம் திருவிழா புதூர்க் குடி மக்களாலும் ஐந்தாம் திருவிழா அத்தியாகுடி மக்களாலும் செய்யப்படுகின்றன. கங்காணிப் போடி குடி மக்களால்ஆறாம் திருவிழாவுக்கான அனுசரணை வழங்கப்படுகின்றது. ஏழாம் திருவிழா பட்டியன்குடி மக்களுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. சவரத்தொழிலாளர்களால்எட்டாம் திருவிழா செய்யப்படுகின்றது. ஒன்பதாம் திருவிழா சலவைத் தொழிலாளர்களுக்குரியது. பத்தாம் திருவிழா பொன்னையா வன்னியனாராலும் பதினொராம் திருவிழாக் கோயில் குடி மக்களாலும் செய்யப்படுகின்றன. பன்னிரண்டாம் திருவிழாப் புலவனார் குடி மக்களாலும், பதின்மூன்றாம் திருவிழா சந்தாப்பணிக்கர் குடி மக்களாலும், பதினான்காம் திருவிழா சிறுகுஞ்சாப்போடி குடி மக்களாலும் பதினைந்தாம் நாள் திருவிழா பரமகுட்டி குடிமக்களாலும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. பதினாறாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறும்.

கொடியேற்றத்தின் பின்னர் நடைபெறும் பதினைந்து நாள் திருவிழாக்களில் நான்காம் நாட் திருவிழா முதல் முருகன் வள்ளி தெய்வயானை சகிதம் உலா வருவர். ஏழாம் திருவிழா முருகப்பெருமான் குதிரை வாகனத்திற் பவனிவருவார். பன்னிரண்டாம் நாள் திருவிழாவன்று நள்ளிரவில் முருகன் மயில் வாகனத்தில் உலா வருவார். அன்று முதல் காலைத்திருவிழாவில் மட்டும் சுவாமி உலாவருவார். எலி வாகனத்தில் பிள்ளையாரும் வீரபத்திரருடன் காளியும் சிங்கவாகனத்தில் வாகனத்தில் உலாவருவர். புனிதப் பெட்டியொன்றும் திருவிழாவின் போது உலா வரும். கொடியிறக்கத்தன்று இரவு இடும்பன் பூசை நடைபெறும். இடும்பன் பூசையின்போது பூசணிக்காய் பலியிடப்படும்.

திருவிழாக்காலங்களிலே தெய்வயானையம்மன் கோயில் மாத்திரம் திரை திறவாது பூசை நடைபெறுகின்றது. மூலஸ்தானம் முதல் ஏனைய துணைக் கோயில்களிலே திரை திறந்து பூசை நடைபெறும்.

## கோயிற் பரிபாலனமும் தொழும்புகளும்

இக்கோயிலின் நிருவாக முறையும் தொண்டூழியமும் கவனத்துக்குரியது. கோயில் நிருவாகத்தில் முதன்மை அதிகாரம் தேசத்து வன்னிமைக்குரியது. அதாவது மட்டக்களப்பு வன்னியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த வேளையில் கோயில் தொர்பான வழமைகள் வரையறை செய்யப்பட்டிருந்தன. முற்காலத் திருவிழாக்கள் குடி மக்களின் சேவைகளுடன் நில மானியங்களையும் அடிப்படையாகக்கொண்டு நடைபெறுகின்றன. மட்டக்களப்பிற் பெருங்கோயில்கள் அதிகாரப் பலம் கொண்ட தேசத்துக்குத் தலைமை வகித்த வன்னியர்களின் ஆதரவிலும் இயங்கின. கோயில்களையும் அவைசார்ந்த அமைப்புக்களையும் பாதுகாப்பதே ஆட்சியாளர்களாகிய வன்னியர்களின் பொறுப்பாக இருந்தது.[11]

சித்தாண்டி சித்திரவேலாயுத சுவாமி கோயில் நிருவாக முறையில் வன்னியர்களின் பங்கு பிரதானமானது. கோயில் வழமைகளையும் சொத்துகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வன்னிமைக் குரியதாக்கப்பட்டிருந்தது. குறிப்பாக இக்கோயிலின் திருவிழாக்காலங்களில் கிழக்கிலங்கையின் நாலா பக்கங்களில் இருந்தும் சைவ மக்கள் பெருந்தொகையாக யாத்திரை வருவது வழக்க மாயிருந்தது. அக்காலங்களில் கோயில் வளாகத்தில் ஒழுங்கினை நிலைநாட்டுவதும் யாத்திரிகர்களுக்கும் ஏனையோருக்கும் சொத்துக்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதும் ஆட்சியதிகாரம் உடைய வன்னியர்களின் பொறுப்பாக விருந்தது.[12]

இக்கோயிலின் ஆரம்பகால பரிபாலனத்தில் கழுபண்டார வன்னிமை, குஞ்சுறானை வன்னிமை, முடக்குஞ்சு வன்னிமை, நல்லதம்பி வன்னிமை முதலியோர் முதன்மை பெற்றவராக விளங்கினர். இவர்களில் நல்லதம்பி வன்னிமை ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்தவர் என்று சொல்லப்படுகின்றது.[13]

இக்கோயில் பரிபாலனத்தில் வன்னியர்களின் மேலாண்மை நிலவிய காலம் முதலாக வண்ணகர்களின் பங்கும் பணியும் குறிப்பிடத்தக்கது. கோயில் வண்ணக்கர்கள் தாய்வழி மரபில் மருமக்கள் தாய முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். சமுதாயத்தில் முதியவர்கள், செல்வாக்குள்ளவர்கள், சமயப்பற்றுள்ளவர்கள் என கருதத்தக்கவர்களை வண்ணக்கர்களாக நியமித்தனர். முற்காலங்களில் குடிகளில் இருந்தும் வண்ணக்கர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1872ஆம் ஆண்டு கழுபண்டார வன்னிமை கோயில் பரிபாலனத்தை பொறுப்பேற்ற காலத்தில் அவருடன் வண்ணக்கர்களாகக் காரளிப்போடி, அத்தியாப்போடி, வெள்ளைச்சாத்திரப்போடி,இளையதம்பிப்போடி, ஆகியோர் பொறுப்பேற்றிருந்தனர். 1892ஆம் ஆண்டு முதல் 1900 ஆம் ஆண்டு பாலிப்போடி வன்னிமையின் காலத்தில் சுக்குறுப்போடி, கந்தப்போடி, சம்பாப்போடி, குமானிப்போடி முதலியோர் வண்ணக்கராக நியமனம் பெற்றிருந்தனர்.[14] காலத்துக்குக் காலம் கோயில் வண்ணக்கர்களின் தொகையில் அதிகரிப்பைக் காணமுடிகின்றது. கோயிலின் பரிபாலனத்தைச் செய்யவேண்டிய பிரதான பொறுப்பு வன்னிமைக்கு உரியதாக்கப்பட்டுள்ளமையின் காரணமாக வன்னிமையின் மேற்பார்வையில் எல்லாக்கருமங்களையும் வண்ணக்கர்கள் நிறைவேற்றுவார்கள். இக்கோயிலின் பரிபாலன முறையானது முற்காலங்களில் ஆட்சி அதிகாரம் செய்தவர்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் இடையில் நிலவிய ஒருமைப்பாட்டினைப் புலப்படுத்துகின்றது. முன்பு குறு நிலப்பிரிவுகளுக்குத் தலைமை வகித்த வன்னிமைகள் கிழக்கிலங்கையின் பிரதான கோயில்களின் நிருவாகம் சார்ந்த செயற்பாடுகளை மேற்பார்வை செய்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்களின் ஆட்சியதிகாரம் படிப்படியாகக் குறைந்து போனது. பின்னர் அவற்றை முழுமையாக இழக்க நேரிட்டது. இருப்பினும் அவர்கள் கோயிற் பரிபாலனத்தில் உறுதிப்பாட்டினையும் தொடர்ச்சியையும் இன்னும் மரபு வழியாகப் பேணி வருகின்றமை கவனத்துக்குரியது.

மரபுவழியாகக் கோயிலுக்குத் தொண்டு செய்வோரைக் கோயிலார்[15] என அழைக்கும் வழக்கம் இங்குண்டு. வருடாந்த திருவிழாக்களிற் கோயிற் பணியில் இவர்களுக்குரிய இடம் பிரதானமானது. திருவிழாத் தொடக்கத்திலே கோயில் வன்னிமைக்கும், கோயிலார் சார்பில் இருவருக்கும் சங்கற்பம் செய்வது இதனை உறுதிப்படுத்துகின்றது. கோயிலின் வருடாந்த திருவிழா ஆரம்பமாகி நிறைவு பெறும் வரை இவர்களாலேயே கும்பம், வேல் ஆகியன எடுத்துச் செல்லப்படுகின்றமை குறிப்பிடற்குரியது.

கோயிலார் பரம்பரையில் வரும் பெண்களை வட்டுக்குத்துவோர்[16] என அழைக்கின்றனர். திருவிழாக்காலங்களிலே தினமும் ஒரு மரைக்கால் நெல்லைக்குற்றி இரண்டு கொத்து அரிசியை அமுது செய்வதற்குக் கொடுப்பர். கோயிலின் தொழும்பு செய்யும் கோயிலாருக்கு வருடமொன்றுக்கு இருபத்து நான்காயிரம் ரூபாய் வழங்கப்படுகின்றது. கோயிலுக்குத் தொழும்பு செய்பவர்களில் இவர்களுக்கே வேதனம் வழங்கப்படுகின்றமை அவதானத்துக்குரியது. மேலும் அறுவடைக்காலத்தில் ஊரவர்களாற் புதிர் நெல்லும்[17] வழங்கப்படுகின்றது. அத்துடன் கார்த்திகை ஆண்டுப்படி[18] என்னும் கொடுப்பனவும் இவர்களுக்கு உரித்தானது.

கோயிலின் தோற்ற காலத்தில் அங்கு வேடுவர் வழிவந்தவர்களே பூசை புரிந்துள்ளனர். பதினாறாம் நூற்றாண்டு வரைக்கும் பூசை புரிந்தவர்கள் பற்றிய தகவல்களை அறியமுடியவில்லை. பதினாறாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து குருக்கள் மடத்திற் குடியேறிய உலக குருநாத வம்சக்குருக்களைக் கொண்டு வந்து பூசை செய்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையும் இவர்களின் வம்சத்தினரே பூசை செய்து வந்துள்ளனர்.[19] பிற்காலங்களில் இவர்களின் வம்சவிருத்திக் குறைவு காரணமாகப் பிராமணக் குருக்களே பூசை வழிபாடுகளை நெறிப்படுத்தினர். 1977ஆம் ஆண்டு ஆடி மாதத்திலிருந்து கோயிலின் பூசகராக மகா கணபதிக்குருக்கள் முத்துசுவாமி ஐயரவர்கள் கடமை புரிந்துள்ளனர்.[20] பிற்காலங்களிலே பலர் கோயிலின் பூசகர்களாக இருந்துள்ளனர்.

தொகுத்து நோக்கின், கிழக்கிலங்கையின் பழமை மிகுந்த கோயில்களுள் சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலும் ஒன்று என்பதும், அதன் வரலாற்று மூலங்கள் இன்று வரைக்கும் மறைபொருளாக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. அவை கிடைக்குமாயின் சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலின் வரலாறு முழுமை பெறும் வாய்ப்புள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. குணராசா,க., *புவியியல் தேசப்படத் தொகுதி*, பக். 4 - 9.
2. சற்குணம்,ம.,"திருக்கோயில் திருமுருகன் ஆலயம்" *மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும்*, ப. 143.
3. நேர்காணல்: முத்துப்பிள்ளை, வயது – 69, விவசாயம், சித்தாண்டி, 16.07.2012.
4. சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிற் பரிபாலனத்திலே உண்டான பிணக்குகள் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட நீதி மன்றத்தில் 1936ஆம் ஆண்டு முதல் தற்காலம் வரைக்கும் இல.8234/Misc, இல.2603/Misc, இல.2777/Misc, இல.2556/Misc இல.2181/Misc இலக்கங்களையுடைய வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்குப் பிரதி 1 தொடக்கம் 176 வரையான பக்கங்களையுடையது.
5. வழக்கு இல: .2603/Misc, ப. 01.
6. மேலது, ப. 102.
7. ஆய்வாளர் அவதானம்: சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயில், 16.07.2012.
8. நேர்காணல்: சி.குமாரசாமி, வயது – 58, விவசாயம், குமாரர் கோயிலில் தெய்வம் ஆடுபவர். 16.07.2012.
9. நேர்காணல்: முத்துப்பிள்ளை, வயது – 69, விவசாயம், சித்தாண்டி, 16.07.2012.
10. கந்தையா,வி.சி., மு.கு.நூ., ப. 85.
11. மகாதேவன்,எம்., மு.கு.ஆ.க.,*இலங்கையின் இந்துக் கோயில்கள் பகுதி - 1*, ப. 71.
12. மேலது, ப.71.
13. Canagaretnam,S.O., **Monograph of the Batticaloa of the Eastern province, Ceylon**,p. 33.
14. மகாதேவன்,எம்., மு.கு.ஆ.க.,*இலங்கையின் இந்துக் கோயில்கள் பகுதி - 1*, ப. 71.
15. சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலிலே முற்காலந்தொட்டு கோயிற் திருப்பணிகளைச் செய்து வருபவர்களை கோயிலார் என அழைப்பர். இவர்களின் பணிகளில் ஆண்களாயுள்ளோருக்கு உள்வீதியைத் துப்பரவு செய்தல், மணியடித்தல், மேளம் அடித்தல், சமைத்தல் முதலியனவும், பெண்களாயுள்ளோருக்கு நெல்லுக்குற்றுதல், விறகு எடுத்தல், வெளிவீதி சுத்தஞ்செய்தல் முதலியனவும் அடங்கும்.
16. சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலிலே பூசைக்குத் தேவையான அரிசிச் சாதத்தினை தயார்படுத்துவதற்குத் தேவையான அரிசியினை குற்றுபவர்களை வட்டுக்குத்துவோர் என அழைக்கும் வழக்கம் உண்டு.
17. .சித்தாண்டி ஊரவர்களின் பிரதான தொழில் விவசாயம். குறிப்பாக முன்மாரி வேளாண்மைக் காலத்தில் தாம் செய்கை பண்ணிய வேளாண்மை விளைச்சலின் அறுவடையினை முதலில் கோயிலுக்குக் கொடுக்கும் வழக்கம் உண்டு. இதனையே புதிர் நெல் என அழைக்கின்றனர்.
18. கார்த்திகை ஆண்டுப்படி என்பது,சித்தாண்டி சித்திரவேலாயுதர் கோயிலில் கார்த்திகை மாதத்துத் திருவிழாவுக்கு முன்னர் வன்னியனார் முதலான சகலருக்கும் வழங்கப்படும் மானியமாகும்.
19. கோயிலின் விபரங்கள் அடங்கிய பழைமையான கையெழுத்துப்பிரதி.
20. வழக்கு இல.2603/Misc, ப. 167.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை
# வில்லூன்றிக் கந்தசாமி கோவில்

– திரு. ஆ. ஆ. ஜெயரட்ணம் –

கிழக்கிலங்கையில் திருக்கோணமலையில் முருகனுக்குரிய பழம்பெரும் கோயிலாக விளங்குவது வில்லூன்றிக் கந்தசாமி கோயிலாகும். சோழச் சிற்ப முறையில் இவ்வாலயத் திருவுருவங்கள் அமைந்திருப்பது அதன் பழமையினைப் பிரதிபலிப்பதும், பஞ்சலோகத்திலான ஆலய மூலவிக்கிரமே உற்சவ காலங்களில் வீதி உலா வந்து அருள்பாலிப்பதும் இத்தலத்திற்கே உரித்தான தனித்தன்மை மிக்க அம்சமாகும்.

பெரும்பாலும் சைவக் கோவில்களில் மூல மூர்த்தியாக விளங்குவது சிலா விக்கிரகமே. (கற்களாலான சிற்பம்) ஆனால் இக்கோவிலில் பஞ்சலோகத்தில் உருவான வள்ளி தெய்வானை சமேத ஆறுமுகப் பெருமானே மூல மூர்த்தியாக வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகள் முன்பிருந்தே இத்தலத்தில் ஆகம சாஸ்திர விதிப்படியே தினமும் பூசைகள், திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு திருவேரகத்தில் வாழ்ந்து வந்த சிவசுப்பிரமணியசர்மா என்பவர் தான் வணங்குவதற்கென குமாரநாத சிற்பியை கொண்டு வந்து பஞ்சலோகத்தினால் சண்முகநாதம் பெருமானை உருவாக்கினார். இதனால் கருணையுற்ற பெருமான் சிவசுப்பிரமணிய சர்மாவுக்கு சாயுச்சிய பதவியை அருளவே கலக்கமுற்று சுற்றத்தோர் இத்திருவுருவத்தை சிதைத்து விட எண்ணினர். இதன் விளைவால் சண்முகப் பெருமான் தமக்கென ஓர் தலத்தை தேடிப் புறப்பட்டவர் போல் சிற்பியின் கனவிற் தோன்றி என்னை இலங்கைக்கு செல்லும் கப்பலில் ஓர் பேழைக்குள் வைத்து அனுப்பி விடு என்று சொல்லவே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பியும் அவ்வாறே செய்தார். இதன் பின் இச் சண்முகப் பெருமானின் திருவுருவம் திருகோணமலை முடமண்டான் என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்டது தொடர்பாக இரண்டு வித கதைகள் உள்ளன. ஒன்று இலங்கையின் கிழக்குத் திசைநோக்கி வந்து கொண்டிருந்த கப்பல் காற்று இல்லாமையினால் நின்றதாகவும், பின் மாலுமியின் கனவிலே தோன்றிய சண்முகப் பெருமான் தான் வந்த பேழையைக் கடலில் வீசிவிடக் கூறியதாகவும், அம்மாலுமி அப்படியே செய்ய கப்பலும் நகர்ந்தாகவும் சில காலங்களின் பின் கரையூரவர்களின் வலையில் பேழை ஒன்று வந்ததாகவும் காலங் காலமாய் ஓர் பூர்வீக கதை உண்டு.

பழைய ஓர் ஆவணத்தின் படி ஒல்லாந்தர் காலத்தில் (1762) இத் திருவுருவங்கள் வந்த பேழையைத் திருக்கோணமலைக்கு அருகாமையில் வந்த பாய்க்கப்பல் ஒன்று காற்றில்லாமல் நின்றதாகவும் அப்போது சுவான் சம்மட்டியர் சவரியப்பரும் அவரது மகனும் படகொன்றில் போய் அரிசி ஏற்றுமதி பண்ணி வந்தபோது அக்கப்பலுக்கு சமீபமாக வந்ததாகவும், அப்பொழுது அந்த கப்பற்காரர்கள் அவர்களை சைகைகாட்டி அழைத்து இவ்வூரின் பெயரை வினவியதாகவும், இவ்வூரின் பெயர் திருக்கோணமலை என்று கூறிய வுடன் வடதேசத்தவர்களில் ஒருவர் இப்பெட்டியை திருக்கோணமலையில் இருக்கும் யாரிடமாவது கொடுக்கும் படி சொன்னதாகக் கூறி இப்பெட்டியை இவர்களிடம் கொடுத்ததாகவும் குறிக்கப்பட்டுள்ளது. பின் அவர்கள் கரைக்குச் சென்று அப்பெட்டியை உடைத்துப் பார்க்கும் போது பஞ்சலோகத்தினாலான ஆறுமுகமுடைய கந்த சுவாமியாரும் இரண்டு அம்மன்களும், வேலாயுதம் ஒன்றும், ஓர் பார்கவதப் பொல்லும், சிவ பூசைச் சாமான்களும் பணமாய் எழுபத்தைந்து இறைசாலும் அப்பெட்டியில் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

அதன்பின் அவ்வூர்க் குருகுலப் பகுதியினரில் அக்காலத்தில் இருந்த சீவலை முதலித்தம்பி எனும் வெள்ளாளப்பிரபுவுக்கும் ஊர்மணியமாய் இருந்த ஸ்ரீ. வே. ம. கதிர்காமர் மணியம் அவர்களுக்கும் அறிவித்து அவர் ஊரவர்கள் எல்லோரையும் அழைத்து ஓர் கூட்டம் வைத்து முடமாண்டான் என்னும் இடத்தில் மகாராஜா மலைக்குச் சமீபமாக சித்திரை மாதம் (சுபானு வருடம்) 1763 ஆம் ஆண்டு அத்திவாரம் இட்டு, ஸ்தூபி, மண்டபம், தீர்த்தக் கிணறு ஆகியவற்றைக் கட்டி ஆவணி மாதம் (சர்வசித்து வருடம் கலியுகம் (4867) 1765 பார்த்திப வருடத்தில்) கும்பாபிஷேகம் இந்தியாவில் இருந்து வந்த ஸ்ரீபரசுராம ஐயரால் நிறைவேற்றப்பட்டது.

நித்திய பூசைகள் கிரமமாய் நடைபெற்று வந்தன. ஆவணி மாதத்திலே திருவிழா கொண்டாடப்பட்டது. சுவாமி தீர்த்தம் ஆட அருகே இருந்த சிறிய குளம் தூர்வாரி தீர்த்தக்குளமாக்கப்பட்டது. பின் வே.ம.கதிர்காமமணியம் மூப்படைந்ததால் கோயில் கருமங்களை கொண்டு நடாத்துவதற்கு சுவான் சம்மட்டியாரின் மகன் சவரியப்பர் நியமிக்கப்பட்டார். ஸ்ரீ. வே. ம. கதிர்காமமணியம் இறைவனடி சேர, அவரது மகன் க. ம. வேலப்பர் ஊர் மணியமாகப் பட்டங் கட்டப்பட்டார். பின் 1782 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களின் யுத்தக் கப்பல்கள் இவ்வூரைத் தாக்கியதால் மக்கள் சிறிது காலம் சிதறி ஓடி அண்டியுள்ள கிராமங்களில் வசித்தார்கள். அமைதி திரும்பியவுடன் தங்கள் இடத்துக்கு வந்ததும் வழமைபோல் காரியங்கள் நடைபெற்றன.

ஸ்ரீ சவாரியப்பன் மூப்படைந்த காரணத்தால் தனது சகோதரனின் மகன் ஸ்ரீ பெரிய ஆனந்தரை இக்கோயிலை நிர்வாகம் செய்ய எல்லோருடைய சம்மதத்துடன் நியமித்தார். திரும்பவும் 1782இல் ஆங்கிலேயர் இவ்வூரைத் தாக்க இக்கோயிலும் அழிந்துவிட ஸ்ரீ பெரிய ஆனந்தரும் காயமுற்றுப் பின் சிவபதமடைந்தார். ஸ்ரீ பெரிய ஆனந்தரின் மகன் ஆனந்தர் வினாசித்தம்பியும், ஊர்மணியம் க. ம. வேலப்பரும் (கதிர்காம மணியத்தின் மகன்) பலரும் இத் திருவுருவத்தை ஓர் பெட்டியில் வைத்துப் பூட்டித் தம்பலகாமம் திருக்கோணேசர் ஆலயத்தில் பாதுகாப்பாக வைத்தார்கள். சில காலத்திற்கு பின் இம் மூர்த்தியைத் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்திற் பிரதிஸ்டை செய்ய எத்தனித்தும் மூன்று முறையும் தடைப்பட்டது. சில காலம் சென்ற பின் மேற்குறிப்பிட்ட ஸ்ரீ.க.ம. வேலப்பருடைய சொப்பனத்தில் முருகன் தோன்றித் தன்னை வில்லூன்றி என்னுமிடத்திற் பிரதிஸ்டை செய்யுமாறு கூறியதாகவும் அவ்வாறே ஸ்ரீ. க. ம. வேலப்பரும் சிவலை முதலித்தம்பியும் சில கரை யூரவர்களும் மேற்படி விக்கிரகத்தை வில்லூன்றி என்னுமிடத்தில் உள்ள விக்னேஸ்வரர் ஆலயத்தில் வைப்பதாகத் தீர்மானித்து வில்லூன்றியிலேயே வைரவநாத குருக்கள் சுப்பையர் பொருட்டு பாலப்பசெட்டியார் கட்டுவித்த விக்கினேஸ்வர ஆலயத்தில் வைத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆலயத்தை பின்னும் சில காலம் சென்ற பின்னர் விஸ்தீரமணமாகக்கட்டி இந்த மூர்த்தியை தானே பிரதான மூர்த்தியாக அதிலமைக்கக் கருதி அதற்கு வேண்டிய நிலத்தை 1809ஆம் ஆண்டு தை மாதம் 5ஆம் திகதி இராமநாதஐயர், சிந்தாமணி ஐயர், வைரவநாதக் குருக்கள், முத்தையா சுப்பையா, நாராயண விஸ்வநாத பட்டர் என்னும் நான்கு பிராமணர்களும் தர்ம சாசனம் செய்து கொடுத்தார்கள். இத்தரும சாசனத்தின் படி இப் பிராமணர்கள் நான்கு பேருடைய ஆண் வம்சத்திற்கு இக்கோயில் பூசை உரித்து உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சாலிவாகனசகம் (1734) கலியுகம் (4911) பிரசோற்பத்தி வருடம் தை மாதம் 5ஆம் திகதி முகூர்த்தத்தில் அஸ்திவாரமிடப்பட்டு மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் முதலான, 3 மண்டபங்களும், (2 மண்டபங்கள் ஒட்டால் வேய்ந்ததும் ஒன்று ஓலையால் வேய்ந்தும்,) களஞ்சிய வீடும், கிணறு, யாகசாலை, வைரவசூலந்தாபிக்க மால், சுற்றுமதிற்சுவர் யாவும் கட்டிமுடித்து வெளிவீதியில் ஒரு கேணியும் வெட்டுவித்து க. ம. வேலப்பர் மணியமும் திருகோணமலை 2ஆம் நம்பரில் இருக்கும் கரையூரவர்களுமாய் முடிப்பித்தார்கள்.

கும்பாபிஷேகத்திற்காக முகூர்த்தம் நியமித்துக் கலியுக 4914இல் ஸ்ரீமுக வருசத்தில் ஆவணி மாதம் கி. பி. 1813 கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. அக்காலம் முதலாக நித்திய பூசை உற்சவம் முதலான வழிபாடுகள் யாவும் கிரமமாய் நடந்து வந்தன. பின் 1815 ஆம் ஆண்டைக் கொண்ட பின்னொரு உறுதியின் பிரகாரம் வேலன் கந்தன் என்பவர் மடப்பள்ளி, தீர்த்தக் கிணறுக்கு வேண்டிய நிலங்களைக் கோயிலிற் பராமரிப்புக்காரர்களிடம் கொடுத்ததாகத் தெரியவருகின்றது. ஸ்தம்ப மண்டபம் வயிரவநாத வன்னித்தம்பியும், விழா மண்டபம் சின்னக்குட்டிப்பிள்ளையும், மகாமண்டபம் முத்தையராலும், பிறர் பொருளாலும் கட்டுவித்து பின் சுவாமிநாத வன்னிபமும், மறுபேரும் பழுது பார்த்து மதில் முழுவதும் கதிரவேலு முதலியாருடைய பொறுப்பிலே கட்டுவித்து வாகனசாலை சிற்றம்பலம் சுப்பிரமணியரும், வயிரவநாத சின்னக்குட்டியரும், மறுபேரும் கட்டுவித்தது. பிள்ளையார் கோயில் கு. மூத்ததம்பியார் கட்டுவித்தது. தண்டாயுதபாணி கோவில் ஐயம்பிள்ளையாலும் பிறருடைய செலவிலும் கட்டப்பட்டது. நாகதம்பிரான் கோயிலும் மணிக்கோபுரமும் வைரவநாதர்சின்னக்குட்டியாரின் முயற்சியில்கட்டுவித்தது. கோபுரவாசல் தருமரும் சண்முகப்பிள்ளையும் கட்டுவித்தது வைரவர் கோயில் பராமரிப்புக்காரன் மாரிமுத்து கட்டுவித்தது. பின் கு. மூத்ததம்பியினால் பழுதுபார்க்கப் பட்டது.

வடக்கு மதில் பழுதடைந்த பின் சின்னக்குட்டியாப் பிள்ளையினாற் கட்டுவிக்கப்பட்டது. மடம் சின்னக் குட்டியாரும், சுப்பிரமணியரும் ஊரார் பொருளிற் கட்டு வித்தது. தீர்த்த மண்டபம் முத்தையராலும் பிறர் பொருளிலும் கட்டுவித்துப் பின் சுவாமிநாத வன்னிபமும் மறுபேரும் பழுது பார்க்கப்பட்டது. வசந்த மண்டபம் கு. மூத்தம்பியார் கட்டுவித்தது. இந்தக் கோவிலிலே அதிகப் பற்றான திருப்பணிகள் பெரிய கடைத்தெரு, கரையூர், வில்லூன்றி, முதலியார் தெரு ஆகிய பற்பல இடங்களிலிருந்த புண்ணியவான்களினால் காலத்துக்கு காலம் செய்து வரப்பட்டது. பின் 30.07.1925 ஆம் ஆண்டு ஓர் கட்டுத்தேர் செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது. 1939 ஆம் ஆண்டு கதிரவேலுப்பிள்ளை (ஆசிரியர்) என்பவரால் ஓர் தேர் முட்டி கட்டுவிக்கப்பட்டது. பின் 1945 ஆம் ஆண்டு கோணமலை குமாரகுலசிங்கம் என்பவரால் நவக்கிரக கோயில் கட்டுவிக்கப்பட்டது. பின் இக்கோயிலில் இருந்த கட்டுத்தேர் சிதைந்த நிலையால் பொது மக்களின் பொருளுதவியில் ஓர் சித்திரதேர் திரு. இரா. சம்பந்தம் (பா. உ) தலைமையில் ஓர் திருப்பணிச்சபை உருவாகி 1982 ஆம் ஆண்டு புரட்டாதி 15ஆம் திகதி செய்வித்து வெள்ளோட்டம் விடப்பட்டது. பின் அதற்கு ஓர் உறுதியான தேர் கொட்டகை 1983 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. பராமரிப்பு உரிமையை பெற்றிருக்கும் இரு சந்ததியர்களது முன்னோர்களாற் செய்விக்கப்பட்டமை பல.

இவர்களுள் வேளாள பகுதியைச் சேர்ந்த கதிரவேலு முதலியார் தாமும் சிற்சில திருப்பணிகளைச் செய்வித்தது மாத்திரம் அல்லாமல் கோயில் பாவனைக்காகப் பெருந் தொகையான பொருளமைந்த ஆபரணங்களையும், கோயிற் செலவுக்காக மூன்று துண்டு நிலங்களையும் கொடுத்தார். இந்த திருப்பணிகளால் போலும் இருவரும் கோவிற் பராமரிப்பாளர்களில் ஒருவராக ஏற்றுக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரிட்டது. இவர் காலந்தொட்டு, அதாவது 1817ஆம் ஆண்டு முதல் இந்த கோவில் பாராமரிப்பு குறித்து இவரது பரம்பரையினர் உரித்துடையவர்கள் ஆனார்கள். 1809 ஆம் ஆண்டு கரையூரவர்களது பரம்பரை மாரிமுத்து பரம்பரையி லிருந்து வருகின்றது. 1809 ஆம் ஆண்டு தொட்டு நிலச் சாசனத்தின்படி அதில் ஒப்பமிட்டு நான்கு பிராமணர்களின் ஆண்வழிச் சந்ததியினர் இக்கோயில் பூசை அதன் வருமானங்கள் யாவற்றிற்கும் உரித்துடையவர்களாவர். 1809ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட வைரவநாதக் குருக்கள் பின் அவர் மகன் வைத்திலிங்கக் குருக்கள், பின் அவர் மகன் இராமலிங்க குருக்கள் பின் அவர்மகன் பூரணேந்தீஸ்வரகுருக்கள் சிவசுப்பிரமணிய குருக்கள், தொடர்ந்து அவர் மகன் சுரேனேந்தஸ்வர சர்மாவும், அவர் மறைவிற்குப் பின் அவர்களின் மைந்தர்கள் சுதாகர குருக்கள் (தற்போதைய கோயில் பிரதம பூசகர்) அவர் சகோதரர் சிவாகர குருக்களும் கோயில் பூசைக் காரியங்களை செய்கின்றார்கள்.

இரு மணியக்காரர்களில் ஒருவரான குருகுல வம்சத்தினரின் பரம்பரையில் கதிர்காம மணியமும் (1763 AD) என்பவரும், பின் சுவான் சம்மட்டியார் சவாரியப்பர் (1782 AD) என்பாரும், அதன் பின் பெரிய ஆண்டார் (1795 AD) என்பவரும், அதன் பின் க. ம. வேலப்பமணியமும், (1809ம் ஆண்டு கையொப்பமிட்ட ஒருவர்) அதன் பின் ஆனந்தர் வினாசித்தம்பி (சவரியப்பரின் பேரன்) அதன் பின் ஸ்ரீ கணபதிப்பிள்ளை (வேலப்பமணியத்தின் மகன்) அதன் பின் கந்தப்பர் மாரிமுத்து (கணபதிப்பியின் சகோதரர்) அதன் பின் மா. ம. கணபதிப்பிள்ளை (மாரிமுத்துவின் மகன்) அதன் பின் முத்து ஆனந்தரும் (கணபதிப்பிள்ளையின் மருமகன்) அதன் பின் ஆ. குமாரசுந்தரம் குஞ்சித்தம்பி வைத்தியர் (ஆனந்தரின் மகன்) அதன் பின் அவர் மகன் சண்முகம் சுப்பிரமணியம், (குமாரசுந்தரத்தின் தாயின் சகோதரியின் மகன், அவர் மகன் ச. ஞானகணேசனும் அதன் பின் தற்பொழுது அவர் மகன் ஞா. கதிர்காமதாசனும் மணியக்காரர்களில் ஒருவராக கடமையாற்றுகின்றார்கள்.

மற்ற மணியக்காரராகிய முதலியார் வம்சத்தில், முதலில் கதிர்வேல் முதலியார் (1809ம் ஆண்டு சாசனத்தில் ஒப்பமுற்ற ஒருவர், அதன் பின் சுவாமிநாத முதலியாரும், அதன் பின் பொன்னையா முதலியாரும், அதன் பின் டி. நல்லதம்பி என்பவரும், அதன் பின் ம. ம. சுப்பிரமணியம் என்பவரும், அதன் பின் அவர் மகன் சு. அழகராஜா என்பவரும் அதன் பின் அவரது மருமகன் ரா. மயில்வாகனம் என்பவரும், பின் அ. சுப்பிரமணியம் (அழகராஜாவின் மகன்) என்பவரும், அதன்பின் அவர் இனத்தவராகிய ஆனந்தம் ஆசைப்பிள்ளை ஜெயரட்ணம் என்பவரும் (1991ம் ஆண்டிலிருந்து) நிர்வாக மணியக்காராய் கடமையாற்றினர்.

தற்போது சுதாகர குருக்கள் பிரதம பூசகராகவும் அவரது சகோதரர் சிவகர குருக்கள் உடன் சேர்ந்து பூசைக் கருமங்களை நடத்துகிறார்கள். இரு மணியக்காரர்களாக திரு. ஞா. கதிர்காமதாசன், திரு. ஆ. ஆ. ஜெயரட்ணம் ஆகியோர் தற்போது கடமை ஆற்றுகின்றார்கள். 1991ஆம் ஆண்டிற்கு பின் கோயிலில் பற்பல முன்னேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன. வசந்த மண்டப வாயில் சிறு கோபுரம் கீர்த்திதாஸ் என்பவரால் கட்டுவிக்கப்பட்டது. மகா மண்டப அலங்கார வேலைகள் பொதுமக்கள் பணத்திற் செய்யப்பட்டது. நாராயணர் கோயில் கீர்த்திதாஸ் முன்னின்று கட்டுவித்தது.

பின் முருக பக்தர்களின் நீண்ட நாளைய ஆசையாகிய பெருமானுக்கு ஓர் ராஜகோபுரம் அமைக்கும் முகமாக 2004 ஆம் ஆண்டு ஓர் திருப்பணிச்சபை திரு. இரா சம்பந்தன் தலைமையில் அமைக்கப்பட்டது. அதன் பின் 2004 ஆம் மார்கழியில் வந்த கடல் சூறாவளியினாலும் நாட்டின் போர்ச் சூழலாலும் இக்கைங்கரியம் நெடுநாளாகத் தடைப்பட்டது. பின் பெருமானின் திருவருளால் இந்தியாவில் இருந்து அழைத்து வரப்பட்ட கலியபெருமாள் விஜயன் என்ற சிற்பாசாரியினால் 2008ம் ஆண்டு ஆடி மாதம் 14ஆம் திகதி பெருமானுடைய இராஜ கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

ராஜகோபுர வேலைகளுடன் தொடர்பாகப் பல திருப்பணி வேலைகளும் நடைபெற்றன. மடப்பள்ளி, யாகசாலை, வசந்தமண்டபம், தேர்முட்டி யாவன சிற்ப கலை அம்சங்களுடன் புதுப்பிக்கப்பட்டன. மணிக்கோபுரம் புதிதாக அமைக்கப்பட்டது. இவை யாவும் பல கொடை வள்ளல்களாலும், பொதுமக்களின் அன்பளிப்பாலும் செய்விக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி இராஜ கோபுரத்திற்கு எம்பெருமானுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நிறைவேறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெருகலம்பதி சித்திரவேலாயுதர் கோயில்

– திரு. ந. சுபராஜ் –

ஈழத்தில் பிரசித்தி பெற்ற தேசத்துக் கோயில்களுள் வெருகலம்பதியும் ஒன்றாகும். இது திருகோணமலைப் பிராந்தியத்தின் தென்பகுதியான கொட்டியாரம் பற்றின் எல்லையிலுள்ள வெருகல் எனும் இடத்தில் உள்ளது. சித்திரவேலாயுதர் எனும் நாமத்துடன் முருகன் இத்தலத்தில் வீற்றிருக்கின்றார். கிழக்கிலங்கையின் திருகோணமலை நகரத்திலிருந்து தெற்கே 37 மைல் தொலைவிலும், மட்டக்களப்புக்கு நகருக்கு வடக்கே 47 மைல் தொலைவிலும் வெருகலம்பதி அமைந்துள்ளது. திருக்கோணேஸ்வரத்தின் தெற்குத்திசையில் அமைந்திருப்பதால் இத்தலத்தினை தென்வெருகல் என நூலாசிரியர் (வெருகல் சித்திரவேலாயுதர் காதல்) அழைப்பதாக உரையாசிரியர் பண்டிதர் வடிவேல் அவர்கள் குறிப்பிடுகின்றார். இதற்கு 'தேசத்தின் தென்பகுதியில் அமைந்த தலமாதலால் இப்பெயர் கூறப்பட்டது' என வேறொரு விளக்கத்தினையும் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

ஆலயத்தின் தோற்றம் பற்றிய கர்ண பரம்பரைக் கதையொன்று காணப்படுகின்றது. இக்கதை வெருகலம்பதி பற்றிப் பாடப்பட்ட வெருகல் சித்திரவேலாயுதர் காதல் எனும் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள விடயங்களை அடியொற்றியது. கோயிலைப் பற்றிய சில வரலாற்று அம்சங்களோடு கற்பனைக் கதைகளும் அக்கதையில் கலந்துள்ளன என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

தென்னிந்தியாவில் திருநெல்வேலி எனும் இடத்தைச் சேர்ந்த நல்லைநாதச் செட்டியார் என்பவர் தொழுநோயால் துன்புற்றிருந்தவேளை தன் நோய் நீங்குவதற்காக பல தலங்களுக்குச் சென்று வழிபாடியற்றிய போதும் நோய் நீங்கவில்லை. இதனால் சிவபூமிக்குச் சென்று அங்கு தென்பகுதியில் உள்ள கதிர்காம முருகனைத் தரிசனம் செய்தால் நோய் நீங்கும் எனக் கருதிப் பயணமானார். இந்தியாவிலிருந்து கப்பல் பயணம் மேற்கொண்டு கொட்டியாரத்துறை எனும் இடத்தில் வந்திறங்கினார். அங்கிருந்து காட்டு வழியாக கதிர்காமத்தை நோக்கிப் புறப்பட்டார். அக்காட்டினுள் அவரைக் கண்ட வேடர்கள் தம் அம்பு, வில்லுடன் அவரைச் சூழ்ந்து கொண்டனர். செட்டியார் தான் கதிர்காமத்திற்குச் சென்று கொண்டிருப்பதைக் குறிப்பால் உணர்த்தினார். உடனே வேடர்கள் அவருக்கு உண்பதற்கு தேன் கலந்த இறைச்சி, படுப்பதற்கு மான் தோல் ஆகியவற்றைக் கொடுத்து விட்டுச் சென்றனர்.

நடந்து வந்த உடல் நோவினால் தூக்கம் வராமல் துன்புற்ற செட்டியார் சிறிது நேரத்தில் தன்னையறியாமல் தூங்கிவிட்டார். அவ்வேளை அவரது கனவில் முருகப் பெருமான் தோன்றி, "அப்பனே! நீ தொழுநோயினால் துன்புற்றாய், இந்நிலையில் என்னை வணங்கிக் கதிர் காமத்திற்கு யாத்திரை செய்யத் துணிந்தாய், உனக்கு என் மீதுள்ள பேரன்பினை மெச்சினேன், கதிர்காமம் வெகுதொலைவில் உள்ளது, நீ அங்கு கஷ்டப்பட்டு யாத்திரை செய்ய வேண்டாம், வெருகற்பதிதான் கதிர்காமமாக அமைந்துள்ளது" என்று சொல்லி மறைந்தார்.

கனவை நினைத்துக் கொண்டே எழுந்த செட்டியார் தொழுநோய் நீங்கியிருப்பதனைக் கண்டு ஆச்சரியத்துடன், இறைவனின் கருணையை எண்ணி உள்ளம் கசிந்தார். பின்பு முருகப்பெருமானின் அருள் சொட்டியாருக்கு தொடர்ந்து கிடைத்தது. இறைவனின் வேண்டுதலின் பெயரில் அவருக்கு கோயில் கட்டுவதற்கு ஆயத்தமானார் செட்டியார். இருப்பினும் செட்டியார் அதற்கான வசதிகள் எதுவுமின்றி இருந்தார். அப்போது இறைவன், "அரிப்பு எனும் இடத்தில் திரவியக்கிடாரங்கள் குவிந்து கிடக்கின்றன. அதன் மூலம் திருப்பணி செய்க" என அருள் வாக்கு கூறியருளினார். செட்டியார் விரைந்து செயற்பட்டு அத்திரவியங்களைக் கொண்டு வெருகலில் அழகியதோர் கோயிலை அமைத்து, அதற்கு கும்பாபிஷேகம் செய்து, நித்திய, நைமித்தியக் கிரியைகளை குறைவின்றி நடாத்தி வந்தார்.

அக்காலத்தில் கண்டிநகரை ஆட்சிசெய்த மன்னன் ஒருவனிடம் இரத்தினங்களைப் பரீட்சிக்கும் வேலையில் இணைந்த செட்டியார் சித்திரவேலாயுதர் சுவாமிகளுக்கு பதக்கம் செய்வதற்காக ஒரு மாணிக்கத்தை வெருகலுக்கு எடுத்து வந்து விட்டார். இதை அறிந்த மன்னன் அவரை தலை மட்டும் வெளியே தெரியும்படி நிலத்தினுள் புதைத்து பட்டத்து யானையைக் கொண்டு மிதிக்கும்படி செய்தான். ஆனால் யானை செட்டியாருக்கு அருகில் கூடச் செல்லாமல் பலத்த சத்தமிட்டது. இதனைக் கண்ட அரசன் அவரை அழைத்து உண்மையினைக் கூறும்படி பணிவுடன் கேட்டான். செட்டியாரும் தான் மாணிக்கத்தை எடுத்துச் சென்ற நோக்கத்தைக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேட்ட அரசன் மிக மகிழ்ந்து, தானும் ஆலயத்திற்குச் சென்று, முருகப்பெருமானை தரிசனம் செய்து, பல திருவாபரணங்களையும் கொடுத்து, பல வயல் வெளிகளைத் திருத்துவித்து, அதனை ஆலயத்திற்காக விட்டதோடு, செட்டியார் எடுத்து வந்த மாணிக்கத்தை அவரிடமே கொடுத்து அதனை இறைவனுக்குச் சாத்தும் படி கூறினான். செட்டியாரும் மகிழ்ச்சியுடன் அவற்றை ஏற்று பதக்கம் சாத்தி மகிழ்ந்தார். செட்டியாரின் இத்திருப்பணிகளால் அவரின் வம்சத்தினர் அங்கு சென்று வழிபாடியற்றி வருகின்றனர். அவர்களுக்கு இங்கு முன்னுரிமை கொடுக்கப்படுகின்றது. இதனை,

*"திட்டமுடன் முன்னாளிற் செய்த நல்லநாதனெனுஞ்*
*செட்டி வம்சத்திலுள்ள செய்ய பிரதானிகள் போய்*
*பன்னரிய பாதம் பணிந்து தொழுதேத்துகையில்..."*

என வெருகல் சித்திரவேலாயுதர் காதல் கூறுகின்றது.

இவ்வாலயத்திற் கிடைத்துள்ள சாசனமொன்று ஆலய பரிபாலனத்திலும், திருப்பணிகளிலும் ஈடுபட்ட செட்டியார்கள் பற்றிக் கூறுகின்றது. அச்சாசனம் 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. குறிப்பாக கோயில் மதில்கள் தொடர்பான திருப்பணிகளைச் செய்தவர்களைப் பற்றி அது குறிப்பிடுகின்றது. அவர்களில் இருவரின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன எனவும், அவர்களில் ஒருவர் 'தேசத்து வன்னிமை', மற்றவர் 'திமர்சா' எனும் யானை வர்த்தகர்களில் ஒருவனாக இருக்கலாம் எனவும் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார். இச்சாசனத்து முடிவில் 'வடபுறம் செட்டியள் உபயம்' என்ற வசனம் உள்ளது. கோயிலின் வடக்கு மதில் 'செட்டி' எனும் வணிக சமூகத்தவரின் திருப்பணியாகும் என்பதையே அந்த வசனம் குறிப்பிடுகின்றது. வெருகற் சித்திரவேலாயுதர் கோயில் வெளிநாட்டு வாணிபத்திலும் ஈடுபட்டிருந்த வணிகரின் ஆதரவைப் பெற்றிருந்தது என்பது இச்சாசனத்திலுள்ள குறிப்புகளால் உணரப்படுகின்றது என அவர் மேலும் தெரிவிக்கின்றார். பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த இவ்வாலயம் பல்வேறு காரணங்களால் திருவிழாக்கள் எதுவுமின்றி மூடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக பூசைகள், கிரியைகள் ஏதுமின்றி ஆலயங்கள் மூடப்பட்டிருந்தன. இதற்கு 1985 ஆம் ஆண்டு, 2006 ஆம் ஆண்டு காலங்களை குறிப்பாக கூறமுடிகின்றது. இருப்பினும் இச்சூழலுக்கு மத்தியிலும் ஆலயத்தின் செயற்பாடுகள் பாரம்பரியம் அழியாது இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இவ்வாலயத்தில் 1994ஆம் ஆண்டு பாலஸ்தானம் மேற்கொள்ளப்பட்டு, 1999ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின் மீண்டும் 2008ஆம் ஆண்டும் நிர்வாகத்தினரால் கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வெருகலம்பதியின் ஆலயபரிபாலன சபையில் சிந்து நாட்டவர்க்கே முக்கிய பதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. குளக்கோட்ட மன்னன் இந்துமதம் சிறப்படைய கிழக்கிலங்கையிற் பல பல கோயில்களைப் புனரமைத்து அவற்றிலே திருப்பணிகளைச் செய்வதற்காகச் சிந்து நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட மக்களே இச்சிந்து நாட்டவர்கள். இவர்கள் கிழக்கிலங்கையிற் கொட்டியாரப்பற்று எனும் இடத்தில் வந்திறங்கி இலங்கைத்துறை, முகத்துவாரம், ஈச்சிலம்பற்று, சேனையூர், முத்துச்சேனை, மல்லிகைத்தீவு, பள்ளிக்குடியிருப்பு போன்ற பகுதிகளிற் குடியேற்றப்பட்டனர். இவர்களின் ஜீவனோபாயத்திற்காக வயல் நிலங்கள் வழங்கப்பட்டன. இவர்களே ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி தேவஸ்தானத்தைப் பராமரித்து வருகின்றார்கள்.

இவ்வாலயத்திற் தற்போது வருடாவருடம் 18 நாட்களைக் கொண்ட திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றது. ஆவணி மாத உத்திரத்தில் திருவிழா ஆரம்பமாகின்றது. இவ்விழா தொடங்கி முதல் ஆறு நாட்கள் வரை மூத்த பிள்ளையாரும், அஸ்திரதேவரும் உள்வீதி வலம் வருவர். ஏழாம் நாள் சந்திக்காவல் நடைபெற்றவுடன் மூத்த பிள்ளையாரும், அஸ்திரதேவரும் உள்வீதியும், வெளிவீதியுமாக வலம் வருவர். ஒன்பதாம் நாளன்று ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமியும் இவர்களுடன் எழுந்தருளி வலம் வருவார். இவ்விழாவில் இறுதி ஆறு நாட்கள் இடம் பெறும் திருவிழாக்களே மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

பதின்மூன்றாம் நாள் இடம்பெறும் கதிர்காமச் சுவாமி விழா சிறப்புமிக்கது. அவ்விழாவில் பல நூற்றுக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் காவடி எடுப்பர். நோய் நீங்கிய மாடுகளும் காவடி எடுப்பது ஒரு சிறப்பம்சமாகும். பதினெட்டாம் திருவிழா செட்டிவிழாவாகும். அத்தினத்தில் வேட்டைத்திருவிழா நடைபெறும். வெருகலம்பதியிலுள்ள தாமரைக் குளத்திற் கருகில் அவ்விழா இடம் பெறுவது வழமை. அதில் சூகரவேட்டை சிறப்பானது. 'சூகரம்' என்பது பன்றியைக் குறிக்கும். குருக்கள் வேலாயுதம் ஒன்றைக் கொண்டு பன்றி வடிவில் செய்யப்பட்ட உருவத்திற்கு எறிவார். இதுவே வேட்டைத்திருவிழாவின் முக்கிய அம்சமாகும். அன்றைய அதிகாலை தீ மிதிப்பு வைபவம் நடைபெறும். பொதுவாக அம்மன் ஆலயங்களிலேதான் தீ மிதிப்பு இடம் பெறும். ஆனால் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் சில முருகன் ஆலயங்களிலும் தீ மிதிப்பு இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன் பின் தீர்த்தோற்சவத்துடன் திருவிழா நிறைவு பெறுகின்றது. ஈழத்துப் பழம்பெரும் முருகன் ஆலயங்களுள் வெருகல் சித்திரவேலாயுதர் ஆலயமும் தனிச்சிறப்புடன் விளங்குகின்றது. (ந. சு.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் கந்தசுவாமி கோயில்

யாழில் இசை மீட்டுப் பரிசிலாகப் பெற்ற யாழ்ப்பாணத்தை யாழிலு மினிய நல்லாட்சி செய்தவன் மறு மையை நாடினான். யாழ் மண்ணில் இன்றும் யாழிசை ஒலிக்கிறது. இசை மன்னன் வாழ்ந்த மண்ணை ஆளவந்த சிங்கையாரியன் செகராஜன் நல்லூரில் அரசாண்டான். யாழ்ப்பாண நிர்வாகத் தின் கீழமைந்து நிர்வகிக்க வல்ல தகுதி வாய்ந்த பிரதானிகளை இந்தியாவி லிருந்து வரவழைத்தான். இவ்வரச னால் வகுக்கப்பெற்ற பல பிரிவுகளில் இணுவில் திருவூரை மையமாகக் கொண்ட பெரும்பிரிவில் திருக்கோவ லூர் பேராயிரமுடையான் என்பவன் அரச பணியேற்றான். இவன் சிறந்த இறைபக்தியும், கலைஞானமும், விவ சாய நுண்ணறிவும் நிரம்பியவன். தமது பக்தி மேலீட்டினால் தில்லைநாயகி யாம் சிவகாமி அம்பாளை இணுவில் கிழக்கில் குடிகொள்ள வைத்து வழி பட்டவன்.

இவன் இணுவில் மேற்கில் வாழ்ந்து குடிமக்களுடன் ஒன்றிணைந்து விவ சாயத்தை மேம்படுத்தினான். தமது வாழ்வாதார நோக்கில் தாம் பயிரிட்டு விளைந்த நெல்லை இவ்வூர் குடிமக் களின் உதவியுடன் அறுவடை செய்து வீட்டருகே பாதுகாப்பில் குவித்து வைத்திருந்தான். அன்று பணியாற்றிய குடிமக்கள் அச்சூழலின் நாற்புறமும் அங்காங்கேயுள்ள தமது வதிவிடத்திற் தங்கினர். பேராயிரவனும் தமது வீட்டின் திண்ணை மீது ஓய்வெடுத் துக்கொண்டிருந்தான். கருகுமாலை நேரம் பேராயிரவனின் வீட்டுச் சூழலில் பெரியதோர் தீப்பிளம்பு தோன்றியது. இதனைச் சற்றுத் தூரத்தில் வதியும் குடிமக்கள் கண்டதும் தாம் அடுக்கிய நெற்போர் தீப்பற்றியதோ? என்னும் சந்தேகத்தில் யாவரும் அங்கு ஓடிச் சென்றனர்.

சென்ற இடத்தில் அசம்பாவிதம் ஏதும் தென்படாததால் யாவரும் வியந் தனர். அவர்களைக் கண்டதும் பேரா யிரவன் அவ்விடம் வந்த நோக்கத்தைக் கேட்டறிந்தான். இறையருளை வியந் தவன் தான் அவ்விடத்திலிருந்தபோது சற்றுமுன் இரு அந்தணச் சிறார்கள் தாம் காஞ்சியிலிருந்து வந்ததாகவும் தம்மை ஆதரிக்குமாறும் கோரினர். அவர்களை ஆதரிப்பதாகக் கூறி உபசரிக்க முன் வந்த போது அவர்கள் மறைந்து விட் டனர். அவர்கள் தாம் இப்பகுதிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததை பக்தர்களாகிய உங்களையும் உணர வைக்கவே தீப்பிளம்பு தோன்றிய தாகும் என்றான்.

யாழோசை ஏற்கெனவே யாழ் மண்ணில் பாய்ந்தது. அவ்விசை இம் மண்ணில் ஊறியதை மெஞ்ஞானப் புலவர் ஒருவர் பாடியது போல் "ஏழிசை வாழ்ந்திடும் இணுவையம் பதி"யெனக் காண்கிறோம். அரச நிர்வாகியாகவும், கலைஞனாகவும், விவசாயியாகவும், இறை பக்தியாளனாக வும் அமைந்த நிலையால் இன்றும் இணுவையூரில் சிவநெறியும், விவசாய மும், இசை மரபும் வளம் பெற்றுள் ளதை ஆரம்பகாலத்திலிருந்தே அறிய முடிகிறது.

இறையருளின் சித்தமும் பேராயிர வனின் பக்தியும், திருவருளும், குடி மக்களின் நல்லாதரவும் கைகூடியது. ஏற்கெனவே தீப்பிளம்பு தோன்றிய புனித பூமியில் (ஆலயத்தின் இன்றைய அமைவிடம்) ஒரு சுபதினவேளை இரு தற்காலிகக் குடிசைகளில் காஞ்சி கந்த கோட்டத்துக் கந்தப்பெருமானும் வட பால் காஞ்சி கந்தகோட்டத்துக் கால பைரவரும் குடியமர இறையருள் பாலித்தது. யாவரும் காஞ்சி கந்த கோட்டத்து கந்தப்பெருமான் என்றும் இணுவைக் கந்தப்பெருமான் மற்றும் வைரவப்பெருமான் என்றும் பேரன்பு பூண்டு வழிபட்டு வந்தனர். அக்காலச் சூழலில் தென்னிந்திய ஆலயக்கட்டட ஆகம விதிமுறைகளுக்கமைவான கட்டடம் அமைக்கப்பட்டது.

இவ்வாலய அமைப்பில் கருவறை யும் உரிய மண்டபங்களும் பரிவார மூர்த்திகளில் விநாயகர் உட்பட மற்றும் மூர்த்திகளுக்கும் அமைவான உள்வீதிச் சுற்று மதில்களும் அமைந்தன. வெளி வடக்கு வீதியில் (கருவறைக்கு நேர் வடக்கில்) தென்பகுதியில் வைரவப் பெருமானுக்கோர் தனி ஆலயமும் அமைத்தனர். அக்கால (பல்லவர் கால) கட்டுமானப் பணியில் கருவறையில் மூலமூர்த்தியின் பீடமாக இரண்டடி உயரங்கொண்ட கல்யானையொன்று வைக்கப்பட்டிருந்தது. மேலும் மண்ட பங்களின் தூண்கள் முருகைக்கற்களால் பெரியவட்ட வடிவங்கொண்டவை யாகவும் தாழ்வாரத் தூண்கள் குறுகிய உயரமுடையவையாகவும் மேலும் முருகனாலயத்துக்கப்பால் வடக்கே வைரவர் சந்நிதியும் வாசலின் கிழக்கே நேரில் தீர்த்தக் கிணறும் அமைந் திருந்தன. (அண்மையில் இக்கட்டடம் சார்பில் வெளிவந்த ஆய்வைப் பின் அறிவோம்)

இக்கட்டமைப்புகள் யாவும் காஞ்சி கந்தகோட்டத்து முருகனாலய அமைப் பாகவே அமைந்ததெனலாம். குடி மக்களின் வழிபாட்டுமுறையும், சைவத் தமிழ்ப்பண்பாடும் ஓங்கி உயர்ந்தன. காலங்கள் கடந்தன. அரச பிரதானி களும் மாறினர். ஆலய மானியங்களும் ஒதுக்கீடுகளும் சிறப்பாகவே அமைந்தன. மூன்றாம் வீதிக்கெனவும் நிலங்கள் ஒதுக்கப்பட்டன. செயற்படவில்லை. தற்போது இணுவில் அறிவாலயம் அமைந்த காணியின் தெற்கிலிருந்து மேற்கு வரை சென்று தற்போதுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்கல்லூரியின் வடபாற் சென்று வடக்கில் இன்று இளந்தொண்டர் சபை அமைந்துள்ள இடம் தொடர்ந்து நாற்புறமும் மூன்றாம் வீதிக்கென ஒதுக்கப்பட்டதாக எமதூர் முதியோர் சொல்லிய ஐதீகம். உறுதியாகக் கூறும் சாத்தியமில்லாத போதும் வடக்கே யுள்ள காணி இக்கோயிலாதனமாகும். மேற்கில் திண்ணைப்பள்ளியமைந்தது. தெற்கில் அந்தணர்கள் குடியமர்த்தப் பட்டனர்.

அன்றைய ஆலயப்பணியாளர் களின் வதிவிடமாகவும் இருந்தன. பிற்காலத்தில் ஏனைய காணிகள் ஆட்சிமுறையில் மாற்றமேற்பட்டதால் இன்றைய உரிமையாளர்களிடம் நிலை பெற்றது. (இவை எப்பவோ முடிந்த காரியம், நாமறியோம், இதில் ஒரு பொல்லாப்புமில்லை - யோக சுவாமி கள்)

இலங்கையில் காலூன்றிய அந் நியர் தமது மத, மொழி வளர்ச்சி கருதி எம்மண்ணில் ஏற்படுத்திய அழிவால் இவ்வாலயம் இருந்த இடமே தெரிய வில்லை. இங்கு குடியிருந்த மக்கள் சமயம் மாறாது வாழையடி வாழை யாக முருகனையே வழிபட்டு வந்தனர். சமய மரபு, பண்பு, ஒழுக்கம், வாழ்க்கை நெறி யாவும் மாறாது அன்றுபோல் தொடர்ந்தன. இச்சூழலில் வாழ்ந்த குழந்தையர் வேலாயுதர் நெடுங்கால மாக உடைமையாக வைத்திருந்த காணி யில் தமது வாழ்வாதாரமாக வெற் றிலை பயிரிட்டு வந்தார். (ஏற்கெனவே முருகன் குடிகொண்ட காணி தெய்வீக பூமியாகும். இத்தெய்வீக பூமியில் தெய்வீகப் பயிராம் வெற்றிலை (மகா லட்சுமி)யின் தொடர்பும் தெய்வீக மானது. இப்புனித பூமியில் முருகப் பெருமான் வந்துறையும் நற்காலம் குடிகொண்டதால் வெற்றிலைப்பயிர் வளர்ந்தது இறையருளேயாகும்.)

## இரண்டாவது தடவையாகவும் அமைந்த கந்தசுவாமிகோயில்

தெய்வீகமும் இறையருளின் நிலை யான நற்கருணையும் நிலையற்ற மனித வாழ்வில் பண்பட்ட பூமியில் வாழ்ந்து இறையருளுக்காக ஏங்கும் புனித சீவன் களை உய்விக்கும் இறையருள் அவ்வப் போது தோற்றம் பெறுவது இயல் பாகும். காஞ்சி கந்தகோட்டத்துக் கந்தப் பெருமான் ஏற்கெனவே புண்ணிய பூமி யென உறுதிப்படுத்திய இடம் இணுவை யம்பதியாகும். எம்மவரை உய்விக்க வென அருள் பாலிக்கும் பெருவிருப் பில் குடிகொண்ட முருகப்பெருமான் மக்கள் மீது மிக்க கருணைகொண் டவர். மக்களை நல்வாழ்வு வாழ வகை செய்தவர்.

இச்சமகாலம் கலியுகம் என்னும் கொடுங்காலமாகும். பிரளய காலம் போன்ற கொடிய காலம் சீவன்களுக் காகவே அமைந்ததால் எம்மண்ணில் ஆலய அழிவும் சமயமொழிப் பாதிப் பும் ஏற்பட்டன. ஆனால் இம்மண்ணில் ஆலயம் அழிந்தாலும் எம்மக்களின் இறைபக்தி, நற்பண்பு, சமயம், கலை கலாசாரம், செய்தொழிலில் வற்றாத பற்று யாவும் சிறப்பாக இருந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த முருகப்பெருமான் எம்மை அருள் பாலிப்பதன் பேரில் இங்கு குடிகொள்ளத் திருவுளுங் கொண்டார்.

முருகப்பெருமான் ஏற்கனவே குடிகொண்ட இடத்தில் தெய்வீக மூலிகை பயிராகியும் அதனைப் பேணி வந்தவர் ஏழையானாலும் தூய சிந்தனையும் வற்றாத சமயப்பண்பும், நற்சிந்தனையுமுடைய குழந்தையர் வேலாயுதர் என்னும் விவசாயியைக் கனவிற் கண்டு வியக்க வைத்தார்.

முன் வினைப்பயனும், முருகப் பெருமானின் திருவிளையாடலும், இணுவையூர் மக்களின் முருகபக்திக்கு வித்தாக அமைந்ததால் பக்தரான குழந்தையர் வேலாயுதர் உறக்கத்தைத் தழுவிய புனித இரவுவேளை காஞ்சி கந்தகோட்டத்து முருகப்பெருமான் காட்சி தந்தார். தாம் காஞ்சியிலிருந்து வருவதாகவும் வெற்றிலைத் தோட்டத்தில் குடிகொள்ள இருப்பதால் தம்மை ஆதரித்து வழிபடுமாறும் கூறினார். இயல்பாகவே வறுமையான விவசாயி, ஆதரித்து வழிபடக்கேட்டதும் கள்ளங் கபடமற்ற தமது இயல்பு நிலையில் ஆதரிக்கும் இடம் நிவேதனஞ் செய்யும் முறைகளைக் கேட்டார். எம்பெருமான் வேலாயுதரிடம் வெற்றிலைத் தோட்டத்தில் நொச்சித்தடியொன்று நட்டிருப்ப தாகவும் அதன் தென்பகுதியில் தமது பாதங்களால் மிதித்திருப்பதாகவும் கூறினார். மேலும் உமது நாளாந்த உணவை நிவேதனஞ் செய்தாலே போது மென்று கூறியதும் மறைந்தருளினார்.

இறையருளின் திருவிளையாடலை எண்ணி மகிழ்ந்த வேலாயுதர் பொழுது விடிந்ததும் தமது உறவினர் சிலருடன் தமது வெற்றிலைத் தோட்டத்தை நாடினார். இரவு முருகப் பெருமான் கூறியது போல நொச்சித் தடியொன்று தழைத் திருந்தது. அதன் தெற்கே ஆறுமுழத் தூரத்தில் கிழக்கு நோக்கியவாறு இரு திருவடிகளின் சுவடுகள் மிகத்துல்லிய மாகத் தென்பட்டது. அதைக்கண்டதும் அத்திருவடிச் சுவட்டைத் தொட்டு வணங்கினார். அன்றே சுபதினமாத லால் திருவடிகளின் சுவட்டை மைய மாக வைத்து சிறிய குடிசை அமைத் தார். அன்று விரதமிருந்து ஆசாரசீல ராக அக்குடிசையைத் தூய்மையாக்கிப் பாதச் சுவடிருந்த இடத்தில் அழகிய வேலொன்றை வைத்துப் பூசித்தார். அன்று தமது குடும்ப உறுப்பினர் களான மனைவி பிள்ளைகள் சகிதம் புதுப்பானையிற் பொங்கலிட்டு முருக னுக்கு நிவேதனஞ்செய்து மலர்தூவி வழிபடவும் அவரின் பிள்ளைகள் மற்றும் கூடிநின்றோர் யாவரும் முருக பக்தி மேலிட இறையருளை வேண்டி திருமுறைகள் ஓதி மகிழ்ந்தனர். இவ் வரிய நிகழ்வால் இச்சூழலிலுள்ள பலரும் ஒன்றிணைந்து தினமும் ஆசார சீலராகத் திருமுறைகள் ஓதிப் பக்தி பூர்வமாக வழிபட்டின்புற்றனர்.

குழந்தையர் வேலாயுதரைத் தொடர்ந்து முருகபக்தர்களான இவ் வூர் பொது மக்களும் ஆலயவழிபாட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைக் கிரமமாகச் செய்து வந்தனர். விசேட நாட்களில் பொங்கலிட்டு முருகனுக்குப் படைத்து அங்கு கூடி யிருந்த அடியார்களுக்கு பகிர்ந்து வழங்கியும் மனநிறைவடைந்தனர். இவ்வாறு பக்திபூர்வமாக வழிபட்டு ஆலயப் பணிகளிலும் தம்மாலான உதவி புரிந்தோர், வாழ்வில் மேம்பட்டு நன்மையடையவும் ஆலயம் வளர்ச்சி யுற்றது.

### விளாத்தியடி வைரவரின் தோற்றம்

குழந்தையர் வேலாயுதர் தமது இறைவழிபாட்டுடன் ஆலயத்தையும் சூழலையும் தூய்மையாக்கிப் பல அற்புதங்களையும் கண்டார். அவரின் ஆவல் வடபகுதியிலும் புல்பூண்டுகள் செடிகளை அகற்றியபோது அவ் விடத்தில் விளாத்திமரமொன்று காணப் பட்டது. அச்சூழலில் முட்செடிகளும் பற்றைகளும் கூடுதலாகக் காணப் பட்டதால் வழிபடுவோர் சிலரும் சேர்ந்து சுத்தஞ் செய்தனர். அச்சமயம் அற்புதமான வைரவர் சூலமொன்று தென்பட்டது. அதனையும் சுத்தஞ் செய்து அவ்விடத்தில் ஒரு சிறு குடிசை யமைத்து அன்று முதல் அவ் வைரவருக் கும் பூசை செய்து வந்தார்.

வேலாயுதர் ஆலய சேவையில் இணைந்ததால் அவரின் புதல்வர் களான இராமநாதன், கந்தர், கதிர் காமர், அருணாசலம் ஆகியோரும் இணைந்தனர். பொதுமக்கள் பலரும் சிரமதானப் பணி மூலம் தூய்மை யாக்கி வைரவர் ஆலயத்தையும் வழி பட்டுப் பல நன்மையடைந்தனர். விளாத்தி மரத்தருகே தோன்றியதால் விளாத்தியடி வைரவர் என அன்புடன் போற்றிவழிபட்டனர்.

### தீர்த்தக்கிணறு

இவ்வாலயத்தின் புதுமைகளாற் கவரப்பட்ட மக்களின் சிரமதானப் பணி தொடர்ந்தது. அவ்விடத்தி லிருந்து கிழக்கு நோக்கிச் சுத்திகரிப்புப் பணி தொடர்ந்தது. வைரவரின் வாசல் நேரில் காவிளாய் மற்றும் பல்லினச் செடிகளை அகற்றினர். அச்செடிகளின் கீழிருந்த இரு பெரிய தவளைகள் ஈர மான மண்ணைத் தோண்டிக்கொண் டிருக்கக் கண்டனர். யாவற்றையும் அகற்றி ஈரமண்ணையும் அப்புறப் படுத்த முனைந்தனர். வட்டவடிவமான தோற்றத்தில் மண் இலேசாகவும், ஈரப்பதமாகவும் இருந்ததால் மேலும் தோண்டினர். வட்ட வடிவமாக இருந்த பகுதியை மேலும் தோண்டியபோது இன்று காணும் தீர்த்தக்கிணறு தென் பட்டது. அதனைச்சுத்தஞ்செய்து (அன்று சீமெந்து இல்லாததால்) சுண்ணச் சாந் தினாற் கட்டி வைரவர் தீர்த்தமாக உபயோகித்தனர். இக்கிணறு இன்று மக்களின் பிணி தீர்க்கும் மருந்தாகவே பாவிக்கப்படுகிறது. ஆலயத்திற்கு வழி பட வருவோர் இப்புனித நீரில் நீராடித் தமது உடற்பிணிகளை இன்றுவரை தீர்த்து வருகின்றனர். இத்தீர்த்தக் கிணற் றின் பெருமையால் இன்று ஒரு நாளுக்கு 300 பேருக்கு மேல் குடிக்கும் நீரை வீடுகளுக்கு எடுத்ததுச் செல்வதை தினமும் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீர்த்தக்கிணறும் துலாவும்

பொது மக்களின் நன்மைகருதி இக்கிணற்று நீரை இலகுவில் எடுப் பதன் பேரில் அன்று நிறுவப்பட்ட பனந்துலா இன்றுவரை (காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டு) பாவனையி லுள்ளது. வேறெங்கும் காணமுடியாத துலாவின் பாவனையை இங்கு காண முடிகிறது.

### பொங்கல்கொட்டில்

எம்மக்கள் பக்தி மேலீட்டினால் விசேட காலங்களில் பொங்கலிட் டனர். அவர்களின் வசதி கருதி அக் காலம் நிறுவப்பட்ட பொங்கல் கொட்டில் உதவுகிறது. காலத்துக் காலம் திருத்தியும் வேய்ந்தும் உப யோகிக்கின்றனர். இக்கொட்டில் தீர்த்தக்கிணற்றின் கீழ்த்திசையின் அண்மையில் இருப்பதால் தீர்த்தக் கிணற்றிலிருந்தே பொங்கலுக்கான நீரையும் பெறும் வாய்ப்பையும் காஞ்சிப் பெருமானும் விளாத்தியடி வைரவரும் அருள் பாலிக்கின்றனர்.

### இரண்டாவது அறங்காவலரான அருணாசலம்

குழந்தையர் வேலாயுதர் இவ் வாலயத்தைத் தொடக்கி நெடுங் காலமாக அயராது பணியாற்றிய போது இவரின் மகன் அருணாசலம் என்பவர் நாள்தோறும் காலையில் வந்து ஆசார சீலராய் தந்தையின் பூசை மற்றும் இதரபணிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்து வந்ததுடன் பக்தி பூர்வமாகத்திருமுறைகள் ஓதியும் முருக பக்தியை நிலைநாட்டினார். இவர் தமது சேவையின் அனுபவத்தால் தந்தை முதுமை காரணமாக வலு விழந்தபோது தாமே சகல பொறுப்பு களையும் ஏற்றார்.

அருணாசலம் அவர்கள் ஆலய அறங்காவலராக வந்ததும் பூசையின் நிறைவில் விபூதி வழங்கும்போது முருகனின் அருளால் திருவாக்குச் சொல்லும் பேறுபெற்றார். இதனால் தம்மை நாடி வருவோரின் உடல் உளப் பிணியை திருநீறிட்டு மணிமந்திர மோதிக் குணப்படுத்தினார். தமது ஞான உணர்வால் மூலிகை மருந்து களையும் வழங்கி மக்கள் பணியைச் சிறப்பித்தார். அடுத்து இவ்வாலய வழி பாட்டிற்கென வருவோரின் முருக பக்தியை மேலோங்கச் செய்வதன் பேரில் முதன் முதல் கந்தபுராண படனம் படிக்கும் சிறப்பையும் ஏற்படுத்தினார்.

அருணாசலம் அவர்களின் பக்தி மேலிட்ட ஆலய பூசை உடல், உளப் பிணியுடன் வருவோருக்குத் திரு நீறிட்டும், மூலிகை மருந்துகள் வழங்கி யும், கந்தபுராண படன ஏற்பாடு செய் தும் அருஞ்சேவை செய்வதால் இவ் வாலயத்தை நாடி மிகக்கூடுதலாக மக்கள் வரத் தொடங்கினர். தந்தை யால் நிறுவப்பட்ட குடிசை பாவனைக் குப் போதாதிருந்தது. பொதுமக்களின் தூண்டுதலால் இவ்வாலயத்தைச் செங் கற்களாற் கட்டமுன் வந்தார். நாளாந்தம் தம் பிணியகற்ற வருவோரும் போதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி வழங்கினர். இதன் பேறாக முருகப்பெருமானின் செங்கற்கோயில் விரைவில் கட்டிமுடிக்கப்பட்டு வேற் பெருமானை இப்புதிய கருவறையில் நிலைநாட்டி 1765 இல் கும்பாபிஷேக மும் செய்தனர். பூசைகளும் வழிபாடும் சிறப்பாக நடைபெற்றன. யாவும் பக்தி மயமாகவே அமைந்தன.

### வெள்ளை வைரக்கல் திருப்பணி

வழிபடுவோரின் உருவேறத் திரு வேறவும் ஆலயப் பொலிவும் முருகப் பெருமானின் திருவருளும் அற்புதமும் நிறைந்தன. அருணாசலம் அவர்களின் பணி முதுமையையும் நோக்காது அயராது தொடர்ந்தது. ஆலயத் திருப்பணி மேலோங்கும் காலம் வர வும் வழிபடுவோரின் ஒத்தாசையும் மிகுந்ததால் வெள்ளைக்கல்லினால் ஆலயத்திருப்பணியைத் தொடக்க ஆரம்பித்தார். நீடிய காலம் அயராது இறைபணியாற்றிய அருணாசலம் அவர்கள் தமது முதுமையால் உடல் வலுவிழந்த காரணமாகத் தமது மூத்த மகன் சுப்பிரமணியம் அவர்களை மூன்றாவது அறங்காவலராக நியமித்த தும் ஓய்வு பெற்றார்.

### அ. சுப்பிரமணியம்

இப்பெரியார் தந்தை வழியைப் பின்பற்றி ஆலயப்பொறுப்பேற்றதும் ஆலயத்திருப்பணியில் கூடுதலான கவனமெடுப்பதன் பேரில் பூசை கடமை களைச் செய்ய அந்தணரை நியமித் தார். தந்தையைப்போல இவரும் திரு நீறிட்டு உடல் உளப்பிணியகற்றியும் அருஞ்சேவையாற்றினார். இவர் புண் வைத்தியத்தில் சிறப்படைந்தார். இவ ரும் முதுமையுடன் இயற்கை எய் தினார்.

### நான்காவது அறங்காவலரான சு.ஆறுமுகம்

தந்தை சுப்பிரமணியம் அவர் களின் மறைவையொட்டி அவரின் மகன் ஆறுமுகம் அவர்கள் ஆலயப் பணியை ஏற்றார். இவர் முருகனருளால் திருவாக்குச் சொல்வதிலும் சிறப் படைந்தார். ஆலயத்தை உயர்வடையச் செய்வதன் பேரிற் சுறுசுறுப்புடன் இயங்கினார். தம்மை நாடி வரும் உடல் உளப்பிணியார்களுக்குத் திருநீறிட்டு மணிமந்திரமோதியும் மூலிகை மருந்து கள் வழங்கியும் குணப்படுத்தினார். இதனால் யாவரும் இவரின் ஆலயத் திருப்பணிக்கு இயன்றளவு உதவி வந்தனர். பெரிய ஆலயமாகவும் கட்டு மானப்பணியும் பெரியளவில் இருந்த தால் ஆலயத்திருப்பணி நிதி வளத்தால் நலிவுற்றது. ஆறுமுகம் அவர்கள் கவலை யடைந்தார்.

### முருகப்பெருமானின் அற்புதம்

தமது பக்தனின் ஆலயப்பணியை துரிதப்படுத்த எம்பெருமான் திருவுளங் கொண்டார். ஒரு சுபதின இரவு ஆறுமுகம் அவர்களின் கனவிற் தோன் றிய முருகப்பெருமான் கோமேஸ் என் னும் ஆறுமுகமுதலியிடம் தாவடிக்குச் சென்று அவர் மூலம் ஆலயத்திருப் பணியைச் செய்யுமாறு கூறி மறைந் தருளினார். அதே சமயம் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுகமுதலியின் கனவிலும் தோன்றி இணுவில் கந்தசுவாமி கோயிலை கட்டுவிப்பதற்காக அவ்வாலய அறங் காவலரான ஆறுமுகம் வருவார். வேண்டிய உதவிகளைச் செய்து ஆலயத் திருப்பணியை நிறைவு செய்யு மாறு கூறி மறைந்தருளினார்.

பொழுது விடிந்ததும் அறங் காவலரான ஆறுமுகம் அவர்கள் தாவடிக்குச் சென்று இணுவில் கந்த சுவாமி கோயிற்திருப்பணிக்கு உதவு மாறு வேண்டினார். இருவரும் முருகப் பெருமானின் அற்புதமான திருவிளை யாடலை எண்ணி வியந்தனர். ஆறுமுக முதலி அவர்கள் தமது தம்பியாரின் உதவியுடன் இவ்வாலயத் திருப்பணி யைப் பொறுப்பேற்று வெள்ளைக் கற்களைப் பொளிவு செய்து சிறப்பாக நடாத்திவந்தார். கட்டுமான வேலை களும் துரிதமாக நடைபெறுகிறது.

## அணிற்பிள்ளை வடிவில் வந்த முருகப்பெருமான்

தமது ஆலயப்பணியை முருகப் பெருமான் ஆவலாகக் கண்காணித்து வரும்வேளை ஒரு பணியாளர் ஒரு கோறைக்கல்லைச் சுவரில் வைத்துக் கட்டியுள்ளார். அக்கல் கோறையான தைப் பணியாள் அவதானிக்கவில்லை. அணில் வடிவத்தில் வந்த முருகன் அக்கல்லின் மீது பலமுறை குதித்து விளையாடியது. இதனை அவதானித்த பணியாள் அணிலை எறிந்து துரத்தி விட்டார். அன்றிரவு முருகப்பெரு மான் அறங்காவலரின் கனவற் தோன் றிச் சுவரில் கோறைக்கல்லொன்று வைத்துக் கட்டப்பட்டுள்ளதாகவும் அவ்விடத்துக்கு வந்தால் தாம் அத னைக் காண்பிப்பதாகவும் கூறி மறைந் தருளினார்.

பொழுது விடிந்ததும் அறங் காவலர் கட்டட வேலை நடைபெறும் இடத்துக்குச் சென்று அவதானித்தார். பணியாட்களும் சுறுசுறுப்பாகப் பணி யாற்றுகின்றனர். அதே சமயம் அணிற் பிள்ளையொன்று குறிப்பிட்ட கல்லின் மீது குதித்து விளையாடியதையும் கண்டார். முருகனை நினைந்தவாறு கட்டடப்பணியாளரிடம் சொல்லிக் குறிப்பிட்ட கல்லை அகற்றுவித்தார். கல் கோறையாகக் காணப்பட்டதால் அதனை அகற்றி வேறொரு கல் வைத்து நிரப்புமாறு பணித்தார். புதிய கல் மாற்றப்பட்டது. அணிலும் மறைந்து விட்டது. இருவரும் முருகப் பெரு மானின் திருவிளையாடலை எண்ணி வியந்தனர்.

இவ்வாறு முருகப்பெருமானின் கண்காணிப்பில் கட்டட வேலைகள் நடைபெறுவதை யாவரும் எண்ணிப் பெருமானை உள்ளன்போடு வழி பட்டுத் தியானித்த வண்ணம் சுறுசுறுப் பாகவும் பணியாற்றி நிறைவு கண் டனர். இதன் பேறாக ஆறுமுகம் அவர் களால் ஆலய கும்பாபிஷேகம் 1852 இல் வெகுசிறப்பாக நடைபெற்றது. அக்காலத்தில் நிறைவு செய்யப்பட்ட கோயிலின் அன்றைய நிலையையும் இங்கு குறிப்பிடுவது சிறப்பாகும்.

ஆலயத்தின் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம் யாவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை வைரக்கல் பொளிந்து கட்டப் பட்டது. விநாயகர் முதலான மூர்த்தங் கள் உள்வீதியின் பிற்சுவரோரமாகக் கட்டப்பட்டுள்ளது. உள்வீதியில் கிழக்கு, தெற்கு மற்றும் வடகீழ் வீதிகள் மட்டும் ஓட்டினால் வேயப்பட் டிருந்தது. மிகுதி வேலைக்கான தூண்கள் (உருளை வடிவில்) நிறுத்தப் பட்டிருந்தன. கூரை வேலை செய்ய வில்லை. உள்வீதிச் சுற்று மதில் கட்டப் பட்டிருந்தது. திருமஞ்சனக் கிணறும் பாவனையில் இருந்தது. வசந்த மண்டபம், யாகமண்டபம், தம்ப மண்டபம் யாவும் ஓட்டினால் வேயப் பட்டிருந்தன. உள்வீதியை மூடிய மதிலுக்கு வெளியே வடக்கில் விளாத் தியடி வைரவர் தனியான மண்டபத் தில் அருள் பாலிக்கிறார். வாசலில் தீர்த்தக்கிணறும் இக்கிணற்றின் கிழக்கே கிடுகால் வேயப்பட்ட பொங்கல் கொட்டிலும் மட்டுமே காட்சி தந்தன. பிற்காலத்தில் வாசலில் (உள்வீதிக்கு கிழக்கே) தற்போது கோபுரம் அமைந் தது வரை நீண்ட விசாலமான முன் மண்டபமும் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்

– பண்டிதர் இ. வடிவேல் –

இந்த ஆலயம் திருக்கோணமலைப் பட்டினத்தின் இருதய ஸ்தானம்போல் அமைந்திருக்கின்றது. திருகோ–ணமலைப் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் பேருந்து நிலைத்திற்குச் சமீபத்தில் டொக்கியாட் வீதிக்கு அருகாமையில் உள்ளது. ஆலயத்திற்கெதிரே பரந்த விளையாட்டு மைதானமும், அதையடுத்து விரிந்து பரந்து கிடக்கும் இந்து சமுத்திரமும் இவ்வாலயத்திற்கு இயற்கையழகை ஊட்டிக் கொண்டிருக்கின்றன.

ஈழநாட்டின் தலைசிறந்த புண்ணிய ஷேத்திரமாகிய பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை இவ்வாலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய, கோணேஸ்வரப் பெருமானின் கிருபாகடாட்சம் அம்பாளுடைய ஆலயத்தில் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்தில் நிற்கும்போது ஏற்படுகின்றது. ஆலயத்தின் உள்ளும், புறமும் எப்பொழுதும் புனிதமாகவேயிருக்கும். இது ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் அருட்செயலென்றே கூறலாம். இதனால் இவ்வாலயத்தைச் சிறப்பாகவும், புனிதமாகவும் வைத்திருப்பதில் ஆதீன கர்த்தருக்கும், அடியவர்களுக்கும் அக்கறை இருந்து வருகின்றது.

இவ்வாலயத்தின் வரலாறுகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறமுடியவில்லை. என்றாலும் இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரையாக வழங்கிவரும் 'கதைகள்', அக்கதைகளோடு தொடர்புடையதாய் தற்போது ஆலயத்திலிருக்கும் விக்கிரகம், தகளி, வாகனம், மற்றும் பொருட்களாகியவற்றை ஆதாரமாகக் கொண்டு முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று இருந்திருக்க வேண்டுமென்று சரித்திர பேராசிரியர் செ. குணசிங்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் இவ்வாலயம் அதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழிபாட்டுக்குரிய ஸ்தலமாக இருந்துவந்துள்ள தென்பதைத் துணிந்து கூறலாம். தற்போது இவ்வாலயமிருக்கும் இடத்தில், பன்னெடுங்காலத்திற்கு முன்பு நிலத்தை அகழ்ந்த போது ஒரு தகளி கிடைத்ததாகவும் அதற்குள்ளே அம்பாளின் திருவுருவம் (தாமிரவிக்கிரகம்) இருந்ததாகவும் கூறுகின்றார்கள். அந்தத் திருவுருவம் இப்போதும் ஆலயத்திலிருக்கின்றது. சில விசேஷ உற்சவங்களுக்கு இந்த அம்பாளை எழுந்தருளச் செய்வார்கள். சிங்கவாகனம் ஒன்றை இந்தியாவிலிருந்து கப்பலில் ஏற்றிக் கொண்டு இந்து சமுத்திரத்தில் அக்கப்பல் சென்று கொண்டிருந்ததாயும், ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கு நேராக இக்கப்பல் ஓடாமல் நின்றுவிட்டதாகவும் அம்பிகையின் அருளால் கப்பற்தலைவன் கண்ட சொற்பனத் தின்படி அந்தச் சிங்கவாகனத்தை இவ்வாலயத்திற் சேர்ந்த பின்னரே கப்பல் ஓடத் தொடங்கியதென்றும் கர்ணபரம்பரைக் கதையொன்று கூறப்படுகிறது. அந்தச் சிங்கவாகனமும் இவ்வாலயத்திலிருக்கிறது.

சுமார் நானூறு ஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதையொன்று ஸ்ரீ பத்திரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டிரு கின்றது. பண்டைக்காலத்தில் இவ்வாலயத்திலும், ஆலயச் சூழலிலும் அனாச்சாரமாக நடந்துகொள்வதற்கு மக்கள் பயப்படுவார்களாம். இன்றுமப்படித்தான். ஒருநாள் ஒரு யாவகப் பெண் தலைவிரிகோலமொடு அம்பாளுடைய சந்நிதானத்திற்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப் பெண்ணினுடைய தலை ஒரு பக்கம் திரும்பி விட்டதாம் (கழுத்து வாங்கல்) அம்பாளுக்கு அபசாரம் செய்துவிட்டதாக அப்பெண் சொப்பனங்கண்டு குற்றத்தையுணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலைமயிரைக் கத்தரித்து நேர்கடனாகக் கொடுத்த பின்புதான் தலையினைச் சரியான நிலைக்குத் திருப்பக் கூடியதாயிருந்ததாம். அந்தப் பெண் தனது தலைமயிரை நேர்த்திக்கடனாகக் கொடுத்தாளாம். அதனைப் பாதுகாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்து மகிஷாசூர சம்ஹாரம் நடைபெறும் போது அம்பாளுடைய சடைமுடியோடு சேர்த்துக் கட்டி அலங்கரிக்கும் வழக்கம் இருந்துவந்ததாம். அந்த மயிர்களில் ஒரு பகுதி இன்றும் இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

முன்னொருகாலத்தில் இவ்வாலயத்திற் பூசை செய்து கொண்டிருந்த குருக்கள் ஒருவர் இரவு பூசையை முடித்துக் கொண்டு திருக்கதவை அடைத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்று விட்டார். தனது பிள்ளை ஆலயத்தினுள்ளிருந்ததை அவர் காணவில்லை. வீட்டுக்குப்போய்ச் சாப்பாட்டுவேளையில் பிள்ளையைக் காணாமல் எங்கும் தேடிவிட்டு ஆலயத்திற்கு வந்து பார்த்தபோது பிள்ளை அங்கிருப்பதைக் கண்டு மனைவியிடம் கூறினாராம். பூசை முடிந்து கதவடைத்தபின் ஆலயத்தைத் திறப்பது சாஸ்திரவிரோதமானது. அதனால் காலையில் பார்க்கலாம் என்று கூற மனைவி ஏற்றுக்கொள்ளாமல் அடம்பிடித்தாளாம். அதனால் குருக்கள் ஆலயத்தைத் திறந்தபோது காவல்தெய்வமாகிய வைரவர் அந்தப்பிள்ளையை இரண்டாகக் கிழித்துப்போடுவதைக் கண்டாராம். அத்தகைய உக்கிரமூர்த்தியாகிய வைரவரை மந்திர, தந்திரக் கிரியைகளால் இடம்பெயர்த்து எங்கேயோ ஒரு மலையிற்கொண்டு போய் ஸ்தாபித்ததாக ஆலயக் குருக்கள் கூறுகின்றார். முன்னொருநாள் இவ்வாலயத்தினுள் சுருண்டு படுத்திருந்த ஒரு சர்ப்பத்தின் மேல் பெரிய பாரமான கிடாரமொன்றை கவலையீனமாகத் தூக்கி வைத்துவிட்டார்களாம். சர்ப்பம் அதனடியில் நசுங்கி இறந்துவிட்டது. அந்தச் சர்ப்பத்தின் சாபத்தால் இவ்வாலயத்தில் பூசைசெய்துவந்த அந்தணர் பரம்பரையில் ஏழு சந்ததிக்குப் பின்பே ஆண்குழந்தை பிறந்ததாம். அதற்கு முன்பெல்லாம் பெண்சந்ததியே தொடர்ந்து பிறந்திருக்கின்றது. இவ்வாலயத் திலிருந்த கட்டுத்தேருக்குப் பதிலாக 1972ஆம் ஆண்டு சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு ரதோற்சவத்திற்குப் பயன்பட்டு வருகின்றன. கிழக்கிலங் கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத் தேர் இதுவாகும். 1981ஆம் ஆண்டு இந்தத் தேர்களைப் பாதுகாப்பதற்காக பெரும் பணச் செலவில் தேராலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்திற்கு ராஜகோபுரங்கள் மூன்று அமைப்பதற்கு உள்ளன. கருவறையில் சதுர்ப் புஜங்களையுடைய அம்பாளின் சிலாவிக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றது. சூலம், டமருகம், கட்கம், கபாலம் தாங்கியதிருக்கரங்களோடு அம்பாள் பத்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். மகாமண்டபத்தில் ஸ்ரீ பத்திரகாளியம்பாள், விநாயகர், முருகன் தாளியில் கிடைத்த அம்பாள், ராஜராஜேஸ்வரி, சண்டேஸ்வரி என்னும் தாமிரவிக்கிரகங்களும் அந்த மண்டபத்தில் பிள்ளையாரும், வடக்குப்பக்கம் தண்டாயுத பாணியின் சிலாவிக்கிரகங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக்கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடை பெறுகின்றது. ஒன்பதாம் நாள் ரதோற்சவம் நடைபெற்று வருகின்றது. பங்குனி உத்தரத்தன்று அம்பாள் கோணேசப் பெருமான் எழுந்தருளியிருக்கும் கோணவரையின் அடி வாரத்திலுள்ள கடற்கரையில் அதிகாலையில் தீர்த்தமாடுவார். அன்று மக்கள்வெள்ளம் கடல்வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல்வரும் திங்கட்கிழமை இவ்வாலயத்தில் பொங்கல் விழா நடைபெற்று வருகின்றது. திருக்கோணமலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பத்திரகாளி யம்பாளுக்கும், திருக்கோணமலையிலிருந்தும் பத்தொன்பது கிலோமீற்றர் தூரத்திலுள்ள பாலம்போட்டாறு பத்தினியம் மனுக்கும், ஏழு கிலோமீற்றர் தூரத்திலிருக்கும் சல்லியம்மனுக்கும் ஏதோ ஒருவிதத் தொடர்பு பண்டுதொட்டு இருந்து வருகின்றது.

**வைகாசிப் பொங்கல்**

வைகாசிப் பூரணை வரும் தினம் எதுவோ அதற்கு முன்னர் வரும் திங்கட்கிழமை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவிலில் பொங்கலும், இந்தத்தினத்திற்கு முன்னர்வரும் திங்கட்கிழமை பாலம் போட்டாற்றுப் பத்தினியம்மன் கோவிற் பொங்கலும் இந்தத்தினத்தை அடுத்துவரும் வாரத்தில் செவ்வாய்க்கிழமை சல்லியம்மன் கோவில் பொங்கலும் நடைபெற்றுவருகின்றன. இந்த ஒழுங்கு பண்டுதொட்டு நடைமுறையிலிருந்து வருகின்றது. இதனால் வைகா-ாசிமாதம் முழுவதும் திருக்கோணமலையில் சக்திவழிபாடு பக்திவெள்ளத்தில் மூழ்கியிருப் பதைக் காணலாம். பத்திரகாளியம்மன் பொங்கல் ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். பொங்கலுக்குரிய இடம் பிடிப்பதில் மக்கள் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்வார்கள். அன்றிரவு ஆலயவீதி முழுவதும் யாகசாலைபோல் காட்சியளிக்கும். புகைமண்டலம் இருளை மூடி இருண்டுநிற்கும். அக்கினிதேவன் வீதியெங்கும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். மக்கட்கூட்டம் வீதியில் எஞ்சியுள்ள இடங்களை மூடியிருப் பார்கள். அம்பாளின் பொங்கல் மண்டபவாசலில் வெளியில் நடை-பெறும். அடியார்களின் பொங்கல் வீதியெங்கும் நடைபெறும். அம்பாளின் பொங்கற் பிரசாதமும், அடியார்களின் பிரசாதமும் தேவிக்குப் படைக்கப்பட்டு பூசைநடைபெற்றுப் பொங்கல் விழா நிறைவேறும். வெண்மணல் பரந்தவீதி காலையில் கரிக்குவியல்களால் மூடுண்டு கிடப்பதைக் காணலாம்.

**நவராத்திரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டாதிமாதப் பிரதமை தொடக்கம் ஒன்பது இரவுகளும் இயந்திரபூசை நடைபெற்று ஒன்பதாவது நாள் நவமியன்று மகிஷாசூர சங்காரம் (சூரன்போர்) நடைபெறும். முதல் மூன்றுநாள் துர்க்கைக்கும், அடுத்த மூன்று நாள் இலட்சுமிக்கும், அடுத்த மூன்று நாள் சரஸ்வதிக்கும் அலங்காரப் பூசைகள் நடைபெற்று திருவீதியுலாவும் நடைபெறும். பத்தாவது நாள் விஜயதசமியன்று கும்பம்சொரிந்து தீர்த்தோற்சவம் நடை-பெறும்.

## கும்பவிழா

திருக்கோணமலையில் நடைபெறும் கும்பவிழாவைப்போல் இலங்கையில் வேறு எங்காவது நடைபெறுவதாகத் தெரியவில்லை. இவ்விழா இந்த ஆலயத்திற்கு மாத்திரம் உரிய சிறப்பு விழாவல்ல. விஜயதசமியன்று திருக்கோணமலையில் பரவலாகக் கும்பவிழா நடைபெற்று வருகின்றது. எனினும் இவ்விடத்தில் இவ்விழாவைப்பற்றிக் குறிப்பிடுவது சாலவும் பொருத்தமுடையதெனக் கருதுகின்றேன். பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சிசெலுத்திவரும் காலத்தில் திருக்கோணமலையில் கடற்படைத்தளம் அமைக்கும் வேலையை ஆரம்பித்தார்கள். அத்தளத்தில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து சீக்கியமக்களையும், பஞ்சாபியர்களையும் அழைத்துவந்திருந்தார்கள். இஸ்லாமிய மதவழிபாடுடைய பஞ்சாபியர்கள், தமது மத பக்தியினாலும், நம்பிக்கையினாலும் தங்கள் நாட்டில் கடைப்பிடித்துவந்த விழாக்களை இங்கும் ஆரம்பித்தார்கள். "பஞ்சா" எடுத்தல் என்பது அவ்விழா. சந்தனக்கூடுகட்டி (தேர்போல் அலங்கரித்து அமைப்பது). அதில் பஞ்சா என்ற சின்னத்தை வைத்து வீதிதோறும் கொண்டுசென்று பெருவிழாவாகக் கொண்டாடினார்கள். இவ்விழாவுக்குப் பல இடங்களிலுமிருந்து இஸ்லாமியர்கள் வந்து கலந்து கொள்வார்கள். பஞ்சா எனப்படும் விழா திருக்கோணமலையில் பல பள்ளிவாசல் களிலும் நடைபெற்றது. அவ்வவ்விடங்களிலிருந்து அழகாக அலங்கரிக்கப்பட்ட பஞ்சாக்கள் (கரகம்போல் முக்கோணவடிவில் கட்டுவது) குதிரைகள் பூட்டப்பட்ட வண்டிகளில், தற்போது இங்கு கும்பவிழா நடைபெறுவதுபோல வீதிகள் தோறும் கொண்டு செல்லப்படும். விழாமுடிவில் அந்தப் பஞ்சாக்களை வில்வ பத்திரிக் கோணேசர் கோவிலுக்கு அருகிலிருந்த குளத்திலே போடுவார்கள். இதனால் பிற்காலத்தில் அந்தக் குளத்திற்குத் தக்கியாக் குளம் என்று பெயர் வந்ததாம். பஞ்சாபியர் ஒப்பந்தம் முடிந்து தங்கள் நாட்டுக்குச் சென்றபின் இவ்விழா அருகிக்கொண்டே வந்து தொடர்ந்து நடைபெறாமல் மறைந்து விட்டது. இங்குள்ள இஸ்லாமியர்கள் அதனைத் தொடர்ந்து நடத்த விரும்பவில்லைப்போலும். பஞ்சாபியர்களைப்போல் இந்துக்களாகிய சீக்கியர்கள் கும்பவிழாவை நடத்தினார்கள். சீக்கியரால் ஆரம்பிக்கப்பட்ட கும்பவிழா அவர்கள் இந்த நாட்டை விட்டுச் சென்றபின்னரும் இங்குள்ள இந்துக்களால் தொடர்ந்து விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. திருக் கோணமலை மாவட்டம் இந்துக்களின் குடியிருப்பாகப் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. கோணேசப் பெருமானுடைய தெய்வீக அருள் இப்பிரதேசமெங்கணும் வியாபித்திருந்ததை ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானசம்பந்தப் பெருமான் தேவாரத் திருப்பதிகத்தில் பாடியருளினார். "கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை" என்பது அவருடைய திருவாக்கு. திருக்கோணமலையில் இந்துக் கோவில்கள் நிறைந்திருந்ததால் சீக்கியர் ஆரம்பித்த கும்பவிழாவை, அவர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்ற பின்னரும் இங்குள்ள ஆலயங்கள் தொடர்ந்து நடத்தி வருகின்றன. ஆலயங்களிலிருந்து கும்பங்கள், கரகங்கள் அழகாக அலங்கரிக்கப்பட்டு பக்திபூர்வமாக, அதேவேளையில் போட்டி மனப்பான்மையுடன் வீதிகளில் வலம்வந்துகொண்டிருக்கும். ஒரு ஆலயத்துக்கும்பம் இன்னொரு ஆலயக்கும்பத்தை எதிர்ப்படாமல் (எதிர்ப்பு ஏற்படாமலிருப்பதற்காக) வீதிகளில் வலம்வரும். இந்தக் கும்பம் கரகங்களைத் தாங்கிவருபவர்கள் ராஜமேளம் அடிக்கப்படும் தாளத்திற்கமைய ஆடிக்கொண்டு வருவார்கள். உடுக்கடித்துக் காவியங்கள், காவடிச்சிந்துகள் பாடிக்கொண்டும் வருவார்கள். மங்களமேளங்களும் வாசிப்பதுண்டு. கும்பம், கரகங்களைத் தாங்கி வருவோர் உருவேறி ஆடுவதுமுண்டு. அருள் வாக்குகள் கூறுவதுமுண்டு. விஜயதசமியன்று இரவுபூராவும் இவ்விழா நடைபெறும். கும்பம் கரகங்களைப் பயபக்தியுடன் வரவேற்க மக்கள் தத்தம் வீட்டு வாசல்களில் நிறை-குடம் வைத்துக் காத்துக் கொண்டிருப்பார்கள். ஒவ்வொரு ஆலயத்திலுமிருந்து புறப்படும் கும்பம், கரகங்கள் மற்ற ஆலயங்களுக்குச் சென்று தரிசித்துக் கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்தைப் போய்ச் சேர்வதுடன் இவ்விழா நிறை-றவுபெறும். கும்பம் எனப்படுவது பெரிய செப்புக் குடத்தில் வேப்பம் பத்திரத்தினால் அகலமான அடித்தளம் அமைத்து சுமார் பத்தடி உயரத்திற்கு தேர்போல மலர்களாலும், வர்ணக் காகிதங்களாலும் அலங்கரித்துக் கட்டப்படுவது. கும்பத்தின் அடிப்பாகம் அகன்று மேலே போகப் போக ஒடுங்கியும் செல்லும். கரகம் செப்புக்குடத்தில் அம்பாளின் முகபடாம் வைத்து வேப்பம் பத்திரத்தினால் கட்டப்படுவது எல்லா ஆலயங்களிலுமிருந்து புறப்படும் கும்பம் கரகங்கள் தத்தம் கோஷ்டிகளுடன் ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்திற்கு வந்து தரிசிப்பார்கள் இவைகளைப் பார்ப்பதற்காக இவ்வாலயத்தில் மக்கள் திரளாகக் கூடிநிற்பார்கள். அன்று இவ்வாலயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மானம்பு" திருவிழாவும் நடைபெறும். அம்பாள் ஆலயத்திற்கு எதிரேயுள்ள மைதானத்தில் மானம்புத் திருவிழாவுக்காக எழுந்தருளுவார். அவ்விடத்தில் கோணேசர் கோவிலிலிருந்து மாதுமையம்பாளும், சிவன் கோவிலிலிருந்து விசாலாட்சுமி யம்பாளும் வந்து மானம்பு விழா நடத்திச் செல்வர். இதுவும் இந்துக்களுக்கு ஒருவாய்ப்பான சமய நிகழ்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

### இலட்சார்ச்சனை

இவ்வாலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்ற திதிக்கு வருடா வருடம் சங்காபிஷேகம் செய்வார்கள். சங்காபிஷேகத்திற்கு முன்னுள்ள பத்து நாட்களும் இலட்சார்ச்சனை நடைபெற்று மறுநாள் சங்காபிஷேகம் நடைபெறுகின்றது. அம்பிகையின் ஆயிரத்தெட்டு நாமங்களை பீஜமந்திரத்தோடு உச்சரித்து ஐந்து சிவாச்சாரியார்கள் ஒரு நாளைக்கு இரண்டு தரம் பத்து நாட்களுக்கு அர்ச்சனை செய்து இலட்சார்ச்சனையை நிறைவு செய்வார்கள்.

### கேதாரகௌரி விரதம்

புரட்டாதிமாத விஜயதசமியன்று இவ்விரதம் ஆரம்பிக்கப்பட்டு ஐப்பசிமாத அமாவாசிதிதியில் இவ்விரதம் நிறைவு பெறுகின்றது. இருபத்தொரு நாட்களுக்கு அனுட்டிக்கப்படும் இவ்விரதம் திருக்கோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்பாள் ஆலயத்தில் கடந்த நூற்றி ஐம்பது வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது. இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து இவ்விரதத்தை அனுட்டிக்க ஆயிரக்கணக்கில் மக்கள் இங்கு வந்து கூடுவார்கள். அம்பிகையின் அற்புதமான அருட் பலத்தால் வருடாவருடம் இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவரும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். ஆதலால் ஒவ்வொரு வருடமும் ஐயாயிரத்திற்கு மதிகமானோர் இவ்வாலயத்தில் வந்திருந்து இவ்விரதத்தை அனுட்டிப்பார்கள். இவ்விரதத்தை அனுட்டிப்பவர்கள் தரிப்பதற்குரிய விரதநூலும், வகைக்கு இருபத்தொன்றாக பழம், பாக்கு, வெற்றிலை, மஞ்சள், பூ, பலகாரம் என்பனவும், தேங்காய், விபூதி, குங்குமம் என்பனவும் அடங்கிய பூசைப் பெட்டிகள் அடுக்கி வைக்கப்பட்டு அலங்காரப் பூசை நடைபெறும். பூசை முடிவில் இவ்விரதத்திற்காக முன்னரே பதிவு செய்து கொண்டவர்களை அழைத்துப் பூசை பெட்டிகள் வழங்குவார்கள். தனியாக விரத நூலைமாத்திரம் பெற்று இவ்விரதத்தை அனுட்டிப்பவர்களுமுண்டு. ஆலயத்தில் தங்கியிருந்து விரதமனுட்டிப்பவர்களுக்கு அடுத்தநாள் பாரணைப் பூசையும் செய்து அனுப்புவார்கள்.

6. 3. 80 இல் நடைபெற்ற கும்பாபிஷேகத்தின் ஆனி உத்தரத் திருவிழாவும் தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெற்று வருகின்றது. சிவராத்திரியைத் தொடர்ந்து நடைபெறும் கோணேசர் ஊர்வலத்தில் மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமான் ஸ்ரீ பத்திர காளியம்பாள் ஆலயத்தில் ஒரு நாள் தங்கியிருப்பார். கோணேசப்பெருமானை இவ்வாலயத்தின் ஆதீனகர்த்தரும் அடியார்களும் சோடசோபசார மங்களச் சின்னங்கள் புடைசூழ மங்களவாத்தியங்களோடு வரவேற்று ஆலயத்திற்கு எழுந்தருளச் செய்து பூசை முதலியன முடித்து மாலையில் மங்களவாத்தியம் முழங்க வீதியுலாவுக்கு அனுப்பி வைப்பார்கள்.

பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை ஸ்ரீபத்திர காளியம்பாளின் திருவருளால் இவ்வாலயத்தில் பல அற்புதங்கள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றினால் மக்களிடம் பயபக்தி வளர்ந்துகொண்டு வருகின்றது. இதனால் பக்தியோடு வழிபடும் அடியார்கள் அம்பிகையின் கிருபாகடாட்சத்தால் எண்ணியன எண்ணியாங்கெய்தி இன்புற்று வாழ்கின்றார்கள். இவ்வாலயத்தில் குறித்த குறித்த நேரத்தில் பூஜை, திருவிழாக்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயில்

– திரு. சு. துஷ்யந் –

மட்டக்களப்பிலே அமைந்துள்ள திரௌபதையம்மன் கோயில்களில் தொன்மையானதும், வரலாற்றுப் புகழ் மிக்கதும் முதன்மையானதுமான பதி பாண்டிருப்புத் திரௌபதையம்மன் கோயில் பாண்டிருப்பு மட்டக்களப்பிற்கு தெற்கே சுமார் 25 மைல் தொலைவில் கல்முனை நகருக்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது. இங்குள்ள ஆலயத்தில் இடம் பெறும் பெருந்தீவேள்வி மட்டக்களப்பு வழக்கிலே தீப்பள்ளயம் என்றழைக்கப்படுகின்றது.

பாண்டிருப்பு பட்டயக் கூற்றுக்கள், தாதன் கல்வெட்டு போன்ற ஆவணங்கள் திரௌபதையம்மன் கோயிலையும் அதன் வரலாறு, வழிபாட்டு ஒழுங்கு முறைகள் பற்றிய செய்திகளைத் தருகின்றன. கி.பி 15ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவிலிருந்து வந்த தாதன் தான் கொண்டு வந்த வழிபாட்டுப் பேழையை அவ்வூரில் வைத்து இராசனாகிய எதிர்மன்ன சிங்கனின் வேண்டுகோளிற் கிணங்கத் திரௌ - பதை வழிபாட்டைச் செய்து காட்டினான் என்று தாதன் கல்வெட்டுக் கூறுகின்றது. அதேவேளை இக்கோயிலும் வழிபாடும் கண்டி அரசனான விமலதருமசூரியன் (கி.பி. 1594 - 1604) காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகவும் கூறுவர்.

"சீர்மேவு பூவுலகில் திருமால் மதத்தொழுங்கை
பார்மேவு தாதன் பகுக்க மனத்திலெண்ணி
அரியோன் பதத்தை யடிபணிந்து தெண்டனிட்டுக்
குருவின் கருவில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனத்தை யொருப்படுத்திக்
கொடையிற் சிறந்த குகனிடத்தில் செல்ல வென்று
காவியுடுத்திக் கமண்டலமுங் கைப்பிடித்து
ஆவி யடக்கி அஞ்செழுத்தை யுச்சரித்துப்
பல்லோர் துதிக்கப் பாருலக மீடேற
வில்லிசையன் செய்தவத்தை மேன்மை பெறக் காசினியில்
பத்ததிபோற் காட்டப் பகுத்தறிவாய்த் தாதனுந்தான்
சுற்றம் மகிழத் துதித் தெழுந்து தென்னிலங்கை
சென்றுமட்டு மாநகரில் திருக்கோயிற் சந்நிதியைக்
கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே
கலிங்க குலத்துக் காவலனு மப்பொழுது
இலங்குந் திருப்பணிக்கு யிடுபூசை காணையிலே
பரத நாட்டிற் பிறந்தா னெனவறிந்து பார்வேந்தன்
இரத நடை வீதி என்னுமிடம் வரவழைத்து
எதிர்மன்ன சிங்க மென்னும் நரபதியும்
கதி தங்கு மிப்புவியில் கண்டதில்லை உந்தனைத்தான்"
ஆர்நீ ரறையும் அந்தணனோ சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுட னோது மென்னத்
தாதன் மனமகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடனே ஓதுகிறான்
கோங்கு நகர்மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே யானுதித்துப் பாரதமென் றோர்மதத்தை
வங்கம் காலிங்கம் மலையாள மந்திரபுரம்
அங்கங்கு சென்று அரியோ னடியார்க்கு
காட்டிய பின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்குச்
சூட்ட நினைவு கொண்டு துளசிமணி மாலையிட்டு
வந்தே னெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷமாகித் தாதன் றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமுங் கடலருகும்"
"அடைவாகத் தேடி ஆழியரு காய்வரவே
கண்டார்க ளால்வனத்தைக் கடலு மருகிருக்கத்
தொண்டரொடு தாதன் துதித்து நமஸ்கரித்து
பஞ்சாட் சரத்தைப் பதித்துமனத் தொன்றாக்கி
கஞ்சன் முதலாக ஐவர் விந்தஞ் சேர்ந்த மட்டும்
தீட்டி ஒளியாக்கித் தீவளர்த்துப் பாய்ந்த பின்பு
காட்டி முறைப்படியே காலிங்க குலத்தோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரிசை கொடுத்து, மால்பதத்தைச் சேர்ந்த பின்பு
கரிசனையோர் நம்பி சிறை கட்டுவர்க்கச் சட்டமுடன்
தீர்த்து எதிர்மன்ன சிங்கன் மனமகிழ்ந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம் வனவாசம் கடல்குளித்துத் தீப்பாய்தல்
அம்பு வில்லுத் தண்டுடனே ஐவர் கொலு வாக்கி வைத்து
ஆடலொடு பாடி ஆதி துரோபதைக்கு
மாடமுயர் கோயில் வரிசையுட னியற்றிக்
கும்பிட்டார் தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்று."

முன்னே கண்டவாறு வடநாட்டுக் கோங்கு நகரிலுள்ள தாதன் என்னும் தபசி வைணவ சமயத்தைப் போதிப்பதற்காக, மகாபாரதத்தின் சரித்திரத்தை மடலில் வரைந்து கொண்டு, காவிவஸ்திரமும் கமண்டலமும் தாங்கி கோங்கு நாடைவிட்டு இலங்கை, மட்டகளப்புக்கு வந்து, நாகர்முனைக் குகை-னத் தரிசனம் செய்து, மடலில் வரைந்து வந்த மகாபார-தக் கதையை அவ்வாலயத்திற் போதித்தான். அதையறிந்த திக்கதிபரொருவர் எதிர்மன்னசிங்கநிருபனுக்கு அறிவித்தார். எதிர்மன்னசிங்கனும் அவ்வாலயம் சென்று தாதனைக் கண்டு உம்முடைய குலம், கோத்திரம், நாமம், சுயநாடு, இவை-களை அறிவியும் எனக் கூறினன். தாதனும் அரசனை நோக்கி அரசே! என் குலம் வசியன். என் நாமம் தாதன். என்னுடைய கோத்திரம் விஷ்ணு. என்னுடைய சுயநாடு கோங்குநகர். நான் பாண்டவ குலத்துத் தர்மாதிகளுக்கு நாகர்குலத்துத் துரி-யோதனாதிகள் செய்த தீமைகளைக் காண்பிக்கும்படி வந்தேன் என்று கூறினன். அதற்கு அரசன் தனக்கு அறிவிக்கும்படி தாதனிடம் வேண்டினான். அதன்படி தாதனும் அவற்றைச் செய்து காண்பித்தான்.

தாதனும் தான் கொண்டு வந்த சிலைகளை வைத்துப் பூசை பண்ணுவதற்கு பொருத்தமான இடத்தில் ஆலயம் அமைக்க உதவ வேண்டும் எனக் கேட்டதற்கிணங்க, எதிர்மன்ன சிங்கனும், தாதனின் வேண்டுகோளை ஏற்று, கே-ாயில் அமைப்பதற்காக திருக்கோயில் கடற்கரையிலிருந்து வடக்குப்புறமாக உள்ள கிராமங்கள் ஊடாகச் சென்று பார்வையிட்டு, கொத்துப் பந்தலிட்டு கோயில் அமைத்து வழிபட்ட இடமே பாண்டிருப்பு எனும் கிராமமாகும். இந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறுபேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீவளர்த்து, அதிலிறங்கியும் காட்டினான். அதன் பின்பு அரசனின் ஒத்துழைப்போடு கொக்கட்டி மர நிழலிற் கொத்துக் குழைகளால் பந்தலிட்டு அதற்குள் தான் கொண்டு வந்த சிலைகளை வைத்துப் பதினெட்டு நாட்கள் பூ சை வழிபாடுகள் செய்து மகாபாரத வரலாற்றுச் சிறப்பினை எடுத்து அங்கிருந்த மக்களுக்கு விளக்கிக் காட்டித், தாதன் கல்வெட்டில் கூறப்பட்டதுபோல் கம்பம், வனவாசம், கடல்குழிப்பு, தீப்பாய்தல் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளையும் நடாத்திக் காண்பித்துப் பல வருடங்கள் சென்ற பின்பு தாதன் முத்தியடைந்தான்.

அதன் பின்னர் எதிர்மன்னசிங்கன் வன்னிமை பதினாறு குடிமக்களுக்கும் பூ சைகளை வழங்கிப் பாண்டவர் கொலு, காளிகொலு, வீரபத்திரர் கொலு என்பனவற்றுக்கேற்றோர்களைத் தெரிவு செய்து கொலு நிறுத்தி வருடா வருடம் உற்சவத்தைப் பல காலமாக நடத்திய பின்னர் நற்பிட்டிமுனைப் பிரதேசத்தைப் பரிபாலனஞ் செய்த வன்னியர் குடியினரிடம் ஆலயத்தை ஒப்படைத்துச் சென்றான் எனக் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

இங்கு வழிபாடுகள் வருடம் தோறும் புரட்டாதி மாதம் வரும் செவ்வாய்க் கிழமை கதவு திறக்கும் நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டு பூ ரணை தினத்தை உள்ளடக்கிய ஒரு வெள்ளிக் கிழமையில் தீப்பள்ளயத்துடன் நிறைவு பெறும். உற்சவம் ஆரம்பமாகும் முதலாம் நாள் ஆலயத்திற் சாந்திகள் செய்து மாலை வேளையில் பாண்டவர்கள், பூ சகர் பரிவாரத் தெய்வங்களாகக் கொலுவில் நிற்கும் அனைவரும் தங்களுக்குரிய ஆயுதங்களோடு கடல்குளித்து, ஆயுதங்களைக் கழுவி கையிலெடுத்துக் கொண்டு பறைமேளம், உடுக்கு, சிலம்பு, சங்கு முழங்க மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்து, பூ சை வழிபாடு செய்து, திரௌபதை, தருமன், வீமன், அருச்சுனன், சகாதேவன் போன்றோரின் சிலைகளை எடுத்துக் கொண்டு திரௌபதை ஆலயத்தை வந்தடைவர். அதன் பின்னர் சடங்குகள் ஆரம்பிக்கும் முகமாக கொடியேற்றம் நடைபெறும். வெள்ளை நிறத் துணியில் விஷ்ணுவின் பத்து அவதாரங்களைக் குறிக்கும், மீன், ஆமை, பன்றி போன்ற சின்னங்களோடு, சூரியன், சந்திரன், சங்கு, சக்கரம் போன்றவற்றையும் வரைந்து பாண்டவர்களின் தலை-லவரான தருமராற் கொடியேற்றப்பட்டுப் பதினெட்டு நாட்கள் தொடர்ந்து சடங்குகள் நடைபெறும்.

மூன்றாம் நாள் ஏடவிழ்க்கும் பூ சை இடம்பெறும். சாயங்காலப் பூ சை முடிவுற்றதும் சந்தன மண்டபத்தினுள் தாதனால் கொண்டுவரப்பட்ட பேழையை மடையில் வைத்து, பஞ்சபாண்டவர், கிருஷ்ணர், கட்டுக்கு நிற்போர் யாவருக்கும் உரிய ஆயுதங்களை கொடுக்கும் சம்பிரதாயம் முடிவுற்றதும், மகாபாரத ஏடவிழ்த்துப் பாராயணம் தொடங்கப்படும்.

ஏழாம் நாள் சுவாமி எழுந்தருளப் பண்ணற் சடங்கு இடம்பெறும். கிருஷ்ண பகவான் துவாரகாபுரியிலிருந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தினாபுரியிலிருக்கும் பஞ்ச பாண்டவர்களைக் காண்பதற்காக வரும் காட்சியினை நாடகப் பாங்கிற் சடங்காக நிகழ்த்திக் காட்டப்படும். கிருஷ்ணர் இருக்கும் துவாரகாபுரியாக மாணிக்கப் பிள்ளையார் ஆலயமும், அத்தினாபுரியாக திரௌபதையம்மன் ஆலயமும் கொள்ளப்பட்டு, பஞ்சபாண்டவர்களால் கிருஷ்ணரது சிலை அம்மன் ஆலயத்திற்குச் கொண்டுசெல்லப்படுவதைக் குறிப்பதாக அமையும்.

எட்டாம் நாள் நாட்கால் வெட்டும் சடங்கு இடம்பெறும். திரௌபதை வேள்வித் தீயில் இருந்து பிறந்தவள் என்பதை நினைவூ ட்ட இச்சடங்கு நடைபெறும் எனக் கூறுகின்றனர். அன்று பாண்டவர்கள் வனம் சென்று வீரமரக்கிளையினை வெட்டியெடுத்துக் கொண்டு வருவர். இம்மரத்தையே 18 ஆம் நாள் தீமூட்டுவதற்கு முதல் பொருளாகப் பயன்படுத்துவர் இத்தினத்திலிருந்து தோத்திரப் பாடல் படிக்கும் முறை ஆரம்பமாகும். குறிப்பாக குந்திதேவி, தருமர், வீமர், அருச்சுனன், திரௌபதை போன்றோருக்கு மேல்வரும் முதலடிகளைக் கொண்ட பாடல்களைப் பாடி வழிபடுவது தாதன் வகுத்த வழிபாடாகும்.

குந்திதேவிக்கு

மந்திரா தேவி பிறக்க மகிமை பிறந்தது

சுபத்திரா தேவி பிறக்க ஆதி அனுமன் பிறந்தான்

குந்தம்மா தேவி பிறக்க ஐவர் கொலுப் பிறந்தது.......

தருமராசனுக்கு

தந்தாரவாரம் தயங்காத நித்திரையாம்

உண்ணார வாரம் உறங்காத நித்திரையாம்.

கறுத்த விழி சடையன் கர்ணனுக்கு நேரிளையான்

பொறுத்திருந்து அரசாளும் புண்ணியனாந் தருமகுரு.......

வீமனுக்கு

மந்தகன் மாமேருவன் வாயுதேவன் வலக்குமாரன்

மன்மதன் வயிரத் தூணன்

ஆதி அனுமானுக்கு நேரிளையான்

கைகளொரு காதம் கால்களொரு காதம்

மூக்குத் துவாரத்தால் யானை போய் வருமாம்

விளங்கு மா மண்டபத்தில் வீற்றிருந்த வீமன்......

அர்ச்சுனனுக்கு,

முன்னழகன் பின்னழகன் முதுகிலே மச்சரேகை

நாவிலே நட்சத்திரம் பல்லிலே பரச வீணை

தோளிலே துளசிமாலை தொப்புழுவில் வீணாகானம்

புறங்காலைப் பார்த்தாலும் பிரமதேவனுக் கொப்பிடலாம்.......

திரௌபதைக்கு,

பாஞ்சாலி பெண் பிறக்கப் பத்து மோரெட்டு

வண்ண மகள் திரௌபதையே

பாரதமும் பிறந்ததம்மா.........

பன்னிரண்டாவது நாள் சுயம்வரத்துக்கு கால்கோள் இடுவதற்கு ஏற்பாடாக கல்யாணக்கால் வெட்டும் சடங்கு இடம்பெறும். அன்று மாலைப் பூசை முடிவுற்றதும், பாண்டவர்களும், பரிவாரங்களும், பக்தர்களும் புடைசூழப் பாண்டிருப்பில் இதற்கென உள்ள நிலத்தில் உள்ள பூ வரசமரத்தில் தடியொன்றை வெட்டி அதனை அம்மனாகச் சோடனை செய்து ஆலயத்தில் வைத்துப் பூ சை இடம்பெறும். பதின்மூன்றாம் நாள் அலங்காரப் பூ சை இடம்பெற்று பதின்நான்காம் நாள் துச்சாதனன் திரௌபதையை துகிலுரித்த கதையை அம்மனாக பூ சாரி வேடமணிந்து இப்பாவனை நடாத்தப்படும்.

பதினாறாம் நாள் வனவாசம் நடைபெறும். துரியோதனனுடன் சூதாடித் தோற்ற பஞ்ச பாண்டவர்களும், திரௌபதையும் நாடு நகரமிழந்து பன்னிரண்டு வருடங்கள் வனவாசம் செல்லும் காட்சி நாடகமாக நடித்துக் காட்டப்படும். மணற்சேனை, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ஆகிய கிராமங்களுக்கும் இந் நிகழ்வுகள் தொடர்ந்து செல்லும். இந் நிகழ்வில் தாதனால் கொண்டு வரப்பட்ட வீரவாளை தருமாிடமும், வீமனிடமும் கொடுக்கும் காட்சியும் நடாத்தப்படும்.

பதினேழாம் நாள் தவநிலை இடம்பெறும். குருஷேத்திரப் போரிலே துரியோதனாதியோரை வெற்றி கொள்வதற்கு அருச்சுனன், சிவனை நோக்கித் தவம் செய்து பாசுபதாஸ்திரம் பெறும் நிகழ்வு நள்ளிரவில் நடைபெறும். இதன் போது அருச்சுனன் தவ வேடம் பூண்டு தவநிலையை நோக்கிச் செல்லும் போது தருமரிடம் ஆசி பெற்றுச் செல்ல, அருச்சுனனின் தவத்தைக் கலைக்க தேவேந்திரனால் அனுப்பப்பட்ட ரம்பை மயக்கியும், மயங்காத அருச்சுனன் விலகிச் சென்றான். அதன் பின்னர் துரியோதனன் அருச்சுனனை அழிக்க முகாசூரன் எனும் பன்றி ரூபம் கொண்டவனை அனுப்பினான். அருச்சுனன் அந்த அசுரனை எதிர்த்து அழித்தான். பின் அருச்சுனன் தவநிலையில் ஏறிச் சிவனை நோக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமறைப் பொருளே ஆடகச்சபையில்
அருந்தவர் மகிழ்ந்துற நோக்கத்
திருநடஞ் செய்யும் தேவனே தேவர்
திரை கடல் மதித்த நாள் தோன்றும்
கருவிட முண்ட கண்டனே யுந்தன்
கால் மலர் துதித்திட வறியேன்.

எனத்தொடரும் தோத்திரப் பாடல்களைப்பாடிச் சிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற்று, தவநிலை இறங்கிய பின் அரவானைக் களப்பலியூட்டும் சடங்கு நடைபெறும். அரவான் அருச்சுனனுக்கும் நாககன்னிக்கும் மகனாகப் பிறந்தவன். இவனை துர்க்கைக்கு பலியிடும் நிகழ்ச்சியே இதுவாகும்.

பதினெட்டாம் நாள் பாண்டவர்களும், பரிவாரமும் தீ மிதிக்கும் வைபவம் இடம்பெறும். இதனைப் பஞ்சபாண்டவர்கள் தங்கள் பாவங்களை எல்லாம் நீக்கிப் புதுப் பிறவி எடுத்தல் என்ற கருத்தினைச் சித்தரிக்கும் வகையிலே நிகழ்த்திக் காட்டுவர். தீப்பாயும் நாள் அதிகாலை தீக்குழிவெட்டப்பட்டு தீப்பாயும் சடங்கிற்குரிய ஆயத்தங்கள் செய்யப்பட்டு அன்று பக்தி சிரத்தையுடன் பக்தர்கள் புடை சூழ்ந்து நிற்க தீ மிதிப்பு வைபவம் இடம்பெறும்.

இறுதி நாள் பாற்பள்ளயச்சடங்கு நடைபெறும். அது பாரதப் போரில் இறந்த பாண்டவர்களின் உறவினர்களுக்காகச் செய்யப்படும் பிதிர் வழிபாடாகும். இச்சடங்கு நடைபெறுவதற்கு முன்னர் தருமருக்கு முடி சூட்டும் விழா நடைபெறும். இதன்போது பாரதக் கதையின் இறுதி அத்தியாயம் படித்து முடிக்கப்படும். அதன் பின்னர், கிருஷ்ணர் தருமருக்கு முடிசூட்டும் வைபவம் நடைபெறும். இதனையடுத்தே பாற்பள்ளயச் சடங்கு இடம்பெறும். அன்றைய தினம் ஊரார் பொங்கலிட்டு, மடைவைத்து, வழிபாடு செய்து, தீக்குழியிற் பால் வார்த்தலுடன் அது நிறைவு பெறும்.

திரௌபதியம்மனை ஏன் வழிபாடு செய்ய வேண்டும் என்பதற்கு தாதன் கல்வெட்டே விடை கூறுகின்றது.

"ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாலி எழ
பாவலர் பாடப் பல்லுயிரெலாம் வாழ்க
மாதத்தில் மூன்று மழை மட்டு நகர் பெய்து வர."

இதன்படி பசுக்கள் நோயின்றி வாழவும், மழை பொழியவும் பெண்களின் குறைபாடுகளைத் தீர்க்கவும், வாழ்க்கை ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கவும் இவ் அம்மனுக்கு விழா எடுக்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பிலே தனித்துவமும், சிறப்பும் வாய்ந்த மூத்த கோயில் பாண்டிருப்பு திரௌபதையம்மன் கோயிலாகும். திரௌபதியம்மன் வழிபாடு ஏனைய அம்மன் சடங்கு வழிபாடுகளில் இருந்து வேறுபட்டது. தமிழகத்து மகாபாரத இலக்கியத்தின் மரபுகளை நாடகத் தன்மையாக வெளிப்படுத்திக் காட்டும் வழிபாடாகும். இக்கோயிலை அடியொற்றியே பழுகாமம், புளியந்தீவு, மட்டக்கழி, புதூர், மகிழவெட்டுவான் போன்ற ஊர்களிலும் திரௌபதியம்மன் வழிபாடும் சடங்கும் பின்பற்றப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம்

- செல்வன் ஆ. சசிநாத் -

இலங்கைத்தீவின் வடபுறத்தே உள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குத் தென்மேற்கே சுமார் முப்பத்திரண்டு கிலோமீற்றர் தொலைவில் ஏழு தீவுக்கூட்டத்தின் நடுவே கல்விக்கும், செல்வத்திற்கும், சிவநெறிக்கும், அருட்கொடைக்கும் மையமாக நயினாதீவு எனும் கிராமம் அமைந்துள்ளது. இது நான்கு மைல் சுற்றளவு கொண்ட ஊர். அதில் 150 பரப்பு நிலம் கோயிலும், கோயில் சார்ந்த இடங்களுமாகும். இங்கு வாழும் மக்களையெல்லாம் அருள்பாலித்து வாழ்வாங்கு வாழ வைத்து அரவணைக்கும் தாய்த்தெய்வம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளாகும்.இச்சிறுதீவில் சர்வமத சந்நிதி எனக் கூறத்தக்க வகையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்ற நான்கு மதங்களுக்குமான வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன. நயினாதீவுக் கிராமத்தில் மொத்தமாகப் பதினைந்து இந்து ஆலயங்கள் காணப்படுகின்ற போதும் அவற்றுள் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம் மட்டுமே மிகப்புராதன வரலாற்றுச் சிறப்புடையதாக விளங்குகின்றது. இவ்வால யத்தினுடைய தலவிருட்சமாக வன்னி மரம் விளங்குவதுடன், கங்கா புஷ்கரணி என்ற பெயரில் இவ்வாலயத்தின் தீர்த்தம் விளங்குகின்றது. இவ்வாலயம் கடலினை நோக்கிய வண்ணம் நயினாதீவின் வடபகுதியில் "பப்பரப்பவன் சல்லி" என்ற காணிப்பகுதியில் சிறந்து விளங்குவதுடன் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முப்பெரும் சிறப்புடனும், நீண்ட பாரம்பரிய வரலாற்றுத் தொன்மையினையும், வழிபாட்டு முறைகளிலும் இன்றுவரை சிறந்து விளங்குகின்றது.

**தலத்தின் தொன்மை**

சரித்திரகாலத்திற்கு முன்தொட்டே பல சிறப்புப் பெயர்களால் அழைக்கப்பட்டு வந்த சிறப்பையுடையது நயினாதீவு. இவ்வகையான பெயர்களை அறிந்து கொள்வது அதன் வரலாற்றை அறிந்து கொள்வதில் ஒரு பாகமாகும். இத்தலம் நாகதிவயின, நாகதீவு அல்லது நாகத்தீவு, மணிபல்லவம், மணித்தீவு, பிராமணத்தீவு, நயினார்தீவு, சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய இன்னோரன்ன சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் வரலாற்றுச் சிறப்புடையது. இதில் வரும் மணிபல்லவம் என்ற பெயர் மணிமேகலை என்னும் காவியத்தில் இடம்பெற்ற சொல்லாடலாக இருக்கக் கூடுமென்பது பல ஆராய்ச்சியாளர்களின் முடிபு. [1]

நயினாதீவிலுள்ள நாகபூஷணி அம்பாள் ஆலயம் எப்பொழுது தோன்றியது? யார் தாபித்தது? அது எவ்வாறு விருத்தியடைந்து புகழ் பெற்றது? என்ற இன்னோரன்ன வினாக்களுக்கு ஆராய்ச்சி யாளர்கள் திருப்தியடையக்கூடியதான சரித்திர நூல்கள் இல்லை எனவே செவிவழிவரும் கதை களைக் கொண்டும் பிற்காலத்தவர் ஆங்காங்கு எழுதிய குறிப்புக்களையும் கொண்டு இத்தலத்தின் பூர்வீக வரலாற்றினையும் பெருமையையும் ஓரளவுக்கு ஊகிக்க முடியுமேயன்றி நிதர்சனமாக அது பற்றிக் குறிப்பிட்டுத் துணியமுடியாது என்கின்றனர்.

புராதன வரலாற்றுச் சிறப்புடன் விளங்கும் இத்திருத்தலம் பற்றி அறிந்து கொள்வதற்கு நம்பகரமான வரலாற்று மூலங்கள் கிடைக்காத போதும் இவ்வாலயத்தோடு தொடர்புடைய பின்வரும் கர்ண பரம்பரைக் கதையை இவ்வாலயத்தின் பழமைக்குச் சான்று காட்டமுடியும்.

"முன்னொரு காலத்தில் நயினாதீவில் உள்ள நாகேஸ்வரியை நாகபாம்பு வழிபாடு செய்து வந்தது. ஒருநாள் அந்தப் நாகபாம்பு நாகம்பாள் ஆலயத்திற்கு மிக அண்மையில் வடபாலுள்ள புளியந்தீவில் இருந்து அம்பாளை அர்ச்சிப்பதற்காகப் பூவைக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் வழியாக நீந்தி வருகையில் கருடன் ஒன்று அந்தப் பாம்பைக் கொல்லும் பொருட்டு ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொன்டிருந்தது. கருடனைக் கண்டஞ்சிய நாகபாம்பு கடலிற் காணப்பட்ட கல்லொன்றிற் சுற்றிக் கொண்டது. கருடன் அதற்குப் பக்கத்திற் பிறிதொரு கல்லில் அமர்ந்து கொண்டது. அப்பொழுது கடல் வழியாக வந்த மரக்கலம் கடும்காற்றுக் காரணமாகத் தரையை நோக்கி வந்தது அதிலிருந்த வணிகன் ஒருவன் இவ்விரு பிராணிகளுக்குமிடையிலான போட்டியை அவதானித்ததுடன் நாகபாஷை தெரிந்தபடியினால் நாகபாம்புக்கு ஏற்பட்ட அச்சத்தைக் குறிப்பால் அறிந்து கொண்டான். அதற்கு இரங்கி பாம்பைக் கொல்லாது விடும்படி கருடனைக் கேட்டான் அதற்குக் கருடன் இத்தேவியின் ஆலயத்திற்கு பொருட்கள் முழுவதையும் செலவு செய்து விடும்படி கேட்க வணிகனும் அதற்கு உடன்பட்டான். தன்னைக் காப்பாற்றிய நன்றிக்கடனுக்காக நாகரத்தினம் தருவதற்கு நயினாதீவுக்கு ஓர் ஆளை அனுப்புமாறு நாகம் அவ்வணிகனிடம் கூறியது. மகாநாயக்கன் அதற்கு இசைந்து மீகான் என்பவனை நாகமணி பெறுவதற்காக நயினைதீவுக்கு அனுப்பினான் என்றும் அவன் நாகரத்தினங்களைப் பெற்றுக்கொண்டு வரும் வழியில் வெடியரசன் என்பவனுடன் போர் செய்து அதனை மீட்டுக்கொண்டு வந்தான் என்றும். பின்னர் மகாநாயக்கன் என்ற வணிக குடும்பமே வடகிழக்குக் கடற்கரையில் நாகம்பாளுக்குச் சிறந்ததோர் ஆலயம் அமைத்ததுடன் ஏழு வீதிகளும் கோபுரங்களும் அமைத்தார்கள் என்றும் நயினாப்பட்டர் எனும் பிராமணக் குருவைப் பூசகராக நியமித்தார்கள் என்றவாறாக அக்கதை செல்கின்றது. இக்கதையை மெய்ப்பிக்கும் வகையில் இன்றும் பாம்பு சுற்றிய கல், கருடன் இருந்த கல் என்ற இருகற்கள் ஆலயத்தின் வடபாலுள்ள கடலுக்குள் பிரத்தியட்சமாகக் காணப்படுவதுடன் அவை வழிபாட்டுக்குரிய புனிதசின்னங்களாகவும் இன்றும் விளங்குகின்றன."[2]

கருடனிடமிருந்து நாகத்தைக் காப்பாற்றிய மகாநாயக்கன் என்ற வணிகேசனின் கதையும் மீகான் என்பவன் நாகமணி பெறவந்த கதையும் கண்ணகி வழக்குரையில் இடம்பெற்றுள்ள கப்பல் வைத்த காதையிற் கூறப்பட்டிருக்கின்றது. எனவே இக்கதை சிலப்பதிகார காலந்தொட்டு வழக்கிலிருந்து வருகின்றதென எண்ண இடமுண்டு. இந் நாகமணி பெற வந்த கதையானது வையாபாடலிலும் காணப்படுவது நோக்கத்தக்கது.

நாகபூஷணி அம்பாள் கோயிலுக்கு பூசகராக வந்த நயினார்பட்டர் நயினார்தீவு தெற்கு "மண்ணிப்புளி" என்னும் இடத்தில் வாழ்ந்தவர் எனவும் அது இன்று"பட்டர்வளவு" என அழைக்கப்பட்டு வருகின்றது என திரு. சு. ஐயாத்துரைச் சோதிடர் அவர்கள் கூறுகின்றார்.[3]

இத்தீவில் ஆதியில் நாகரும், நாகமும் பூசித்ததன் பேறாக அன்னையை நாகேஸ்வரி, நாகபூஷணி என அன்று தொட்டு இன்றுவரை அழைக்கின்றனர். இதனை உறுதிப்படுத்தும் சான்றாக இத்தலத்தின் யாக பூசையின்போது "நாகராஜேஸ்வரி மந்திர புஷ்பம் சமர்ப்பயாமி" என மந்திரம் ஓதிப் பூசிக்கப்படுகின்றது.[4]

புராதன பெருமைவாய்ந்த நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம் வர்த்தகரின் பொருள் கொண்டு விஸ்தரிக்கப்பட்டு வந்ததனை அவதானித்த போர்த்துக்கீசரால் இவ்வாலயத்தை தரைமட்டமாக அழித்ததுடன் பெறுமதிமிக்கப் பொருட்கள் யாவற்றையும் சூறையாடினர். இங்கு இடிக்கப்பட்ட கட்டடத்தின் கற்கள் ஊர்காவற்துறையிற் பறங்கியராற் கடற்கோட்டை கட்டப் பயன்படுத்தப்பட்டது. ஆலயம் அழிக்கப்பட்ட போது சைவமக்கள் மனம் வெதும்பியதுடன் செய்வதறியாது திகைத்தனர். ஒரு சில பக்தர்கள் உலாவரும் அம்பாளின் சிலையை ஆலயத்தின் வடமேற்கே நின்ற செவ்வால மரப்பொந்தில் மறைத்து வைத்து அகத்தளவில் வணங்கினர். இந்த ஆலமரம் இன்றும் "அம்பாள் ஒளித்த ஆல்"என மக்களால் வணங்கப்படுகின்றது. அந்நிய மதத்தினர் இவ்வகையான அநீதிகளை இழைத்தபோதும் அவ்வூர் மக்கள் சைவப்பற்றினைக் கைவிடவில்லை என்பதனை இது உறுதிப்படுத்துகின்றது. இக்கோயில் அந்நியர்களால் அழிக்கப்பட்டு வந்தபொழுது கோயிற்தேர் தானாகவே உருண்டு மேற்கு கடலில் ஆழ்ந்து விட்டதாம். ஒரு வேளை அவ்வூர் மக்கள் அதனைக் கடலினுள் தள்ளிவிட்டிருக்கக் கூடும். சிற்சில காலங்களிற் தேர்முடி பௌர்ணமித் தினத்தில் தெரிகிறது என்றவாறான ஒரு கதையும் கேட்கப்பட்டு வருவதுமுண்டு.[5]

போர்த்துக்கேயருடைய ஆட்சியைத் தொடர்ந்து டச்சுக்காரர்களின் ஆட்சியின் பின்னர் நயினாதீவில் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவிற் கட்டப்பெற்றது. எனினும் அங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்தாபிக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தைத் தாம் மறைத்து வைத்திருந்த இடத்தில் காணாமையால் மக்கள் பெரிதும் கவலைப்பட்டனர். எனினும் நயினாதீவுக்கு வடபாலுள்ள பூளியந்தீவில் மிகப்பழமையான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்று அது இதுவாக இருக்கலாம் என மனந்தேறினர். இது நாகதம்பிரான் ஆலயமாகும். இக்கோயிலிற் தாபிக்கப்பட்டிருக்கும் சிவலிங்கம் முன்னர் நயினாதீவு, நாகேஸ்வரி ஆலயத்தின் சுற்றுப்பிரகாரத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த சிவலிங்கங்களுள் ஒன்றாக இருக்கக்கூடும் என்ற கொள்கையும் அவ்வூர் மக்களிடையே உண்டு.[6]

யாழ்ப்பாணக் கச்சேரியிற் சைவசமயக் கோயில்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் பழைய இடாப்பு ஒன்றுண்டு. இது 1882 ஆம் ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது. அதில் நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கும் விபரம் பின்வருமாறு அமைகிறது. இராமலிங்கர் இராமச்சந்திரர் என்பவர் கி.பி 1788 இல் நாகபூசணியம்மன் ஆலயத்தைக் கல்லால் கட்டியதாகவும் அப்போது ஆண்டுக்கொருமுறை ஆனி மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை 10 நாட்கள் திருவிழா நடைபெற்றதாகவும் கோயில் வீதியில் மக்கள் அம்பாளைக் காவிக்கொண்டு வலம்வருதல் அல்லது தேரில் வலம்வருதல், திருவிழாக்காலங்களில் 10000 பேர் வரை வருகை தருகின்றனர். யாழ்ப்பாணத்திலிருந்தும் அயற் தீவுகளிலிருந்தும் யாத்திரிகர் வருகின்றனர். மேற்குறிப்பிட்ட ஆண் சந்ததியினரே இக்கோயிலின் மனேச்சராக இருந்து வருகின்றனர் எனச் சொல்லப்படுகின்றது. என்ற குறிப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.[7]

கி.பி 14ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது கி.பி 15ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அருணகிரிநாதர் திருப்புகழில் ' கரிநாகபூஷணத்தி', 'நாகபூசணி' என்ற சொற்களைக் கையாளுகின்றார். கி.பி 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அபிராமிப்பட்டரும் அபிராமி அந்தாதி பாடலொன்றில் 'சாதி நச்சுவாய் அகிமாலினி' என்று குறிப்பிடுகின்றார். இச் சொற்பிரயோகங்கள் அனைத்தும் நயினை நாகபூசணி அம்மனை நினைவுபடுத்துகின்றன. அபிராமி அந்தாதியிற் காணப்படும் இக்குறிப்பை கி.வா. ஜகந்நாதன் அவர்கள் நயினை நாகபூஷணி அம்மனோடு " மாலை பூண்ட மலர்" (பக். 190) என்ற அவரது நூலிற் தெளிவுபடுத்தி எழுதியுள்ளார்.[8]

யாழ். மாவட்ட நீதிமன்றத்தின் 14151 இலக்க வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 1949ஆம் ஆண்டிலிருந்து நயினை நாகபூசணியம்மன் ஆலய பரிபாலனத்தினை ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட அறங்காவலர் சபையினர் சிறப்பாகப் பரிபாலித்து வந்தனர். இவர்களில் நால்வர் பரம்பரை அங்கத்துவம் உடையவர்களாகவும் ஐவர் மகாசபை உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டும் சேவை செய்து வருகின்றனர்.[9] தற்போது 12 பேர் கொண்ட அறங்காவலர்கள் கோயில் முகாமைத்துவத்தையும், நிர்வாகத்தையும் நடத்திவருகின்றனர் இது நீதிமன்ற தீர்ப்பின் பிராகாரத்தின் அடிப்படையில் நடைபெறும் குறிப்பாகும்.

**ஆலய அமைப்பு**

இலங்கையிலுள்ள சிறப்புக்குரிய இந்துக்கோயில்களுள் இவ்வாலயமும் திராவிடப்பாணியில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாலயம் ஆகம முறைப்படி கிழக்குநோக்கிய வண்ணம் அழகுறக் காட்சியளிக்கிறது. ஆலயத்தின் அமைப்பினைக் கூர்ந்து கவனித்தாற் கர்ப்பக்கிருகம் சுயம்புருவான நாகத்தையும் அம்மனையும் கொண்டிருப்பதுடன், இருநிலை விமானம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், வசந்த மண்டபம், தெற்கு, கிழக்கு இராஜகோபுரம். நவக்கிரகக் கோயில், நால்வர் கோயில், அத்துடன் விநாயகர், முருகன், பைரவர், சூரியன், சந்திரன், மனோன்மணியம்பாள், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள் ஆகியோர் பரிவாரமூர்த்திகளாக விளங்குவதுடன். யாகசாலை, பாகசாலை, வாகனசாலை, திருக்கேணி ஆகிய முக்கிய உறுப்புக்கள் இருப்பதுடன் கர்ப்பகிருகத்தின் புறச்சுவர்களிற் கணபதி, கௌமாரி, வைஷ்ணவி, ப்ராம்மி, துர்க்கை, ஆகிய கோஷ்ட தேவதைகள் காணப்படுகின்றனர். இவ்வாலயத்தினுடைய தனித்த அடையாளங்களில் ஒன்றாகப் பெரியபுராண கலாசாரத்தை பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் இவ்வாலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களது சிற்பங்கள் ஒரே வரிசையிற் காணப்படுவதுடன். சக்திக்கேயுரிய திருத்தலங்களில் இத்தகையதான சிற்பங்கள் இங்கு மட்டுமே காணப்படுவது அதனுடைய தனித்துவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயக் கர்ப்பக்கிருகத்தினுள் சுமார் மூன்றரை அடி உயரமுள்ள ஐந்து தலையுடைய நாகக் கற்சிலையின் உருவமும், அதன் அடியிலுள்ள பீடமொன்றில் ஓரடி உயரமான குறுகிய நாகப் பிரதிஷ்டை போன்ற அருவுருவத் திருவுருவமும் விளங்குகின்றன. இவையிரண்டும் இவ்வாலயத்தின் புராதன வழிபாட்டுச் சின்னங்கள் என்று நம்பப்படுகின்றன. பீடத்திற் காணப்படும் நாகப் பிரதிஷ்டை போன்ற சக்தியின் அருவுருவத் திருவுருவத்திற் பொன்னாலான ஓர் அங்கி அணியப்பட்டுள்ளது. அங்கி அணிந்த நிலையில் அந்த அருவுருவத் திருவுருவத்தை நேரே நின்று பார்ப்பவர்களுக்கு அது லிங்கம் போன்று காட்சி தருகின்றது. ஆனால் அதனை லிங்கத்தின் வடிவம் எனக் கூறமுடியாது.

இவ்வாலயத்தின் கிழக்கு வாயிலிற் கம்பீரமான தோற்றத்துடன் காட்சியளிப்பது 1935 இல் கட்டிமுடிக்கப்பட்ட தூலலிங்கமாகிய கோபுரமாகும். ஆலயத்தின் இப்போதுள்ள விமானம் காரைக்குடி சிற்பவல்லுனர் திரு. எம். செல்லக்கண்ணு ஸ்தபதியாரினாற் பாண்டி நாட்டுச் சிற்பமுறையில் அமைக்கப்பட்டு 27.04.1951 இல் குடமுழுக்கு செய்யப்பட்டதாகும். உற்சவ காலத்தில் இப்பொழுது உலாவரும் தேர், தேர்த்திருப்பணிச்சபை என்ற சபை மூலம் செய்து முடிக்கப்பட்டு 08. 07. 1957 இல் வெள்ளோட்டத்திற்கு விடப்பட்டதாகும். இதனைப் பூர்த்தி செய்தவர் அருட்டிரு குன்றக்குடி அடிகளாரின் ஆலோசனைப்படி அழைக்கப்பட்ட தமிழ் நாட்டு நாகர்கோயிலைச் சேர்ந்த திரு. எஸ். குமாரசாமி ஆசாரியர் ஆவார். இத்தேர் இன்று ஈழத்திலுள்ள முதன்மைபெற்ற சித்திரலங்காரச் செய்கைத் தேர்களுள் ஒன்றாகும். [10]

எல்லாம் வல்ல, இறைவன் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு தமது மாபெருங் கருணையைப் பதித்த இடங்கள் அறுபத்துநான்காகும். அருட்சக்தி பீடங்கள் எனப்படும் இவை காசி, விசாலாட்சி, காஞ்சி காமாட்சி, மதுரை மீனாட்சி என்று வருவனவாகும். அவற்றுள் இரண்டு நயினாதீவில் அமைந்துள்ளன என்றும் அவை புவனேஸ்வரி பீடம், திரிபுரபைரவிபீடம் என்றும் தேவிபராக்கிரமத்தில் விபரிக்கப்பட்டுள்ளது.[11]

**வழிபாட்டு முறைகள்**

எல்லாம் வல்ல பராசக்தியை நாம் உபாசிக்கும் வழிகள் பலவுள்ளன. அவற்றுள் கலியுகத்தில் யோகியர், ஞானியர்கள் தவிர்ந்த பொதுமக்களால் அனுஷ்டிக்கப்படுவனவற்றுள் மிகவும் பிரசித்தமானவை மூன்று. அவையாவன வைதிகமரபில் அம்பிகையை வழிபடுதல், ஆகமமரபில் அம்பிகையை ஆராதித்தல், தாந்திரிகமுறையில் ஸ்ரீ வித்தியோபாசனை பண்ணுதல் இம்மூன்று முறைகளிலும் அமையும் வழிபாட்டு மரபுகள் நயினை நாகபூசணி அம்பாள் ஆலயத்திற் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு மந்திர, தந்திர யந்திர முறைகளால் வழிபடப்படும் இவ்வாலயத்தில் தமிழ்நாட்டு மரபிலமைந்த தட்சிணாசார வழிபாட்டு முறையே பண்டு தொட்டு இன்றுவரை இருந்து வருகின்றது. [12]

இவ்வாலயத்தில் நித்திய, நைமித்திய, காமிககிரியைகள் சிறப்பாக இடம்பெற்றுவருகின்றன. நைமித்தியக் கிரியைகளுள் ஒன்றான மகாகும்பாபிஷேகம் காலம் காலமாக இந்து சமய சாஸ்திரவிதிப்படி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதற்கமைய நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் 1951,1963 இல் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதன் பின்னர் சுமார் இருபது வருடங்களின் மேல் அம்பிகையின் திருவருள்கொண்டு ஆலயத்தினுடைய அறங்காவலர் சபையின் அயராத முயற்சியினால் 28.08.1983, 1998, 2011 இல் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தில் சுயம்புருவங்கள், பிரதிஷ்டை முதலிய கிரியைகளின்றி வழிபடத்தக்க பெருமையுடைய தலமென்பது நினைவுகூரத்தக்கது.[13]

வேதாகம மரபு நெறிமுறைக்குட்பட்ட வகையில் இவ்வாலயத்தில் விரதங்களும், வழிபாடுகளும், விழாக்களும், கிரியைகளும் நடைபெற்று வருகின்றன. ஆகம மரபுக்குட்பட்ட வகையில் ஆறுகாலப் பூசைகளில் உஷத்காலம், காலச்சந்தி, உச்சிக்காலம், சாயங்காலப்பூசை, அர்த்தசாமப்பூசை என ஐந்து கால நித்திய பூசைகள் நடைபெறுகின்றது. கோயிலுக்கென நித்திய மேளம் உண்டு, சிவன், அம்பாள், விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு முதலிய ஐவரின் பூஜை தினங்கள் ஒவ்வொரு மாதத்திலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அத்துடன் புரட்டாதி மாதத்தில் நடைபெறும் சாரதா நவராத்திரி பூசை இவ்வாலயத்திற் சிறப்பாக நடைபெறுகின்றது. பகலிற் சங்காபிஷேகமும், இரவில் ஸ்ரீ சக்கர பூசையும் நடைபெறுவதுடன் விஜயதசமியன்று அம்பாயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையும் வன்னி விருட்ச பூசையும் நடைபெறுகின்றது.[14]

இவ்வாலயத்தின் மகோற்சவம் ஆனி மாதத்தில் நடைபெறுவது வழக்கமாகும். ஆரம்பத்திற் பத்து நாட்கள் மட்டும் திருவிழாக்கள் நடைபெற்றன. 1960 ஆம் ஆண்டிலிருந்து கோயிலின் வளர்சியையும், புதுமையும் நோக்கிப் பதினைந்து திருவழாக்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வாலய தேர்த் திருவிழாவின் போது பல்லாயிரக்கணக்கான அம்பாள் அடியவர்கள் கூடுவர். 08.07.1957ஆம் ஆண்டிற் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரலங்காரத் தேரில் அம்பாள் பவனி வந்தாள். இன்றும் விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும் சிறந்த சிற்பவேலைகளுடன் கூடிய தனித்தனித் தேர்கள் இருக்கின்றன. மேலும் இங்கு நடைபெறும் மஞ்சத்திருவிழாவும் எம் நெஞ்சத்தை அள்ளும் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது. இந்த மஞ்சத்திருப்பணி நயினை– கொழும்பு வர்த்தகப் பெருமக்களால் 1981 ஆம் ஆண்டளவிற் செய்து முடிக்கப்பெற்று 10.07.1981 இல் அதன் வெள்ளோட்டமும் நடைபெற்றது.[15]

அன்னையைத் தரிசித்து அருள்பெற்று உய்யப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் வருகை தந்த வண்ணம் இருக்கின்றனர். அடியவர்கள் தங்குறைகளைக் கூறி நேர்த்திக்கடன் செய்து அம்பாளை வழிபட வேண்டியவருக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அடியவர் குறைகளைக் களைந்து அருள் பாலித்த வண்ணமே இருக்கின்றாள். அதாவது குழந்தைப்பேறு கிடைக்காதவர்கள் திருமணம் உரியவேளை நடக்காதவர்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் இத்தலத்திற்கு வருகைதந்து நாகபிரதிஷ்டை, நாகசாந்தி முதலான கிரியைகளைச் செய்து அதனை பெற்றுக்கொள்வதுடன், அதற்குப் பிரத்தியுபகாரமாக தமது நேர்த்திக் கடனைச் செலுத்தும் முகமாகக் குழந்தைகளை விற்றுவாங்குதல், மொட்டையடித்தல் முதலானவை இவ்வாலயத்தில் நடந்து வருவதுடன் பொன், வெள்ளி, செம்பு என்பவற்றாலான தெய்வ உருவங்களையும், தொட்டிலும் குழந்தையும் கொண்டவுருவங்களையோ அல்லது கல்லால் நாகச்சிலையை அமைத்து வேப்பமரங்களை வலம்வந்து வழிபடுவதுடன் அதனை காணிக்கை யாகவும் செலுத்தி வழிபாடாற்றுகின்றனர். இவ்வாலயத்தின் வடகிழக்குப் பகுதியிற் கடலுக்குள் அமைந்துள்ள கட்டடத்தில் நாகசாந்தி எனும் கிரியை ஆற்றப்படுகின்றது. இத்தகைய சிறப்புமிக்க சக்தி வழிபாட்டுமரபை இலங்கையில் வேறெங்கும் காணலரிது.

மகோற்சவ காலங்களிலும் ஏனைய காலங்களிலும் இத்தலத்திற்கு பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் யாழ்ப்பாணத்திலும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் மட்டுமல்ல தென்னாசிய மற்றும் மேற்குலக நாடுகளிலிருந்து வருகை தந்து அறம், பொருள், இன்பம், வீடு எனும் நால்வகையினைச் சார்ந்த பெறுபேறுகளையெல்லாம் வேண்டிவாறே பெற்றுவருதல் யாவரும் நன்கறிந்த உண்மையேயாகும். இவ்வாலயத்திற் பாரம்பரியமாகச் சந்தான கோபாலப்பிரதிஷ்டை செய்து ஏராளமான பக்தர்கள் புத்திர சந்தானமுடையவர்களாய் மீண்டும் அம்பாளைத் தரிசனம் செய்து விலைமதித்தற்கரிய திருவாபரணம், வாகனம், தீபம் முதலியவற்றைக் காணிக்கையாகக் கொடுத்திருக்கின்றனர். இந்தக் கோயிலில் அழகிய கைலாச வாகனம், சர்ப்ப வாகனம், காமதேனு வாகனம் முதலியன உண்டு. இவை யாவும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுத்து உதவியனவாகும்.

மாதந்தோறும் வரும் பூரணையில் அம்பிகை ஸ்ரீ சக்கரத்தில் வித்யோபாசனை செய்யப்படு கின்றாள். யந்திரங்கள் அனைத்துள்ளும் பிரசித்தி பெற்றது ஸ்ரீ சக்கரம். இதனைமூன்று வகையாக அமைப்பார்கள். மேரு, கைலாசம், பூ என்ற மூன்று நிலைகள் உண்டு. நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் மேருபிரஸ்தர ஸ்ரீ சக்கரத்தில் அம்பிகை உபாசனை செய்யப்படுகின்றாள். புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி தினங்களில் இவ்வாலயத்தில் நிகழும் சக்தி வழிபாடுகள் அற்புதம் மிக்கவை. அத்துடன் இவ்வாலயத்தில் ஆடிப்பூரவிழாவும் மகோற் ஷ வத்திற்குஅடுத்த பெருவிழாவாக மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இத்தலம் பல மகான்களுக்கும், அறிஞர் களுக்கும், சாதனையாளர்களுக்கும், புலவர்களுக்கும் இருப்பிடமாக அமைந்துள்ளது. ஈழத்துச் சித்தர்கள் வரிசையில் இவ்வூர் மைந்தராக இருந்து சித்தரானவர் முத்துக்குமாரசுவாமிகள் குறிப்பிடத்தக்கவர். இலங்கையில் நாளாந்தம் அடியவருக்கு அன்னதானம் கொடுக்கின்ற ஓர் ஆலயமாக இவ்வாலயம் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பிகையினுடைய விசேட விழாக்காலங்களில் வேப்பமிலைகளைத் தோரணமாக உட்பிரகாரத்திலும் கோபுரவாயில் முன்மண்டபத்திலும் தொங்க விடுகின்றனர். இவ்வாலய வேப்பம் இலைகளைப் பயன்படுத்திப் பார்வை பார்ப்பதன் மூலமாகப் பாம்பினால் கடிபட்டவரைச் சாவிலிருந்து விடுவிக்க முடியுமென்பது நீண்டகாலமாக அவ்வூர்மக்களிடையே இருந்துவருகின்ற நம்பிகையாகும். தமிழகத்திலும் இவ்வகையான வழிபாட்டு முறைகள் காணப்படுகின்றமை ஒப்பு நோக்கதக்கது. நயினாதீவில் நாகபாம்பு அதிகம் காணப்படுகின்றபோதும் பாம்புக்குப் பகையான கீரி, செம்பகம் போன்றவை இக்கிராமத்தில் இல்லையென்பது குறிப்பிடதக்கதாகும்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தை மையமாகக் கொண்டெழுந்த இலக்கியங்களாக யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய மனோன்மணி மாலை, அமரசிங்கப்புலவர் இயற்றிய நயினை நாகபூஷணி அம்மை திருவூஞ்சல், வரகவி முத்துக்குமார புலவர் இயற்றிய நயினை நாகபூஷணியம்மை திருவிருத்தம், வரகவி நாகமணிப்புலவர் எழுதிய நயினை மான்மியம், வேலணை தம்பு உபாத்தியயார் இயற்றிய திருநாகதீபப் பதிகம், க. ராமச்சந்திரன் எழுதிய தேவி பஞ்சகம், நயினை தீவு சுவாமிகள் இயற்றிய நாகபூசணியம்மை அந்தாதி, சிவராசசிங்கன் இயற்றிய நயினாதீவு நாகபூசணி அம்மை பிள்ளைத்தமிழ்,கவிஞர் செல்வராஜன் இயற்றிய பாடல்கள் யாவும் இவ்வாலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களையும், வழிபாட்டு மரபுகளையும் பக்திச் சுவையுடன் கூறிநிற்கின்றன.

**முடிவுரை**

நாகத்தினைச் சக்தியாக வணங்குகின்ற புராதன சாக்த மரபானது இந்தியாவில் மிகப்பரவலாகக் காணப்பட்டபோதும் அதனுடைய அயல்நாடான இலங்கையிலும் அதனுடைய தாக்கத்தினைச் செலுத்தியிருப்பதில் ஐயமில்லை. அதனடிப்படையிற் சக்தி வழிபாடும், நாகவழிபாடும் ஒன்றிக்கலந்து விளங்கும் மிகப்புராதன தமிழ்நாட்டு மரபின் தாக்கம் இலங்கையிற் குறிப்பாக நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்திலும் காணப்படுகின்றது. இவ்வாலயம் ஆலய அமைப்புமுறை, சக்தியின் நாமங்கள்,கிரியைகள், விரதங்கள், விழாக்கள்,சக்தி வடிவங்கள், வழிபாட்டு மரபுகள், திருவருட் சிறப்புக்கள் போன்ற இன்னோரன்ன சக்திக்கேயுரிய சிறப்பம் சங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கின்றது. இலங்கையில் யாத்திரிகர் தலமாகவும்,சக்திக்கேயுரிய தனித்த வழிபாட்டுத் தலமாகவும் விளங்கும் மிகப்புராதனமாகத் திகழும் சக்தி ஆலயம் இதுவேயாகும். இத்தகைய மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினையும், தொன்மையினையும், வழிபாட்டு மரபுகளையும் கொண்டு விளங்கும் சக்தி ஆலயமாக நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. தமிழடியான், 1976, "நயினாதீவு நாகபூசணி அம்பாள் கோயில்", **திருக்கேதீச்சரம் திருக்குட திருமஞ்சன மலர்**, ப. 205.
2. வேதநாதன், மா., 1990, **இலங்கையில் சக்தி வழிபாடு : சாக்த கிரியை மரபுகளுடன் விசேட தொடர்புபடுத்திய - ஓர் ஆய்வு,** (முதுதத்துவமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது), ப. 165.
3. சபாநாதன், குல., 1957, "நாகேஸ்வரி ஆலயம்", **நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் தேர் திருப்பணிச் சபை மலர்**, ப. 6.
4. சிவலிங்கம், மூ., 2009, ஈழத்து சக்தியின் அற்புதங்கள், இணுவில் சைவத்திருநெறிக் கழகம், ப. 11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சபாநாதன், குல., 1957, "நாகேஸ்வரி ஆலயம்", **நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் தேர் திருப்பணிச் சபை மலர்,** ப.37.
6. **மேலது,** ப.37.
7. **மேலது,** ப.38.
8. வேதநாதன், மா., 1983, "நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும் சில குறிப்புக்கள்", **திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்,** ப. 2.
9. மேலது, ப. 2.
10. தமிழடியான், 1976, "நயினாதீவு நாகபூசணி அம்பாள் கோயில்", **திருக்கேதீச்சரம் திருக்குட திருமஞ்சன மலர்,** ப. 206.
11. ஆத்மஜோதி, 1983, "நயினாதீவு நாகபூசணி அம்பாள் திருத்தல வரலாறு", **திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்,** ப.24
12. வேதநாதன், மா., 1983, "நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும் சில குறிப்புக்கள்", **திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்,** பக். 6-7.
13. **மேலது,** ப. 4.
14. தியாகராசா, ஆ., 2014, நாகம் பூசித்த ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வரலாறு, அறங்காவலர் சபை, ப.49.
15. வேதநாதன், மா., 1983, "நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய வரலாறும் வழிபாட்டு மரபுகளும் சில குறிப்புக்கள்", **திருக்குடமுழுக்கு பெருவிழா மலர்,** ப. 6.

**துணைநூற்பட்டியல்**


1. நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் திருக்குடமுழுக்கு பெருவிழா மலர், அறங்காவலர் சபை, 1983.
2. வேதநாதன், மா., இலங்கையில் சக்தி வழிபாடு : சாக்த கிரியை மரபுகளுடன் விசேட தொடர்புபடுத்திய - ஓர் ஆய்வு, (முதுதத்துவமாணி பட்டத்திற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்டது), 1990.
3. சபாநாதன், குல., "நாகேஸ்வரி ஆலயம்", நயினாதீவ ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் தேர் திருப்பணிச் சபை மலர், தேர்த் திருப்பணிச்சபை, 1957.
4. திருக்கேதீச்சரம் திருக்குடத்திருமஞ்சன மலர், திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை, 1976.
5. சிவலிங்கம், மூ., ஈழத்து சக்தியின் அற்புதங்கள், இணுவில் சைவத்திருநெறிக் கழகம், இணுவில், 2009.
6. தியாகராசா, ஆ., நாகம் பூசித்த ஸ்ரீ நாகபூசணி அம்மன் கோயில் வரலாறு, அறங்காவலர் சபை, நயினாதீவு, 2014.
7. சண்முகநாதபிள்ளை, நா, க., புராதனி நயினை நாகபூசணி ஆலய வரலாறும் அருட்பாமாலையும், பூபாலசிங்கம் புத்தகசாலை, 1981.
8. சிற்றம்பலம், சி, க., "பண்டைய ஈழத்தில் சக்தி வழிபாடு சில குறிப்புக்கள்", அளவெட்டி வடக்கு தவாக்கிரி முத்துமாரியம்மன் கோயில் கும்பாபிஷேகமலர, ஆலய பரிபாலணசபை, 1990.
9. நாகேஸ்வரன், க., மணிபல்வம் எனப்படும் நயினாதீவு, கலைக்கேசரி, Express news papers PVT, கொழும்பு 14, 2013-2014.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய், மருதடிப் பிள்ளையார் ஆலயம்

**– திருமதி இந்திரா சதானந்தன் –**

**யா**ழ்ப்பாணத்தில் மானிப்பாய் எனும் நகரில் மருதடிப்பிள்ளையார் என அழைக்கப்படும் மருதடிவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இது மிகப்பழைமை வாய்ந்த கோயில் – இக்கோயிலின் சிறப்பினையும் வரலாற்றினையும் மருதடி விநாயகர் ஆலய மான்மியம் (1925) குறித்துநிற்கின்றது.

போர்த்துக்கீசர் ஆட்சிக்கு முன், இவ்விடத்தில் ஒரு மகானின் அடக்கம் இங்கு இடம் பெற்றிருக்க வேண்டுமெனக் கூறுவர். இங்கு ஒரு விநாயகராலயம் இருந்திருக்கிறதென்றும் இருந்த காலத்திலேயே மகான் அவ்விடத்தில் நிஷ்டையிலிருந்தாரென்றும் போர்த்துக்கீசர் காலத்தில் அக்கோயில் இடிபட்டதென்றும் இதற்கு ஆதாரமாக ஆலயத்தின் தெற்கு வீதியிலுள்ள திருக்குளத்தை 'பிராமணன்குளம்' என மக்கள் அழைத்தார்களென்றும் மான்மியம் குறித்து நிற்கின்றது.

போர்த்துகீசர் காலத்துப் பறங்கியர்கள் கிராமங்கள் தோறும் இருந்த கோயில்களையெல்லாம் இடித்து அங்கிருந்த விலையுயர்ந்த விக்கிரகங்களையும் திரு ஆபரணங்களையும் கொள்ளையடித்தார்கள். இவ்வகையாக இடிபட்ட கோயில்களில் மருதடி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும். இக்கோயிலை இடித்து இவ்விடத்தைச் சவக்காலையாக்கி விட்டனர். இதற்கு இவ்வாலயக் கட்டிடம் ஆரம்பம் செய்த நாட்களில் இவ்விடத்தில் காணப்பட்ட மனித எலும்புகள் ஆதாரமாக இருந்தன. சவக்காலையும் மயானமும் இப்போது கோயிலிலிருந்து ஏறக்குறைய நூற்றிருபத்தைந்து யாருக்கப்பால் ஆலயத்தின் மேற்கு வாசலின் நேர்த்திசையிலிருப்பதாலும் இது உண்மையெனத் தெரிகிறது. அதுமட்டுமன்றி இக்கோயிலின் கிழக்கேயிருக்கும் மருதமரத்தின்கீழ் இராக்காலங்களில் பறங்கியர் கண்களுக்கு புலப்படாதவாறு பொங்கலிட்டு கற்பூரம் எரித்து விநாயகரை வழிபட்டு வந்துள்ளனர் எனவும் அறிய முடிகின்றது. இப்பொழுதும் மருதமரத்தின்கீழ் கற்பூரம் எரித்து வழிபடுவதோடு தினந்தோறும் பொங்கலிடும் வழக்கத்தினையும் காணமுடிகின்றமை இதற்குச் சான்றாக அமைகின்றது.

போர்த்துக்கேயர் காலத்தில் மதவழிபாட்டில் இருந்த இறுக்கம் ஒல்லாந்தர் காலத்தில் சற்றுத் தளர்ந்தது. இக்காலகட்டத்தில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பலர் வரத்தொடங்கினர். தொண்டை மண்டலத்திலிருந்து அனேகர் வட்டுக்கோட்டை, காரைநகர் போன்ற இடங்களில் வந்து குடியேறினர். இவர்களில் ஒருவர்தான் நவாலி வயல்களிலிருக்கும் தூக்கிணி வைரவர் கோயிலடியில் வந்து தங்கிப் பூஜை செய்த தியாகராஜக்குருக்கள். இவர் இங்கு தங்கியிருந்து பூஜை செய்த காலகட்டத்தில் ஆடுகள் வேள்வியின்போது வெட்டப்படுவதைக் கண்டு வெறுப்படைந்து அங்கிருந்து விலகி மானிப்பாய் நகரிலுள்ள மருதஞ் சோலையை அடைந்தார். அங்கு விநாயகர் சிலைக்கு பூஜை, பொங்கல் செய்து வந்தார். அக்காலத்தில் அவ்விடத்தின் சமூகப் பெரியவராக விளங்கிய சுவாமிநாத முதலியாரவர்கள், குருக்கள் வசிப்பதற்கு நிலமும் வீடும் கொடுத்துதவினார். எனினும், அக்கால சமூக மத தாக்கத்துக்குள் அகப்பட்ட முதலியாரவர்கள் கிறிஸ்தவ மதத்திற்கு ஆதரவு கொடுக்கமுற்பட்டு விநாயகர் சிலையை அவ்விடத்திலிருந்து அகற்றிவிட்டார். இதனால் மிக்க கவலையுடன் இருந்த குருக்களின் கனவில் விநாயகப் பெருமான் தோன்றி வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வீதியில் வசிக்கும் வைத்திலிங்கச் செட்டியாரிடம் சென்று எனது உருவத்திருமேனி அமைந்த சிலையைக் கேட்பாயேல் உனது மனத்துயரம் நீங்கும் என்று திருவாய்மலர்ந்தருளினார். அதேநேரத்தில் வைத்திலிங்கச் செட்டியாரிடம் தோன்றி "எனதன்பன் தியாகராஜன் உன்னிடம் வேண்டும் காரியத்தை மறுக்காமல் கொடுத்துவிடு" எனச் சொல்லி மறைந்தார். குருக்கள் அவரிடம் சென்று விநாயகர் சிலையைப் பெற்று மரத்தடியில் வைத்து நித்திய, நைமித்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியங்களைச் செய்துவந்தார். இத்திருவுருவம் இப்பொழுது ஆலயத்திலிருக்கும் சிவன் கோயிலுக்கு மேற்கே வைக்கப்பட்டு காவடிப் பாலாபிஷேகம் பண்ணப்பட்டு வருகின்றது எனக் கூறுவாருமுளர் என்கிறது மான்மியம்.

தியாகராஜக் குருக்கள் ஆவரங்கால் சைவச் செட்டி வேளாண் குடும்பத்தில் மணமுடித்து குமரகுருபரர், வெற்றிவேலர் என இருபுதல்வர்களைப் பெற்று கோயிலில் பூசை செய்து வந்தார். அக்காலத்திலேயே திருக்கோயில் கட்டி மகோற்சவம் நடத்த உத்தேசித்தார்களென்றும் அவ்வூர்ப்பெருமகன் சுவாமிநாத முதலியார் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத்திசையை நோக்கி கர்ப்பக்கிரகமும் அர்த்தமண்டபமும் கட்டிமுடித்து எஞ்சிய கோயிற்பாகங்களை மரந்தடிகளால் உருவாக்கி பங்குனி மாதத்தில் மகோற்சவ ஆரம்பம் செய்வித்து இருபத்துநான்கு நாட்களாக விசேட அபிஷேக விழாக்கள் கொண்டாடப்பட்டு சித்திரை மாதம் முதலாந் தேதியில் புதுவருடம் ஆரம்பமாகும் வேளையில் இரதோற்சவமும் அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார் (மருதவிநாயகர் மான்மியம் பக் – 9).

ஆங்கிலேயர் காலத்தில் மருதடியாலயம் அதி உன்னத நிலையை அடைந்து பல நலன்விரும்பிகள், சைவப் பெரியார்களின் ஆதரவால் திருப்பணிகள் பல முற்றுப் பெறத்தொடங்கின. விநாயகரின் கர்ப்பக்கிருக தூபியும் அர்த்தமண்டபமும் மகாமண்டபமும் பொன்னம்பல சிறாப்பர் அவர்களாலும், சபா மண்டபம் மண்டலத்தார் அவர்களாலும் ஸ்தம்பமண்டபம் இரகுநாத முதலியார் சின்னத்தம்பி அவர்களாலும், சிவன் கோயில், நடராச கோயில், அம்மன் கோயில்கள் தன்மாவரதர் முத்துத்தம்பி அவர்களாலும் முற்கோபுரம் தம்பையா முதலியார் அவர்களாலும், மடைப்பள்ளி வாகனமண்டபம் தெற்கு மானியம்பதி மருதப்பரவர்களாலும், வசந்தமண்டபம் வைரவி ஆச்சரியராலும் வசந்தமண்டபக் கொட்டகை வட்டுநகரிலுள்ள சிவபுண்ணியவான்களாலும் தேர்முட்டியும் இரதமும் இரகுநாதர் சின்னத்தம்பி யாரவர்களாலும் செய்விக்கப்பட்டன. கீழைக்கோபுரம் செல்லப்பா வைரமுத்து அவர்களாலும் பொங்கல் மண்டபக் கொட்டகை வன்னியசிங்கம் தம்பிப்பிள்ளையவர்களாலும் திருமஞ்சனக்கிணறு முருகேச முதலியார் பொன்னுசாமி அவர்களாலும் தீர்த்தக்கிணறு முருகேசர் விநாசித்தம்பி அவர்களாலும், திருநந்தவனம் சிவப்பிரகாசமவர்களாலும் செய்விக்கப்பட்டன.

ஸ்ரீமான் சுவாமிநாதபிள்ளையின் பரம்பரையே கோயில் நிருவாகத்தைப் பேணிவந்தது. இவர்களே தெற்கு வீதியிலிருந்த குளத்தை சேர் வில்லியம் (அக்கால வடமாகாண ஏஜென்ட்) அவர்களின் உதவியுடன் மூடி, தேர் உலா வருவதற்கு வசதியாக வீதியை அமைத்தனர். தியாகராஜகுருக்களின் சந்ததியினர் ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்கள் பூஜை செய்து வந்தனர். இவர்கள் சைவக்குருமாரே. அதன் பின் பிராமணர் இங்கு பூஜை செய்யத் தொடங்கினர். பிராமணருள்ளே முதற் பூசகராக இருந்தவர் பிரம்மஸ்ரீ சீதாபதி குருக்கள். இவரது பரம்பரையினரே தொடர்ந்து பூஜை செய்து வருகின்றனர்.

மருதடிப் பொங்கல் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சிறப்பானதொரு விடயமாகும். இன்றும் பங்குனி மாதத்தில் மகோற்சவம் ஆரம்பமாகிப் பதினெட்டு நாட்களாய் விசேட திருவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழைச்சேனை (மருங்கையடிப்பூவல்)
# கைலாய பிள்ளையார் கோயில்

**– வித்துவான் வி. சி. கந்தையா –**

மட்டக்களப்பில் வடக்கே இருபது மைல் தொலைவில் கடலோரி ஓரமாக இருந்த காட்டுப் பிரதேசம் மருங்கையடிப்பூவல் என வழங்கியது. இது கற்குடா என அழைக்கப்படும் ஊரிலிருந்து மேற்கே இரண்டு மைல் தொலைவிலுள்ளது. அக்காட்டில் புலி, கரடி முதலிய கொடிய விலங்குகளும் சஞ்சரித்தன. அதன் கிழக்குப் பகுதியில் சுதேசிகளான வேடுவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் தமக்கே உரித்தான வேட்டையாடுதல், தேன் வெட்டுதல், மீன் பிடித்தல் ஆகிய தொழில்களுடன் சேனைப்பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டு வந்தனர்.

இப் பிராந்தியத்தின் மண்வளத்தையும் ஏரியில் காணப்படும் மீன் வளத்தையும் அவதானித்த பலர், அமிர்தகழி, மட்டக்களப்பு, நாவற்குடா, ஆரையம்பதி, அக்கரைப்பற்று, திருக்கோயில் முதலிய இடங்களிலிருந்து வந்து தாம் விரும்பிய இடங்களிலுள்ள காடுகளை வெட்டித் துப்பரவு செய்து மரவள்ளி, சோளம், வாழை முதலியவற்றைச் சேனைப்பயிராகச் செய்கை பண்ணியும் பக்கத்திலுள்ள ஏரியில் மீன் பிடித்தும் வருவாயைத் தேடிக் கொண்டு வாழ்ந்து வந்தனர்.

தங்கள் சேனைப்பயிர்களில் வாழையே கூடுதல் பிரயோசனம் கொடுத்ததால் காலஞ் செல்ல சேனை முழுவதும் வாழைகளையே நட்டனர். தமது ஊரிலிருந்து புறப்படும்போது இவர்கள் தமது வாழைச் சேனைக்குப் போவதாக குறிப்பிடுவது வழக்கமாயிற்று. இவ்விதமாக எல்லோரும் வழங்கி வந்தால் இந்தப் பிரதேசம் முழுவதும் வாழைச்சேனை என்ற காரணப் பெயரால் அழைக்கப்படலாயிற்று. அதனால் மருங்கையடிப்பூவல் என்ற அதன் உண்மைப் பெயர் மறைந்து வாழைச்சேனை என்ற பெயரே நிலைபெறலாயிற்று.

வாழைச்சேனைப் பகுதி நல்ல வளமுடையதாகவும், குடியிருப்பதற்கு வாய்ப்பான நிலமுடையதாகவும் அமைந்ததால் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்தவர்கள் எல்லோரும் நிரந்தரமாகவே இங்கே குடியேறலாயினர். இவர்களின் சந்ததி பெருகிக் காலவரையில் ஒரு ஊராக வாழைச்சேனை பரிணமித்தது. இதனால் மேலும் பலர் வந்து குடியேறினர்.

இவ்விதமாக முன்னேற்றமடையும் வாழைச்சேனை தமது பழக்கவழக்கங்களுக்கு ஒத்து வராதெனக் கண்ட சுதேசிகளான வேடுவர்கள் தமது நிலங்களை விற்றுவிட்டு பேத்தாளை, கற்குடா. வாகனேரி, மாங்கேணி முதலிய இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். வாழைச்சேனைக் கிராமம் கண்டி இராச்சியத்தின் ஆட்சிக்குள் ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பட்டங்கட்டியின் அதிகாரத்தின் கீழ் இருந்து வருவதாயிற்று.

வாழைச்சேனையில் சந்ததியில் கூடியவரும் செல்வ நலன்கள் உடையவருமான உடையார் என்பவர் கிராமத்தின் கிழக்குத்திசையில் ஏரியோரமாக ஓரிடத்தில் அனாதரவாக ஒரு கற்பிள்ளையார் கிடப்பதைக் கண்டார். கண்டு தாம் அவரைக் கொணர்ந்து ஓடையோரமாகவுள்ள தமது காணியில் ஒரு மரத்தின் கீழ் வைத்து வழிபட்டு வரலானார்.

ஊர்மக்கள் எல்லோரும் சைவசமயிகளாதலால் ஒரு மனதாய் இப்பிள்ளையாரை வழிபட்டு வந்தனர். காலவரையில் வெள்ளிதோறும் பொங்கல் பூசை நியமமாக நடைபெறலாயிற்று. கோயிலின் மகிமையில் அற்புதங்களும் பிரசித்தமாயின. அற்புதங்களுள் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடுவோம்.

பிச்சிலான் என்ற பட்டப்பெயரால் அழைக்கப்பட்ட கணபதி என்ற சிறுவன் ஒரு நாள் பூசைக்கு வரப் பிந்திவிட்டான். அவன் கோவிலுக்கு வந்தபோது ஆட்கள் எல்லோரும் கலைந்தும் விட்டனர். அவனுக்குப் பொங்கல் கிடையாததால் மனவருத்தமும் பிள்ளையார் மீது கோபமும் உண்டாயிற்று.

அதனால் தென்னை மட்டையினால் பிள்ளையாரை அடித்தும், காலால் உதைத்தும் உருட்டியும், கொண்டு போய் ஓடையில் விட்டு விட்டுப் போனான். அன்று பின்னேரம் பிள்ளையார் இல்லாதிருப்பதை அவதானித்தவர்கள் காலடிச் சுவட்டைப் பின் பற்றிச் சென்று ஓடைக்குள் கிடைக்கும் பிள்ளையாரைக் கண்டனர். கண்டதும் அவரைத் தூக்க முயன்றனர். ஆனால் பிள்ளை மிக்க பாரமாக இருந்ததால் தனித்தோ, சேர்ந்தோ அவர்களால் தூக்கிக் கொள்ள முடிய வில்லை. அச்செயலைச் செய்தவன் பிச்சிலானே என்றும் அவனைக் கொண்டே பிள்ளையாரைத் தூக்கச் செய்தல் வேண்டும் எனவும் உணர்ந்து அவனைத் தேடிக் கண்டு பிடித்தனர்.

அவனோடு இனியவார்த்தைகள் பேசி அவனை அழைத்து வந்தனர். பிச்சிலான் வந்ததும் மிகவும் இலகுவாகப் பிள்ளையாரை தூக்கிச் சென்று அவர்கள் கூறியபடி முன்பிருந்த இடத்தில் வைத்தான். அதன் பின்னர் பிச்சிலான் கணபதிக்கு அவன் பிந்தினாலும் பொங்கல் பிரசாதம் பிந்தாது கிடைத்தே வந்தது.

இவ்விதம் மகிமையுடைய பிள்ளையாருக்கு ஊர்மக்கள் களிமண்ணினால் கோயில் அமைத்தனர். அதனைப் பரிபாலிக்கவும் ஊர்க் கட்டுப்பாட்டைப் பேணவும் இரண்டு வண்ணக்கர், ஒரு கங்காணி, ஒரு அதிகாரி, பத்து முகாமைக்காரார் ஆகியோரைக் கொண்ட ஒரு நிருவாகத்தையும் அமைத்துக் கொண்டனர். இந்த நிர்வாகிகளின் முயற்சியால் பூரணத்துவமான கற்கோயில் கட்டப்பட்டு 1906 ஆம் ஆண்டில் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல்லில் செதுக்கப்பட்ட பிள்ளையார் மூலஸ்தானத்தில் பிரதிட்டை செய்யப்பட்டு கும்பாபிடேகமும் நடைபெறலாயிற்று. முன்னைய பிள்ளையாருக்கும் ஆலயத்தில் ஓரிடம் ஒதுக்கப்பட்டு அவருக்கும் பூசை நடைபெற்று வரலாயிற்று. இன்றும் இப்பிள்ளையாரின் அநுக்கிரகத்தால் பிள்ளைச் செல்வம் பெற்ற பலர் வாழைச் சேனையிலும் வேறிடங்களிலும் உள்ளனர்.

கற்கோயில் அமைக்கப்பட்ட காலம் முதல் நித்திய பூசை நடைபெறுகின்றது. விநாயக விரதகாலங்களிலும் திருவெம்பாவைக்காலங்களிலும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன. திருவெம்பாவைப் பூசைக் காலமே இவ்வாலயத்தின் விசேட உற்சவ காலமாகவுள்ளது.

**(வி. சி. க.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர் ஆலயம்

– திரு. இராசைா மகேஸ்வரன் –

இலங்கையின் மத்திய மாலைநாட்டில் மத்திய மாகாணத்தில், மரபுரிமை நகரமான கண்டி மாநகரில், கங்கவட்ட கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் அமைந்துள்ளது. இக் கோயில் தொடர்பாக காலத்திற்கு காலம் வரலாற்று ரீதியாக மிகவும் தொன்மையான பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. “கண்டி” என பெயர் வர சிவ வழிபாட்டு சான்றுகள் ஆரம்ப காலந்தொட்டே உள்ளன. செங்கந்தன் என்ற சிவ பக்த பிராமணர் உடவத்தகெலேயில் வாழ்ந்ததாகவும், அவர் வாழ்ந்த இடம் செங்கந்தகாடு மக்களால் செங்கந்தகெலே எனவும், பின்னர் “செங்கந்தபுரம்” என்றும், இது மருவி, கெலே – காடு செங்கடகெலே என்றும், இது பிற்காலத்தில் மருவி “செங்கடகல” எனவும் வழங்கப்பட்டது. கந்த – மலை (“Kanda”) என்பது பிற்காலத்தில் ஆங்கிலேயர்களால் கண்டி “Kandy” என உச்சரிக்கப்பட்டு இப்பெயர் வரக்காரணமாயிற்று.

உலகத்தின் முதலாவது தேசப்படமான டொலமியின் தேசப்படத்தில் இலங்கையும், மத்திய மலைநாடும் குறிக்கப்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் சிவனொளிபாதமலையும், கண்டி அருள்மிகு மீனாட்சிஅம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயிலும் முக்கிய சிவத்திருத்தலங்களாகும். இதில் கண்டிக்கோயில் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் பல உள்ளன.

18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட “அஸ்கிரிய தல்பொத்த” என்ற ஓலைச்சுவடியில் கண்டி பைரவகந்த பற்றிக் கூறப்பட்டுள்ளது. இது பற்றி பல்வேறு ஆய்வு நூல்களிலும், கண்டி மரபுரிமை பற்றிய நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. அது போல “லோறி கெசட்டியரில்” பைரவகந்த பெயர் வரக்காரணம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன்படி முதலாவது மகா பராக்கிரமபாகு (1164 – 1197) ஆட்சிக் காலத்தில் பௌத்த பிக்குக்கு கண்டி அஸ்கிரிய பகுதியில் ஒரு ஆஸ்ரமம் (பிற்காலத்தில் அஸ்கிரிய பௌத்த பீடம்) அமைத்தார். அந்த ஆஸ்ரமத்திற்குத் தெற்குப்பகுதி ‘பைரவகந்த’ ஆகும். எனவே, 12ஆம் நூற்றாண்டிலிருந்தே வரலாற்று நூல்களில் பைரவகந்த பற்றிக் கூறப்பட்டுள்ளது. வைரவர்மலை என்பதே “பைரவர் - வைரவர்” “கந்த - மலை” என அழைக்கப்பட்டது.

அக்காலந்தொட்டு பைரவருக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் பற்றி மேற்கூறப்பட்ட வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு பைரவரை சந்தோசப்படுத்த நரபலியிடும் இடமாகவும் இருந்துள்ளது. பிள்ளைகள் இல்லாத ஒர் அரசிக்குப் பிள்ளைவரம் வேண்டியே முதலாவது நரபலி கொடுத்ததாக அஸ்கிரிய தல்பொத்தவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ராணிக்கு பேய் கனவில் வந்து இதனைக் கேட்டதாகவும், இதற்காக மன்னர் குழந்தை வேண்டி உயர்குலப் பெண்ணைப் பலிக் கொடுக்கத் தீர்மானித்ததாகவும், இதன் பின் நீண்ட காலமாக நரப்பலிச்சடங்கு இல்லாமல் இருந்ததாகவும், இராஜசிங்கனின் ஆட்சிக் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் முரண்பாடுகளினாலும், சாஸ்திரக் காரர்களது வேண்டுகோளுக்கிணங்கவும் உயர்குலப் பெண்ணைக் கொண்டு சென்று இரவில் பைரவரிடம் விட்டு விட்டு வந்ததாகவும், அவளது காதலன் அவளைக் காப்பாற்றியதாகவும் புராணக்கதைகளில் கூறப்பட்டுள்ளன.

இராமாயணத்தில் இராவணனை வதை செய்த இராமன் பாபவிமோசணம் வேண்டிப் பாபநாசத்தில் குளித்துச் சிவனை வழிபட்டதாகவும், இராமேஸ்வரதீர்த்தத்தில் நீராடிப் பாவத்தினைப் போக்க ஈஸ்வரனை வழிபட்டதாலேயே, இராமர் ஈஸ்வரனை வழிபட்ட இடம் இராமேஸ்வரம் என்ற பெயர் பெற்றதாகவும் கூறப்படுவது போல, நரபலி கொடுத்த பின், வைரவர் மலையில் நீர் சேரும் போகம்பரை குளத்தில் நீராடிச் சிவனை வழிபட்டுப் பாவ விமோசனம் வேண்டியதாகப் புராணவியல் கதைகளில் கூறப்படுகிறது. அக்காலத்தில் இக்கோயில் சிவன்கோயிலாகவே, காணப்பட்டுள்ளது. இன்று வரை கட்டுக்கலைக் கோயிலில் மூலஸ்தானத்தில் மூலவராகச் சிவனும், மூலவருக்கு நேராக நந்தி வாகனமும், கொடிக்கம்பமும் காணப்படுகிறது. இக்கோயிலில் இராஜகோபுரங்கள் சிவனுக்கும் அம்பாளுக்குமே அமைக்கப்பட்டுள்ளன.

கண்ணகி அம்மன் குழந்தையாகப் பேழையில் மிதந்து வந்த போது, மாநாயக்கன் எடுத்து கண்ணகி என்ற பெயரிட்டு வளர்த்துக் கோவலனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாகவும், கோவலனுக்கு மாதவி என்ற கணிகையுடன் தொடர்பு ஏற்பட்டதால், தனது செல்வங்களை எல்லாம் இழந்து, பின்னர் கண்ணகியிடம் தஞ்சமடைந்து, வாணிக நோக்கமுடன் மதுரை சென்றதாகவும், காற் சிலம்பை விற்கச் சென்ற போது, பாண்டிய மன்னனால் கள்வனெனக் கருதப்பட்டுக் கோவலன் கொல்லப்பட்டதாகவும், நீதி கேட்டுக் கண்ணகி விரித்த கூந்தலுடன் மன்னனைச் சந்தித்து, மற்றைய காற்சிலம்பைத் திருகி எறிந்து, அது தனது காற்சிலம்பு என நிரூபித்ததாகவும் கோபத்தில் மதுரையை எரித்தபின் மலையேறி மறைந்ததாகவும், அதனைச் செங்குன்றக்குரவர்கள் கண்டதாகவும் சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகிறது. கண்ணகியின் பெருமையை உணர்ந்து, சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை செய்தான் எனவும், சிலை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தபோது இலங்கை மன்னன் கஜபாகு (கி.மு.113-135) விழாவில் கலந்து கொண்டதாகவும் அறியப்படுகிறது.

கஜபாகு மன்னன் தென்னிந்தியாவில் இருந்து திரும்பியபோது, சந்தன மரத்திலான கண்ணகி சிலையையும் காற்சிலம்பையும் இலங்கைக்குக் கொண்டு வந்தான் எனவும், வடபுலக கடற்கரையில் இறங்கிய மன்னன், யானை மீது ஊர்வலமாக கண்டிவரை சிலையைக் கொண்டு சென்று கண்டி ஆலயத்தில் வைத்து வழிபட்டான் எனவும் கூறப்படுகிறது. இதனைக் 'கடல்சூழ இலங்கை கயபாகு வேந்தனும்' என இளங்கோவடிகளின் (வரந்தரு காதை (160 -164) எனும் பாடல் மூலம் அறியலாம்.

"அது கேட்டுக் கடல் சூழ் இலங்கை கயபாகு என்பான்
நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டம் முந்தறுத்து
ஆங்கு அறத்தை கெடுத்த வரந்தரு இவளென
ஆடித்திங்க ளவையின் ஆங்கோர்
பாடி விழாக்கோள் பன்முறை எடுப்ப
மலைவீற் றிருந்த வளம்பல பெருகி
பிழையா வியையுள நாடாயிற்று."
எனக் கூறியுள்ளார்.

சிலப்பதிகாரத்தின் புகார்க்காண்டத்தில் மங்கள வாழ்த்துப் பாடலில் "இந்திர" விழாவெடுத்த காதை" என்பதும் ஒன்றாகும். சிலப்பதிகாரத்தில் சொல்லப்படுகின்ற இத்திருவிழா □ம்புகாரில் கொண்டாடப்பட்ட விழா.

இந்திரன் கோயிலான வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசை வெள்ளானைக் கோட்டத்திற்கு எடுத்துச் சென்று, அதனை யானை மேலே ஏற்றி வீதி வலம் செல்வதன் மூலம் இந்திரவிழா உத்தியோகப் பூர்வமாக நகர மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த இந்திரவிழாவில் சிவன் கோயில், குமரக்கோட்டம், திருமால்கோட்டம், பலராமன்கோட்டம் ஆகிய எல்லாக் கோயில்களிலும் விழா நடைபெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிவலம் வந்தன. இதனைக் கண்ணுற்ற கஜபாகு இலங்கையிலும் இதைப்போலவே நடைபெற வேண்டும் என விரும்பி கண்டி பெரஹராவுடன் நாத, விஷ்ணு, கதிரேசன், பத்தினி தேவாலயங்களில் இருந்தும் ஊர்வலங்கள் புறப்பட்டு எசலபெரஹராவுடன் இணையும்படி செய்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

எனவே, தமிழில் காணப்படும் பெருங் காப்பியங்களுடன் கண்டிப் பெரகராவுக்கு தொடர்பு காணப்படுகின்றது. இந்த கண்ணகிசிலை பிற்காலத்தில் ஏற்பட்ட யுத்தங்களினால் புதையுற்று, பின்னர் போகம்பரை வாவியிலிருந்து கண்டெடுக்கப்பட்டு, கண்டி கட்டுக்கலை மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகப் புராணவியல் கதைக;டாக அறியப்படுகிறது.

மாயாதுன்னையின் மகன் யஸ்மின் பண்டார மற்றும் பேராதனை வீரசுந்தர முதலியின் மகன் கொணப்பு பண்டார "தொன் பிலிபு" என்ற பெயர் மாற்றத்துடன் கிறிஸ்துவத்தைத் தழுவிப் போர்த்துக்கேயர் உதவியுடன் 'செங்கடகல' ஆட்சியைக் கைப்பற்ற முயற்சித்தனர். இக்காலத்தில் பலர் கிறிஸ்தவ மதமாற்றம் பெற்றனர். மக்களின் எதிர்ப்பு காரணமாக தொன்ஜீவான் கிறிஸ்தவமதத்தைத் துறந்து பௌத்தனாகி, முதலாவது விமலதர்மசூரிய என்ற பெயருடன் 'செங்கடகல'யை (1592) ஆட்சி செய்தான். இக்காலத்திலேயே தலதா மாளிகை கட்டப்பட்டுள்ளது. தெலுகமவில் இருந்து புத்தபெருமானின் புனிதப்பல் 'செங்கடகல'வுக்குக் கெண்டுவரப்பட்டது. இவன் சிதைவுற்ற இந்து, பௌத்த ஆலயங்களை கட்டிவித்தான். திருவிழாக்களையும், பூசைகளையும் நடாத்தினான். பெரகராவையும் மீள அறிமுகம் செய்தான். இக்காலத்திலேயே இந்துக் கோயில்களும் புனர்நிர்மாணம் செய்யப் பட்டுள்ளதாக வலராற்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. இக்காலத்திலேயே கட்டுக்கலை சிவன் கோயிலும் புனர்நிர்மானம் செய்யப்பட்டுள்ளது.

இவரது தம்பி செனரத் (1605 – 1635) ஆட்சிபுரிந்தார். செனரத்தின் இரண்டு புதல்வர்கள் தமிழ் பெண்களையே திருமணம் செய்துள்ளனர். மூன்றாவது மகன் இராஜசிங்கன் ஆட்சி பீட மேறியுள்ளார். இந்த இரண்டு மருமகள்மார்களும் இந்துவாகவே இருந்துள்ளனர். இராஜசிங்கள் (1635 – 1687) பின்னர் இவனது மகன் இரண்டாம் விமலதர்மசூரியன் (1687-1706) தஞ்சாூரில் திருமணம் செய்தான். இக்காலத்தில் இந்தியத் தமிழர்கள் பலர் இவனது படையில் போராளிகளாக இருந்தனர். இவர்கள் "வடக்கத்தையான்", "வடுகர்கள்" என அழைக்கப்பட்டனர். இக்காலத்திலேயே இந்திய விஜயநகர் ஆட்சியுடன் தொடர்புகள் பலப்படுத்தப்பட்டன. இவனது தஞ்சாூர் அரசியின் மகன் ஸ்ரீ நரேந்திரசிங்கன் (1706 – 1739) ஆட்சியுரிமை பெற்றான்.

இதன் பின், விஜயராஜசிங்கன் (1739-1747) கோயில்களையும், விகாரைகளையும் கட்டினான். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747-1782) காலத்திலேயே திருவிழாக்கள், □சைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. சித்திரை விழா, ஆடித்திருவிழா சிறப்பாக நடைபெற்றுள்ளன. எல்லாத் தேவாலயங்களும் இணைந்து பெரகரா நடத்தப்பட்டுள்ளது. இவரே 'பெரகரா'வில் கண்டிக் கோயிலையும் சம்பந்தப்படுத்தியுள்ளார். இக்காலத்தில் அரசமாளிகையைச் சுற்றியுள்ள தேவாலயங்களிலும், அரசநிர்வாகத்திலும் தமிழர்கள் இருந்துள்ளனர். கோயில் அமைந்துள்ள பிரதேசத்தையும் சுற்றி தமிழர்கள் வாழ்ந்தார்கள். தமிழ்மக்கள் இக் கோயிலை நாளாந்த சமயக்கடமைகளுக்கு பயன்படுத்தியுள்ளனர். இக்காலத்தில் இந்து பிராமணர்களின் செல்வாக்குக் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், வெளிநாடுகளிலிருந்து பௌத்த பிக்குகளை வரவழைத்துள்ளனர்.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 -1782) காலத்திலேயே சிவனொளிபாதமலை பௌத்தர்களின் புனித யாத்திரைத் தலமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன் சிவனொளிபாத மலைக்குத் தரிசிக்க சென்றவர்கள் கண்டி, கம்பளை ஊடாகவே சென்றுள்ளனர். இப்னுபதூதா (1304 - 1377) சீலத் என்ற அரபு நூலில் அவரது விஜயம் பற்றியும், மலை நாட்டு வருகை பற்றியும் சிவனொளி பாதமலை தரிசனம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவரை, வடபகுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்ட ஆரியச்சக்ரவர்த்தி நான்கு யோகிகள் பதினைந்து பிராமணர்களுடன் இம்மலைநாட்டு பயணத்திற்கு அனுப்பி உதவியுள்ளார். இவர்கள் கண்டி கங்கசிறிபுர ஊடாக சென்றுள்ளனர். கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் காலத்தில் 1765இல் கண்டி கட்டுக்கலை கோயில் திருப்பணிகள் ஆரம்பமாகின எனவும், ராஜசிங்கனே கண்டிப் பெரகராவில் நான்கு தேவாலயத்திற்கான பெரகராவைச் சிறப்பாக நடத்தினான் என்றும் கூறப்படுகிறது. இக்காலத்தில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இந்திய நடனக்கோஷ்டிகள் வரவழைக்கப்பட்டுள்ளன. அரிச்சந்திரன், சத்தியவான் சாவித்திரி, ராமாயண, மகாபாரதக் காட்சிகள், இந்திய வாத்திய மேளங்கள், நாதஸ்வரம், பஜனைகள் இடம்பெற்றுள்ளன. இந்த பஜனையே பின்னர், "பஜாவு" எனச் சிங்கள வார்த்தையாக மாறியுள்ளது. இந்திரவிழா நாட்டிய நடனங்கள் பற்றிக் கலாநிதி சரத்சந்திர 'நாட்டியம்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இக்கலைஞர்கள் வாழ்ந்த வீதி, கவிகாரவீதி (தற்போது கொடுகொடுல்ல வீதி) என அழைக்கப்பட்டுள்ளது.

கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (1747 – 1782) காலந்தொட்டு கண்டி எசல பெரகராவில் தலதா பெரகராவிற்கு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆசியை வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகியுள்ளது. அத்தோடு கண்டி வாழ் இந்து மக்கள் பிரமுகர்கள் ஒன்றுகூடி கண்டி கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலின் சிவாசாரியார்களுடன் புனித தேவ வஸ்திராபரணம் ஒன்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று, தலதா மாளிகை 'தியவதன நிலமே' ஆசிர்வதித்து புனித பேழைக்கு பூசை செய்து வருவது வழக்கம். இதனைத் தொடர்ந்து பத்து நாள் பெரகரா முடிந்த பின் கெட்டம்ப மகாவலி நதிக்கரையில் நீர் வெட்டு தீர்த்தோற்சவம் முடிந்த பின் நான்கு தேவாலயங்களாக நாத்த, விஷ்ணு, கதிரேசன் மற்றும் பத்தினி தேவாலயங்களின் தீர்த்தத்துடன் பஸ்நாயக்க நிலமேக்கள் யானைகளில் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயிலுக்கு வந்து தமது தேவ வஸ்திராபரணங்களை இறக்கி வைத்து யானைகளை இளைப்பாறவிட்டு, பகல் தேவ வஸ்திராபரணங்களை மீள அணிந்து பகல் பெரகரா இக் கோயிலிலிருந்தே தீர்த்தக் கலசங்களுக்கு □சைகள் நடத்தி ஆரம்பிக்கப்படுகிறது.

கண்டியில் அக்காலத்தில் மூன்று குளங்கள் இருந்துள்ளன. கிரிமுகுத (பாற்கடல்), போகம்பர குளம், பொறலேவர் குளம். பைரவகந்த மலையின் நீர் அருகில் அடிவாரத்திலுள்ள போகம்பரை குளத்திலேயே சேர்ந்துள்ளது. போகம்பரைக் குளத்திற்கு அருகிலேயே கட்டுக்கலை அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் அமைந்திருந்தது. போகம்பரைக் குளத்தின் அருகிலிருந்து பைரவகந்தைக்கு செல்லும் வீதி 'லேக் ரோட்' என அழைக்கப்பட்டுள்ளது. இவ்வீதி இன்றும் கட்டுக்கலை சினிமா தியேட்டருக்கு மேற்குபுறமாக உள்ளது. இதனை 1600களிலும் 1700களிலும் உள்ள கண்டி வரைப்படங்களில் காணமுடிகிறது. இக்குளத்தில் தெய்யன்னவெல பகுதியில் அரச குடும்பங்களின் ஆடைகளைச் சலவை செய்வோர் குடியிருந்தனர்.

இக்காலத்தில் இலங்கையின் புண்ணிய ஸ்தலங்களைத் தரிசிக்க இந்தியாவிலிருந்து குருசாமி என்பவர் கண்டிக்கு வந்துள்ளார். இவர் கண்டி கட்டுக்கலையில் சிவ வழிபாடு செய்து, இப்பிரதேசத்திலேயே குடியேறியுள்ளார். ஒரு நாள் குருசாமியின் கனவில் விநாயகர் தோன்றி "நான் குளக்கரையில் துணிகள் துவைப்பதற்காக பயன்படுத்தப்படுகிறேன். என்னை கொண்டு வந்து கோயிலில் பிரதிஷ்டை செய்வாய்" எனக் கூறியுள்ளார். குருசாமி பக்தி □ர்வமாக குளத்தருகில் சென்று பார்த்தபோது, துணிகள் துவைப்பதற்கு பயன்படுத்திய கற்களில் ஒன்றின் மறுபக்கம் விநாயகப்பெருமானின் திருவுருவ வடிவமாக இருந்தது. குருசாமியும் கூடி நின்றவர்களும் அதனைக் கொண்டுவந்து கட்டுக்கலை ஸ்ரீ சோமசுந்தரேசுவரர் ஆலயத்தில் சோமசுந்தரேசுவரருக்கு வலப்பக்கமாக பிரதிஷ்டை செய்தனர். இதனாலேயே இக்கோயில் விநாயகர் கோயில் என்றும், பிள்ளையார் கோயில் என்றும் அழைக்கப்படுகிறது. சமகாலத்தில், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் கோயில் கட்டிடப்பணிகள் ஆரம்பமாகியிருந்தன. இப்பணிகளுக்காக வந்த ஸ்தபதி மகிழவண்ணனின் மூத்தபுதல்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லக்கண்ணு மகிழவண்ணன் ஸ்தபதியாரே இக்கோயிலையும் வடிவமைத்துள்ளார்.

1815இல் கண்டி இராச்சியத்தின் மன்னராகக் கண்ணுசாமி என்ற ஸ்ரீ விக்ரமராஜசிங்கன், அவனது மனைவி ரங்கம்மாள் இக்கோயிலை வழிபட்டதாக வரலாற்று நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலத்தில் கண்டி இராச்சியத்தில் அடிக்கடி போர் ஏற்பட்டு, கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சியோடு கோயிலை நிர்வகிக்கும் பொறுப்பு பொதுமக்களான கண்டி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பின் 1982 ஆம் ஆண்டிலிருந்து அறங்காவலராகக் கோவிந்தசாமி கிருஷ்ணமூர்த்தி இக்கோயிலை பொறுப்பேற்று சிறப்பாக நிர்வகிப்பதோடு மூன்று கும்பாபிஷேகங்களை சிறப்பாக மேற்கொண்டுள்ளார். 1988, 2000, 2019 ஆகிய ஆண்டுகளில் இக்கும்பாபிஷே கங்கள் நடைபெற்றுள்ளன. கோயில் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக 2000 ஆம் ஆண்டிலேயே ஐந்து தள இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

கண்டி மாநகரில் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் ஓர் ஒற்றுமைச் சின்னமாகக் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோயில் விளங்குகிறது. நாத, விஷ்ணு, கதிரேசன், பத்தினி கோயில்கள் வரலாற்றில் இந்துக்கோயில்களாக இருந்து, பின்னர், சரணங்கர தேரோவின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீ கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 1752இல் தலதா மாளிகையை பெரகராவில் சேர்த்ததோடு தலதாமாளிகைப் பெரகராவை முதலில் செல்லவும் வழி வகுத்தார். இதன் பின் இத்தேவாலங்களின் நிர்வாகம், இந்துக்களை விட்டு பௌத்தர்களிடம் சென்றதால், இந்துக்கள் கட்டுக்கலையில் அருள்மிகு மீனாட்சி அம்பிகை உடனுறை சோமசுந்தரேஸ்வரர் ஸ்ரீ செல்வவிநாயகர் திருக்கோயிலை வழிபடத் தொடங்கினர். எனவே, இக்கோயில் நீண்ட வரலாற்றினைக் கொண்ட, புராணக் கதைகளை கொண்ட கோயிலாக இப்பொழுது விளங்குகின்றது. அத்துடன் சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் உறவுப்பாலமாக இத்திருக்கோயில் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில்
# ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்

## இணுவில்

சைவமும் செந்தமிழும் தழைத்தோங்கும் புராதன வரலாற்றுச் சிறப்புமிக்க கிராமமே இணுவையம்பதியாகும். ஈழத்திருநாட்டின் மணி மகுடமாம் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு இயற்கை எழில் கொஞ்சும் கிராமமாகும். இது யாழ்ப்பாண நகரத்தில் இருந்து சுமார் நான்கு மைல் தூரத்தில் இருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச்செல்லும் நெடுஞ்சாலையானது இணுவில் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது. சுமார் 650 ஏக்கர் நிலப்பரப்பளவை உடைய அழகிய சிறிய ஒரு கிராமமே இணுவில். இங்குள்ள பெருங்குடிமக்கள் சைவத்ததையும், தமிழையும், தமது இரு கண் களாக போற்றி வளர்த்து வருகின்றார்கள்.

இணுவில் கிராமமானது ஆதிகாலத்தில் குளத்தங்கரை நாகரீகத்திற்கு பெயர்போன குடியிருப்புக்களில் ஒன்றாகும். "இணையிலி" என்ற பெயரே இணுவில் ஆக மருவி வந்திருக்கின்றது. இணுவில், என்பது முங்கில் அடர்த்தியாக இருந்த படியாலும் இப்பெயர் ஏற்பட்டு இருக்கலாம். இக் கிராமமானது தற்போதும் பனை, தென்னை, வாழை, மா, பலா, போன்ற கனிமரங்களைக் கொண்டு பசுமையாகவே காட்சிதருகின்றது. இங்கு பயிர் செழித்து வளர்வதற்கு ஏற்ற செம்மண் உடைய விவசாய நிலங்களைக் கொண்ட பூமி இது.

தமிழரசர் காலத்தில் திருக்கோவலூரில் இருந்து வருவிக்கப்பட்ட, பேராயிரமுடையான் எனும் வேளாளனும், அவனது பரிவாரத்தினரும் இணுவிலில் குடி அமர்த்தப்பட்டார்கள் என்று "யாழ்ப்பாண வைபவமாலை" எனும் வரலாற்று நூல் கூறுகின்றது. அப்போது பேரூர்களாக விளங்கிய பன்னிரண்டு ஊர்களில் இணுவில் கிராமமும் ஒன்றாகும்.

தெற்கே பிள்ளையாரையும், மேற்கே கந்த சுவாமியாரையும், கிழக்கே சிவகாமி அம்மன், காரைக்கால் சிவன் கோயில்களையும் மேலும் பல தலங்களையும் கொண்ட, திருக்கோயில்களாலே சூழப்பட்ட தெய்வீக மணம்பரப்பும் கிராமம் இது. இங்கு வாழ்கின்ற மக்கள் சிறந்த கலைஞர்களாக வும், பக்தி மிகுந்தவர்களாகவும், தான,தர்ம காரியங்களில் ஈடுபடும் தர்மவான்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

## ஸ்ரீ பரராஜசேகர மன்னன்.

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில் வரலாறு என்பது நல்லூரை தலை நகராகக்கொண்டு யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் அரசாண்ட காலத்தில் இருந்து தொடங்குகின்றது. இவர்கள் பரராஜசேகரன், செகராஜசேகரன் என்ற சிம்மாசனப் பெயர்களைக் கொண்டும், சிங்கை நகரை, யாழ்பாண இராட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியத்தின் தலைநகராகக் கொண்டும் நல்லாட்சி புரிந்து வந்தனர். இவர்கள் "சிங்கை" என்ற ஆரியப்பட்டத்தை சுருக்கி தம்பெயர்கட்கு முன்னால் இட்டுக்கொண்டார்கள். "சிங்கைப்பரராஜசேகரன்." (இரண்டாம் தமிழ்ச்சங்கம் இவன்காலத்தில் நிறுவப்பட்டதெனவும், "இரகுவமிசம்" இக்காலத்தில் இயற்றப்பட்டதெனவும் இராசநாயகம் முதலியார் உடன்படுகின்றார். யா.ச.ப-77)

## ஆதிச்சிங்கை நகர்

தமழ் அரசர் ஆட்சிக்காலம். சிங்கை ஆரியன் (விஜயகூளங்கைச்சக்கரவர்த்தி) முதற்கொண்டு கி.பி 948ல் இருந்து பதினொராவது தலைமுறைச் சேர்ந்த கனகசூரிய சிங்கையாரியன் 1440-1450 வரை என அறியமுடிகிறது. (வைபவமாலை,ப 26) "சிங்கை" எனும் தலைநகர்ப்பேரும், சாதிக்காரன் எனும் பொருளில் வரும் "ஆரியன்", என்ற பெயரையும் சேர்த்து "சிங்கையாரியன்" என்ற பெயரை வைத்துக்கொண்ட இவர்களது குலம் ஆரியச்சக்கரவர்த்திகள் குலம் என அழைக்கப்பட்டது. இவர்கள் ஒருவர்பின் ஒருவராக தலைநகரை மாற்றாது இந்த நீண்ட காலத்திற்கு ஆட்சிபுரிந்து வந்தனர். 1450ல் கொழும்பு கோட்டையை ஆண்ட செண்பகப்பெருமான் எனும் அரசன் படையெடுப்பில் கனகசூரிய சிங்கையாரியன் தோற்று தமிழகம் சென்றான். செண்பகப்பெருமானால் நியமிக்கப்பட்ட விஜயபாகு என்ற சிங்களப் பிரதிநிதி (மன்னன்) பதினேழு ஆண்டுகள் வரை தமிழர்களை அடக்கி,யொடுக்கி அரசாண்டான். (யா.வை.மா.-45) போரில் தோற்று காசி யாத்திரை செய்த கனகசூரிய சிங்கையாரியன் திருக்கோவலூர் சென்று அங்கு கல்வி பயின்று கொண்டிருந்த தம் பிள்ளைகளான பரராஜசேகரன், செகராஜசேகரன் உடன் சேர்ந்து மீண்டும் படையெடுத்தான்.

கனகசூரிய சிங்கையாரியன் பாண்டிய சிற்றரசர்களின் உதவியுடன் விஜயபாகு மீது மீண்டும் படையெடுத்து பெருஞ்சமர் பண்ணினான். செகராஜசேகரன் ஒரு அணியாக சண்டைசெய்ய, பரராஜசேகரன் அஞ்சாநெஞ்சனாக தனது வாள்ப்படையுடன் விஜயபாகுடன் பெரும் யுத்தம் செய்து அவனை தன் வாளுக்கு இரையாக்கினான். மீண்டும் சிங்கைநகர், சிங்கையாரியர் வசமாகியது.

பரராஜசேகரன் தனது தந்தை கனகசூரிய ஆரியனை ஆட்சியில் வைத்து தான் தேசவிசாரணை செய்ய முயன்றான். அனால், பிதாவாகிய கனகசூரியன் பரராஜசேகரனை அரியணை ஏற்றி தான் இளைப்பாறினான். இது தமிழ் அரசர்களின் இரண்டாவது ஆட்சிக்காலம் என்று கூறலாம்.

**கனகசூரியன் - கி.பி - 1467.**
**பரராஜசேகரன்- கி.பி- 1478.**
**சங்கிலி - கி.பி- 1519.**

இவர்கள் 1620 வரை சுதந்திரமாக ஆட்சி புரிந்தார்கள். அதன்பின் போத்துக்கேயர் வருகை ஆரம்பமாகியது.

இந்த ஆரியச்சக்கரவர்த்திகள் வரிசையில் பரராஜசேகரமன்னன். இவன் நல்லூரை தலைநகராகக் கொண்டு நீதிநெறி தவறாது நல்லாட்சி புரிந்து வந்தான். சிங்கைப் பரராஜசேகரன் என்று அழைக்கப்பட்ட இவன் மக்களிடையே அன்பும் கருணையும் கொண்டவனாகவும், இறைபக்தி மிகுந்தவனாகவும், சிறந்த நிர்வாகத்திறன் உடையவனாகவும், திகழ்ந்தான் என்பது வரலாறு. யாழ்ப்பாண இராட்சியத்தில் ஆரியச்சக்கரவர்த்திகள் மரபில் 1478ம் ஆண்டு இவன் அரியணை ஏறினான். பதினொராவது தலைமுறையைச்சேர்ந்த இவனது ஆட்சிக்காலம் பொற்காலம் என்று அழைக்கப்படுகின்றது. இக்காலத்திலோ, அல்லது இதற்கு முன்னைய காலங்களிலோ இக்கோயில் அமைக்கப்பட்டிருக்கலாம். தமிழ்ச்சங்கம் நிறுவி சமயம் வளர்த்தது அல்லாமல் "பரராஜசேகரன் உலாவும்", "இரகுவமிசம்" போன்ற நூல்கள் இவனது ஆட்சிக்காலத்திலே அரங்கேற்றப்பட்டன. தமிழகத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வைத்தியர்களைக்கொண்டு "பரராஜசேகரம்" என்ற வைத்திய நூல் ஒன்றும் இவனது ஆட்சிக்காலத்திலே உருவாக்கப்பட்டது. ("செகராசசேகர மாலை," "தட்சிண கைலாய புராணம்" என்பன சிங்கை நகர் இராட்சியம் பற்றிக்கூறுகின்றன.)

நல்லூரிலே சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த ஆரியச்சக்கரவர்த்திகள் சிறந்த நூலாசிரியர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். நாயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கட்டு, நல்லூர், இணுவில் போன்ற பன்னிரண்டு ஊர்களும் அறிஞர்கள், கலைஞர்கள், புலவர்கள் நிறைந்த பேரூர்களாக திகழ்ந்திருக்கின்றன. இந்த ஆரியசச்சக்கரவர்த்திகளுள் சிறந்து விளங்கிய "செகராஜசேகரன்" என்ற மன்னன் தமிழகத்தில் இருந்து அரியநூல்கள், ஏட்டுச்சுவடிகள், ஆவணங்களையெல்லாம் சேகரித்துக் கொண்டுவந்து "சரஸ்வதிமகால்" என்ற நூலகத்தை அமைத்தான் என்றும், அறியமுடிகின்றது.

பரராஜசேகரமன்னன் ஆட்சிக்காலத்தில் சமயவழிபாடு, ஆலயம் அமைத்தல் பரிபாலனம் செய்தல் என்பன அக்காலத்தில் அமயப்பெற்றதாக கருதப்படும் கோயில்கள் பற்றின கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாக அறிய முடிகிறது. மேலும் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் தமது "யாழ்ப்பாண இராட்சியம்" (ப-218) எனும் நூலில் "விநாயகர் வழிபாடு இக்காலத்தில் மேன்மை பெற்று இருந்ததை ஆரியச்சக்கரவர்த்திகள் அமைத்த காவல் தெய்வங்களில் விநாயகர் ஆலயம் முக்கியம் பெறுவது எடுத்துக்காட்டுகின்றது. இதுமட்டுமின்றி இவர்கள் காலத்துக்குரிய உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில், அரசகேசரி பிள்ளையார்கோயில், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் ஆகியனவும் இக்காலத்துக்குரிய சிறப்புப்பெற்ற விநாயகர் வழிபாட்டிடங்கள் ஆகும்" என்று குறிப்பிடுகின்றார்.

## அந்நியர் ஆட்சி

யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் கோயில்கள் அமைத்தது பற்றிய செய்திகளை யாழ்ப்பாண வைபவமாலை என்ற வரலாற்று நூலில் இருந்து தெளிவாக அறிய முடிகின்றது. (வைபவமாலை ப26) "ஆதிச்சிங்கையாரிய மன்னன் கீழ்த்திசைக்கு காப்பாக வெயில் உவந்த பிள்ளையார் கோயிலையும், மேற்றிசைக்கு வீரமகாளியம்மன் கோயிலையும், வடதிசைக்கு சட்டநாதர் கோயிலையும், தையல் நாயகியம்மன், சாலைவிநாயகர் கோயிலையும் நாற்றிசையும் கட்டினான், உட்பக்கம் அரண்மனை இருந்தகளம் ஆகும். இதற்குள்ளேதான் சங்கிலியன்தோப்பு, யமுனா ஏரி இருக்கின்றன. அக்கோயில்களில் இருந்த விக்கிரகங்கள் இப்போதில்லை. பின்வாழ்ந்த மக்கள் பறங்கியரால் இடிக்கப்பட்ட இக்கோயில்களை மீளக்கட்டி விக்கிரகங்களை வைத்து வழிபட்டு வந்துள்ளார்கள்."

பரராஜசேகரப்பிள்ளையார் என்னும் ஆரியச் சக்கரவர்த்திகள் வழிவந்த தமிழ் அரசனின் பெயரை தாங்கி நிற்கும் இவ்வாலயம் ஆனது சுமார் 600 ஆண்டுகள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்பை பெறுகின்றது. பரராஜசேகர மன்னனால் இவ்வாலயம் கட்டப்பட்டதாகவோ, பரராஜசேகர மன்னனின் மந்திரி பிரதானிகளால் அல்லது பேரூரின் ஆட்சித் தலைவர்களினால் கட்டப்பட்டதாகவோ அன்றியும் பரராஜசேகர மன்னனால் வழிபடப்பெற்று வந்தமையினால் பரராஜசேகரப் பிள்ளையார் என்ற பெயரை பெற்றிருக்கலாம். "அக்காலத்தில் இருந்து நீடித்து நிலைத்திருந்த இக்கோயில் பரராஜசேகரன் சகாப்தத்தில் அரசனது செல்வாக்கையும் ஆதரவையும் பெற்று, அரசனது நாமம் சூட்டப்பட்டிருக்கலாம்" என்று கூறுகின்றார் தொல்பொருள் ஆய்வாளர் திரு ம. பொ. செல்வரத்தினம். அவர்கள். இணுவில் எனும் பேரூரானது சான்றோர் புகழும் ஆன்றோர்க்கு உறைவிடமாய் சைவவேளாண் மக்கள் வசிக்கப்பெற்றதுமாய, கொன்றையும், கூவிளையும், மருதும், அரசும், தேமாவும், தீம்பலாவும், புட்பங்களுமான வசீகரமிகு நந்தவன பூமியான இணுவையம்பதியை விநாயகப்பெருமானுக்கு கோயில் எழுப்பும் புண்ணியபூமியாக பரராஜசேகரன் கருதினான் போலும் அதனாலேயே இங்கு ஆலயம் எழுப்பதுணிந்தனன் என மகாவித்துவான் வைகதிர்காமநாதன் ஆசிரியர் அவர்கள் கும்பாபிசேக மலர்-1972ல் குறிப்பிடுகின்றார்.

பரராஜசேகர மன்னன் ஆட்சிக்குட்பட்ட இணுவில் என்னும் பேரூரானது கரும்பும் பருத்தியும் நெல்வயல்களும், குளங்களுடன் கூடிய கமுகு தென்னை பனை போன்ற வானுயர்ந்த மரங்களுடன் ஒரு பூஞ்சோலைக் கிராமமாக செழிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்து காட்சியளித்தது. பரராஜசேகர மன்னன் தனது மந்திரிப் பிரதானிகளுடன் இணுவையம் பதியினிலே எழுந்தருளி அருள்பாலிக்கின்ற பிள்ளையாரை வணங்கி வந்தான் என்று கர்ண பரம்பரைக் கதைகள் மூலமாக அறியமுடிகின்றது.

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள் **"இணுவிலும் ஆரியசக்கரவர்த்தி காலத்தில் ஏற்பட்ட வேளாளர் குடியேற்றத்துடன் தொடர்பு டையதாக காணப்படுவதால் இவ்வாலயம் இவர்கள் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கலாம்"** என்று தமது யாழ்ப்பாண இராச்சியம் என்ற நூலிலே குறிப்பிடுகின்றார். (ப-220)

முதல்முதலாய் பறங்கியர்கள் 1428ம் ஆண்டு வியாபாரிகளாக பராக்கிரமபாகு மகா ராஜாவிடம் உத்தரவு பெற்று இலங்கைக்குள் புகுந்துகொண்டார்கள். நல்லூரிலே கி.பி 1560ம் ஆண்டு போத்துக்கேயருக்கும் சங்கிலி மன்னன னுக்குமிடையே முதலாவது யுத்தம் நடைபெற்றது. சுமார் பதினாறாயிரம் பறங்கியர்களை கொன்று இந்த யுத்தத்தில் சங்கிலி வெற்றியடைந்தான். ஆயினும் காக்கை வன்னியனின் துரோகத்தி னால் சங்கில் போர்த்துக்கேயரால் சிறைபிடிக் கப்பட்டான். அவர்கள் காளிகோயில் முன்றலில் அவனை சிரச்சேதம் செய்து கொன்றார்கள். (யா.ச.ப.70). சங்கிலி குமாரனே (ஆட்சி 1616 - 1620) யாழ்ப்பாணத்தை பல நூற்றாண்டாக ஆட்சி செய்த சந்ததியாரின் இறுதி அரசன். போர்த்துக் கேயரிடம் போர்க்கைதியானான். இத்துடன் தமிழர் ஆட்சி முடிவுக்கு வந்தது. அதன்பின் பறங்கியர் கள் சிவாலயங்களையெல்லாம் இடித்தழித்த துடன், தமது சமயத்தையும் பரப்பத்தொடங்கி னார்கள்.

மன்னாரும், யாழ்ப்பாணமும் ஒரேஆண்டில் ஒல்லாந்தரால் கைப்பற்றப்பட்டன. பறங்கியர்கள் அதிகமாய் தாங்கள் இடித்தழித்த இந்துக் கோயில்கள் இருந்த இடங்களிலே தங்கள் கோயில்களைக் கட்டினார்கள். ஒல்லாந்தரும் அப்படியே அந்த கோயில்களை உபயோகித்தார் கள். பாதிரிமார்கள் கல்வியறிவில்லாத பாமர மக்களிடையே வீடுவீடாக சென்று விவிலிய நூலை முற்றங்களிலே உரல்மீது அமர்ந்து போதித்தார் கள். (யாழ்ப்பாண வைபவமாலை குல சபாநாதன்.) ஆனாலும் அவர்கள் இருந்த உரலை சாணத்தால் சுத்தம்செய்தது கண்டு, தங்கள் நோக்கம் ஈடேறவில்லை என போதகர்கள் மனம் வெதும்பி னார்கள்.

இக்காலத்திலே பல கோயில்கள் பறங்கிய ரால் இடிக்கப்பட்டன. உடுவில் கோவில்பற்றை முற்றுகையிட்ட போர்ததுக்கேயர், இணுவில் என்னும் பேரூர் பரராஜசேகரப்பிள்ளையார் கோவி லையும் இடிக்கத்தலைப்பட்டார்கள். மன்னனால் வணங்கப்பெற்ற இக்கோயிலை பாதுகாக்க எண்ணிய மக்கள் இங்குள்ள பிள்ளையாரை மறைத்து வைத்து, இத்தலத்தை "மடம்" என்று கூறினார்கள். கோயிலின் முன் மண்டபம் மடம் போன்று காணப்பட்டது. இப்படியாக பாதுகாத் தனர் என்று கர்ணபரம்பரை ஒன்று கூறுகிறது. "மடம்" என்று சொல்லி வணங்கியமையால் இக்கோயிலை "மடத்துவாசல் பிள்ளையார் கோயில்" என்றும் வழங்கலாயினர். இந்த மடத்து வாசல் பிள்ளையார் கோயில் பற்றிய வரலாறு என்பது இந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் இப்படியாகத்தான் இருந்திருக்க வேண்டும். இருந்திருக்கின்றது. பூசைகளோ, திருவிழாக்களோ நடைபெறமுடியாமைக்குரிய காலச்சூழலில் இவ்வாலயமானது பாதுகாக்கப் பட்டது. ஆனாலும் போதியபராமரிப்பின்றி ஆலயம் கிலமுற்றுக் கிடந்தது. இக்காலப்பகுதியில் இப்படியாக மட்டும்தான் கொள்ளமுடிகின்றது. சமயஆச்சாரங்களில் மிகவும் ஊறிப்போன ஆச்சார சீலர்களைக் கொண்ட ஊர் இணுவில் ஆகையால் மதமாற்றம் என்பது இங்கு எள்ளள வும் நடந்ததாக தோன்றவில்லை. ஆனால் இக் காலச்சூழலானது ஆங்கிலேயரது ஆட்சிக்கா லத்திலே ஓரளவிற்கேனும் மாற்றங்காணத் தொடங்கியது, எனலாம்.

## மடத்துவாசல் பிள்ளையார் கோயில்

ஆங்கிலேயர் தங்கள் பலத்தினாலும் நுண் ணறிவினாலும் 1718ம் வருடத்தில் ஒல்லாந்தரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து யாழ்ப்பாணத்தை கைப்பற்றிக் கொண் டர்கள். இவர்கள் முன்னிருந்த அரசுகளைப்போல குடிகளை வருத்தாது சமயசுதந்திரம் பேணினார் கள். சமயம் பரப்பும் விடயத்தில் இவர்கள் மூர்க்க மல்லாது சாதுரியமான வழிகளை கையாண்டார் கள். வித்தியாசாலைகள் இவர்கள் அனுமதியுடன் எழுந்தன. கல்வியறிவும் விருத்தியடையத் தொடங்கியது. சமய அறிவு, பற்று, திருப்பணி வேலைகள் மெல்ல மெல்ல தொடங்கியது. சைவசமயம் பல பெரியார்கள் மூலம் மறுமலர்ச்சி பெறத்தொடங்கியது. இக்காலப்பகுதியில் மடத்து வாசல் பிள்ளையார் கோயில் மீண்டும் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயிலாக மாற்றங்காணத் தலைப்பட்டது. இம்மாற்றமானது. சமய மறு மலர்ச்சியல்லாமல் சுதந்திர மத வழிபாடுகளாக பரிணமித்தது. 1800 களில் மடாலயமாக இருந்த கோயில் திருத்தி அமைக்கப்பட்டு சுண்ணாம்புக் கற்களால் முறைப்படி கட்டப்பட்டு கும்பாபிசேக மும் நடைபெற்றிருக்கின்றது என்பதை அறிய முடிந்தாலும் சரியான ஆண்டு விபரங்களை பெறமுடியவில்லை.

1800களில் சுண்ணாம்புக் கற்களாலான விமானம், கர்ப்பக்கிரகம் உடன் அர்த்தமண்டபம் மகாமண்டபமும் ஆனால் சற்று கிழக்கே சிறிதாக இருந்தன. மூலமூர்த்தியைத் தவிர இங்கு எழுந் தருளிப் பிள்ளையாரும், சண்டேசுவர மூர்த்தியும், வைரவரும் அக்காலப்பகுதியில் அடியார்களால் வழிபடப்பெற்றிருக்கின்றது. சுப்பிரமணியரோ வேறுஎந்த தெய்வங்களோ அக்காலப்பகுதியில் இருக்கவில்லை. சதய நட்சத்திரத்தில் கொடியேறி திருவாதிரையில் தேர் இழுத்திருக்கின்றார்கள். புனர்பூஷ நட்சத்திரத்தில் தீர்த்தமும் நடைபெற்று அன்றே கொடிஇறக்கல் திருவிழாவும் நடைபெற் றுள்ளது. திருக்கல்யாணம் இல்லை. ஆனால் தேரடி வைரவர் பொங்கல் நடைபெற்று இருந்தது. அந்தந்த காலச்சூழலுக்கு ஏற்றாற்போல் திரு விழாக்கள் சிறிதாகவோ, பெரிதாகவோ அன்றியும் சிறப்பாகவோ, ஆனால் ஆகமவிதிப்படி நடை பெற்றிருக்கின்றன.

இந்தக்காலப்பகுதியில் வருடாந்த உற்சவங் களைத் தவிர, பல திருவிழாக்கள், உற்சவங்கள், அபிஷேகங்கள் என்பன நடைபெற்றுள்ளன. குறிப்பாக விநாயகர் பெருங்கதை 21 நாட்களும் அபிஷேக ஆராதனைகளுடன் படிப்பும் நடந்துள் ளது. 21ம் நாள் சூரன்போர் நடந்தது. தற்போதைய சூரன் அல்ல, இது பழையசூரன் 1928ம் ஆண் டிற்கு முன்னரே பழுதடைந்து விட்டது. மற்றும் திரு வெம்பாவை, ஐப்பசிவெள்ளி, தைப்பொங்கல், வருடப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி மானம்பூ போன்றன விசேடதினங்களாக அக்காலத்தில் கோயிலில் இடம்பெற்றுள்ளது. இவைதவிர்ந்த தினங்கள் பிற்காலத்திலே தொடக்கம்பெற்றவை ஆகும்.

கோயில் அமைந்துள்ள இடம் தம்பிளாவத்தை என்ற குறிச்சிப்பெயரால் அழைக்கப்பட்டது. (இப்பெயர் தற்பொழுதும் அரச கோவையில் இடம்பெற்று இருக்கின்றது.) கோயிலுக்கு வடக்கே சிறிதாக ஒரு வசந்தமண்டபமும் இருந்தது. தென் கிழக்கு மூலையிலே தலவிருட்சமான நெல்லி மரமும். தெற்கே தீர்த்தக்கேணியும், அதற்கு சற்று மேற்குத்திசையாக ஓலையால் மேயப்பட்ட பள்ளிக்கூடமும் இருந்தது.(1864) கோயிலின் முன்பக்கம் தற்போதைய பாலமுருகன் கோயி லுக்கு அருகாமையில் இருந்தது கிணறு. திரு மஞ்சனக்கிணறு வசந்த மண்டபத்திற்கு மேற்காக இருந்தது. தேர்க்கொட்டகை இல்லாத காரணத் தால் கட்டுத்தேர் ஒன்று கோயிலின் தெற்கு வீதி யின் வேலிக்கருகே ஓலையால் மூடப்பட்டநிலை யில் இருந்தது. தம்பமண்டபம் கல்த்தூணினால் நிறுவப்பட்டு வேயப்பட்டிருந்தது. கோயிலில் மணியும் இருந்தது. அது தற்போதைய மணி அல்ல. தற்போதைய வைரவர் கோயிலுக்கு அருகே சற்று உயரத்தில் இருந்தது. கோயிலின் உட்பிரகாரத்தை அதிகாலையில் சாணியால் கூட்டி மெழுகி விடுவார்கள்.

பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலின் ஆரம்பம் முதலே இங்கு அந்தணர் குலத்தைச் சேர்ந்த பிராமணர்கள் பூசைகளை நடாத்தி வந்துள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது. தமது வாழ்வை இத்தலத்திற்கே அர்ப்பணித்த அந்தணர் பரம்பரையொன்று தொடர்ச்சியாக இக்கோயில் கிரியைகளை முறைப்படி செய்து வந்துள்ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். 1800 களில் திருவிழாக்கள் இங்கு சிறப்பாக நடைபெற்றுள்ளமைக்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. மூலமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவன் விநாயகப்பெருமானது திரு உருவம் தமிழகத்து சிற்பவிற்பன்னர்களால் அமைக்கப்பட்டு இங்கு கொண்டுவரப்பட்டது என்று அறியமுடிகிறது. மேலும் அக்காலத்திலேயே மகோற்சவம் நடந்துள்ளது. இங்குள்ள எம்பெருமான் வீதியுலாவரும் மூர்ஷிகம் (எலி வாகனம்) மிகவும் பழமைவாய்ந்த வாகனமாகும் இதுவும் 1867ம் ஆண்டைச்சேர்ந்ததாகும். இங்குள்ள கொடித்தம்ப கவசம் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துருக்கள் அது 1867ம் ஆண்டைச்சேர்ந்தது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

**வாசகம்**

**"இது இணுவில் தம்பிளாவத்தை எனுங் காணியில் எழுந்தருளியிருக்கும் பரராஜசேகரப் பிள்ளையார் என்னுங் குருநாமத்திற்கு மெஷகுடிகாலிங்கர் இராமநாதராஜரால் கொடுக்கப்பட்டது. பராமரிப்பு மயிலர் ஆறுமுகம். 1867"**

1928ம் ஆண்டிற்கு முன்னைய பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயம் எப்படி இருந்திருக்கும் என்பதை இலகுவாக கற்பனை செய்து பார்ப்பதை விட அக்காலப்பகுதியில் வாழ்ந்த, இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்மூர் பெரியவர்களிடம் இருந்து அத்தகவல்களை இன்னமும் பெறக்கூடியதாக இருப்பது பலமே!

(நன்றி: ஆலய சிறப்பு மலர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

– திரு. நா. வாமன் –

கிழக்கிலங்கையில் வரலாற்றுப்புகழ் பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குவது மாமாங்கப் பிள்ளையார் ஆலயமாகும். மட்டக்களப்பு நகரின் மத்தியிலிருந்து வடக்கே சுமார் 5 கிலோமீற்றர் தூரமளவில் உள்ள அமிர்தகழி என்னும் கிராமத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

*பட்டினப்பாங்கர்ப் பரந்த தோணாமுகமாய்*
*ஐங்கரன் கோயில் அமிர்தகழிக்கணித்தாய்*

என சுவாமி விபுலானந்தர் தனது யாழ்நூலில் இத்தலத்தினைக் குறிப்பிட்டுள்ளார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றுள்ள சிறப்பு இவ்வாலயத்திற்கு உண்டு. இவ்வாலயம் ஆரம்பத்தில் சிவ வழிபாட்டுத் தலமாகவே இருந்துள்ளது. இதனால்தான் மாமாங்கேஸ்வரர் ஆலயம் என மக்கள் அழைத்தனர். கருவறையில் இலிங்கம் அமைந்துள்ளமை இதனை உறுதிப்படுத்துகின்றது. எனினும் இன்று பிள்ளையார் ஆலயமாக இது மாற்றமடைந்துள்ளது. பூசை வழிபாடுகளும் பிள்ளையாருக்குரியனவாகவே நடைபெறுகின்றன. சிவ வழிபாட்டுத் தலம் எவ்வாறு பிள்ளையார் வழிபாட்டுத் தலமாக மாறியது என்பதற்கான திட்டவட்டமான காரணங்களைக் கண்டறிய முடியாதுள்ளது.

**தல வரலாறு**

இவ்வாலயம் எப்பொழுது, யாரால், உருவாக்கப்பட்டது என்பதனைத் திட்டவட்டமாகக் குறிப்பிடமுடியாது. இவ்வாலயத்தின் தோற்றத்தினைப் பற்றி அறிந்து கொள்வதற்கான வரலாற்றுக் குறிப்புகளோ பட்டயங்களோ கல்வெட்டுக்களோ கிடைக்கவில்லை. எனினும் பழங்காலத்தி லிருந்தே இவ்வாலயம் இருந்து வந்துள்ளது என்பதற்கான கர்ண பரம்பரைக் கதைகள் நிலவி வந்துள்ளன.

இராமபிரான் அசோக வனத்திலிருந்து சீதையைச் சிறைமீட்டுச் செல்லும்போது இவ்வழியே வந்தாரென்றும் கடல்முகம் சார்ந்த தூய தனியிடமாய் ஆல், அரசு, திருவாத்தி, நெல்லி, கொக்கட்டி முதலிய மரங்களை ஓரிடத்திற் கொண்டு பஞ்சவடி போன்றமைந்து விளங்கிய இவ்விடத்தில் தங்கினார் என்றும், சிவபூசைக்கு விந்திய மலையிலிருந்து இலிங்கம் எடுத்து வருமாறு அனுமானை அனுப்பினாரென்றும் இலிங்கம் வந்து சேரக் காலம் தாழ்த்தியமையால் தானே மண்ணைப் பிசைந்து இலிங்கம் ஆக்கினாரென்றும், அதற்கு அபிஷேகம் செய்வதற்காக தனது கோதண்டத்தை நிலத்தில் பதித்துண்டாக்கிய பள்ளத்திலிருந்து பெருகிய அமிர்த வெள்ளத்திலிருந்து தீர்த்தத்தினைப் பெற்றுச் சிவபூசையை முறைப்படி நிறைவேற்றினார் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு இராமபிரானால் வழிபடப்பட்ட இலிங்கமே தற்பொழுது இத்தலத்தில் உள்ளது என்பது ஐதீகம். இக்கதை இராவணனைக் கொன்று மீண்டும் அயோத்தி திரும்பிய இராமர் தம்மைப் பீடித்த பிரம்மகத்தி தோஷத்தை நீக்கும் பொருட்டு இராமேஸ்வரத்தில் ஒரு சிவலிங்கத்தை அமைத்து, அருகில் உள்ள தனுஷ்கோடியில் தனது தனுவை ஊன்றி நீரைப் பெற்று அபிஷேகித்துத் தோஷம் நீக்கப் பெற்றார் என்ற கதையுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதனை அடுத்து நீண்டகால இடைவெளிக்குள் அந்த இலிங்கம் மரவேர்களாலும் பற்றைகளாலும் மறைக்கப்பட்டு இருந்தது. ஒருமுறை காடுகள் நிறைந்த அப்பகுதியினுள் வேடன் ஒருவன் வேட்டையாடிக் களைப்படைந்து, தனது வில், அம்பு என்பனவற்றை ஒரு ஆலமரத்தடியில் வைத்துவிட்டுத் தடாகத்தில் நீரருந்திய பின் சிறிது துயின்றானென்றும், அப்பொழுது கனவில் இலிங்கோற்பவ தரிசனம் கிடைக்கப் பெற்று எழுந்து தான் அம்பு, வில் என்பவற்றை வைத்திருந்த முள்ளால்மரத்தடியில் கிளறிப் பார்த்தபொழுது கனவிலே தோன்றிய இலிங்கத்தை கண்டானென்றும் உடனே தனது இனத்தவர்களைக் கூட்டிவந்து காட்டி சிறு கோயிலமைத்து முள்ளாலிங்கப் பெருமானுக்குப் பூசை செய்து வந்தானென்பதும் கர்ணபரம்பரைக் கதையாகும்.

தற்பொழுது கிடைக்கின்ற ஆதாரங்களின் படி 1837 ஆம் ஆண்டு மட்டக்களப்பு நிலவரைபடத்தில் மாமாங்கேஸ்வரர் ஆலயம் பதியப்பட்டுள்ளது. அது களிமண்ணால் கட்டப்பட்டிருந்தது. 1880 ஆம் ஆண்டில்தான் தற்பொழுதுள்ள அமைப்பினை மாமாங்கக் கோயில் பெற்று, முதலாவது கும்பாபிஷேகமும் இடம்பெற்றுள்ளது. அக்காலமுதல் கொடியேற்றத்துடன் ஐந்து நாள் திருவிழாக்களே இடம் பெற்றுள்ளன. தற்பொழுது ஆடி அமாவாசையை தீர்த்தமாகக் கொண்டு கொடியேற்றத்துடன் பத்து நாள் மகோற்சவம் இடம்பெற்று வருகிறது.

1963 ஆம் ஆண்டு ஆலயத்தில் சில புனருத்தாரண வேலைகள் இடம்பெற்று மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது. அதிக காலமாக உள்வீதியில் கட்டப்படாமலிருந்த முருகன் கோயிலும் அதனைச் சார்ந்த மண்டபமும் 1993 இல் கட்டிமுடிக்கப்பட்டது. தற்பொழுது பிரமாண்டமான அமைப்புடைய இராஜகோபுரம் 7 தளங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

**மூலவர் படிமம்**

சிவலிங்க மூர்த்தியே இவ்வாலயத்தின் மூலவராக அமைக்கப்பட்டுள்ளார். மூலஸ்தானம் கட்டும்போது இச்சிவலிங்க மூர்த்தியை நீர் மட்டத்தின் கீழும் தோண்டிப்பார்த்து அடியைக் கண்டுபிடிக்க முடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனதாக இவ்வூர்ப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ஆரம்ப காலத்திற் சிவலிங்க மூர்த்தியாகவே வழிபாடுகள் நடைபெற்றன. எனினும் நாளடைவில் பிள்ளையார் வழிபாடாக மாற்றப்பட்டது. சிவலிங்கத்திற்கு விநாயகர் அங்கி அணிவித்து வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் மாமாங்கேஸ்வரராகவும், மாமாங்கப் பிள்ளையாராகவும் வழிபடுகின்றனர்.

### ஆலய அமைப்பு முறை

இக்கோயிலின் அமைப்பை எடுத்து நோக்கும் போது இவ்வாலயத்தில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம் ஆகிய மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் யாகசாலை, வாகன சாலை ஆகியவற்றுக்கும் தனி மண்டபங்கள் உள.

கருவறைக்கு மேல் இரண்டு அடுக்கினாலான விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மேல் வரிசையில் விநாயகரது நான்கு திருவுருவங்கள் நான்கு பக்கமும் அமைக்கப் பட்டுள்ளன. அத்துடன் நான்கு மூலைகளிலும் பூதகணங்களின் உருவங்களைக் காண முடிகின்றது. கீழ் அடுக்கில், வடக்குப் பக்கம் பிரம்மாவும் பிரம்மசக்தியர் இருவரும் காட்சி தருகின்றனர். கிழக்கில் சிவலிங்கத்தின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கில் தேவியர் சமேதராக விஷ்ணு காட்சி தருகின்றார். தெற்குப் பக்கம் குருந்த கல்லால மரத்தின் கீழ் யோக நிலையில் அமர்ந்திருக்கும் தட்சணாமூர்த்தியின் உருவமும் அவருக்கருகில் சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களின் உருவங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபத்தினுள் உள்ள சாலையில் எழுந்தருளி விக்கிரகங்கள் வைக்கப்பட்டுள்ளன. சந்திரசேகரர், நடராஜர், வள்ளி தெய்வயானை சமேத முருகன், விநாயகர் ஆகிய தெய்வங்களுக்கான விக்கிரகங்களே இதில் வைக்கப்பட்டுள்ளன. ஸ்தம்ப மண்டபத்தில் உயரமான கொடிமரம் அமைந்துள்ளது. இது நாக மரத்தினால் அமைக்கப்பட்டு வெளியில் பித்தளைத் தகட்டினால் மூடப்பட்டுள்ளது.

ஏழு தளங்களைக் கொண்டதாக இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 750 வரையிலான சிறியனவும் பெரியனவுமான சிற்பங்கள் கோபுரத்தின் அழகை மிகைப்படுத்தி நிற்கின்றன. கோபுரத்தின் இரு மருங்கிலும் மணிக் கோபுரங்கள் உள்ளன. இவற்றிலும் சிற்ப வேலைப்பாடுகளைக் காண முடிகின்றது. தெற்கு வாசலிலும் தற்பொழுது இரண்டு தளங்களைக் கொண்ட கோபுரம் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது.

சிவன், பார்வதி, சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், சண்டேஸ்வரர், வைரவர் ஆகிய மூர்த்திகளுக்குத் தனித்தனிக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. மகா விஷ்ணுவிற்கான ஆலயம் தற்பொழுது அமைக்கப்பட்டு வருகின்றது. வெளி வீதியில் நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது.

### திருக்குளச் சிறப்பு

மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தின் சிறப்பிற்கு ஒரு காரணமாயிருப்பது அங்கு அமைந்துள்ள திருக்குளமாகும். இராமர் தம் கோதண்டம் ஊன்றியதால் இத்திருக்குளம் தோன்றியது என்பது ஐதீகம். இராமருடைய பூசைக்காக காலம் தாழ்த்தி அனுமானால் கொண்டு வரப்பட்ட லிங்கமும் பூசை செய்யப் பெற்று இத்திருக்குளத்தில் புதைத்து விடப்பட்டது எனவும் கூறப்படுகிறது. அந்தப் புனித லிங்கத்தின் மகத்துவத்தினால், தன்னுட்படிவோர்மீது படிந்துள்ள பாவமனைத்தையும் போக்க வல்ல திருவருட் சக்தி இக்குளத்திற்கு கிடைக்கலாயிற்று என்றும் இத்தீர்த்தத்தின் மகிமை பேசப்படுகின்றது.

அன்றியும் ஈழநாட்டிலிருந்து தலயாத்திரை சென்ற முனிவர் ஒருவர் காசியிலிருந்து தமது கமண்டலத்திற் கொண்டு வந்த கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, துங்கபத்திரை, பவானி, காவேரி, தாமிரபரணி, சேது முதலான ஒன்பது மங்கை (பெண்களின் பெயராலமைந்த) தீர்த்தங்களையும் இத் திருக்குளத்தில் கலந்து நீராடி இராமலிங்கத்தை வழிபட்டு பெரும் பயன் பெற்றார் என்றும், எல்லா மங்கை நதிகளினதும் தீர்த்தம் கலக்கப் பெற்ற திருக்குளமாதலால் 'மாமங்கைத் தீர்த்தம்' எனப் பெயர் பெற்றுக் காலப்போக்கில் 'மாமாங்கத் தீர்த்தம்' என மாறிற்றெனவும் பேசப்படுகின்றது. மாமாங்கத்தீர்த்தக் குளம், ஆதியில் அதனை அடுத்திருந்த சிறுதோணாக்களுடன் தொடர்பு கொண்டு மாரி காலத்தில் நதி போன்று கடலுடன் சங்கமிக்கும் வண்ணம் இருந்ததாகப் பொதுமக்கள் குறிப்பிடுகின்றனர்.

இத் தீர்த்தக் குளத்தின் சிறப்பு ஆடக சவுந்தரி என்ற இளவரசியின் வரலாற்றோடும் தொடர்புபட்டதாகத் தெரிகின்றது. மட்டக்களப்பின் தென்கோடியிலிருந்த உன்னரசுகிரியிலிருந்து இப்பகுதியை ஆட்சி செய்த இளவரசி மூன்று முலை உடையவளாகவும், நூற்றுப்பதினேழு ஆண்டுகள் கன்னிப்பருவம் அடையாதவளாகவும் இருந்தாள். இக்குளத்தின் மகிமையை அறிந்து வந்து நீராடி மூன்றாவது முலைத்தடம் நீங்கப்பெற்று கன்னிமையும் பேரழகும் உடையவளாகி குளக்கோட்ட மகாராசா என்ற மன்னனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணந்து கொண்டாள் என மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகின்றது.

மாமாங்கத் திருக்குளம் நிறைந்த சந்தனச்சேறு கொண்டது. மெல்லிய பசுமை நிறமான இச்சேறு, உடம்பின் வெளிப்புற நோய்களனைத்தையும் மாற்றிவிடும் சிறப்புடையதாதலால் இதனை அமிர்தச்சேறு என்றும், பசும் சந்தனம் போற் குளிர்மையாயிருத்தலால் சந்தனச்சேறு என்றும் மக்கள் அழைக்கின்றனர். குளத்தின் அண்மித்த பகுதிக் கிணறுகளும் இச்சந்தனச்சேற்றை கொண்டுள்ள தனால் இப்பகுதி அமிர்தகழி எனும் பெயரைப் பெற்றது.

### தலவிருட்சம்

இவ்வாலயத்தின் நேர் வாசலில் மூலலிங்கத்திற்கு நேராக வளர்ந்து நீண்ட காலமாக நிழல் பரப்பிக்கொண்டு நிற்கும் குருந்த மரமே தலவிருட்சமாக அமைந்துள்ளது. இம்மரமானது திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகரை சிவபெருமான் குருவடிவாகி ஆட்கொண்ட வரலாற்றைப் பக்தர்களுக்கு நினைவூட்டுவதாக உள்ளது. கடந்த 1978 ஆம் ஆண்டு இடம்பெற்ற புயல்காற்றில் இவ்வாலய வளாகத்தில் இருந்த பெருமளவிலான மரங்கள் அழிவடைந்தன. ஆயினும் இக்குருந்த மரம் எந்தவிதமான சேதமும் அடையவில்லை.

### வருடாந்த மகோற்சவம்

ஆண்டுதோறும் வருகின்ற ஆடி அமாவாசையினை இறுதிநாளாகக் கொண்டு 10 நாட்கள் வருடாந்த மகோற்சவம் நடைபெறுகின்றது. தீர்த்தோற்சவத்துடன் மகோற்சவம் நிறைவேறும். பூசை முறைகள் யாவும் பிராமணக் குருக்கள் மாராலேயே செய்யப்பட்டு வருகின்றன. ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்புக்குப் பேர்போன தலமாக இப்பகுதியில் விளங்கும் பெருமை இதற்குண்டு. உற்சவகாலங்களில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கே வந்து கூடுவர். உற்சவ காலம் முழுவதும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக இரண்டு அன்னதான மடங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. தாய் தந்தையரை இழந்தோர் பிதிர்க்கடன் நிறைவேற்றும் நாளாக இறுதிநாள் தீர்த்தோற்சவம் விளங்குகின்றது. மகோற்சவத்தில் கொடியேற்றும் வைபவம், கொடியிறக்கும் வைபவம், தேரோட்டம் என்பன மிக விசேடமாகக் குறிப்பிடத்தக்கவை.

### ஆலய நிருவாகம்

1880 ஆம் ஆண்டிற்குப் பின்னரே இவ் ஆலயத்தைப் பரிபாலித்து வந்த ஆலய நிருவாகம் பற்றி அறிய முடிகின்றது. அமிர்தகழி, புன்னைச்சோலை, கருவேப்பங்கேணி, நாவலடி, பாலமீன்மடு, மட்டிக்களி, ஊறணி என்னும் ஏழூர்க் குருகுல வம்சத்தவர்களும், கோட்டமுனைப் பகுதி வேளாளர் பரம்பரையினரும் சேர்ந்தே ஆலயத்தை நிருவகித்து வந்துள்ளனர். மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இரு பகுதியாரிலிருந்தும் பிரதம வண்ணக்கர் ஒருவரும் உதவி வண்ணக்கர் ஒருவருமாக நால்வர் தெரிவுசெய்யப்படுவர். கணக்காய்வாளர்கள் இருபகுதியாரிலிருந்தும் வருடத்துக் கொருமுறை இருவர் தெரிவுசெய்யப்படுவர். இவர்கள் அனைவரும் சேர்ந்து பொதுமக்களின் ஆதரவோடு ஆலய நிருவாகத்தினை நடாத்தி வருகின்றனர்.

### திருத்தலம் பற்றிய நூல்கள்

மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்தின் மீது முன்பிருந்தே புலவர்கள் பலர் பாடல்களை அருளியுள்ளனர். வித்துவான் சரவணமுத்தன் அவர்களால் *மாமாங்கேச்சுரர் கீர்த்தனை* என்ற நூலும் *மாமாங்கர் பதிகம்* என்ற நூலும் பாடப்பெற்றுள்ளன. மாமாங்கேஸ்வர ஆலயத்தின் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தவரான பண்டிதர் செ. பூபாலப்பிள்ளை *மாமாங்கேஸ்வரர் பதிகம்* என்னும் விருத்தப்பாக்களாயமைந்த ஒரு நூலைப் பாடியுள்ளார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அளித்துள்ள *மாமாங்கேச்சுரர் பதிகம்,* மண்டூர் பூ. சின்னையா ஆசிரியர் யாத்துள்ள *மாமாங்கப்பிள்ளையார் விருத்தம்* என்பனவும் மாமாங்கப்பிள்ளையாரது திருவருட் பெருக்கினை நன்கு விளக்குவன. இந்நூல் எதுவும் அச்சில் வெளிவந்ததாகத் தெரியவில்லை. சமீபகாலத்தில் வாழ்ந்தவரான த. நாகையா ஆசிரியர் 1996 இல் *மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலய வரலாறு* என்ற நூலினை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். அதேபோன்று நாவற்குடாவைச் சேர்ந்த இ. தங்கராசா என்பவரால் *மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரப் பிள்ளையார் மான்மியம்* என்ற நூலும் (2008) வெளியிடப்பட்டுள்ளது. இவ்விரு நூல்களுமே இன்று பொதுமக்கள் கைகளில் கிடைப்பனவாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாறுமூலை
# மகா விஷ்ணு கோவில்

**– வித்துவான் வி. சி. கந்தையா –**

மட்டக்களப்பிலிருந்து வடக்குத் திசையாக சுமார் பத்துமைல் தொலைவிலுள்ளது, வந்தாறுமூலை என்னும் கிராமம். இக்கிராமத்தின் மத்தியில் கோயில் கொண்டிருப்பது மகாவிஷ்ணு ஆலயமாகும். ஏறக்குறைய ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு இவ்வாலயம் சிறிய ஓலைக்குடில் வடிவில் அமைக்கப்பட்டு மக்கள் வழிபாட்டு இடமாக விளங்கியது. இக்கோவிலுக்கு அவ்வூர்ப் போடிமாரே பராமரிப்பாளராக இருந்திருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது. இவ்வூர் முதியவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி இக்கோவிலின் நிர்வாகம் கைலாயப்போடி என்பவரிடமிருந்து தம்பிப்போடி, கந்தப்போடி என்னும் இருவருக்கும் கைமாறிக் கொடுக்கப்பட்டதென தெரியவருகிறது. இவர்களிருவரும் வயது முதிர்ச்சியுற்றனர். இதனால் சர்வாதிகாரத்துடன் கோவில் நிர்வாகம் முழுவதையும் பார்ப்பதற்கு கயிலாயப்போடி என்பவருக்கு சகல உரிமைகளையும் இவர்கள் வழங்கியிருந்தனர். இவ்வாறு தனிப்பட்ட ஒருவருடைய கோவிலாக நிர்வகிக்கப்படுவதை அக்கிராமத்து மக்கள் ஏற்றுக் கொள்ளாதிருந்தனர். இதனால் கோவில் நிர்வாகம் ஊரிலுள்ள எல்லோருக்கும் பொதுவான உரிமையைக் கொண்டு இருத்தல் வேண்டுமென்று கிராமத்து மக்கள் கோட்டில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தனர். இதன் பயனாகத் தேசத்து வன்னிமை முன்னிலையில் குறிப்பிட்ட கைலாயப்போடியார் பரம்பரைக்குக் கோவிலுரிமை தொடர்ந்திருக்குமாயினும், இவர்கள் தனித்து இயங்காமல் ஊரின் குடியுரிமைப்படி மற்றுமுள்ளோரும் சேர்ந்தே நிர்வாகத்தை நடத்தவேண்டும் என்ற தீர்ப்புக் கிடைத்தது. இத்தீர்ப்புக்கமைய குடியுரிமைக் கணக்கின்படி மயிலிப் போடியார் பராமரிப்பின் கீழ் தோம்புதோர் க. கோணேசியார் ஆகியோர் கோயில் நிருவாகத்தை ஏற்று நடத்தி வந்தனர்.

அன்று தொடக்கம் இன்று வரை குடிக்கணக்குப்படி கிராமத்தில் உள்ளவர்கள் திருவிழாக்களைச் சிறப்பாகச் செய்து வருகின்றனர். பரமக்குட்டிக்குடியார், காவேரி கண்டம் குடியார், புதூரார், செட்டியாகத்தறையார், அத்தியா குடியார், கழகத் தம்பணிகுடியார், மஞ்சள் பரமக்குட்டிக் குடியார் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஆரம்பத்தில் வருடாந்த உற்சவம் புரட்டாதி மாதத்தில் நடைபெற்று வந்தது. பின்னர் சுமார் 15 வருடங்களுக்கு முன்பிருந்து ஆனி மாதத்தில் நிகழ்ந்து வருகிறது. இவ்வுற்சவம் ஆனிப்பூரணையன்று நிகழும் தீர்த்தோற்சவத்தோடு முடிவுறும். புரட்டாதி மாதத்தில் கஞ்சன் கதை படித்தலும் மார்கழி மாதத்தில் வைகுந்த ஏகாதசியும் சிறப்பான பூசனைகளுடன் நடைபெறும்.

இவ்வுற்சவ காலத்தில் காவேரி கண்டங்குடியாரால் சர்ப்ப சயனமும், கண்ணப்ப போடியார் கெருடன் கட்டும், திருவேட்டையும், பரமக்குட்டிக்குடியார் தீர்த்தோற்சவமும் ஏற்று நடத்துகின்றனர். கெருடன் கட்டு அன்று தயிர் முட்டியுடைத்தல், தீக்குளித்தல் என்பனவும் நிகழ்கின்றன. கருடன் திருவிழா சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் இவ்வூர்ப் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், சேர்ந்து நடாத்தி வந்ததாகவும். ஆசிரியர்களுடைய இடமாற்றங்கள் காரணமாக அவர்கள் கைவிடவேதான் மேற்குறித்தபடி கொடுக்கப்பட்டது எனவும் கூறுகின்றனர். தீர்த்தம் கழுவங்கேணிக் கடலில் நடைபெற்று வருகின்றது. இக் கடற்கரைப் பகுதி தென்னை, புன்னை மரச்சோலைகளால் குளிர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது.

நிறைமதி நாளான பூரணைதோறும் பழம், பாக்கு, வெற்றிலை, மலர், தீபம் ஆகியவற்றை கையிலேந்திக் கொண்டு அந்திப் பூசைநேரத்தில் பெண்கள் வந்தாறு மூலையிலுள்ள மகாவிஷ்ணு ஆலயத்திற்கு வரிசையாகச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகவிருக்கும். பூரணையன்று மூலமூர்த்தியான மகாவிஷ்ணுவுக்கு பூசனைகளாற்றியதும், உள்வீதியிலுள்ள இலக்குமி கோயிலின் முன் இப்பெண்கள் தீப வழிபாட்டின் மூலம் மகாலட்சுமியை வேண்டிக் கொள்வது பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தும்.

இம்மகா விஷ்ணு கோவிலின் வீதியில் நாம் குறிப்பிட்ட இலக்குமிதேவி கோவிலோடு ஆண்டாள், நாசிங்கர், அநுமார், நவக்கிரகக்கோயில்களுமுண்டு. புறவீதியில் முற்காலத்தில் சமாதியான பெரியவர்களின் பெயரால் ஒரு ஆலயமும் மடமும் உண்டு. கோயில் சொத்துக்களாகக் காணிகள் பள்ளவெளிக்குளம், 33 ஏக்கரும், பாலையடி 25 ஏக்கரும், குருக்கள் பட்டி 15 ஏக்கரும் மாவிலங்கையடி 12 ஏக்கரும், வேறு முன்மாரி 18 ஏக்கரும் நிரந்தர வருவாய் கொடுத்துக் கொண்டுள்ளன. **(வி. சி. க.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லிபுர ஆழ்வார் கோயில்

– திருமதி இந்திராதேவி சதானந்தன் –

சைவசித்தாந்த மரபினை முழுமையாகக் கொண்ட இலங்கைத் திருநாட்டின் யாழ்ப்பாணப் பகுதியில் வைணவ மரபும் இருந்து வந்துள்ளது. இதற்கு சான்றாக பொன்னாலை வரதராயப் பெருமாள் கோயில் வல்லிபுர ஆழ்வார் கோயில் என்பன காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் துன்னாலை புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்கட்கு மத்தியில் அமைந்துள்ளது இவ் வல்லிபுர ஆழ்வார் கோயில்.

பருத்தித்துறையில் இருந்து ஏறக்குறைய நான்கு மைல் தூரத்தில் வெண்மணற் பரப்பில் கடற்கரையையண்டியதாக உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்றது. இக்கோயிலின் தோற்றம் பற்றிப் பல புராணக் கதைகள் நிலவுகின்றன. இந்தியாவிலுள்ள தொண்டை நாட்டின் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியமர்த்தப்பட்டதாகவும் தாம் குடியேறிய இப்பிரதேசத்திற்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தமது Jaffna History என்ற நூலிலே குறிப்பிட்டுள்ளார் வல்லியத் தேவன் என்பவன் இவர்களின் தலைவனாக விளங்கியதாகவும் இவனது பெயரைக் குறிக்குமுகமாகவே இப்பகுதியில் குடியேறிய மக்கள் இக்கிராமத்தை வல்லிபுரம் என அழைத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மக்கள் தெலுங்கர்களாகவும் வைணவ மதத்தைப் பின்பற்றுவோராகவும் காணப் பட்டமையால் வல்லிபுரப் பகுதியில் வைணவ வழிபாடு காணப்பட்டது என்பர்.

2. வல்லிபுரம் எனப் பெயர் பெற்றமைக்கு வேறு காரணங்களும் கூறப்பட்டுள்ளன. வல்லியம் என்பதற்கு ஆயர்பாடியெனப் பிங்கலந்தை நிகண்டிலே கூறப் பட்டுள்ளது வல்லி என்ற சொல்லுக்கு ஆயர்பாடி (கோகுலம்) என்ற கருத்தை ஆனந்தவிகடன் அகராதியிலும் வல்லி என்பதற்கு இடைச்சேரி (Village of Shepherds) என எமர் வின்சுலோ அவர்களால் ஆக்கப்பட்ட தமிழ் ஆங்கில அகராதியிலும் குறிப்பிடப் பட்டுள்ளது. புரம் என்பதற்குப் பல பொருள்கள் காணப்படினும் அவற்றுள் ஒன்றாகக் காணப்படுவது கோயில் என்பதாகும். எனவே வல்லிபுரக் கோயில் என்பது ஆயர்பாடிக் கோயில் என்ற பொருளைத் தருவதால் காரணப் பெயராகவும் அமைந்திருக்கலாம்.

3. ஒரு நாள் வங்கக் கடலிலே இன்று தீர்த்தோற்சவம் நடைபெறும் பகுதியிலே அதிசயமான மச்சமொன்று தோன்றித் துள்ளிக் குதித்து ஆரவாரம் செய்து மக்களை அதிசயத்தில் ஆழ்த்தியது. மக்கள் திகைப்படைந்து கடலோடிகளின் உதவியை நாடினர். கற்கோவளப் பகுதியில் வாழ்ந்த கடலோடிகள் அந்த மச்சத்தைப் பிடிக்க எடுத்த முயற்சி எதுவும் பலிக்கவில்லை. வலைகளைக் கிழித்து கட்டுமரங்களைத் தள்ளி மிக உயரத்தில் பாய்ந்து குதித்து வேடிக்கை காட்டி விளையாடிக் கொண்டிருந்தது. இரண்டொரு தினங்களாக நடைபெறும் இச்செய்தியைக் கேட்ட மக்கள் அவ்விடத்தில் கூடினர். இவ்வேளையில் வராத்துப்பளையைச் சேர்ந்த நாகசாபம் பெற்ற வல்லி என அழைக்கப்படும் வல்லிநாச்சி நாகசாபம் தீரப் பயபக்தியுடன் தவமிருந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு பகவான் வல்லி நாச்சியாரின் கனவிலே தோன்றி சில சம்பவங்களைக் கூறி குறித்த இடத்திற்கு மறுநாள் வருமாறு பணிந்தார் அவ்வாறே மறுநாட்காலை வல்லி நாச்சியாரும் அவ்விடத்திற்கு வந்தார். கரையிலே உட்காந்தவாறு கைகளை நீட்டிய வண்ணம் பகவானின் திருநாமங்களைத் தியானித்தவாறு இருந்தார். அப்பொழுது கடலிலே துள்ளி விளையாடிய மச்சம் அம்மையாரின் மடியில் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. கண்ணன் உதித்தான் என்று அடியவர்கள் ஆரவாரம் செய்து மகிழ்ந்தனர். வல்லிநாச்சியாரின் ஆலோசனைப்படி அக் குழந்தையைப் பல்லக்கிலே வைத்து மண்மேடுகள் பற்றைகளைத் தாண்டி தூக்கிச் சென்றனர். நெடுந் தூரம் தூக்கி வந்தமையால் களைப்புற்ற மக்கள் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு இளைப்பாறினர். பின் பல்லக்கை தூக்க முயன்றபோது குழந்தையும் மாயமாக மறைந்து பல்லக்கும் அவ்விடத்தைவிட்டு அசைய மறுத்தது. அச்சமயம் அந்தணர் ஒருவர் தோன்றிச் சக்கரமொன்றைக் கொடுத்து அதனையே பூசிக்குமாறு கூறி மறைந்தார். அவ்வழக்கப்படியே அவ்விடத்தில் ஆலயம் அமைக்கப்பட்டு மூலஸ்தானத்தில் சக்கரம் வைத்துப் பூசிக்கப்பட்டு வருகின்றது. அன்று குழந்தையைத் தூக்கிச் சென்ற கற்கோவள மக்களின் பரம்பரையினர் இன்றும் திருவிழாக்காலங்களில் சுவாமி தூக்குதல், சமுத்திர தீர்த்தத்தில் பங்குபற்றி நடந்துதல் ஆகியவற்றோடு இவ்வூர்ப் பெண்கள் கோயிலின் விசேட தினங்களில் பக்தியுடன் கும்மியடித்தல் போன்றவை வழிவழியாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. அந்தணரால் வழங்கப்பட்ட சக்கரத்தைக் கையேற்ற பக்தர் அதைத் தாபித்து தொண்ணூறு நாட்கள் முழு மண்டல பூசை அபிஷேகங்கள் செய்துவந்தனர். இக்கதையின் மூலமும் வல்லிபுரம் என்ற பெயர் ஏற்பட்டதாக மக்களிடையே பொதுவான கருத்துண்டு.

சரித்திரசான்றுகளும் இக்கோயில் பற்றி உண்டு. யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கை நகர் வல்லிபுரப் பகுதியே என்ற கருத்தை அறிஞர் பலர் வெளியிட்டுள்ளனர். முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதலியோர் அவர்களுட் சிலர். வல்லிபுரப் பகுதியிற் பல இடங்களில் குவிந்து கிடக்கின்ற பூர்வகாலக் கல்லோடுகள் கீச்சுக்கிட்டம் ஆகியனவும் அங்கிருந்து கரை மார்க்கமாகப் போன பெருவீதியின் அடையாளங்களும் அவ்வூர் ஒரு காலத்திலே பெருநகராக விளங்கியிருக்க வேண்டுமென்பதைச் சுட்டிநிற்கின்றன. ஆரியச் சக்கரவர்த்திகள் பெருங்கடற்படை உடையோராய் பிரசித்தி பெற்றிருந்தமையினாலும் மரக்கலத்தினால் ஆழியிற் சுலபமாகச் சென்று திரும்பக்கூடிய துறைமுகம் இருந்திருக்க வேண்டும். வல்லிபுரத்துறை இப்பொழுதும் கப்பற்றுறையென்றே வழங்கப்படுகின்றது.

சுவாமி ஞானப்பிரகாசரின் கருத்துப்படி கி. பி. 8ஆம் நூற்றாண்டிலிருந்து கலிங்கநாட்டு உக்கிரசிங்கனும் அவன் பரம்பரையினரும் சிங்கை நகரை அரசதானியாகக் கொண்டு அரசியற்றி வந்தனர். இலங்கையிலே பல்லவர் காலத்திலே சிங்கை நகர் பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. இக்காலத்தில் வல்லிபுரப்பகுதியில் நரசிங்கமூர்த்தி தாபிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அம்மூர்த்தியின் பெயராலேயே ஊர்ப்பெயர் சிங்கைநகரென்று மாறிற்று என்றும் கொள்ளப்படுகின்றது.

நாகர்கள் சூரியனுக்கு அமைத்த கோயிலே காலம் செல்ல பௌத்த விகாரையாக மாறிப் பின் நரசிங்கபெருமாள் கோயிலாக மாறியிருக்க வேண்டும். கி. பி. 2ஆம் நூற்றாண்டளவில் பௌத்த விகாரை ஒன்று இவ்விடத்தில் இருந்ததென்பதை வல்லிபுர பொற்சாசனம் கூறியுள்ளது. நாகவழிபாடு பௌத்த சமயத்துடன் பெரிதும் தொடர்புடையது. திருமாலின் அவதாரத்தில் புத்தரது அவதாரமும் ஒன்றெனக் கூறப்படுகிறது. அத்துடன் சூரிய வழிபாட்டுச் சின்னமான சக்கரம் விஷ்ணுவின் ஆயுதமாக வைத்து வணங்கப்படுகிறது. சக்கரமே இக்கோயிலின் மூலஸ்தானத்திலுள்ளது. அதே சக்கரம் பௌத்த சமயத்திலே தர்மசக்கரமாக மாறியிருக்கலாம். எவ்வாறானும் இங்கு பௌத்தம் இருந்திருக்கின்றது என்பதையும் நம்பவேண்டியுள்ளது.

இலங்கையில் வடபகுதியிலும் இந்தியாவின் சில பகுதிகளிலும் வரலாற்றுக்கு முற்பட்டகாலத்தில் நாகர் என்ற இனத்தவர்களின் குடியிருப்புக்கள் காணப்பட்டுள்ளது. நாகர்கள் நாகவணக்கத்தோடு சூரிய வணக்கத்தையும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். ஆதிக் குடிகளாகிய நாகர் வாழ்ந்த பிரதேசங்களுள் வல்லிபுரப் பகுதியும் ஒன்றாகும். வல்லிபுர ஆழ்வாரின் ஆதித் தோற்றம் நாகர்களின் ஆதி வணக்கமான சூரியக்கடவுளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்க வேண்டும். ஆழ்வார் என்னும் பெயர் பொதுவாக திருமால் அடியாருக்கு வழக்கப்படுவது மரபு சோழப் பெருமன்னர் காலத்தில் தமிழ்ச்சாசனமொன்றில் 'ஆழ்வார் திருவரங்க தேவர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறே 'வல்லிபுர ஆழ்வார் கோயில்' என்ற பெயர் உருவாகியிருக்கலாம் என்பர்.

வைணவ ஆலயங்களிலும் பிள்ளையாருக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலில் ஆலும் குளமும் அதனருகே நெல்வயலும் சூழ எழுந்தருளியிருக்கும் குருக்கட்டுச் சித்தி விநாயகருக்குப் பூசையை முடித்தபின்பே வல்லிபுர சுவாமிக்கு பூசைசெய்வது வழக்கமாயுள்ளது. இவ்வாலயத்தில் முருகன், பிள்ளையார் ஆகிய தெய்வங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. ஆலயத்தின் உட்புறத்தில் கிழக்குப் புறமாக விஷ்ணுபெருமான் எழுந்தருளியுள்ள கருவறையை நோக்கிய வண்ணம் ஆஞ்சநேயர் அமைந்துள்ளார். நவக்கிரகம், ஆழ்வார்கள் சிலைகள் யாவும் இங்குள்ளன. குருக்கட்டு சித்தி விநாயகர் ஆலயத்தின் மேற்குத்திசையில் இரு திருக்குளங்கள் உண்டு. அவற்றில் ஒன்றிலிருந்துதான் திருநாமம் எடுக்கப்பட்டு வந்துள்ளது. சமுத்திர தீர்த்தத்திற்கு அடுத்த நாள் நடைபெறும் கேணித் தீர்த்தத்தை மற்றைய குளத்தில் நடத்துவர்.

ஆயர்பாடி என்ற பெயருக்கேற்ப வல்லிபுரக் கோயிலிலே கண்ணன் வளர்ந்த கோகுலத்தில் இருப்பது போல நவமோகன கிருஷ்ணன் ருக்மணிப் பிராட்டி சத்திய பாமாப் பிராட்டி ஆகியோரது உருவத்திருமேனிகளும் காணப்படுகின்றன. வைணவர் சிறப்பாக அனுட்டிக்கும் ஏகாதசி இங்கு சிறப்பாக நடைபெறும். இக்கோயிலின் உற்சவம் புராட்டாதி அமாவாசையில் தொடங்கி பூரணைத் திதியில் தீர்த்த உற்சவம் நிகழக் கூடியவகையில் பதினைந்து நாட்கள் திருவிழா நடைபெற்று பதினாறாம் நாள் கடலாடு தீர்த்த நிகழ்ச்சி நடைபெறும். அடுத்த நாள் பட்டுத்தீர்த்தம் நிகழும். இங்கு பதினேழு நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது. இவற்றுள் அனுமார் தீர்த்தம் என்னும் கடலாடுதிருவிழா, கொந்தளிக்கும் கடலில் தீர்த்தமாடும் திருவிழா ஆகியவைகள் சிறப்பானவை.

ஆவணிமாதம் கிருஷ்ண ஜெயந்தி கொண்டாடப்படும். உறியடி உற்சவத்திலே கண்ணனாக மாயவன் தோன்றுகின்றான். வல்லிபுரசுவாமியின் திருவிழாக் காலத்தில் கிருஷ்ணாவதாரத்தில் சிறப்பிடம் பெறும் வெண்ணெய் திருடல், மகாகம்சன் போர் என்பவை நடித்துக் காட்டப்படுகின்றன. நாராயணன் நடத்திய நரகாசுர சம்காரம் தீபாவளியின் போது இடம்பெறுகிறது. மார்கழி மாதம் முழுவதும் உதயத்தில் விசேஷபூசை நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை வல்லிபுர ஆழ்வாருக்கு சிறப்பான நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

இத்தலத்தை பற்றிய வரலாற்றை தட்சிண கைலாச புராணம், தட்சிண கைலாச மான்மியம் என்பனவற்றில் காணலாம். சிங்கள மொழியில் 14ஆம் நூற்றாண்டில் எழுந்த தூது இலக்கியங்களிலும் (சந்தேச காவியங்கள்) இத்தல மகிமை பேசப்படுகிறது. குறிப்பாக கோகில சந்தேசம் பொன்னாலையில் இருக்கின்ற வரதராஜ பெருமாளையும் வல்லிபுர ஆழ்வாரையும் பற்றிப் பாடியுள்ளது.

இக்கோயில்மேல் பண்டிதர் பொன் சின்னத்துரை அவர்கள் வல்லிபுர அந்தாதிப் பதிகம் பாடியுள்ளார். கவிஞர் திரு. சி. செல்லமுத்து அவர்கள் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சரணப் பதிகம் பாடியுள்ளார். கவிஞர் கற்கை சரவணனார் அவர்கள் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி நித்தியாஞ்சலிப் பதிகம் பாடியுள்ளார். ஸ்ரீஸ்காந்த புராணத்திலுள்ள தக்ஷிணகைலாச மான்மியத்தில் வல்லிபுர வைபவ அத்தியாயம் இவரது பெருமையை எடுத்துக் கூறுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை வரதராஜப்பெருமாள் கோயில்

– திரு. ந. சுபராஜ் –

இலங்கையில் பொன்னாலை எனும் திருத்தலத்தில் மகாவிஷ்ணு வரதராஜப்பெருமாள் எனும் திருநாமத்துடன் எழுந்தருளியுள்ளார். இலங்கையில் உள்ள புகழ் பெற்ற விஷ்ணு ஆலயங்களுள் இதுவும் ஒன்று. யாழ்ப்பாண நகரின் மேற்குத் திசையில் இது அமைந்துள்ளது. இவ்வாலயம் வரலாற்றுப் புகழ் மிக்கது. இத்தலத்தில் உள்ள இறைவனது சிறப்புக்கள், ஆலய வரலாறு என்பன தட்சிணகைலாய புராணத்தில் கூறப்பட்டுள்ளன. இப் புராணத்தின் பொன்னாலயப் பெருமையுரைத்த படலத்தில் இத்தலம் பற்றி சொல்லப்பட்டுள்ளது. இதில் நைமிசாரண்ய வாசிகளான முனிவர்களுக்கு சூதமகாமுனிவர் இத்தலம் பற்றியுரைத்தமை கூறப்பட்டுள்ளது. சிங்கள தேசத்திலே சிறப்பு மிகு இரண்டு விஷ்ணு ஷேத்திரங்கள் உண்டெனவும், அவை வல்லிபுரம், பொன்னாலயம் என்பன எனவும் குறிப்பிடுகின்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தின் தோற்றம் பற்றி சூதமுனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குக் கூறும்போது, முன்னொரு காலத்தில் துருவாச முனிவரின் சாபத்துக்குள்ளான தேவேந்திரன் தன் தவறை உணர்ந்து அம்முனிவரிடம் மன்னிப்புக்கோரி தன் தவறைக் பொறுத்தருளும் படி இரந்து நின்றான். இதன் பொருட்டு இரங்கிய மாமுனியும், "இந்திரனே! நீ உன் சாபவிமோசனக் காரியத்தில் துக்கமடைய வேண்டாம், சிங்கள தேசத்திலே, பொன்னாலய பட்டணத்திலே, வலைஞர் குலத்திலே நீ பிறப்பாய். ஜனார்த்தனராகிய வாசுதேவர் ஒரு காலத்தில் கூர்மவதாரம் செய்வார். உன்னால் வலை கொண்டு அக்கூர்மம் கட்டப்படும். அந்த ஆமையின் அங்கம் தீண்டப்பட்டவுடனே நீ சாபம் நீங்கப் பெறுவாய்" என சாபவிமோசத்திற்கான வழியினைக் கூறியளிருளார்.

இதன்படி வலைஞனாக பிறந்த இந்திரன் ஒருமுறை இப்போது ஆலயம் உள்ள இடத்திற்கு அருகில் உள்ள கடலில் வலை வீசினான். அவ்வேளை வலையில் ஒரு ஆமை அகப்பட்டது. அதனைத் தனித்து கரை சேர்க்க முடியாத வலைஞன் அங்குள்ளவர்களை உதவிக்கழைத்தான். அவ்வேளை ஆகாயத்தில் விமானம் ஒன்று தோன்றியது. உயிருடன் இருந்த ஆமையும் கல்லாகியது. மகாவிஷ்ணுவாகிய அக்கூர்மத்தை இந்திரனாகிய வலைஞன் தொட்டு இழுத்ததனால் அவனது சாபம் நீங்கியது. அவ்வேளை மகாவிஷ்ணு தன் திவ்விய வடிவத்தை இந்திரனுக்குக் காட்டியருளினார். விஷ்ணுவின் திருவடிச் சுவடு பதிந்ததாகக் கூறப்படும் இடம் திருவடிநிலை என அழைக்கப்படுகின்றது. இவ்வாறு தட்சிண கைலாயபுராணத்தினூடாக இத்தல வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

தட்சிண கைலாய புராணம் தவிர திருக்கேதீச்சரப் புராணம், பறாளை விநாயகர்ப் பள்ளு, யாழ்ப்பாணச் சமய நிலை போன்ற நூல்களிலும் இத்தலத்தின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. மகாலக்ஷ்மி அம்பாளும் இத்தலத்து நாராயணனைப் பூசித்து வழிபட்டதாகத் திருக்கேதீச்சரப் புராணம் கூறுகின்றது. ஆறுமுகநாவலர் எழுதிய யாழ்ப்பாணச் சமயநிலை எனும் நூலில் சிறப்பாகத் திருவிழா நடைபெற்று அதிகமக்கள் கூடும் ஆலயங்களின் வரிசையில் இவ்வாலயமும் இடம் பெறுகின்றது.

குளக்கோட்டு மன்னன் இத்தலத்திற்கு பெருந் திருப்பணிகளைச் செய்துள்ளான். இருப்பினும் அவனால் அமைக்கப்பட்ட ஏழு வீதிகள் பின்பு ஒல்லாந்தரால் இடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. சுவர்ணாலயபுரி, சதுரங்கம், பொன்னாலயம் ஆகிய திருநாமங்களும் இத்தலத்திற்குரித்தானவையே. இம்மூன்று நாமங்களும் புராணக்கதைகளுடன் தொடர்புபட்டவை. இந்திரன் வசித்தமையாலும், இந்திரவிமானம் ஆதிகூர்மத்தோடு தோன்றியமையாலும் சுவர்ணாலயபுரி எனும் நாமம் இத்தலத்திற்கு உரித்தானது என்றும், ஆதியில் கடலில் வந்த கூர்மம் கல்லானவுடன் அவ்விடத்திலேயே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. அதனால் சதுரங்கம் எனும் பெயர் உண்டாயிற்று எனவும் அதுபோல் பொன்னாகிய இலக்குமி இத்தலத்தைப் பூசித்து நின்றமையாலும், இந்திரனின் பொன்மயமான விமானம் பலருக்கும் தெரிந்ததனாலும் பொன்னாலயம் என இத்தலம் அழைக்கப்படலாயிற்று எனவும் கூறப்படுகின்றது.

இவ்வாலயத்திற்கு இரு தீர்த்தங்கள் உள்ளன. முதலாவது திருமஞ்சன தீர்த்தமாகும். இது ஆலயத்தின் முதற் பிரகாரத்தில் அமைந்துள்ளது. இரண்டாவது ஆலயத்திற்கு வடக்கே ஒன்றரை மைல் தொலைவில் உள்ள திருவடிநிலைத் தீர்த்தமாகும். இவ்வாலயத்தின் தலவிருட்சம் வன்னிமரமாகும். இது ஆலயத்தின் முதற்பிரகாரத்தில் தெற்கு வீதியில் உள்ளது.

இவ்வாலயம் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், சோபனமண்டபம், கருட மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம், யாக மண்டபம், வசந்த மண்டபம், பிரசார மண்டபம் ஆகிய மண்டபங்களையுடையது. இவ்வாலயத்தின் பிரதான மூர்த்தி பூதேவி, மூதேவி சமேதராராகவுள்ள வரதராசப்பெருமாளாவார். இம்மூர்த்தியுடன விநாயகர், ஆதி விஷ்ணு கூர்ம சிலை, கருட மூர்த்தி, நாகராசர் சனீஸ்வரர், நவக்கிரகம் போன்ற மூர்த்திகளும் இவ்வாலயத்தில் நின்று அருள் பாலிக்கின்றனர்.

இங்கு நடைபெறும் கிரியைகள் சிறப்பு மிக்கவை. நித்திய பூசைகள் வைகாசன முறைப்படி நிகழ்கின்றன. அவை ஐந்து காலப் பூசைகளாக நடைபெறுகின்றன. நைமித்தியக் கிரியைகளில் மாதந்தோறும் இடம் பெறும் ஏகாதசி உற்சவம் சிறப்பானது. மாசி மாதத்தில் இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது. பதினொரு தினங்களைக் கொண்ட இக்கிரியையின் இறுதி நாளான மாசி மகத்திலன்று காலை தீர்த்தோற்சவமும், மாலை திருவிளக்குப் பூஜையும் நடைபெறும்.

ஆடிப்பூரம் இங்கு நிகழும் மற்றுமோர் சிறப்புமிகு நைமித்திய கிரியையாகும். வைகாசி கூர்ம ஜயந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் ஆடிப்பூரம் வரையுள்ள ஐம்பத்தொரு நாட்கள் இக்கிரியை நிகழும். இறுதித் தினம் நாலாயிரந் திவ்விய பிரபந்தம் சிறப்பாகப் பாராயணஞ் செய்யப்படும். அத்தினத்தில் சிறப்பான அபிஷேகம் இடம் பெறுவதோடு வரதராஜப்பெருமாள், ஸ்ரீதேவி பூமிதேவி, ஆண்டாள் மற்றும் ஆழ்வார்கள் சகிதம் வீதிவலம் வருவார்.

ஆவணி மாதத்தில் பிரம்மோற்சவம் இடம் பெறுகின்றது. பதினெட்டு நாட்கள் இடம் பெறும் இவ்விழாவின் இறுதித்தினம் கிருஷ்ண ஜயந்தியாகும். இவற்றுள் ஐந்தாம் நாள் இடம் பெறும் கருடசேவையும், பத்தாம் நாள் இடம் பெறும் பெரிய சப்பறமும், பன்னிரண்டாம் நாள் இடம் பெறும் வெண்ணெய் திருடலும், பதினாறாம் நாள் இடம் பெறும் வேட்டைத்திருவிழாவும் சிறப்பானவை. பதினேழாம் நாள் தேர்த்திருவிழாவும், பதினெட்டாம் நாள் தீர்த்தத் திருவிழாவும், பத்தொன்பதாம் நாள் திருக்கல்யாணமும் நடைபெறுகின்றன.

புரட்டாதி மாதத்தில் வரும் ஒவ்வொரு சனிக்கிழமையும் உற்சவமும் கிருஷ்ணன் தூதுப் படிப்பும் நடைபெறுகின்றன. இம்மாதத்தில் வரும் நவராத்திரியும் பெருவிழாவாகவே இங்கு கொண்டாடப்படுகின்றது. மார்கழி மாதமும் பிரம்மோற்சவம் இடம்பெறுகின்றது. இது பத்து நாட்கள் இடம் பெறும். இரதோற்சவம் வைகுண்ட ஏகாதசியன்று நடைபெறும். அன்று அதிகாலை "சுவர்க்கவாசல் திறத்தல்" எனும் விசேட பூசையும் நடைபெறும். இம்மாதத்தில் முப்பது நாட்களும் அதிகாலையில் இடம்பெறும் 'விஸ்வரூபன தரிசனம்' எனும் கிரியையும் விஷேடமானதொன்றாகும்.

(ந. சு.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தளை
# அருள்மிகு முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

**– திரு. மாத்தளை வடிவேலன் –**

இலங்கை நாட்டில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இந்து மதம் வேரூன்றி பல்கிப்பெருகி வளர்ந்திருக்கிறது, இலங்கை சிவபூமி என்பது திருமூலநாயனாரின் திவ்வியம் பழுத்த கருத்து. இலங்கை கூடாக விராட் புருடனின் நாடிகள் செல்வதாக ஞானிகள் கூறியுள்ளார்கள். இலங்கை ஈஸ்வரமாயது விஜயமன்னன் திருக் கேதீஸ்வரத்திற்கு திருப்பணிகள் செய்துள்ளான் என்பதை மகாவம்சத்திலும் கூறப்பட்டுள்ளது. பின்னர் வந்த சிங்கள மன்னர் பலர் சிவாலய பரிபாலனம் செய்ததுடன் தம்பெயர்களையும் கூட சிவனுடன் சம்பந்தப்படுத்தி வைத்து கொண்டமையினை வரலாற்றில் காணக்கூடியதாக உள்ளது.

இப் பாரம்பரியத்தினையும் தொன்மையினையும் உலகிற்கு எடுத்துகாட்டும் வண்ணம் ஈஸ்வர ஆலயங்கள் ஐந்தில் திருக்கேதீஸ்வரம், திருக்கோணைஸ்வரம், முன்னேஸ்வரம், நகுலேஸ்வரம் ஆகிய நான்கு ஈஸ்வர ஆலயங்கள் நம் நாட்டில் அமைந்து சான்று பகிர்கின்றன. அத்துடன் மாகவிஷ்ணுவின் திரு அவதாரமாகிய ஸ்ரீ இராமபிரானின் திருப் பாதங்களும் அறுபடை வீடு கொண்ட திரு முருகனின் பாதங்களும் பதியபப்பட்டது இப் புண்ணிய பூமி.

நல்லூர்க்கந்தன் ஆலயம் நயினா தீவு நாகபூஷணி அம்மன் ஆலயம், வாயு புத்திரன் ஆஞ்சநேயன் வழிபட்ட காலி சிவன் கோவில், இந்திரஜித் யாகம் செய்து பூஜித்த நிகும்பலை என்ற இன்றைய லங்கர்தீஸ்வரர் ஆலயம், சேரன் செங்குட்டுவன் ஏற்படுத்திய கண்ணகி வழிபாட்டை (சக்தி) புலப்படுத்தும் காரை தீவு கண்ணகி அம்மன் ஆலயம், தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம், உடப்பு ஸ்ரீ பார்த்த சாரதி சமேத துரௌபதி அம்மன் ஆலயம் ஜனநாத மங்களம் என்ற இன்றைய பொலன்நறுவையில் அமைந்துள்ள சிவாலயங்கள் மாத்தறையில் நிலத்திற்குட்பட்டிருக்கும் சந்திர சேகரம் என்னும் சிவாலயம், தேவன் துறையென்னும் தெவுந்துறையில் அமைந்துள்ள விஷ்ணு ஆலயம் முதலான பெருமையும் தொன்மையும் மிக்க ஆலயங்கள் விளங்கும் ஞான பூமி இதுவாகும்

சைவத் தொன்மையும் புகழும் வாய்ந்த இலங்கைத் திரு நாட்டில் ஈசனுக்கு நெற்றிக்கண் அமைந்துள்ளது போல் மலையகம் விளங்குகின்றது. இறைவனின் திருப்பாதம் பதியப் பெற்ற சிவனொளிபாத மலையின் அருளாட்சியில் திளைக்கும் மலையகம் என்றும் ஆன்மீக ஒளிசுடரும் திவ்விய பூமியாகும். இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் உழைப்பால் உயர்ந்த மலையகம் ஞான வழியிலும், அருள் நெறியிலும் தலை சிறந்து மிளிர்கின்றது. இதனை மெய்ப்பிப்பது போல மலையகம் எங்கும் விளங்கும் இந்து ஆலயங்கள் சான்று பகர்கின்றன. இயற்கை வனப்பும், தெய்வீகதன்மையும் இணைந்து காணப்படும் இம் மலையகத்திலுள்ள திருத்தலங்களில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையானது.

பண்டு தொட்டு இன்று வரை மக்களுக்கு அருட் காடாட்சம் பொழியும் அன்னை சக்தி உலகத்து நாயாகியாக இத் திருத்தலத்தில் எழுந்தருளி அருளாட்சி புரிவது அனைவரும் அறிந்ததாகும்.

இன்று மாத்தளை என்னும் நாமத்தால் அழைக்கப்படும் இத்திருநகர் முன்பு பன்னாகமம் என்னும் பெயர்களினால் அழைக்கப்பட்டுள்ளது பல்+நாகம் பன்னாகமாகும். ஆதியில் நாக வழிபாடு உலகின் பல பாகங்களில் காணப்பட்டது போல் நாகர் வாழ்ந்த நம் நாட்டிலும் நடை பெற்றுள்ளது. பன்னாகத்தில் பல தலைகளையுடைய ஒரு நாகம் இவ் அம்மனை பூஜித்து வழிபட்டதாகவும் ஒரு கர்ண பரம்பரை கதை கூறுகின்றது. இதுவே இப் பெயர் ஏற்படக் காரணம் என்போரும் உளர். பன்னகமம் என்னும் சொல் சிங்கள மொழியோகும், மக்கள் கலாசாரத்தோடும் இணைந்த ஒரு சொல்லாகவும் விளங்குகின்றது.

மலையகத்தின் வடக்கு வாயிலென திகழும் மாத்தளை மாவட்டம் பல் வேறு வகையான சிறப்புகளை உள்ளடக்கியது. சங்க இலக்கியங்களில் கூறப்படும் குறிஞ்சி, முல்லை மருதம் ஆகிய மூவகை நிலங்களையும் கொண்டது. வெற்பெடுத்த திருமேனியான் இராவணேசனின் கோட்டை கொத்தளங்கள் இம் மாவட்டத்தில் இரத்தினங்கள் நிறைந்த "லக்கல" பகுதியில் அமைந்திருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள். எழுதா மறையாக விளங்கிய திரிபிடகம் மாத்தளை மாநகரில் அமைந்துள்ள அலுவிகார வில் எழுதப்பட்டது. இலங்கை விடுதலைப்போரில் கொங்காலே கொட பண்டா, வீரபுரன் அப்பு ஆகியோருக்கு நிகராக சுதந்திர வேட்கையுடன் செயல்பட்ட முத்துசாமி நாயக்கரும் இம் மண்ணின் மைந்தனேயாவர், தம்புள்ளை சீகிரிய சித்திரங்களோடு சைவ தமிழ் பண்பாட்டினை எடுத்தியம்பும் நாலந்த கெடிகேயும் இம் மாவட்டத்தின் பெருமைக்கு துணை நிற்கும் இன்னுமொரு சான்றாகும்.

இத்தகைய சிறப்புகள் பல ஒருங்கே அமையப் பெற்ற மாத்தளை நகரில் அன்னை-முத்துமாரி "குற்றாலம் என ஏழு அருவிகள் கொட்டும்" அழகு மலை குன்றுகளுக்கு கிழக்கே, மகாவலி கங்கை கலந்து புரண்டோடும் சுதுகங்கை தீர்த்தத்திற்கு மேற்கே, சோழன் காமம் என்னும் திரு நாமத்தால் அழைக்கப்பட்ட சுனங்காமம் பிள்ளையார் ஆலயத்திற்கு வடக்கே வெள்ளைக்கல் ஸ்ரீ அழகர் பெருமான் ஆலயத்திற்கு தெற்கே மந்தண்டாவளை வழிப் பிள்ளையார் ஆலயம், ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் ஆலயம், ஸ்ரீ ஏழுமுக காளியம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்கள் நாற்புறமும் புடை சூழ நடுவே கோவில் கொண்டு எழுந்தருளி உள்ளார்.

சிவ வழிபாட்டினை போன்றே சக்தி வழிபாடும் தொன்மையானதாகும். தாய்மை பல்வேறு அம்சங்களின் உறைவிடமாகும். இத் தெய்வீகத்தை கண்டவர்கள் நம்முன்னோர்களாவர். இதனால் தான் சிந்து வெளியில் இருந்து இற்றைவரைக்கும் சக்தி வழிபாடு தலை தூக்கியே நிற்கின்றது. சிந்து வெளியின் அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்ட பெண் உருவங்கள் சக்தி வழிப்பாட்டின் தொன்மையை புலப்படுத்துகின்றது. அங்கு கண்டெடுக்கப்பட்ட கோர, சாந்த முகமுடைய பெண் உருவங்கள் சக்தி வழிப்பாட்டையே நினைவில் நிலை நிறுத்துகின்றன வேத காலத்திலும் சக்தி வழிபாடு முதன்மை பெற்றிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்கு வேதங்களிலும் சக்தியை முதன்மை படுத்தியுள்ளமையை சைவ பெரியார்கள் எடுத்தியம்பி உள்ளனர். இது போலவே கால வரலாற்று அடிப்படையில் சங்க, சங்கமருவிய பல்லவ, சோழர் காலபரப்பிலும் சக்தி வழிபாடு முதன்மை பெற்று இருப்பதை இந்து மக்கள் நன்கறிவார்கள்.

இந்த பூர்வீகத்தின் அடியொற்றியே இலங்கை, இந்திய இந்து மக்களும் பிறரும் சக்தி வழிப்பாட்டை மாத்தளையில் வேரூன்றச் செய்து செழுமையும் வளர்ச்சியும் பெறச் செய்துள்ளனர். இவ்வாறெல்லாம் வரலாற்று காலத்தின் முன்பே நிலை பெற்று விட்ட மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் ஆரம்ப வரலாற்றை துல்லியமாக எடுத்துச் சொல்லும் திருவருள் மாட்சியை கொண்டோர் நம்மிடையே இப்பொழுது இல்லை யென்றே நினைக்கத் தோன்றுகிறது.

மலையக எழுத்தாளர் திரு மாத்தளை கார்த்திகேசு அவர்கள் இவ் ஆலயத்தின் வரலாற்றை ஒரு தனிநூலாக எழுதி வெளிக் கொணரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அந்நூல் வெளிவரும் பட்சத்தில் இவ் ஆலயத்தின் முழுவரலாற்றையும் அறியக் கூடியதாக இருக்கும் என நம்பலாம். 1983 இனக் கலவரத்தினால் சித்திரத் தேர் உட்பட இவ்வாலயம் தீயோரால் எரியூட்டப்பட்டு பெரும் அழிவுகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் மீண்டும் இவ் ஆண்டு சித்திரத் தேரையும் ஏனய இரதங்களையும் அமைத்து பஞ்சரதப் பவணி வர அரும் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளும் வேளையில் பஞ்சரத பவனியை ஒட்டி மலர் வெளியீட்டுக் குழுவினர் ஆலய வரலாற்றினை குறுகிய கால இடைவெளியில் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாத்தளை வாழ் பல் வேறு பிரமுகர்களையும் சந்தித்து அவர்கள் இவ்வாலயத்தின் வரலாறு பற்றி கூறிய கருத்துக்களை அவ்வாறே உங்கள் முன் படைக்கின்றேன். இக் கருத்துக்களில் சில ஒன்றுகொன்று சற்றே வித்தியாசப்பட்ட பார்வையினை உடையதெனினும் அடிப்படைக் கருத்துக்கள் ஒற்றுமையுடையவனாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" "பால் நினைக் தூட்டும் தாயினும் சால" "தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் பாசுரங்களினாலும், தொடர்களினாலும் விதந்து போற்றி முக்கியத்துவம் படுத்தப்படும் எங்கும் நிறைந்து யாதுமாகியுகந்தொறும் யுகந்தொறும் மெய்யடியார்களுக்கு தன்னை பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்தி அருளாட்சி புரியும் கருணைப் பெருங்கடலாம் முத்துமாரி நம் மாத்தளை திருப் பதியில் ஆதியில் ஒரு ஒப்பனைக் கலைஞருக்கு தன் திருவுருவத்தை வில்வ மரத்தடியில் வெளிப்படுத்தி காட்சி கொடுத்தருளினாள். என்றும் பெரியோர்கள் கர்ணபரம்பரை கதையாக கூறக் கேட்கலாம். முன்பு வடக்கையும் மலையகத்தையும் இணைக்கும் ஒரு சந்திப்பு கேந்திர நிலையமாக இன்றைய மாத்தளை நகர் விளங்கியுள்ளது. ஆரம்பத்தில் ஒற்றையடிப்பாதை வழியாகவும், பின்னர் மாட்டு வண்டில்களிலும் வடக்கில் இருந்து மலையகத்திற்கு வத்தோர் இக்குக கிராமத்தில் தங்கி இளைப்பாறி பண்டமாற்று செய்து பயணம் செய்துள்ளனர். ஆங்கிலேயர் காலத்தில் பெருந் தோட்டத்துறைக்கு இந்திய வம்சாவளி தமிழ் மக்களைக்கொண்டு வந்த போது அவர்கள் மன்னார் அரிப்பு முதலான துறைகளில் இறங்கி வனாந்தரங்களுக்கூடாக பல்வேறு இன்னல்களை அனுபவித்து நளந்தகணவாய்க்கூடாக இப் பன்னகமத்தை அடைந்து சிறு ஆலயமாக விளங்கிய இவ்வாலயத்தை தரிசித்து தங்கி ஒய்வு பெற்று பின்னர் மலையகத்தின் பல் வேறு பகுதிகளுக்கும் பிரிந்து சென்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கஜபாகு மன்னனால் ஊக்கு விக்கப்பட்ட பத்தினி வழிபாடு பின்னர் தளர்ச்சி யடைந்திருந்த வேளையில் இந்திய வம்சாவளி மக்களின் குடியேற்றம் மலையகத்தில் ஏற்பட்ட போது மீணடும் சக்தி வழிபாடு புத்துயிர் பெற்றது. தென்னிந்திய தமிழ் மக்கள் தம் கிராமத்து கோவிகளில் கொண்டாடிய அம்மன் வழிப்பாட்டை இங்கு நிலைபெறச் செய்தனர். இந்த அம்சம் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் பிரசித்தி பெற கால்கோளாயிற்று. மலையகத் திருத்தலங்ளின் வரலாற்றோடு பின்னிப் பினைந்தது நாட்டுக் கோட்டை நகரத்தாரின் வரலாறாகும் "லேவாதேவி" வியாபாரத்திற்காக வந்த இவர்கள் தம் உழைப்பின் பெரும் பகுதியைஆலயங்களுக்கு ஈந்தனர்.

இவ் ஆலய நிர்வாகத்தின் வரலாற்று போக்கிலும் வளர்ச்சி அடிப்படையிலும் தடம் பதித்து மிளிரும் சில கால கட்ட அம்சங்களை இங்கு குறிப்பிடுவது ஆரம்ப கால வர லாற்றினை அறிய விரும்பு வோருக்கு பயனுடையதாகும். மிகச் சிறிய அளவில் விளங்கிய இக் கோவிலை பல்வேறு கால கட்டங்களில் தனியாகவும் குழுவாகவும் செயற்பட்ட பெரியார் பலர் அயரா முயற்சியினால் கட்டி எழுப்பி வந்துள்ளனர். இவர்கள் பற்றிய விபரங்களை வரன் முறையாக தொகுப்பது இவ் ஆலய திருப்பணியோடு ஒட்டிய ஒன்றேயாம். வியாபாரிகள் தங்கிச்செல்லும் சத்திரமாக இப்பதி விளங்கிய காலத்தில் ஒரு நாள் ஒரு சிறுபிள்ளை அங்கு தோன்றியது. மறு நாள் அப்பிள்ளையின் சட்டை மாத்திர மே இருந்தாம். அன்றைய தினம் இரவு திரு "நல்ல முத்து" என்பவரின் கனவில் தோன்றி இதற்கு முன்னர் குழந்தை வடிவில் காட்சி அளித்தது அம்பிகைதான் என்றதாம். அத்துடன் அவ்விடத்தில் ஒரு கல்லும் உள்ளது. அதற்கு தினமும் தீபம் இடுங்கள் என்று கூறி மறைந்ததாம். பின்னர் அக் கல்லுக்கு தீபம் இட்டு வணங்கியுள்ளனர். பின்னர் அவ் விடத்தில் ஒரு சிறு குடில் அமைத்து வழிபட்டுள்ளனர், இவ்வாறு குடில் அமைத்து கோவிலாக அமைத்து வழிபடும் முறையை முதன் முதலில் ஆரம்பித்தவர் திரு கருப்பண்ணன் சாமி என்ற பக்திமான். இவர் சிவகங்கையைச்சேர்ந்த காளையார் கோவில் என்னும் ஊரை பூர்வீகமாக கொண்டவர். இவருக்கு சீடராக இருந்த சுப்பாபிள்ளை என்பவர் கோவிலில் பூஜை முதலானவைகளை நடாத்தியதாக தெரியவருகின்றது. கருப்பண்ண சாமி குடும்பத்தினர் வைகாசி திரு விழாவை நீண்டகாலம் நடாத்தி உள்ளனர். திரு சுப்பாபிள்ளை குடிலாக இருந்த கோவிலை கட்டிடம் அமைத்து திருத்தியதுடன் சுற்றியுள்ள நிலத்தையும் வாங்கி 1852 ஆம் ஆண்டில் இதற்கு மானியம் செய்து வைத்ததாக அக்காலப் பதிவேடுகளில் இருந்து தெரிய வருகின்றது. சுப்பா பிள்ளை காலத்திற்குப் பின்னர் நொத்தாரிஸ் முருகேசு என்ற பக்திமான் இக் கோவில் நிர்வாகத்தை நடாத்தியதாக தெரிய வருகின்றது. 1850 களில் சுப்பா பிள்ளை நாட்டார் தமக்கு உதவியாக ஐந்து பேர் அடங்கிய குழுவொன்றினை அமைத்துக் கொண்டதாக தெரிய வருகின்றது. சுப்பா பிள்ளைக்கு உதவியாக இந்தியதனவணிகசெட்டியார்களும் யாழ்பாண வர்த்தகர்களும் தொண்டாற்றியுள்ளர்கள். இக் கால கட்டத்தில் தற்போது அம்பாள் எழுந்தருளி இருக்கும் மூலஸ்தானம் வரிச்சுமண் சுவரால் கட்டப்பட்டு கூரை நாட்டு ஓடினால் வேயப்பட்டிருந்தது. மூலஸ்தானத்திற்கு முன்புறமாக தென்னோலை வேயப்பட்ட மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. தொடர்ச்சியாக ஒப்பனை கலைஞர் அதற்குப் பின்னர் பண்டாரங்கள் பூசை செய்யும் நிலமாறி. பிராமண அர்ச்சர்கள் பூஜைகளுக்கு பொறுப்பாயினர். உயர் திரு ஞான சேகர குருக்கள் ஈறாக மூன்று பரம்பரையாக அர்ச்சக பொறுப்பை ஏற்று நடாத்தி வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான சேகர குருக்கள் ஆலயத்தின் உள்ளேயே சிவபதம் அடைந்ததாக பெரியோர் கூறுவர். இதன் பின்னர் ஆலயத்தின் பிரதம அர்ச்சகராகக் கடமை யாற்றிய சிவாச்சாரியார் காலஞ் சென்ற திரு சுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்களின் தந்தையாகிய பிரம்ம ஸ்ரீ கிருஷ்ணஐயர். அவர்கள் ஆலய பூஜை பொறுப்பினை ஏற்றுக் கொண்டார்கள்.

இக் காலப் பகுதியில் இவ்வாலய பரிபாலனத்திற்காக பதிமூன்று பேர் அடங்கிய குழு ஒன்று செயற்பட்டதாக தெரிய வருகின்றது. இக் குழுவில் நாட்டாரும் நகரத்தாரும் இணைந்து செயல்பட்டுள்ளனர். நகரத்தார் என்போர் நாட்டுக் கோட்டை செட்டியார்களாவர். நாட்டார்கள் பல்வேறு பிரிவினர்களை கொண்ட ஊர் மக்களாவர். மேற்குறிப்பிட்ட கால கட்டங்களில் திருவாளர்கள் சொக்கலிங்கம் செட்டியார் கனகசபை, முத்தையா, ஆகியோர் நிர்வாக சபையின் தலைமையினை ஏற்று வழி நடாத்தியுள்ளனர். இவர்களோடு பின்வரும் பெரியார்களும் தம் அயரா உழைப்பை நல்கி ஆலய வளர்ச்சிக்கு அருந் தொண்டாற்றியுள்ளனர். திருவாளர்கள் மாணிக்கம் செட்டியார் வாஞ்சி நாதன் முத்துராமன் சேர்வை கறுப்பையர் சேர்வை, வன்னிவேல் செட்டியார், அருணாசலம் ஆசாரியார், விசுவநாதன், கதிர்வேற்பிள்ளை, எதிர்மான சிங்கம், சிறாப்பர் சோம சுந்தரம், லெட்சுமணன் செட்டியார், டிக்கிரியா சோம சுந்தரம். பின்னர் திரு கந்தசாமி அவர்களும் தலைமைத்துவத்தை ஏற்று நடாத்தியுள்ளனர். திரு கந்தசாமி அவர்கள் தலைமையை ஏற்ற வேளையில் ஆலமரச் சந்தியில் மிருக பலி கொடுக்கும் மரபு நிறுத்தப்பட்டது.

ஆரம்பத்தில் பூஜைகள் மட்டுமே நடைபெற்று வந்துள்ளன. பின்னர் படிப்படியாக திரு விழாக்களும் ஏற்படுத்தப்பட்டு சப்பரத் தேர் எடுக்கும் வழக்கம் தோன்றியுள்ளது. 1934 ஆண்டு அளவில் சப்பரத்தை மாற்றி விநாயகரையும், சிவன்அம்பாள் முருகன் இரத்தோற்சவமும் நடாத்தியுள்ளனர்.

வெள்ளைக் கல்லைச் சேர்ந்த திரு ஜி. முருகையா அவர்களும் தலைமைத்துவத்தை ஏற்று பல சேவைகளை ஆற்றியுள்ளனர் இவரின், தலைமைத்துவத்தை ஏற்று நடத்தும் காலத்தின் பிற்பகுதியில் 1955 ஆண்டுகள் அளவில் நிர்வாகத்தினரிடயே ஏற்பட்ட சில அபிப்பிராய கருத்து பேதங்களுக்கு தீர்வுகாணும் வகையில் மாத்தளை அரசாங்க அதிபருக்கு மனு ஒன்று கொடுக்கப்பட்டு பொது நம்பிக்கை பொறுப்புச் சொத்தை சீரிய முறையில் நிர்வகிக்கும் வகையில் அரசாங்கத்தால் மூவர் கொண்ட இடைக்கால நிர்வாக சபை ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இதன் தலைவராக திரு க. குமாரசாமி அவர்களும் உறுப்பினர்களாக திரு கனகசாபாபதி அவர்களும் மாத்தளை கச்சேரியில் கடமையாற்றிய திரு சபாரட்ன ஐயர் அவர்களும் செயல்பட்டு உள்ளனர். இவ் இடைக் கால நிர்வாக சபை மூன்று வருட கால பகுதிக்கு செயல்பட்டதாக தெரிய வருகின்றது, இதனை யொட்டி மாத்தளை மாவட்ட நீதி மன்றத்தில் ஏற்படுத்தப்பட்ட முகாமைத்துவ திட்டம் ஒன்று தேவஸ்தானத்தின் பரிபாலனத்திற்கு வழிகாட்டியாக உள்ளது. டி. ஆர் . ஒன்று என அழைக்கப்படும் இம் முகாமைத்துவ திட்டம் இந்து ஆலயங்களை பரிபாலனம் செய்யும் வகையில் ஒரு சரித்திரம் பெற்ற சரத்தினை உள்ளடக்கியுள்ளது. இதன் ஏழாம் சரத்து இந்து ஆலயங்களை பரிபாலனம் செய்யும் முக்கியத்துவம் நிர்வாகசபையின் உறுப்பினர்கள் ஓர் இந்துவாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் முகாமைத்துவ திட்டத்தை சட்டத்தரணி **J.L.** தம்பிராஜா அவர்கள் தயாரித்துள்ளார்கள் 5.12.1957 ல் மாத்தளை மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு இலக்கம் இல டீ . டி. 6/83 நீதி மன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட சட்ட மாகும். இம் முகாமைத்துவ திட்டம் தேர்தல் மூலம் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதற்கும் அச்சபையினால் தலைவர், செயலாளர் தெரிவு செய்யப்படுவதற்கும் வழிகாட்டி நிற்கின்றது. இச்சபை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய தகமைகள் பற்றியும் குறிப்பிடுகின்றது இத்திட்டம் ஆலய அபிவிருத்திக்கும், ஆலயம் மேற்கொள்ள வேண்டிய இந்து சமய கலாசார கல்வி சமூக பணிகளை நிர்வாக உறுப்பினர்களால் மட்டும் நிறை வேற்றுவது சாத்திய மல்ல என்பதை கருத்தில் கொண்டு பலவிதமான கடமைகளை புரிவதற்கு சபைக்கு வெளியிலான பதிவு செய்யப்பட்ட இந்து வழிபாட்டாளர்களிடமிருந்து சபை குழுக்களை தெரிவு செய்யவும், அவசியமேற்படின் உப குழுக்களையும் தெரிவு செய்யவும் வழிவகுத்துள்ளது. இந்த யாப்பை பின்பற்றி தற்போதய தலைவர் உயர் திரு மாரிமுத்து செட்டியார் பல்வேறு உபகுழுக்களுக்கான துறை சார்ந்த முக்கியஸதர்களை தெரிவு செய்து செயல் படுவது முதன்மையும் முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பம்சமாக விளங்குகின்றது.

1955 களில் திரு க. குமார சாமி தலைமைத்துவத்தை பொறுப்பேற்ற காலகட்டத்தில் இராஜ கோபுரம் உட்பட பல ஆலய அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திரு. அம். முத்துவேளர், திரு கே. கனகரட்னம் திரு. மா.க. சுப்பையாபிள்ளை, திரு. இரா சோமசுந்தரம் திரு வே. கதிர் வேற்பிள்ளை திரு. மு. தங்கவேல்பிள்ளை, திரு பெ. கலிய பெருமாள் திரு சு. புண்ணிய சீலன், திரு மு. அருணாசலம், திரு ச. மகாராஜா ஆசாரி திரு மு. இராஜா திரு சி. நடராஜன் ஆகியோரும் மற்றும் பொதுமக்களும் ஒத்துழைத்து பெரும் பணியாற்றி ஆலயத்தில் மகாமண்டபம், உட்படமுருகன் கோவில் வசந்த மண்டபம், விஸ்னுகோவில் நாயனமார் கோவில், மீனாட்சி, சிவன் கோயில் என்பன திருப்பணி செய்யப்பட்டன இக்காலப்பகுதியில் திரு இரா. தங்கவேல் செட்டியார் (1968) அவர்கள் ஆலயத்தின் உபதலைவராக விளங்கியதோடு ஆலய மணிகோபுரத்தையும் தனி உபயமாக அமைத்தார். இக் கோபுர பணிகளை தமிழ் நாடு இராம நாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த முத்துராமன் சிற்பாசாரியார் நிர்மாணித்தார்.

1977ல் சித்திரத் தேர் அம்பாளுக்கு அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. இச் சித்திரத் தேரை கலாகேசரி ஆ. தம்பித்துரை அவர்கள் நிர்மாணித்தார். 1983 இனக் கலவரத்தின் போது சித்திரத் தேரும் ஏனைய இரதங்கள் எரியூட்டப்பட்டதுடன் கல்யாண மண்டபம் உட்பட அலுவலக அறை, ஆலயத்தின் பல பகுதிகள் சேதமாக்கப்பட்டு பெரும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டமையால் ஆலயத்தின் வளர்ச்சி குன்றியது. இம் மாவட்டத்தின் இந்து தமிழ் மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர் கொண்டு இருந்தமை ஆலயத்தையும் பாதிப்புறச் செய்தது. இக் காலப்பகுதியில் திரு இராஜரட்னம் அவர்கள் தலைமை யேற்று செயல்பட்டார், இக் காலப் பகுதியில் பஞ்சரத பவனி இல்லாவிட்டாலும் கூட மாசிமாதம் தோறும் விசேட பூஜைகள் நடாத்தி உள்வீதி வலம் வரச் செய்தனர்.

1992 ஆம் ஆண்டு பிற்பகுதியில் மீண்டும் ஆலய அறங்காவல் சபையின் தவைர் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட திரு த. மாரிமுத்து செட்டியார் இந்து மக்களை மட்டுமன்றி பல்வேறு இனத்தவரையும் அரவணைத்துக் கொண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு அணியாய் விளங்கிய சித்திரத் தேரையும், ஏனைய இரதங்களையும் அமைக்கும் திருப்பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளார். இத் திருப்பணி இனிதே நிறைவேறியுள்ளதுடன் மஞ்சுதவழ் மாத்தளையில் அம்பாள் சித்திரத் தேரேறி பஞ்சரத பவனிவரவழி பிறந்துள்ளது. எரிந்த சித்திர தேரை நிர்மாணித்த கலா கேசரி ஆ. தம்பித்துரையின் உறவினரும், பிரதம சீடருமான யாழ்பாணம் திருநெல்வேலி காளியம்மன் கோவிலடி கனகசபை செல்வராஜ் நிர்மாணிக்கின்றார். இவர் சங்கிலி மன்னன் வழிபட்ட சட்டநாதர் சிவன் ஆலயம் எனப்படும் நல்லை சிவன் ஆலயத் தேர் முதலானவற்றை கவினுறு வகையில் நிர்மாணித்த கை தேர்ந்த கலைஞனாவார். இம் மாசி மகத்தில் அம்பாள் பவனி வர இருக்கும் சித்திரத் தேர் 5.3.93ல் வெள்ளோட்டம் விடப்படுகின்றது. இத்தேரின் உயரம் 29 அடி 6 அங்குலமாகும். இத் தேர் நான்கு சில்லுகளையும் நுற்றி இருப்த்தெட்டு பவளக் கால்களையும், எட்டு யாழிகளையும் கொண்டது. தேரின் முன் பக்கத்தில் இரு குதிரைகள் உள்ளடக்கியதுடன் நாற்பத்தி எட்டு விக்கிரங்களையும் கொண்டது. எரிந்த சித்திரத்தேரை விட இதில் பன்னிரண்டு விக்கிரங்கள் கூடுதலாக உள்ளன, அத்துடன் அறுபத்தி நான்கு யாழிக்கட்டை குதிரை கட்டைகள் விளங்குகின்றன, நூற்றி எட்டு மணிகள் தேரை அழகு படுத்த உள்ளன,

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் பரிபாலன சபையினது, உபகுழுக்களினதும் தலைவராக விளங்கும் திரு த. மாரிமுத்து செட்டியார் அவர்களினதும் இத்திருத்தலத்தில் வாழும் சிவாச்சாரியார்கள் பெரியார்கள் கல்விமான்கள், கலைஞர்கள், இளைஞர்கள் தொண்டர்கள் ஆகியோரோடு கூட்டு முயற்சியினாலும் பொது மக்களின் ஒத்துழைப்பினாலும் தேவஸ்தானத்திற்கு வடக்கு கோபுரம், வடக்கு வெளி வீதி, என்பன அமைக்கப் பட உள்ளன. ஆலயத்தில் மலையகத்திலேயே முதன் முதல் இந்து சமய போதனைக்காக அறநெறிபாடசாலை அமைக்கப்பட்டது போல் உயர்தர வகுப்புகளுக்கான போதனைகளும் இலவசமாக நடத்தப்படுகின்றன. எதிர் காலத்தில் தொழில்நுட்ப, பொறியியல், கனணி வகுப்புகளும் நடாத்தப்படவுள்ளன, இந்து மயானத்தை சீர்படுத்தி இதனோடு தொடர்புடைய அம்சங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கலை இலக்கிய பண்பாட்டு முயற்சிகளுக்கும் ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் திட்டமும் கருக் கொண்டுள்ளது. முன்பு முப்பெரும் கவிஞர்களான க. சொக்கநாதன் வி. கந்தவனம், திரு ஈழவாணன் ஆகியோர் அம்பாளின் அருளில் திளைத்து மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் குறவஞ்சியை பாடிப்பணிந்தனர். ஊஞ்சற் பாக்களையும் விருத்தப் பாக்களையும், பல தனிப் பாடல்களையும் கவிஞர் பலர் பாடியுள்ளர் இவைகள் அனைத்தும் தொகுத்து நூலுருவில் பிரசுரிக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

1983 வன்செயலினால் கோவில் சேதமாக்கப்பட்ட பின்னர் ஆலய நிர்வாக பொறுப்பை திரு.மு. இராஜரட்னம் ஏற்றுக் கொண்டார். சோதனை மிக்க காலக்கட்டத்தில் தன்னடகத்துடன் இவர் ஆற்றிய பணி ஆலய வளர்ச்சியில் மற்றுமோர் மைல்கல்லாகும், சுப்புப்பிள்ளை முத்துசாமி பிள்ளை, திரு விஸ்வநாதன் ஆகியோர் திரு இராஜரட்னம் அவர்களின் உறவினர்களாவதுடன் ஆலயத்தின் காணி பற்றிய விபரங்களை தெரிவிக்கும் பாங்குடையவர்களாக விளங்குகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்புப்பிள்ளைக்கு முன்னர் சங்கரநாராயண பிள்ளை ஸ்தாபகராக பணியாற்றியதாகவும் இவர்கள் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கின்றது. 1922 களில் முருகேசு பிள்ளை மாத்தளை அம்பிகையை போற்றி பதிகம், ஊஞ்சற்பாடல்கள் அந்தாதி என்பவற்றை வெளியிட்டதாகவும் இவர்களது தகவல் தெரிவிக்கின்றது. திரு இராஜரட்னம் 1991/92ல் தலைவராக இவ் ஆலயத்தில் சபை உறுப்பினராக இருந்ததுடன் வசந்தவிமானகோபுரம் தீர்த்தக்கேணி என்பவற்றையும் நிர்மாணித்துள்ளார்

இவ்வாலயத்தில் தேர்ச்சில்லுக்கு தேர் நிறுத்த திருப்புக்கட்டை கொடுப்பது பரம்பரை பரம்பரையாக விஸ்வபிரம்ம குலத்தினர்கள் ஆவர். முன்பு திருவிழா ஆரம்பித்தவுடன் நிர்வாக சபையினர் இறத்தோட்டை இராஜரட்னம் அவர்களுக்கு காளாஞ்சி கொடுத்து மரியாதை செய்து கட்டை கொடுக்கும் திருப்பணிக்காக அழைப்பார்கள். தற்போதும் இப்பரம் பரையினரே இப்பணியை செய்துள்ளனர். இவ் ஆலயத்தின் இடது புறமாக அமைந்திருக்கும் ஸ்ரீ விஸ்ணு ஆலயம் விஸ்வ பிரம குலத்தினரால் 1972 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

"கோபுரதரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள்". இவ்வாலயத்தை தேவஸ்தான அந்தஸ்திற்கு உயர்த்துவது இராஜ கோபுரமாகும். இந்த இராஜ கோபுரத்திற்கு 25.1.1973 முறைப்படி கும்பாபாஷேகம் நடைப்பெற்றது. இத்திருக் கோயிலுக்கு சாஸ்திரீய முறையான கொடிமரம் (துவஜஸ்தம்பம்) தாமிர உலோகத்தால் செய்யப்பட்டு மேலே வெள்ளிப் பூச்சு பூசப்பட்டு 1968ல் நிறைவேற்றப்பட்டது. திருப்பணி வேலைகளில் தமிழக சிற்ப வல்லுனராகிய ச. முத்துராம பிள்ளை, வி. கருப்பையா சேர்வை, திரு நாகலிங்கம் ஆசாரியார் ஆகியோர் முக்கிய பங்கெடுத்துள்ளனர். பழைய கட்டிடம் 1958 களில் முற்றும் முழுதாக திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் மகாமண்டபம் அர்த்த மண்டபம் மூலஸ்த்தானம் போன்றவை அமைக்கப்பட்டு 1960 களில் மூலஸ்தான கோபுரம் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1963 ல் சந்திர சேகரர் சண்டேஸ்வரி ஆகிய மூர்த்திகளுக்கு தனித்தனி கோவில்கள் அமைக்கப்பட்டதை தொடர்ந்து நடராஜ பெருமான் கோவில், வயிரவர் கோவில் என்பனவும் நிர்மாணிக்கப்பட்டன, 1968 களில் வசந்த மண்டபமும் அதன் பின்னர் சுற்று மதிலும் அமைக்கப்பட்டன. ஆலயத்தினுள்ளே ஆனைமுகன், கறுப்பண்ண சாமி மதுரை வீரன் பஞ்சமுக விநாயகர் முருகப்பெருமான் ஸ்ரீ விஸ்ணுவின் அநந்த சயனம், சரஸ்வதி, துர்காதேவி, லெட்சுமி, நவக்கிரகங்கள், மீனாட்சி அம்பிகை, நந்தி நடராஜர் சந்நிதானம் நான்கு நாயன்மார்கள் ஆகியன சாஸ்திர முறைப்படி அமைக்கப்பட்டு அருள் பாலிக்கின்றனர்ஆலயத்தினுள்ளே பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் சிவலிங்கம் வார்க்கப்பட்டதோ, செதுக்கப்பட்டோ உருவாக்கியதோ அல்ல. இது காசியில் இருந்து எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும்.

இவ் ஆலய வளர்ச்சிக்கு முந்திய தலை முறையைச் சேர்ந்த திரு வெள்ளையன் செட்டி, திரு எதிர்மான சிங்கம், டாக்டர் சுப்பிரமணியம், சுப்புராயபிள்ளை, மருத நாயகம் பிள்ளை ஆகியோர் பொருளுதவி கொடுத்து திருப்பணி செய்து தொண்டாற்றியது போல் திரு ச. முருகேச பிள்ளை, மா. சபாரட்னம் ஆகியோர் யானை ஒன்றினை உபயமாக வழங்கியுள்ளனர். சண்டேஸ்வரி ஆலயத்தை திரு ஆறுமுகம் செட்டியார் கட்டி உபாயமாக அளித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983 இனக் கலவரத்திற்கு பின்னர் அழிக்கப்பட்ட சித்திரத் தேர்கள் உட்பட புனர்நிர்மாண பணிகளுக்கு அரசாங்கம் நிதிவுதவியும், பொருளுதவியும் வழங்க வேண்டுமென துணை நகர பிதா திரு எம். சிவஞானம் கொண்டு வந்த பிரேரணையை மாத்தளை மாநகர சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

1993 ஜனாதிபதி மண்பு மிகு ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆலயத்திற்கு விஜயம் செய்து அம்பிகையை தரிசித்தார். இவ்வைபவத்தில் மாத்தளை நகரபிதா திரு ரஞ்சித் அலுவிகார உதவி நகரபிதா மு. சிவஞானம் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் துறைமுகங்கள் கப்பற் போக்குவரத்து அமைச்சருமான திரு அலிக் அலுவிகார, சமுக கலாசார ஒருங்கிணைப்பு அமைச்சர் திரு பி.பி கவிரத்ன, இந்து சமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் திரு பீ.பீ. தேவராஜ் அவர்கள் உட்பட மாநாகர சபை உறுப்பினர்கள் உட்பட பல்வேறு உறுப்பிர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஆலயத்திற்கு விஜயம் செய்த மாண்புமிகு ஜனாதிபதியவர்கள் சித்திரத் தேர் திருப்பணிக்கு ரூபா இரண்டு இலட்சம் வழங்கி திருப்பணி சிறப்புற தொண்டாற்றினார்.

இவ் ஆலயத்தில் மாசி மகமே சிறப்பான விழாவாக கொண்டாடப்பட்ட போதிலும் வருடந்தோறும் பல்வேறு உற்சவங்களும், விழாக்களும் சிறப்பாக நடந்தேறி வருகின்றன. மாத்தளையில் உள்ள மகாத்மாகாந்தி மண்டமும், புளியங்குளம் முத்துமாரியம்மன் ஆலயமும் ஒரு கால கட்டத்தில் இவ்பரிபாலன சபையின் நிர்வாக பொறுப்பிலேயே இருந்து வந்துள்ளன. பல்வேறு கால கட்டங்களில் பல பெரியார்கள் பொருளுதவி சரீர உழைப்பையும் நல்கி ஆலய வளர்ச்சிக்கு துணை புரிந்தது போல மாத்தளையிலும் இலங்கை எங்கிலும் உள்ள பக்தர்கள் தம் காணிக்கைகளை செலுத்தி ஆலய வளர்ச்சிக்கு பங்கு கொண்டு உழைக்கிறனர். பொது மக்களின் ஒத்துழைப்பு குறைவின்றி கிடைப்பது இவ் ஆலய வளர்ச்சிக்கு அடித்தலமாக விளங்குகிறது

இவ்ஆலயத்தில் நடைபெறும் பல்வேறு வைபவங்களில் பின்வரும் பெரியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர், மகாத்மா காந்தி, விஜயலட்சுமி பண்டிட், சேர் பொன் இராமநாதன், குன்றக்குடி அடிகளார் வி. சி. கிரிதாரிபிரசாத் தவத்திரு திரு. முருககிருபானந்த வாரியார், கி.வா. ஜகநாதன் புலவர் கீரன் சூடாமணி, பித்துக்குளி முருகதாஸ், சூடாமணி இளம்பிறை மணிமாறன், சாயிமாதா பிருந்தா தேவி உமா சர ஸ்வதி, சிலம்பொலி செல்லப்பன், பே. சு. தஞ்சாவூர் சுப்பிரமணியம், மணி ஐயர் கவிஞர் இளந்தேவன் கவிஞர் மணிவன்னன், வையந்திமாலா, சிவ அன்பு ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

இவ்வாலயத்திற்கு நகரில் பல அசையா சொத்துக்களும் உள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மாண்புமிகு அமைச்சருமான திரு சௌமிய மூர்த்தி தொண்டமான் ராஜங்க அமைச்சர்கள் திரு எம் எஸ் செல்லசாமி திரு .பி.பி. தேவராஜ் உட்படபல்வேறு அரசியல் பிரமுகர்களும் அடிக்கடி வருகை தந்து பூசை வழிபாடுகளில் கலந்து கொள்வதுடன் ஆலய வளர்ச்சிகாக உதவிகளைபும் புரிந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து கலாசார அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் உட்பட உத்தியோகத்தர்களும் பேருதவி புரிகின்றனர்

மலையகத்தில் விளங்கும் திருத்தலங்களில் தலை சிறந்தது விளங்கும் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வரலாற்று நோக்கில் இது ஒரு சிறுகுறிப்பேயாகும் இவ் ஆலய வளர்ச்சிக்காக தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்பணித்த பெரியார் பலரின் திருநாமங்களும் நிர்தாட்ஷயணியமான காலகட்டத்தில் அவர்கள் ஆற்றிய பெரும் பணியும் முற்றும்முழுதாக இச் சிறு கட்டுரையில் அடங்காதது வருந்தத்தக்கது. எதிர் காலத்தில் இக் குறைபாடை நீக்கி இத் திருப்பதிக வரலாற்றை முழுமையாக எழுத அம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

மாத்தளையில் கோவில் கொண்டு மாதளையாகிய பிறவித் துன்பத்தை நீக்கும் அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைப்பதாக. பஞ்சரதம் அசைந்து வர, பாவையர்கள் வடம் பிடிக்க, மஞ்சம் தவழ மாத்தளையில் என்றென்றும் மாசி மகம் சிறக்கட்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed by Kumaran Press (Pvt) Ltd. kumbhlk@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org